ஸ்ரீ:

பொய்யா மொழிப் புலவர் இயற்றிய

# தஞ்சை வாணன் கோவை

சென்னைப் புரசை லுத்தரன் மிஷன் உயர்கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை
எழுதிய விளக்கக் குறிப்புரை முதலியவற்றுடன்

பிரசுர கர்த்தர்:
M. R. அப்பாதுரைப் பிள்ளை, B. A.,
57, ஆண்டர்ஸன் தெரு,
:: சென்னை. ::

1939

பதிப்புரிமை] [விலை ரு. 2.

2

Printed at The Jupiter Press, Madras.

# பொருள் அடக்கம்

முகவுரை ... v
அணிந்துரை ... viii
நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம் ... xi
குறிப்புரையில் மேற்கோள் காட்டிய நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பு விளக்கம் ... xiii
இயல் விளக்கம் ... xiv
கிளவித் தொகை விளக்கம் ... xv
காப்பு ... xx
உரிமையுரை ... xx

க. களவியல் :

கைக்கிளை ... க
1. இயற்கைப் புணர்ச்சி ... ரு
2. வன்புறை ... க0
3. தெளிவு ... கரு
4. பிரிவுழி மகிழ்ச்சி ... கச
5. பிரிவுழிக் கலங்கல் ... கரு
6. இடந்தலைப்பாடு ... கஅ
7. பாங்கற்கூட்டம் ... உக
8. பாங்கி மதி உடன்பாடு ... உரு
9. பாங்கியிற்கூட்டம் ... சஉ
10. ஒருசார் பகற்குறி ... ௭0
11. பகற்குறி இடையீடு ... ௭எ
12. இரவுக்குறி ... அக
13. இரவுக்குறி இடையீடு ... கூச
14. வரைதல் வேட்கை ... கககூ
15. வரைவு கடாதல் ... க0ச
16. ஒரு வழித் தணத்தல் ... கஉரு
17. வரைவு இடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் ... கரு உ

உ. வரைவியல் :

1. வரைவு மலிவு ... கசச
2. அறத்தொடு நிற்றல் ... கசஅ

3. உடன் போக்கு ... ௧௫௭
4. கற்பொடு புணர்ந்த கவ்வை ... ௧௬௬
5. மீட்சி ... ௧௮0
6. தன் மனை வரைதல் ... ௧௮௩
7. உடன் போக்கு இடையீடு ... ௧௮௬
8. வரைதல் ... ௧௯0

௩. கற்பியல் :

1. இல் வாழ்க்கை ... ௧௯௧
2. பரத்தையிற்பிரிவு ... ௧௯௭
3. ஓதற்பிரிவு ... ௨௧௩
4. காவற்பிரிவு ... ௨௧௫
5. தூதிற்பிரிவு ... ௨௧௭
6. துணைவயின் பிரிவு ... ௨௧௯
7. பொருள்வயின் பிரிவு ... ௨௨௧
அகப்பொருட்செய்தி நாள் வரையறை ... ௨௨௫
பாட பேதங்கள் ... ௨௨௬
செய்யுள் முதற்குறிப்பு அகராதி ... ௨௨௮
அரும்பதம் முதலியவற்றின் அகராதி ... ௨௩௨

தானியார் சோக்கப்ப நாவலர் இயற்றிய பொழிப்புரை ஒன்று உண்டென்பதைத் தமிழறிஞர் அனைவரும் அறிவர்; முதற்பதிப்பாக அச்சிடப்பட்ட அவ்வுரை நூலில் ஏடெழுதுவோராலும் பிறராலும் ஏற்பட்ட பிழைகள் பல காணப்படுவதும் அறிஞர் அறியாததொன்றன்று. அம்முதற்பதிப்பிற் காணப்பட்ட அப்பிழைகளை நன்கு ஆராய்ந்து அகற்றி, பற்பல ஆராய்ச்சி விளக்கக்குறிப்புகளுடன் யாழ்ப்பாணத்து வித்துவான் திரு. ந. சுப்பைய பிள்ளையவர்கள் இரண்டாம் பதிப்பை 1936-ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் அச்சிடுவித்தார்கள். அவ்வறிஞருக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையதாகும். இவ்விரண்டாம் பதிப்பு, முதற்பதிப்பினும் பன்மடங்கு சிறப்புடையதாயினும், பல செய்யுட்களின் உரை மாணவர்களுக்கு ஐயம் விளைக்கும் வகையில் அமைந்திருத்தல் அவ்வுரையினை ஆராய்வார் அறியாதிரார். பழைய உரையினை ஏட்டிலுள்ளபடியே பதிப்பித்தல் பதிப்பாசிரியர் கடனாதலின், இரண்டாம் பதிப்பினைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் அத்துறையில் ஏதும் செய்ய இயலாதவராயினர்.

இந்நூலை யான் 1928-ஆம் ஆண்டு நடைபெற்ற வித்துவான் முதற்படிப் (Preliminary) பரீட்சைக்குப் பயின்றபோது சில செய்யுட்களின் உண்மைப் பொருளுணரப் பெரிதும் இடர்ப்பட்டதுண்டு. அங்ஙனம் இந்நூலுரையில் எனக்கு நேரிட்ட இடர்ப்பாடும், சில ஆண்டுகளுக்கு முன் காலஞ்சென்ற இருமொழிப் புலவராகிய சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் அவர்கள் "செந்தமிழ்" மாத வெளியீட்டில் இந்நூலுரை சம்பந்தமாக வெளிப்படுத்திய சில தடை விடைகளுமே இந்நூலுக்குப் புத்துரை ஒன்று அமையின் அது மாணவர்கட்குப் பெரிதும் பயன்படலாம் என்னும் எண்ணத்தை என் மனத்திலெழச் செய்தன; அங்ஙனம் எழுப்பியும், அத்தொழிலை அமைதியுடன் இருந்து செய்து முடிக்கப் போதிய அவகாசம் இதுகாறும் வாய்க்கப் பெறுமையாலும், அத்துறையில் மிகுதியும் பயின்ற அறிஞர் எவரும் இதுகாறும் அத்தொழிலை மேற்கொள்ளாமையாலும், அவகாசம் வாய்த்த இப்பொழுது அதனை என் அறிவுக்கும் நூற்பயிற்சிக்கும் எட்டிய அளவில் செய்து முடிக்க முயன்றேன். இப்பொழுது யான் உடலுரம் குன்றி ஓராண்டு ஓய்வு பெற்றுப் பாடசாலையினின்று நீங்கியிருக்க நேர்ந்தமையின், இதுவும் இறைவன் திருவுளப் பாங்கெனக் கருதி, இத்தொழிலில் ஈடுபட்டு, இந்நூலுக்கு விளக்கக் குறிப்புரை

ஸ்ரீ :

# முகவுரை

---

## ஸ்ரீ சடகோபர்

'தேன ருமகிழ்த் தொடையலும் மவுலியும்
திருக்கிளர் குழைக்காதும்
கான ருமலர்த் திருமுகச் சோதியும்
கயிரவத் துவர்வாயும்
மோன மாகிய வடிவமும் மார்பமும்
முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையும்என்
நயனம்விட் டகலாவே.'

CONNEMARA PUBLIC LIBRARY
5 MAR 2017
CHENNAI-600 008

செந்தமிழ் ஆய்ந்துணர்ந்த நுண்மாண் நுழை புலச் செல்வர்களால் தலை சிறந்தனவாகப் பாராட்டப்படும் கோவை நூல்களுள் தஞ்சை வாணன் கோவையும் ஒன்ரும். இக்கோவையின் சொல் நயம் பொருள் நயம் முதலியவற்றை இனிதுணர்ந்த தமிழ்ப்பெருமக்கள், வித்துவான் பரீட்சை பண்டித பரீட்சைகளுக்குத் தமிழ் பயிலும் மாணவர்கள் இதனைக் கற்று அகப்பொருளின் திட்ப நுட்பங்களை ஐயமறத் தெளியுமாறு அப்பரீட்சைகளுக்குரிய பாட நூல்களுள் இதனையும் ஒன்ருக அமைத்திருக்கின்ருர்கள். மற்றும், அகப்பொருளுக்கோர் இலக்கணம் வகுத்து அதற்கு உரையுமியற்றியுதவிய சமண் அறிஞராகிய நாற்கவி ராச நம்பி என்னும் புலவர் பெருமானும் இக்கோவைச் செய்யுட்களையே அந்நூலுக்கு இலக்கிய மேற்கோளாக எடுத்தாண்டிருப்பதும் இக்கோவையின் சிறப்பை விளக்குவதாகும்; இக்கோவைக்குப் பின்னர் இயற்றப்பட்ட கோவைகள் யாவும் இதனையே அடியொட்டி இயற்றப்பட்டுள்ளதும், அக்கோவைகளின் ஆசிரியர்களும் இதனைப் பெரிதும் போற்றியவர்கள் என்பதைப் புலப்படுத்தும்.

இத்தகு சிறப்பு வாய்ந்த இக்கோவைக்கு இதன் ஆசிரியராகிய பொய்யாமொழிப் புலவரின் மரபில் தோன்றிய குன்றத்தூர் அட்டாவ

---

* பெருந்தொகை, செய். 1824.

எழுதி, அரும்பத அகராதி முதலியன தொகுத்து, இயலும் வரையில் நூலை அழகு பெற அச்சிட்டு முடித்தேன்.

இந்நூல் அச்சாகும் காலத்தில் அச்சான பகுதிகளைப் படித்துப் பார்த்து, 'இது நன்கு அமைந்துள்ளது!' என என்னை ஊக்கிய தோடமையாது, ஓர் அணிந்துரையும் எழுதி உதவிய தமிழ்ப் பேரறிஞராகிய உயர் திருவாளர் ஆ. கார்மேகக் கோனார் அவர்களுக்கும், இந்நூல் அச்சாகும்போது உடனிருந்து ஊக்கி வந்த அன்பர் திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார் அவர்களுக்கும், இதனை ஏற்று யான் விரும்பியவாறு அச்சியற்றுவித்த அன்பர் திரு. M. R. அப்பாதுரைப் பிள்ளை, B.A., அவர்களுக்கும் யான் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

கல்வி கேள்வி ஆராய்ச்சிகளாற் சிறந்த பெருமக்கள் இதிற்காணும் குறைகளை எடுத்துக்காட்டி என்னைத் திருத்திப் பணிகொள்வ தோடமையாது, முதனூலோடு இவ்விளக்கக் குறிப்புரையை ஒப்பிட்டு நோக்குங்கால் தாங்கள் மகிழ்தற்குரிய பகுதிகளைக் காண்பார்களாயின் அவற்றையுமெடுத்துக்காட்டி என்னை மகிழ்வித்து இத்துறையில் மேலும் ஈடுபட்டுழைக்க ஊக்குமாறு அவர்களை யான் வேண்டிக் கொள்கிறேன்.

சென்னை,
1—5—'39.

மே. வீ. வே.

# அணிந்துரை

[ஆ. கார்மேகக் கோனர் அவர்கள்]

Senior Lecturer in Tamil, American College, Madura;
Member of the Board of Studies in Tamil, University of Madras.

மாந்தர்க் குறுதியாய அறம் பொருள் இன்பக் கூறுபாடுகளைப் பண்டைத் தமிழ்ச் சான்ருேர் அகம் புறம் எனச் சுருங்க வகுத்து நூல் செய்தல் மரபாம்.

அறமும் பொருளும் புறத்துள்ளும் இன்பம் அகத்துள்ளும் அடங்கும். வீடு இரண்டற்கும் பொது. இப்பொருள்கள் இங்ஙனம் பகுத்துக் கூறப்பெறுதலைத் தோல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களானும், பத்துப்பாட்டு, எட்டுத்தோகை முதலிய சங்க இலக்கியங்களானும் நன்குணரலாம். மக்களது இன்பப் பகுதியாய அகப்பொருளை அன்போடு புணர்ந்த ஐந்திணையாகப் பகுத்து, இலக்கணங்களால் வரையறுத்து மொழிதல், மொழிகளுள் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பாகும். இங்ஙனம் தமிழ் நூல்களுள் தொன்று தொட்டுப் பரந்து கிடக்கும் அகப்பொருட்டுறைகளைக் கற்றுணர்ந்த பிற்காலத் தறிஞர், அவ்வகப்பொருட்கிளவிகளை நாடக உறுப்பும் சுவையும் படக் கோவை செய்து நூல் செய்யக் கருதிக் கோவை என்னும் புது நூல் புனையத் தலைப்பட்டனர். அக்கால முதலாக இக்கோவைப் பிரபந்தங்கள், பல நூற்றுண்டு வரை பல்கி வெளி வரலாயின. இவ்வாறு வெளிப்போந்த கோவை நூல்களுள் தலை சிறந்தவாகப் புலவர்களால் மதித்துப் போற்றப்பட்டு வருவன முதன்மையாக வாதவூரடிகளது திருக்கோவையாரும் அடுத்த படியாகப் பொய்யாமொழிப் புலவர், பாண்டியன் தானைத் தலைவனும் வாண குல வழித் தோன்றலுமான சந்திரவாணன் எனும் தஞ்சைவாணன்மீது பாடிய தஞ்சைவாணன் கோவையுமாம் என்பது கற்றூர் பலரும் அறிந்த உண்மையாகும். தஞ்சை வாணன் கோவையின் சிறப்பினை, நாற்கவிராச நம்பியகப் பொருளில் அகப்பொருட்டுறைகளுக்கெல்லாம் இக்கோவையின் பாடல்களே இலக்கியமாகக் காட்டப்பெற்றிருப்பதே நன்கு புலப்படுத்தாநிற்கும்.

இவ்வாணன் கோவைக்குக் குன்றத்தூர் அட்டாவதானம் சொக்கப்ப நாவலர் இயற்றிய உரையொன்றுண்டென்பது யாவருமறிந்

ததே. இவ்வுரை அடியார்க்கு நல்லார் முதலிய தொன்னூலுரை யாசிரியர்களது உரை முறையைத் தழுவிச் சிறந்து விளங்குவதெனினும், உரையாசிரியர் சில பாட்டுக்களுக்குப் பாட்டின் வழிப் பொருள் கூறாது தம் கருத்து வழிப் பாட்டினை அலைத்துப் பொருள் கூறியுள்ள இடங்களும் உண்டென்பது அவ்வுரையினை ஆராய்வார்க்குப் புலனும். இக்கோவையை இவ்வுரையுடன் திருமயிலைத் தெய்வசிகாமணி முதலியார் அவர்களும், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்களும் ஏடுகளை ஆராய்ந்து கி. பி. 1893-ஆம் வருடத்தில் சென்னை அமெரிக்கன் அச்சாலையில் பதிப்பிட்டு வெளியிட்டுள்ளார்கள். அப்பதிப்பு அக்காலத்துப் புதிதாக வெளி வந்து, அச்சுப் புத்தகமில்லாக் குறையைப் போக்கிக் கற்போருக்கு உதவியாய் இருந்ததெனினும், அதனை முழுதும் திருத்தமான பதிப்பெனக் கோடற்கு இயலாதவாறு இருந்து வந்தது. அப்பதிப்பில், ஏடெழுதுவோரால் நேர்ந்த வழுக்களும் அச்சுப் பிழைகளும் களையப் பெறுமலும் பாட்டில் இல்லாத சொற்கள் உரைப்பகுதியிற் காணப்பெற்றும், மூலபாடம் ஒன்றாக உரையில் காட்டும் பாடம் வேறாகப் பிறழ்ந்தும், உரைத்தொடர்களுள் இன்றியமையாத சொற்கள் விடுபட்டும், அதனால் முடிபு வழுக்கள் உற்றும், பல்வகைப் பிழைகள் பொதுளியுள்ளன. இதனால் இச்சிறந்த கோவைக்கு ஓர் திருத்தமான பதிப்பில்லாக் குறை, நெடுநாளாய் இருந்து வந்தது. இக்குறையைப் போக்குவான் கருதி இப்போது சென்னை வித்துவான் திருவாளர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் பல சுவடிகளையும் ஆராய்ச்சியாளரது இந்நூல்பற்றிய துணிபுகளையும் ஆராய்ந்து, மூலபாடங்களிலுள்ள வழுக்களைக் களைந்து, குறிப்புரை முதலிய அழகிய அங்கங்களுடன் அச்சிடுவித்து வெளிப்படுத்தியுள்ளார்கள். இப்பதிப்பில் காணப்பெறும் உரை, குறிப்புரையெனினும், துறை விளக்கம், செய்யுளிலுள்ள சொற்களைப் பொருளின் இயைபுக்கேற்பக் கொண்டு கூட்டல், பத சாரம் கூறல், இலக்கண நுட்பம் தெரித்தல், அணிகளை எடுத்துக் காட்டல் முதலிய பல கூறுபாட்டுடன் கற்போர்க்கு ஓர் அகலவுரையின் பயனை அளிப்பதாக இலங்குகின்றது. அன்றியும், பழைய உரையாசிரியர் வலிந்து பொருள் கண்ட இடங்களில் இப்பதிப்பாசிரியர் செவ்விய பொருள் கண்டிருப்பது இப்பதிப்பின் சிறப்புக்களுள் முக்கியமானதாகும். இதனை, 78, 83, 105, 136, 159, 177, 192, 203, 237, 257, 264,

268, 270-ஆம் எண்ணுள்ள செய்யுள்களின் பழைய உரையோடு இப்புத்துரையைச் சீர்தூக்கிப் பார்க்கின் அறியலாகும்.

இத்தஞ்சை வாணன் கோவையின் இப்புதிய பதிப்பு நமக்குக் கிடைக்கும்படி செய்த இதன் விளக்கக் குறிப்புரையாசிரியர் வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களது உழைப்பும் புலமைத்திறனும், இதனை அச்சிடும் பொறுப்பினை ஏற்ற சென்னைப் புத்தக வர்த்தகர் திரு. M. R. அப்பாதுரையவர்களது உபகார குணமும் தமிழ் அபிமானிகளால் பெரிதும் பாராட்டற்குரியவாம்.

# நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம்

பொய்யாமொழிப் புலவர் என்பது இந்நூலாசிரியருக்கு வழங்கும் பெயர். இப்புலவர் பெருமான் தொண்டை மண்டலத்தில் செங்காட்டங்கோட்டத்துறையூரில் அவதரித்தவர்; சைவ வேளாள குலத்தவர்.

இவர் இளைஞராயிருந்த போது வயிர புரம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த ஒரு தமிழாசிரியரிடம் தமிழ் பயின்றனர். அத்தமிழாசிரியர், ஒரு நாள் இவரைத் தமது வயலிலுள்ள பயிரை மாடு முதலிய விலங்குகள் பாழ்படுத்தாதபடி காவல் புரிந்து வரக் கட்டளை இட்டனுப்பினர். அவர் கட்டளைப்படியே இவர் சென்று வயலின் அருகிலிருந்த காளிகோவிலின் பக்கத்தில் ஒரு மர நிழலில் உட்கார்ந்து காவல் புரிகையில் தம்மை மறந்து தூங்கிவிட்டார்; தூக்கத்தில் நிகழ்ந்த கனவில் அவ்வூர் அரசனது குதிரை பயிரைப் பாழ்படுத்தியதாகக் கண்டு திடுக்கிட்டு விழித்து, கனவே நனவாயினது கண்டு அஞ்சி, காளி கோயிலுட் புகுந்து காளியைத் துதித்து வணங்கினர்; பின்பு காளியின் திருவருளால் கவி பாடும் ஆற்றலடைந்து, வெளி வந்து, பயிரை மேய்ந்த குதிரை பதைத்து விழுந்திறக்கப்பாடினர். இதனையறிந்த தமிழாசிரியர், 'அரசனறியின் யாது பொல்லாங்கு நேரிடுமோ!' என வருந்த, மாணவர் தாம் குதிரை இறக்கப் பாடிய வெண்பாவின் 'குதிரைமா ளக்கொண்டு போ,' என்னும் ஈற்றடியைக் 'குதிரைமீ ளக்கொண்டு வா,' என மாற்றிப் பாடி, அக்குதிரையை உயிர்ப்பித்தனர். தம் மாணவர் கூறும் மொழி பொய்யாது தன் பயனைத் தரும் அற்புதத்தை உணர்ந்த அத்தமிழாசிரியர், 'நீ இன்று முதல் பொய்யா மொழியாய் வாழ்ந்திருப்பாயாக,' என மாணவரை வாழ்த்தினர். அது முதல் இந்நூலாசிரியர்க்குப் பொய்யா மொழியார் என்னும் பெயரே வழங்கி வந்தமையின் இவர் இயற்பெயர் மறைந்தது எனத் தமிழ் நாவலர் சரிதை கூறும்.

தெய்வப்புலமை பெற்றுத் திகழ்ந்த இப்புலவர் பெருமான், பின்னர்ப் பற்பல அற்புதச் செயல்களை நிகழ்த்தினர் என்பது இவர் பாடிய தனிப்பாடல்களைக் கொண்டு அறியப்படும். அவ்வற்புதச் செயல்கள் பின் வருவன:

1. காளையார் கோவில் என்னுமிடத்தில் வாழ்ந்து வந்த குருட்டுத் தாசியர் நால்வர் பார்வை பெறவும் இழக்கவும் பாடியது.

2. மதுரையில் சங்கப் புலவர்களின் வடிவங்களாகிய கற்சிலைகள் தம் பாட்டைக் கேட்டுத் தலையசைக்கச் செய்தது.

3. மதுரைப் பொற்றாமரைக் குளத்திற் பழஞ்சங்கப்பலகை மிதக்கப் பாடியது.

4. புலையனுடல் வெடிக்கப் பாடியது.

குமரக் கடவுள் இவர் முன் தோன்றி, இவர் திருவாயால் தம்மைப் பாடச் செய்து, இவர் நாவில் தம் வேற்படையால் எழுதிச் சென்றனர் என்பர்.

இப்புலவர் வேளாள வள்ளலாகிய சீநக்கன் என்பவனிடம் பிரியா நட்புக்கொண்டு வாழ்ந்து வந்து, அவன் இறந்தபோது அவனுடன் தீயிற்பாய்ந்து இறந்தனர் என்பர்.

இவர், மாறை நாட்டை ஆண்ட பாண்டிய மன்னரான குலசேகர தேவருக்கு மந்திரியும், படைத்தலைவனும், புலவரைப் போற்றும் பெருவள்ளலுமான வேளாண் குடித் திலகன் சந்திர வாணன் என்றவனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு இக்கோவையைப் பாடினர். இவர் இக்கோவையைப் பாடி அரங்கேற்றிய போது சந்திர வாணன் ஒவ்வொரு கவிக்கும் ஒவ்வொரு பொன் தேங்காயைப் பரிசாக உருட்டி இவரைக் கௌரவித்தனன் என்பர்.

இப்புலவர் பெருமானது வரலாற்றுப் பகுதிகள் இவர் பாடிய தனிப்பாடல்களைக் கொண்டும், சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், திருப்புகழ், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றைக் கொண்டும் திரட்டப்பட்டனவாகும். விரிவஞ்சி இங்கு இவர் வரலாறு சுருக்கமாக எழுதப்பட்டது.

கால ஆராய்ச்சியாளர்கள், இவர் காலம் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் கூறுகின்றார்கள்.

# குறிப்புரையில் மேற்கோள் காட்டிய நாற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பு விளக்கம்

---

அகத் - அகத்தியப் படலம்
அகம் - அகநானூறு
ஆ. நி. - ஆசிரிய நிகண்டு
இடை - இடையியல்
இலக் - இலக்கண விளக்கம்
ஐங்குறு - ஐங்குறு நூறு
கந்தபு - கந்த புராணம்
கம்ப - கம்ப ராமாயணம்
கலி, கலித் - கலித்தொகை
கார் கால - கார் காலப் படலம்
கிளை - கிளை கண்டு நீங்கு படலம்
கும்ப - கும்ப கருணன் வதைப் பட
குறள் - திருக்குறள் [லம்
குறிஞ்சிப் - குறிஞ்சிப்பாட்டு
குறுந் - குறுந்தொகை
சிலப் - சிலப்பதிகாரம்
சிவரா - சிவராத்திரி மகிமை
சீவக - சீவக சிந்தாமணி
சூ - சூத்திரம்
சூடா. நி. - சூடாமணி நிகண்டு
சூர்ப்ப - சூர்ப்பநகைப் படலம்
செய் - செய்யுள்
சொல் - சொல்லதிகாரம்
தண்டி - தண்டியலங்காரம்
தமிழ் நா - தமிழ் நாவலர் சரிதை
தனிப்பா - தனிப்பாடல் திரட்டு
திருக், திருக்கோ - திருக்கோவை
திருநக - திருநகரப் படலம் [யார்
திருப்பள்ளி - திருப்பள்ளி எழுச்சி
திருப்போ. சந். - திருப்போரூர்ச் சந்நிதி முறை
திருவவ - திருவவதாரப் படலம்
திருவாச - திருவாசகம்
திருவாய் - திருவாய் மொழி
திருவெங் - திருவெங்கைக்கோவை
திவ் - திவ்வியப் பிரபந்தம்
தேவா - தேவாரம்
தொல் - தொல்காப்பியம்
நன் - நன்னூல்
நாய்ச் - நாய்ச்சியார் திருமொழி
நாலடி - நாலடியார்
பதிற் - பதிற்றுப்பத்து
பரிபா - பரி பாடல்
பள்ளி - பள்ளியடைப் படலம்
பிங் - பிங்கல நிகண்டு
பிரமோத் - பிரமோத்தர காண்டம்
பு. வெ. - புறப்பொருள் வெண்பா
புறம் - புறநானூறு [மாலை
பெருங் - பெருங்கதை [படை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்
பொ - பொருளதிகாரம்
மணிமே - மணிமேகலை
மதுரைக் - மதுரைக்காஞ்சி
மாறன் - மாறனலங்காரம்
மிதிலை - மிதிலைக்காட்சிப் படலம்
யாழ். அக. - யாழ்ப்பாணத்து மானிப்பாய் அகராதி
விந்த கிரி - விந்த கிரிப் படலம்

# இயல் விளக்கம்

அகப்பொருட்செய்திகளை இனிது விளக்கும் இந்நூல், களவியல், வரைவியல், கற்பியல் என்னும் மூன்று இயல்களை உடையது.

க. களவியல்:—களவியல் என்பது 'களவினது இலக்கணம்' என்னும் பொருளது. 'களவு' என்பது, வேதத்திற்சொல்லப்பட்ட பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் எண்வகை மணங்களுள் காந்தருவ மணத்தோடு ஒத்த இயல்பினை உடையதாய்த் தமிழ் கூறும் நல்லுலகத்துப் பெருமக்களாற் கொண்டொழுகப்பட்ட மணமுறை. அஃதாவது, தலைவனும் தலைவியும், கேட்பாரும் கொடுப்பாரும் இன்றித் தனியிடத்தில் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுத் தாமே கூடுவது. வேதத்தைப் பல பொருளும் மறைந்திருக்கும் காரணத்தால் மறை என வழங்கியது போல, மனமொத்த காதலர் இருவர் கரந்த உள்ளத்தராய்க் கூடும் கூட்டத்தைக் களவு என வழங்கினர் என்க.

இக்களவொழுக்கங் கூறுதற்கு முன்னர்க் கைக்கிளை கூறப்படும். கைக்கிளை என்பது, சிறுமை உறவு. அஃதாவது, ஒருவர் மாட்டு நிகழும் விருப்பமாகிய ஒரு தலைக் காமம். அது தலைமகன் கூற்றாய் நிகழும்.

உ. வரைவியல்:—வரைவியல் என்பது, 'மணம் செய்து கொள்ளுதலின் இலக்கணம்' என்னும் பொருளது. கற்பிற்கு நிமித்தமான வரைவு கூறுதலால், இவ்வியலைக் கற்பியலோடு சேர்த்துக் கூறாமல் வேறாகக் கூறியது, வரைவு மலிவு முதலாக உடன் போக்கு இடையீடு ஈறாகப் பல வகைப்பட்டு ஒவ்வொரு வகையிலும் பல கிளவிகள் அமைந்து நடத்தலை விளக்குதற்கு என்க.

ங. கற்பியல்:—கற்பியல் என்பது, 'கற்பினது இலக்கணம்' என்னும் பொருளது. கற்பு என்பது, கற்பிக்கப்படுவது. தலைவிக்கு அறிவும் ஆசாரமும் தலைவனால் கற்பிக்கப்படுதலும், பெற்றோரால் கற்பிக்கப்படுதலும், செவிலியால் கற்பிக்கப்படுதலும், சான்றோரால் கற்பிக்கப்படுதலும் என அக்கற்புப் பல திறப்படும் என்க.

# கிளவித் தொகை விளக்கம்

['கிளவித் தொகை' என்பது, 'அகப்பொருள் துறைகளின் தொகுதி' என்னும் பொருளது. இது 'கிளவிக் கோத்து' எனவும் வழங்கப்படும்.]

க. களவியல், இயற்கைப் புணர்ச்சி முதலாக வரைவு இடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் ஈறாகப் பதினேழு கிளவித் தொகைகளை உடையது.

1. இயற்கைப் புணர்ச்சி:—தெய்வத்தால் கூடும் கூட்டமும் தலைவியால் கூடும் கூட்டமும் இயற்கைப் புணர்ச்சி என வழங்கப் படும். இந்நூலுள் கூறப்படுவது, தலைவியால் கூடும் கூட்டம். இக் கூட்டம், வேட்கை உணர்த்தல், மறுத்தல், உடன்படல், கூட்டம் என நான்கு வகைப்படும்.

2. வன்புறை:—தலைவி, தலைவன் தன்னைப் பிரிவனோ என்று ஐயுற்ற போது அந்த ஐயந்தீரத் தலைவன், 'நான் பிரியேன்,' என்று வற்புறுத்திக் கூறுவது. அஃது, ஐயம் தீர்த்தல், பிரிவு அறிவுறுத்தல் என இரு வகைப்படும்.

3. தெளிவு:—தலைவன் கூறியதைத் தலைவி மெய்யெனத் தெளிந்து ஆற்றுவது.

4. பிரிவுழி மகிழ்ச்சி:—தலைவி பிரிந்து தன் தோழியரிடம் செல்லும்போது அவள் தன்மையைக்கண்டு தலைவன் மகிழ்தல்.

5. பிரிவுழிக்கலங்கல்:—தலைவி பிரிந்தபோது தலைவன் மனம் கலங்குதல். அது, மருளுற்று உரைத்தல், தெருளுற்று உரைத்தல் என இரு வகைப்படும்.

6. இடந்தலைப்பாடு:—இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து சென்ற தலைவன் மறுநாள் அவ்விடம் வந்து தலைவியைக் கூடுதல். இந்த இடந் தலைப்பாடு, தெய்வம் தெளிதல், கூடல், விடுத்தல் என மூவகைப் படும்.

7. பாங்கற்கூட்டம்:—தலைவன், பாங்கன் உதவியால் தலைவி யைக் கூடுதல். இது, சார்தல் முதலாகப் பாங்கிற்கூட்டல் ஈறாக எழு வகைப்படும்.

8. பாங்கி மதி உடன்பாடு :—பாங்கி, தலைவியினது வேறுபாட்டைக் கண்டு புணர்ச்சி உண்மை அறிந்து, தான் அவளுக்கு உதவி செய்ய உடன்படுதல். இது, முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், இருவரும் உள் வழி அவன் வர உணர்தல் என மூவகைப் படும்.

முன்னுற உணர்தலாவது, தலைவி பாங்கற்கூட்டத்தில் பாங்கியை நீங்கிச் சென்று தலைவனைக் கூடி மீண்டு வந்து பாங்கியின் முன் உற்ற போது, பாங்கி அவள் வேறுபாடு கண்டு கூட்டம் உண்மை அறிதல்.

குறையுற உணர்தலாவது, பாங்கி, தலைவன் தழையும் கண்ணியும் கொண்டு தன்னிடம் குறையுற்று நிற்க, அதனால் கூட்டம் உண்மை அறிதல்.

இருவரும் உள் வழி அவன் வர உணர்தலாவது, பாங்கியானவள், தலைவியும் தானும் இருக்கும்போது தலைவன் வர, அதனால் கூட்டம் உண்மை அறிதல்.

தோழி முன்னுற உணரும் போது, நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு ஆகிய இவ்வேழினும் தலைவியை ஐயுற்று ஆராய்வள். நாற்றம் - தலைவியிடம் முன்பு அமையாத மணம்; தோற்றம் - கூட்டத்தால் தலைவிக்கு உண்டான அழகு; ஒழுக்கம் - தலைவி தெய்வம் தொழாமை முதலியன; உண்டி - தலைவியின் உணவு பண்டையிற் சுருங்குதல்; செய்வினை மறைப்பு - தலைவி, தான் செய்யும் காரியத்தைத் தோழிக்கு மறைத்தல்; செலவு - தலைவி, தோழியர் கூட்டத்தை விட்டுத் தனியே செல்லுதல்; பயில்வு - தலைவி, எப்பொழுதும் ஓரிடத்தில் நிற்றல். இவ்வேழினும் தோழி தலைவியை ஐயுற்று ஆராய்வள்.

9. பாங்கியிற்கூட்டம் :—தலைவன் பாங்கியினால் தலைவியைக் கூடுதல். இஃது, இரந்து பின் நிற்றல் முதலாக வேட்டல் ஈறாகப் பன்னிரு வகைப்படும்.

10. ஒருசார் பகற்குறி :—ஒரு பகுதிப் பகற்குறி. தலைவன் வேட்கை மிகுதியால் பகற்குறியிடத்தில் வந்து நிற்க, பாங்கி தலைவியைக் குறியிடத்தில் அனுப்பாமல் மறுத்துக் கூறத் தலைவன் வருந்திச் செல்வதை உணர்த்தலின், இஃது ஒருசார் பகற்குறியாயிற்று என்க. இஃது, இரங்கல், வன்புறை, இற்செறிப்பு உணர்த்தல் என மூவகைப்படும்.

11. பகற்குறி இடையீடு:—பகற்குறியில் தலைவன் தலைவியைக் கூட இயலாதபடி நிகழும் தடை. இது, விலக்கல், சேறல், கலக்கம் என மூவகைப்படும்.

12. இரவுக்குறி:—தலைவன் தலைவியை இரவுக்குறியில் கூடுதல். இது, வேண்டல் முதலாக நீங்கல் ஈறாக ஒன்பது வகைப்படும்.

13. இரவுக்குறி இடையீடு:—இரவுக்குறியில் நிகழும் தடை. இஃது, அல்ல குறி, வருந்தொழிற்கு அருமை என இரு வகைப்படும்.

அல்ல குறியாவன, தலைவனால் செய்யப்படுவனவாகிய புள் எழுப்பல் முதலியன வேறொரு காரணத்தால் நிகழ்தல் முதலியன என்பதால், நீரில் கல் எறிதல், இளநீர் வீழ்தல் ஆகியவற்றையும் கொள்க.

வருந்தொழிற்கு அருமை என்பது, தலைவன் வரும் செயலுக்கு அருமை.

14. வரைதல் வேட்கை:— தலைவி வரைதலை விரும்பிக் கூறுதல். இஃது, அச்சம், உவர்த்தல், ஆற்றுமை என மூவகைப் படும். உவர்த்தல் - வெறுத்தல்.

15. வரைவு கடாதல்:—பாங்கி தலைவனோடு வரைவு வினுதல். இது, பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல் என நான்கு வகைப்படும். பொய்த்தல் - பொய்யாயவற்றைக் கூறுதல். மெய்த்தல் - உண்மையாயவற்றைக் கூறுதல்.

16. ஒரு வழித் தணத்தல்:—அலர் அடங்குதற்பொருட்டுத் தலைவன் தலைவியை நீங்கி, வேற்றிடம் சென்று, சில நாள் உறைதல். இது, செலவு அறிவுறுத்தல் முதலாக நோந்துரை ஈறாக எழு வகைப் படும்.

17. வரைவு இடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்:—தலைவன், மணத்தை இடையீடாக நீக்கி வைத்துப் பொருள் சம்பாதிக் தற்குப்பிரிதல். இது, பிரிவு அறிவுறுத்தல் முதலாக வந்துழி மகிழ்ச்சி ஈறாக ஒன்பது வகைப்படும்.

2. வரைவியல், வரைவு மலிவு முதலாக வரைதல் ஈறாக எட்டுக் கிளவித் தொகைகளை உடையது.

1. வரைவு மலிவு:—மணத்தைப் பற்றிய முயற்சிகளின் மிகுதி. இது, வரைவு முயல்வு உணர்த்தல், வரைவு எதிர்வு உணர்த்

தல், வரைவு அறிந்து மகிழ்தல், பராவல் கண்டு உவத்தல் என நான்கு வகைப்படும்.

2. அறத்தொடு நிற்றல்:—களவை முறையே வெளிப்படுத்தி நிற்றல். முறையே என்றதனால், தலைவி பாங்கிக்கும், பாங்கி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை தமையன்மார்க்கும் களவை வெளிப்படுத்துவர் என்க. இவ்வறத்தொடு நிற்றல், முன்னிலை மொழி, முன்னிலைப் புற மொழி என இரு வகைப்படும்.

3. உடன் போக்கு:—தலைவன், தன் ஊர்க்குத் தலைவியை உடன் கொண்டு போதல். இது, போக்கு அறிவுறுத்தல் முதலாகத் தேற்றல் ஈறாக எட்டு வகைப்படும்.

4. கற்பொடு புணர்ந்த கவ்வை:—தலைவி தலைவனது உடைமையாய்க் கற்பொடு கூடிய அதனை அயலார் உள்ளிட்ட சேரியர் பலரும் அறிதல். [கவ்வை - அலர்] இது, செவிலி புலம்பல் முதலாகச் செவிலி பின் தேடிச் சேறல் ஈறாக ஐவகைப்படும்.

5. மீட்சி:—மீண்டு வருதல். செவிலி தலைவியைக் காணாது மீண்டு வருதலும், உடன் போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலும் இதிலடங்கும். இம்மீட்சி, தெளித்தல், மகிழ்ச்சி, வினாதல், செப்பல் என நான்கு வகைப்படும்.

6. தன் மனை வரைதல்:—தலைவன், தலைவியைத் தனது ஊருக்கு அழைத்துப்போய்த் தன் வீட்டில் மணந்துகொள்ளுதல். இது, வினாதல், செப்பல், மேவல் என மூவகைப்படும்.

7. உடன் போக்கு இடையீடு:—தலைவன் தலைவியரின் உடன் போக்கில் நிகழும் தடை. இது, போக்கு அறிவுறுத்தல் முதலாக இரக்கமொடு மீட்சி ஈறாக நான்கு வகைப்படும்.

8. வரைதல்:—தலைவன் உலக இயலுக்கு ஏற்பத் தலைவியின் பெற்றோர்க்குப் பலவித ஆபரணங்கள் முதலியன அளித்து, அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு மணச்சடங்குடனே தலைவியை மணந்துகொள்ளுதல்.

௲. கற்பியல், இல் வாழ்க்கை முதலாகப் பொருள்வயின் பிரிவு ஈறாக ஏழு கிளவித் தொகைகளை உடையது.

1. இல் வாழ்க்கை:—தலைவியும் தலைவனும் இல்லறம் நடத்துதல். இது, கிழவோன் மகிழ்ச்சி முதலாகச் செவிலி மகிழ்ச்சி ஈறாக நான்கு வகைப்படும்.

2. பரத்தையிற்பிரிவு:—தலைவன், பரத்தைமேல் காதலாய்த் தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரியிற்போதல். இது, வாயில் வேண்டல், வாயில் மறுத்தல், வாயில் நேர்வித்தல், வாயில் நேர்தல் என நான்கு வகைப்படும். நேர்வித்தல் - உடன்படச் செய்தல். நேர்தல் - உடன்படல்.

3. ஓதற்பிரிவு:—தலைவன், கல்வி காரணமாகப் பிரிதல். முன்னமே கல்வி கேள்விகளாற் சிறந்த தலைவன், வேற்று நாடு சென்று அக்கல்வி கேள்விகளிற் சிறந்தோரைக் காணும்பொருட்டும், கண்டு அவர்களுடன் சொல்லாடித் தன் ஞானத்தை மேற்படுத்தி அவர்கள் ஞானத்தைக் கீழ்ப்படுத்திப் புகழெய்தற்பொருட்டும் தலைவியைப் பிரிந்து செல்வன் என்க.

4. காவற்பிரிவு.—நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு. தன்னிடம் நேரில் வந்து குறை வேண்ட இயலாதவர்களாகிய தன் நாட்டுக் குடி மக்களை அவர்களிருக்குமிடஞ் சென்று கண்டு அவர்கள் கூறும் குறைகள் உளவாயின் அவற்றை நீக்கி ஆவன செய்தற்குத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வன் என்க.

5. தூதிற்பிரிவு:—இருவர் அரசர் தம்மிற்பகைத்துப் போர் புரியும்போது அவரைச் சமாதானப்படுத்தற்குப் பிரியும் பிரிவு.

6. துணைவயின் பிரிவு:—தலைவன், தன் நண்பனுகிய வேந்தனுக்குப் பகை வேந்தரால் இடையூறு நேரிடும் பொழுது அவ்விடையூற்றை நீக்க அவனுக்குத் துணையாகப் பிரிதல்.

7. பொருள்வயின் பிரிவு:—பொருள் சம்பாதித்தல் காரணமாகப் பிரியும் பிரிவு. தலைவன், தன் பெற்ருேர் தேடிய பொருள் கொண்டு வாழ்தல் தன் ஆண்மைக்கு இழுக்காம் எனக் கருதித் தன் முயற்சியால் பொருள் தேடி வழங்கி வாழ்தற்குப் பிரிவன் என்க.

## காப்பு

தருகை மிகுந்தஞ்சைச் சந்திர வாணன் தமிழ்ப்புலவர்க்
கிருகை நிரம்பப் பொருளீந்த வள்ளல் இயற்புகழ்சால்
திருகை இலாத அகப்பொருட் கோவைச் செழுங்குறிப்புக்
குருகை வரும்பெரு மானருள் கூர்ந்திடக் கோதறுமே.

## உரிமையுரை

தன்னலம் பேணுப் பொன்னெனும் குணத்தோய் !
தகைமைசால் எம்அப்பா துரையென்
நன்னலம் தெரிக்கும் பெயர்கொளும் அண்ணல் !
நவிலுநற் கோவையாம் இதற்குத்
தொன்னலம் துலங்கும் உரையினைத் தழுவித்
தொகுத்திடு விளக்கமாம் உரையைப்
பன்னலம் குடிகொள் உன்றனக் குரிமை
பகர்ந்தனன் கொள்கநீ பரிந்தே.



வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.

# தஞ்சை வாணன் கோவை

## க. களவியல்

### கைக்கிளை

1] காட்சி [க

புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமலம் மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொன் கொடிநின்ற தால்வெள்ளை அன்னம்செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே.

குறிப்புரை: [தலைமகன், தலைமகளைக் காணுதல்] 'பசும்பொன் கொடி, சுமந்து, அணிந்து, மலர்ந்து, நின்றது,' என இயைக்க. புயல் - மேகம், பிறை - சந்திர கலை, பொரு வில் - போர் செய்யும் வில், கயல் - கெண்டை மீன், மணந்த - பொருந்திய, கமலம் - தாமரை மலர், கற்பகம் - கற்பகத் தரு, அயல் - பக்கம், பசும்பொன் கொடி - பசுமையான காம வல்லிக் கொடி, பொய்கை - குளம், தஞ்சை - தஞ்சாக்கூர் என்பதன் மரூஉ, மலயம் - பொதிய மலை, ஆல் - அசை. இது, தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறியது. ஏகாரம் அனைத்தும் ஈற்றசை, வயல் பொய்கை - உம்மைத் தொகை. இதில் புயல் தலைவியின் கூந்தலையும், பிறை நெற்றியையும், வில் புருவத்தையும், கயல் கண்களையும், கமலம் முகத்தையும், பசும்பொன் கொடி தலைவியையும் குறிப்பித்தன.

2] ஐயம் [உ

பாரணங் கோ!திருப் பாற்கடல் ஈன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோ!வெற் புறைஅணங் கோ!உயர் பாவலர்க்கு
வாரணம் கோடி தரும்தஞ்சை வாணன்தென் மாறைவையை
நீரணங் கோ!நெஞ்ச மே!தனி யேஇங்கு நின்றவரே.

து-ரை: [தலைவியைக் கண்ட தலைவன், 'இவள் தெய்வ மகளிருள் எவளோ!' என ஐயுற்றுக் கூறல்] 'நெஞ்சமே! இங்கு நின்றவர்...நீரணங்கோ!' என இயைக்க. பார் அணங்கு - சோலையின்மேலிருந்து உலகினர் செய்யும் சிறப்பைக் கொள்ளும் (சூரமகள்) தெய்வமகள், பங்கேருகத்தின்

ஓர் அணங்கு - இலக்குமி, வெற்பு உறை அணங்கு - மலைத்தேவதை, பாவலர் - புலவர், வாரணம் - யானை, மாறை - தஞ்சை வாணனது இருப்பிடம், வையை - வைகை நதி, நீர் அணங்கு - நீர் அரமகள். ஓகாரங்கள் ஐயப்பொருளன. கடல்களுட் சிறந்ததனுலும், தேவருக்கு அமுதம் ஈந்ததனுலும், திருமால் பள்ளிகொண்ட இடமாதலாலும் 'பாற்கடல்' திரு என்னும் அடை ஏற்றது.

3] துணிவு [௩

மையார் குவளை வயல்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
நையா தொழிமதி நன்னெஞ்ச மே! இனி நம்மினும்தன்
நெய்யார் கருங்குழல் செம்மலர் வாடின! நீலஉண்கண்
கையால் அழைப்பன போல்இமை யாநிற்கும் காரிகைக்கே.

து-ரை: [தலைவியின் மலர் மாலை வாடுதல், கண்ணிமைத்தல் முதலிய குறிகளால், 'இவள் மானிட மாதே,' எனத் தலைவன் தெளிதல்] 'நெஞ்சமே! வாழ்த்தலர்போல் நையாது ஒழி,' என இயைக்க. காரிகைக்கு - (இந்த) அழகிக்கு, நம்மினும் - நம்மைவிட, நெய் ஆர் - புழுகு பொருந்திய, குழல் செம்மலர் - கூந்தலிற் சூடின செம்மலர், உண் கண் - மையுண்ட கண்கள், அழைப்பனபோல் - கூப்பிடுவன போல, இமையாநிற்கும் - இமைக்கும், மை ஆர் - கருமை பொருந்திய, குவளை வயல் - குவளை மலர்ந்த வயல் சூழ்ந்த, வாழ்த்தலர் - பகைவர், நையாதொழி - வருந்தாதிரு, மதி - முன்னிலை அசை.

4] குறிப்பு அறிதல் [௪

மண்ணில் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பில்
பெண்ணில் சிறந்தஇப் பேதைதன் பார்வை, பெருவினையேன்
எண்ணில் சிறந்த இருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்க்
கண்ணில் சிறந்த உறுப்பில்லை ஆவதும் காட்டியதே.

து-ரை: [தலைவி பார்வையால் தலைவன் அவளுக்குத் தன்னிடம் விருப்புண்டென்று குறிப்பால் அறிதல்] 'பார்வை,...,காட்டியது,' என இயைக்க. மலய வெற்பு - பொதிய மலை, பெண் - பெண் தன்மை, பேதை - பெண், வினையேன் - தீவினையேன், எண்ணில் - எண்ணத்தைக்காட்டிலும், இருந்துயர் நோய் - பெரிய வேட்கை நோய், இன்மருந்து - இனிய மருந்து, கண்ணில் - கண்போல, உறுப்பு - அவயவம், துயர் - காரிய ஆகுபெயர். தலைமகள் பார்வை பொதுப்பார்வையே ஆயினும், தலைமகன் அதனை அவளது வேட்கைக் குறிப்பால் நிகழ்ந்ததாகக் கருதினது தனது அவாவினுல் என அறிக.

# 1. இயற்கைப் புணர்ச்சி

5] இரந்து பின்னிற்றற்கு எண்ணல் [க

தேங்கிய காதர வாதரம் செப்பித்தண் செப்பிணைபோல்
வீங்கிய மாமுலை மேவுதும் யாம்;விச யக்கொடிமேல்
வாங்கிய சாபம் உயர்த்தவன் போர்வென்ற வாணன்வையம்
தாங்கிய மாலனை யான்தஞ்சை சூழ்வரைத் தாழ்குழற்கே.

து-றை : [தலைவன், தலைவிக்குத் தன் வேட்கையை உரைத்து அவளைக் கெஞ்சி வழிபட நினைத்தல்] '(நெஞ்சமே!) யாம் செப்பி மேவுதும்,' என இயைக்க. விசயம் - வெற்றி, வாங்கிய சாபம் உயர்த்தவன் - வளைந்த வில்லை உயர்த்திய சேரனது, வையம் - உலகம், மால் - திருமால், வரை - மலையிலிருக்கும், தாழ் குழல் - தாழ்ந்த குழலையுடையவள் (வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), தேங்கிய - நிறைந்த, காதரவு - அச்சம் தருகின்ற, ஆதரம் - காதலை, செப்பி - கூறி, தண் செப்பு இணை - குளிர்ச்சியான இரு கலசம், வீங்கிய - பூரித்த, மா - பெரிய, மேவுதும் - கூடுவோம், நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

6] இரந்து பின்னிலை நிற்றல் [உ

செறிவேழ வெஞ்சிலை வேள்தஞ்சை வாணன் திருந்தலர்மேல்
எறிவேலை வென்றகண் என்னுயிர்க் கேவி, இருண்டறல்போல்
நெறிவேய் அலங்கல் முடித்தலை சாய்த்திங்ஙன் நிற்பதுதான்
அறிவே அறிந்த உனக்கலர் மாளிகை ஆரணங்கே?

து-றை : [தலைவன், தலைவியைக் கெஞ்சி வழிபடல்] 'ஆரணங்கே! அறிந்த உனக்கு இங்ஙன் நிற்பது அறிவே?' என இயைக்க. அலர் மாளிகை- தாமரையாகிய இருப்பிடம், செறி - (வெற்றி) மிகுந்த, வேழம் - கரும்பு, வெஞ்சிலை - கொடிய வில், வேள் - மன்மதனைப் போன்ற, திருந்தலர் - பகைவர், கண் - கண்ணை, உயிர்க்கு ஏவி - (எனது) உயிர்மேல் செலுத்தி (உருபு மயக்கம்), அறல் - கருமணல், நெறிவு எய் - குழற்சி அமைந்த, அலங்கல் - மலர் மாலை சூடிய, முடித்தலை - முடியாகிய தலை (இருபெயரொட்டுப் பண்புத்தொகை), இங்ஙன் - இப்படி, அறிந்த - (யாவும்) அறிந்த, அறிவே- அறிவோ? ஆரணங்கு - உவமையாகு பெயர். 'அறல் போல் இருண்டு' எனவும், 'அறிந்த உனக்கு அறிவே?' எனவும் மொழி மாற்றிக்கொள்க.

7] முன்னிலை ஆக்கல் [௩

வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்தென் மாறைவண்டு
கொழுதியல் ஆர்செய் குழல்மட வீர்! நுங்குற் றேவல்செய்து
தொழுதியல் ஆயத் தொகுதியொ டாடிச் சுனைகுடையா
தெழுதிய பாவையைப் போல்நின்ற வாறென்? இயம்பும்இன்னே.

துறை: [தலைவன், தலைவி நிற்பதைத் தன் காரணமாக்கிக் கூறுதல்] 'மடவீர்! இன்னே இயம்பும்,' என இயைக்க. வழுதியர் - பாண்டியர், நாமம் - புகழை, வளர்க்கின்ற - (நாளுக்கு நாள்) வளரச் செய்கின்ற (வாணன் பாண்டியனுக்கு மந்திரி என்பதை இதனால் அறிக), தென் - அழகு அல்லது தென்திசை, கொழுது - கோதுகின்ற, இயல் - இலக்கணம், ஆர் - பொருந்திய, செய்குழல் - அலங்கரித்த கூந்தலை உடைய, மடவீர்-மடமைக் குணம் உடையீர், நும் - உம்மிடம், குற்றேவல்-சிறு தொழிலை, தொழுது-வணங்கி, இயல் - சஞ்சரிக்கும், ஆயத்தொகுதி - தோழியர் கூட்டம், குடையாது - குளியாமல், எழுதிய பாவை - சித்திரம், நின்றவாறு என் - நின்ற விதம் என்ன? இன்னே இயம்பும் - இப்பொழுதே சொல்லும்.

8] மெய் தொட்டுப் பயிறல் [௪

நல்லார் விழிபோல் இருந்தும், அளிஎனும் நாமம்பெற்றும்
அல்லார் குழலில் அமர்ந்திருந் தால்,அம ராரைவெல்ல
வல்லான் வரோதயன் வாணன்தென் மாறை மதுகரங்காள்!
நில்லா திடை!உமக் கேபழி சால நிலைநிற்குமே!

துறை: [தலைவன், தலைவி உடலைத் தீண்டி நெருங்குதல்] 'மதுகரங்காள்! அமர்ந்திருந்தால் இடை நில்லாது; பழி நிற்கும்,' என இயைக்க. மதுகரங்காள் - வண்டுகளே, நல்லார் - (இப்) பெண்டிரது, அளி - (கிருபை) வண்டு, நாமம் - பெயர், அல் ஆர் - இருள் போன்ற, அமராரை - பகைவரை, வெல்ல வல்லான் - ஜயிக்க வல்லவனும், வரோதயன் - (வர+உதயன்) வரத்தினாற் பிறந்தவனுமாகிய, இடை - (இப்பெண்டிரது) இடுப்பு, பழி - (பெண் கொலையாகிய) பாவம், சால - மிக. உமக்கே - ஏ, அசை. அல் ஆர் - ஆர், உவம உருபு. இங்ஙனம் கூறி வண்டை ஓட்டுவான் போன்று தலைவன் தலைவியின் தோளைத் தொட்டு நெருங்கினான் என அறிக.

9] பொய் பாராட்டல் [௫

பருந்தொன்று கூர்இலை வேல்படை வாணன் பரிமளப்பூஞ்
செருந்தொன்று சோலைத்தென் மாறைஅன் னீர்!செழுந் திங்கள்உங்கள்
முருந்தொன்று கோப முகம்கண்டு நாணி, முயல்மறுத்தீர்
மருந்தொன்று நாடிஅன் றேவட மேரு வலங்கொள்வதே!

து-ரை : [தலைவன், தலைவியின் அழகைப் புனைந்து கூறுதல்] 'தென் மாறை அன்னீர்! திங்கள் மேரு வலங்கொள்வது, உங்கள் முகம் கண்டு முயல் மறைத்தீர் மருந்து நாடி அன்றோ!' என இயைக்க. பருந்து ஒன்று - (பகைவரின் உடல் தசை பொருந்தி இருப்பதால் அதனைப் பெறு தற்குப்) பருந்து பொருந்தும், இலை - இலையைப்போலும், படை - ஆயுதம், பரிமளம் - மணம், செருந்து ஒன்று - செருந்தி மரம் அடர்ந்த, மாறை அன்னீர் - (அழகால்) மாறை நாட்டைப் போல்வீர், செழுந்திங்கள்-பூரணச் சந்திரன், முருந்து-மயில் இறகின் அடிக்குருத்தைப் போன்ற பல், ஒன்று - பொருந்தும், கோபம் - இந்திரகோபம் என்னும் பட்டுப்பூச்சியைப் போன்ற உதடு, நாணி - வெட்கி, முயல் மறுத்தீர் - (தன்னிடமுள்ள) முயல் என்னும் களங்கம் நீங்குதற்கு, நாடி - தேடி, மேரு வலங்கொள்வது - மேரு மலையைச் சுற்றி வருவது. முருந்து, கோபம் - உவமையாகு பெயர்கள்.

10] இடம் பெற்றுத் தழாஅல் [கூ

படம்பட்ட வாளர வல்குலி லேதனை பட்டநெஞ்சே !
விடம்பட்ட வாள்பட்ட வேதனை தீரவிண் தோய்பொழிலும்
தடம்பட்ட வாவியும் சூழ்தஞ்சை வாணன் தமிழ்க்கிரிநாம்
இடம்பட்ட ஆர முலைத்தடம் தோய்தற் கிடமிதுவே.

து-ரை : [தலைவியைத் தழுவுதற்குரிய இடம் காணப்பெற்றுத் தலைவன் அவளைத் தழுவுதலை விரும்பிக் கூறுதல்] 'நெஞ்சே! நாம் முலைத்தடம் தோய்தற்கு இதுவே இடம்,' என இயைக்க. வாள் அரவு படம் பட்ட - ஒளி பொருந்திய பாம்பின் படத்தைப் போன்ற, அல்குல் - பெண் குறி, தளைபட்ட நெஞ்சே - கட்டுப்பட்ட மனமே, விடம்பட்ட வாள் பட்ட - விஷம் பொருந்திய வாள்போன்ற (தலைவியின்) கண்ணால் (நாம்) அடைந்த, விண் தோய் - ஆகாயத்தை அளாவிய, பொழில் - சோலை, தடம்பட்ட - விசாலமான, வாவி - குளம், தமிழ்க்கிரி - பொதிய மலையில், இடம் பட்ட - இடை வெளி அற்ற, ஆரம் - முத்து மாலை பூண்ட, முலைத்தடம் - முலை யாகிய வாவியில், தோய்தற்கு - குளித்தற்கு, இதுவே - ஏ, தேற்றம். இத னால், இடம் வேறு இல்லை என்பது உணர்த்தப்பட்டது.

11] வழிபாடு மறுத்தல் [எ

தேறாத தெவ்வென்ற வாணன்தென் மாறைச்செக் தேன்அருவி
ஊறாத காலத்தும் ஊறுதண் சாரல் ஒதுக்கிடம்தந்
தாறாத சோகமும் ஆற்றுதல் வேண்டும் அசோகம்எய்தி
மாறாத தண்ணளி கூர்மலர் வாள்முக மாதவியே !

து-ரை : [தலைவன் வழிபாட்டைத் தலைவி மறுத்தல்] 'மாதவியே! (நீ) ஒதுக்கிடம் தந்து, சோகமும் ஆற்றுதல் வேண்டும்,' என இயைக்க.

அசோகம் எய்தி - அசோக மரத்தைப் பொருந்தி, மாறுத - பிரியாத; அளி-வண்டு, கூர் - செறிந்த, மலர் - பூவை, வாள்முகம் - ஒளி பொருந்திய முகத்திலே உடைய, மாதவியே - குருக்கத்திக் கொடியே, தேறுத - தெளிவில்லாத, தெவ் - பகைவரை, அருவி - மலையாறு, ஊறுத காலத்தும்-நீர் பெருகாத வேனிற்காலத்தும், ஊறு - பெருகுகின்ற, தண்சாரல் - குளிர்ச்சி பொருந்திய மலைப்பக்கத்தில், ஒதுக்கிடம் - ஒதுங்கும் இடத்தை, ஆறுத சோகமும் - (இவரது) ஆறுத துன்பத்தையும். காலத்தும் - உம், சிறப்பு. சோகமும் - உம், அசைநிலை. இது பெண்ணுக்கும் குருக்கத்திக் கொடிக்கும் சிலேடை நயந்தோன்றச் சொல்லியது. பெண்ணுக்குக் கூறுங்கால், அசோகம் - துன்பம் இல்லாமை, தண் அளி - நல்லருள், மலர் வாள் முகம் - தாமரை மலர் போலும் ஒளி பொருந்திய முகம், மாதவி - பெண்ணின் பெயர்.

12] இடையூறு கிளத்தல் [அ

சிதையா முளரித் திருமா ளிகையின் சிறந்ததென்றென்
இதயார விந்தத் தினிதிருப் பீர்!'இரு கோட்டொருகை
மதயானை வாணன் வரும்தஞ்சை சூழ்வையை நாட்டுறைவோர்
புதையார் தனம்,'என்ப தோமதர் வேல்கண் புதைத்ததுவே?

துறை: [வழிபாடு மறுத்தமை அறிந்த தலைவன் நெருங்கத் தலைவி நாணிக் கண் புதைத்ததனால், அவன் தனக்குண்டான துன்பத்தைக் கூறுதல்] 'இருப்பீர்! வேல்கண் புதைத்தது, வையைநாட்டு உறைவோர் தனம் புதையார் என்பதோ?' என இயைக்க. சிதையா - கெடாத, முளரி - தாமரை, இதய+அரவிந்தம் - மனமாகிய தாமரை, இரு கோட்டு ஒரு கை - இரு தந்தமும் ஒரு துதிக்கையுமுடைய, வரும் - தோன்றிய, வையை நாடு - பாண்டி நாடு, தனம் - செல்வம், முலை (சிலேடை), மதர் - களித்த. இதில் தலைவி திருமகளெனப் போற்றப்பட்டனள்.

13] நீடு நினைந்து இரங்கல் [கூ

தமிழ்தங் கியதஞ்சைக் காவலன் வாணன் தடஞ்சிலம்பில்
குமிழ்தங் கியமதிக் கொம்பர்அன் னீர்!குளிர் வெண்ணிலவு
டமிழ்தண் தரளப் பவளச்செங் கேழ்வள்ளத் துள்ளிருக்கும்
அமிழ்தம் தருவதென் றேபெரு வேட்கைஎன் ஆருயிர்க்கே!

துறை: [தலைவன், புணர்ச்சி கூடாமையால், 'இவள் மனம் என்று இயையுமோ!' எனக் காலம் நீட்டித்தலை அறிந்து வருந்துதல்] 'கொம்பர் அன்னீர்! என் ஆருயிர்க்கு அமிழ்தம் தருவது என்றோ!' என இயைக்க. தங்கிய - நிலைபெற்ற, காவலன் - அரசன், சிலம்பில் - மலையில், குமிழ் - குமி

ழம்பூ (நாசி), மதி - பிறைச்சந்திரன் (நெற்றி), கொம்பர் - பூங்கொம்பு, ஊடு உமிழ் - உள்ளிருந்து கக்கும், தண் தரளம் - குளிர்ச்சியான முத்துப் (பல்) பொருந்திய, செங்கேழ் - செந்நிறமுடைய, வள்ளம்-கிண்ணம் (வாய்), வேட்கை - விருப்பம். அமிழ்தம் என்றது இங்கு அதர பானத்தை.

14] மறுத்து எதிர்கோடல் [௰

கறையார் இலங்கிலை வேல்அன்பர் காமக் கடற்கெதிர்நம்
நிறையாம் வரம்பினி நிற்பதன் றால்;நிறை நீர்உலகை
மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்தென் மாறையில்நாம்
பொறையார் தவம்செய்தி லேம்;நெஞ்ச மே!என் புகல்வதுவே ?

**து-ரை :** [தலைவி, முன்னர் வழிபாடு மறுத்ததை மறுத்துத் தலைவனை ஏற்றுக்கொள்ள விரும்புதல்] ‘நெஞ்சமே! நாம் பொறை ஆர் தவம் செய்திலேம் ; புகல்வது என் ?’ என இயைக்க. கறை ஆர் - இரத்தம் பொருந்திய, இலங்கு இலை வேல் - விளங்குகின்ற இலை போலும் வேலையுடைய, எதிர் - முன், நிறை ஆம் - மறை பிறர் அறியாது காக்கும் குணமாகிய, வரம்பு - அணை, ‘வரம்பு இனி நிற்பது அன்று,’ என இயைக்க. நிறை நீர் - கடல், வன்கலி - கொடிய துன்பம், மாற்றிய - நீக்கிய, பொறை - (வேட்கையைப்) பொறுக்கத்தக்க, ஆர் தவம் - நிறைந்த தவம், புகல்வது - சொல்லுவது, அன்றால் - ஆல் அசை. நிறையாம் வரம்பு - உருவகம்.

15] வறிது நகை தோற்றல் [௰௧

‘எறிதேன் அலம்பும் சிலம்பின்எப் போதும் இரந்திவள்பின்
வெறிதே திரிந்து மெலிந்தனம் நாம்;உள்ளம் மெல்லியற்குப்
பிறிதேகொல் !’ என்னும் பெருந்தகை தேறப் பெரிதுயிர்த்து
வறிதே முறுவல்செய் தாள்தஞ்சை வாணன் வரைஅணங்கே.

**து-ரை :** [தலைவி, புன்னகை புரிதல். வறிது-சிறிது] ‘அணங்கு, பெருந்தகை தேற, உயிர்த்து வறிதே முறுவல் செய்தாள்,’ என இயைக்க. அணங்கு - தெய்வம் போல்வாள், எறி - (இறகால் காற்றை) வீசும், தேன் - வண்டு, அலம்பும் - ரீங்காரம் செய்யும், சிலம்பு - மலை, இரந்து - குறை கூறி வேண்டி, வெறிதே - பயனின்றி, மெல்லியற்கு உள்ளம் பிறிதே - இம் மெல்லியலுக்கு எண்ணம் வேறு, பெருந்தகை - பெருந்தன்மையுடையோன், தேற - தெளியும்படி, பெரிது உயிர்த்து - பெருமூச்சு விட்டு, வறிதே முறுவல் செய்தாள் - புன்னகை செய்தாள். இச்செய்யுள் கவிக்கூற்று.

16] முறுவல் குறிப்பு உணர்தல் [௰௨

‘வின்மலை வேல்அன்ன நல்நுதல் வாள்கண்ணி வேட்கைஎண்ணுள் ;
என்மலை வேண்!’என்னும் என்உயிர் தாங்கும், எதிர்ந்த ஒன்னார்

மன்மலை வேழம் திறைகொண்ட சேய்தஞ்சை வாணன்மஞ்சார்
தென்மலை வேய்நிக ரும்பெருந் தோளி சிறுநகையே.

து-ரை : [தலைவியின் முறுவல் குறிப்பைத் தலைவன் உணர்தல்] 'பெருந் தோளி சிறு நகை, என் உயிர் தாங்கும்,' என இயைக்க. ஒன்னார் - பகைவர், மன் - நிலைபெற்ற, மலை வேழம் - மலைபோன்ற யானையை, திறை - கப்பம், சேய் - முருகக் கடவுளைப்போன்றவன், மஞ்சு + ஆர் - மேகம் பொருந்திய, தென்மலை - பொதிய மலை, வேய்நிகரும் - மூங்கிலை ஒக்கும், தோளி - தோளை உடையவளது, சிறு நகை - புன்னகை, வில் - வில்லும், மலை வேல் - போர் புரிகின்ற வேலும், நுதல் - நெற்றி, வாள் - ஒளி, வேட்கை - (எனது) விருப்பத்தை, எண்ணாள் - கருதாளாயினாள், என் மலைவேன் - யான் எதற்காக மயங்குவேனாயினேன், தாங்கும் - பாதுகாக்கும். 'வில் நுதல், வேல் கண்' - நிரல் நிறை. தலைவன், தலைவியின் வேட்கைக் குறிப்பை அவளது முறுவலினால் உணர்ந்தான் என்க.

17] முயங்குதல் உறுத்தல் [௰௫

வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்ததன்றோ
நானக் குழலியை நான்இன்று பெற்றது, நாவலர்க்குத்
தானக் களிறு தரும்புயல் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய்விரை நாள்மலர்க் காவகத்தே.

து-ரை : [தலைவி சேர்தற்கு உடன்பட்ட அருமையைத் தலைவன் வலியுறுத்திக் கூறல்] 'காவகத்தே நான் இன்று குழலியைப் பெற்றது, வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்தது அன்றோ,' என இயைக்க. நாவலர் - புலவர், தானம் - மதம், களிறு - ஆண் யானை, புயல் - (கொடையில்) மேகத்தைப்போன்ற, கானம் - காடு, கடி - மிகுந்த, வரைவாய் - மலையில், விரை - வாசனை, நாள் மலர் - அன்று மலர்ந்த பூ, காவகத்து - சோலையில், நானம் - கஸ்தூரி, குழலி - கூந்தலையுடையவள், பெற்றது - அடைந்தது, கதிரவன் - சூரியன், அன்றோ - ஓ, எதிர்மறை. கூடும் விரைவு பற்றிப் 'பெற்றது' என இறந்த காலத்தாற் கூறினான்.

18] புணர்ச்சியின் மகிழ்தல் [௰௬

மலைநாடு கொண்ட வழுதிகண் போல்பவன் வாணன்எண்ணெண்
கலைநாடு தஞ்சையர் காவலன் மால்வரைக் கன்னிபொன்நாண்
முலைநாம் முயன்று முயங்கின மால்,முயன் றால்இனிஐந்
தலைநாக நன்மணி யும்பெற லாம்இத் தரணியிலே.

து-ரை : [தலைவன், புணர்ச்சியால் மகிழ்தல்] '(நெஞ்சமே!) நாம் முயன்று கன்னி முலை முயங்கினம்; இனி இத்தரணியில் முயன்றால் ஐந்தலை

நாகநன்மணியும் பெறலாம்,' என இயைக்க. மலைநாடு - சோணாடு, கொண்ட-(வென்று) பெற்ற, வழுதி - பாண்டியனுக்கு, எண்ணெண்கலை - 64 கலைகளும், நாடு - (இருத்தற்கு) விரும்பிய, தஞ்சையர் - தஞ்சாக்கூரில் உள்ளார், மால் வரை - பெரிய மலையில், கன்னி - குமரியின், பொன் நாண் - தங்கச் சரடு, முயங்கினமால் - சேர்ந்தோம் ஆதலால், (இதில் **ஆல்** என்பது 'ஆதலால்' எனக் காரணப்பொருள்படும் ஓர் இடைச்சொல்.) இனி - இன்று, தரணி யில் - உலகில், மணி - இரத்தினம், நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

**19]** புகழ்தல் [௧௫

**திரண்மா மரகதச் செய்குன்று காள்!என்றும் செவ்வனம்நீர்**
**முரண்மா தவங்கள் முயன்றுசெய் தாலும் முளரிமங்கை**
**சரண்மாறை வாணன் தமிழ்த்தஞ்சை நாட்டேன் தனிஉயிர்க்கோர்**
**அரண்மான் அனையகண் ணாள்கொங்கை போறல் அரிதுமக்கே.**

**து-ரை :** [தலைவன், தலைவியின் நலத்தைப் பாராட்டல்] 'குன்றுகாள்! நீர் மாதவங்கள் முயன்று செய்தாலும், கண்ணாள் கொங்கை போறல் உமக்கு அரிது,' என இயைக்க. திரள் - திரண்ட, மா - பெரிய, மரகதம் - மரகத மணி, செய் குன்று - (மாதர் விளையாடச்) செய்த சிறு மலை, செவ்வனம் - செம்மையான காட்டில் (செம்மையாக எனலுமாம்), முரண் - மாறுபட்ட, முயன்று - வருந்தி, முளரி மங்கை - திருமகள், சரண் - அடைக்கலமாய் வீற்றிருக்கும், என் தனி உயிர்க்கு - எனது துணை இல்லாத உயிருக்கு, அரண் - காவல், 'அரணும் மானும் அனைய கண்ணாள்' என இயைக்க. கொங்கை - முலை, போறல் - (போல் + தல்) ஒத்திருத்தல், அரிது - அரிய காரியம். தவத்திற்கு மாறுபாடாவன : மழை, வெயில், பனி, காற்று இவற்றால் ஏற்படும் துன்பங்கள், செய்தாலும் - உம்மை அருமை தோன்ற நின்றது.

முதல் ஒன்பது கவிகளில் ௭ - ஆம் கவி ஒழிந்த மற்றையவை, **வேட்கையுணர்த்தற்**குரியன ; ௭ - ஆம் கவி, **மறுத்தற்**குரியது ; ௰, ௧௧ - ஆம் கவிகள், **உடன்படலு**க்குரியன ; ௧௨, ௧௩, ௧௪, ௧௫ - ஆம் கவிகள் **கூட்டத்திற்**குரியன.

# 2. வன்புறை

20] அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல் [௧

நாவியும் காரகில் ஆவியும் தோய்குழல்! நாணிஅஞ்சேல்;
வாவியும் சோலையும் சூழ்தஞ்சை வாணன்தென் மாறைவயல்
காவியும் சேலும் கமலமும் காட்டும்நின் கண்மலரும்
ஆவியும் போல்இனி யார்அணி யாக அணிந்தனனே.

து-ரை : [புணர்ச்சியில் நிலை குலைந்த அணிகளைத் தலைவன் முன்போல அணிந்தபோது, தலைவி, 'இவ்வேறுபாட்டைப் பாங்கி அறிந்தால் ஐயுறுவள்,' என வெட்கியதை அறிந்து, தலைவியைத் தெளிவித்தல்] 'குழல்! நாணி அஞ்சேல்; இனியார் அணியாக அணிந்தனன்,' என இயைக்க. நாவி - கஸ்தூரி, அகில் ஆவி - அகிற்புகை, குழல் - கூந்தலையுடையவளே (அண்மை விளி), வாவி - குளம், வயல் - வயலில் தோன்றிய, காவி - நீலோற்பலம், சேல் - கெண்டை மீன், காட்டும் - ஒப்புக் காட்டும், ஆவி - உயிர், இனியார் - தோழியர் (அணிந்த), அணியாக-அலங்காரமாகும்படி, குழல்-சினையாகுபெயர்.

21] பெருநயப்பு உரைத்தல் [௨

மன்னு உலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்வெற்பில்
என்னுவி அன்ன இவள்இடை மேல்இணை கொண்டெழுந்த
பொன்நாண் அணிகொங்கை போலவண் டீர்!உங்கள் பொய்கைஉண்டோ
நன்னுள் அரும்பொரு தாள்இரண் டீனும் நளினங்களே?

து-ரை : [தலைவன், தனது மிகுந்த காதலை உரைத்தல்] 'வண்டீர்! இவள் இடைமேல் இணை கொண்டு எழுந்த கொங்கைபோல ஒரு தாள் இரண்டு அரும்பு ஈனும் நளினங்கள் உங்கள் பொய்கை உண்டோ?' என இயைக்க. வண்டீர் - வண்டுகளே, மன்னு - நிலை பெறுத, மன்னிய - நிலை பெற்ற, சீர் - புகழ், வெற்பு - மலை, ஆவி - உயிர், இடைமேல் - இடுப்பின் மீது, இணைகொண்டு - இரண்டாய், எழுந்த - தோன்றிய, பொன் நாண் - தங்கச்சரடு, நன்னுள் அரும்பு - நல்ல புதிய மொட்டு, தாள் - தாளில், ஈனும் - அரும்பும், நளினங்கள் - தாமரைக் கொடிகள். வயிற்று ரோம ரேகை தாளாகவும், இரு முலைகளும் அதில் அரும்பிய அரும்பாகவும் கொள்க. இக்கிளவிக்கும் மேல் 8-ஆம் செய்யுளிற்போல வண்டு முன்னிலையாகச் செய்யுள் பாடுதல் மரபு.

22] தெய்வத்திறம் பேசல் [௩

மன்னிய பார்புகழ் வாணன்தென் மாறையில் மாந்தளிர்போல்
மின்னிய மாமை விளர்ப்பதென் னே?விதி கூட்டநம்மில்

பின்னிய காதல் பிரிப்பவர் யார்இனிப் பேரருவி
இன்னிய மாக இளமயில் ஆடும் இரும்பொழிற்கே.

கு-ரை : [ஊழ் வலியின் திறத்தைக் கூறல்] '(தலைவி!) மாமை விளர்ப்பதென்னே? நம்மில் பின்னிய காதல் இனிப் பிரிப்பவர் யார்?' என இயைக்க. 'பார் மன்னிய புகழ்' என இயைக்க. மின்னிய - ஒளி வீசிய, மாமை - அழகு, விளர்ப்பது - வெளுத்துத் தோன்றுவது, விதி - ஊழ், நம்மில் - நமக்குள், பின்னிய - பிணித்த, இன்னியம் - (இங்கு) மத்தளம், இரும்பொழிற்கு - பெருஞ்சோலையில் (உருபு மயக்கம்), இனி - பின்பு, என்னே, பொழிற்கே - ஏகாரம் அசை. தலைவி - முன்னிலை எச்சம்.

23] 'பிரியேன்,' என்றல் [௪

வண்கொடி எய்மதில் மாறை வரோதயன் வாணன் ஒன்னார்
எண்கொடி யேன்எய்த இவ்வண்ணம் நீஇரங் கேல்இரங்கேல்;
நுண்கொடி ஏர்இடை வண்டிமிர் பூங்குழல் நூபுரத்தாள்
பெண்கொடி யே!பிரி யேன்;தரி யேன்நிற் பிரியினுமே.

கு-ரை : [தலைவன், 'உன்னை விட்டுப் பிரியேன்,' என்று கூறுதல்] 'பெண் கொடியே! நீ இரங்கேல் இரங்கேல்; நிற்பிரியேன்; பிரியினும் தரியேன்,' என இயைக்க. வண்கொடி - கொடைக்கொடி, எய் - பொருந்திய, வரோதயன் - (வர + உதயன்) வரத்தினால் பிறந்தவன், ஒன்னார் - பகைவர், எண் - எண்ணத்தை, எய்த - அடைய, இவ்வண்ணம் - இவ்விதம், இரங்கேல் இரங்கேல் - விரைவு பற்றிய அடுக்கு, ஏர் இடை - அழகிய இடை, வண்டு இமிர் - வண்டுகள் ஒலிக்கும், நூபுரம் - பாதச்சிலம்பு, தாள் - பாதம், பெண்கொடி - உருவகம், நிற்பிரியினும் - உன்னை விட்டுப் பிரிந்தாலும். இக்கிளவிக்குப் 'பிரியேன் ; பிரியினும் தரியேன்,' என்பது இலக்கணம்.

24] 'பிரிந்து வருக,' என்றல் [௫

சென்றே பகைவென்ற திண்படை வாணன் செழுந்தஞ்சைசூழ்
நன்றே தருவையை நாடனை யாய்!நம தாருயிர்போல்
ஒன்றே எனதுரை; ஊங்குயர் சோலையி னூடொளித்து
நின்றே வருவல்;இங் கேவிளை யாடுக நீசிறிதே.

கு-ரை : [தலைவன், 'யான் பிரிந்து வருவேன்,' என்று கூறுதல். வருக - வருவேன் (தன்மை ஒருமை வினை முற்று)] 'வையை நாடு அனையாய்! எனது உரை ஒன்றே; சோலையினூடு ஒளித்து நின்றே வருவல்; இங்கே நீ சிறிது விளையாடுக,' என இயைக்க. திண் படை - வலிய சேனை, நன்றே தரு - நன்மையையே தரும், நாடு அனையாய் - நாட்டைப் போன்றவளே, ஊங்கு - உவ்விடத்து (சுட்டு நீண்டது), வருவல்-வருவேன், சிறிது - சிறிது

நேரம். இங்குத் தலைவன் களவு ஒழுக்கம் பிறர்க்குப் புலனாகாமை கருதிப் பிரிந்தான் என்க; அது கருதியே தலைவியும் ஆற்றினளாமென்க. சென்றே, நின்றே - ஏகாரம் அசை; நன்றே, ஒன்றே - ஏகாரம் தேற்றம்.

25] 'இடம் அணித்து,' என்றல் [கரு

மணிபொன் சொரியும்கை வாணன்தென் மாறை மருவினர்போல்
தணிபொன் சொரியும் தடமுலை யாய்!உயர் சந்தம்உந்தி
அணிபொன் சொரியும் அருவிஎம் சாரல் அகத்தலர்தேங்
கணிபொன் சொரியும்நின் சாரல்மென் காந்தளங் கையகத்தே.

து-ரை: [தலைவன், 'எமது இருப்பிடம் உனது இருப்பிடத்திற்கு அருகில் உள்ளது,' எனக் கூறுதல்] 'தடமுலையாய்! எம் சாரலகத்து அலர் தேங்கணி, நின் சாரல் காந்தளம் கையகத்தே பொன் சொரியும்,' என இயைக்க. மணி பொன் - இரத்தினமும் பொன்னும், சொரியும் கை - (எற்றோர்க்கு) வழங்கும் கையை உடைய, மருவினர் - வாழ்பவர், பொன்-பொன் போலும் பசலை நிறம், சந்தம் - சந்தனமரம், உந்தி - (அலையால்) வீசி, அணி- அழகிய, சாரல் - மலைச்சார்பு, தேங்கணி - (தேன் + கணி) தேன் பொருந்திய வேங்கைமரம், காந்தளம் கையகத்து - காந்தள் பூவாகிய கையில், 'கணி, பொன் அலர் சொரியும்,' என இயைக்க. 'எம் சாரல் வேங்கை மரத்தால் நின் சாரல் காந்தள் பயன் பெற்றது போல, என்னால் நீயும் பயன் பெறுவாய்,' என உள்ளுறை உவமம் தோன்றக் கூறினன் என்க.

[க-கரு கவிகள் ஐயம் தீர்த்தல்; ௪-கரு கவிகள் பிரிவு அறிவுறுத்தல்.]

# 3. தெளிவு

26] <u>தலைவன் சொல்லைத் தலைவி தேறுதல்</u> [க

எத்தும் தமதுரை தேறிநின் றேனைஇங் கேதனியே
வைத்தங் ககன்று மறந்துறை யார்,வறி யோர்கவர
முத்தும் துகிரும் இரங்கும் தரங்கம் முகந்தெறிந்து
தத்தும் கரைவையை சூழ்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே.

**து - றை :** [தலைவன் கூறியதைத் தலைவி மெய்யெனத் தெளிந்து ஆற்றுவது] 'தமிழ் வெற்பர் மறந்து உறையார்,' என இயைக்க. எத்தும் - எத்திறத்தும், உரை-('நின்னைப் பிரியினும் தரியேன்;' எனக்கூறிய) சொல்லை, தேறி - மெய்யெனத் தெளிந்து, நின்றேனை - ஆற்றியிருந்த என்னை, அகன்று - பிரிந்து, உறையார் - தரித்திருக்கமாட்டார், வறியோர் - ஏழைகள், கவர - கவர்ந்துகொள்ள, துகிர் - பவளம், இரங்கும் - ஒலிக்கும், தரங்கம் - அலைகள், முகந்து எறிந்து - எடுத்து வீசி, தத்தும் - தாவும், தமிழ் வெற்பர் - பொதிய மலைத் தலைவர்.

'இரங்கும் தரங்கம் வறியோர் கவர முத்தும் துகிரும் முகந்து எறிந்து தத்தும் கரையையுடைய வையைநதி சூழ்ந்த தஞ்சைநாட்டுத் தமிழ் வெற்பர் ஆதலால், தலைவரும் அருள் உடையவராய், எத்தும் தமது உரை தேறி நின்றேனை இங்கே தனியே வைத்து அகன்று அங்கு உறையார்,' எனத் தலைவி நயந்தோன்றக் கூறினள் என்க.

# 4. பிரிவுழி மகிழ்ச்சி

27] செல்லும் கிழத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல் [க

அகில்ஏந்து கூந்தல் ஒருகையில் ஏந்தி, அசைந்தொருகை
துகில்ஏந்தி, ஏந்தும் துணைச்சிலம் பார்ப்பத் துளிகலந்த
முகில்ஏந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந் நீர்த்துறைவாய்
நகில்ஏந்து பூங்கொடி போல்செல்லு மால்நெஞ்சம்! நம்முயிரே.

கு - ரை: [தன்னிடமிருந்து செல்லுந் தலைவியின் போக்கைக் கண்டு தலைவன் தன் நெஞ்சொடு கூறல்] 'நெஞ்சம்! நம் உயிர் பூங்கொடி போல் செல்லும்,' என இயைக்க. உயிர் என்றது தலைவியை. அகில் - அகிற் புகை (கருவியாகுபெயர்), துகில் - புடைவை, ஏந்தும் - (பாதத்தில்) அணியும், துணைச்சிலம்பு - இரு சிலம்பணிகளும், ஆர்ப்ப - ஒலிக்க, துளி - நீர்த் துளி, முகில் - மேகத்தை, முந்நீர்த்துறைவாய் - கடல் துறையில், நகில் - முலை, நெஞ்சம் - அண்மை விளி, ஆல் - அசை.

28] பாகனொடு சொல்லல் [உ

தென்பால் திலகம்அன் னான்தஞ்சை வாணன்தென் மாறைமுந்நீர்
வன்பால் திரள்முத்த வண்டலின் மேல்வரும் ஏதம்அஞ்சி
முன்பார்த்தென் நெஞ்சம் வரும்வழி பார்த்து முறைமுறையே
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வா!ஒரு பெண்அணங்கே.

கு - ரை: [தலைவன், தன்னைத் தேடி வந்த தேர்ப்பாகனுக்குத் தலைவி செல்லுதலைக் காட்டிக் கூறல்] 'வலவா! ஒரு பெண் அணங்கு ஒதுங்குதல் காண்,' என இயைக்க. வலவா - தேர்ப்பாகனே, பெண் அணங்கு - அணங்குபோலும் பெண், தென்பால் திலகம் - தென் திசைக்குத் திலகம், முந்நீர் - கடற்கரையில், வன் பால் திரள் - வலிய பால் திரள் போன்ற, வண்டலின்மேல் - ஆயக் கூட்டத்தார்மேல், ஏதம் - குற்றத்திற்கு, ஒதுங்குதல் - ஒதுங்கிச் செல்லுதல், காண் - பார். வண்டலின்மேல் வரும் ஏதமாவது, தலைவியைத் தனித்திருக்க விட்டது என்க.

## 5. பிரிவுழிக் கலங்கல்

29] ஆய வெள்ளம் வழிபடக் கண்டு, 'இது மாயமோ!' என்றல் [க

'சீயம்கொ லோ!'எனத் தெவ்வென்ற வாணன்தென் மாறைவரைத்
தோயம்கொ லோஎனும் நேயம்கம் பால்வைத்துச் சோலைமஞ்ஞை
ஆயம்கொ லோஎனும் ஆயத்துள் ளாள்இவ் வரிவை,என்ன
மாயம்கொ லோநெஞ்ச மே!மணம் போல்இங்கு வந்துற்றதே!

கு - ரை: [தலைவியைத் தோழியர் கூட்டம் உபசரித்தலைக் கண்டு, 'இத்தோழியர் கூட்டத்தில் இருப்பவள் தனித்து வந்து என்னைக் கூடியது என்ன மாயமோ!' என்று தலைவன் மயங்கிக் கூறுதல்] 'நெஞ்சமே! இவ்வரிவை மணம்போல் இங்கு வந்துற்றது என்ன மாயங்கொலோ!' என இயைக்க. சீயம் - சிங்கம், என - என்று எண்ணும்படி, தெவ் - பகை வரை, தோயம் - நீர், நேயம் - அன்பு, மஞ்ஞை ஆயம் - மயில் கூட்டம், எனும் - என்று எண்ணும்படி ஐயத்தை உண்டுபண்ணும், ஆயத்து - தோழியர் கூட்டத்தில், உள்ளாள் - இருப்பவளாகிய, அரிவை - பெண், மணம் போல் - மணம் செய்ததுபோல, உற்றது - (நம்மைக்) கூடியது. கொல் நான்கும் ஐயம். ஓகாரம் நான்கும் அசைநிலை. ஓகாரம் ஐயமாகவும், கொல் அசைநிலையாகவும் கொள்ளலும் ஆம்.

30] வாயில் பெற்று உய்தல் [உ

பெருமால் மருந்தொன்று பெற்றனம் யாம்;நெஞ்சம்! பேதுறல்;பார்
மருமான் வரோதயன் வாணன்தென் மாறை மணங்கமழ்பூந்
திருமான் முகமலர்ச் சேயரி பாய்கயல் சென்றுசென்றவ்
வொருமான் நகைமுக மாமலர் ஓடை உலாவருமே.

கு - ரை: [அத்தோழியருள் தலைவன் தலைவியை அடைதற்குரிய தூது ஆகத் தகுந்தவள் இன்னாள் என அறிந்து அவளைத் தூதாகப் பெற்று உய்வதாகக் கூறல்] 'நெஞ்சம்! யாம் பெருமால் மருந்து ஒன்று பெற்றனம்; (நீ) பேதுறல்,' என இயைக்க. பார் மருமான் - உலகத்திற்கு வழித்தோன்றல் (வழித்தோன்றல் தன் வமிசத்தை உயர்த்துதல்போல வாணன் உலகத்தை உயர்த்த வந்தவனாதலின் இங்ஙனம் கூறப்பட்டான் என்க. 'உலக மங்கை தவலைத் தவிர்த்த தமிழ்த்தஞ்சை வாணன்,' (செய். 363) எனப் பின்னும் கூறப்படுதல் காண்க.) கமழ் - வீசும், பூந்திருமான் - செந்தாமரை மலரிலுள்ள இலக்குமி போன்ற தலைவியின், சேயரி பாய் -

செவ்வரி படர்ந்த, கயல் - கெண்டை மீன் போன்ற கண்கள், அவ்வொரு மான் - அந்த ஒப்பற்ற மான் போன்ற பாங்கியின், நகை முகம் - ஒளி பொருந்திய முகமாகிய, மலர் ஓடை - தாமரை ஓடையில், உலாவரும் - உலவும். (ஆகையால்) பெருமால் - (நமது) பெரிய மன மயக்கமாகிய நோய்க்கு, பெற்றனம் - அடைந்தோம், பேது உறல் - (இம்மருந்தால் அந் நோய் தீருமாதலின் நீ) மயங்காதே. இது, தலைவியின் பார்வை தலைவனுக்கு அவளது உயிர்ப்பாங்கியை அறிவித்தவாறு. நெஞ்சம் - அண்மை விளி. திருமான், கயல் - உவமையாகுபெயர்கள். சென்று சென்று - அடுக்கு.

31] பண்பு பாராட்டல் [௫

மயலார் களிற்றண்ணல் வாணன்தென் மாறையில் வாய்த்தவர்கண்
கயலாம் எனின்,கயல் கள்ளம்கொள் ளா;கருந் தாழ்அளகம்
புயலாம் எனின்,புயல் போதுகொள் ளா;இப் புனையிழையார்
இயலாம் அனைத்தையும் வேறென்ன பேரிட் டியம்புவதே!

து - ரை: [தலைவன், தலைவியின் அழகைப் பரிந்து கொண்டாடல்] '(நெஞ்சமே!) இப்புனையிழையார் இயலாம் அனைத்தையும் வேறு என்ன பேரிட்டு இயம்புவது!' என இயைக்க. மயல் ஆர் - மயக்கம் பொருந்திய, களிற்று அண்ணல் - யானைப்படையையுடைய பெரியோன், வாய்த்தவர் - (நமக்குக்) கிடைத்த இப்பெண்மணியாரின், கள்ளம் - கள்ளப்பார்வை, கருந்தாழ் அளகம்-கருமையான நீண்டு தொங்கும் கூந்தலை, புயல் - மேகம், போது -மலர், புனை இழையார் - அலங்கரித்த ஆபரணங்களை உடையவர், இயல் - இலக்கணம், இயம்புவது-சொல்லுவது, நெஞ்சம்-முன்னிலை எச்சம்.

32] பயந்தோர்ப் பழிச்சல் [௪

அணியும் சுடர்விரி சங்குபங் கேருகம் ஆடகமும்
மணியும் தரமன்னி வாழிய ரோதஞ்சை வாணன்வெற்பில்
தணியும் தொழில்ஒழித் தின்பமும் துன்பமும் தன்பதமே
பணியும் பணிஎனக் குப்பயந் தாளைப் பயந்தவரே.

து - ரை: [தலைவியைப் பெற்றோரைத் தலைவன் வாழ்த்துதல்] '(நெஞ்சமே!) தன் பதமே பணியும் பணி எனக்குப் பயந்தாளைப் பயந்தவர் வாழியரோ,' என இயைக்க. அணியும் - அழகு செய்யும், சுடர் விரி - ஒளி பரவிய, சங்கு - சங்க நிதியும், பங்கேருகம் - பதும நிதியும், ஆடகம் - செம்பொன், மணி - நவரத்தினங்கள், தர - தரும்படி, மன்னி - நிலைபெற்று, தணியும் - தாழும், இன்பமும் துன்பமும் - இன்பத்திலும் துன்பத்திலும், பதம் - பாதங்களில், பணியும் - பணி - வணங்குந் தொழிலை, பயந்

தாளை - கொடுத்தவளை, பயந்தவர் - பெற்றவர் (தாய்தந்தையர்), வாழியரோ - ஓ, அசை. நெஞ்சம் - முன்னிலை எச்சம். ('சங்கு பங்கேருகம் ஆடகமும் மணயும் தர மன்னி வாழியரோ,' என்றதன் கருத்து, இந்திர செல்வம் போலும் பெருஞ் செல்வம் பெற்று வாழ்க,' என்பது.)

33] கண்படை பெறாது கங்குல் நோதல் [ரு

**வாமக் கலைஅல்குல் வாள்நுத லார்தஞ்சை வாணன்வெற்பில்**
**நாமக் கலவி நலம்கவர் போது நமக்களித்த**
**காமக் கனல்அவர் கையகல் காலைக் கடும்பனிகூர்**
**யாமக் கடலகத் தும்தணி யாதினி என்செய் துமே!**

து - ரை: [தலைவிமீது உண்டான விருப்பத்தால் தலைவன் உறக்கம் கொள்ளாமல் இரவில் வருந்துதல்] '(நெஞ்சமே!) வாள் நுதலார் நமக்கு அளித்த காமக் கனல், கடும்பனிகூர் யாமக் கடலகத்தும் தணியாது; இனி என் செய்தும்!' என இயைக்க. வாமம் - அழகு, கலை - மேகலாபரணம், வாள் நுதலார் - ஒளிபொருந்திய நெற்றியை உடையவர், நாம் அக்கலவி நலம் கவர் போது - நாம் அவ்வியற்கைப் புணர்ச்சியில் இன்பம் கொண்டபோது, அளித்த - கொடுத்த, காமக்கனல் - வேட்கைத் தீ, அவர் கையகல் காலை - அப்பெண்மணியார் பிரியும்போது, கூர் - மிகுந்த, யாமக் கடலகத்தும் - நடு இரவாகிய கடலில் மூழ்கியும், இனி - இன்று, என் செய்தும் - (நாம்) என்ன செய்யக் கடவோம்! கடலகத்தும் - உம், சிறப்பு. நலம் - பண்பாகுபெயர், நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

# 6. இடம் தலைப்பாடு

34] 'தந்த தெய்வம் தரும்,' எனச் சேறல் [௧

மன்றும் பொதியினும் மாமயில் சேர்தஞ்சை வாணன்வெற்பில்
துன்றும் புயல்இளஞ் சோலையின் வாய்ச்சுற வுக்குழையைச்
சென்றுந்து சேல்விழி மின்னைமுன் னாள்தந்த தெய்வம்நமக்
கின்றும் தரும்;நெஞ்ச மே!எழு வாழிஇங் கென்னுடனே.

து - ரை: ['தலைவியை முன் இயற்கைப் புணர்ச்சியில் நமக்குக் கொடுத்த விதி, இன்றும் அங்குச் சென்றால் கொடுக்கும்,' எனத் தலைவன் செல்லுதல்.] 'நெஞ்சமே! மின்னை முன்னாள் சோலையின்வாய் நமக்குத் தந்த தெய்வம் இன்றும் தரும்; என்னுடன் எழு,' என இயைக்க. மன்று - ஊர் நடுவில் மக்கள் கூடும் பொதுவிடமாகிய மரத்தடி, பொதி - ஊரார் சபை கூடும் பொதுவிடம், புயல் துன்றும் - மேகம் தவழும், இளஞ்சோலையின்வாய் - இளமரச் சோலையில், சுறவுக்குழை - சுறா மீன் வடிவிற்செய்த குண்டலம், உந்து - தள்ளும், சேல் - கெண்டை மீன் போலும், மின்னை - மின்னல் போன்ற தலைவியை (உவமையாகு பெயர்), முன்னாள் - நேற்று, தெய்வம் - விதி, எழு - புறப்படு, வாழி - முன்னிலை அசை.

35] முந்துறக் காண்டல் [௨

மருவாயம் நாப்பண் மயில்உரு வாய்நென்னல் வாணன்தஞ்சைத்
தருவாய்த் தழைகொய்து தண்புனம் காத்துத் தடம்குடைந்து
திருவாய் மலர்ந்து சிலம்பெதிர் கூய்இன்றோர் தெய்வதப்பெண்
உருவாய் ஒருதனி யேநின்ற தால்என் உயிர்க்குயிரே.

து - ரை: [தலைவியைத் தலைவன் முன்போலக் காணுதல்] '(நெஞ்சமே!) என் உயிர்க்கு உயிர், நென்னல் மயில் உருவாய், கொய்து, காத்து, குடைந்து, மலர்ந்து, கூய், இன்று ஓர் தெய்வதப்பெண் உருவாய் ஒரு தனியே நின்றது,' என இயைக்க. உயிர்க்கு உயிர் என்றது, தலைவியை. மருவு - தன்னைச் சார்ந்த, ஆயம் - தோழியர் கூட்டம், நாப்பண் - நடுவில், நென்னல் - நேற்று, தரு - மரங்களடர்ந்த சோலை (சாதி ஒருமை), தண் புனம் - குளிர்ச்சியான (தினைக்) கொல்லை, தடம் குடைந்து - குளத்தில் நீராடி, மலர்ந்து - திறந்து, சிலம்பு - மலை, கூய் - கூவி, ஓர் - ஒப்பற்ற, தெய்வதப்பெண் - தெய்வ மாது, ஒரு தனி - தன்னந்தனி. சிலம்பெதிர் கூவல் - பெண்டிர் மலையை நோக்கிக் கூவி எதிர் ஒலியை உண்டாக்கும் ஒரு விளையாட்டு, ஆல் - அசை, நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

36] முயங்கல் [௩

மானா கரன்தஞ்சை வாணன் வரோதயன் மாறைஅன்னாள்
தானாவி நின்றலர் தாமரை யே;அத் தடமலர்வாய்
ஆனா தொழுதுசெங் தேன்அல்லி மேவும் அரசஅன்னம்
யானா கிடைப்பது வேஇன்ன பான்மை இருவர்க்குமே!

து - ரை: [தலைவன், தலைவியைப் புணர்தல்] 'மாறை அன்னாள் தாமரை; யான் அத்தடமலர்வாய் அல்லி மேவும் அரச அன்னம்; ஆ! இன்ன பான்மை இருவர்க்கும் கிடைப்பதுவே!' என இயைக்க. மானாகரன் - (மான + ஆகரன்) மானத்துக்கு உறைவிடமானவன், ஆவி - குளம், நின்று அலர் - நிலை பெற்று மலர்ந்த, தடமலர் - அகன்ற பூ, ஆனாது - நீங்காமல், அல்லி - (தாமரையின்) அக இதழ், மேவும் - தங்கும், யானா - ஆ, வியப்பிடைச்சொல், இன்ன பான்மை - இப்படிப்பட்ட தன்மை, கிடைப்பதுவே - கிடைக்கத் தக்கதோ, தானாவி - **தான்**, சாரியை. தாமரையே - ஏ, அசை.

37] புகழ்தல் [௪

அரும்பாம் அளவில் தனத்தொடோவ் வாய்;அலர் ஆம்அளவில்
கரும்பாம் மொழிவத னத்தொடோவ் வாய்;களி யானைசெம்பொன்
தரும்பாரி வாணன் தமிழ்த்தஞ்சை யான்தரி யாரின்முன்செய்
பெரும்பாவம் அல்லது நீர்நின்ற பேறல்லி! பெற்றிலையே!

து - ரை: [தலைவன் தலைவியைப் புனைந்துரை வகையால் புகழ்ந்து கூறுதல்] 'அல்லி! கரும்பாம்மொழி தனத்தொடு வதனத்தொடு ஒவ்வாய்; முன்செய் பெரும்பாவம் அல்லது நீர்நின்ற பேறு பெற்றிலை,' என இயைக்க. அல்லி - தாமரை மலரே (அண்மை விளி; சினையாகு பெயர்), அளவில் - சமயத்தில், தனம் - முலை, கரும்பு ஆம்மொழி - கரும்பைப்போன்ற இனிய மொழியைப் பேசுபவளது (உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), அலர் - பூ, வதனம் - முகம், ஒவ்வாய் - ஒப்பாகமாட்டாய், களி - செருக்கடைந்த, யானை செம்பொன் - யானையும் செம்பொன்னும், தரும் - (புலவர்க்குத்) தருகின்ற, பாரி - பாரி என்னும் வள்ளலுக்கு ஒப்பான, தரியாரின் - பகைவரைப்போல, நீர் நின்ற பேறு - நீரில் நின்று தவஞ்செய்த பயனை, பெற்றிலை - நீ பெறவில்லை.

38] ஆயத்து உய்த்தல் [௫

மேவிக் கலைக்கடல் என்புலன் மீன்உண்டு மீண்டுவங்கிதென்
ஆவிக் கமலத் தமர்அன்ன மே!நின் அயில்விழிபோல்
வாவிக் கயல்உக ளும்தஞ்சை வாணன் வரையில்உடன்
கூவிக் கயற்குடை நின்குயில் ஆயம் குறுகுகவே.

து - ரை: [தலைவன், தலைவியைத் தோழியர் கூட்டத்துள் செலுத்துதல்] 'என் ஆவிக் கமலத்து அமர் அன்னமே! நின் ஆயம் குறுகு,' என இயைக்க. கலைக்கடல்மேவி - கலையாகிய கடலில் முழுகி, புலன் மீன் - அறிவாகிய மீனை, ஆவிக் கமலம் - உயிராகிய தாமரை, அயில் - கூர்மை வாவி - குளத்தில், உகளும் - புரளும், வரையில் - மலையில், உடன் கூவி - எதிர் கூவி, கயம் குடை - நீர் நிலையில் குளிக்கின்ற, குயில் ஆயம் - குயில் போன்ற தோழியர் கூட்டத்தில், குறுகுக - கூடுக. விழி போல் கயல் - விபரீத உவமை. இக்கவியில் கலை கடலாகவும், புலன் மீனாகவும், ஆவி கமலமாகவும், தலைவி அன்னமாகவும் உருவகம் செய்யப்பட்டன.

# 7. பாங்கற்கூட்டம்

39] தலைவன் பாங்கனைச் சார்தல் [௧

புனையாழி அங்கைப் புயல்வளர் பாற்கடல் பூங்கொடிவாழ்
மனையா கியதஞ்சை வாணன்ஒன் னார்என மற்றிங்ஙனே
இனையா தெழுமதி நன்னெஞ்ச மே!நமக் கின்னுயிரே
அனையான் அருட்புன லால்அனங் கானலம் ஆற்றுதற்கே.

து - ரை: [தலைவன், 'இவ்வேட்கை நோய் பாங்கனால் அன்றித் தீராது,' என்று தன் பாங்கனை அணுகுதல்] 'நன்னெஞ்சமே! நமக்கு இன்னுயிரே அனையான் அருள் புனலால் அனங்கானலம் ஆற்றுதற்கு இனையாது இங்ஙனே எழு,' என இயைக்க. இன்னுயிரே அனையான் - பாங்கன், அருள் புனலால் - கிருபையாகிய நீரினால், அனங்கானலம் - (அனங்க + அனலம்) காமக்கனல், ஆழி புனை - சக்கரத்தைத் தாங்கும், அம் - அழகிய, புயல் - மேகம்போலும் நிறமுடைய திருமால், வளர் - அறிதுயில் கொள்ளும், பூங்கொடி - திருமகள், ('பூங்கொடி வாழ் மனையாகிய தஞ்சை' என்றது, அவள் பிரியாமல் வாழும் தஞ்சாக்கூர் என்றபடி.) ஒன்னார் - பகைவர் (ஒன்றார் என்பதன் மரூஉ), மற்று - அசை, இங்ஙனே - இவ்விடத்தில், இனையாது - வருந்தாமல், எழு - புறப்படு, 'ஆழியங்கைப் புயல், பாற்கடல் பூங்கொடி' - உருவகம், மதி - முன்னிலை அசை.

40] பாங்கன் தலைவனை உற்றது வினாதல் [௨

வலம்புரி போல்கொடை வாணன்தென் மாறை மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போல்ஒளி தேம்பிஇவ்வா
றுலம்புனை தோளும்நின் உள்ளமும் வாடி உருகிநின்று
புலம்புவ தென்னைகொல் லோ!சொல்ல வேண்டும் புரவலனே!

து - ரை: [பாங்கன், தலைவனது உள்ளமும் தோளும் வாடியது உணர்ந்து, 'உனக்கு இவ்வேறுபாடு நேரிடக் காரணம் என்ன?' என்று வினாதல்] 'புரவலனே! இவ்வாறு புலம்புவது என்னைகொல்லோ! சொல்ல வேண்டும்,' என இயைக்க. புரவலனே - (பிறரைக்) காப்பதில் வல்லவனே, வலம்புரி - சங்க நிதி, கொடை - தருமத்தையுடைய, மழை - மேகம், வளர் - தூங்குவதுபோலத் தவழும், பூஞ்சிலம்பு - அழகிய மலை, உறை - வாழும், சூர் - கொடுமை விளைக்கும் தெய்வப்பெண், தீண்டின - தீண்டினது (துவ்விகுதி தொக்கது), தேம்பி - மழுங்கி, உலம்புனை - திரண்ட கல்லைப்போலும் அழகிய, புனை - அழகு. கொல், ஓ - அசைநிலை.

41] தலைவன் உற்றது உரைத்தல் [ரு

மலைமுழு தும்கொற்றம் வைக்கின்ற வாணன்தென் மாறைநண்பா!
சிலைமுழு தும்சுற்றும் முற்றும்எய் யாநிற்பச் செங்கிறத்தே
கொலைமுழு தும்கற்ற கூரிய வாளி குளிப்பஇன்றென்
கலைமுழு தும்பட்ட தால்ஒரு மான்முடிக் கண்ணியிலே.

கு - ரை: [தலைவன், தனக்கு நேர்ந்த வேறுபாட்டின் காரணத்தைக் கூறுதல்] 'நண்பா! இன்று ஒரு மான் முடிக்கண்ணியில் என் கலை முழுதும் பட்டது,' என இயைக்க. கொற்றம் - வெற்றிக்கு அறிகுறியான கொடி (கருவி ஆகுபெயர்), சிலை - வில் போன்ற புருவம் (உவமையாகு பெயர்), சுற்றுமுற்றும் முழுதும் - சுற்றாகிய திசைகள் முழுதும், எய்யா நிற்ப - செலுத்த, கற்ற - பழகிய, வாளி - அம்பு போன்ற கண்கள் (உவமையாகுபெயர்), செங்கிறத்தே - செவ்விய மார்பிலே, குளிப்ப - மூழ்க, இன்று - இப்போது, கலை - கலை அறிவு, (கருவியாகுபெயர்), பட்டது - அழிந்தது, முடிக்கண்ணி - தலைமாலை (முடியையுடைய வலை), ஆல் - அசை. 'ஒரு மான் வைத்த முடியையுடைய கண்ணியிலே கலையெல்லாம் பட்டது,' என ஒரு நயம் தோன்றுதல் காண்க. (கலை - ஆண் மான்.)

42] கற்றறி பாங்கன் கழறல் [சு

தருகற் பகம்அன்ன சந்திர வாணன் தடஞ்சிலம்பில்
முருகக் கடவுள் அனையவெற் பா!முகி லும்பிறையும்
செருகக் கிளர்வரை வந்தஓர் பேதைக்குன் சிந்தைஎல்லாம்
உருகக் கலங்கினை நீ;தகு மோமற் றுனக்கிதுவே?

கு - ரை. [யாவும் கற்றறிந்த பார்ப்பனப் பாங்கன் தலைவனைக் கண்டித்துக் கூறல்] 'வெற்பா! ஓர் பேதைக்கு நீ உன் சிந்தை எல்லாம் உருகக் கலங்கினை; உனக்கு இது தகுமோ?' என இயைக்க. தரு - (யார் எதைக் கேட்பினும்) தருகின்ற, கற்பகம் - கற்பகவிருட்சம், சந்திரவாணன் - சந்திரன் என்பவனுக்கு மகனாகிய வாணன், தடஞ்சிலம்பு - பெரிய மலை, வெற்பா - மலை நாட்டுத் தலைவனே, முகில் - மேகம், பிறை - இளஞ்சந்திரன், செருக - ஒன்றையொன்று தழுவ, கிளர் வரை - விளங்குகின்ற மலையில், பேதைக்கு - பெண்ணின்பொருட்டு, சிந்தை - மனம், கலங்கினை - மயங்கினாய், மற்று - அசை.

43] கிழவோன் கழற்றெதிர் மறுத்தல் [ரு

மாலாய் மதம்பொழி வாரண வாணன்தென் மாறைஅன்னார்
சேலார் கருங்கண் ணும் செங்கனி வாயும் சிறியநுண்வர்

நூலார் மருங்கும் பெருந்தன பாரமும் நும்மைஅன்றி
மேலா னவரும்கண் டால்உரை யார்இன்ன வீரங்களே.

து - ரை : [தலைவன், பாங்கன் கண்டித்துக் கூறியதை மறுத்துக் கூறல்] '(பாங்கரே!) மாறை அன்னார் கண்ணும், வாயும், மருங்கும், தன பாரமும் நும்மையன்றி மேலானவரும் கண்டால் இன்ன வீரங்கள் உரையார்,' என இயைக்க. மால் ஆய் - மயக்கமாய், வாரணம் - யானை, மாறை அன்னார் - மாறை நாட்டைப் போன்ற தலைவியார், சேல் ஆர் - கெண்டைமீன் போன்ற, கருங்கண் - பெரிய கண், செங்கனி - கொவ்வைப்பழம், நுண் வர் - நுட்பமும் அழகும் வாய்ந்த, நூல் ஆர் - நூலைப்போன்ற, மருங்கு - இடை, தன பாரம் - பருத்த முலை, இன்ன - இப்படிப்பட்ட, வீரங்கள் - வீர மொழிகள். 'நீர் காணாமையால் இவ்வாறு கூறினீர்,' என்பது கருத்து. மேலானவரும் - உம், சிறப்பு. மற்ற உம்மைகள் எண்ணுப் பொருளன. ஆர் - உவம உருபு. பாங்கர் - முன்னிலை எச்சம்.

44] கிழவோற்பழித்தல் [௬

சூரார் சிலம்பில் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்ற,வெற்றிப்
போரார் களிறு புலம்பிநைந் தாங்கொரு பூவைகொங்கை
வாரால் அணைப்ப வருந்தினை நீதஞ்சை வாணன்வெற்பா!
ஓராழி சூழ்உல கத்தெவ ரேநின்னை ஒப்பவரே?

து - ரை : [இங்ஙனம் கூறிய தலைவனைப் பாங்கன் பழித்துக் கூறல்] 'வெற்பா! பூவை கொங்கை வாரால் அணைப்ப நீ வருந்தினை; ஆழி சூழ் உலகத்து நின்னை ஒப்பவர் எவர்?' என இயைக்க. சூர் ஆர் - தெய்வப் பெண் தங்கியுள்ள, சிலம்பில் - மலையில், சிலம்பி - சிலந்திப் பூச்சி, மென் னூல் - மெல்லிய நூல், வெற்றி - ஜயத்தையுடைய, போர் ஆர் - போர் செய்கின்ற, நைந்தாங்கு - வருந்தினாற்போல, பூவை - நாகணவாய்ப்பறவை போன்ற பெண் (உவமையாகு பெயர்), கொங்கை வாரால் - வாரை அணிந்த கொங்கையால், வார் - கச்சு, ஓர் ஆழி - ஒப்பற்ற கடல். 'நின்னை ஒப்பவர் யார்?' எனும் குறிப்பால் பழிப்புத் தோன்றியது காண்க.

45] கிழவோன், வேட்கை தாங்கற்கு அருமை சாற்றல் [எ

பொறைகொண்ட தாமரைப் போதன்ன கொங்கையும் பொங்கரிசேர்
கறைகொண்ட வாள்அன்ன கண்களும் கொண்டொரு கன்னிதெவ்வைத்
திறைகொண்ட வாணன் செழுந்தஞ்சை சூழும் சிலம்பில்இன்றென்
நிறைகொண்ட வாறறி யாதிக ழாநிற்றி நீயும் நின்றே.

து - ரை : [தலைவன், 'உன் பழிப்பால் அவள்மீது உண்டான விருப்பத்தைத் தாங்கல் என்னால் முடியாது,' என்று பாங்கனுக்குக் கூறல்]

'(பாங்கனே!) ஒரு கன்னி இன்று என் நிறை கொண்டவாறு அறியாது, நீயும் நின்று இகழாநிற்றி,' என இயைக்க. பொறை - சுமை, போது - பெரிய அரும்பு, பொங்கு அரி - மிகுந்த செவ்வரி, கறை - இரத்தக் கறை, கன்னி - இளம்பெண், தெவ்வை - பகைவரை, திறை - வெற்றி, சிலம்பில் - மலையில், நிறை - ஆண்மைக்குணம், கொண்டவாறு - கவர்ந்த விதம், அறியாது - அறியாமல், நீயும் - (எல்லாமறிந்த) நீயும், நின்று - (என் நிலை கண்டு இரங்காமல்) நின்று, இகழாநிற்றி - இகழ்கின்றாய். நீயும் - உம், சிறப்பு. பாங்கன் - முன்னிலை எச்சம்.

46] பாங்கன், தன் மனத்து அழுங்கல் [அ

'சீதள ஆரம் கமழ்தஞ்சை வாணன்தென் மாறைஅன்னாள்
காதள வா,வெங் கடுஅள வா,ஒளிர் காவிஅந் தண்
போதள வாவிழி,' என்னும்;'என் ஆசைப் புறத்தளவா
சூதள வாமுலை,' என்னும்;என் நாம்இனிச் சொல்லுவதே?

து - றை: [இங்ஙனம் கூறக்கேட்ட பாங்கன், 'இதற்கு யான் என் சொல்லுவேன்!' எனத் தன்னுள்ளே இரங்குதல்] '(நெஞ்சமே! எம்பெருமான்), 'மாறை அன்னாள் விழி காது அளவா, கடு அளவா, காவிப்போது அளவா,' என்னும்; 'என் ஆசைப்புறத்து அளவு ஆம் முலை சூது அளவா,' என்னும்; நாம் இனிச் சொல்லுவது என்?' என இயைக்க. சீதளம் - குளிர்ச்சி, ஆரம் - சந்தனம், கமழ் - மணம் வீசும், கண் - கண்களை, காது - காதுகள், அளவா - அளவிட்டு அறியா, வெங்கடு - கொடிய நஞ்சுகள், ஒளிர் - விளங்கும், காவி - நீலோற்பலம், அம் தண் போது - அழகிய குளிர்ச்சியான மலர், என்னும் - என்று கூறுவான் (எம்பெருமான்), ஆசைப்புறத்து அளவு ஆம் முலை - என் விருப்பத்திற்கு அப்பாற்பட்ட அளவினையுடையனவாகிய முலைகளை, சூது - சொக்கட்டான் காய்கள், இனி - இன்று. கண்கள் காதுகளைக் கடந்து செல்லுதலின் 'காது அளவா' என்றும், உண்டாரைக் கொல்லுங் கடுப்போலன்றிக் கண்டாரைக் கொல்லுதலால் 'கடு அளவா' என்றும், காவி பார்த்தறியாதனவாதலின் 'காவி அம் தண் போது அளவா' என்றும் கூறினன் என்க. முலைகள் ஆசையின் எல்லைக்கு அப்பாற்பட்டன ஆதலின், 'ஆசைப்புறத்து அளவாம் முலை' எனப்பட்டன. எம்பெருமான் - அவாய் நிலை. நெஞ்சம் - முன்னிலை எச்சம். என்னும் - செய்யுமென் வாய்பாட்டு வினை முற்று இங்கு ஆண்பாலை உணர்த்திற்று.

47] பாங்கன் தலைவனோடு அழுங்கல் [கூ

என்மேல் அறைவ தியானிங்கு? நின்செவிக் கென்சொல்எல்லாம்
வன்மேல் அடர்கொங்கை காரண மாந்தஞ்சை வாணன்வெற்பா!

கன்மேல் அறைகின்ற மென்முளை போலும்; கடல்வெதும்பின்
தன்மேல் அளாவஉண் டோதரை மேல்ஒரு தண்புனலே ?

து - ரை : [அழுங்கல் - வருந்தல்] 'வெற்பா! நின் செவிக்கு இங்கு என்சொல் எல்லாம் வல் மேல் அடர்கின்ற கொங்கை காரணமாக் கல்மேல் அறைகின்ற மெல் முளை போலும். யான் மேல் அறைவது என்? கடல் வெதும்பின், மேல் அளாவத் தரைமேல் ஒரு தண்புனல் உண்டோ?' என இயைக்க. வல் மேல் அடர் கொங்கை - சொக்கட்டான் காய்மேல் பகை கொள்ளும் முலையையுடையாள், காரணமா - காரணமாக, கல்மேல் அறைகின்ற - கல்லின்மேல் அடிக்கின்ற, மெல் முளை - மெல்லிய மூங்கில் முளை, வெதும்பின்-வெப்பமுற்றால், மேல் அளாவ - அக்கடல் நீரில் கலக்க, தரை - பூமி, தண்புனல் - குளிர்ச்சியான நீர், தன் மேல் - தன் அடிச்சந்தம் நோக்கி வந்தது.

48] 'எவ்விடத்து? எவ்வியற்று?' என்றல் [ம

முகத்தில் பகழி இரண்டுடை யார்க்கிடம் மூரிமுந்நீர்
அகத்தில் பிறந்த அரவிந்த மோ?அடை யார்தமக்கு
மகத்தில் சனிஅன்ன சந்திர வாணன்தென் மாறைவெற்போ?
நுகத்தில் பகல்அனை யாய்!தன்மை ஏது? நுவல்எனக்கே.

து - ரை : ['நின்னால் காணப்பட்ட உரு எவ்விடத்திலுள்ளது? எவ்வியலை உடையது?' எனப் பாங்கன் தலைவனை வினுதல்] 'நுகத்தில் பகல் அனையாய்! முகத்தில் பகழி இரண்டு உடையார்க்கு இடம் அரவிந்தமோ? மாறை வெற்போ? தன்மை ஏது? எனக்கு நுவல்,' என இயைக்க. நுகம் - நுகத்தடி, பகல் - நடு, பகழி - அம்பு போன்ற கண் (உவமையாகுபெயர்), உடையார்க்கு - உடையவராகிய தலைவியர்க்கு, மூரி - பெருமை, முந்நீர் - கடல், அரவிந்தம் - தாமரை, அடையார் - பகைவர், அடையார்தமக்கு - தம் சாரியை, மகத்தில் சனி - மக நட்சத்திரத்திற் பொருந்திய சனி (இஃது உலகிற்குத் தீமை பயப்பது ஆதலின், பகைவர்க்குத் தீமை பயப்பதில் சந்திர வாணனுக்கு உவமையாயிற்று), வெற்போ - மலையோ, நுவல் - சொல்லு. நுகம் நடு அன்றி ஒரு பக்கம் சாயின், அப்பக்கம் எருதிற்குப் பாரம் அதிகரிக்கும்; நடுவாயின், பாரம் சமப்படும். ஆதலின், நுகத்தின் நடு, நடுவு நிலைமையுடைய தலைவனுக்கு உவமையாயிற்று.

49] அவன், 'அஃது இவ்விடத்து; இவ்வியற்று,' என்றல் [மக

கனமே குழல்;செங் கயலே விழி;மொழி கார்க்குயிலே;
தனமே முகை;என் தனிநெஞ்ச மேஇடை; தன்பகைக்கு
வனமே அருளிய வாணன்தென் மாறை மணிவரைசூழ்
புனமே இடம்இங்ங னேஎன்னை வாட்டிய பூங்கொடிக்கே.

து - ரை. [தலைவன், 'அவ்வுரு, இவ்விடத்தில் உள்ளது; இவ்வியலை உடையது,' எனல்] 'என்னை வாட்டிய பூங்கொடிக்கு இடம், புனமே; குழல் கனமே; விழி, செங்கயலே; மொழி, கார்க்குயிலே; தனம், முகையே; இடை, என் தனி நெஞ்சமே,' என இயைக்க. கனம் முதலாயின் இயல் என்க. வாட்டிய - வருத்திய, பூங்கொடிக்கு - பூங்கொடி போன்றவளுக்கு (உவமையாகு பெயர்), வனம் - காடு, மணி வரை - முத்தீனும் மூங்கில், கனம் - மேகம், கார்க்குயில் - கார் காலத்தில் தோன்றும் குயில் ஓசை, தனம் - முலை, முகை - தாமரை அரும்பு, இடை - இடுப்பு, (வேட்கையைச் சுமந்து வருந்தும் தலைவன் மனம், முலையைச் சுமந்து வருந்தும் தலைவியின் இடைக்கு உவமையாயிற்று.) மணி - முத்து, வரை - மூங்கில் (சினை ஆகு பெயர்), அடுத்த செய்யுளில் பாங்கன் தலைவியைக் கழை வளர் சாரலிற் கண்டு வருவதாகக் கூறுதலின், இச்செய்யுளில் அதற்கியைய 'மணி வரை' என்பதற்கு 'முத்தீனும் மூங்கில்' எனப் பொருள் கூறப்பட்டது. இங்ஙனே, பூங்கொடிக்கே - ஏகாரம் ஈற்றசை; ஏனைய ஏகாரம் தேற்றம்.

50] பாங்கன் இறைவனைத் தேற்றல் [மிஉ

மழைவளர் மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பின்
இழைவளர் வார்முலை ஏர்இளந் தோகையை இக்கணம்போய்க்
கழைவளர் சாரலில் கண்டுனை யான்வந்து காண்பளவும்
தழைவளர் தார்அண்ண லே! தணி வாய்நின் தகவின்மையே.

து - ரை: [இறைவன் - தலைவன்] 'அண்ணலே! யான் தோகையைக் கண்டு வந்து உனைக் காண்பளவும் நின் தகவு இன்மை தணி,' என இயைக்க. தழை வளர் தார் - (இடையிடையே) தழையுடன் கலந்த மலர்மாலை, அண்ணல் - பெரியோன். (பண்பாகு பெயர்), மழை வளர் - மேகம் தவழும், இழை வளர் - ஆபரணங்கள் பொருந்திய, வார் - கச்சு, ஏர் - அழகு, தோகை - மயில்போன்றவள் (இருமடியாகு பெயர்), கணம் - விநாடி, கழை - மூங்கில், சாரல் - மலைப் பக்கத்திலுள்ள புனம் (இடவாகு பெயர்), காண்பளவும் - காணும் வரையிலும், தகவு இன்மை - வருத்தம், தணிவாய் - ஒழிவாயாக.

51] குறிவயின் சேறல் [மிக

பாரித்த திண்மைஎம் அண்ணல்உள் நீரைப் பருகிநின்று
பூரித்த செவ்விள நீர்களும் தாங்கிஅப் பூங்கொடிதான்
வாரித் தலம்புகழ் வாணன்தென் மாறை வரைப்புனம்சூழ்
வேரித் தடம்பொழில் வாய்விளை யாடுங்கொல் மேவிநின்றே!

து - ரை: [பாங்கன், தலைவன் கூறிய குறியிடத்தில் தலைவியைக் காணச் செல்லுதல்] '(நெஞ்சமே!) அப்பூங்கொடி, அண்ணல் உள் நீரை

பருகி நின்று, செவ்விளநீர்களும் தாங்கி, தடம் பொழில்வாய் மேவி நின்று விளையாடுங்கொல்!' என இயைக்க. அப்பூங்கொடி - (தலைவன் கூறிய) அந்தப் பூங்கொடிபோன்றவள், திண்மை பாரித்த - (வீரமில்லாதார்க்கும்) வீரத்தைப் பிறப்பித்த, உள் - மனத்திலுள்ள, நீரை - (கலையறிவாகிய) நீரை, நின்று - நிலைகொண்டு, பூரித்த - விம்மிய, செவ்விளநீர்கள் - (முலைகளாகிய) செவ்விள நீர்க்காய்கள், வாரி - கடலால் சூழப்பட்ட, தலம் - நில உலகத்தார் (இடவாகுபெயர்), வரைப்புனம் - மூங்கில் வேலியை உடைய தினைக்கொல்லை, வேரி - மணம், தடம் பொழில்வாய் - பெரிய சோலையில், மேவி நின்று - பொருந்தி நின்று, விளையாடுங்கொல் - விளையாடுவாளோ! கொல் - ஐயம், நெஞ்சம் - முன்னிலை எச்சம். (பாங்கன் இங்ஙனம் எண்ணிக் கொண்டு சென்றான் என்க.)

52] இறைவியைக் காண்டல் [௫௪

காரேனய் அளகம் கரும்புய லே;இயல் கார்மயிலே ;
மானே விழி;முகம் மாமதி யே;தஞ்சை வாணன்வெற்பில்
தேனேய் தொடையல்அச் சேய்அனை யான்சொன்ன சேயிழையாள்
தானே இவள்;இது வேஇட மாகிய தண்புனமே.

து - ரை : [தலைவியைப் பாங்கன் காணுதல்] '(நெஞ்சமே!) சேய் அனையான் சொன்ன இடமாகிய தண்புனம் இதுவே; சேயிழையாள் இவளே,' என இயைக்க. தேன் ஏய் - வண்டுகள் பொருந்திய, தொடையல் - மலர்மாலையையுடைய, சேய் - முருகக்கடவுள், தண்புனம் - குளிர்ச்சியான தினைக்கொல்லை, கான் ஏய் அளகம் - (இவளுடைய) வாசனை பொருந்திய கூந்தல், கரும்புயலே - கரிய மேகமே, இயல் - சாயல், கார் மயிலே - கார் காலத்து மயிலே, விழி - கண், மானே - மான் விழியே, மாமதியே - பூரணச் சந்திரனே, சேயிழையாள் - செம்மையான ஆபரணங்களையுடைய தலைவி. தண்புனமே - ஏ, ஈற்றசை. ஏனைய ஏகாரங்கள் தேற்றம். நெஞ்சம் - முன்னிலை எச்சம். 'சொன்ன' என்பதைச் 'சேயிழையாள்', 'தண்புனம்' இரண்டொடும் கூட்டுக.

53] இகழ்ந்ததற்கு இரங்கல் [௫௫

கொலைகால் அயில்படை நேரியர் கோன்அகம் கோடஅங்கைச்
சிலைகால் வளைத்துத் திருத்திய வாணன்தென் மாறைவெற்பில்
முலைகால் கொளக்கண் டிளைத்தநுண் ணூல்இடை முற்றிழைகண்
வலைகால் பிணிப்பவந் தார்வருந் தார்அல்லர் மால்உழக்கே.

து - ரை: [தலைவியின் பேரழகைக் கண்ட பாங்கன், தலைவனை அறிவின்றி இகழ்ந்ததற்கு வருந்துதல்] '(நெஞ்சமே!) மாறை வெற்பில்

முற்றிழை கண் வலை கால் பிணிப்ப வந்தார், மால் உழந்து வருந்தார் அல்லர்,' என இயைக்க. கொலை கால் - கொலைத் தொழிலை வெளி விடுகின்ற, அயில் - வேல், நேரியர் கோன் - சோழர்களுக்கு அரசன், அகம் கோட - மனம் மாறுபட, அம் கைச்சிலை - அழகிய கை வில்லை, கால் வளைத்து - காலால் வளைத்து, திருத்திய - (அந்த மாறுபாட்டைத்) திருந்தச் செய்த, வெற்பில் - மலையில், கால் கொள - இடம் கொள்ள (பரவிப்பருக்க என்றபடி), நுண் நூல் இடை - நுட்பமான நூல்போன்ற இடுப்பையும், முற்றிழை - (அழகில்) முதிர்ந்த ஆபரணங்களையும் உடையவளது (வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), கண் வலை - கண்ணாகிய வலை (உருவகம்), கால் பிணிப்ப - காலில் கட்ட, மால் உழந்து - ஆசை நோயை அனுபவித்து, வருந்தார் அல்லர் - வருந்துவர் என்றபடி. நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

54] தலைவனை வியத்தல் [டுசு

தலங்கா வலன்தஞ்சை வாணன்முந் நீர்பொரும் தண்பொருந்தத்
திலங்கார வல்வடக் கொங்கைவெற் பால்இணை நீலஉண்கண்
பொலங்காம வல்லி கடைந்தஅப் போது புடைபெயர்ந்து
கலங்கா திருந்ததெவ் வாறெம்பி ரான்தன் கலைக்கடலே?

கு - ரை: [பாங்கன், தலைவனை வியந்து கூறல்] 'காம வல்லி வல் வடக்கொங்கை வெற்பால் கடைந்த அப்போது எம்பிரான்தன் கலைக் கடல் கலங்கா திருந்தது எவ்வாறு?' என இயைக்க. பிரான் - தலைவனது, இணை நீலம் - இரண்டு கருங்குவளை மலர் போன்ற, உண் கண் - மையுண்ட கண்களையுடைய, பொலம் - பொன் மயமான, காம வல்லி - (கற்பகத்தில் படரும்) காம வல்லிக்கொடி போன்ற தலைவி (உவமையாகு பெயர்), தலம் - உலகம், முந்நீர் பொரும் - கடலை எதிரும், தண் பொருந்தத்து - குளிர்ச்சியான தாமிரபர்ணி நதியில், இலங்கு - விளங்குகின்ற, ஆரம் - முத்துகளால் ஆகிய, வல் வடம் - வலிய வடத்தைப் பூண்ட, கொங்கை வெற்பு - முலையாகிய மலை, கலைக்கடல் - கல்வியறிவாகிய கடல், புடை பெயர்ந்து - அசைந்து.

55] தலைவியை வியத்தல் [டுஎ

வெங்கோல் மழைபொழி வானவர் போர்வென்ற மீனவர்தம்
செங்கோல் முறைமை செலுத்திய வாணன்தென் மாறைவெற்பில்
நங்கோன் மெலிய நலிகின்ற காமவெங் நஞ்சினைஇப்
பைங்கோல் மணிவளை யார்தணி யார்அல்லர் பார்வைகொண்டே.

கு - ரை: [பாங்கன், தலைவியை வியந்து கூறல்] '(நெஞ்சமே!) நம்கோன் மெலிய நலிகின்ற காம வெந்நஞ்சினை இப்பைங்கோல் மணிவளை

யார் பார்வைகொண்டு தணியார் அல்லர்,' என இயைக்க. வெங்கோல் மழை - கொடிய அம்பு மாரியை, வானவர் - சேராது, மீனவர்தம் - பாண்டியருடைய, செங்கோல் முறைமை - நீதி முறை, கோன் - தலைவன், நலிகின்ற - வருத்துகின்ற, காம வெந்நஞ்சு - காமமாகிய கொடிய விஷத்தை, பைங்கோல் வளையார் - பசுமையான திரட்சியையுடைய வளைகளை அணிந்தவர், கோல் - திரட்சி (கோல் நிற வளையினுர், சிந். செய்.209), பார்வை - கருணை நோக்கம், தணியார் அல்லர் - தணிப்பர், நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

56] தலைவன்றனக்குத் தலைவி நிலை கூறல் [மஅ

வளங்கனி மாறை வரோதயன் வாணன் மலயவெற்பா!
உளங்கனி காத லுடன்நின்ற தால்நின் உடலம்எல்லாம்
களங்கனி போலக் கருகிவெண் கோட்டுக் களிறுண்டதோர்
விளங்கனி போல்வறி தாநிறை வாங்கிய மென்கொடியே.

து - ரை: [பாங்கன், தலைவி குறியிடத்தில் தனித்து நிற்கும் நிலையைத் தலைவனுக்குக் கூறுதல்] ‘மலய வெற்பா! நின் உடலமெல்லாம் கருகிக் களிறு உண்டதோர் விளங்கனிபோல் வறிதா நிறை வாங்கிய மென்கொடி உளம் கனி காதலுடன் நின்றது,'என இயைக்க. வளம் கனி - வளப்பம் முதிர்ந்த, மலய வெற்பா - பொதிய மலைத் தலைவனே, களங்கனி - களம்பழம், (களிறு - விளங்கனிக்கு ஏற்படும் வேழம் என்னும் ஒரு வகை நோய். இந்நோயால் கனியிலுள்ள உள்ளீடு கெட, ஓடு மட்டும் நிற்கும். வேழம் என்பதற்குப் புனை பெயரான களிறு என்பதற்கு ‘வெண்கோடு' அடையாயிற்று.) கருகி - கருக (எச்சத்திரிபு), வறிதா - வெறுவிதாக, நிறை - மறை பிறர் அறியாது காக்கும் குணம், வாங்கிய - கவர்ந்து கொண்ட, ‘மென்கொடி' என்றது தலைவியை.

57] தலைவன் சேறல் [மக

புறங்கூர் இருள்கங்குல் போன்றகம் நண்பகல் போன்றபொங்கர்
நிறங்கூர் படைக்கண்ணி நின்றன ளே;நிழ லைச்சுளித்து
மறங்கூர் களிற்றண்ணல் வாணன்தென் மாறையில் வாள்நுதலாள்
அறங்கூர் மனத்தரு ளால்நின்ற தாம்என தாருயிரே.

து - ரை: [தலைவன், குறியிடம் செல்லுதல்] ‘(நெஞ்சமே!) கண்ணி, பொங்கர் நின்றனள்; எனது ஆருயிர், வாள் நுதலாள் அறம் கூர் மனத்து அருளால் நின்றதாம்,'என இயைக்க. நிழலைச் சுளித்து - (தனது) நிழலை (வேறொரு யானை எனக் கருதிக்) கோபித்து, மறம் கூர் - வீரம் மிகுதின்ற, களிற்று அண்ணல் - யானையையுடைய பெரியோனாகிய, புறம் - வெளியில், கூர் இருள் கங்குல் - மிகுந்த இருளையுடைய இரவு, அகம் - உள்

ளிடத்தில், நன்பகல் - நல்ல பகற்காலம், பொங்கர் - சோலையில், நிறம் கூர் - ஒளி மிகுந்த, படைக்கண்ணி - வேல் போன்ற கண்களையுடையவள், வாள் நுதலாள் - ஒளி பொருந்திய நெற்றியை உடையவளது, அறம் கூர் - தருமகுணம் மிகுந்த, நின்றதாம் - (உடலில்) நிலை பெற்றது ஆகும். சோலை தழைகளின் அடர்த்தியால் வெளியில் இரவையும், மாணிக்கங்களின் ஒளியால் உள்ளிடத்தில் நன்பகலையும் போன்றது என்க. நெஞ்சம் - முன்னிலை எச்சம். நின்றனளோ - ஏ, அசை.

58] தலைவியைக் காண்டல் [உஅ

**பாகையும் தேனையும் போல்மொழி யார்தமிழ்ப் பைந்தொடையும்**
**வாகையும் சூடிய வாணன்தென் மாறை வளமும்அவன்**
**ஈகையும் போலும் எழிலியை நோக்கி இரங்குபுள்ளும்**
**தோகையும் போல்நின்ற வாதனி யேஇந்தச் சோலையிலே.**

கு - ரை: [தலைவன், தலைவியைக் காணுதல்] '(நெஞ்சமே!) இந்தச் சோலையிலே மொழியார் தனியே நின்ற ஆ(று), எழிலியை நோக்கி இரங்கு புள்ளும் தோகையும் போல்,' என இயைக்க. பாகு - சர்க்கரைப்பாகு, நின்ற ஆறு - நின்ற விதம், தமிழ்ப் பைந்தொடை - தமிழ்ப்பாமாலை, வாகை - வெற்றி மாலை, வளம் - செழுமை, ஈகை - கொடை, போலும் - ஒத்திருக்கும், எழிலி - மேகம், நோக்கி - எதிர்பார்த்து, இரங்கு - ஒலிக்கின்ற, புள் - (சாதகப்) பறவை, தோகை - மயில் (சினையாகு பெயர்), போல் - போலும் என்னும் வினைமுற்று விகுதி கெட்டு நின்றது, நின்றஆ - நின்ற ஆறு என்பதன் கடைக்குறை விகாரம், நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

59] கலவியில் மகிழ்தல் [உக

**யாரும்பர் தம்பதம் என்போல எய்தினர் இம்பர்? அம்பொன்**
**வாரும் துறைவைபை சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பில்**
**தேருந் தொறும்இனி தாம்தமிழ் போன்றிவள் செங்கனிவாய்**
**ஆருந் தொறும்இனி தாய்அமிழ் தாம்என தாருயிர்க்கே.**

கு - ரை: [புணர்ச்சியில் மகிழ்தல்] '(நெஞ்சமே!) இவள் செங்கனி வாய், தேருந்தொறும் இனிதாம் தமிழ் போன்று ஆருந்தொறும் இனிதாய், என்து ஆருயிர்க்கு அமிழ்தாம். இம்பர் உம்பர்தம் பதம் என்போல எய்தினர் யார்?' என இயைக்க. அம் - அழகிய, வாரும் துறை - ஒழுக்கும் துறைகளை உடைய, செங்கனி - கொவ்வைக் கனி போன்ற, வாய் - வாயில் ஊறிய நீர் (இடவாகு பெயர்), தேருந்தொறும் - ஆராயும்போதெல்லாம், இனிதாம் - இன்பமாகும், ஆருந்தொறும் - அனுபவிக்கும் போதெல்லாம், அமிழ்து - தேவாமிருதம், ஆருயிர் - அருமையான உயிர், இம்பர் - இவ்வுல

கில், உம்பர்தம் பதம் - தேவர்களின் பதவியை, எய்தினர் - அடைந்தவர், நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

60] புகழ்தல் [௨௨

தழல்கண்ட தன்ன கலிவெம்மை ஆறத்தன் தண்ணளியாம்
நிழல்கண்ட சந்திர வாணன்தென் மாறை நிழல்பொலியும்
கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாலிகைக் காரிகை!நின்
குழல்கண்ட பின்அல்ல வோஅறல் நீருள் குளித்ததுவே?

து - ரை: [தலைவன், தலைவியைப் புகழ்ந்து கூறுதல்] தழல் - நெருப்பு, கலி வெம்மை - கலியுகத்தின் கொடுமை, ஆற - தணிய, தண்ணளி ஆம் நிழல் - குளிர்ந்த கிருபையாகிய நிழலை, கண்ட - செய்த, நிழல் பொலியும் - ஒளி விளங்கும், கழல் - கழற்காய் (பொருளாகு பெயர்), கதிர் - ஒளி, முத்த மாலிகை - முத்து மாலை, காரிகை - அழகியே (பண்பாகு பெயர்; (அண்மை விளி), குழல் - கூந்தல், அறல் - கருமணல், குளித்தது - மூழ்கியது, அல்லவோ - ஓ, எதிர்மறை.

61] 'பாங்கியோடு வருக,' எனப் பகர்தல் [௨௩

என்கா தலின்ஒன் றியம்புகின் றேன்:இங் கினிவருங்கால்
நின்கா தலியொடு நீவரல் வேண்டும்; நிலமடந்தை
தன்கா தலன்தஞ்சை வாணன்தென் மாறைத்தண் தாமரைவாழ்
பொன்காதல் கொண்டு தொழும்சிலம் பார்அடிப் பூங்கொடியே!

[தலைவன், 'இனி நீ வருங்கால் நின் உயிர்ப்பாங்கியோடு வருக,' எனத் தலைவிக்குக் கூறல்] 'பூங்கொடியே! என் காதலின் ஒன்று இயம்புகின்றேன்: இனி நீ வருங்கால் நின் காதலியொடு வரல் வேண்டும்,' என இயைக்க. பூங்கொடியே - பூங்கொடி போன்றவளே, நில மடந்தை - பூமி தேவி, காதலன் - கணவன், பொன் - இலக்குமி, காதல் - ஆசை, சிலம்பு ஆர் - சிலம்பணி பொருந்திய, காதலின் - காதலினால், ஒன்று - ஒரு செய்தி, இயம்புகின்றேன் - சொல்கின்றேன், காதலியொடு - உயிர்ப்பாங்கியுடன்.

62] பாங்கில் கூட்டல் [௨௪

என்னொடு நின்ற இளங்கொடி யே!சங்கம் எய்ந்துகுழாம்
தன்னொடு செல்லும் சலஞ்சலம் போல்தஞ்சை வாணன்வெற்பில்
பொன்னொடு செல்லும் புகழ்மணி போல்நின் புடைஅகலா
மின்னொடு நுண்ணிடை யாருடன் நீசென்று மேவுகவே.

து - ரை: [தலைவன், தலைவியைத் தோழியர் கூட்டத்தில் செலுத்தல்] 'இளங்கொடியே! நீ சென்று நின் புடை அகலா நுண்ணிடையாருடன்

மேவுக,'என இயைக்க. என்னூடு - என்னுள்ளே, இளங்கொடியே - இளங்கொடி போன்றவளே, சங்கக் குழாம் தன்னூடு எய்ந்து - சங்கக் கூட்டத்தினுள் அமைந்து, சலஞ்சலம் - சலஞ்சலம் என்னும் சிறந்த சங்கு (இஃது ஆயிரம் வலம்புரி சங்குகள் தன்னைச் சூழச் சஞ்சரிப்பது), பொன்னூடு செல்லும் - பொன்னில் அமையும், புகழ் மணி - (யாவரும்) புகழும் மாணிக்கம், புடை - பக்கம், அகலா - நீங்காத, மின் ஊடு - மின்னல் பிணங்குதற்குக் காரணமான, நுண்ணிடையாருடன் - நுட்பமான இடையை உடைய தோழியருடன், மேவுக - பொருந்துக.

# 8. பாங்கி மதி உடன்பாடு

## [முன்னுற உணர்தல்]

63] தோற்றத்தால் ஆராய்தல் [க

வண்டலை ஆயத் துடன்அயர்ந் தோ,அன்றி வண்டிமிர்பூந்
தண்டலை ஆரத் தழைகள்கொய் தோ,தஞ்சை வாணன்வெற்பில்
புண்டலை வேலினும் கண்சிவப் பாரப் பொலம்சுனைத்தேன்
கொண்டலை நீர்குடைந் தோஇவள் மேனி குழைந்ததுவே!

து - ரை: [பாங்கி, தலைவிக்குப் புணர்ச்சியால் ஏற்பட்ட அழகினால் சந்தேகப்பட்டுத் தலைவியை ஆராய்தல்] '(நெஞ்சமே!) இவள் மேனி குழைந்தது, அயர்ந்தோ, கொய்தோ, குடைந்தோ!' என இயைக்க. மேனி - உடல், குழைந்தது - இளகியது, ஆயத்துடன் - தோழியர் கூட்டத்துடன், வண்டலை அயர்ந்தோ - வண்டலம்பாவை என்னும் விளையாட்டுப் பொம்மையை வருந்திச் செய்தோ, அன்றி - அதுவல்லாமல், வண்டு இமிர் - வண்டுகள் ஆரவாரிக்கும், பூந்தண்டலை - பூஞ்சோலை, ஆரத்தழை - சந்தனத் தழை, புண்தலை - (பகைவருடலைப்) புண் செய்யும் தலையை உடைய, வேலினும் - வேலாயுதத்தைக்காட்டிலும், சிவப்பு ஆர - சிவப்புப் பொருந்த, பொலம் - அழகு, தேன் கொண்டு அலை - தேனைக்கொண்டு அலை வீசுகின்ற, நீர் குடைந்தோ - நீரில் குளித்தோ, ஓகாரங்கள் ஐயப்பொருளன. நெஞ்சம் - முன்னிலை எச்சம்.

64] ஒழுக்கத்தால் ஐயம் தீர்தல் [உ

திளைக்கும் திரைமேல் உனக்குமுன் தோன்றலின்,செம்பொன் வெற்பை
வளைக்கும் பிரான்முடி வைகுத லான்,தஞ்சை வாணன்மண்மேல்
விளைக்கும் புகழ்போல் விளங்குத லான்,செக்கர் விண்பிறைகார்
தளைக்கும் குழல்திரு வே!தொழ வேதரும் தன்மையதே.

து - ரை: [பாங்கி, தலைவியின் ஒழுக்கத்தால் தன் சந்தேகம் நீங்குதல்] 'திருவே! பிறை தொழவே தரும் தன்மையதே,' என இயைக்க. கார் - மேகத்தை, தளைக்கும் - (தன்னை நீங்காதபடி) தடுக்கும், குழல் - கூந்தலையுடைய, திருவே - இலக்குமியே, செக்கர் விண் பிறை - செவ்வானத்தில் தோன்றிய பிறைச் சந்திரன், திளைக்கும் திரைமேல் - நெருங்கிய அலைகளை உடைய கடலில், தோன்றலின் - பிறத்தலாலும், செம்பொன் வெற்பு - மேருமலை, வளைக்கும் - (வில்லாக) வளைக்கும், பிரான் - சிவபிரான், வைகுதலான் - பொருந்தியிருத்தலாலும், மண்மேல் - உலகில், விளைக்கும் -

உண்டாக்கும், விளங்குதலான் - (நாளுக்குநாள்) விளக்கம் அடைவதாலும், தொழவே - வணங்கவே, (இங்ஙனங்கூறியும் தலைவி பிறை தொழாமையின், அவள் கணவனையன்றிப் பிற தெய்வந் தொழாத கற்புக்கடன் பூண்டனள் என்பதைத் தோழி அறிந்து ஐயந்தீர்ந்தனள் என்க.)

65] சுனை வியந்து உரைத்தல் [௫

பூட்டிய வார்சிலை வீரரை வென்றெப் பொருப்பினும்சீர்
தீட்டிய வாணன்தென் மாறைஅன் னீர்!இதழ்ச் செம்மையும்,மை
ஊட்டிய வாளின் கருமையும் தான்கொண்டு மக்கிங்ஙனே
சூட்டிய வாறுநன் றுல்முல்லை மாலை சுனைப்புனலே!

கு - ரை: [தோழி, சுனையின் செயலை வியந்து கூறுதல்] 'மாறை அன்னீர்! சுனைப்புனல் உமக்கு இங்ஙனே முல்லை மாலை சூட்டியவாறு நன்று!' என இயைக்க. வார் பூட்டிய - நாண் பொருத்திய, சிலை - வில்லையுடைய, எப்பொருப்பினும் - (மாறை நாட்டைச் சூழ்ந்த) எல்லா மலைகளிலும், சீர் தீட்டிய - (தனது) புகழை எழுதிய (எட்டுத் திக்கிலும் தன் புகழைப் பரப்பிய என்றபடி), சுனைப்புனல் - சுனை நீரானது, இதழ்ச் செம்மையும் - (உமது) உதட்டின் சிவப்பும், மை ஊட்டிய - மை இடப்பெற்ற, வாள் - வாள் போன்ற கண் (உவமை ஆகுபெயர்), தான் கொண்டு - தான் வாங்கிக்கொண்டு, இங்ஙனே - இப்படி, முல்லை - முல்லைப்பூ, சூட்டிய ஆறு - சூட்டிய முறை. நன்றுல் - ஆல், அசை. (தலைவியின் வேறுபாடு கண்ட பாங்கி, 'இவ்வேறுபாடு எதனாலாயிற்று?' என வினவத் தலைவி, 'சுனையாடியதனாலாயிற்று,' எனக் கூற, பாங்கி, தலைவன் தலைவிக்குச் சூட்டிய முல்லை மாலையைக் கண்டு இங்ஙனம் கூறித் தன் ஐயம் நீங்கினள் என்க.) தலைவன் அதர பானம் செய்ததால் தலைவிக்கு இதழ் வெளுத்தும், இறுகத் தழுவியதால் கண் சிவந்தும் காட்டின என அறிக.

66] சுனை நயப்பு உரைத்தல் [௬

மறலாய் எதிர்ந்த மறமன்னர் வேழ மலைஎறிவேல்
திறலார் முருகன் செழுந்தஞ்சை வாணன்தென் மாறைவையை
அறலார் குழலாய்! நுதல்குறு வேர்வும் அழகும்நின்போல்
பெறலாம் எனின்,குடை வேன்அடி யேனும் பெருஞ்சுனையே.

கு - ரை: [பாங்கி, தானும் சுனையாட விரும்புவதைக் கூறுதல்] 'குழலாய்! நின்போல் நுதல் குறுவேர்வும் அழகும் பெறலாம் எனின், அடியேனும் பெருஞ்சுனை குடைவேன்,' என இயைக்க. மறல் ஆய் - மயக்கம் கொண்டு, மற மன்னர் - வீர மன்னரின், வேழ மலை - யானையாகிய மலையை (உருவகம்), எறி - வெட்டி வீழ்த்திய, திறல் ஆர் - வெற்றி பொருந்திய, முரு

கன் - முருகக் கடவுளை ஒத்தவனுகிய, வையை அறல் ஆர் - வையை யாற்றிலுள்ள கருமணல் போன்ற, குழலாய் - கூந்தலையுடையவளே, நின்போல் - உன்னைப்போல, நுதல் - நெற்றியில், குறுவேர்வும் - சிறு வியர்வைத்துளியும், பெறலாம் எனின் - பெறக்கூடுமானுல், அடியேனும் - (உனக்கு) அடியவளாகிய யானும், குடைவேன் - நீராடுவேன்.

67] தகை அணங்குறுத்தல் [ரு

குவளை சிவத்துக் குமுதம் வெளுத்த குறைஅல்லவேல்
அவளை மறைத்துன்னைக் காட்டிட லாம்;அலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்கும் தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
இவளை வரக்கண்டு நீஅணங் கே!பின் எழுந்தருளே.

து - ரை : [தோழி, தலைவியை அழகினுலே தெய்வம் என்று வலியுறுத்திக் கூறுதல்] 'வெற்பில் அணங்கே! குறை அல்லவேல், அவளை மறைத்து உன்னைக் காட்டிடல் ஆம்; இவளை வரக்கண்டு பின் நீ எழுந்தருள்,' என இயைக்க. அலர்த்தேன் குதிக்க - அலரிலிருந்து தேன் சிந்த, தவளை குதிக்கும் - (அத்தேனைப் பெறத்) தவளைகள் தத்திப்பாயும், தடம் பொய்கை சூழ் - பெரிய குளம் சூழ்ந்த, வெற்பில் - மலையில் உள்ள, அணங்கே - மலைத் தெய்வமே, குவளை சிவத்து - குவளை மலர் போன்ற கண்கள் சிவந்து, குமுதம் வெளுத்த - செவ்வல்லிப்பூவையொத்த வாய் வெளுத்த குறை அல்லவேல் - குறைபாடுகள் உள்ளன அல்லாவிடின், அவளை - (அக்குறைபாடுகளையுடைய) எங்கள் தலைவியை, மறைத்து - ஒளித்து, உன்னைக் காட்டிடல் ஆம் - (காண்போர்க்கு) உன்னை (அவளென்றே) காட்டிவிடுதல் கூடும், (ஆதலின்) இவளை வரக் கண்டு - எங்கள் தலைவியை (இங்கு) வரச் செய்து, நீ பின் எழுந்தருள் - நீ பிறகு புறப்படுவாயாக. குவளை, குமுதம் - உவமையாகு பெயர்கள்.

உ, ங, ச, ரு - ஆம் கவிகள் நாண நாட்டத்திற்கு உரியவை. (நாண நாட்டம் - தலைவி நாணும்படி தோழி பொய்யானவை கூறி ஆராய்தல்).

68] நடுங்க நாட்டம் [சு

பால்போல் மொழிவஞ்சி! அஞ்சிநின் றேன்,இந்தப் பார்முழுதும்
மால்போல் புரந்தவன் மாறை வரோதயன் வாணன்வென்றி
வேல்போல் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன்வெய்ய
கோல்போல் கொடியன வாம்கொலை யானையின் கோடுகண்டே.

து - ரை : [தலைவி நடுங்கும்படி தோழி பொய்யானது கூறி ஆராய்தல்] 'வஞ்சி! கொலை யானையின் கோடு கண்டு அஞ்சி நின்றேன்,' என இயைக்க. பால் போல் மொழி - பாலைப்போன்ற (இனிய) சொல்லை உடைய, வஞ்சி - பூங்கொம்பு போன்றவளே (உவமையாகு பெயர்), பார் -

பூமி, மால்போல் புரந்தவன் - திருமாலைப்போல (இடையூற்றை நீக்கிக்) காத்தவனும், வரோதயன் - (வர + உதயன்) வரத்தால் பிறந்தவனுமாகிய, வென்றி - வெற்றி, சிவந்து - (இரத்தம் தோய்ந்ததனால்) சிவப்படைந்து, நெறி முறை - நீதியாட்சியிலிருந்து, கோடிய - தவறின, வெய்ய கோல் - கொடுங்கோல், கொலை யானை - கொல்லுந் தொழிலையுடைய யானையின், கொடியன ஆம் கோடு - கொடியனவாகிய தந்தங்களை. (தோழி இங்ஙனம் கூறியதால், தலைவி அவ்யானையால் தலைவனுக்கே துன்பம் நேர்ந்ததோ எனக் கருதி நடுங்க, அந்நடுக்கத்தால் தோழி தலைவிக்குத் தலைவனுடன் புணர்ச்சி உண்மையை ஆராய்ந்தறிந்தாள் என்க.)

## [குறையுற உணர்தல்]

69] பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுத்தல் [எ

பொருமணி வெண்திரைப் பைங்கடல் வங்கம் பொருந்திமுன்பு
தருமணி பின்பெற் றணிபவர் போல்சென்று சார்ந்திரந்து,
பருமணி நன்கலப் பாங்கியை நீங்கி,அப் பாவையைநாம்
மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே.

கு - ரை: [தலைவன், தான் விரும்பிய பாங்கியைத் தூதாகப் பெற்றுக் குறையிரத்தலை வலியுறுத்திக் கூறல்] '(நெஞ்சமே!) முன்பு வங்கம் பொருந்திப் பின் பொரும் அணி வெண் திரைப் பைங்கடல் தரும் மணி பெற்று அணிபவர்போல் நாம் சென்று, பருமணி நன்கலப் பாங்கியைச் சார்ந்து இரந்து, நீங்கி, மரு மணி வண்டு உறை தார் வாணன் மாறை அப் பாவையை மருவுதும்,' என இயைக்க. வங்கம் பொருந்தி - கப்பலில் (ஏறி) இருந்து, பொரும் - (கரையை) மோதும், அணி - அழகிய, திரை - அலைகளையுடைய, பைங்கடல் - கருங்கடல், மணி - முத்து, பருமணி நன்கலம் - பருமையான இரத்தினமிழைத்த நல்ல ஆபரணமணிந்த, இரந்து - வேண்டி, நீங்கி - (அப்பாங்கியைப்) பிரிந்து, மரு - வாசனை, மணி வண்டு - கருவண்டு, உறை - தங்கியிருக்கின்ற, தார் - மலர் மாலையணிந்த, மாறை - மாறை நாட்டில், பாவையை - பாவை போன்ற தலைவியை (உவமையாகுபெயர்), மருவுதும் - கூடுவோம். நெஞ்சம் - முன்னிலை எச்சம். மாறை, கடல்; பாங்கி, கப்பல்; தலைவன், முத்துப்பெறும் வணிகன்; தலைவி, முத்து - என உவமை காண்க.

70] ஊர் வினதல் [அ

புதியேன் மிகஇப் புனத்திற் கியான்;தனி போந்தனன்;உம்
பதியேது? செல்லும் படிசொல்லு வீர்;படி மேல்படிந்த
மதியேய் சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்தென் மாறைவையை
நதியேய் சுழிநிக ரும்பழி தீர்உந்தி நல்லவரே!

கு - ரை : [தலைவன், தோழியை, 'உம் ஊர் எது?' என வினவுதல்] 'நல்லவரே ! யான் இப்புனத்திற்கு மிகப் புதியேன்; தனி போந்தனன்; உம் பதி எது? செல்லும்படி சொல்லுவீர்,' என இயைக்க. படி - பூமி, மதி எய் - சந்திரனை ஒத்த, சுதை - சுண்ணம் பூசிய, நதி எய் - நதியில் பொருந்திய, சுழி நிகரும் - நீர்ச்சுழியைப்போலும், பழி தீர் - குற்றம் நீங்கிய, உந்தி நல்லவரே - கொப்பூழை உடைய பாங்கியீர், போந்தனன் - வந்தேன், உம் பதி - உமது ஊர், செல்லும் படி - செல்லும் விதத்தை, சொல்லுவீர் - தெரிவிப்பீராக.

71] பெயர் வினுதல் [௬

கரைத்தாவி உந்திய காவிரி வைகிய காலத்தினும்
தரைத்தாரு அன்னசெந் தண்ணளி வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
வரைத்தாழ் சிலம்பில்நம் வாழ்பதி ஈதென்று வஞ்சிஅன்னீர் !
உரைத்தால் இழிவதுண் டேல்,பெய ரேனும் உரைமின்களே.

கு - ரை : [தலைவன், தோழியை, 'நும் பெயரேனும் கூறுக,' எனக் கேட்டல்] 'வஞ்சி அன்னீர்! நும் வாழ் பதி ஈது என்று உரைத்தால் இழிவது உண்டேல், பெயரேனும் உரைமின்கள்,' என இயைக்க. வஞ்சி - பூங்கொம்பு, கரைத்தாவி - கரையில் தாவி, உந்திய - மோதிய, வைகிய - வற்றிய, தரைத்தாரு அன்ன - பூமியில் கற்பக விருட்சத்தை ஒத்த, செந்தண்ணளி - செவ்விய குளிர்ந்த கிருபையை உடைய, தமிழ் - இனிமை பொருந்திய, வரைத்தாழ் - (மற்ற) மலைகள் வணங்கத் தகுந்த, சிலம்பில் - (பொதிய) மலையில், பதி - ஊர், ஈது - இது, இழிவது - இகழ்ச்சி அடைவது, உண்டேல் - உண்டானால், பெயரேனும் - பெயர் எனினும் (ஏனும் - எனினும் என்பதன் மரூஉ), உரைமின்கள் - சொல்லுங்கள். வரைத்தாழ் - ('தினைக்குறிது' என்றாற்போன்ற) உறழ்ச்சி முடிவு.

72] கெடுதி வினுதல் [ம

தண்பட்டம் மேவும் வயல்தஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பில்
பண்பட்ட தேமொழிப் பாவைஅன் னீர்!பனை பட்டகையும்,
மண்பட்ட கோடும், மதம்பட்ட வாயும், வடிக்கணைதோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த தோஒரு போர்க்களிறே?

கு - ரை : [தலைவன், தன்னைத் தப்பி வந்த யானையைப் பற்றித் தோழியை வினவுதல்] 'பாவை அன்னீர்! ஒரு போர்க்களிறு வந்ததோ?' என இயைக்க. தண் பட்டம் - குளிர்ச்சியான நீர் ஓடை, மேவும் - பொருந்திய, தமிழ்ச்சிலம்பு - பொதியமலை, பண் பட்ட - இசை பொருந்திய, தேம் மொழி - இனிமையான சொல்லைப்பேசும், பாவை - சித்திரப்பாவை, களிறு - ஆண் யானை, பனை பட்ட கை - பனை மரம் போன்ற துதிக்கை,

மண் பட்ட - மண் பொருந்திய, கோடு - தந்தம், மதம் பட்ட - மதநீர் பொருந்திய, வடிக்கணை தோய் - கூரிய அம்பு மூழ்கியதால், புண் பட்ட - காயமடைந்த, மேனி - உடல்.

73] ஒழிந்தது வினாதல் [யக

'வனமார் குடிஞைப் பகைக்குர லாம்என வாணன்தஞ்சைப்
புனமார் குளிரிப் புடைப்பொலி யால்கிள்ளை போயின,மீண்
டினமாம் எனவந்திவ் வேனல்எல் லாம்வவ்வும்,' என்பதற்கோ
கனமா நறுங்குழ லீர்!மொழி யாதொழி காரணமே?

து - ரை: [தலைவன், தோழியை, 'நீர் பேசாது ஒழிந்தது என்?' என வினவுதல்] 'நறுங்குழலீர்! மொழியாது ஒழி காரணம், 'போயின கிள்ளை மீண்டு வந்து ஏனல் எல்லாம் வவ்வும்,' என்பதற்கோ?' என இயைக்க. கனம் மா நறுங்குழலீர் - மேகம்போன்ற கருமையாகிய வாசனை பொருந்திய கூந்தலையுடையவரே, வனம் ஆர் - காட்டில் பொருந்திய, குடிஞைப்பகை - கோட்டானுக்குப் பகையாகிய காக்கையின், குரல் ஆம் என - குரல் என்று சொல்லும்படி, தஞ்சைப் புனம் ஆர் - தஞ்சாக்கூரில் உள்ள தினைக்கொல்லையில் பொருந்திய, குளிரிப்புடைப்பு ஒலியால் - கிளி கடியும் கருவியைத் தட்டும் ஓசையால், போயின கிள்ளை - சென்றனவாகிய கிளிகள், மீண்டு - மறுபடியும், இனம் ஆம் என வந்து - (யாம் பேசினால், எமது குரலைத் தமது) இனமாகிய கிளிக்குரல் ஆகும் என்று எண்ணி வந்து, ஏனல் - தினைக்கதிர் (பொருளாகு பெயர்), வவ்வும் - கவரும், என்பதற்கோ - என்று தெரிவித்தற்கோ, அ, க, ம, யக - ஆம் கவிகளில், 'நல்லவரே, வஞ்சி அன்னீர், பாவை அன்னீர், குழலீர்,' எனத் தலைவன் பாங்கியை விளித்தது, 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி' (தொல். சொல். கிள. சூ. 27) என்னும் விதியால் கூறிய மரியாதைப்பன்மை என்க.

74] 'யாரே! இவர் மனத்து எண்ணம் யாது!' எனத் தேர்தல் [யஉ

'தரையார வண்புகழ் தேக்கிய வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
வரையாது நும்பதி? யாது நும் பேர்?'என்பர்; 'வார்துளிக்கார்
புரையானை அம்பொடு போந்ததுண் டோ?'என்பர்; 'பூங்கொடியீர்!
உரையாத தென்?'என்ப ரால்,என்கொ லோஇவர் உட்கொண்டதே!

து - ரை: [பாங்கி தனக்குள், 'இவர் யார்! இவர் மனக் கருத்து யாது!' என ஆராய்தல்] 'பூங்கொடியீர்! நும் பதி யாது? நும் பேர் யாது?' என்பர்; 'யானை போந்தது உண்டோ?' என்பர்; 'உரையாதது என்?' என்பரால், இவர் உட்கொண்டது என்கொலோ!' என இயைக்க. தரை ஆர - பூமி நிறைய, வண்புகழ் - வளப்பமான கீர்த்தியை, தேக்கிய -

நிறைத்த, சூழ் வரை - சூழ்ந்த மலையில், நம் பதி - உமது ஊர், வார் துளி - நீண்ட மழைத்துளியைச் சொரியும், கார் புரை - மேகத்தைப்போன்ற, அம்பொடு - (யான் தன் உடலில் எய்த) கணையுடன், போந்தது - வந்தது, என்பரால் - என்பர் ஆதலால், உட்கொண்டது - மனத்திற்கொண்ட கருத்து, என்கொல் - என்னவோ, பூங்கொடியீர் - உயர்வுப் பன்மை விகுதி பெற்று விளியேற்ற உவமையாகு பெயர்.

**75]** எண்ணம் தெளிதல் [௰௩

யாரே இவர்என் றறிகின் றிலேம்;'எதிர்ந் தாரைவென்று
வாரேய் கழல்புனை வாணன்தென் மாறை வரைஉறைவீர்!
ஊரேதெ' னமுன் வினவிப்பின் வேறொன் றுரைப்பதெல்லாம்
நேரே இவள்பொருட் டால்என்று தோன்றும்என் நெஞ்சினுக்கே.

கு - ரை: [பாங்கி, தலைவன் கருத்தை அறிதல்] 'இவர் யார் என்று அறிகின்றிலேம். 'மாறை வரை உறைவீர்! ஊர் எது?' என முன் வினவிப் பின் வேறு ஒன்று உரைப்பது எல்லாம் நேரே இவள் பொருட்டு என்று என் நெஞ்சினுக்குத் தோன்றும்,' என இயைக்க. எதிர்ந்தாரை - (போர்க்களத்தில்) எதிர்ந்தவரை, வார் எய் - கயிறு பொருந்திய, கழல் - வீர கண்டையை, புனை - தரித்த, வரை - மலையில் (இருமடியாகு பெயர்), உறைவீர் - வாழ்பவரே, உரைப்பது எல்லாம் - கூறுவது முற்றும், நேரே - செவ்வையாக, பொருட்டால் - ஆல், அசை.

[இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்]

**76]** தலைவன் கையுறை ஏந்தி வருதல் [௰௪

தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை தன்னையும்போல்
வண்டார் குழல்மட வார்மணந் தார்;சென்று வாணன்தஞ்சை
நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழ்அந் நுடங்கிடையார்க்
கண்டா தரவையெல் லாம்சொல்ல வேநல்ல காலம்இதே.

கு - ரை: [தலைவியும் பாங்கியும் சேர்ந்திருப்பது கண்டு தலைவன் தழை தாங்கி வருதல்] 'மடவார் மணந்தார்; சென்று அந்நுடங்கு இடையார்க் கண்டு ஆதரவை எல்லாம் சொல்ல இது நல்ல காலம்,' என இயைக்க. பொன் - இலக்குமி, பார் மங்கை - பூமி தேவி, வண்டு ஆர் - வண்டுகள் பொருந்திய, குழல் மடவார் - கூந்தலையுடைய பெண்டிராகிய தலைவியும் தோழியும், மணந்தார் - சேர்ந்திருந்தனர், தஞ்சை - தஞ்சையில், நுண் தாது அணி பொங்கர் நீழலின்கீழ் - நுட்பமான மகரந்தம் பொருந்திய சோலை நிழலில், அந்நுடங்கு இடையார் - அந்தத் துவளும் இடையையுடையவர்களை, ஆதரவு - காதல். இடையார்க்கண்டு - எழுவாய்த் தொடரென மயங்காமைத்து இரண்டன் தொகையில் மிக்கது. சொல்லவே, இதே - ஏ, அசை.

77] தலைவன் அவ்வகை வினாதல் [௭௫

வல்லார் இளங்கொங்கை வஞ்சிஅன் னீர்!தஞ்சை வாணனைக்கண்
டொல்லார் களத்தின் உடைந்தது போல ஒருகலைபோர்
வில்லார் கணைதைப்ப மெய்சோர்ந் தினம்விட்டு வெய்துயிர்த்துப்
புல்லார் வதும்இன்றி யேவந்த தோநும் புனத்தயலே?

து - ரை: [தலைவன் முன் வினவியதுபோல மீண்டு வந்து, 'கலை வந்ததோ?' என வினவுதல்] 'வஞ்சி அன்னீர்! ஒரு கலை நும் புனத்து அயல் வந்ததோ?' என இயைக்க. வல் ஆர் - சொக்கட்டான்காய் போன்ற, ஒல்லார் - பகைவர், களத்தின் - போர்க்களத்தில், உடைந்தது - தோற்று ஓடியது, கலை - ஆண்மான், போர் வில் ஆர் கணை - போர் செய்யும் (எனது) வில்வில் பொருந்திய அம்பு, சோர்ந்து - மயங்கி, இனம் விட்டு - தன் இனத்தைப் பிரிந்து, வெய்துயிர்த்து - பெருமூச்சு எறிந்து, புல் ஆர்வதும் இன்றி - புல் தின்பதும் இன்றி, அயல் - பக்கம்.

78] எதிர் மொழி கொடுத்தல் [௭௬

வாக்கும் திறலும் மதனைஒப் பீர்!தஞ்சை வாணன்மஞ்சு
தேக்கும் குடுமிச் சிறுமலைக் கேதிரி கோட்டிரலை
கோக்கும் சரமும் குருதியும் சோரக் கொடிச்சியரேம்
காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலமே.

து - ரை: [தோழி மறு மொழி கூறல்] 'மதனை ஒப்பீர்! கொடிச்சியரேம் காக்கும் புனமருங்கே திரிகோட்டு இரலைசரமும் குருதியும் சோரத் தனியே வரக் கண்டிலம்,' என இயைக்க. வாக்கும் - திருந்திய வடிவத்திலும் ('வாக்கு அமை கடுவிசை வில்' கலித். 137), திறல் - வெற்றி, மதன் - மன்மதன், மஞ்சு - மேகம், தேக்கும் - நிறையும், குடுமி - சிகரம், சிறு மலைக்கு - சிறு மலையில் (வேற்றுமை மயக்கம்), திரிகோட்டு இரலை - முறுக்கடைந்த கொம்புகளையுடைய கலைமான், கோக்கும் - (தன் உடலிற்) பாய்ந்த, சரமும் - அம்பும், குருதி - இரத்தம், சோர்தல் - தளர்தல், ஒழுகுதல் ('சரம் தளர, குருதி ஒழுக,' எனப் பொருள் கொள்க), கொடிச்சியரேம் - குறத்தியர்களாகிய யாங்கள், புனம் - தினைக்கொல்லை, மருங்கு - பக்கம்.

79] இறைவனை நகுதல் [௭௭

மைவாள் இலங்குகண் மங்கைநல் லாய்!தஞ்சை வாணன்வெற்பில்
இவ்வாளி மொய்ம்பர்இன் றெய்தமெய்ம் மான்இள மாந்தளிரின்
செவ்வாளி யும்கொண்டு சேண்சென்ற தால்,அன்று சீதைகொண்கன்
கைவாளி யும்கொண்டு போனபொய்ம் மானினும் கள்ளத்ததே.

து - ரை: [தோழி தலைவியிடம் தலைவனைப் பரிகசித்துச் சிரித்துக் கூறல்] 'மங்கை நல்லாய்! இ ஆளி மொய்ம்பர் இன்று எய்த மான் இளமாந் தளிரின் செவ்வாளியும் கொண்டு சேண் சென்றதால், அன்று சீதை கொண் கன் கைவாளியும் கொண்டு போன பொய்ம்மானினும் கள்ளத்தது,' என இயைக்க. மை வாள் - மைதீட்டிய வாள்போல, ஆளி மொய்ம்பர் - சிங்கம் போன்ற வலிமையுடையவர், இன்று - இப்போது, மெய்ம்மான் - உண்மை யான மான், செவ்வாளி - சிவப்பாகிய அம்பு, சேண் - தூரம், சென்றதால் - சென்றது ஆதலால், அன்று - பண்டை நாளில் (பண்டறி சுட்டு), கொண் கன் - கணவன், கை வாளி - கையம்பு, பொய்ம்மானினும் - (மாரீசனாகிய) பொய்ம்மானைக்காட்டிலும், கள்ளத்தது - திருட்டுத்தனமுடையது. 'மாந் தளிரின் செவ்வாளி' என்றது, தலைவன் கையில் அம்பின்றி மாந்தளிர் வைத்திருந்ததைக் குறித்து நகைத்துக் கூறியது. வாளியும் - உம், சிறப்பு.

80] பாங்கி, மதியின் அவரவர் மனக்கருத்து உணர்தல் [யஅ

புனம்காவல் அன்றிவள் பூண்டதும்; ஆண்தகை போந்ததும்மான்
இனம்காவ லின்கலை எய்யஅன் றூல்,இகல் ஆழிவிந்தை
தனம்காவ லன்தஞ்சை வாணன்நன் னாட்டிவர் தங்களில்தாம்
மனம்காவல் கொண்டதெல் லாம்கண்க ளேசொல்லும் வாய்திறந்தே.

து - ரை: [தோழி, தன் அறிவால் தலைவன் தலைவியரது மனக் குறிப்பை ஆராய்ந்து அறிதல்] 'இவள் பூண்டதும் புனம் காவல் அன்று; ஆண் தகை போந்ததும் கலை எய்ய அன்றூல், இவர் தங்களில் தாம் மனம் காவல் கொண்டது எல்லாம் (இவர்) கண்களே வாய் திறந்து சொல்லும்,' என இயைக்க. பூண்டதும் - மேற்கொண்டதும், ஆண் தகை - ஆண்மைத் தன்மையையுடைய தலைவன் (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை), போந்ததும் - வந்ததும், மான் இனம் காவல் இன் - மான் கூட்டத்திற்குக் காவலாய் இன்பத்தைச் செய்யும், கலை - ஆண் மான், எய்ய - அம்பால் அடிக்க, அன்றூல் - அன்று ஆதலால், இகல் - போர் புரியும், ஆழி - சக்கரத்தையுடைய, விந்தை - வீரலக்குமியின், தனம் காவலன் - முலைகளைக் காப்பவன் (வீர லக்குமி பிரியாதிருக்கும் தோளையுடையவன் என்பது கருத்து), நன்னாட்டு - நல்ல நாட்டில், இவர் - இத்தலைவனும் தலைவியும், மனம் காவல் கொண்டது - மனத்தை (வேறிடத்திற் செல்லாத படி) காத்துக்கொண்டது (தமக்குள் ஒருவரை ஒருவர் காதலித்தது என் பது கருத்து), சொல்லும் - சொல்லுதல் போலத் தெரிவிக்கும்.

## 9. பாங்கியிற்கூட்டம்

81] தலைவன், உட்கோள் சாற்றல் [க

வாவும் கலைவிந்தை காவலன் வாணன்தென் மாறைஅன்னீர் !
ஏவும் தொழில்எனக் கேதிய லாததிங் கேநுமக்கோர்
மேவும்செய் குன்றமும் சோலையும் ஆகப்பொன் வெற்பும்விண்ணோர்
காவும் தரவும்வல் லேன்;என்னை ஆளும் கடைக்கண்வைத்தே.

து - ரை: [தலைவன், தன் மனக் கருத்தைத் தோழிக்குக் கூறுதல்] 'மாறை அன்னீர்! இங்கே ஏவும் தொழில் எனக்கு இயலாதது எது? நுமக்குப் பொன் வெற்பும் விண்ணோர் காவும் தரவும் வல்லேன்; என்னைக் கடைக்கண் வைத்து ஆளும்,' என இயைக்க. வாவும் - தாவுகின்ற, கலை - கலைமானை வாகனமாகக் கொண்ட, விந்தை காவலன் - வீர மகளுக்கு (துர்க்கைக்குக்) காவலனாகிய, ஏவும் - (நீர்) கட்டளையிடும், மேவும் - (நீர்) விளையாடப் பொருந்தும், ஓர் - ஒப்பற்ற, பொன் வெற்பு - மேரு மலை, விண்ணோர் கா - தேவருலகத்திலுள்ள கற்பகச் சோலை, கடைக்கண் - கிருபை, தரவும் - உம்மை, தருதலாகிய அச்செயலின் அருமை தோன்ற நின்றது.

82] பாங்கி, குல முறை கிளத்தல் [உ

நீவே றுரைக்கின்ற தென்?குற மாதெங்கள் நேரிழை;போர்
மாவேழ வன்படை வாணன்தென் மாறை மணியைஅன்றித்
தாவேதும் இல்லாத் தமனிய மீது தலம்புரக்கும்
கோவே! அழுத்துவ ரோவறி யோரும் குருவிந்தமே ?

து - ரை: [தோழி, தலைவனுக்குத் தலைவியின் குல முறையைச் சொல்லி, 'உன் கருத்துப் பொருந்தாது,' எனல்] 'கோவே! நீ வேறு உரைக்கின்றது என்? எங்கள் நேரிழை குற மாது; வறியோரும் தமனியம் மீது மணியை அன்றிக் குருவிந்தம் அழுத்துவரோ?' என இயைக்க. தலம் - பூமி, கோவே - அரசனே, நேர் இழை - நேர்மையான ஆபரணத்தை அணிந்த தலைவி (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), மாது - பெண், போர் மா வேழம் - போர் புரியும் சிறந்த யானைகளைக் கொண்ட, வன் படை - வலிய சேனையையுடைய, மாறை - மாறை நாட்டில், மணி - மாணிக்கம், தா - குற்றம், ஏதும் - சிறிதும், தமனியம் - பொன், வறியோர் - தரித்திரர், குருவிந்தம் - குன்றி மணி, அழுத்துவரோ - ஓ, எதிர்மறை. வறியோரும் - உம், இழிவு சிறப்பு.

83] தலைவன், தலைவிதன்னை உயர்த்தல் [ரு

மிக்கார் உளர்அல்லர் மெல்லியல் மாதரின் மேதினிமேல்;
தக்கார் புகழ்தஞ்சை வாணர் பிரான்தமிழ் நாடனையாய்!
மைக்கார் நிகர்குழல் வள்ளிசெவ் வேளுக்கு வல்லவையாம்
இக்கா ரணம்உண ராதென்கொ லோநின் றியம்புவதே?

து - ரை: [தலைவன், தலைவியை உயர்த்திக் கூறல்] 'தமிழ் நாடு அனையாய்! மேதினிமேல் மெல்லியல் மாதரின் மிக்கார் உளர் அல்லர்; செவ்வேளுக்கு வள்ளி வல்லவை ஆம் இக்காரணம் உணராது நின்று இயம்புவது என்?' என இயைக்க. தக்கார் - தகுதியுடையார், வாணர் - வாணன் குடியில் அப்பெயருடன் இனிப் பிறப்பவர்களுக்கெல்லாம், பிரான் - தலைவன், தமிழ் நாடு - பாண்டி நாடு, மேதினிமேல் - பூமியில், மெல் இயல் மாதரின் - மென்மைத் தன்மையையுடைய பெண்டிரினும், மிக்கார் - சிறந்தவர், உளர் அல்லர் - உள்ளவர் ஆகார் (இலர் என்பது கருத்து) அன்மைச்சொல், 'கருமம் **அல்லாச்** சார்பென் கிளவி' [பிரயோக விவேகம், செய் 21. உரை] என்பதுபோல இங்கு இன்மைப் பொருள் உணர்த்தியது), மைக்கார் நிகர் - கரிய மேகம் போலும், வள்ளி - (குறக்குடியிற் பிறந்த) வள்ளியம்மை, செவ்வேள் - முருகன், வல்லவை ஆம் - தேவி ஆகிய, இக்காரணம் - இக்கதையை ('கதையென்றுரைப்பது **காரணச் சொல்** எனல்' - பிங்க. நிக. உ0உஎ), கொல், ஓ - அசைநிலை.

84] பாங்கி, அறியாள் போன்று வினைதல் [ச

பொன்னியல் ஊசலும் பொய்தலும் ஆடிஎப் போதும்நன்னீர்
மன்னிய நீலமும் நித்தில மும்குற்று வாணன்தஞ்சை
இன்னியல் ஆரும் இளமரக் காவின் இடம்பிரியாக்
கன்னியர் தாம்பலர்; யார்நின்னை வாட்டிய காரிகையே?

து - ரை: [பாங்கி, தலைவனால் காதலிக்கப்பட்டவளை அறியாதவள போலத் தலைவனை வினவுதல்] '(தலைவ!) ஆடிக் குற்று காவினிடம் பிரியாக் கன்னியர் பலர்; நின்னை வாட்டிய காரிகை யார்?' என இயைக்க. பொன் இயல் ஊசல் - பொன்னால் இயன்ற ஊஞ்சல், பொய்தல் - விளையாட்டு, நல் நீர் - நல்ல தன்மை, மன்னிய - நிலைபெற்ற, நீலம் - குவளை மலர், நித்திலம் - முத்து, குற்றுதல் - கொய்தல் (உரலில் இட்டு இடித்தல்) ['நீலம் கொய்து, நித்திலம் இடித்து' என்றபடி], தஞ்சை - தஞ்சாக்கூரில், இன் இயல் ஆரும் - இனிய தன்மை பொருந்திய, இளமரக்காவினிடம் - இளமரச் சோலையில், பிரியா - (ஒருவரை ஒருவர்) பிரியாத, கன்னியர்**தாம் - தாம்**, சாரியை. காரிகை - பெண், தலைவன் - முன்னிலை எச்சம்.

85] இறையோன், இறைவி தன்மை இயம்பல் [ரு

தாளிணை மாந்தளிர் ; அல்குல்பொன் தேர்;இடை சங்கை;கொங்கை
கோளிணை கோலக் குரும்பை;கை காந்தள்; கொடிக்கரும்பார்
தோளிணை வேய்;முகம் திங்கள்;செவ் வாய்இதழ் தொண்டை;உண்கண்
வாளிணை ; வார்குழ லாய்!வாணன் மாறைஎம் மன்னுயிர்க்கே.

கு - ரை : [தலைவன், தலைவியின் இலக்கணத்தைக் கூறுதல்] 'வார் குழலாய் ! எம் மன்னுயிர்க்குத் தாளிணை, மாந்தளிர்; அல்குல், தேர் ; இடை, சங்கை ; கொங்கை, குரும்பை; கை, காந்தள்; தோள் இணை, வேய்; முகம், திங்கள்; இதழ், தொண்டை; கண், வாள் இணை,' என இயைக்க. வார் - நீட்சி, மன்னுயிர் - நிலைபெற்ற உயிர் போன்ற தலைவி, இணை - இரண்டு, தளிர் - கொழுந்து, பொன் - அழகு, இடை - இடுப்பு, சங்கை - (உண்டோ இல்லையோ என்னும்) சந்தேகம், கோள் இணை - கொத்தில் இரண்டாகிய, கோலம் - அழகு, குரும்பை - தென்னம்பிஞ்சு, கொடிக்கரும்பு ஆர் - (எழுதப்பட்ட) பூங்கொடியும் (மன்மதனுடைய) கரும்பு வில்லும் பொருந்திய, வேய் - மூங்கில், திங்கள் - சந்திரன், இதழ் - உதடு, தொண்டை - கொவ்வைக்கனி, உண் கண் - மையுண்ட கண்கள்.

86] பாங்கி, தலைவி அருமை சாற்றல் [சு

புகழார் வரைஎம் புரவலன் காதல் புதல்வியைநீர்
இகழா 'எளியள்'என் றெண்ணப் பெறீர்;எமக் கென்றும்வண்மை
திகழா பரணன் செழுந்தஞ்சை வாணன் சிலம்பின்உள்ளீர் !
அகழார் கலிஉல கில்புலன் ஆன அணங்கவளே.

கு - ரை : [தோழி, தலைவியை அரியவளாக்கிக் கூறல்] 'சிலம்பின் உள்ளீர் ! எம் புரவலன் காதல் புதல்வியை நீர் இகழா, எளியள் என்று எண்ணப்பெறீர் ; அவள் உலகில் புலன் ஆன அணங்கு,' என இயைக்க. சிலம்பின் - மலையில், ஆர் - பொருந்திய, வரை - மலைக்கு, புரவலன் - அரசனுடைய, இகழா - இகழ்ந்து, எண்ணப்பெறீர் - எண்ணப்பெறுந்தகுதி உடையீர் அல்லீர், வண்மை திகழ் - கொடைக்குணம் விளங்கும், ஆபரணன் - ஆபரணம் போன்றவன், அகழ் - தோண்டிய, ஆர் கலி - கடலால் சூழப் பட்ட, புலன் ஆன - கண்ணுக்குத்தோன்றிய, அணங்கு - தெய்வப்பெண்.

87] தலைவன், இன்றியமையாமை இயம்பல் [எ

வனைந்தால் அனகொங்கை மா தரு வாய்த்தஞ்சை வாணன்வெற்பில்
புனைந்தால் அனைய புனத்தயல் வாய்வண்டு போதகத்தேன்
நனைந்தால் அனையஎன் நல்வினை தான்வந்து நண்ணிற்றென்று
நினைந்தால் அணங்கனை யாய் !தமி யேன்உயிர் நிற்கின்றதே.

து - ரை: [தலைவன், தலைவி தனக்கு இன்றியமையா திருத்தலைத் தோழிக்கு உரைத்தல்] 'அணங்கு அனையாய்! வெற்பில் புனத்து அயல் என் நல்வினை தான் மாது உருவாய் வந்து நண்ணிற்று என்று நினைந்தால் தமியேன் உயிர் நிற்கின்றது,' என இயைக்க. வினைதல் - செய்தல், புனைதல் - அலங்கரித்தல், அயல்வாய் - பக்கத்தில், வண்டு போது அகத்தேன் நனைந்தால் அனைய - வண்டு பூவில் உள்ள தேனில் நனைந்தாற்போன்ற, நண்ணிற்று - பொருந்தியது, நினைந்தால் - (நீ) எண்ணினால், தமியேன் - தனிமையான எனது, நிற்கின்றது - நிற்கும் (காலவழுவமைதி), 'நீ நினையா விடில் என் உயிர் நில்லாது,' என்பதை அவாய் நிலையாற்கொள்க.

88] பாங்கி, 'நின் குறை நீயே சென்று உரை,' என்றல் [அ

மருப்பா வியதொங்கல் வாணன்தென் மாறை வனசமலர்த்
திருப்பாவை அன்னஎன் சேயிழை யாட்குன் திருவுளத்து
விருப்பா கியகுறை உள்ளதெல் லாம்சொல்லி வேண்டுகநீ;
பொருப்பா! மொழியப் பெறுர்எம்ம னோர்இவை போல்வனவே.

து - ரை: [பொருப்பா! திருப்பாவை அன்ன என் சேயிழையாட்கு நீ உன் குறை எல்லாம் சொல்லி வேண்டுக; எம்மனோர் இவை போல்வன மொழியப்பெறுர்,' என இயைக்க. பொருப்பா - குறிஞ்சி நிலத் தலைவனே, மரு - மணம், பாவிய - பொருந்திய, தொங்கல் - மாலை, வனசம் மலர் - தாமரை மலர் (வனசம் - நீரில் பிறப்பது), திருப்பாவை - இலக்குமி, எம் அனோர் - எம்மைப்போல்வார், போல்வன - போலும் செய்திகளை, மொழியப் பெறுர் - சொல்லும் தகுதியர் அல்லர்.

89] பாங்கியைத் தலைவன் பழித்தல் [சு

வில்லார் நுதல்வெய்ய வேலார் விழிக்கென் மெலிவுசொல்ல
வல்லார் இலை;சொல்ல வல்லைஎன் றியான்தஞ்சை வாணன்தெவ்வின்
ஒல்லா திதுநமக் கென்றுண ரேன்நின் றுணங்கிஇந்நாள்
எல்லாம் இரந்தது நின்குறை யேஅல்ல; என்குறையே.

து - ரை: '(பாங்கியே!) யான் உணரேன் உணங்கி இந்நாள் எல்லாம் இரந்தது நின் குறையே அல்ல; என் குறையே,' என இயைக்க. வில் ஆர் - ஒளி பொருந்திய, நுதல் - நெற்றியும், வெய்ய - கொடிய, வேல் ஆர் - வேல் போன்ற, விழிக்கு - கண்ணும் உடையவளுக்கு, மெலிவு - வருத்தம், இலை - இல்லை, வல்லை - (நீ) வல்லவள், தெவ்வின் - பகையைப்போல, இது நமக்கு ஒல்லாது - இக்காரியம் உமக்குப் பொருந்தாது, உணரேன் - அறியேனாய், நின்று உணங்கி - இடைவிடாமல் வாடி, இந்நாள் எல்லாம் - இந்நாள் முற்றும், இரந்தது - (உன்னைக்) குறை வேண்டியது, குறை - குற்றம்,

விழி - சினையாகு பெயர். பாங்கி - முன்னிலை எச்சம். 'நின் குறை அல்ல; என் குறை,' என்றது குறிப்பு மொழி. தோழியை 'நின்' என்றும் 'நமக்கு' என்றும் ஒரே செய்யுளிற்கூறியது ஒருமை பன்மை மயக்கம்.

**90]** பாங்கி, பேதைமை ஊட்டல் [ய

தேனும் சுரும்பும் செறிதொங்கல் வாணன்தென் மாறைவெற்பா!
மானும் கலையும் வடிக்கணை யால்எய்து மன்னுயிரும்
ஊனும் சுவர்கின்ற தன்னையர் போல்அயில் ஒத்தகண்ணாள்
தானும் பிறர்உள்ள நோய்அறி யாத தகைமையளே.

து - ரை: [பாங்கி, தலைவியின்மேல் அறியாமையை ஏற்றிக் கூறுதல்] தேன் - (இங்குப்) பெண் வண்டு, சுரும்பு - ஆண் வண்டு, செறி தொங்கல் - (பூக்கள்) நெருங்கியுள்ள மாலையை அணிந்த, மான் - பெண் மான், கலை - ஆண் மான், வடிக்கணை - கூர்மையை உடைய அம்பு, மன் உயிரும் - பொருந்திய உயிரையும், ஊன் - மாமிசம், தன்னையர் - தமையன்மார், அயில் - வேல், உள்ள நோய் - மன நோய், தகைமையள் - குணமுடையவள்.

**91]** காதலன், தலைவி முதறிவு உடைமை மொழிதல் [யக

வருநீர் வனமுலை மங்கைநல் லாய்!செங்கை வாணன்வையை
தருநீர் மலிவயல் தஞ்சைஅன் னாள்அன்று தஞ்சம்இல்லேன்
அருநீர் நவையுறக் கண்மலர் நீர்தெளித் தாற்றினளால்,
இருநீர் நிலம்கொள் ளுமோஅறி யாள்என்னும் இவ்வுரையே!

து - ரை: [தலைவன், தலைவி பேரறிவு உடையளாதலைப் பாங்கிக்குக் கூறுதல்] 'மங்கை நல்லாய்! தஞ்சை அன்னாள் அறியாள் என்னும் இவ்வுரை நிலம் கொள்ளுமோ!' என இயைக்க. வரும் நீர் - (வளர்ந்து) வரும் தன்மையை உடைய, வன முலை - அழகிய முலையை உடைய, மங்கை நல்லாய் - மங்கைப் பருவமுடைய தோழியே, வையை தரும் - வையையாறு சுரக்கின்ற, மலி - மிகுந்த, அன்று - முன்பு, தஞ்சம் - ஆதரவு, அருநீர் - அருமையான கல்வியறிவு, நவை உற - குற்றமடைய, கண் மலர் - (தன்) கண்ணாகிய மலரில் உள்ள, நீர் - (அருளாகிய) நீரை, ஆற்றினளால் - தணித்தனள் ஆதலால், இருநீர் - பெருநீரையுடைய கடல் சூழ்ந்த, நிலம் - உலகத்தார் (இடவாகுபெயர்), கொள்ளுமோ - ஓ, எதிர்மறை.

**92]** பாங்கி, முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல் [யஉ

செறிவளர் காவி வயல்தஞ்சை வாணன் சிறுமலைமேல்
நெறிவளர் வார்குழல் நேரிழை யாள்அன்ன நீர்மையளேல்,
குறிவளர் காவில்முன் கூடிய வாறின்னும் கூடுகநீ;
கறிவளர் சாரல்வெற் பா!பிற ரால்என்ன காரியமே?

து - ரை: [தோழி, 'முன்பு கூடியவாறு இன்னும் கூடுக,' எனத் தலைவனுக்குக் கூறல்] 'வெற்பா! நேரிழையாள் அன்ன நீர்மையளேல், நீ குறி வளர் காவில் முன்பு கூடியவாறு இன்னும் கூடுக; பிறரால் காரியம் என்ன?' என இயைக்க. கறி - மிளகுக்கொடி (சினையாகு பெயர்), 'வளர் காவி செறி வயல்' என மாறுக. காவி - குவளை மலர், நெறி - ஒழுங்கு, வார்-நீண்ட, அன்ன நீர்மையளேல் - (உனது விருப்பம் தணிக்கும்) அப்படிப் பட்ட குணமுடையளானல், குறி வளர் - (கூடுதற்கு ஏற்படுத்திக்கொண்ட) அடையாளம் பொருந்திய, கா - சோலை, காரியம் - (ஆக வேண்டிய) செயல்.

93] தன் நிலை தலைவன் சாற்றல் [யகூ

உரைத்தென் பிறஅந்தப் பைந்தொடி ஆகம் உறுவிடில்?வெண்
திரைத்தென் கடல்முத்தும் தென்மலைச் சந்தும் செழும்பனிநீர்
அரைத்தென் புருகமெய் அப்பினும் வெப்பம் அறுதினிநின்
வரைத்தென் கருமம்எல் லாம்தஞ்சை வாணன் வரைஅணங்கே!

து - ரை: [தலைவன் தன் வருத்த நிலையைப் பாங்கிக்குக் கூறல்] 'அணங்கே! பிற உரைத்து என்? அந்தப்பைந்தொடி ஆகம் உறுவிடில், முத்தும் சந்தும் பனி நீர் அரைத்து மெய் அப்பினும் வெப்பம் அறுது; இனி என் கருமம் எல்லாம் நின் வரைத்து,' என இயைக்க. வரை - மலையிலுள்ள, பிற - வேறு சொற்களை, என் - (பயன்) என்ன, பைந்தொடி - பசுமை யான வளைகளை அணிந்தவள் (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), ஆகம் - உடல், உறுவிடில் - கூடாவிட்டால், திரை - அலை, தென்மலை - பொதிய மலையில் தோன்றிய, சந்து - சந்தனம், நீர் - நீரால், என்பு - எலும்பு, மெய் - (என்) உடலில், வெப்பம் - (வேட்கை யாலுண்டான) உஷ்ணம், அறுது - நீங்காது, வரைத்து - எல்லையை உடை யது (உன்னைப் பொறுத்தது என்றபடி).

94] பாங்கி, உலகியல் உரைத்தல் [யச

விரையக நாள்மலர் மெல்லியல் மாதை விரும்பினையேல்
வரையக நாட! வரைந்துகொள் நீ;தஞ்சை வாணன்முந்நீர்த்
தரையக நான்மறைக் கேள்வியர் வேள்வியர் சான்றவர்தம்
உரையகம் நாடிமுன் னிட்டன தாகும் உலகியலே.

து - ரை: [பாங்கி, தலைவனுக்கு உலக முறையைக் கூறுதல்] 'வரையக நாட! நீ மாதை விரும்பினையேல், கேள்வியர் வேள்வியர் சான்ற வர்தம் உரை அகம் நாடி, முன்னிட்டு, வரைந்துகொள்; உலகியல் அனது ஆகும்,' என இயைக்க. வரை அக நாட - மலையிடமாகிய நாட்டையுடைய வனே, விரை அகம் - வாசனையைத் தன்னிடம் கொண்ட, மாதை - (இலக்

குமி போன்ற) தலைவியை, முந்நீர் - கடலையுடைய, தரையகம் - உலகில், கேள்வியர் - கேள்வியையுடையவரும், வேள்வியர் - யாகம் புரிந்தவரும் (ஆகிய), சான்றவர்தம் - பெரியோரின், உரை - சொல்லின், அகம் - உட்பொருளை (இடவாகுபெயர்), நாடி - ஆராய்ந்து, முன்னிட்டு - (அச்சான்றோரை) முன் செலுத்தி, வரைந்துகொள் - மணந்துகொள், உலகு இயல் - உலக முறைமை, அனது - அப்படிப்பட்டது ('அன்னது' என்பதன் தொகுத்தல் விகாரம்).

95] தலைமகன் மறுத்தல் [௯௫

வெண்டா மரைமங்கை காதலன் ஆகிய வேதியன்பால்
உண்டா கியதொல் உலகிய லால்உங்கள் ஆரணங்கை
வண்டார் குழலி! வரைந்துகொள் வேன்தஞ்சை வாணன்வண்மை
கண்டால் அருள்உள்ள நீஎன தாருயிர் காத்தபின்னே.

து - ரை : 'வண்டு ஆர் குழலி! நீ எனது ஆருயிர் காத்த பின், உலகியலால் உங்கள் ஆரணங்கை வரைந்துகொள்வேன்,' என இயைக்க. வெண்தாமரை மங்கை - சரசுவதி, காதலன் - கணவன், வேதியன்பால் - பிரமனிடத்தில், தொல் - பழமையான, ஆரணங்கு - உவமையாகு பெயர், வண்மை - தருமத்தை, கண்டால் அருள் - கண்டாற்போலும் கிருபை, வரைந்துகொள்வேன் - மணந்துகொள்வேன்.

96] பாங்கி, அஞ்சி அச்சுறுத்தல் [௯௬

மல்லார் புயன்தஞ்சை வாணன்வெற் பா!எமர் வந்தினிஇக்
கல்லார் வியன்புனம் காவல் விடார்;அவர் காணின்மிகப்
பொல்லார்; இருண்டது போதும்;மற் றியாங்களும் போதும்;இங்கு
நில்லா தெழுந்தருள் நீயும்இப் போது நெடுந்தகையே.

து - ரை : [பாங்கி, தம்மவர் காணின் தீங்கு வரும் என அஞ்சி, அவ்விடம் விட்டு அகலும்படி தலைவனைப் பயமுறுத்தல்] 'வெற்பா! நெடுந்தகையே! எமர் இனி வந்து இப்புனம் காவல் விடார்; அவர் காணின் மிகப் பொல்லார்; போதும் இருண்டது; யாங்களும் போதும்; நீயும் இப்போது இங்கு நில்லாது எழுந்தருள்,' என இயைக்க. மல் ஆர் புயன் - மல் தொழில் பொருந்திய தோள்களையுடையவனாகிய, நெடுந்தகையே - பெருந்தன்மையுடையவனே (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), எமர் - எம் சுற்றத்தார், கல் ஆர் - மலையில் பொருந்திய, வியன் - விசாலமான, காவல் - (இரவில்) காத்தலை, காணின் - (உன்னைப்) பார்த்தால், பொல்லார் - கொடியராவர், போதும் - பொழுதும் (போழ்து என்பதன் மரூஉ), மற்று - அசை, யாங்களும் - தலைவியும் யானும், போதும் - (எம் ஊர்க்குப்) போவோம் (தன்மைப்பன்மை முற்று), எழுந்தருள் - புறப்படு.

97] தலைவன், கையுறை புகழ்தல் [௯எ

சிமையார் மலயத் தமிழ்த்தஞ்சை வாணன் சிறுமலைமேல்
அமையா கியதடந் தோள்அன்ன மே!அணி யத்தகுமால்
உமையாள் இறைவன் பயில்கயி லாயத்தும் உம்பர்தங்கும்
இமையா சலத்தும்எல் லாம்இல்லை யால்நிகர் இத்தழைக்கே.

கு - ரை: [தலைவன், தான் கொண்டு வந்த தழையைப் புகழ்ந்து பேசுதல்] 'அன்னமே! இத்தழைக்கு நிகர் இல்லையால், அணியத்தகும்,' என இயைக்க. சிமை - சிகரம் ('தோய்வரும் சிமைதொறும்' - பரிபா. 7, 13), ஆர் - பொருந்திய, மலயத்தமிழ் - பொதிய மலையிற்பிறந்த தமிழை (வளர்க்கும்), அமை - மூங்கில், தடந்தோள் - பெரிய தோளையுடைய, அன்னமே - அன்னம்போன்றவளே (உவமையாகு பெயர்), உமையாள் இறைவன் - சிவன், பயில் - வாழ்கின்ற, உம்பர் - தேவர், இமையாசலம் - இமைய மலை, எல்லாம் - முற்றும், தழை - மாந்தழைகளாலமைத்த உடை, நிகர் - சமானமானது, இல்லையால் - இல்லை ஆகையால், அணியத்தகும் - (நீங்கள்) அணியத் தகுதி உடையதாகும். தகுமால் - ஆல், அசை.

98] பாங்கி, கையுறை மறுத்தல் [௯அ

மல்குற்ற தண்புனல் சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பா!
நல்குற் றவைஇந்த நாட்டுள அன்மையின், நன்னுதலாள்
அல்குல் தடத்தெமர் கண்டால் அயிர்ப்பர்; அதுவும்அன்றிப்
பல்குற் றமும்வரு மால்,யாங்கள் வாங்கேம் பசுந்தழையே.

கு - ரை: 'மலய வெற்பா! யாங்கள் பசுந்தழை வாங்கேம்,' என இயைக்க. மல்கு உற்ற - நிறைந்த, நல்குற்றவை - (நீ) கொடுக்க விரும்பிய இத்தழைகள், உள அன்மையின் - இருப்பன அல்லாமையால், நல் நுதலாள் - அழகிய நெற்றியை உடைய தலைவியின், அல்குல் தடத்து - அல்குலிடத்தில், எமர் - எம் சுற்றத்தார், அயிர்ப்பர் - சந்தேகிப்பர், வருமால் - உண்டாகும் ஆதலால்.

99] ஆற்று நெஞ்சினொடு அவன் புலத்தல் [௯௯

'உழையும்வெங் காளமும் போலும்கண் ணாள்ஒரு காலம்உள்ளம்
குழையும்எம் பால்,'என்று கொண்டநெஞ் சே!கலிக் கோடைமண்மேல்
மழையும்மந் தாரமும் வந்தன்ன வாணன்தென் மாறையில்மாந்
தழையும்நம் போல்இங்க னேகவின் வாடத் தவம்செய்ததே!

கு - ரை: [புலத்தல் - தன்புறுதல்] 'நெஞ்சே! நம் போல் இங்ஙனே கவின் வாட மாந்தழையும் தவம் செய்ததே!' என இயைக்க. உழை - மான், காளம் - விஷம், கண்ணாள் - கண்களையுடைய தலைவி, எம்பால் -

எம்மிடம், உள்ளம் குழையும் - மனம் இளகுவாள், கொண்ட - (எண்ணம்) கொண்ட, கலிக்கோடை - துன்பமாகிய வெயிலையுடைய, மண்மேல் - பூமியில், மந்தாரம் - மப்பு (cloud), வந்தன்ன - வந்தாற் போன்ற, மாறையில் - மாறை நாட்டில், கவின் - அழகு, ('யாம் என் செய்வோம்!' என்பது சொல்லெச்சம்.)

100] பாங்கி, ஆற்றுவித்து அகற்றல் [௨௰

சோலையில் வாழ்இளந் தோகைஅன் னாளைத் தொழுதிரந்திம்
மாலையில் வாழி வரங்கொள்வல் யான்தஞ்சை வாணன்வெற்பா!
வேலையில் வார்துகிர் அன்னவெய் யோன்வெயில் வெற்பின்மல்கும்
காலையில் வா;பின்னை என்கைய தாகும்நின் கையுறையே.

து - ரை: [பாங்கி, 'நாளை வா,' எனத் தலைவனைத் தேற்றி, அனுப்புதல்] 'வெற்பா! யான் இம்மாலையில் தோகை அன்னாளைத் தொழுது இரந்து வரம் கொள்வல்; வெய்யோன் வெயில் வெற்பில் மல்கும் காலையில் வா; பின்னை நின் கையுறை என் கையது ஆகும்,' என இயைக்க. தோகை - மயில் (சினையாகு பெயர்), வரம் கொள்வல் - (தழையை ஏற்றுக்கொள்ள) வரம் பெறுவேன், வேலையில் - கடலில் உள்ள, வார் துகிர் அன்ன - நீண்ட பவளம்போன்ற (நிறத்தையுடைய), வெய்யோன் வெயில் - சூரிய கிரணம், வெற்பில் - மலையில், மல்கும் காலையில் - நிறையும் காலை நேரத்தில், கையுறை - தழை (கையில் உறுவது), கையது - கையில் உள்ளது, வாழி - அசைநிலை. (தலைவன் கூற்றுயின இரந்து பின் நிற்றற்கும், பாங்கி கூற்றுயின சேட்படுத்தற்கும் உரியன.)

101] வருந்திய கிழவோன், 'மடலே பொருள்,' என மதித்தல் [௨௧

திருந்தார் தொழும்கழல் சேய்அன்ன வாணன்தென் மாறைவெற்பில்
அருந்தா அமுதன்ன அம்சொல்நல் லார்அழ கார்குழைதோய்
பொருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு
மருந்தா வதுநெஞ்ச மே!இல்லை வேறு மடல்அன்றியே.

து - ரை: [தலைவன், 'மடல் ஏறுதலே தலைவியை அடைதற்கு உரிய காரியம்,' என எண்ணுதல்] 'நெஞ்சமே! நல்லார் விழி தந்த வெங்காமப் பிணிதனக்கு மருந்து ஆவது மடல் அன்றி வேறு இல்லை,' என இயைக்க. திருந்தார் - பகைவர், கழல் - வீர கண்டை அணிந்த பாதம் (தானியாகுபெயர்), சேய் - முருகக் கடவுள், அருந்தா அமுது - (இதுகாறும் எவரும்) உட்கொள்ளாத அமுதம் (புதுமையான அமுதம் என்றபடி), அம் - அழகு, நல்லார் - தலைவியார், ஆர் - பொருந்திய, குழை தோய் - குண்டலத்தைத் தொடுகின்ற, தாரை - கண் மணியையுடைய ('இருதாரை

நெடுந்தடங்கண் '- பாரத - அருச் - தவநிலை, 38), விழி - விழியின் பார்வை (கருவியாகு பெயர்), பிணிதனக்கு - நோய்க்கு (தன், சாரியை).

102] பாங்கிக்கு உலகின்மேல் வைத்து உரைத்தல் [உஉ

விரையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளம்நிரைக்
கரையூர் பொழுதிளங் காளையர் தாம்கிழி கைப்பிடித்துத்
தரையூர் தொறும்பெண்ணை மாமடல் ஊர்வர் ; தவிர்ந்துபின்னும்
வரையூர்வர் ; தஞ்சையர் கோன்வாணன் மாறையில் வாள்நுதலே!

து - றை : ['காளையர் தாம் பெற இயலாத தலைவியரை மடல் ஏறிப் பெறுதல் உலக வழக்கு,' என்று தலைவன் தோழிக்குக் கூறுதல்] 'வாள் நுதலே! இளங்காளையர், விரை ஊர் குழலியர் தந்த சிந்தாகுல வெள்ளம் நிரைக் கரை ஊர் பொழுது தாம் கிழி கைப்பிடித்துத் தரை ஊர்தொறும் பெண்ணை மடல் மா ஊர்வர் ; தவிர்ந்து, பின்னும் வரை ஊர்வர்,' என இயைக்க. தஞ்சையர் - தஞ்சாக்கூரில் வாழ்பவர்க்கு, கோன் - அரசன், விரை - வாசனை, ஊர் - பரவுகின்ற, குழலியர் - பெண்டிர், சிந்தாகுல வெள்ளம் - மனத்துயராகிய (காதல்) பெருக்கம், நிரைக்கரை - (மன) ஒழுங்காகிய கரையின்மேல், ஊர் பொழுது - தவழும் பொழுது, கிழி - (தலைவியின் உருவம் எழுதப்பட்ட) சீலையை, தரை - உலகிலுள்ள, பெண்ணை மடல் மா - பனை மடலால் செய்த குதிரையை, ஊர்வர் - ஏறிச்செலுத்துவர், தவிர்ந்து - (அதனாலும் தம் கருத்து நிறை வேறுவிடின் அதனை) விடுத்து, வரை ஊர்வர் - (உயிரை விடக் கருதி) மலையில் ஏறி வீழ முந்துவர்.

103] அம்மடலேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றல் [உரு

வன்பணி போல்நிலம் தாங்கிய வாணன்தென் மாறைவெற்பில்
மின்பணி பூண்முலை மெல்லிய லீர்!குறை வேண்டிஉங்கள்
முன்பணி வேன்இன்று ; நாளைவெண் பூளை முகிழ்எருக்கோ
டென்பணி வேன்,மடல் மேல்வரு வேன்;இவை என்பணியே.

து- றை : [தலைவன், அந்த மடல் ஏறுதலைத் தான் செய்வதாகக் கூறுதல்] 'மெல்லியலீர்! இன்று குறைவேண்டி உங்கள்முன் பணிவேன் ; நாளை வெண்பூளை முகிழ் எருக்கோடு என்பு அணிவேன், மடல்மேல் வருவேன்; இவை என் பணி,' என இயைக்க. வன்பணி - (ஆதிசேஷனாகிய) வலிய பாம்பு, நிலம் - உலகம், மின்பணி - ஒளி பரவுகின்ற, பூண் - ஆபரணம், மெல்லியலீர் - மென்மைத் தன்மையுடையீர், பூளை முகிழ் - பூளைப்பூவின் அரும்பு, எருக்கு - எருக்கம்பூ (பொருளாகுபெயர்), என்பு - எலும்பு மாலை, அணிவேன் - அணிந்து (முற்றெச்சம்), மடல் மேல் - மடல் மாவின்மேல், பணி - வேலை.

104] பாங்கி, தலைமகள் அவயவத்து அருமை சாற்றல் [உச

**தொடையேய் எருக்கென்பு நீஅணிந் தால்என்னை? சூல்வளைஊர்
மடையேய் வயல்தஞ்சை வாணன்வெற் பா!மல ரோன்வகுத்த
படையே நயனம் படைத்தபொன் பாவை படியெடுக்க
இடையே தெனத்தெரி யாதுரை ஆணி இட அரிதே.**

கு - ரை: [தோழி, தலைவியின் அவயவத்தைத் தலைவன் எழுதற்கு இயலாமையைக் கூறுதல்] 'வெற்பா! பாவை படி எடுக்க இடை எது எனத் தெரியாது; உரை, ஆணி இட அரிது,' என இயைக்க. தொடை ஏய் - மாலையாய்ப் பொருந்திய, எருக்கு என்பு - எருக்கம்பூவை யும் எலும்பையும், என்னை - (பயன்) என்ன, சூல் வளை - கருக்கொண்ட சங்குகள், ஊர் - நகருகின்ற, மடை ஏய் - நீர் ஓடை பொருந்திய, மல ரோன் வகுத்த படையே - பிரமன் படைத்த ஆயுதத்தையே (பிரமாஸ் திரத்தையே), நயனம் - கண்ணாக, படைத்த - பெற்ற, பொன் பாவை - பொன்னாற் செய்த பாவை போன்ற தலைவியின், படி - (உருவத்தை) ஒத்த பிரதி (copy), இடை - இடுப்பு, உரை - சொல், ஆணி இட - எழுத்தாணி யால் எழுத, அரிது - இயலாது.

105] தலைவன், தன்னைத்தானே புகழ்தல் [உரு

**நறைஅல ராவிரைப் போதிசை யாதிசை நான்முகத்தும்
மறைஅல ராவந்த மால்மகன் யான்; தஞ்சை வாணன்வையைத்
துறைஅலர் ஆவிஅம் காவிஅம் கண்ணி! துணிந்துசொல்லும்
குறைஅலர் ஆர்குழ லாட்கினித் தீரக் குறையில்லையே.**

கு - ரை: [தலைவன், 'யான் எழுத வல்லேன்,' எனத் தன்னைத் தானே புகழ்தல்] 'கண்ணி! யான் மால் மகன்; துணிந்து சொல்லும் குறை, அலர் ஆர் குழலாட்கு இனித் தீரக் குறை இல்லை,' என இயைக்க. வையைத் துறை - வையை நதித்துறையிலும், ஆவி - குளத்திலும், அம் - நீரில், அலர் - மலர்கின்ற, காவி அம் கண்ணி - குவளை போலும் அழகிய கண்களை உடையவளே, நறை அலரா - குற்றம் விளங்காத (மலருக்குக் குற்ற மின்மை, வாடாமையும் மணம் நீங்காமையுமாம்), விரைப்போது - வாசனையை உடைய மலரில், இசையா - பொருந்தி, நால் திசை முகத்தும் - நான்கு திசையிலும் பொருந்திய (நான்கு) முகங்களிலும், மறை - வேதம், அலரா - விரிவாகும்படி, வந்த - தோன்றிய, மால் மகன் - திருமாலுக்கு மகனான பிரமன், (ஆதலால்) துணிந்து சொல்லும் - (நீ எழுத இயலாதென்று) துணிந்து கூறும், குறை - குறைபாடு, அலர் ஆர் - மலர்கள் பொருந்திய, இனி - இன்று, தீர - நீங்க, குறை - குற்றம். ('யான் பிரமன் எனத்

தோன்றியதால், என்னால் எழுதுதற்கு அரியது இல்லை,' என்பது கருத்து) குற்றம் விளங்காத மணத்தையுடைய மலரில் பொருந்தாமல் நான்கு திசையிலும் களவு வெளியாக வந்த ஆசை கொண்ட புருஷன் யான்,' எனச் சிலேடைப் பொருள் தோன்றியது. இப்பொருளில்:—இசையா - பொருந்தாமல், நான்முகம் - நான்கிடம், மறை - களவு, அலரா வந்த - வெளியாக வந்த, மால் - ஆசை, மகன் - புருஷன். 'துறை ஆவி அம் அலர்' என மொழி மாறுக.

106] பாங்கி, அருள் இயல் கிளத்தல் [உகூ

செயலார் குடம்பையில் செந்தலை அன்றில் சினைஉள;பைங்
கயலார் வனவெண் குருகின்வண் பார்ப்புள ; கைக்கடங்கா
மயலார் களிற்றண்ணல் வாணன்தென் மாறைவை யைத்துறைவா !
இயலா தருளுடை யார்க்கென்றும் மாமடல் ஏறுவதே.

து - ரை: [தோழி, 'மடல் ஏறத் தகாது,' எனத் தலைவனுக்கு அருளின் முறைமையைக் கூறுதல்] 'வையைத் துறைவா! குடம்பையில் அன்றில் சினை உள ; குருகின் பார்ப்பு உள ; அருள் உடையார்க்கு மடல்மா ஏறுவது என்றும் இயலாது,' என இயைக்க. கைக்கு - (பாகன்) கைகளுக்கு, மயல் ஆர் - மயக்கம் பொருந்திய, களிற்று - ஆண் யானைகளையுடைய, அண்ணல் - பெரியோனாகிய, துறைவா - துறையில் வாழ்பவனே, செயல் ஆர் - (பனையில் பறவைகளின்) செய்கையால் அமைந்த, குடம்பை - கூடு, அன்றில் - கிரவுஞ்சம் என்னும் பறவையின், சினை - முட்டைகள், பைங்கயல் ஆர்வன - கொழுமையான கெண்டை மீன்களை உண்பனவாகிய, குருகு - நாரை, வண் பார்ப்பு - வளப்பமான குஞ்சுகள், இயலாது - பொருந்தாது. ('மடல் ஏறப் பனையை வெட்டுதலால் முட்டைகளையும் குஞ்சுகளையும் அழிக்கும் பாவம் சூழ்தலின், அஃது அருள் உடையார்க்கு என்றும் பொருந்தாது,' என்க.)

107] கொண்டு நிலை கூறல் [உஎ

வெண்டோ டணிமுகப் பைங்குரும் பைக்கொங்கை வெய்யஉண்கட்
கண்டோர் விரும்பும் கரும்பனை யாரைக் கடல்துறைவா !
கொண்டோர் குறைமுடி கொம்பனை யார்நின் குறைமறுத்தால்
வண்டோ லிடும்தொங்க லான்வாணன் மாறை வளநகர்க்கே.

து - ரை: [தலைவன் உயிரைத் தாங்கிக்கொண்டு நிற்கும் நிலைமையாகிய மொழியைத் தோழி கூறுதல்] 'கடல் துறைவா! கொம்பு அனையார் நின் குறை மறுத்தால், கரும்பனையாரைக் கொண்டு ஓர் குறை முடி,' என இயைக்க. ஓலிடும் - ஆரவாரிக்கும், தொங்கலான் - மலர் மாலையை

அணிந்தவனுகிய, நகர்க்கு - நகரில் (வேற்றுமை மயக்கம்); கொம்பு அனே யார் - பூங்கொம்பைப்போலும் தலைவியார், குறை - வேண்டுகோளை, வெண் தோடு அணி முகம் - வெண்ணிறக் குருத்தைக் கொண்ட உச்சியை யும், குரும்பை - பிஞ்சிலுள்ள, கொங்கு ஐ வெய்ய உண் கள் - தேன்போன்ற அழகிய விரும்பத்தகுந்த பருகும் கள்ளையுமுடையதாகிய, கரும்பனையாரை- கரிய பனை மரத்தை (ஆர் - உயர்வுப்பன்மை விகுதி), ஓர் - ஒப்பற்ற, (தோழிக்கு ஆகும்போது :—தோடு - குழை, குரும்பைக்கொங்கை - குரும்பைபோன்ற முலே, உண் கண் - மையுண்ட கண்கள், கரும்பனையார் - கரும்பு போல விரும்பத் தகுந்தவராகிய தோழியர்) 'தலைவி குறை மறுத்தால் தோழியரைக் கொண்டும் மடல் ஏறியும் குறை முடி,' எனச் சிலேடை நயம் காண்க. 'மறுத்தால்' என்னும் குறிப்பால் 'மருள்' என்பது தோன்றினமையின், தலைவன் உயிரைத் தாங்கி நிற்றற்கு அஃது ஏதுவாயிற்றென்க. (தலைவன் கூற்றுயின மடல் கூற்றிற்கும், பாங்கி கூற்றுயின மடல் விலக்கிற்கும் உரியன.)

108] தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்கு உணர்த்தல் [உஅ

களவரும் பாகரு நீலங்கள் ; காமக் கடவுளும்மால்
கொளவரும் பாபைங் குரும்பைக் குலம்;செங் குமுதத்துவெண்
தளவரும் பா;நண்ப னே!தஞ்சை வாணன் தமிழ்வையைநாட்
டிளவரும் பாம்இவள் மாட்டென்கொ லோநின் றிரப்பதுவே?

கு - ரை : 'நண்பனே! கருநீலங்கள் களவு அரும்பா; காமக் கடவுளும் மால் கொளப் பைங்குரும்பைக்குலம் அரும்பா ; செங்குமுதத்து வெண் தளவு அரும்பா; இள அரும்பு ஆம் இவள் மாட்டு (யான்) நின்று இரப்பது என் ?' என இயைக்க. கருநீலங்கள் - கருங்குவளை மலர் போன்ற கண்கள், களவு அரும்பா - களவை வெளிப்படுத்தமாட்டா, காமக்கடவுள் - மன்மதன், மால் கொள - காதல் கொள்ளும்படி, பைங்குரும்பைக்குலம் - (மார்பில்) பசுமையான தென்னம்பிஞ்சுகள்போலும் முலைகள், அரும்பா - தோன்றமாட்டா, செங்குமுதத்து - செவ்வல்லி போன்ற வாயில், தளவு - முல்லை அரும்பு போலும் பற்கள், நாட்டு - நாட்டில், இள அரும்பு ஆம் - இளஅரும்புபோன்ற, இவள் மாட்டு - இத்தலைவியினிடத்தில், இரப்பது - (உன் குறை முடிக்க யான்) வேண்டுவது, என் - எப்படி. (நீலம், குரும்பை, குமுதம், தளவு - உவமையாகு பெயர்கள்), கொல், ஓ - அசைநிலை.

109] தலைவன், தலைவி வருத்திய வண்ணம் உரைத்தல் [உகூ

சிலைபயில் வாள் நுதல் மின்னே! பிறந்தஅச் செவ்வியிலே
கொலைபயில் நாகக் குருளையைப் போல்குறி யோன்இருந்த

மலைபயில் வார்தமிழ் வாணன்தென் மாறை மயில்அனையாள்
அலைபயில் ஆல்விழி யால்என தாவி அணங்கினளே.

கு - ரை: 'மின்னே! மயில் அனையாள் எனது ஆவி அணங்கினள்,' என இயைக்க. சிலை பயில் - வில்லைப்போல அமைந்த, வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியை உடைய, மின்னே - மின்னலைப்போன்றவளே, அச்செவ்வியிலே - அக்காலத்திலே, கொலை பயில் - கொல்லும் தொழிலிற் பழகிய, நாகக்குருளை - பாம்புக்குட்டி, குறியோன் இருந்த மலை - அகஸ்தியன் இருந்த பொதிய மலையில், பயில் - பழகிய, வார்தமிழ் - நெடுந்தமிழைக் கற்ற, அலை - கடலில் (சினை ஆகு பெயர்), ஆல் - விஷம் போன்ற (ஆலம் என்பதன் கடைக்குறை), ஆவி - உயிரை, அணங்கினள் - வருத்தினள்.

110] பாங்கி, தலைமகள் செவ்வி அருமை செப்பல் [௬௰

ஏடார் அலங்கல் இலங்கிலை வேல்வெற்ப! ஏழ்உலகும்
வாடாமல் வந்தருள் வாணன்தென் மாறையில் வல்லிஅன்னாள்
சூடாள் குவளையும் முல்லைஅம் சூட்டும்; சுனையும்பந்தும்
ஆடாள்; தனக்கென்கொ லோஅடி யேன்சென் றறிவிப்பதே?

கு - ரை: [தோழி, தலைவியைக் காணுதற்குரிய காலத்தின் அருமையைத் தலைவனுக்குக் கூறுதல்] 'வெற்ப! வல்லி அன்னாள், குவளையும் முல்லை அம் சூட்டும் சூடாள்; சுனையும் பந்தும் ஆடாள்; (அவள்)தனக்கு அடியேன் சென்று அறிவிப்பது என்?' என இயைக்க. ஏடு-மலர் (சினையாகு பெயர்), ஆர் - பொருந்திய, அலங்கல் - மாலை, இலங்கு - விளங்குகின்ற, இலைவேல் - இலைபோன்ற வேலாயுதத்தை உடைய, வெற்ப - மலை நாட்டுத் தலைவனே, வல்லி - பூங்கொடி, முல்லை அம் சூட்டு - முல்லைப்பூவால் சுட்டி போலச் செய்து நெற்றியில் தொங்கும்படி சூட்டுவது, அவள்தனக்கு - அவளுக்கு (அவள் என்னும் சுட்டு வருவிக்கப்பட்டது), கொல், ஓ - அசைநிலை.

111] தலைவன், தலைவி செவ்வி எளிமை செப்பல் [௬௧

தேன்வந்த வாய்இதழ்ச் சேயிழை யாய்!இளஞ் செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை வாணன்வெற்பில்
யான்வந்த வாசென் றியம்புதி யேல்,'அவர் யாவர்?'என்னுள்,
தான்வந் தவாவுட னேநின்னை ஆரத் தழீஇக்கொளுமே.

கு - ரை: [தலைவன், தலைவியைக் காணுதற்குரிய காலத்தின் எளிமையைப் பாங்கிக்குக் கூறுதல்] 'சேயிழையாய்! வஞ்சிக்கு யான் வந்த ஆ(று) நீ சென்று இயம்புதியேல், 'அவர் யாவர்?' என்னுள், தான் அவாவுடனே வந்து நின்னை ஆரத் தழீஇக்கொளும்,' என இயைக்க. தேன் வந்த - தேன் போன்ற சொல் வந்த, இதழ் - உதடு, சேயிழையாய் - செம்மையான

ஆபரணமணிந்தவளே, செவ்வி - அழகு, நவ்விமான் - பெண்மான் (தொல். பொருள். மரபு. சூ. 57), மான் வந்த - மான் போல வந்த, வாள் - ஒளி, வஞ்சி - உவமை ஆகு பெயர், வந்த ஆ - வந்த விதத்தை (ஆ - ஆறு என் பதன் கடைக்குறை), இயம்புதியேல் - சொல்வாயாகில், என்னுள் - என்று சொல்லாதவளாய் (முற்றெச்சம்), அவா - ஆசை, ஆர - பொருந்த, தழீஇக் கொளும் - தழுவிக்கொள்வாள்.

112] பாங்கி, 'என்னை மறைப்பின் எளிது!' என நகுதல் [ருஉ

மண்ணும் பயில்வித்தும் ஒன்றினும் சந்திர வாணன்வெற்பா!
நண்ணும் புனல்இன்றி அங்குரி யாதுங்கள் நல்வினையால்
கண்ணும் கருத்தும் கலந்தன ஆயினும், கண்ணின் நும்முள்
எண்ணும் குறைஎன்னை நீர்மறைத் தால்இங் கியல்வதன்றே.

து - ரை : [தோழி, 'நீவிர் இருவீரும் மனமொத்து என்னை மறைத்தால் இக்களவு ஒழுக்கம் உமக்கு எளிதாகும்,' எனக் கூறி நகைத்தல். 'எளிது' என்னும் குறிப்பு மொழி 'அரிது' என்னும் பொருள் தந்தது.] 'வெற்பா! மண்ணும் வித்தும் ஒன்றினும், நண்ணும் புனல் இன்றி அங்குரி யாது; உங்கள் கண்ணும் கருத்தும் கலந்தன ஆயினும், கண்ணின் நும்முள் எண்ணும் குறை, நீர் என்னை மறைத்தால் இங்கு இயல்வது அன்று,' என இயைக்க. மண் - நிலம், பயில் - நெருங்கிய, வித்து - விதை, ஒன்றினும் - ஒத்துக் கூடினாலும், நண்ணும் - பொருந்தும், புனல் - நீர், அங்குரியாது - (அந்த வித்து) முளையாது, நல்வினை - புண்ணியம், கருத்து - மனம், கண் ணின் - கருதுமிடத்து, உள் - மனத்தில், இயல்வது - முடிவது. இக்கவி எடுத்துக்காட்டு உவமையணி.

113] அந்நகை பொறாது அவன் புலம்பல் [ருங

வெவ்வேல் எறிந்த விழுப்புண்ணில் மீட்டும் வெதுப்பியதோர்
செவ்வேல் நுழைப்பவர் சிலம்அன் றேதிரு வே!மருவார்
வைவேல் அமர்வென்ற வாணன்தென் மாறை மயில்பொருட்டால்
நைவேனை 'அஞ்சல்!'என் னுதின்ன வாறு நகைக்கின்றதே!

து - ரை : 'திருவே! மாறை மயில்பொருட்டால் நைவேனை அஞ்சல்!' என்னுது (நீ) இன்ன ஆறு நகைக்கின்றது, வெவ்வேல் எறிந்த விழுப்புண்ணில் மீட்டும் வெதுப்பியது ஓர் செவ்வேல் நுழைப்பவர் சிலம் அன்றே!' என இயைக்க. திருவே - இலக்குமி போன்றவளே (உவமை ஆகு பெயர்), மருவார் - பகைவருடைய, வை வேல் அமர் - கூர்மையான வேலால் செய்யும் போரை, மாறை - மாறை நாட்டிலுள்ள, மயில் - மயில் போலும் தலைவி (உவமையாகு பெயர்), பொருட்டால் - ஆல் அசை, நைவேனை - வருந்தும் என்னை, அஞ்சல் - பயப்படாதே, இன்ன ஆறு - இப்படி, வெவ்

வேல் - கொடிய வேல், விழுப்புண் - துன்பந்தரும் புண், மீட்டும் - மறுபடியும், வெதுப்பியது - அழலில் காய்ச்சியதாகிய, செவ்வேல் - பழுக்கக் காய்ந்த வேல், சீலம் - ஒழுக்கம்.

114] பாங்கி, தலைவனைத் தேற்றல் [ருச

தன்கண் அனையதன் பாங்கிய ருள்ளும் தனக்குயிராம்
என்கண் அருள்பெரி தெம்பெரு மாட்டிக் கிகல்மலைந்தார்
வன்கண் அமர்வென்ற வாணன்தென் மாறையில் வந்தவளால்
புன்கண் அடையலை; நீஇனி வாடல் புரவலனே!

து - ரை: 'புரவலனே! எம் பெருமாட்டிக்குத் தன் கண் அனைய தன் பாங்கியருள்ளும் தனக்கு உயிர் ஆம் என்கண் அருள் பெரிது; மாறையில் வந்த அவளால் நீ புன்கண் அடையலை; இனி வாடல்,' என இயைக்க. பெருமாட்டி - தலைவி, உயிர் ஆம் - உயிர் போன்ற, என்கண் - என்னிடம், இகல் மலைந்தார் - பகையாய் எதிர்ந்தவருடைய, வன்கண் - கொடுமை உடைய, அமர் - போர், வந்த - தோன்றிய, புன்கண் - துன்பம், அடையலை - அடையாதே, வாடல் - சோர்வடையாதே (எதிர்மறை முன்னிலை ஏவல் முற்று).

115] பாங்கி, கையுறை ஏற்றல் [ருரு

ஒலிதெண் கடல்புடை சூழ்உல கேழினும் ஊழ்வினைதான்
வலிதென் பதனை வயக்கிய தால்தஞ்சை வாணன்வெற்பா!
கலிதெங்கும் மாவும் கமுகும் பலாவும் கதலிகளும்
பொலிதென் பொதியிலின் மேல்சந்த னடவிப் பூந்தழையே.

து - ரை: 'வெற்பா! சந்தனடவிப் பூந்தழை, 'ஊழ் வினை வலிது,' என்பதனை வயக்கியது,' என இயைக்க. கலி - தழைத்த, தெங்கு - தென்னை, மா - மாமரம், கமுகு - பாக்கு, கதலி-வாழை, பொலி - விளங்குகின்ற, பொதியில் - (பொது + இல் — இலக்கணப்போலி) பொதிய மலை, சந்தனடவி - (சந்தன + அடவி) சந்தனக் காட்டிலுள்ள, பூந்தழை - அழகிய தழை, ஒலி - ஆரவாரிக்கின்ற, தெண் கடல் - தெளிவான கடல், புடை - பக்கத்தில், ஊழ் வினை - பழவினை, வயக்கியது - விளக்கியது. ஆல் - அசை. ஊழ் வினைதான் - தான், அசை.

116] கிழவோன் ஆற்றல் [ருசு

மைப்போ தணிதொங்கல் வாணன்ஒன் னார்என வல்வினையேற்
கப்போ தடைந்த அருந்துயர் நீங்கி அரும்பியபொன்
செப்போ திளமுலை யாள்நகை வாள்முகத் திங்களைக்கண்
டிப்போ திளகிய தால்,இந்து காந்தங்கொல் என்நெஞ்சமே.

து - ரை : [தலைவன், துயர் மாறிக் கூறுதல்] 'என் நெஞ்சம், அப்போது அடைந்த அருந்துயர் நீங்கி, இளமுலையாள் வாள் முகத் திங்களைக் கண்டு இப்போது இளகியதால், இந்து காந்தம்,' என இயைக்க. மைப்போது - குவளை மலர், தொங்கல் - மாலை, ஒன்னார் என - பகைவரைப் போல, வல் வினையேற்கு - தீவினையை உடைய எனக்கு, அப்போது - முன்பு, அரும்பிய - தோன்றிய, பொன் செப்பு - பொன் கலசம், ஒது - (உவமை) கூறத்தக்க, நகை - மகிழ்ச்சி, வாள் - ஒளி, முகத்திங்கள் - முக மாகிய சந்திரன் (உருவகம்), இளகியதால் - இளகியது ஆதலால், இந்து காந்தம் - சந்திரகாந்தக் கல். கொல் - அசை. (பாங்கி கூற்றெல்லாம் துறை நேர்தற்கும், தலைவன் கூற்றெல்லாம் மடல் கூற்று ஒழிதற்கும் உரியவை.)

117] பாங்கி, இறைவிக்கு அவன் குறை உணர்த்தல் [௱௭

'இருவர்கண் டால்வரும் ஏதம்,'என் றெண்ணி எனக்கெதிரே
வருவர்;வந் தாலும்தம் வாய்திற வார்;தஞ்சை வாணன்வெற்பில்
ஒருவர்நம் சாரல் உழைஅக லார்;தழை உள்ளதெல்லாம்
தருவர்;வம் பார்முலை யாய்!என்கொ லோசெயத் தக்கதுவே?

து - ரை : [தோழி, தலைவிக்குத் தலைவன் குறையைக் கூறுதல்] 'வம்பு ஆர் முலையாய்! தஞ்சை வாணன் வெற்பில் ஒருவர், 'இருவர் கண் டால் ஏதம் வரும்,' என்று எண்ணி, எனக்கு எதிரே வருவர்; வந்தாலும் வாய் திறவார்; நம் சாரல் உழை அகலார்; உள்ளது தழை எல்லாம் தருவர்; செயத்தக்கது என்?' என இயைக்க. வம்பு - கச்சு, ஏதம் - குற்றம், உழை - பக்கம், என் - என்ன, கொல், ஓ - அசை.

118] இறைவி, அறியாள் போன்று குறியாள் கூறல் [௱௮

கலைதொடக் கீண்ட கருவிஅம் தேன்பல கால்கொடுமா
மலைதொடுத் தூர்ந்து வருகின்ற தால்தஞ்சை வாணன்வென்றிச்
சிலைதொடுத் தாங்கெழில் சேர்நுத லாய்!பயில் செம்பழுக்காய்க்
குலைதொடுத் தோங்குபைங் கேழ்ப்பூக நாகக் குழாம்கவர்ந்தே.

து - ரை : [தலைவி, தனது நாணத்தால் தலைமகனை அறியாதவள் போன்று, தோழி கூறியதை மனத்திற்கொள்ளாதவளாய், வேறு ஒரு செய்தியைக் கூறுதல்] 'நுதலாய்! தேன், பல கால் கொடு, மா மலை தொடுத்து ஊர்ந்து, பூக நாகக்குழாம் கவர்ந்து வருகின்றது,' என இயைக்க. வென்றிச் சிலை - வெற்றி வில், தொடுத்தாங்கு - நாண் எற்றினாற்போல, எழில் - அழகு, நுதலாய் - நெற்றியை உடையவளே, கலை தொட - ஆண் கருங்குரங்கு தன் கையினால் பிடித்ததால், கீண்ட - கிழிந்த, கருவி - தொகுதி (தொல். சொல். சூ. 354. உரை), கால் - வழி, கொடு - (செய்து)

கொண்டு (ணகரமெய்தொகுத்தல்), மா - பெரிய, தொடுத்து - தொடங்கி, ஊர்ந்து - பரவி, பயில் - பொருந்திய, செம்பழுக்காய் - சிவப்பான பழுத்த பாக்கு, தொடுத்து - அடர்ந்து, ஓங்கு - உயர்ந்த, பைங்கேழ் - பசுமையான நிறத்தையுடைய, பூகம் - பாக்கு மரம், நாகம் - புன்னை மரம், குழாம் - கூட்டம், கவர்ந்து - (தன்னுடன்) கொண்டு. வருகின்றதால் - ஆல், அசை. ('மலையினின்று இழியும் இத்தேனருவியைப் பார்,' எனத் தலைவி தோழிக்குக் கூறினள் என்க.)

119] பாங்கி, இறையோற்கண்டமை பகர்தல் [ருக

திவாகர னேஅன்ன பேரொளி வாணன்தென் மாறைநன்னாட்
டுவாமதி போலும் ஒளிர்முகத் தாய்!என் ஒளிப்பதுன்மேல்
அவாவினன் ஆகிஓர் மானை வினவிவந் தானைஇன் றிக்
கவான்உயர் சோலையின் வாய்வண்ட லாடுழைக் கண்டனமே.

து - ரை: [தோழி, தலைவியின் பொருட்டு வந்த தலைவனைத் தான் கண்டமையைக் கூறல்] 'உவாமதி போலும் ஒளிர் முகத்தாய்! ஒளிப்பது என்? இன்று இக்கவான் உயர் சோலையின்வாய் வண்டல் ஆடு உழை உன்மேல் அவாவினன் ஆகி ஓர் மானை வினவி வந்தானைக் கண்டனம்,' என இயைக்க. திவாகரன் - சூரியன், ஒளி - புகழ், உவாமதி - பூரணச்சந்திரன், ஒளிர் - விளங்குகின்ற, முகத்தாய் - முகத்தை உடையவளே, என் - என்ன காரணம், கவான் - மலைப்பக்கத்தில், சோலையின் வாய் - சோலையினுள், வண்டல் ஆடு உழை - (நாம்) விளையாட்டு அயரும் இடத்தில், அவாவினன் - ஆசை கொண்டவன், கண்டனம் - (யாம்) பார்த்தோம்.

120] பாங்கியைத் தலைவி மறுத்தல் [சடு

செவ்வண்ண வேல்விழி யாய்!தஞ்சை வாணன்தென் மாறைநன்னாட்
டிவ்வண்ணம் நீசொல்வ தேற்பதன் றூல்நின் இடையெனத்தாம்
மெய்வண்ணம் வாடி வெறிதே வருந்தி விருந்தினராய்க்
கைவண்ண வார்தழை கொண்டுசென் றூர்தமைக் கண்டுகண்டே.

து - ரை: 'வேல் விழியாய்! மாறை நல் நாட்டு வாடி வருந்தி விருந்தினராய்த் தழை கொண்டு சென்றூர்தமைக் கண்டுகண்டு நீ இவ்வண்ணம் சொல்வது ஏற்பது அன்று,' என இயைக்க. செவ்வண்ண வேல் - (பகைவர் உடலின் இரத்தம் தோய்ந்ததால்) செந்நிறமான வேல் போன்ற நாட்டு - நாட்டில், நின் இடையென - உன் இடுப்பைப்போல, மெய், வண்ணம் - உடல் அழகு, வெறிதே - வீணில், விருந்தினர் - புதியவர், கை - கையிலே, வண்ண வார் தழை - அழகிய நீண்ட தழையை, சென்றூர்

தமை - சென்றவரை (தம் - சாரியை), கண்டு கண்டு-பல முறை பார்த்து, இவ்வண்ணம் - இவ்விதம், ஏற்பது - ஒப்புக்கொள்ளத்தக்கது. அன்றல் - ஆல், அசை.

121] பாங்கி, 'என்வண மறைப்பது என்?' எனத் தழாஅல் [சக

பரக்கின்ற செவ்விதழ்ப் பங்கயப் பாதம் பணிந்துநின்னை
இரக்கின்ற தொன்றையும் எண்ணலை யால்;எழு பார்முழுதும்
புரக்கின்ற கோன்தஞ்சை வாணன் பொதியிலில் பொய்த்தென்னைநீ
கரக்கின்ற தென்னைகொல் என்உயிர் ஆகிய காரிகையே!

து - ரை: [தழாஅல் - தழுவிக் கூறுதல்] 'பொதியிலில் என் உயிராகிய காரிகையே! பாதம் பணிந்து நின்னை இரக்கின்றது ஒன்றையும் எண்ணலை; நீ பொய்த்து என்னைக் கரக்கின்றது என்னை?' என இயைக்க. பார் - பூமி, புரக்கின்ற - காக்கின்ற, பரக்கின்ற - பரவுகின்ற, எண்ணலையால் - நினைத்திலை (ஆல் - அசை), பொய்த்து - உண்மையை விட்டு, கரக்கின்றது - மறைப்பது, என்னைகொல் - என்னோ! கொல் - ஐயம்.

122] பாங்கி, கையுறை புகழ்தல் [சஉ

சூடத் தகுவன அல்லவெல் லாம்படி சொல்லினும்தாம்
வாடத் தகுவன அல்ல;நல் லாய்!தஞ்சை வாணன்வெற்பர்
தேடத் தகுவன அல்லதல் லாத சிலம்பின்உள்ளார்
நாடத் தகுவன அல்லகல் ஆர நறுந்தழையே.

து - ரை: 'நல்லாய்! படி எல்லாம் சொல்லினும் கல் ஆர நறுந்தழை சூடத் தகுவன அல்லது, தாம் வாடத் தகுவன அல்ல; தஞ்சை வாணன் வெற்பர் தேடத் தகுவன அல்லது, அல்லாத சிலம்பின் உள்ளார் நாடத் தகுவன அல்ல,' என இயைக்க. படி - உலகிலுள்ளோர் (இடவாகு பெயர்), சொல்லினும் - (சூடத்தகாது என்று) கூறினாலும், கல் ஆர நறுந்தழை - மலையில் தோன்றிய இச்சந்தன நறுந்தழை, அல்லது - அல்லாமல், அல்லாத சிலம்பின் உள்ளார் - (தஞ்சை வாணன் மலை) அல்லாத (வேறு) மலையில் உள்ளவர்கள், நாட - கருத. (பாங்கி கூற்றாயின **துறை நயப்பித்தற்கும்**, தலைவி கூற்றாயின **மறுத்தற்கும்** உரியன.)

123] தோழி, கிழவோன் துயர் நிலை கிளத்தல் [சஙு

வனையும் குழல்வஞ்சி! வாணன்தென் மாறை வரைக்களிறு
தினையும் தழையும் பிடியொடு மேய்ந்து தெளிந்தஇன்னீர்
சுனையுண் டசோக நிழல்சோகம் நீங்கித் துயில்வதுகண்
டெனையும் கடைக்கணி யா,இனை யாநிற்பர் ஏதிலரே.

து - ரை: [தோழி, தலைவன் வேட்கையால் கொண்ட துயர் நிலையைத் தலைவிக்குக் கூறுதல்] 'வஞ்சி! எதிலர், மாறை வரைக்களிறு பிடியொடு தினையும் தழையும் மேய்ந்து, சுனைத்தெளிந்த இன்னீர் உண்டு, சோகம் நீங்கி, அசோக நிழல் துயில்வது கண்டு, எனையும் கடைக்கணியா இனையாநிற்பர்,' என இயைக்க. வனையும் - அலங்கரிக்கும், வஞ்சி - அண்மை விளி, எதிலர் - (நம் புனத்தில் வந்த) அயலார், பிடி - பெண் யானை, சுனை - சுனையில், இன்னீர் - இனிய நீர், உண்டு - பருகி, அசோகம் - அசோக மரம், கடைக்கணியா - கடைக்கண்ணால் நோக்கி, இனையாநிற்பர் - வருந்துவர். ('நீ இதனை அறிந்திலை,' எனக்குறிப்பால் அறிவித்தாள் என்க.)

124] தோழி, தலைவனை மறுத்தற்கு அருமை மாட்டல் [சச

கையும் தழையும்முன் காண்டொறும் காண்டொறும் கட்டுரைத்த
பொய்யும் தொலைந்தன; பூந்தழை போல்அரி போர்த்து நஞ்சும்
மையும் கலந்துண்:_ வாள்விழி யாய்!தஞ்சை வாணன்வெற்பர்
மெய்யும் துவண்டதென் னல்முடி யாது வெளிநிற்கவே.

து - ரை: [தோழி, தலைவனை மறுத்தற்கு இயலாமையைப் பொருத்திக் கூறுதல்] 'விழியாய்! பூந்தழை போல் கையும் தழையும் முன் காண்தொறும் காண்தொறும் கட்டுரைத்த பொய்யும் தொலைந்தன; வெற்பர் மெய்யும் துவண்டது; வெளி நிற்க என்னல் முடியாது,' என இயைக்க. அரி போர்த்து - செவ்வரி படர்ந்து, நஞ்சு - விஷம், வாள் - வாளைப் போன்ற, பூந்தழைபோல் - (முன்பு தலைவர் பல முறை நமக்காகக் கொண்டு வந்து பயன்படாமல் வாடினமையால் எறிந்து சென்ற அந்த) அழகிய தழைகளைப்போல, கையும் - (அவர்) கையும், முன் - (என்) எதிரில், கட்டுரைத்த - (யான்) உறுதிச்சொல்லாக உரைத்த, பொய் - பொய்யுரைகள், மெய் - உடல், துவண்டது - (அலைந்தலைந்து) சோர்வடைந்தது, வெளி நிற்க - (ஆதலால், இனி அவர் வரின் மறையாமல்) வெளியாய் நிற்க.

125] தலைவன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல் [சரு

விடையான் மிசைவரும் மேருவில் லானெடும் மேழிவென்றிப்
படையா னெடும்வெம் பகைகொள்வ தோ!பகல் போலும்மெய்ம்மை
உடையான் உயர்தஞ்சை வாணன்ஒன் னார்என ஒல்கியநுண்
இடையாய்! பிறிதுகொல் லோ!அறி யேன்வெற்பர் எண்ணுவதே.

து - ரை: [தோழி, தலைவன் குறிப்பு வேறுதலை ஒழுங்குபடக் கூறுதல்] 'நுண் இடையாய்! வெற்பர் எண்ணுவது, பகை கொள்வதோ! பிறிதுகொல்! அறியேன்,' என இயைக்க. பகல் - சூரியன், மெய்ம்மை - உண்மையுடைய, ஒன்னார் என - பகைவரைப்போல, ஒல்கிய - துவண்ட,

விடை ஆன்மிசை - விடையாகிய எருதின்மேல், மேரு வில்லான் - சிவன், மேழி - கலப்பை, வென்றிப்படை - வெற்றியைத் தரும் ஆயுதம், உடையான் - உடையவனுகிய பிறிதுகொல் - வேறோ (அறியேன்). கொல் - ஐயம். ஓ - அசை. (சிவனோடு பகை கொள்வது என்றது, தலைவன் மடலேறுதற்குச் சிவனைப்போல என்பு மாலையும் எருக்க மாலையும் அணிதலையும்; பல தேவனோடு பகை கொள்வது என்றது, அவன் கொடியில் எழுதப்பட்ட உருவத்திற்குரியதாகிய பனையை வெட்டுதலையும் குறித்தன. 'பிறிது' என்றது, வரை பாய்தலைக் குறித்தது.)

126] தோழி, தலைவியை முனிதல் [சகூ

தூற்று தலரை மறைப்பவர்க் கேகுறை சொல்லு;குற்றம்
எற்று தொழிஎனை; எம்பெரு மாட்டி!சென் றேற்றவர்க்கு
மாற்று தருள்செங்கை வாணன்தென் மாறையில் வந்துநெஞ்சம்
போற்று து நின்றய லேன்சொன்ன தீங்கு பொறுத்தருளே.

த - ரை: [முனிதல் - கோபித்தல்] 'எம் பெருமாட்டி! தூற்றுது அலரை மறைப்பவர்க்கே குறை சொல்லு; எனைக் குற்றம் எற்றுது ஒழி; மாறையில் வந்து நெஞ்சம் போற்றுது நின்று அயலேன் சொன்ன தீங்கு பொறுத்தருள்,' என இயைக்க. தூற்றுது - பரவச் செய்யாமல், அலர் - பழிச்சொல், மறைப்பவர்க்கே - மறைப்பவராகிய உனக்கு உண்மையான வருக்கே, குறை - மனக்குறை, ஒழி - விடு, எற்றவர் - யாசித்தவர், மாற்றுது - இல்லையென்னமல், அருள் - உதவுகின்ற, வந்து - (உன்னிடம்) வந்து, நெஞ்சம் - மனக்கருத்தை (இடவாகு பெயர்), போற்றுது - மறைக்காமல், அயலேன் - அயலாளாகிய யான், தீங்கு - குற்றம்.

127] தலைவி, பாங்கியை முனிதல் [சஎ

மற்றே தவர்வினை வார்தஞ்சை வாணன் வரையில்முந்நாள்
பொற்றேரின் வந்து புணர்ந்துசென் றூர்?'தம் பொருட்டு நம்மைக்
குற்றேவல் மங்கை குறையிரந் தாள்,'எனும் குற்றம்இந்நாள்
எற்றே தவறுநம் பால்இல்லை யாகவும் எய்தியதே?

த - ரை: [பாங்கியை முனிந்து தலைவி தன்னுள் கூறுதல்] 'முந்நாள் பொன் தேரின் வந்து புணர்ந்து சென்றூர் அவர், மற்று எது வினை வார்? (அவர்) தம் பொருட்டு நம்மைக் குற்றேவல் மங்கை குறையிரந்தாள் எனும் குற்றம் இந்நாள் நம்பால் இல்லையாகவும் தவறு எய்தியது எற்று?' என இயைக்க. முந்நாள் - மூன்று நாள், சென்றூர் - சென்றவராகிய, எது - என்ன, குற்றேவல் மங்கை - தோழி, குறையிரந்தாள் - குறை முடிக்க வேண்டினள், நம்பால் - நம்மிடம், எற்று - எப்படிப்பட்டது, மற்று -

அசை. முந்நாள் என்றது இயற்கைப் புணர்ச்சி, இடம் தலைப்பாடு, பாங்கற் கூட்டம் நிகழ்ந்த நாட்களை.

128] தலைவி, கையுறை ஏற்றல் [சஅ

**ஆ**ற்றும் தலைவர் அருந்துயர் ஆற்றினும், ஆற்றலன்; நாண்
மாற்றும் புனையின்; மயில்அனை யாய்! தஞ்சை வாணன்தெவ்வின்
போற்றும் கொடுவினை யேன்புனை யாவிடின், போந்தலரே
தூற்றும்; தழைஎன்றி தொன்றெங்ங னேவந்து தோன்றியதே!

து - ரை: 'மயில் அனையாய்! தஞ்சை வாணன் தெவ்வின் போற்றும் கொடு வினையேன் புனையின் நாண் மாற்றும்; புனையாவிடின், போந்து அலரே தூற்றும்; தழை என்று இது ஒன்று எங்ஙனே வந்து தோன்றியது! ஆற்றும் தலைவர் அருந்துயர் ஆற்றினும் (யான்) ஆற்றலன்,' என இயைக்க. தெவ்வின் - பகையைப்போல, போற்றும் - மிகுத்துச் சொல்லும், புனையின் - அணிந்தால், நாண் - நாணத்தை, போந்து - (எங்கும்) பரவி, அலரே தூற்றும் - பழிச்சொல்லையே பரப்பும், எங்ஙனே - எவ்விடத்திலிருந்து, ஆற்றும் - (முன்பு புண்ணியம்) செய்த, அருந்துயர் - அரிய வேட்கையாகிய துன்பத்தை, ஆற்றலன் - (யான்) சகியேன். (பாங்கி கூற்றாயின **துறை நயப்பித்தற்கும்**, தலைவி கூற்றாயின **துறை நேர்தற்கும்** உரியன.)

129] இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்கு உணர்த்தல் [சகூ

போயான் அளித்தலும் கைகுவித் தேற்றபின் போற்றிஅன்பால்
சாயாத கொங்கையின் மேல்அணைத் தாள்தஞ்சை வாணன்வெற்பா!
காயா மலர்அன்ன மேனிமெய் யாகநின் கையுறையே
நீயாக அல்லது மாந்தழை யாக நினைந்திலளே.

து - ரை: 'தஞ்சை வாணன் வெற்பா! காயா மலர் அன்ன மேனி, யான் போய் நின் கையுறை அளித்தலும், கைகுவித்து ஏற்ற பின் அன்பால் போற்றிச் சாயாத கொங்கையின்மேல் அணைத்தாள்; (நின் கையுறை) மெய்யாக நீயாக அல்லது மாந்தழையாக நினைந்திலள்,' என இயைக்க. கையுறை - தழை, அளித்தலும் - கொடுத்த உடனே, காயா மலர் அன்ன மேனி-காயாம்பூவையொத்த நிறத்தையுடையவளாகிய தலைவி (பன்மொழித் தொடர்ப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), கைகுவித்து - வணங்கி, ஏற்ற பின் - வாங்கிய பிறகு, போற்றி - (அத்தழையைப்) புகழ்ந்து, சாயாத-தளர்ச்சியடையாத, மெய்யாக - உண்மையாக, நீயாக அல்லது - (அத்தழையை) நீயாகவே (நினைத்தாளே) அல்லாமல். கையுறை என்பதை இரண்டிடத்தும் கூட்டுக. ('தழையை நீயாகவே கருதி அணைத்தனள்,' என்பது கருத்து.)

**130]** பாங்கி, தலைமகற்குக் குறியிடம் கூறல் [ருய

அணிமா மலர்மயி லைப்புயத் தூணம்கொள் ஆகம்என் னும்
மணிமா ளிகைவைத்த வாணன்வண் காவலன் மாறைவெற்பா!
துணிமா மரகதப் பாசறை வேலைச் சுடரவன்போல்
பணிமா மணிதிக ழும்பகல் யாங்கள் பயிலிடமே.

து - ரை: [குறியிடம் - பகலில் கூடும் இடத்தின் அடையாளம்] 'மாறை வெற்பா! பகல் யாங்கள் பயில் இடம், வேலைச் சுடரவன்போல் பணி மா மணி திகழும் மாமரகதத் துணிப் பாசறை,' என இயைக்க. அணி மா மலர் மயிலை - அழகிய சிறந்த தாமரை மலரிலுள்ள மயில் போலும் இலக்குமியை, புயத்தூணம் - தோள்களாகிய தூண் (உருவகம்), ஆகம் - மார்பு, மணி மாளிகை - அழகிய மாளிகையில், வண் காவலன் - கொடைக் குணம் பொருந்திய காப்பாளன், பயில் - விளையாடும், வேலை - கடலில் தோன்றும், சுடரவன் - சூரியன், பணி மா மணி - நாகரத்தினம், திகழும் - ஒளி வீசும், மா மரகதத் துணிப் பாசறை - சிறந்த மரகதத் துண்டங்கள் போன்ற பசுமையான (குருக்கத்தி) இலை அடர்ந்த பந்தர். வாணனை 'மலர் மயிலை மார்பில் வைத்தவன்' எனத் திருமாலாகக் கூறியது அரசரைத் தேவரோடு ஒப்பக் கூறும் பூவை நிலை என்னும் புறத்துறை பற்றி என்க.

**131]** பாங்கி, குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல் [ருக

நாவாவி மூழ்கி, நறுமலர் குற்று,நந் தாவனத்துத்
தேமா இளந்தளிர் செவ்வண்ணம் கொய்து, சிலம்பெதிர்கூய்,
வாமான் நெடுங்கண் மடந்தைநல் லாய்!தஞ்சை வாணன்வெற்பில்
பூமா தவிப்பந்தர் வாய்விளை யாடுதும் ; போதுகவே.

து - ரை: [சேறல - செல்லுதல்] 'நல்லாய்! நாம் தஞ்சை வாணன் வெற்பில், மூழ்கி, குற்று, கொய்து, கூய், விளையாடுதும்; போதுக,' என இயைக்க. வாம்-தாவும் ('வாவும்' என்பதில் உள்ள உயிர்மெய் கெட்டது), ஆவி - குளத்தில், குற்று - கொய்து, நந்தாவனம் - பூந்தோட்டம், தேமா - தேமா மரத்தின், தளிர் - கொழுந்து, செவ்வண்ணம் - செவ்வையாக (தொல். பொ. 242, உரை), சிலம்பு - மலை, கூய் - கூவி, பூமாதவிப் பந்தர் - மலரோடு கூடிய குருக்கத்திப் பந்தலில், விளையாடுதும் - விளையாடுவோம், போதுக - (என்னுடன்) செல்வாயாக.

**132]** பாங்கி, தலைமகளைக் குறியிடத்து உய்த்து நீங்கல் [ருஉ

கண்சாயல் கைஉருக் கொண்டுதன் வேல்மயில் காந்தள்வள்ளி
எண்சாய வென்றனை என்றுசெவ் வேள்,இவ ரும்பவளம்
வண்சாய் ஒசிக்கும் வயல்தஞ்சை வாணன் மலயமராத்
தண்சாயை நின்றணங் கும்;தையல்! நீநிற்க சாரலிலே.

து - ரை : [உய்த்து - செலுத்தி] 'தையல்! செவ்வேள், கண்சாயல் கை உருக்கொண்டு தன் வேல் மயில் காந்தள் வள்ளி எண் சாய வென்றனை என்று மலயம் மராத் தண் சாயை நின்று அணங்கும்; (ஆதலால்) நீ சாரலில் நிற்க,' என இயைக்க. தையல் - கட்டழகி (பண்பாகு பெயர்; அண்மை விளி), செவ்வேள் - முருகன், [கண்...என்று - (நீ உன்) கண்ணால் தன் வேலையும், சாயலால் மயிலையும், கையால் காந்தளையும், உருவால் வள்ளியம்மையையும் (தனது) மனம் சோர்வடைய வென்றாய் என்று (கோபித்து)], இவரும் - எறிப்படரும், வண் சாய் - வளப்பம் பொருந்திய கோரைப்புல்லை, ஒசிக்கும் - அசைக்கின்ற, மலயம் - பொதிய மலையில், மரா - ஆச்சாமரத்தின், தண் சாயை-குளிர்ச்சியான நிழலில், அணங்கும் - (உன்னை) வருத்துவான், நிற்க - (நீ என்னுடன் அங்கு வராமல்) நிற்பாயாக. பாங்கி இங்ஙனம் கூறித் தலைவியை விட்டு அகன்றாள் என்க. கொண்டு - மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. முதலடியில் நிரல் நிறைப் பொருள்கோள் வந்தமை காண்க.

133] இறைவியை இறையோன் இடத்து எதிர்ப்படுதல் [ருரு

முயங்கிய நூபுரப் பங்கயத் தாளும், முலைசுமந்து
தயங்கிய நூல்இடை தானும்என் போலத் தளர்வுறஇங்
கியங்கிய வாறென் மனத்திருள் நீக்கஎன் றேதுணிந்தோ ?
வயங்கிய சீருடை யான்வாணன் மாறை மணிவிளக்கே !

து - ரை : [இறையோன் - தலைவன்] 'மாறை மணி விளக்கே! இங்கு இயங்கிய ஆறு என் மனத்து இருள் நீக்க என்று துணிந்தோ?' என இயைக்க. வயங்கிய சீர் - விளங்கிய புகழ், மணி - மாணிக்கம், விளக்கே - தீபம் போன்றவளே (இருமடி ஆகு பெயர்), முயங்கிய - பொருந்திய, நூபுரம் - சிலம்பு, பங்கயம் - தாமரை மலர், தயங்கிய - தள்ளாடிய, நூல் இடைதானும் - நூல் போன்ற இடையும் (தான் - அசை), இங்கு இயங்கிய ஆறு - (நீ) இங்குச் சஞ்சரித்தவிதம், இருள் - துன்பம் (உவமையாகு பெயர்), என்றே - ஏ, அசை.

134] புணர்ச்சியின் மகிழ்தல் [ருச

தருந்தாரு அஞ்சும் கொடையுடை யான்தஞ்சை வாணன்இன்சொல்,
செருந்தார், பசுந்தமிழ்த் தென்வரை மேல்செம்பொன் மேருவெற்பால்,
கருந்தாரை நஞ்சுமிழ் வாசுகி யால்வெண் கடல்கடைந்து
வருந்தா அமுதளித் தாள்;வல்ல ளாம்இம் மடக்கொடியே.

து - ரை : [தலைவன், புணர்ச்சியினால் மகிழ்ந்து கூறுதல்] 'இம்மடக் கொடி வருந்தா அமுது அளித்தாள்; வல்லள் ஆம்,' என இயைக்க.

மடக்கொடி - இளங்கொடி போல்வாள், தரும் தாரு - கற்பக விருட்சம், அஞ்சும் - பயப்படுதற்குக் காரணமாகிய, கொடை - தருமம், இன் சொல் - இனிய புகழையும், செருந்து ஆர் - செருந்தி மரங்கள் பொருந்திய சோலையையும் (தானியாகு பெயர்), பசுந்தமிழ் - பைந்தமிழையுமுடைய, தென் வரை - பொதிய மலை, வெற்பால் - மலையாலும், கருந்தாரை - கரிய நாவினால் ('மன்னுநாச் சிகுவை தாரை மற்றைத்தா லுவுநாக் காகும்' - சூடா. நி. தொகுதி, 2. செய். 94), நஞ்சு - விஷம், உமிழ் - துப்புகின்ற, வாசுகியால் - வாசுகி என்னும் பாம்பாலும், வெண்கடல் - பாற்கடலை, வருந்தா - வருந்தாத, வல்லள் ஆம் - வல்லவள் ஆவள். 'அமுதம்' என்றது இங்குப் புணர்ச்சியாலளித்த இன்பத்தை என்க.

**135]** புகழ்தல் [ருரு

மயனார் விதித்தன்ன மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
பயனார் பயோதரப் பாவைஅன் னீர்!பசும் பொற்குழைதோய்
நயனா விந்தத்து நஞ்சு,நம் வாய்இதழ் நல்லமுதம்
அயனார் படைத்தில ரேல்,அடங் காதவ் வரனுக்குமே.

து - ரை: [தலைவன், தலைவியைப் புகழ்தல்] 'பாவை அன்னீர்! (நம்) நயனாவிந்தத்து நஞ்சு, அயனார் நம் வாய் இதழ் நல் அமுதம் படைத்திலரேல், அவ்வரனுக்கும் அடங்காது,' என இயைக்க. மயனார் - 'மயன்' என்னும் பெயரிய தெய்வத் தச்சர், விதித்தன்ன - அமைத்ததுபோன்ற, பயன் ஆர் - இன்பப் பொருள் பொருந்திய, பயோதரம் - முலை, பாவை - சித்திரப் பாவை, குழை தோய் - குண்டலத்தைத் தொடுகின்ற, நயனாவிந்தம் - (நயன + அரவிந்தம்) கண்ணாகிய தாமரை, நஞ்சு - விஷமானது, அயனார் - பிரம தேவர், இதழ் - உதட்டில், படைத்திலரேல் - உண்டாக்கிலரார் ஆயின், அ அரன் - (முன்பு கடலில் பிறந்த நஞ்சை அடக்கிய) அந்தச் சிவபெருமான். தலைவன், தலைவியின் இதழ் அமுதுண்டு, அவள் கண் அளித்த விடம் தணிந்தனனாதலின், இங்ஙனம் கூறினன் என்க.

**136]** தலைமகளைத் தலைமகன் விடுத்தல் [ருசு

நேயம் புகலிடம் இன்றிநின் பால்வந்து நின்றதுபோல்
ஆயம் புகல அடைந்தருள் நீ;அடை யாதமன்னர்
வாயம் புகவில் வணக்கிய வாணன்தென் மாறைநன்னீர்த்
தோயம் புகர்இணை வேல்விழி யாய்!நின் துணையுடனே.

து - ரை: [தலைவன், தலைவியைத் தோழியர் கூட்டத்திற்செல்ல விடுத்தல்] 'வேல் விழியாய்! நீ நின் துணையுடன் ஆயம் புகல அடைந்தருள்,' என இயைக்க. அடையாத மன்னர்வாய் - பகை அரசரிடத்

தில், அம்பு உக - அம்புகள் உதிர, வணக்கிய - வளைத்த, மாறை - மாறையிலுள்ள, நல் நீர்த்தோய் - நல்ல நீரிலே தோய்த்துப் பதஞ்செய்த, அம் - அழகிய, புகர் இணை வேல் - புகர் நிறமுடைய இரு வேல் போன்ற, துணை - தோழி, நேயம் - அன்பானது, புகலிடம் இன்றி - (தனக்கு வேறு) போக்கிடம் இல்லாமல், போல் - போல்கின்ற, ஆயம் - (நின்) தோழியர் கூட்டம், புகல - மகிழ, அடைந்தருள் - (அவர்களைச்) சேர்ந்தருள்வாயாக.

137] பாங்கி, தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல் [ருஎ

பொய்போல் இடைநின் விழிபோல் குவளைஅம் போதிவை;நின்
மெய்போல் அசோகம் மிளிர்பூந் தழைஇவை; மெல்லியல்நின்
கைபோல் கவின்கொள்செங் காந்தள்அம் போதிவை; கண்டருள்;யான்
மைபோல் குழலி!தந் தேன்தஞ்சை வாணன் வரையினின்றே.

து - ரை: [கையுறை - தான் பறித்து வந்த பூ முதலியவை] 'குழலி! யான் வரையினின்று தந்தேன்; கண்டருள்,' என இயைக்க. மை - மேகம், குழலி - கூந்தலையுடையவளே (அண்மை விளி), இடை - இடுப்பை உடைய, நின் - உனது, போது - மலர், மெய் - உடல், மிளிர் அசோகப் பூந்தழை - ஒளி வீசுகின்ற அசோகமரத்தின் அழகிய தழை, மெல் இயல் - மென்மைத் தன்மையை உடைய, கவின் - அழகு, வரையினின்று - மலையிலிருந்து, தந்தேன் - கொண்டு வந்தேன் ('இன்று தந்தனை தேர்' - குறுந். செய். 400), கண்டருள் - பார்த்தருள்வாயாக. அம் - சாரியை. விழி போல் குவளை, மெய் போல் தழை, கை போல் காந்தள் - விபரீத உவமை.

138] பாங்கி, தலைவியைப் பாங்கில் கூட்டல் [ருஅ

குனிநாள் மதிநுதல் கோகில மே!நின் குழலில்எல்லாப்
பனிநாள் மலரும் பறித்தணிந் தேன்;இந்தப் பார்மடந்தை
தனிநா யகன்தஞ்சை வாணன்தண் சாரல் தனித்துநில்லா
தினிநாம் அகன்றிளை யார்விளை யாடிடம் எய்துதுமே.

து - ரை: [பாங்கில் - பாங்கியர் கூட்டத்தில்] 'கோகிலமே! அணிந்தேன்; இனி நாம் சாரல் தனித்து நில்லாது அகன்று, இளையார் விளையாடு இடம் எய்துதும்,' என இயைக்க. குனி நாள் மதி - வளைந்த பிறைச்சந்திரனைப் போன்ற, நுதல் - நெற்றி, கோகிலமே - (குரலில்) குயிலைப்போன்றவளே, பனி நாள் மலர் - குளிர்ச்சி பொருந்திய புதிய மலர், பார் மடந்தை - பூமிதேவி, தனி நாயகன் - ஒப்பற்ற கணவன், தண் சாரல் - குளிர்ச்சியான மலைச்சாரலில், இளையார் - தோழியர் ('இளையார் குழாத்திடையாள்'-சீவக. செய். 2585), எய்துதும் -சேர்வோம்.

139] பாங்கி, தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல் [ருகூ

சின்னாள் மலர்க்குழல் காரண மாச்செவ்வி பார்த்துழன்று,
பன்னாள் உரைத்த பணிமொழி நோக்கிப் பழிநமக்கீ
தென்னு திடைப்பட்ட என்னிலை நீமற வேல்இறைவா!
தன்னாக மெய்ப்புக ழான்தஞ்சை வாணன் தமிழ்வெற்பிலே.

து - ரை : [ஓம்படை - பாதுகாப்பு] 'இறைவா! வெற்பிலே, நீ பணிமொழி நோக்கி, 'ஈது நமக்குப் பழி,' என்னாது, இடைப்பட்ட என் நிலை மறவேல்,' என இயைக்க. தன் ஆகம் மெய்ப்புகழான் - உண்மைப் புகழைத் தன் உடலாக உடையவன், தமிழ்வெற்பு - பொதியமலை, சில் நாள் மலர்க்குழல் - சில புதிய மலரை அணிந்த கூந்தலையுடைய தலைவி, காரணமா - காரணமாக, செவ்வி - (தகுதியான) காலம், உழன்று - வருந்தி, பல் நாள் - பல நாட்கள், உரைத்த - (நான் உனக்குச்) சொல்லிய, பணிமொழி - (எனது) தாழ்ந்த சொல்லை, நோக்கி - கருதி, ஈது - இது, என்னாது - என்று சொல் லாமல், இடைப்பட்ட - (உம் இருவர்க்கும்) இடையில் பொருந்திய, நிலை - நிலைமையை, மறவேல் - மறவாதே.

140] உலகியல் மேம்பட விருந்து விலக்கல் [கூ0

வலைப்பெய்த மான்தசை தேன்தோய்த் தருந்தி மரைமுலைப்பால்
உலைப்பெய்த வார்தினை மூரலும் உண்டுளம் கூர்உவகை
தலைப்பெய்த நாள்அனை யான்தஞ்சை வாணன் சயிலத்தெம்மூர்
இலைப்பெய்த தாழ்குரம் பைத்தங்கி னால்உமக் கென்வருமே?

து - ரை : [வந்தோரை உபசரித்தலாகிய உலக வழக்கம் பெருமை அடைய, பாங்கி, 'விருந்து உண்டு செல்க,' எனக் கூறித் தலைவன் செல வுதலை விலக்குதல்] '(தலைவரே!) மான் தசை அருந்தி, தினை மூர லும் உண்டு, எம் ஊர் தாழ் குரம்பைத் தங்கினால் உமக்கு என் வரும்?' என இயைக்க. வலைப்பெய்த - வலையில் அகப்படுத்திய, தசை - இறைச்சி, அருந்தி - உண்டு, மரை - மான், உலைப்பெய்த - உலையில் இட்டுச் சமைத்த, வார் தினை மூரல்-நுண்ணிய தினைச்சோறு, உளம் - மனத்தில், கூர் உவகை- மிகுந்த மகிழ்ச்சி, தலைப்பெய்த - (வந்து) கூடிய, நாள் அனையான் - நாள் போன்றவனாகிய, சயிலத்து - மலையில், இலைப்பெய்த - இலையால் மூடிய, தாழ் குரம்பை - தாழ்ந்த குடிசையில், என் வரும் - யாது குறை நேரிடும்? தலைவர் - முன்னிலை எச்சம்.

141] விருந்து இறை விரும்பல் [கூக

மஞ்சுட்டி அன்ன சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
பஞ்சுட் டியமென் பதயுகத் தீர்!உங்கள் பாடியில்மான்
வெஞ்சுட் டிழுதன்ன ஊனும்பைந் தேனும் விருந்தினர்க்குச்
செஞ்சுட் டிளகுபொன் போல்தினை மூரலும் தெள்ளமுதே!

கு - ரை : [விருந்தைத் தலைவன் விரும்பிக் கூறுதல்] 'மென்பத யுகத்தீர் ! உங்கள் பாடியில் ஊனும் தேனும் தினை மூரலும் விருந்தினர்க்குத் தெள்ளமுது,' என இயைக்க. மஞ்சு ஊட்டி அன்ன - மேகத்தை உண்பித்தாற்போன்ற, சுதை - சுண்ணம்பு பூசிய, பஞ்சு ஊட்டிய - செம்பஞ்சுக் குழம்பு பூசிய, மென்பத யுகத்தீர் - மெல்லிய பாதம் இரண்டு உடையீர், பாடி - ஊர், வெஞ்சூட்டு - வெப்பமான சூட்டையுடைய, இழுது அன்ன - வெண்ணெய் போன்ற, மான் ஊன் - மான் இறைச்சி, பைந்தேன் - பசுமையான தேன், செஞ்சூட்டு - செம்மையான சூட்டில், இளகு - உருகிய, மூரல்- சோறு, தெள்ளமுது - தெளிந்த அமுதம்.

பாங்கி கூற்ருயின கூட்டற்கும் பாங்கில் கூட்டற்கும், தலைவன் கூற்ருயின கூடற்கும் வேட்டற்கும் உரியன.

# 10. ஒருசார் பகற்குறி

142] கிழவோன் பிரிந்தழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டு இரங்கல் [க

ஆழ்ந்தார் தமக்கரு ளாதவர் போல்இவ் வளவில்அன்பு
சூழ்ந்தார் செலத்தொங்கல் சூழ்குழ லாய்!சொற் பொருள்படைத்து
வாழ்ந்தார் புகழ்தஞ்சை வாணனைப் பேணலர் மானவெய்யோன்
வீழ்ந்தார் கலிக்கரந் தான்பனி மாலை வெளிப்படவே!

து - ரை : [தலைவன் பிரிந்த போது தலைவி மாலைப்பொழுது கண்டு வருந்திப் பாங்கிக்குக் கூறுதல்] 'தொங்கல் சூழ் குழலாய்! இவ்வளவில் அன்பு சூழ்ந்தார், ஆழ்ந்தார்தமக்கு அருளாதவர்போல் செல, சொல் பொருள் படைத்து வாழ்ந்தார் புகழ் தஞ்சை வாணனைப் பேணலர் மான, வெய்யோன் பனி மாலை வெளிப்பட ஆர்கலி வீழ்ந்து கரந்தான்,' என இயைக்க. இவ்வளவில் - இம்மட்டில், சூழ்ந்தார் - பொருந்தியவராகிய தலைவர், ஆழ்ந்தார்தமக்கு - (வறுமையில்) மூழ்கியவருக்கு, அருளாதவர் - கொடாதவர், செல - (நம்மைப் பிரிந்து) போக, சொல் பொருள் படைத்து வாழ்ந்தார் - புலவர், பேணலர் - விரும்பாதவர், மான - ஒப்ப, வெய்யோன்- சூரியன், பனி மாலை - பனியோடு கூடிய மாலைக் காலம், ஆர்கலி - கடலில், கரந்தான் - மறைந்தான் (யான் இதற்கு என் செய்வேன்!) வறியவர் தலைவிக்கும், கொடாதார் தலைவனுக்கும் உவமை.

143] பாங்கி புலம்பல் [உ

காலையம் போருக வாள்முகத் தாள்அன்பர் கையகல
மாலையம் போது வருவித்த நீர்தஞ்சை வாணன்தெவ்வர்
ஆலையம் போல்உங்கள் ஆதவன் கோயில் அழல்கொளுந்த
வேலையம் போடுழல் வீர்பரி காள்!என்றும் வெய்துயிர்த்தே.

து - ரை : 'பரிகாள்! அன்பர் கையகல, மாலையம்போது வருவித்த நீர், உங்கள் ஆதவன் கோயில் அழல் கொளுந்த என்றும் வெய்துயிர்த்து வேலை அம்போடு உழல்வீர்,' என இயைக்க. பரிகாள் - (சூரியனது தேரிற்பூட்டப்பட்ட) குதிரைகளே, காலை அம்போருகம் - காலையில் மலர்ந்த தாமரை மலர் போன்ற, வாள் - ஒளி, முகத்தாள்-முகத்தையுடைய தலைவியை, அன்பர் - தலைவர், கையகல - பிரிய, வருவித்த - வரச் செய்த, தெவ்வர் - பகைவர், ஆலயம் - அரண்மனை, ஆதவன் - சூரியன், கோயில் - மாளிகை, கொளுந்த - பற்ற, வெய்துயிர்த்து - பெருமூச்சு விட்டு, வேலை- கடல், அம்பு - நீர், உழல்வீர் - வருந்துவீர்களாக. ஆலையம் - ஐ, போலி.

144] தலைவன் நீடத் தலைவி வருந்தல் [ரு

ஆராத இன்ப இடந்தொறும் நீங்கிய ஆயம்என்பால்
வாராத முன்னம் வருகில ரால்தஞ்சை வாணன்வெற்பில்
கூரா தரம்நல்கி, வல்வினை யேன்நலம் கொள்ளைகொண்டு
தேரா தவனுட னேநென்னல் மாலையில் சென்றவரே!

து - ரை: [தலைவன் வரத் தாமதிக்கத் தலைவி வருந்துதல்] 'நல்கி, கொண்டு, சென்றவர் வருகிலர்,' என இயைக்க. கூர் ஆதரம் நல்கி - மிகுந்த காதலைக் கொடுத்து, வல்வினையேன் - தீவினையையுடைய எனது, நலம் - அழகு, தேர் ஆதவன் - தேரில் பொருந்திய சூரியன், நென்னல் - நேற்று, ஆராத இன்ப இடந்தொறும் - அனுபவியாத இன்பத்தையுடைய (புதிய) இடந்தோறும், ஆயம் - தோழியர் கூட்டம், என்பால் - என்னிடம், வாராத - (திரும்பி) வாராத, வருகிலரால் - ஆல், அசை. (யான் என் செய்வேன்!)

145] தலைவியைப் பாங்கி கழறல் [சு

'சிறந்தார் தெரிந்த செழுந்தமிழ் வாணன்தென் மாறைவெற்பர்
துறந்தார் எனை!' என்று சோருவ தேன்? இந்தத் தொல்உலகில்
பிறந்தார் எவர்க்கும் பிரிவெய்து மால்வெய்ய பேரமர்க்கண்
புறந்தாழ் கரிய குழல்செய்ய வாய்ஐய பூங்கொடியே!

து - ரை: [கழறல் - கண்டித்துக் கூறுதல்] 'பூங்கொடியே! உலகில் பிறந்தார் எவர்க்கும் பிரிவு எய்தும்; 'வெற்பர் எனைத் துறந்தார்!' என்று சோருவது என்?' என இயைக்க. வெய்ய பேரமர்க்கண் - கொடிய பெரிய போரை விளைக்கும் கண்ணையும், புறம் தாழ் - முதுகில் தொங்கும், செய்ய - சிவந்த, வாய் - வாயையும் உடைய, ஐய - அழகிய, பூங்கொடியே - பூங்கொடி போன்றவளே, எய்தும் - நேரிடும், சிறந்தார் - (அறிவிற்) சிறந்தவராகிய முன்னோர், தெரிந்த - ஆராய்ந்த, தமிழ் வாணன் - தமிழைக் கற்ற வாணனது, துறந்தார் - விட்டு நீங்கினர். எய்துமால் - ஆல், அசை.

146] தலைவி, முன்னிலைப் புறமொழி மொழிதல் [ரு

பூவலர் வாவியின் நீர்அற்ற போதுற்ற புன்மைஅல்லால்
காவலர் காமம் துறக்கில்என் ஆம்? கடம் பாய்மதுகை
மாவல வாணன் வயல்தஞ்சை வேந்தனை வாழ்த்தல்செய்யா
மேவலர் போலும் கழற்றுரை யாளர் வியன்அறிவே.

து - ரை: [தலைவி, வெறுப்பால் முன்னிற்கும் தோழியை நோக்கிக் கூறாமல், அவள் கேட்கும்படி, பிறரைக் கூறுபவள்போலக் கூறுதல்] 'காவலர் காமம் துறக்கில், பூ அலர் வாவியில் நீர் அற்ற போது உற்ற

புன்மை அல்லால், என் ஆம்? கழற்றுரையாளர் வியன் அறிவு, தஞ்சை வேந்தனை வாழ்த்தல் செய்யா மேவலர் போலும்,' என இயைக்க. காவலர் - தலைவர், காமம் - ஆசை, பூ - மலரானது, அலர் - (தான்) மலர்கின்ற, உற்ற - அடைந்த, புன்மை அல்லால் - இழிவாகும் அல்லாமல், என் ஆம் - (என் நிலைமை வேறு) யாதாகும், கழற்றுரையாளர் - கண்டித்துக் கூறுபவரின், வியன் - விசாலமான, கடம் பாய் - மதம் பாயும், மதுகை - வலிமையை உடைய, மாவல - யானைத் தொழிலில் வல்ல, மேவலர் - பகைவர். 'தலைவர் என்மீது வைத்த ஆசையை விட்டால், நீரற்ற குளப்பூ வாடுதல் போல யான் இழிவடைவேன்,' எனவும், 'கழற்றுரையாளர் பேரறிவு பகைவர் அழிதல் போலப் பயன் இன்றிக் கெடும்,' எனவும் கூறினளென்க.

147] தலைவி, பாங்கியோடு பகர்தல் [சு

முலையார் முயக்கினும் அல்லா இடத்தினும் மூரிமுந்நீர்
அலையார் அமுதமும் நஞ்சமும் போல அணங்கனையாய்!
தொலையாத இன்பமும் துன்பமும் காட்டுவர் தூங்கருவி
மலையா சலத்தமிழ் தேர்வாணன் மாறைநம் மன்னவரே.

கு - ரை: 'அணங்கு அனையாய்! நம் மன்னவர், முயக்கினும் அல்லா இடத்தினும் அமுதமும் நஞ்சமும் போல இன்பமும் துன்பமும் காட்டுவர்,' என இயைக்க. அணங்கு - தெய்வப் பெண், தூங்கு - ஒலிக்கும் ('தண்ணுமை தழுவித் தூங்க' - கம்ப. மிதிலை, செய். 9), மலயாசலம் - (மலய + அசலம்) பொதிய மலையில் பிறந்த, தேர் - ஆராய்கின்ற, முலை ஆர் - முலையை அனுபவிக்கின்ற, முயக்கினும் - புணர்ச்சியிலும், அல்லா இடத்தினும் - புணர்ச்சியல்லாத பிரிவிலும், மூரி - கடல், அலை ஆர் - அலையில் தோன்றிய, நஞ்சம் - ஆலகால விஷம். மலையாசலம் - ஐ, போலி.

148] தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல் [எ

பேணற் கரியநின் பெண்மையும் நாணமும் பேணி,அவர்
'காணத் தகும்,'என்று காண்பதல் லால்,கழி காதல்நெஞ்சு
பூணத் தருகினும் பொற்பல்ல ஆகுதல் கற்பல்லவால்
யாணர்த் தமிழுடை யான்வாணன் மாறையின் இன்னமுதே!

கு - ரை: [அச்சுறுத்தல் - பயப்படச் செய்தல்] 'இன்னமுதே! அவர் நின் பெண்மையும் நாணமும் பேணி, 'காணத்தகும்,' என்று காண்பது அல்லால், கழி காதல் நெஞ்சு பூணத் தருகினும் பொற்பு அல்ல ஆகுதல் கற்பு அல்ல,' என இயைக்க. யாணர்த்தமிழ் - (கற்குந்தோறும்) புதுமையை அளிக்கும் தமிழ், பேணற்கு அரிய - விரும்புதற்கு அரிய, பெண்மை - பெண் தன்மை, பேணி - விரும்பி, அவர் - அத்தலைவரே, காண்பது

அல்லது - எண்ணுவது அல்லாமல், கழி காதல் - மிகுந்த காதலை, பூண - உட்கொள்ளும்படி, தருகினும் - கொடுத்தாலும், பொற்பு அல்ல ஆகுதல் - (இவ்வாறு நீ துன்பத்தால் வருந்தி) அழகல்ல ஆதல். 'நீ துன்பமுறலால் அழகழிவும், அதனால் அன்னைக்கு ஐயமும், அவ்வையத்தால் இல் செறிப்பும், ஒரு கால் உனக்கு வேற்று மணமும் நேரிடும் ஆதலால், கற்புக்கெடும்,' எனத் தோழி அச்சுறுத்தியது காண்க.) 'அவரே' என்பதில் உள்ள தேற்ற ஏகாரம் விகாரத்தால் தொக்கது.

149] நீங்கற்கு அருமை தலைவி நினைந்து இரங்கல் [அ

குன்று கியபொன்னும் வேழக் குழாமும் கொடைபுகழ்ந்து
சென்றோர் முகக்கும் செழுந்தஞ்சை வாணன்தென் மாறைவெற்பில்
நன்றாம் இறைவற்கும் நன்றியி லேற்கும்அந் நான்முகத்தோன்
ஒன்று விதித்தில னேஉயிர் போல உடம்பையுமே!

து - ரை: [தலைவனை விட்டுப் பிரிதற்கு இயலாமையைத் தலைவி கருதி வருந்துதல்] '(நெஞ்சமே!) அந்நான்முகத்தோன், நன்று ஆம் இறைவற்கும் நன்றி இலேற்கும் உயிர் போல உடம்பையும் ஒன்று விதித்திலனே!' என இயைக்க. குன்று ஆகிய - குன்றுபோலக் குவிந்த, வேழக் குழாம் - யானைத் திரள், கொடை புகழ்ந்து சென்றோர் -, (அவனுடைய) தருமத்தைப் புகழ்ந்து சென்றவராகிய புலவர் முதலியவர், முகக்கும் - (பரிசிலாகக்) கொள்ளுதற்கு இடமான, வெற்பில் - மலையில், அந்நான் முகத்தோன் - அந்தப் பிரமன், நன்று ஆம் - நல்வினை செய்த, நன்றி - நல்வினை, இலேற்கும் - இல்லாத எனக்கும், ஒன்று - ஒன்றாக, விதித்திலனே - படையாமல் போயினனே. 'உடம்பையும் ஒன்றாகப் படைத்திருப்பின், பிரிவு நேராது,' என்பது கருத்து.

150] தலைவிக்கு அவன் வரல் பாங்கி சாற்றல் [கூ

நெஞ்சுக ஆய்மலர் அன்னகண் ணீர்மல்க நின்றஅம்சொல்
கிஞ்சுக வாய்வஞ்சி! கேட்டருள் நீயும்; கிளைத்தமிழோர்
தஞ்சுக வாய்மொழி நெஞ்சுடை யான்தஞ்சை வாணன்வெற்பில்
மஞ்சுக ஆர்த்தன வால்அவர் தேரின் மணிக்குரலே.

து - ரை: 'வஞ்சி! தஞ்சை வாணன் வெற்பில் அவர் தேரின் மணிக்குரல் மஞ்சு உக ஆர்த்தன; நீயும் கேட்டருள்,' என இயைக்க. நெஞ்சு உக - மனம் சலனமடையும்படி, ஆய் மலர் - (பல மலர்களுள் நல்ல மல ரென்று) தெரிந்தெடுத்த மலர், கண் - கண்களில், மல்க - நிறைய, அம் சொல் - அழகிய சொல்லையும், கிஞ்சுக வாய் - முருக்கம்பூப் போன்ற (சிவந்த) வாயையுமுடைய, கிளைத்தமிழோர்தம் - விரிவாகிய தமிழைக் கற்ற பெரி

யோருடைய, சுக வாய்மொழி - )வாயுறை) வாழ்த்தாகிய வாய் மொழியை, நெஞ்சு உடையான் - (என்றும் மறவாமல்) மனத்தில் உடையவனாகிய, அவர் - அத்தலைவரின், குரல் - ஓசைகள், மஞ்சு உக - மேகம் சிதறும்படி, ஆர்த்தன - ஒலித்தன. நீயும் என்பதில் உள்ள உம்மை, 'நானும் கேட்டதன்றி' எனப் பொருள் படுதலின், இறந்தது தழீஇய எச்ச உம்மை. கிஞ்சுகம், அதன் பூவுக்குப் பொருளாகு பெயர்.

151] தோழி, சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறுத்தல் [ம

தொடைக்கணி யார்தடந் தோளவர் கேள்அலர்; தோகைஅன்னார்
உடைக்கணி யாம்தழை கொய்யார்; உழவர் உடைத்ததெண்ணீர்
மடைக்கணி ஆரம் இடும்தஞ்சை வாணன் வரையில்முன்போல்
கடைக்கணி யார்கணி யார்நம்மை நாளைக் கருங்கணியே!

கு - ரை: [தோழி, தலைவன் வேலிப்புறமாகக் குறியிடத்தில் வர, புனம் காத்தலை விட்டுத் தலைவியை வீட்டில் சேர்த்தலை அவளுக்குக் கூறுவாள் போலத் தலைவனுக்கு அறிவித்தல்] 'கருங்கணியே! தோளவர், கேள் அலர்; தோகை அன்னார், தழை கொய்யார்; வாணன் வரையில் கணியார், நாளை நம்மை முன்போல் கடைக்கணியார்,' என இயைக்க. கணியே - கண்ணையுடைய தலைவியே, தொடைக்கு அணி ஆர் - மாலைக்கு அழகு பொருந்திய, தடந்தோளவர் - பெருந்தோளையுடைய தலைவர், கேள் அலர் - (நமக்கு இனி) உறவு அல்லர், தோகை அன்னார் - மயிலைப் போன்ற தோழியர், உடைக்கு அணி ஆம் - (இடையில்) உடுத்தற்கு அழகாகும், உடைத்த - (வயலுக்கு நீர் பாய்ச்சுதற்கு) உடைத்து விட்ட, தெள் நீர் - தெளிவான நீரையுடைய, மடைக்கு - நீர் ஓடைக்கு, அணி ஆரம் இடும் - அழகிய முத்தை (அடைப்பாக) இடும், கணியார் - வேங்கையார், கடைக்கணியார் - கடைக்கண்ணால் பாரார். கணியார் - வேங்கை மரம் (இதில் ஆர் உயர்வுப் பன்மை விகுதி). வேங்கை மரம் கடைக்கண்ணால் நோக்குதலாவது, அரும்பி மலராதிருத்தல். வேங்கை மலர்ந்ததும் வேடர் தினை கொய்தல் மரபாதலின், இங்ஙனம் கூறினாள் என்க. எனவே, 'குறவர் தினையறுக்க வந்தனர்; யாம் இன்று தோழியர் கூட்டத்துடன் ஊருக்குப் போவோம்,' எனத் தலைவனுக்கு அறிவித்ததாயிற்று.

152] தோழி, தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந்து அறிவுறுத்தல் [யக

பயில்காள பந்திப் புயல்அன்ன ஓதியைப் பைங்கிள்ளைகாள்!
மயில்காள்! சிறிதும் மறக்கப் பெறீர்தஞ்சை வாணன்வெற்பில்
குயில்காளம் எங்கும் இயம்புதண் சோலையில் கூடிஇன்பம்
அயில்காள வெங்கதிர் வேல்அன்பர் சால அயர்ப்பினுமே.

கு - ரை : [தோழி, முன்னிற்கும் தலைவனை நோக்கிக் கூறுமல் புறமொழியாகக் கிளிகளையும் மயில்களையும் நோக்கிக் கூறுபவள் போலக் கூறி, அவனுக்குச் செறிப்பு அறிவுறுத்தல்] 'பைங்கிள்ளைகாள்! மயில்காள்! ஓதியை அன்பர்சால அயர்ப்பினும், சிறிதும் மறக்கப்பெறீர்,' என இயைக்க. பயில் காள பந்தி - நெருங்கிய கரிய ஒழுங்கான, புயல் - மேகம், ஓதியை - கூந்தலையுடைய தலைவியை, கிள்ளைகாள் - கிளிகளே, காளம் - ஊது கொம்பு போல, இயம்பு - கூவுகின்ற, கூடி - புணர்ந்து, இன்பம் அயில் - இன்பத்தை அனுபவித்த, காளம் - விஷம் போன்ற, வெங்கதிர் வேல் - கொடிய ஒளி வீசும் வேலையுடைய, அன்பர் - தலைவர், சால அயர்ப்பினும் - மிக மறந்தாலும், மறக்கப் பெறீர் - (நீர்) மறவீராகுக.

153] பாங்கி, தலைமகன் முன் நின்று உணர்த்தல் [௰௨

கானல்அம் கான்மலர்க் கள்வாய்க் கருங்கணி கட்டுரையால்
கூனலங் காய்பொன் குரலும்கொய் தார்எமர்; கொற்றவ!யாம்
ஏனலம் காவலும் இன்றே ஒழிந்தனம்; ஏழ்புவிக்கும்
தானலங் காரம்அன் னான்தஞ்சை வாணன் தமிழ்வெற்பிலே.

கு - ரை : 'கொற்றவ! தமிழ் வெற்பிலே எமர், கணி கட்டுரையால் குரலும் கொய்தார்; யாம் இன்றே ஏனல் அம் காவலும் ஒழிந்தனம்,' என இயைக்க. கொற்றவ - அரசனே, புவி - பூமி, அலங்காரம் அன்னான் - (தன் கீர்த்தியால்) அலங்காரம் போன்றவனாகிய, எமர் - எம்மவர்கள், கானல் அம் கான் மலர் - சோலையில் அழகிய மணமுடைய மலராகிய, கள் வாய் - தேன் பொருந்திய வாயையுடைய, கருங்கணி - பெரிய வேங்கை மரத்தின், கட்டுரை - உறுதிச்சொல், கூனல் அம் - வளைவும் அழகும் உடைய, காய் - காய்த்த, பொன் குரல் - பொன்னிறமான தினைக்கதிர், ஏனல் - தினை, அம் - சாரியை. (முதலடிக்குச் 'சோலையிலுள்ள அழகிய மணமுடைய மலரைச் சூடிய கள் குடித்த வாயை உடைய கரிய கணிக்காரிகை என்னும் குறி சொல்பவள் கூறிய சோதிடத்தால்' எனப் பொருள் கொள்ளலும் பொருந்தும். கணிக்காரிகையை நன்னூள் கேட்டுத் தினை கொய்தல் குறவர்க்கு இயல்பு.

154] பாங்கி, முன் நின்று உணர்த்தி ஓம்படை சாற்றல் [௰௩

கனம்சாய நல்கிய கையுடை யான்எதிர் கன்றினர்தம்
மனம்சாய வென்றருள் வாணன் வரோதயன் மாறைவெற்பில்
சினம்சாலும் வேல்அண்ண லே!மற வேல்எம்மை; செவ்விஇரு
தனம்சா யினும்இனி நின்னைஅல் லாதில்லைத் தாழ்குழற்கே.

கு - ரை : [தோழி, தலைவன் முன் நின்று இற்செறிப்பை அறிவித்து, 'எம்மைப் பாதுகாக்க வேண்டும்,' என்று கூறுதல்] 'மாறை வெற்

பில் அண்ணலே! எம்மை மறவேல்; இரு தனம் சாயினும், இனித் தாழ் குழற்கு நின்னை அல்லாது இல்லை,' என இயைக்க. கனம் சாய - (கொடுப்பதில்) மேகம் தோல்வி அடையும்படி, நல்கிய - (புலவர் முதலியோர்க்குப் பரிசிலைக்) கொடுத்த, எதிர் கன்றினர்தம் - (தனக்கு) எதிராகிக் கோபித்தவருடைய, சாய - சோர்வடையும்படி, சினம் சாலும் - கோபம் மிகும், மறவேல் - மறவாதே, செவ்வி - அழகையுடைய, தனம் சாயினும் - (முதுமையடைதலால்) முலைகள் தளரினும், தாழ் குழற்கு - நீண்டு தொங்கும் கூந்தலையுடைய தலைவிக்கு, இல்லை - (வேறு துணை) இல்லை.

155] கிழவோன், தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல் [யச

ஏவலர் எய்விழி மாந்தளிர் மேனியர் ஏனல்இனிக்
காவல ரே;மனம்! காத்தனம் யாம்;களி யானைசெம்பொன்
நாவல ரேபெற நல்குங்கைம் மேக நறுங்குவளை
மாவலர் எய்தொடை யான்தஞ்சை வாணன் வரையில்வந்தே.

து - ரை: [தலைவன், வேறு பற்றுக்கோடு பெறாமல், தன் மனத்தொடு கூறல்] 'மனம்! விழி மேனியர், இனி ஏனல் காவலரே; யாம் தஞ்சை வாணன் வரையில் வந்து காத்தனம்,' என இயைக்க. மனம் - மனமே (அண்மை விளி), ஏ - அம்பும், அலர் - குவளை மலரும், எய் - (உவமையாகப்) பொருந்திய, விழி - கண்களையும், மாந்தளிர் - மாவிலைக் கொழுந்துபோன்ற, மேனியர் - நிறத்தையுமுடையவர், ஏனல் - தினைப்புனம் (தானியாகு பெயர்), காவலர் - காப்பார் அல்லர், யானை செம்பொன் - யானையும் செம்பொன்னும், நாவலர் - புலவர், நல்கும் - கொடுக்கும், கை - கையையுடைய, மேகம் - (கொடையில்) மேகம் போன்றவனும், மா அலர் - கரிய மலர், எய் - பொருந்திய, தொடையான் - மாலையை அணிந்தவனுமாகிய, காத்தனம் - (வீணில்) காத்திருந்தோம்.

க, உ, ரு, ௬, சு, அ, யச - ஆம் கவிகள் இரங்கலுக்கும்; ச, எ, கூ - ஆம் கவிகள் வன்புறைக்கும்; ய, யக, யஉ, யரு - ஆம் கவிகள் இற்செறிப்பு உணர்த்தற்கும் உரியவை.

# 11. பகற்குறி இடையீடு

156] இறைவனைப் பாங்கி குறி வரல் விலக்கல் [க

புனமும் பசுந்தினைச் செங்குரல் ஏந்தும்; புகன்றகிள்ளை
இனமும் குழீஇவந் திறைகொள்ளு மால்;இறை ஆர்வளையும்
மனமும் கவர்வெற்ப! வாணன்தென் மாறை மடப்பிடியும்
அனமும் தொழும்நடை பால்பல கால்வரும் அன்னையுமே.

து - ரை : [இறைவன் - தலைவன்] 'வெற்ப! புனமும் குரல் ஏந்தும்; கிள்ளை இனமும் குழீஇ வந்து இறைகொள்ளும்; பிடியும் அனமும் தொழும் நடைபால் அன்னையும் பல கால் வரும்,' என இயைக்க. இறை ஆர் வளையும் - (தலைவியின்) முன் கையில் பொருந்திய வளைகளையும், கவர் - கவர்ந்துகொள்ளும், புனமும் - இத்தினைக் கொல்லையும், செங்குரல் - (முற்றிச்) சிவப்பான கதிர், ஏந்தும் - தன்னிடத்திற்கொள்ளும், புகன்ற - (தலைவியின் சொல்லைப் பழக) விரும்பிய, கிள்ளை இனம் - கிளிக்கூட்டம், குழீஇ - திரண்டு, இறைகொள்ளும் - தங்கும், மாறை - மாறை நாட்டிலுள்ள, மடப்பிடி - இளம்பெண் யானை, அனம் - அன்னம் (இடைக்குறை விகாரம்), தொழும் நடைபால் - வணங்கும் நடையை உடைய தலைவியினிடத்தில், அன்னையும் - (அவள்) தாயும், பல கால் வரும் - பல முறை வருவாள். (எனவே, 'தலைவியும் புனத்தை நீங்காள்; நீயும் இங்கே வாராதே,' என்பது குறிப்பால் பெறப்பட்டது.)

157] இறைவியைப் பாங்கி குறி வரல் விலக்கல் [உ

நந்துசுற் றும்கடல் ஞாலம்எல் லாம்புகழ் நாமன்வளர்
சந்துசுற் றும்கொங்கை மங்கையர் வேள்சஞ்ச ரீகம்நறை
வந்துசுற் றும்தொங்கல் வாணன்தென் மாறை வரையில்மலர்க்
கொந்துசுற் றும்குழ லாய்!செல்லல் நீஅக் குளிர்பொழிற்கே.

து - ரை : [இறைவி - தலைவி] 'குழலாய்! நீ அக்குளிர் பொழிற்குச் செல்லல்,' என இயைக்க. நந்து - சங்கு, ஞாலம் - உலகம், நாமன் - பெயரையுடையவனும், சந்து சுற்றும் வளர் கொங்கை - சந்தனம் பூசும் வளரும் முலைகளையுடைய, மங்கையர் வேள் - மங்கையர்களுக்கு மன்மதனைப் போன்றவனுமாகிய, சஞ்சரீகம் - வண்டுகள், நறை - வாசனையினால், சுற்றும் - சூழ்கின்ற, தொங்கல் - மலர்மாலையை உடைய, கொந்து - கொத்து (மெலித்தல் விகாரம்), பொழிற்கு - பொழிலில் (வேற்றுமை மயக்கம்), செல்லல் - போகாதே.

158] இறைமகள், ஆடு இடம் நோக்கி அழுங்கல் [௩

அருவித் தடமும், அணிமுத்த யாறும், அவனிஎங்கும்
திருவித் தியதஞ்சை வாணன் சிலம்பும்,இச் சிற்றிலும்,பேர்
இருவிப் புனமும்இன் றென்னினைக் கின்றன என்னை இன்னே!
மருவிப் பிரிபவர் போல்இல்லை யேமண்ணில் வன்கண்ணரே.

து - ரை : [தலைவி, விளையாடும் இடங்களைக் கண்டு வருந்துதல்] அருவி-நீரையுடைய ('அருவி ஆம்பல்' - பதிற். செய். 71.), தடம் - குளம், அணி முத்த யாறு - அழகிய முத்தைக் கொழிக்கும் நதியும், அவனி - பூமி, திரு வித்திய - செல்வத்தைப் பரப்பிய ('துதி நாம் வித்தாவா றென்னே' - சீவக. செய். 1611), சிலம்பு - மலை, சிற்றில் - (விளையாடச்செய்த) சிறு வீடு, பேரிருவி - பெரிய தினைத்தாளையுடைய, இன்னே - இப்போது, என் நினைக்கின்றன - என்னவாக நினைக்கின்றனவோ, மருவி - கூடி, மண்ணில்- உலகில், வன்கண்ணர் - கொடியவர். ('கூடிப் பிரிபவர் கொடியவராதலின், யானும் இவற்றைப் பிரிதலின் கொடியளாயினேன்,' என்பது கருத்து.) இக்கவி வேற்றுப்பொருள் வைப்பு அணி.

159] பாங்கி, ஆடு இடம் விடுத்துக் கொண்டு அகறல் [௪

உன்னை'அ ராஅல்குல் நல்லவ ரோ?'என் றுசாவின்,எங்கள்
மன்னைய ராமல் வருத்துரை நீ; தஞ்சை வாணன்வெற்பில்
என்னையர் ஆணைகொண் டேகுகின் றேன்;இவை இத்தனையும்
பின்னைய ராதொழி வாய்;இத ணே!இது பெற்றனமே!

து - ரை : [தோழி, விளையாடும் இடத்தை விட்டுத் தலைவியைத் தம் ஊர்க்கு அழைத்துப் போதல்] 'இதணே! இது பெற்றனமே! எங்கள் மன் உன்னை, 'அரா அல்குல் நல்லவரோ?' என்று உசாவின், நீ அயராமல் வருத்து உரை; என்னையர் ஆணை கொண்டு ஏகுகின்றேன்; இவை இத்தனையும் பின் அயராது ஒழிவாய்,' என இயைக்க. இதணே - பரணே, இது - இந்தப் பிரிவை, பெற்றனமே - (நீயும் யாமும்) பெற்றேமே, மன் - தலைவர், அரா - பாம்பின் படம்போலும் (முதலாகு பெயர்), அல்குல் - அல்குலை உடைய தலைவியும் தோழியும், நல்லவரோ - சுகமாயிருக்கின்றனரோ, உசாவின் - வினவினால், அயராமல் - (அவர் மனம்) தளராதபடி, வருத்து உரை - வகைப்படுத்திச் சொல், என்னையர் - பெற்றோரின், ஆணைகொண்டு- ஏவலினால் (கொண்டு - மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு), ஏகுகின்றேன் - (தலைவியுடன் ஊருக்குச்) செல்கின்றேன், இவை இத்தனையும் - இச்செய்திகள் இவ்வளவையும், பின் அயராது ஒழி - பின்பு நீ மறவாதிரு. 'மன்னையராமல், பின்னையராது' என்பவற்றில் எதுகை நயம் கருதி அகரம் ஐகாரமாயிற்று.

160] நெடுந்தகை, குறிவயின் நீடு நின்று இரங்கல் [௫

மான்காள்! நிகரில் மடமயில் காள்!தஞ்சை வாணன்வெற்பில்
தேன்காள்! நிரைமென் சிறைக்கிள்ளை காள்!என் தெருமரல்நோய்
தான்கா ணியகொல்,இச் சந்தனச் சோலையைத் தன்னைஇன்றி
யான்கா ணியகோல், எழுந்தரு ளாததின் றென்னுயிரே?

து - ரை : [மறு நாள் தலைவன், குறியிடத்தில் வந்து நெடுநேரம் நின்று தலைவியை நினைத்து வருந்துதல்] 'மான்காள்! மயில்காள்! தேன்காள்! கிள்ளைகாள்! இன்று என் உயிர் எழுந்தருளாதது, என் தெருமரல் நோய் தான் காணியகொல்! தன்னை இன்றி இச்சந்தனச் சோலையை யான் காணியகொல்!' என இயைக்க. தேன் - வண்டு, நிரை மென் சிறை - ஒழுங்கான மெல்லிய சிறகையுடைய, கிள்ளை - கிளி, உயிர் - உயிர் போன்ற தலைவி, எழுந்தருளாதது - (என் முன்) வாராதிருப்பது, தெருமரல் - மனச் சுழற்சியாகிய, காணியகொல் - அறியவோ (காணவோ). கொல் - ஐயம்.

161] தலைவன், வறுங்களம் நாடி மறுகல் [௬

செங்கேழ் விழிக்கும் மொழிக்கும் பகைதிருப் பாற்கடலும்
பங்கே ருகமும் பயந்தன ஆயினும், பைங்கிள்ளைகாள்!
சங்கேய் தடந்துறை சூழ்தஞ்சை வாணன் தரியலர்போல்
எங்கே இனித்தங்கு வார்ஏனல் காத்திங் கிருந்தவரே?

து - ரை : [தலைவன், தலைவி பிரிந்ததால் வெற்றிடமாகிய தினைப் புனத்தை நோக்கி வருந்தல்] 'பைங்கிள்ளைகாள்! பங்கேருகமும் திருப்பாற் கடலும் பயந்தன ஆயினும், செங்கேழ் விழிக்கும் மொழிக்கும் பகை; இங்கு ஏனல் காத்து இருந்தவர் வாணன் தரியலர் போல் இனி எங்கே தங்குவார்?' என இயைக்க. 'தாமரையும் பாற்கடலும் (சீதையையும் இலக்குமியையும்) பெற்றன ஆயினும், (அவை தலைவியின் கண்ணுக்கும் சொல்லுக்கும் அழகாலும் இனிமையாலும்) பகை ஆயின,' என்க. ஏனல் - தினைப்புனத்தை (தானியாகு பெயர்), இருந்தவர் - இருந்தவராகிய (கற்பில் சீதையையும் இலக்குமியையும் ஒத்த) தலைவியார், சங்கு ஏய் - சங்குகள் பொருந்திய, தடம் துறை - பெரிய வைகைத்துறை, தரியலர் - பகைவர். (சீதை இலங்கையில் பொய்கைத் தாமரையில் பிறந்தாள் என்பது இராமாயணச் செய்தி). 'விழிக்குப் பங்கேருகமும், மொழிக்குத் திருப்பாற்கடலும்' என இயைந்தது, எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்.

162] குறுந்தொடி வாழும் ஊர் நோக்கி மதி மயங்கல் [௭

'பெறஅரி தால்அவள் பின்சென்ற நெஞ்சமும்; பேணலர்க்கு
மறஅரி தான்அன்ன வாணன்தென் மாறை வரைப்புனம்சூழ்

நறவரி தாழ்முல்லை நாள்மலர் ஓதி நகரும்எனக்
குறஅரி தால்,என்செய் வேன்!'என்று சோரும்என் ஓருயிரே.

உ - ரை : [தலைவன், தலைவி வாழும் ஊரை நோக்கி மதி மயங்கிக் கூறுதல்] 'என் ஓர் உயிர், 'அவள் பின் சென்ற நெஞ்சமும் பெற அரிது; ஓதி நகரும் எனக்கு உற அரிதால், என் செய்வேன்!' என்று சோரும்,' என இயைக்க. ஓர் - ஒப்பற்ற, அரிது - அரியது, ஆல் - அசை, பேணலர் - பகைவர், மற அரி - வீரச் சிங்கம், தான் - அசை (நன். சூ. 441), நறவு அரி தாழ் - தேனும் வண்டும் பொருந்திய, ஓதி - கூந்தலை உடைய தலைவியின் (சினையாகு பெயர்), நகர் - ஊர் ('சூழ் நகர்' என இயைக்க), உற அரிதால் - அடைதற்கு அரியது ஆதலால், சோரும் - வாடும். நெஞ்சமும் என்பதி லுள்ள உம்மை 'நகரும்' என்பதிலுள்ள உம்மையைத் தழுவி நிற்றலால், எதிரது தழீஇய எச்ச உம்மை.

க, உ - ஆம் கவிகள் விலக்கலுக்கும்; ச - ஆம் கவி செல்லுதலுக்கும்; ரு, ௬, கூ, எ - ஆம் கவிகள் கலக்கத்திற்கும் உரியவை.

## 12. இரவுக்குறி

163] இறையோன், இருட்குறி வேண்டல் [க

கருவிருந் தெண்திசை யும்கனம் மாமழை கான்றதுள்ளம்
வெருவிருந் தெம்பதிக் கேகஒண் ணாது; விதம்விதமாய்
வருவிருந் தென்றும் புரந்தருள் வாணன்தென் மாறைஅன்னீர்!
ஒருவிருந் தெங்களைப் போல்எய்து மோகங்குல் உங்களுக்கே?

து - ரை: [தலைவன், தோழியை இரவுக்குறி வேண்டுதல்] 'மாறை அன்னீர்! கனம் கரு இருந்து எண் திசையும் மாமழை கான்றது; வெரு இருந்து எம் பதிக்கு ஏக ஒண்ணாது; கங்குல் உங்களுக்கு எங்களைப்போல் ஒரு விருந்து எய்துமோ?' என இயைக்க. விதம் விதமாய் - வகை வகையாய், விருந்து - விருந்தினரை, புரந்து அருள் - உபசரிக்கின்ற, கனம் - மேகம், கரு இருந்து - சூல் கொண்டு, மா - பெரிய, கான்றது - பெய்தது, உள்ளம் - மனத்தில், வெரு இருந்து - அச்சம் பொருந்தி, பதி - ஊர், ஏக - செல்ல, ஒண்ணாது - கூடாது ('ஒன்றாது' என்பதன் மரூஉ), கங்குல் - (இந்த) இரவில், ஒரு - ஒப்பற்ற, எய்துமோ - கிடைக்குமோ. தலைவன், 'எங்களைப்போல்' என்றது தன்னுடனிருந்த வீரரையும் உளப்படுத்திக் கூறிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்க. அன்னீர் - உயர்வுப் பன்மை.

164] பாங்கி, நெறியினது அருமை கூறல் [உ

மலைமாது வல்லவன் வாணன் வரோதயன் மாறைவெற்பில்
சிலைமால் உரும்எங்கும் தீஉமி ழாநிற்கும்; சிங்கம்எங்கும்
கொலைமா கரிஇரை தேர்ந்துழ லாநிற்கும்; கொற்றவ!பொன்
கலைமான் உறைபதி நீவரு மாறென்கொல் கங்குலிலே?

து - ரை: [நெறி - வழி] 'கொற்றவ! மாறை வெற்பில் (நீ வரும் ஆறு) உரும் தீ உமிழாநிற்கும்; சிங்கம் கரி இரை தேர்ந்து உழலாநிற்கும்; கங்குலில் நீ கலைமான் உறை பதி வரும் ஆறு என்?' என இயைக்க. கொற்றவ - அரசனே, மலை மாது - வீர மகள், வல்லவன் - கணவனாகிய ('வல்லப' என்னும் வடமொழித் திரிபு), ஆறு - வழி, சிலை மால் உரும் - (வான) வில்லோடு கூடிய மேகத்தில் இடிகள், உமிழாநிற்கும் - கக்கும், கொலை - கொல்லும் தொழிலையுடைய, மா - பெரிய, கரி இரை - யானையாகிய இரையை, தேர்ந்து - தேடி, உழலாநிற்கும் - வருந்தித் திரியும், கங்குலில் - இரவில், பொன் கலை மான் - பொன்னால் செய்யப்பட்ட மேகலை என்னும்

ஆபரணத்தை அணிந்த மான் போன்ற தலைவி (கலை - 'மேகலை' என்பதன் முதற்குறை), ['அழகிய கலைமான்' என்னும் சிலேடை நயம் காண்க], வரும் ஆறு என்கொல் - வரும் விதம் எப்படியோ. கொல் - ஐயம். 'வரும் ஆறு' என்பது இடைநிலைத் தீவகமாய் முன்னும் பின்னும் இயைந்து இரு பொருள்பட நின்றது.

165] இறையோன், நெறியினது எளிமை கூறல் [ரூ

வடுவரி நீள்கண்ணி! அஞ்சலம் யாம்தஞ்சை வாணன்வெற்பில்
கொடுவரி கேழல் குழாம்பொரு கொல்லையும் குஞ்சரம்தேர்ந்
தடுவரி தாவும் அடுக்கமும் சூர்வழங் காறும்ஐவாய்க்
கடுவரி நாகம் தவாமல்கு கல்அளைக் கானமுமே.

து - ரை : 'கண்ணி! யாம், கொல்லையும், அடுக்கமும், ஆறும், கானமும் அஞ்சலம்,' என இயைக்க. வடு - மாம்பிஞ்சு போன்ற, வரி - செவ்வரியோடுகூடிய, நீள்-நீண்ட, கொடு வரி - புலிகளும், கேழல் குழாம் - பன்றிக் கூட்டமும், பொரு - போர் புரிகின்ற, குஞ்சரம் தேர்ந்து - யானையைத் தேடி, அடு அரி - கொல்லும் சிங்கம், தாவும் - பாயும், அடுக்கம் - மலைப்பக்கம், சூர் வழங்கு ஆறு - (அச்சத்தைக் கொடுக்கும்) சூர் அர மகள் என்னும் தெய்வப்பெண் இயங்குகின்ற வழி, ஐ வாய்க் கடு வரி நாகம் - ஐந்து வாயும் விஷமும் கோடுகளும் உடைய நாகங்கள், தவா - கெடாமல் ('தவா அப் பிறப்பீனும்' - குறள், செய். 361.), மல்கு - (நாளுக்கு நாள்) விருத்தியாகின்ற, கல் அளை - கல்லில் வளைகளையுடைய, கானம் - காடு, அஞ்சலம் - பயப்படோம்.

166] பாங்கி, அவன் நாட்டு அணி இயல் வினாதல் [சு

பூந்தழை யாது? மலைமலர் யாது? புனைஇழையும்
சாந்தமும் யாது? தடம்பொழில் யாது? தரணியின்மேல்
மாந்தரில் வேள்அன்ன வாணன்தென் மாறை வளநகர்சூழ்
தேந்தரு சோலைவெற் பா!உங்கள் நாட்டுறை செல்வியர்க்கே.

து - ரை : [தோழி, தலைவன் நாட்டுப் பெண்கள் அணியும் அணியையும் இயலையும் வினவுதல்] 'வெற்பா! உங்கள் நாட்டு உறை செல்வியர்க்குப் பூந்தழை யாது? மலை மலர் யாது? புனை இழை(யோடு) சாந்தம் யாது? பொழில் யாது?' என இயைக்க. தரணி - பூமி, மாந்தரில் - மக்களுள், வேள் - மன்மதன், தேம் தரு - தேனைத் தருகின்ற, செல்வியர்க்கு - சீமாட்டிகளுக்கு, பூந்தழை - (இடையில் உடுக்கும்) அழகிய தழை, மலை மலர்-சூடும் பூ, புனை - அணிகின்ற, இழை-ஆபரணம், சாந்தம் - (பூசும்) சந்தனம், தடம்பொழில் - (விளையாடும்) பெரிய சோலை. இழையும், சாந்தமும் - உம், அசை. 'இழையோடு' என மூன்றனுருபு வருவித்துரைக்கப்பட்டது.

167] தலைவன், அவள் நாட்டு அணி இயல் வினாதல் [ரு

எங்நாட் டவர்அணி கூறிஎன் பேறிங் கிகல்வடிவேல்
மைந்நாட்ட வெண்முத்த வாள்நகை யாய்!தஞ்சை வாணன்மண்மேல்
உங்நாட் டரிவையர் ஆடிடம் சாந்தம் ஒளிஇழைபூ
மொய்ந்நாள் தழையொடெல் லாம்ஒழி யாமல் மொழிஎனக்கே.

து - ரை: 'நகையாய்! எம் நாட்டவர் அணி கூறிப் பேறு என்? வாணன் மண்மேல் இங்கு உம் நாட்டு அரிவையர் ஆடு இடம், சாந்தம், ஒளி இழை, பூ, தழையொடு எல்லாம் ஒழியாமல் எனக்கு மொழி,' என இயைக்க. இகல் வடிவேல் மைந்நாட்டம்-போர் செய்யும் கூர்மையான வேல் போன்ற மை தீட்டிய கண்கள், வாள் - ஒளி, நகை - பல் ('நிரைமுத் தனைய நகையுங் காணாய்' - மணிமே. காதை, 20, அடி, 49), அரிவையர் - பெண்டிர், மொய் - நெருங்கிய, நாள் தழை - புதிய தழை ('கோதையை நாள்நீர் ஆட்டி' - சிலப். காதை, 16, அடி, 8), ஒழியாமல் - விடாமல். மொய்ந் நாள் - ய் - ஆசு இடையிட்ட எதுகை.

168] தன் நாட்டு அணி இயல் பாங்கி சாற்றல் [சு

வகைகொண்ட மாந்தழை, காந்தளம் போது, மருப்பின்முத்தம்,
தகைகொண்ட சந்தனச் சாந்தணிந் தாடுவர் தஞ்சையர்கோன்
மிகைகொண்ட தெவ்வரை வென்கண்ட வாணன்வெற் பா!எமதூர்
நகைகொண்ட வல்லிஅன் னார்எல்லி நாக நறுநிழலே.

து - ரை: 'வாணன் வெற்பா! எமது ஊர் நகை கொண்ட வல்லி அன்னார், மாந்தழை, காந்தளம்போது, முத்தம், சந்தனச் சாந்து அணிந்து, எல்லி நாகம் நறுநிழல் ஆடுவர்,' என இயைக்க. மிகை - குற்றம், தெவ்வர் - பகைவர், வென் கண்ட - முதுகைக் கண்ட (வென்ற), ஊர் - ஊரில், நகை- மகிழ்ச்சி, வல்லி - பூங்கொடி, வகை கொண்ட - (தழை) இனத்தில் (ஆராய்ந்து) கொண்ட, போது - பூ, மருப்பின் - யானைத் தந்தத்தின், தகை - அழகு, சந்தனச் சாந்து - சந்தன விழுது, எல்லி - இரவில், நாகம் - புன்னை மரம், நிழல் - நிழலில். 'தஞ்சையர் கோனாகிய வாணன்' என இயைக்க. இதனால் தோழி குறியிடம் கூறினாள் என்க. 'அணிந்து' என்பது, உடுத்தல் சூடுதல் பூணுதல் பூசுதல் ஆகியவற்றிற்குப் பொது வினை.

169] இறைவிக்கு இறையோன் குறை அறிவுறுத்தல் [எ

புயல்வ றதிர்தொறும் பொங்குளை மீதெழப் போதகம்தேர்ந்
தியல்வ றதிரும் இருங்கங்குல் வாய்முத்தம் ஈன்றசங்கம்
வயல்வ றணைவள ரும்தஞ்சை வாணன் வரையில்உண்கண்
கயல்வ றனையநின் பால்வரல் வேண்டினர் காதலரே.

து - ரை: [தோழி, தலைவிக்குத் தலைவன் குறையை அறிவித்தல்] '(தலைவியே!) வாணன் வரையில் கயல் ஏறு அனைய உண் கண் நின்பால் காதலர் வரல் வேண்டினர்,' என இயைக்க. புயல் ஏறு - இடி, அதிர் தொறும் - இடிக்கும்போதெல்லாம், பொங்கு உளை மீது எழ - மிகுந்த பிடரி மயிர் மேலே சிலிர்க்க, போதகம் தேர்ந்து - யானையைத் தேடி, இயல் ஏறு - இயங்குகின்ற ஆண் சிங்கம், அதிரும் - கர்ச்சிக்கும், இருங்கங்குல்வாய் - பேரிரவில், ஏறு அணை - உயர்ந்த வரம்பில், வளரும் - உறங்கும், கயல் ஏறு - (ஏறு கயல்) சிறந்த கெண்டைமீன், உண் கண் - மையுண்ட கண்களையுடைய, நின்பால் - உன்னிடம். சிங்கம், இடி முழக்கத்தை யானையின் பிளிறல் எனக் கருதினதென்க. இது மயக்க அணி. தலைவி - முன்னிலை எச்சம்.

170] நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல் [அ

விடவார் கணைவிழி மெல்லியல் மாதரை மேதினியோர்
மடவார் எனும்உரை வாய்மை!நெஞ் சே!தஞ்சை வாணன்தெவ்வின்
கடவா ரணம்திரி கங்குல்நம் கண்அன்ன காதலர்முள்
பிடவார் சிறுநெறி வாய்வரல் வேண்டினள் பெண்அணங்கே.

து - ரை: [தோழி கூறியதற்குத் தலைவி உடன்படாமல் தன் மனத்தொடு கூறல்] 'நெஞ்சே! பெண் அணங்கு, கங்குல் முள் பிடவு ஆர் சிறு நெறிவாய் நம் காதலர் வரல் வேண்டினள்; மேதினியோர் மாதரை 'மடவார்' எனும் உரை வாய்மை!' என இயைக்க. தெவ்வின் - பகைவரைப் போல, கடவாரணம் - மதயானை, பிடவு - பிடவமரம், ஆர் - அடர்ந்த, சிறு நெறிவாய் - கஷ்டமான வழியில், பெண் அணங்கு - தெய்வப் பெண்போல் வாளாகிய தோழி (பின் மொழி நிலையல்), விட வார் - விஷம் பொருந்திய நீண்ட, மடவார் - அறிவிலார், வாய்மை - உண்மை. இக்கவி வேற்றுப் பொருள் வைப்பு அணி.

171] நேரிழை, பாங்கியொடு நேர்ந்து உரைத்தல் [கூ

வெங்குல வாரணம் ஏற்றவர்க் கேநல்கி வேற்றரசர்
தங்குல வாழ்வு தவிர்த்தருள் வாணன் தமிழ்ச்சிலம்பில்
கங்குல வாவினர் காதலர் ஆயின், களிபயந்த
கொங்குல வாஅலர் சூழ்குழ லாய்!என்கொல் கூறுவதே?

து - ரை: [தலைவி, தோழியோடு உடன்பட்டுக் கூறுதல்] 'குழலாய்! காதலர் கங்குல் அவாவினர் ஆயின், கூறுவது என்?' என இயைக்க. வெங் குல வாரணம் - கொடிய கூட்டமாகிய யானைகளை, ஏற்றவர் - யாசித்தவர், நல்கி - கொடுத்து, வேற்றரசர்தம் - பகையரசருடைய, குல வாழ்வு - குலத்திலுள்ளோர் வாழ்வை, தவிர்த்தருள் - நீக்கியருளுகின்ற ('பகைவரைக் குலத்தோடு அழிக்கின்ற' என்பது கருத்து), தமிழ்ச் சிலம்பு -

பொதிய மலை, களி பயந்த - (வண்டுகளுக்குக்) களிப்பைத் தந்த, கொங்கு உலவா - தேன் குறையாத, அலர் சூழ் - மலர் சூழ்ந்த, ('கூறுவது என்?' என்றதால் உடன்பட்டமை ஆயிற்று). கொல் - அசை.

172] நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்கு உரைத்தல் [ய

பரவாத வண்ணம் பரவியும், பாதம் பணிந்தும்,நெஞ்சம்
கரவாத பொன்னைநின் காரண மாகக் கபிலைஎன்றே
வரவா தவன்அஞ்சும் வெண்மா ளிகைத்தஞ்சை வாணன்வெற்பா!
இரவாத வண்ணமெல் லாம்இரந் தேன்இவ் விரவிடையே.

து - ரை: [தலைவி உடன்பட்டதைத் தோழி தலைவனுக்கு உரைத்தல்] 'வெற்பா! நின் காரணமாக நெஞ்சம் கரவாத பொன்னைப் பரவியும் பணிந்தும் இவ்விரவிடை இரந்தேன்,' என இயைக்க. ஆதவன் - சூரியன், நின் காரணமாக - உன்பொருட்டு, நெஞ்சம் கரவாத - (தன்) மனக் கருத்தை (என்னிடம்) மறையாத, பொன்னை - இலக்குமி போன்ற தலைவியை, பரவாத - புகழாத, வண்ணம் - விதம், இரவாத - வேண்டாத, இரவிடை - இரவில்.

173] குறியிடை நிறீஇத் தாய் துயில் அறிதல் [யக

மாகம் தரியலர்க் கீந்தருள் வாணன்தென் மாறைவெற்பில்
மேகம் தரும்மின் இடைஅன்ன மே!விரை நாள்மலர்வேய்
நாகம் தழுவும் குடம்பையின் வாய்நடு நாள்இரவில்
சோகம் தவிர்வில வாய்த்துயி லாததென் தோகைகளே?

து - ரை: [தோழி, தலைவனைக் குறியிடத்தில் நிறுத்தித் தாயின் உறக்கத்தை அறிதல்] 'அன்னமே! நடு நாள் இரவில் தோகைகள் சோகம் தவிர்விலவாய்க் குடம்பையில் துயிலாதது என்?' என இயைக்க. தரியலர் - பகைவர், மாகம் - வானுலக வாழ்வை, ஈந்தருள் - கொடுத்தருளும், மின் - மின்னலைப்போன்ற, இடை - இடுப்பையுடைய, அன்னமே - அன்னம் போன்றவளே, விரை - மணம், வேய்-பொருந்திய, நாகம் தழுவும் - புன்னை மரத்தில் அமைந்த, குடம்பையின்வாய் - கூட்டில், நடு நாள் இரவில் - பாதி இரவில், தோகை - மயில் (சினையாகு பெயர்), சோகம் - துன்பம், தவிர் விலவாய்-நீங்காதனவாய், என் - என்ன காரணம். இக்கவி பிறிதின் நவிற்சி அணி. (தோழி இங்ஙனம் கூற, தாய் விழித்திருப்பின் மறு மொழி கூறு வள்; மறு மொழி கூறாளாயின், தோழி அவள் துயில்வதை அறிவள்.)

174] பாங்கி, இறைவிக்கு இறைவன் வரவு அறிவுறுத்தல் [யஉ

கந்தாரம் நாணும் கனிந்தசொல் லாய்!நம் கடிமனைக்கே
வந்தார் அவாவின் பெருமையி னால்;தஞ்சை வாணன்வெற்பில்

கொந்தார் அசோகம் தரும்செழும் போதும் கொழுந்தழையும்
தந்தார் அகலம் தழீஇ அகலாது தணந்தவரே.

து - ரை: [தோழி, தலைவன் குறியிடத்தில் வந்ததைத் தலைவிக்கு அறிவித்தல்] 'சொல்லாய்! போதும் தழையும் தந்து, ஆர் அகலம் தழீஇ, அகலாது தணந்தவர், அவாவின் பெருமையினால், நம் கடிமனைக்கே வந்தார்,' என இயைக்க. கந்தாரம் - கந்தாரமென்னும் இராகம், நாணும் - வெட்கத் தகுந்த, கனிந்த - இனித்த, சொல்லாய் - சொல்லையுடையவளே, கொந்து ஆர் - கொத்துப்பொருந்திய, அசோகம் - அசோக மரம், போது - மலர், கொழுந்தழை - செழிப்பான தழை, ஆர் - அழகு (ஆ. நி.), அகலம் - மார்பில் உள்ள முலைகளை (இடவாகு பெயர்), தழீஇ - அணைத்து, அகலாது - (மனத்தால்) பிரியாமல், தணந்தவர் - (உடலால்) பிரிந்த தலைவர், அவாவின் பெருமை - ஆசைப்பெருக்கம், கடி மனைக்கு - காவலிடத்துக்கு.

175] தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சேறல் [யரு

மின்னேய் அயிலொடு மின்விளக் காவந்த வெற்பரைநாம்
பொன்னே! எதிர்கொளப் போதுகம் வா;புவி ஏழினுக்கும்
தன்னேயம் வைத்தருள் சந்திர வாணன் தமிழ்ச்சிலம்பில்
நின்னேர் இயல்மயில் கண்துயில் நாக நிழலகத்தே.

து - ரை: 'பொன்னே! வந்த வெற்பரைத் தமிழ்ச்சிலம்பில் நாக நிழலகத்து நாம் எதிர் கொளப் போதுகம்,' என இயைக்க. பொன்னே - இலக்குமி போன்றவளே, மின் எய் - ஒளி பொருந்திய, அயில் - வேல், மின் - மின்னல், விளக்கா - விளக்கு ஆகும்படி, வந்த - (இரவில்) வந்த, நேயம் - அன்பு, நின் நேர் இயல் - உனக்கு ஒப்பான சாயலையுடைய, கண் துயில் - உறங்குகின்ற, நாக நிழலகத்து - புன்னைமர நிழலில், எதிர்கொள - வரவேற்க, போதுகம் - போவோம்.

176] குறி உய்த்து அகறல் [யசு

மந்தாரம் அன்னகை வாணன்தென் மாறை மயில்அனையாய்!
நந்தா வனப்பொய்கை நான்கொய்கு வேன்;குழல் நாணும்கங்குல்
கொந்தார் தெரியல்நின் செங்கனி வாயொடும் கொங்கையொடும்
பைந்தா மரையையும் சேதாம் பலையும் பகைப்பித்ததே.

து - ரை: [தோழி, தலைவியைக் குறியிடத்திற் செலுத்தித் தான் பிரிந்து போதல்] 'மாறை மயில் அனையாய்! கங்குல், நின் வாயொடும் கொங்கையொடும் தாமரையையும் சேதாம்பலையும் பகைப்பித்தது; நான் நந்தாவனப் பொய்கை கொய்குவேன்,' என இயைக்க. மந்தாரம் - (பஞ்ச தருக்களில் ஒன்றாகிய) மந்தார விருட்சம், குழல் நாணும் கங்குல் - (உனது)

கூந்தலுக்கு வெட்கும் இரவானது, கொந்து ஆர் தெரியல் - பூங்கொத்துப் பொருந்திய மாலையை அணிந்த, சேதாம்பல் - செவ்வல்லி மலர், பகைப்பித்தது - பகைக்கச் செய்தது ; (ஆதலால்) நந்தாவனப் பொய்கை - பூந்தோட்டத்திலுள்ள குளத்திலிருக்கும் அம்மலர்களை (இடவாகு பெயர்). ('யான் கொய்துவரும் அளவும் நீ இவ்விடம் நிற்க,' எனக் கூறி நீங்கினள் என்க). இக்கவி ஒட்டணி (தண்டி. சூ. 51.)

177] வண்டு உறை தாரோன் வந்து எதிர்ப்படுதல் [யரு

முதிரா முலை!இப் பனிஅந்த காரம் முனியவல்ல
கதிரா யிரம்இல்லை; ஏழ்பரித் தேர்இல்லை; காவல்வெய்யோற்
கெதிரா தல் சோமற் கியல்வதன் றே! நும்இல் யார்திறந்தார்
மதுரா புரித்தமிழ் தேர்வாணன் மாறை வனத்துவந்தே?

து - ரை : [தலைவன் வந்து, குறியிடத்தில் நின்ற தலைவியைச் சந்தித்தல்] 'முதிரா முலை! வாணன் மாறை வனத்து வந்து நும் இல் திறந்தார் யார்?' என இயைக்க. முலை - முலையை உடையவரே (சினையாகு பெயர்), பனி அந்தகாரம் - பனி பொருந்திய இருளை, முனிய வல்ல - கோபித்து நீக்க வல்ல, ஆயிரம் கதிர் - ஆயிரம் கிரணங்களை உடைய சூரியன், ஏழ் பரித்தேர் - (அச்சூரியனைத் தாங்கி வரும்) ஏழு குதிரைகளையுடைய தேர், காவல் - காத்தலில் வல்ல, வெய்யோன் - சூரியன், எதிர் ஆதல் - எதிராக வந்து திறத்தல், சோமற்கு - சந்திரனுக்கு, இயல்வது அன்றே - முடிவது அல்லவே, (அங்ஙனம் இருக்க) வனத்து - நீரில், நும் இல் - (தாமரையாகிய) உமது வீட்டை. ('சூரியன் பூட்டிச் சென்ற உமது மலர் வீட்டை அவன் இல்லாத இவ்விரவில் திறந்தவர் யாவர்? நீர் எவ்வாறு அவ்வீட்டிலிருந்து வெளிப்பட்டீர்?' என்பது தலைவன் தலைவியைத் திருமகளாகக் கருதிச் சொல்லியது.)

178] பெருமகள், ஆற்றினது அருமை நினைந்து இரங்கல் [யகூ

செழியன் கயலைத் திசைவைத்த வாணன்தென் மாறைஎன்மேல்
கழியன் புடையநின் கால்கண்க ளாகக் கராம்பயிலும்
குழியன்றி யும்வெஞ் சுழியொன்றும் யாறும் குழீஇக்கொடிதாம்
வழியன்ப! நீஎங்ங னேவந்த வாறிம் மழைஇருளே?

து - ரை : [தலைவி, தலைவன் வரும் வழியினது அருமையை நினைந்து வருந்துதல்] 'அன்ப! நின் கால் கண்கள் ஆக, இம்மழை இருள் கொடிது ஆம் வழி நீ வந்த ஆறு எங்ஙன்?' என இயைக்க. அன்ப - அன்பனே, செழியன் - பாண்டியனது, கயல் - மீனக்கொடி, திசை வைத்த - (எட்டுத்) திக்கிலும் நிறுத்திய, வாணன் - (பாண்டியனுக்கு மந்திரியாகிய) வாண

னுடைய, மாறை - மாறை நாட்டிலுள்ள, கழி அன்பு - மிக்க அன்பு, கால் - கால்களே, கண்கள் ஆக - (வழியறிந்து நடக்கக்) கண்களாகும்படி, கராம் பயிலும் - முதலைகள் தங்கியிருக்கும் ('புலவர் பயிலும் திருப்பனையூர்' - தேவா.), குழி - குழிந்த மடு (தொழிலாகு பெயர்), அன்றி - அல்லாமலும், வெஞ்சுழி ஒன்றும் - கொடிய (நீர்ச்)சுழி பொருந்தும், யாறு - மலையாறு, குழீஇ - கூடி, மழை இருள் - மழைக்கால இருளில், எங்ஙன் - எவ்வாறு.

179] புரவலன் தேற்றல் [யள

வெயிலுந் தரவிந்த மென்மலர் அன்னமும் விந்தைவெற்றி
மயிலும் பயில்புயன் வாணன்தென் மாறைநின் வாள்விழிபோல்
அயிலும், குயில்மொழி! நின்இடை போல்மின்னும், ஆடளிகள்
பயிலும் தொடைநின் குழல்போல் இருளைப் பருகினவே.

கு - ரை: [தலைவன், தலைவியைத் தேற்றுதல்] 'குயில் மொழி! அயிலும் மின்னும் இருளைப் பருகின,' என இயைக்க. குயில் மொழி - குயில் போன்ற மொழியை உடையவளே (உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), வெயில் உந்து அரவிந்தம் - சூரியன் மலரச் செய்த தாமரை, அன்னம் - அன்னம் போன்ற செல்வ இலக்குமி, விந்தை வெற்றி மயில்-விசய லக்குமி, பயில் - தங்கியுள்ள, புயன் - தோளையுடையவனாகிய, மாறை - மாறை நாட்டிலுள்ள, வாள் - ஒளி, போல் - போலும், அயில் - (என் கையிலுள்ள) வேல், மின் - மின்னல், ஆடு அளிகள் - ஆடும் வண்டுகள், தொடை - மலர் மாலை சூடிய, விழி போல் அயில், குழல் போல் இருள் - விபரீத உவமை, பருகின - குடித்தன (உபசார வழக்கு). 'ஆதலால், யான் அச்சமின்றி வந்தேன்,' என்றான் என்க.

180] புணர்தல் [யஅ

சுழிநீர் அலைகடல் தொல்உல கேழினும் தோன்றும்வண்மைக்
கழிநீடும் ஆடக மேருவின் மீதினும் காவல்கொண்டு
வழிநீள் புகழ்கொண்ட வாணன்தென் மாறை வரையில்மலர்ப்
பொழில்நீழல் உம்பர் அமுதனை யாரைப் புணர்ந்தனமே.

கு - ரை: '(யாம்) உம்பர் அமுது அனையாரை மாறை வரையில் மலர்ப் பொழில்நீழல் புணர்ந்தனம்,' என இயைக்க. சுழி நீர் - சுழிந்த நீரும், அலை - அலையும் பொருந்திய, கடல் - கடலால் சூழ்ப்பட்ட, தொல் உலகு - பழைய உலகம், தோன்றும் - உண்டாகும், வண்மை - வளப்பத்தையுடைய, கழி நீடும் - மிக உயரும், ஆடக மேரு - பொன் மயமான மேரு மலை, காவல் - காக்கும் தொழிலை, வழி - (அத்தொழில்) வழியிலே, நீள் புகழ் - நீண்ட புகழை, உம்பர் அமுது - தேவாமிர்தம், பொழில் - சோலை, யாம் - தோன்றா எழுவாய்.

181] புகழ்தல் [௰௯

மண்ணார் பெரும்புகழ் வாணன்தென் மாறை வரைஅகிலும்
தண்ணா ரமும்கமழ் சார்வருஞ் சாரலில் சார்ந்துறையும்
பெண்ணா ரணங்கன்ன நின்முகந் தான்கண்ட பின்னும்உண்டோ
கண்ணார் தடங்களின் வாயொடுங் காத கமலங்களே!

து - றை: [தலைவன், தலைவி நலத்தைப் புகழ்ந்து பேசுதல்] 'ஆரணங்கு அன்ன பெண்! நின் முகம் கண்ட பின்னும் தடங்களின் வாய் ஒடுங்காத கமலங்கள் உண்டோ!' என இயைக்க. தண் ஆரம் - குளிர்ச்சியான சந்தனம், கமழ் - வாசனை வீசுகின்ற, சார்வு அருஞ்சாரல் - (மற்றவர்) சார்தற்கு அரிய சாரல், உறையும் - வாழும், பெண் - பெண்ணே (அண்மை விளி), முகந்தான் - முகத்தை (தான் - அசை), கண் ஆர் - இடம் ஆர்ந்த (விசாலமான), தடங்களின் - குளங்களில், வாய் ஒடுங்காத - வாய் குவியாத. இக்கவி தற்குறிப்பேற்ற அணி.

182] இறைமகள், இறைவனைக் குறி வரல் விலக்கல் [௨௰

மூரல் கதிர்முத்த வார்முலை ஆவியின் மூழ்கத்தனி
வாரற்க நீதஞ்சை வாணன்வெற் பா!வய மாவழங்கும்
வேரல் கடிய கவலையி னூடு வெயிலவற்கும்
சாரற் கருமைய தால்இருள் கூரும்எம் சாரலிலே.

து - றை: [இறைமகள் - தலைவி] 'வாணன் வெற்பா! வெயிலவற்கும் சாரற்கு அருமையதால், இருள் கூரும் எம் சாரலில், நீ முலை ஆவியில் மூழ்கத் தனி வாரற்க,' என இயைக்க. வயமா - வலிமை பொருந்திய மிருகங்களாகிய சிங்கமும் புலியும் யானையும், வழங்கும் - சஞ்சரிக்கும், வேரல் - மூங்கிற்புதர் அடர்ந்த, கடிய - கடுமையான, கவலையினூடு - கவர் வழியில், வெயிலவற்கும் - சூரியனுக்கும், சாரற்கு - சேர்தற்கு, அருமையதால் - அருமையுடையது ஆதலால், கூரும் - மிகும், மூரல் - நகைத் தலைப்போன்ற, கதிர் - கிரணங்களையுடைய, முத்தம் வார் முலை - முத்தாரமும் கச்சும் பொருந்திய முலையாகிய, ஆவி - குளம்.

183] இறைவியை இல்வயின் விடுத்தல் [௨௧

மல்லையும் போர்வென்ற வாணன்தென் மாறைநின் மாளிகையாம்
தொல்லையும் போருகம் தேடவும் கூடும்; தொடித்தளிரால்
முல்லையும் போதும் முகையும்கொய் யாது முகிழ்முலையாய்!
செல்லையும் பொன்பளிங் கின்தலம் பாதம் சிவப்பிக்கவே.

து - றை: [தலைவன், தலைவியை வீட்டிற்கு அனுப்புதல்] 'முகிழ் முலையாய்! நின் மாளிகை ஆம் அம்போருகம் தேடவும் கூடும்; பாதம்

பொன் பளிங்கின் தலம் சிவப்பிக்கச் செல்,' என இயைக்க. முகிழ் - அரும்பு போன்ற, மல்லை - (தஞ்சாக்கூருக்கு அருகில் உள்ள) மல்லை என்னும் ஊரில் நடந்த, மாறை - மாறை நாட்டிலுள்ள, தொல்லை அம்போருகம் - பழைய தாமரை மலரானது, தேடவும் கூடும் - (உன்னைத்) தேடுதலும் கூடும், (ஆதலால்) தொடி - வளையலையுடைய, தளிரால் - தளிர் போன்ற (உனது) கையினல் (உவமையாகு பெயர்), போதும் - மலரும், முகையும் - அரும்பும், கொய்யாது - பறியாமல், பாதம் - (உன் செந்தாமரை போன்ற) பாதங்கள், பொன் பளிங்கின் தலம் - அழகிய பளிங்குத் தலத்தை, சிவப்பிக்க - சிவப்படையச் செய்யும்படி, செல் - செல்வாயாக. மல்லையம், முல்லையம் - அம், சாரியை. செல்லையம் - ஐ, சாரியை; அம், அசை.

184] இறைவியை எய்திப் பாங்கி கையுறை காட்டல் [உஉ

முகையாய் அலராய் முலைக்கும்நின் வாய்க்கும் முறைமுறையே
பகையாம் முளரியும் சேதாம் பலும்இவை ; பைங்கழுநீர்,
வகையார் தொடைபுனை வாணன்தென் மாறையின் மௌவல்அன்ன
நகையாய் ! அவை;இவை நின்குழற் காம்முல்லை நாள்மலரே.

து - ரை : 'நகையாய்! முளரியும் சேதாம்பலும் இவை ; பைங்கழுநீர் அவை ; இவை நின் குழற்கு ஆம் முல்லை நாள் மலர்,' என இயைக்க. வகை ஆர் தொடை - தளிரும்பூவும் விரவித்தொடுத்த மாலையை ('வகைத் தார் மார்பன்'-பெருங். 4, 4), மௌவல் - காட்டுமல்லிகை, நகையாய் - பல்லை உடையவளே, முகை - அரும்பு, அலர் - மலர் ('முகையாய் முலைக்கும், அலராய் வாய்க்கும்,' என நிரல் நிறையாகக் கொள்க), முறை முறையே - நிரல் நிறையாக, முளரி - தாமரை, சேதாம்பல் - செவ்வல்லி, பைங்கழுநீர் - பசுமையான குவளை, குழற்கு ஆம் - கூந்தலுக்குச் சூடுதற்குத் தக்கது ஆகும், நாள் மலர் - புதியமலர். தலைவி கூந்தலிற் சூடுதற்குரியது முல்லையாயினும், முளரியும் சேதாம்பலும் பைங்கழுநீரும் அவளுடைய முலைக்கும் வாய்க்கும் கண்ணுக்கும் பகையாம் எனத் தோழி அவற்றையும் கொய்து வந்தனள் என்க.

185] இற்கொண்டு ஏகல் [உரு

ஒல்கா இருள்மணந் தொல்கரும் போழ்தின் உணர்ந்துநம்மை
நல்கா இயல்பன்னை நாடினும் நாடும் ; நடந்தருள்நீ
மல்காவி சூழ்தஞ்சை வாணன்தென் மாறையின் வள்ளையின்மேல்
செல்காவி அன்ன விழித்திரு வே!நின் திருமனைக்கே.

து - ரை : [பாங்கி, தலைவியை இல்லத்திற்கு அழைத்துச்செல்லுதல்]
'திருவே ! நல்கா இயல்பு அன்னை, ஒல்கா இருள் மணந்து ஒல்கரும்போழ்தின் உணர்ந்து, நம்மை நாடினும் நாடும் ; நீ நின் திருமனைக்கு நடந்தருள்,'

என இயைக்க. மல்கு ஆவி - (நீர்) நிறைந்த குளங்கள், மாறையின் - மாறை நாட்டில், வள்ளை - வள்ளைக்கொடி, செல் காவி - செல்கின்ற கருங்குவளை மலர் (வள்ளை காதிற்கும், காவி கண்ணிற்கும் உவமை; 'காதளவு நீண்ட கண்' என்பது கருத்து), திருவே - இலக்குமியைப் போன்றவளே, நல்கா இயல்பு - (நம்மைப்) பெறுத இயல்பினையுடைய, அன்னை - செவிலித்தாய், ஒல்கா - சுருங்காத, இருள் மணந்து - இருளையடைந்து, ஒல்கரும் போழ்தின் - சுருங்குதற்கு அரிய இராப்போதில், உணர்ந்து - உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து, நாடினும் நாடும் - தேடினாலும் தேடுவாள் ஆதலின். 'நல்கா இயல்பு' அன்னை என்பதற்குப் 'பெறும் அவ்வியல்பை உடைய தாய்' எனவும் பொருள் கூறுவர்.

186] பின் சென்று இறைவனை வரவு விலக்கல் [உச

வெம்போர் முருகென்ன வேல்வலன் ஏந்தி, வெறிதிங்ஙனே
வம்போர் நகர்எல்லி வாரல்வெற் பா!மரு வாஅரசர்
தம்போர் கடந்த தடம்புய வாணன் தமிழ்த்தஞ்சைநாட்
டம்போ ருகம்அல்ல வோதிருக் கோயில் அணங்கினுக்கே!

து - றை: [தலைவியை வீட்டிற் சேர்த்த தோழி, பின்பு தலைவனிடம் சென்று, 'இவ்விருளில் இனி வாரற்க,' என்று வரவு விலக்கிக் கூறல்] 'வெற்பா! தஞ்சை நாட்டு அணங்கினுக்குத் திருக்கோயில் அம்போருகம் அல்லவோ! இங்ஙனே வெம்போர் முருகு என்ன வேல் வலன் ஏந்தி வம்பு ஓர் நகர் எல்லி வாரல்,' என இயைக்க. மருவா அரசர் தம் - பகை மன்னருடைய, கடந்த - வென்ற ('போரமர்க் கடந்த' - பெரும்பாண். அடி, 416), நாட்டு - நாட்டில் உள்ள, அணங்கினுக்கு - தெய்வப் பெண் போலும் தலைவிக்கு, திருக்கோயில் - சிறந்த அரண்மனை, அம்போருகம் - தாமரை மலர், அல்லவோ - ஓகாரம் எதிர்மறை (அம்போருகம் இரவில் மலராது ஆதலின், தலைவி மனை விட்டு வெளி வருதல் அரிது எனக் குறிப்பால் அறிவித்தவாறு காண்க), இங்ஙனே - இவ்வாறு, போர் - போரில், முருகு என்ன - முருகக் கடவுள் என்று சொல்லும்படி, வலன் - வலப்பக்கம், வெறிது - பயன் இன்றி, வம்பு ஓர் - புதுமையை ஆராயும் (காவலர் புதியவர்களாய் நகரில் நுழையும் ஒற்றர் முதலியோரை ஆராயும் என்பது கருத்து), நகர் - நகரில், எல்லி வாரல் - இரவில் நீ வராதே.

187] பெருமகன் மயங்கல் [உரு

வஞ்சம் கலந்த கலிவென்ற வாணன்தென் மாறைவெற்பில்
தஞ்சம் கலந்தசொல் தையலும் யானும் தனித்தனியே
நெஞ்சம் கலந்த நிலைமையெல் லாம்கண்டும், நீஅமுதில்
நஞ்சம் கலந்தனை யேஅனை வார்குழல் நன்னுதலே!

கு - ரை : [தலைவன், மயங்கிக் கூறல்] 'நனை வார் குழல் நல் நுதலே! தையலும் யானும் தனித்தனியே நெஞ்சம் கலந்த நிலைமை எல்லாம் கண்டும், நீ அமுதில் நஞ்சம் கலந்தனையே!' என இயைக்க. நனை வார் குழல் - அரும்பைச் சூடிய நீண்ட கூந்தலையும், நல் நுதலே - அழகிய நெற்றியையும் உடையவளே, வஞ்சம் கலந்த கலி - வஞ்சனை பொருந்திய கலி காலத்தை, தஞ்சம் கலந்த - பற்றுக்கோடாகப் பொருந்திய, சொல் தையல் - சொல்லையுடைய கட்டழகி, நெஞ்சம் கலந்த - ஒருவர் மனத்தில் ஒருவர் குடிகொண்ட, கண்டும் - அறிந்தும், அமுதில் நஞ்சம் கலந்தனையே - (இங்ஙனம் வரவு விலக்குவதால்) எங்கள் இன்பத்தில் துன்பத்தை நுழைத்தனையே. அமுதம் தலைவன் தலைவியர் இன்பத்திற்கும், நஞ்சம் பாங்கியின் வரவு விலக்கலுக்கும் உவமை. ('உனக்குச் சிறிதும் கருணை இல்லைபோலும்!' என்பது கருத்து.)

188] தோழி, தலைமகள் துயர் கிளந்து விடுத்தல் [உகூ

முன்னூர் அரவும் தெரியா இருள்நெறி முன்னிநையும்
மின்னூர் புனைஇழை மின்அனை யாள்உய்ய வேலின்வெம்போர்
மன்னூர் களிறு திறைகொண்ட வாணன்தென் மாறைஅன்ன
நின்னூ ரகம்புகுந் தால்,குறி காட்டு நெடுந்தகையே!

கு - ரை : [தோழி, தலைவனுக்கு அவன் செல்லும் வழி துன்பம் விளைக்குமே என்று தலைவி கொண்ட துயரைக் கூறி, 'நீ ஊர் போய்ச் சேர்ந்ததை யாம் அறியும்படி குறி செய்,' என்று தலைவனை வேண்டியனுப்புதல்] 'நெடுந்தகையே! இருள் நெறி முன்னி நையும் மின் அனையாள் உய்ய நின் ஊரகம் புகுந்தால் குறி காட்டு,' என இயைக்க. நெடுந்தகையே - பெருந்தன்மையுடையவனே, முன் ஊர் அரவும் - (உன்) முன்னே ஊர்ந்து செல்லும் பாம்பும், இருள் நெறி - இருளடர்ந்த வழியை, முன்னி நையும் - நினைத்து வருந்தும், மின் ஊர் - ஒளி பரவும், புனை இழை - அணியும் ஆபரணத்தையுடைய, மின் அனையாள் - மின்னலைப் போன்றவளாகிய தலைவி, உய்ய - (துன்பத்திலிருந்து) நீங்க ('தாவல் உய்யுமோ' - பதிற். 41, 17), போர் - போரில், மன் ஊர் களிறு - (பகை) அரசர் ஏறிச் செலுத்திய ஆண் யானைகளை, திறை - கப்பம், ஊரகம் - ஊரில், குறி - அடையாளம். குறி காட்டுதலாவது, சங்கு, ஊது கொம்பு முதலியவற்றுள் ஏதேனுமொன்றை ஒலிப்பித்தல்.

189] திருமகள் புணர்ந்தவன் சேறல் [உஎ

இருங்குன் றனமதில் எம்பதிக் கேகல் எளிது;செம்மை
தருங்குங் குமமுலைத் தையல்நல் லாய்!தஞ்சை வாணன்வெற்பில்

கருங்குஞ் சரஇனம் வெண்சிங்க ஏறஞ்சும் கங்குலின்எம்
மருங்கும் சுடர்விளக் காம்மட வார்குழை மாணிக்கமே.

து - ரை : [இலக்குமி போலும் தலைவியைப் புணர்ந்தவனுகிய தலைவன் தன் ஊர்க்குச் செல்லுதல்] 'தையல் நல்லாய்! வாணன் வெற்பில் கங்குலின் மடவார் குழை மாணிக்கம் எம்மருங்கும் சுடர் விளக்கு ஆம்; எம் பதிக்கு ஏகல் எளிது,' என இயைக்க. தையல் நல்லாய் - கட்டழகையுடைய தோழியே, குஞ்சர இனம் - யானைக் கூட்டம், சிங்க ஏறு அஞ்சும் - ஆண் சிங்கத்தைக்கண்டு பயப்படும், கங்குலின் - இரவில், எம்மருங்கும் - எப்பக்கமும், குழை - குண்டலத்தில் அமைதற்குரிய, சுடர் - பிரகாசம் பொருந்திய, ஆம் - ஆகும், (ஆதலால்) இருங்குன்று அன - பெருமலை போன்ற, மதில் - மதிலையுடைய, எம்பதிக்கு ஏகல் - எம் ஊர்க்கு (இருளில் வழி அறிந்து) செல்லுதல், எளிது - இலகுவான காரியம். ('அரவு ஈன்ற மாணிக்கம் எங்கும் ஒளி வீசுமாதலின், அவ்வொளியால் வழியறிந்து செல்லுதல் எளிது,' என்றான் என்க.)

க, ரு, ௫, எ-ஆம் கவிகள் வேண்டற்கும்; உ, உ௰, உச-ஆம் கவிகள் மறுத்தற்கும்; ச, சு, கூ-ஆம் கவிகள் உடன்படற்கும்; ௰, ௰௩, ௰உ, ௰௩-ஆம் கவிகள் கூட்டற்கும்; ௰௫, ௰எ, ௰அ-ஆம் கவிகள் கூடற்கும்; ௰க, உஉ-ஆம் கவிகள் பாராட்டற்கும்; உக, உரு-ஆம் கவிகள் பாங்கில் கூட்டற்கும்; அ, ௰சு, உ௫, உசு-ஆம் கவிகள் உயங்கற்கும் (உயங்கல் - வருந்தல்); கச, உஎ-ஆம் கவிகள் நீங்கற்கும் உரியவை.

# 13. இரவுக்குறி இடையீடு

[அல்ல குறி]

190] இறைவிக்கு இதுவா, இறை வரவு உணர்த்தல் [க

கயல்வென்ற உண்கண்ணி! காரணம் ஏதுகொல் கைதையங்கான்
அயல்நின்ற புன்னையின் அன்னமெல் லாம்அடல் ஆழிஅங்கைச்
சயமங்கை தன்பெரு மான்தஞ்சை வாணன் தரியலர்போல்
துயரம் பெருகி இராஒரு போதும் துயின்றிலவே!

து - ரை: [தலைவிக்குத் தோழி, தலைவன் வரவு உணர்த்தல்] 'உண்கண்ணி! புன்னையின் அன்னம் எல்லாம் வாணன் தரியலர்போல் துயரம் பெருகி இரா ஒரு போதும் துயின்றில; காரணம் ஏதுகொல்!' என இயைக்க. உண் - மையுண்ட, கைதை அம் கான் - தாழைக்காட்டின் (அம்-சாரியை), அயல் - பக்கத்தில், அடல் ஆழி - போர் புரியும் சக்கரத்தைத் தரித்த, சய மங்கைதன் பெருமான் - வெற்றி மாதுக்குத் தலைவனாகிய, தரியலர் - பகைவர், ஒரு போதும் - சிறிது நேரமும், துயின்றில - தூங்கவில்லை. ஏதுகொல் - யாதோ (அறியேன்), கொல் - ஐயம்.

191] தான் குறி மருண்டமை தலைவி அவட்கு உரைத்தல் [உ

பேசத் தருவதொன் றன்றுகண் டாய்;பிறி தோர்குறியை
நேசத் தவர்குறி என்றுசென் றியான்குறி நின்றுவந்தேன்
வாசத் தமிழ்புனை தோள்உடை யான்தஞ்சை வாணன்ஒன்னார்
தேசத் தவரும்எய் தாவெய்ய நோய்எய்திச் சேயிழையே!

து - ரை: [தலைவி, தான் மற்றொரு காரணத்தால் நிகழ்ந்த குறியைத் தலைவன் செய்த குறியென மயங்கினமையைத் தோழிக்குக் கூறுதல்] 'சேயிழையே! யான் பிறிது ஓர் குறியை நேசத்தவர் குறி என்று சென்று குறி நின்று, வெய்யநோய் எய்தி, வந்தேன்; பேசத் தருவது ஒன்று அன்று,' என இயைக்க. பிறிது ஓர் குறி - (தலைவர் செய்யாமல்) வேறு ஒன்றால் நிகழ்ந்த அடையாளத்தை, நேசத்தவர் குறி என்று - தலைவர் செய்த அடையாளமென்று நினைத்து, குறி நின்று - (அக்)குறியிடத்தில் காத்திருந்து, வாசத் தமிழ் - (புகழாகிய) மணத்தையுடைய தமிழ்ப்பாமாலையை, ஒன்னார் தேசத்தவர் - பகைவர் நாட்டிலுள்ளவர், நோய் - துன்பம், பேசத்தருவது ஒன்று அன்று - (அத்துன்பம்) சொல்லத்தருவது ஒன்று அன்று. கண்டாய் - முன்னிலை அசை. 'சென்றியான்' என்பதில் குற்றியலிகரம் அலகு பெறுதாயிற்று.

192] பாங்கி, தலைவன் தீங்கு எடுத்து இயம்பல் [ரூ

வடியோ எனும்கண் மடந்தைநல் லாய்! தஞ்சை வாணனைவந்
தடியோம் எனச்சென் றடையலர் போல்அயர் கின்றநின்கைத்
தொடியோட மென்பணைத் தோள்இணை வாடும் தொழில்புரிந்த
கொடியோர் துணிந்துசெய் தார்குறி யாத குறிநமக்கே.

கு - ரை : [தீங்கு -குறியாத குறியைச் செய்த பொல்லாங்கு] 'நல்லாய்! அயர்கின்ற நின் கைத்தொடி ஓடத் தோள் இணை வாடும் தொழில் புரிந்த கொடியோர், நமக்குக் குறியாத குறி துணிந்து செய்தார்,' என இயைக்க. வடியோ - மாம்பிஞ்சின் பிளவோ ('வடியன்ன உண்கட்கு' - கலி. செய். 64), வடியோ - ஓகாரம் வியப்புக் குறிப்பு ('முகம் திங்களோ காணீர்' - சிலப். செய். 11), வந்து - அசைநிலை, அடியோம் - யாம் உனக்கு அடிமை உடையோம், அடையலர் - சரண் புகாதவர், அயர்கின்ற - சோர்கின்ற, தொடி ஓட - (உடல் மெலிவால்) வளையல் கையை விட்டு நழுவி வீழ, பணைத்தோள் - மூங்கிலைப்போன்ற தோள், கொடியோர் - கொடியவராகிய தலைவர், குறியாத குறி - (உலகத்தில் வேறெவரும்) குறிப்பிடாத அடையாளத்தை ('உலகத்தார் எல்லாரும் செய்யும் குறியைப் போன்றதல்லாத வேறு குறி செய்து தலைவர் நம்மை அலையும்படி செய்தனர்,' என்பது கருத்து.)

193] தலைவன், புலந்து போதல் [ச

தேன்உற்ற வாகைஅம் தார்த்தஞ்சை வாணனைச் சேரலர்போல்,
மான்உற்ற பார்வை மயில்பொருட் டாக வழிதெரியாக்
கான்உற்ற கானல் கனைஇருள் வாய்வரக் கற்பித்தநீ,
யான்உற்ற நோய்கள்எல் லாம்படு வாய்இனி என்னெஞ்சமே!

கு - ரை : [தலைவன், குறியிடத்தில் நெடுநேரம் நின்றும் தலைவியைச் சந்திக்காமல் வருந்திச் செல்லுதல்] 'என் நெஞ்சமே! மயில் பொருட்டு வாணனைச் சேரலர்போல் வழிதெரியாக் கான் உற்ற கானல் கனை இருள் வாய் வரக் கற்பித்த நீ, இனி யான் உற்ற நோய்கள் எல்லாம் படுவாய்,' என இயைக்க. மான் உற்ற - மான் (பார்வையைப்போலப்) பொருந்திய, மயில் பொருட்டு ஆக - மயில் போன்ற தலைவியின் பொருட்டு (ஆக - அசை), வாகை அம் தார் - வெற்றி மாலையைத் தரித்த (அம் - சாரியை), சேரலர்போல் - சேராத பகைவரைப்போல, கான் - காட்டில், கானல் - சோலையில், கனை இருள்வாய் - நெருங்கிய இருளில், கற்பித்த - (என்னைக்) கற்கும்படி செய்த, இனி - இன்று, படுவாய் - அனுபவிப்பாய். (தலைவன், இங்ஙனம் வருந்தி, தான் குறியிடம் வந்து சென்றதற்கு

'அடையாளமாகத் தன் குவளை மலர் மாலையை அங்குள்ள தாழையின்மேல் சூட்டிப் போயினன் என அறிக.)

194] புலர்ந்த பின் வறுங்களம் தலைவி கண்டு இரங்கல் [௯

தாதகை தண்டலை சூழ்தஞ்சை வாணன் தடந்துறைவாய்
நீதகை கொண்டென்முன் நின்றனை யேசெந் நிறக்கனிவாய்
மேதகு முள்ளெயிற் றொண்முகைக் கொங்கைவெண் தோட்டுமென்பூங்
கேதகை என்னும்நல் லாய்!கொண்கர் மாலை கிடைத்ததென்றே.

கு - ரை : [பொழுது விடிந்த பின் தலைவி, தலைவன் இல்லாத வெற்றிடம் கண்டு வருந்தல்] 'கேதகை என்னும் நல்லாய்! கொண்கர் மாலை கிடைத்தது என்று நீ தகைகொண்டு வாணன் தடந்துறைவாய் என் முன் நின்றனை,' என இயைக்க. கனி வாய் - பழமாகிய வாயையும், மேதகு - மேன்மை பொருந்திய, முள் எயிறு - முள்ளாகிய பல்லையும், ஒள் முகைக் கொங்கை - விளக்கமான அரும்பாகிய முலையையும், தோடு - மடலையுமுடைய, மென்பூங்கேதகை - மெல்லிய அழகாகிய தாழை, நல்லாய் - பெண்ணே (தாழையை இங்ஙனம் பெண்ணென்று கூறியது உருவகம்), கொண்கர் - (என்) தலைவரின், தாது அகை - மகரந்தம் செறிந்த, தண்டலை - சோலை, தடந்துறைவாய் - விசாலமான துறையில், தகை - அழகு, நின்றனை - நின்றாய் (ஆதலால், நீ புண்ணியம் செய்தாய்). நின்றனையே - ஏ, அசை.

195] தலைவி, தன் தணக்கு உரைத்தல் [கூ

*தேனேர் அலங்கல் புனைபுகழ் வாணன் செழுந்தஞ்சைசூழ்
கானேர் குறியில் கனையிருள் வாய்வந்து கால்உழத்தி
யானே கியபின்பு தாம்வந்து போன தியம்புதற்கோ
மானே! இறைவர்வைத் தார்பங்க சாதம் வலம்புரிக்கே?

கு - ரை : [தலைவி, தன் தோழிக்குக் கூறுதல்] 'மானே! தஞ்சை சூழ் கான் நேர் குறியில் யான் கனை இருள்வாய் வந்து கால் உழத்தி ஏகிய பின்பு தாம் வந்து போனது இயம்புதற்கோ இறைவர் வலம்புரிக்குப் பங்கசாதம் வைத்தார்?' என இயைக்க. மானே - மான் போன்ற தோழியே, தேன் ஏர் அலங்கல் - தேன் பொருந்திய அழகிய மாலை, புகழ் - புகழையுடைய, சூழ் கான் நேர் - சூழ்ந்த சோலையில் பொருந்திய, குறியில் - குறியிடத்தில், கனை இருள்வாய் - நெருங்கிய இரவில், கால் உழத்தி - காலை வருத்தி,

* இது 'நம்பி அகப்பொருள்' சங்கப் பதிப்பில் (பக்-௬00) இக்கிளவிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. பழைய பதிப்பில் இங்கு 'வரலிக்கரிய' எனத் தொடங்கும் செய்யுள் (அம்பிகாபதி கோவை, செய். 198) அமைந்துள்ளது.

இயம்புதற்கோ - (நமக்குத்) தெரிவிப்பதற்கோ, இறைவர் - (நம்) தலைவர், வலம்புரிக்கு - நந்தியாவர்த்தச் செடியில் (வேற்றுமை மயக்கம்), பங்க சாதம் - (சேற்றில் பிறந்த) குவளை மலரலான மாலையை, வைத்தார் - அமைத்தனர். காரண இடுகுறியாய்த் தாமரையை உணர்த்தும் 'பங்க சாதம்' என்பது, இங்கு இடம் நோக்கிக் காரணப் பெயர் மாத்திரையாய்க் குவளையை உணர்த்தி நின்றது என அறிக.

196] தலைமகள் அவலம் பாங்கி தணித்தல் [எ

**பொய்யா தவர்தம் குறிபிழை யார்;அவர் பூண்டஅன்பு**
**மெய்யாதல் தேறி, அழுங்கல்மின் னே!புய வெற்பிரண்டால்**
**மையாழி வையம் நிலையிட்ட வாணன்தென் மாறைவெற்பின்**
**உய்யானம் மென்கழு நீர்நறு மாலை உடைத்தல்லவே.**

கு - ரை : [அவலம் - துன்பம்] 'மின்னே! மாறை வெற்பின் உய்யானம், மென்கழுநீர் மாலை உடைத்து அல்ல; பொய்யாதவர் தம் குறி பிழையார்; அவர் பூண்ட அன்பு மெய் ஆதல் தேறி, அழுங்கல்,' என இயைக்க. மின்னே - மின்னலைப் போன்றவளே, வெற்பின் - மலையிலுள்ள, புய வெற்பு - தோளாகிய மலை (உருவகம்), மை ஆழி - கருங்கடல் சூழ்ந்த, வையம் - உலகத்தை, உய்யானம்-சோலையில் உள்ள தாழையானது (இடவாகு பெயர்), கழு நீர் நறு மாலை - கருங்குவளை மலரலான மணமுடைய மாலையை, உடைத்து அல்ல - உடையது அல்ல, தாழை (கருங்குவளை மாலையை உடைத்தா யிருத்தல், தலைவர் குறியிடம் வந்து நீங்கியதை உணர்த்தும்), பொய்யா தவர் - (நம்மை ஒருபோதும்) வஞ்சியாத தலைவர் (பொய்த்தல் - வஞ்சித்தல், 'நின்றேடிப் போய்த்தல்' - நாலடி. செய். 111), தம் குறி பிழையார் - தம் குறியில் தவறுர், பூண்ட - (நம்மிடம்) கொண்ட, தேறி - தெளிந்து, அழுங் கல் - வருந்தாதே. வையம் நிலையிடலாவது, உலகத்தைத் தாங்கி நிலைக்கச் செய்தல்.

197] இறைவன்மேல் பாங்கி குறி பிழைப்பு ஏற்றல் [அ

**விம்மூர் துயர்க்கடல் வெள்ளத்துள் ளேஎம்மை வீழ்வித்துநீர்**
**எம்மூ ரகத்து வரல்ஒழிந் தீர்;எதிர் ஏற்றதெவ்வர்**
**தம்மூரை முப்புரம் ஆக்கிய வாணன் தமிழ்த்தஞ்சைபோல்**
**உம்மூர் வரத்துணிந் தோம்;அன்பர்! கூறும்அவ் வூர்எமக்கே.**

கு - ரை : [தோழி, குறி தவறிய குற்றத்தைத் தலைவன்மேல் ஏற்றிக் கூறுதல்] 'அன்பர்! நீர் எம்மைத் துயர்க்கடல் வெள்ளத்துள்ளே வீழ் வித்து, எம் ஊரகத்து வரல் ஒழிந்தீர்; தஞ்சைபோல் உம் ஊர் வரத் துணிந்தோம்; அவ்வூர் எமக்குக் கூறும்,' என இயைக்க. அன்பர் - அன்

பரே (அண்மை விளி), விம்மு ஊர் - விம்முதல் பரவிய, வீழ்வித்து - வீழும்படி செய்து, ஊரகத்து - ஊரில், ஒழிந்தீர் - நீங்கினீர், எதிர் ஏற்ற - எதிராய்ப் (போரை) மேற்கொண்ட, தெவ்வர்தம் - பகைவருடைய, முப்புரம் ஆக்கிய - (சிவபெருமான் எரித்த) முப்புரம் போலச்செய்த (எரித்தழித்த என்பது கருத்து), விம்மு - முதனிலைத் தொழிற்பெயர். (தோழி, 'நீர் குறியிடம் வாராதொழிந்ததால் யாங்களேனும் உம்மூர்க்கு வருவோம்,' என்றாள் என்க.)

198] இறைவிமேல் இறைவன் குறி பிழைப்பு ஏற்றல் [கூ

'துறந்தனள் ஆகிஅம் போருகந் தன்னைஇத் தொல்வரைமேல்
பிறந்தனள் ஆகும் பெருந்திரு மாதெ'னப் பேதையரில்
சிறந்தனள் ஆதலின், செந்தமிழ் வாணன்தென் மாறைஅன்னாள்
மறந்தனள் ஆயினும், யாம்ஒரு போதும் மறவலமே.

து - றை : [தலைவன், குறி தவறிய குற்றத்தைத் தலைவிமேல் ஏற்றிக் கூறுதல்] 'மாறை அன்னாள், 'பெருந்திரு மாது அம்போருகந்தன்னைத் துறந்தனள் ஆகி இத்தொல்வரைமேல் பிறந்தனள் ஆகும்,' எனப் பேதையரில் சிறந்தனள் ஆதலின், மறந்தனள் ஆயினும், யாம் ஒரு போதும் மறவலம்,' என இயைக்க. திருமாது - இலக்குமி, அம்போருகந்தன்னை-தாமரை மலரை, துறந்தனள் ஆகி - நீக்கினவளாய், ஆகும் - ஆவாள், என - என்று (உலகத்தார்) சொல்லும்படி, பேதையரில் - பெண்களுள், ஒரு போதும் - ஒரு நாளும், மறவலம் - மறவோம்.

199] அவள் குறி மருண்டமை அவள் அவற்கு இயம்பல் [ய

தனையா வரும்புக ழத்தரும் வாணன் தமிழ்த்தஞ்சைமான்
அனையாள் அவள்குறி ஆம்இதென் றேநினைந் தல்லதொன்று
நினையா வரும்கங்குல் நின்குறி யாவந்து நின்றதுநம்
வினையால் விளைந்ததென் றேவெறி தேஅன்ப! மீண்டனளே.

து - றை : [தலைவி குறி மயங்கியதைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்] 'அன்ப! மான் அனையாள் அவள், 'இது குறி ஆம்,' என்று நினைந்து வரும் கங்குல், நினையா அல்லது ஒன்று நின் குறியா வந்து நின்றது, 'நம் வினையால் விளைந்தது!' என்று வெறிதே மீண்டனள்,' என இயைக்க. அன்ப - அண்மை விளி, தனை - தன்னை, இது குறி ஆம் - இது நம் தலைவர் செய்த குறி ஆகும், கங்குல் - இரவில், நினையா அல்லது ஒன்று - (நீ) நினையாத வேறு ஒரு குறி, நின் குறியா - உனது குறியாக, நின்றது - பொருந்தியது, வினையால் - தீவினையால், வெறிதே மீண்டனள் - பயனின்றியே திரும்பிச் சென்றனள்.

200] அவன் மொழிக் கொடுமை சென்று அவள் அவட்கு இயம்பல் [௰௧

'பல்லியம் போல்உரும் ஏறெங்கும் ஆர்ப்பதும் பார்ப்பதின்றி
வல்லியம் போதகம் போர்பயில் கான்வந்து, வாணன்தஞ்சை
அல்லிஅம் போருகை அன்னநின் கேள்அருள் ஆசையின்நின்
றெல்லியம் போதுசென் றேன்,'என்று கேள்வர் இயம்பினரே.

து - ரை : ['நான் செய்த குறியறிந்து தலைவி வரவில்லை,' என்று தலைவன் கூறிய சொற்கொடுமையைத் தோழி சென்று தலைவிக்குக் கூறுதல்] 'கேள்வர், 'உரும் ஏறு எங்கும் ஆர்ப்பதும் பார்ப்பது இன்றி, கான் வந்து, நின் கேள் அருள் ஆசையின் எல்லியம்போது நின்று சென்றேன்,' என்று இயம்பினர்,' என இயைக்க. கேள்வர் - கணவர், உரும் ஏறு - பெரிய இடியானது, பல்லியம்போல் ஆர்ப்பதும் - (முரச) வாத்தியம் போல முழங்குவதும், பார்ப்பது இன்றி - (யான்) கருதுதல் இன்றி, வல்லியம் - புலியும், போதகம் - யானையும், போர் பயில் - போர் செய்கின்ற, கான் - காட்டில், அல்லி அம்போருகை - அக இதழை உடைய தாமரையிலுள்ளவளாகிய திருமகள், நின் கேள் - உன் நட்பையுடையவளாகிய தலைவி, அருள் - (எனக்குத்) தரும், ஆசையின் - ஆசையினால், எல்லியம் போது - இரவில், நின்று - (குறியிடத்தில்) நெடுநேரம் காத்திருந்து, சென்றேன் - (தலைவி வாராமையால் திரும்பிப்) போனேன்.

201] 'என் பிழைப்பு அன்று,' என்று இறைவி நோதல் [௰௨

வியல்ஊர் எயில்புற நொச்சியின் ஊழ்மலர் வீழ்தொறெண்ணி
மயல்ஊர் மனத்தொடு வைகினன் யான்;தஞ்சை வாணன்வெற்பர்
புயல்ஊர் இருள்கங்குல் வந்தவ மேநின்று போயினர்என்
றயல்ஊர் நகைக்கும்;என் னே!என்ன பாவங்கொல் ஆக்கினவே ?

து - ரை : [தலைவி, 'தலைவர் குறி தவறியது என் தவறு அன்று,' என்று வருந்துதல்] 'யான் எண்ணி மயல் ஊர் மனத்தொடு வைகினன்; வாணன் வெற்பர் கங்குல் வந்து அவமே நின்று போயினர் என்று அயல் ஊர் நகைக்கும்; என்னே! ஆக்கின என்ன பாவங்கொல்?' என இயைக்க. வியல் ஊர் எயில் புறம் - அகலமாய்ப் பரவிய மதிலின் வெளியில், நொச்சியின் ஊழ் மலர் - நொச்சி மரத்தின் பழைய பூக்கள், வீழ்தொறும் - உதிரும் போதெல்லாம் (உம்மை விகாரத்தால் தொக்கது), எண்ணி - (தலைவர் வருகின்றார் என) நினைத்து, மயல் ஊர் - ஆசை மிகுகின்ற, வைகினன் - தங்கியிருந்தேன், புயல் ஊர் - மேகம் தவழும், அவமே - வீணிலே, நின்று - காத்திருந்து, அயல் ஊர் நகைக்கும் - அயலூரிலுள்ளார் (அறிந்தால்) சிரிப்பர் (ஊர் - இடவாகுபெயர்), என்னே-அதிசய இரக்கக் குறிப்பு இளிவு தோன்ற

நின்றது. ஆக்கின - (இவ்வாறு) நிகழச் செய்தவை, என்ன பாவங்கொல் - (யான் செய்த) எத்தகைய பாவங்களோ (அறியேன்), கொல் - ஐயம்.

## [வரும் தொழிற்கு அருமை]

202] தாய் துஞ்சாமை [௰௩

ஆழி அகன்புவி உள்ளன யாவும் அடங்கிநள்ளென்
றூழி முடிந்தன்ன ஓங்கிருள் யாமத்தும் ஓடையினும்
தாழியி னும்போ தலர்தஞ்சை வாணன் தரியலர்போல்
தோழி!நம் அன்னைகண் ணேதுயில் கோடல் துறந்தனவே.

கு - ரை: [தாய் தூங்காதிருத்தல்] 'தோழி! புவி உள்ளன யாவும் அடங்கி நள்ளென்று ஊழி முடிந்தன்ன ஓங்கு இருள் யாமத்தும் வாணன் தரியலர்போல் நம் அன்னை கண்ணே துயில் கோடல் துறந்தன,' என இயைக்க. தோழி - அண்மை விளி, ஆழி - கடல் சூழ்ந்த, அகன் புவி-விசால மான பூமியில், உள்ளன - உள்ளனவாகிய உயிர்கள், நள்ளென்று - நள்ளென் னும் ஓசையுடன் கூடி, ஊழி முடிந்தன்ன - யுகம் முடிந்தாற்போன்ற, ஓங்கு இருள் யாமத்தும் - வளரும் இருளையுடைய இரவிலும், ஓடையினும்- நீரோடையிலும், தாழியினும் - சாலிலும், போது அலர் - (குவளை) மலர்கள் அலரும், தரியலர் - பகைவர், கண்ணே - கண்களே (ஏகாரம் பிரிநிலை), கோடல் - கொள்ளுதலை. சாலில் நீர் நிறைத்துக் குவளையரும்பைஅதிலிட்டு மலர்வித்தல் அக்கால வழக்கம். இதனைத் 'தாழிக் குவளை' (சிலப். காதை. 5, அடி. 192), 'தாழியுள் மலர்ந்த தண்செங் குவளை' (பெருங். 3: 5: 87.), 'தாழிவாய்க் குவளை; தாழிவாய் மறைக்கும் தண்ணெனன் தடம்பெருங் குவளை' (சீவக. செய். 833, 2974) என வரும் ஆட்சிகளால் அறிக.

203] நாய் துஞ்சாமை [௰௪

தண்ணென் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் தரியலர்போல்
பெண்ணென் பிறவியும் பேர்உடைத் தன்றிப் பெரும்பதிநம்
கண்ணென் பவர்வரக் கங்குலில் ஞாளிக் கணம்குரைத்துத்
துண்ணென் கடுங்குரல் வாய்அன்னை துஞ்சினும், துஞ்சிலவே.

கு - ரை: [தாய் உறங்கினும், ஊரிலுள்ள நாய் உறங்காதிருத்தல்] '(தோழியே!) வாணன் தரியலர்போல் பெண் என் பிறவியும் பேர் உடைத்து அன்று; இப்பெரும்பதி நம் கண் என்பவர் கங்குலில் வர, துண் என் கடுங்குரல் வாய் அன்னை துஞ்சினும், ஞாளிக் கணம் குரைத் துத் துஞ்சில,' என இயைக்க. தண்ணென் - குளிர்ச்சியான, தரிய லர் - பகைவர், பெண் என் பிறவியும் - பெண்ணென்று சொல்லும்

பிறப்பும், பேர் - கீர்த்தி, பதி - ஊரில், கண் என்பவர் - கண்ணென்று சொல்லத் தகுந்த தலைவர், துண் என் - அஞ்சத்தகுந்த (அச்சக் குறிப்பு), துஞ்சினும் - உறங்கினாலும், ஞாளிக்கணம் - நாய்களின் கூட்டங்கள், துஞ்சில - தூங்காவாயின. துஞ்சினும் என்பதில் உள்ள உம்மை, துஞ்சதலின் அருமை தோன்ற நின்றது. தன் தாய் குரலாயினும், இக்களவொழுக்கத்தில் தனக்கு மிக்க அச்சந்தருதலால், 'துண்ணென் கடுங்குரல்' என்றாள் என்க. தோழி - முன்னிலையெச்சம்.

204] ஊர் துஞ்சாமை [யரு

ஓங்கண்ணல் வெம்பக டுந்திவந் தோரை உடன்றுதும்பைத்
தேங்கண்ணி சூடிச் செருவென்ற வாணன்தென் மாறைமின்னே!
தாங்கண் அனையர் தமைப்பிரிந் தோ,நம் தனிமைகண்டோ,
நாங்கண் உறங்கினும், ஓ!உறங் கார்கண் நகரவரே.

து - ரை: [நாய் உறங்கினும், ஊரிலுள்ளார் உறங்காதிருத்தல்] 'மாறை மின்னே! நகரவர், தாம் கண் அனையர்தமைப் பிரிந்தோ, நம் தனிமை கண்டோ, நாம் கண் உறங்கினும், ஓ! கண் உறங்கார்!' என இயைக்க. ஓங்கு அண்ணல் - உயர்ந்த பெருமையை உடைய, வெம்பகடு - கொடிய ஆண் யானைகளை, உந்தி - நடத்தி, உடன்று - கோபித்து, தும்பைத் தேம் கண்ணி - (போர்புரிவோர் சூடும்) தும்பை என்னும் தேன் பொருந்திய மாலை, செரு - போர், மின்னே - மின்னலைப் போன்ற தோழியே, கண் அனையர்தமை - (தம்) கண் போன்ற கணவரை, நம் தனிமை கண்டோ - (அன்றி) நமது தனிமையை அறிந்தோ, ஓ கண் உறங்கார் - நாம் மிக வருந்தும்படி கண் உறங்காராயினர் (ஓ, கழிவிரக்கக் குறிப்பு.)

205] காவலர் கடுகுதல் [யசு

புயற்கண் ணியதலைப் பூகமென் பாளைப் புதுமதுநீர்
வயற்கண் நிறைதஞ்சை வாணன்தென் மாறையில் வஞ்சிஅன்னாள்
கயற்கண் இணைஅஞ்சி நீர்மல்கக் காவலர் கைப்பறையின்
செயற்கண் இணைஅல்ல வோபடு கின்றன திண்கடிப்பே!

து - ரை: [நகரைக் காப்பவர், துடியடித்து ஊரைச் சுற்றி விரைந்து வருதல்] 'வஞ்சி அன்னாள் கண் இணை அஞ்சி நீர் மல்க அல்லவோ காவலர் கைப்பறையின் செயல் கண் இணை திண் கடிப்புப் படுகின்றன!' என இயைக்க. புயற்கு அண்ணிய - மேகத்துக்குக் கிட்டிய, தலைப்பூகம் - உச்சியை உடைய பாக்கு மரத்தினுடைய; மல்க - நிறைய, செயல் கண் இணை - வேலைப்பாடு அமைந்த இரு பக்கத்திலும், திண் கடிப்பு - வலிய பறையடிக்கும் குறுங்கோல்கள். உரைப்போரும் கேட்போருமாகிய கிளவிப்

பாத்திரங்கள் இன்மையின், இச்செய்யுள் கவி கூற்று. இதனை இந்நூலின் பழைய உரையாசிரியராகிய குன்றத்தூர் அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர், 'துறை' என வழங்குவர்.

206] நிலவு வெளிப்படுதல் [யஎ

தெண்பால் கதிர்முத்த வெண்ணகை யாய்! திகி ரிக்கிரிசூழ்
மண்பால் புகழ்வைத்த வாணன்தென் மாறைநம் மன்னர்பொன்தேர்
பண்பால் பரிக்கும் பரிவரு மாறென்! பரந்தநிலா
வெண்பால் கடலில்வை யம்பதி னாலும் மிதக்கின்றவே.

து - றை : [தலைவன் வருகைக்கு இடையூறாய் நிலவு தோன்றுதல்] 'நகையாய்! வையம் பதினாலும் பரந்த நிலா வெண்பால் கடலில் மிதக்கின்ற; மாறை நம் மன்னர் பொன் தேர் பண்பால் பரிக்கும் பரி வரும் ஆறு என்!' என இயைக்க. தெண்பால் - தெளிவான பால்போன்ற, நகையாய் - பற்களையுடைய தோழியே, வையம் - உலகம், மிதக்கின்ற - மிதக்கின்றன, திகிரிக்கிரி - சக்கரவாளம் என்னும் மலை, மண்பால் - உலகில், வைத்த - நிலை மாறாதபடி செய்த, மாறை - மாறை நாட்டில் உள்ள, பொன் தேர் - அழகிய தேரை, பண்பால் - (தம்) செயலால் ('இப்பாகந்தரு பண்பை இழைத்தேம்' - பிரமோத். 9, 38), பரிக்கும் - நடப்பிக்கும், பரி - குதிரைகள், ஆறு - விதம், என் - எப்படி.

207] கூகை குழறுதல் [யஅ

நம்பே றுடைமை இருக்கின்ற வா! கடல் ஞாலத்துள்ளோர்
தம்பே றெனவந்த சந்திர வாணன் தரியலர்போல்
வம்பே றுகொங்கை மயில்இயல்! நாம்அஞ்ச மன்றமராம்
கொம்பேறி நள்ளிருள் வாய்க்குழ றுகின்ற கூகைகளே.

து - றை : [தலைவன் வருகைக்குச் சகுனத் தடையாய்க் கோட்டான் ஒலித்தல்] 'வம்பு ஏறு கொங்கை மயில் இயல்! கூகைகள், வாணன் தரியலர்போல் நாம் அஞ்ச, மன்றம் மராம் கொம்பு ஏறி, நள் இருள்வாய்க் குழறுகின்ற; நம் பேறு உடைமை இருக்கின்றவா!' என இயைக்க. வம்பு ஏறு - கச்சுப்பொருந்திய, மயில் இயல் - மயில் போன்ற சாயலையுடையவளே (அன்மொழித் தொகை; அண்மை விளி), கடல் ஞாலத்து - கடல் சூழ்ந்த உலகத்தில், உள்ளோர் தம் - உள்ளவருடைய, பேறு - புண்ணியம், தரியலர் - பகைவர், அஞ்ச - (தலைவர் வருகைக்கு யாது இடையூறு நேரிடுமோ என்று) அஞ்சும்படி, மன்றம் - வெளியிடத்திலுள்ள, மராம் கொம்பு - ஆச்சா மரத்தின் கிளையில், நள் இருள்வாய் - இடை இருளில், குழறுகின்ற - ஒலிக்கின்றன, பேறு உடைமை - புண்ணியமாகிய செல்வம், இருக்கின்ற

ஆறு - பொருந்தியுள்ள விதம் (நன்றாயிருந்தது!) [ஆ - ஆறு என்பதன் கடைக்குறை விகாரம்], 'நன்றாயிருந்தது!' என்னுந் தொடர் வருவித்துரைக்கப்பட்டது. இது 'தீதாயிருந்தது' என்பதைக் குறித்தலின், குறிப்பு மொழி என்க.

208] கோழி குரல் காட்டுதல் [யகூ

மன்பதை உய்ய வரும்தஞ்சை வாணன்தென் மாறைவெற்பர்
கொன்பதி வேல்வலம் கொண்டுவந் தால்,தங்கள் கோன்நடந்தான்
என்பது தேறி இடைஇருள் ஊரை எழுப்பும்வெம்முள்
பொன்பதி தாள்வளை வாய்ச்செய்ய சூட்டுவன் புள்இனமே.

து - ரை : [தலைவன் தலைவியர்க்கு இடையூறாய்ச் சேவல் கூவுதல்] '(தோழியே!) வெற்பர், வேல் வலம் கொண்டு வந்தால், வன்புள் இனம், தங்கள் கோன் நடந்தான் என்பது தேறி, இடை இருள் ஊரை எழுப்பும்,' என இயைக்க. மன்பதை - மக்கள் பரப்பு, உய்ய - பிழைக்கும்படி, வெம் முள் - கொடிய முள்ளும், பொன் - அழகும், பதி - பொருந்திய, வரும் - (உலகில்) தோன்றிய, கொன் பதி - அச்சம் பதிந்த, வலம் - வலக்கையில், வளை - வளைந்த, சூட்டு - உச்சிக்கொண்டையுமுடைய, வன்புள் இனம் - வலிய பறவைகளாகிய சேவல் கூட்டம், தங்கள் கோன் - தங்கள் தலைவனாகிய முருகக்கடவுள், நடந்தான் - நடந்து வந்தான், தேறி - தெளிந்து, இருள் - இருளில், ஊரை - ஊரிலுள்ளவர்களை (இடவாகு பெயர்), 'புள் இனம்' என்பது பறவைக் கூட்டத்தைப் பொதுவாயுணர்த்தினும், 'ஊரை எழுப்பும்' என்றதனால், சேவல் கூட்டத்தைக் குறித்தது என்க.

இரவுக்குறி இடையீட்டில் வருந்தொழிற்கு அருமையை உணர்த்தும் கிளவிகள் ஏழனுள் ஒவ்வொன்றும் நந்நான்கு நாழிகை வரையறையுடையதெனக் கொள்க.

# 14. வரைதல் வேட்கை

**209]** தலைமகளைப் பாங்கி பருவரல் வினவல் [க

விண்டார் பதிகொண்ட வேல்படை வாணன் விரைகமழ்பூந்
தண்டா மரைமங்கை தங்கிய தஞ்சைநின் தாயர்தம்மோ
டுண்டா கியமுனி வோ?அன்றி, ஆயத்தொ டுற்றதுண்டோ?
வண்டார் குழலி!சொல் லாய்;செல்லல் ஏதுன் மனத்திடையே?

கு - ரை: [பருவரல் - துன்பம்] 'வண்டு ஆர் குழலி! தஞ்சை நின் தாயர்தம்மோடு உண்டாகிய முனிவோ? அன்றி, ஆயத்தொடு உற்றது உண்டோ? உன் மனத்திடைச் செல்லல் ஏது? சொல்லாய்,' என இயைக்க. விண்டார் பதி - பகைவருடைய நகரத்தை, விரை - வாசனை, தாமரை மங்கை - இலக்குமி, தஞ்சை - தஞ்சாக்கூரிலுள்ள, தாயர்தம்மோடு - தாயரால், முனிவோ - கோபமோ, அன்றி - அல்லது, ஆயத்தொடு - தோழியர் கூட்டத்தால், உற்றது - நேரிட்டதாகிய இடையூறு, மனத்திடைச் செல்லல் - மனத்தில் உள்ள துன்பம், ஏது - யாது, சொல்லாய் - சொல்வாயாக. குழலி - அண்மை விளி. ஓடு, ஒடு என்னும் மூன்றனுருபுகள் சிறு பான்மை கருத்தாப்பொருளில் வந்தன.

**210]** அருமறை செவிலி அறிந்தமை கூறல் [உ

மாணிக்க மென்கொம்பர்! என்சொல்லு கேன்!தஞ்சை வாணன்வெற்பர்
பேணிப் புணர்ந்து பிரிந்தபின் தோன்றலும், பேதைமுகம்
பாணித்தல் இன்றி மதிகண்டு நாணிய பங்கயம்போல்
நாணிக் கவிழ்ந்தத னால்அறிந் தாள்அன்னை நம்களவே.

கு - ரை: [தலைவி, அரிய களவு ஒழுக்கத்தைச் செவிலித்தாய் அறிந்தமையைத் தோழிக்குக் கூறுதல்] 'கொம்பர்! என் சொல்லுகேன்! வெற்பர் தோன்றலும், பேதை முகம் நாணிக் கவிழ்ந்ததனால் அன்னை நம் களவு அறிந்தாள்,' என இயைக்க. மெல் மாணிக்கக்கொம்பர் - மெல்லிய மாணிக்கக் கொம்பு போல்பவளே (கொம்பர் - அர், போலி), பேணி - விரும்பி, தோன்றலும் - (நம் வீட்டில் குடி நீர் பெற விரும்பியவர்போல மறுபடியும்) வந்தவுடனே, பேதை முகம் - அறியாமையை உடைய (எனது) முகம், பாணித்தல் - காலம் தாழ்த்துதல், மதி - சந்திரனை, பங்கயம் - தாமரை மலர், நாணி - வெட்கி, களவு - களவு ஒழுக்கத்தை. கொம்பர் - அண்மை விளி, 'செவிலித்தாய் அறிந்தாள் எனக் கூறின், தோழியினாலதனை அறியலுறும் தலைவன் விரைந்து வரைந்துகொள்வன்,' எனக் கருதித் தலைவி

தானே இங்ஙனம் கூறினள் அல்லது, உண்மையில் செவிலி அறிந்திலள் என்க.

211] தலைமகன் வரும் தொழிற்கு அருமை சாற்றல் [ந

ஓவலில் வாய்அன்னை ஞாளிஇவ் வூர்கண் உறங்கினும்ஊர்க்
காவலர் காய்வர்; நிலாமதி காலும்; கடுங்குடிஞைச்
சேவலும் வாரண மும்தஞ்சை வாணனைச் சென்றிறைஞ்சா
மேவலர் போல்வெய்ய வாய்அடை யாஎன் மெலிவறிந்தே.

து - ரை: [தலைவி, தலைவன் வரும் தொழிலுக்கு அருமையைத் தோழிக்குக் கூறுதல்] '(தோழீ!) ஓவல் இல் வாய் அன்னை, ஞாளி, இவ்வூர் கண் உறங்கினும், ஊர்க்காவலர் காய்வர்; மதி நிலாக் காலும்; கடுங்குடிஞைச் சேவலும் வாரணமும் தஞ்சை வாணனைச் சென்று இறைஞ்சா மேவலர் போல் என் மெலிவு அறிந்து, வெய்ய வாய் அடையா,' என இயைக்க. ஓவல் - ஒழிதல், ஞாளி - நாய், ஊர் - ஊரவர் (இடவாகு பெயர்), காய்வர் - (அயலாரைக்காணின்) கோபிப்பர், காலும் - கக்கும், குடிஞை - கோட்டான், வாரணம் - கோழிச்சேவல், மேவலர் - பகைவர், வெய்ய வாய் அடையா - கொடிய வாயை மூட மாட்டா. (தன் மெலிவுக்குக் காரணம் தலைவன் வரவொழிதல் என்பாள், 'மெலிவறிந்து வாய்அடையா,' என்றாள் என்க.) தோழி - முன்னிலை எச்சம்.

212] தலைமகன் ஊர்க்குச் செல ஒருப்படுதல் [ச

நம்பால் நலன்உண்ட நம்பா தகர்தம் நகர்வினவித்
தம்பால் உடன்சென்று சார்குவ மோதரி யாரைவென்று
வம்பார் கழல்புனை வாணன்தென் மாறை வளரும்வஞ்சிக்
கொம்பா கியமருங் குல்கரும் பாம்மொழிக் கோமளமே!

து - ரை: [தலைவி, தலைவன் ஊருக்குப் போகத் துணிதல்] 'கோமளமே! நம்பால் நலன் உண்ட நம் பாதகர்தம் நகர் வினவி, உடன் சென்று, தம்பால் சார்குவம்,' என இயைக்க. தரியார் - பகைவர், வம்பு ஆர் - கச்சுப்பொருந்திய, கழல் - வீர கண்டை, கொம்பு ஆகிய - கொம்பு போன்ற, மருங்குல் - இடை, கரும்பு ஆம் - கரும்பு போன்ற, கோமளமே - அழகியே, நம்பால் - நம்மிடம், நலன் - இன்பம், பாதகர்தம் - பாவத்தை உடையவருடைய, உடன் சென்று - (நாம் இருவரும்) கூடிச்சென்று, தம்பால் - அவரிடம், சார்குவம் - சேர்வோம், சார்குவமோ - ஓ, அசைநிலை.

213] பாங்கி, இறைவனைப் பழித்து உரைத்தல் [௫

வறியார் புகழ்தஞ்சை வாணன்தென் மாறை மடந்தைஅன்னாள்
அறியாள் துயர்முன்; அறிந்தவர் தாம்;அத னால்அழலின்

பொறியா ருயிர்வெம் பணிமா மணியும் புதைஇருள்கூர்
நெறியார் அருள்பெற நாம்நடு நாளிடை நீந்துதுமே.

**த - ரை :** 'மாறை மடந்தை அன்னாள் முன் துயர் அறியாள்,' எனவும், 'தாம் அறிந்தவர்,' எனவும் இயைக்க. வறியார் - வறுமையுடையவர், பொறி ஆர் - பொறியைப்போன்ற, உயிர் - மூச்சு விடுகின்ற, வெம்பணி - கொடிய பாம்பு ஈன்ற, மாமணியும் - மாணிக்கத்தையும், புதை - மறைக்கின்ற, இருள்கூர் - இருள் மிகுந்த, நெறியார் - வழியில் வருபவராகிய தலைவரின், நடு நாளிடை - நடு இரவாகிய வெள்ளத்தில், நீந்துவம் - துன்புறுவோம். 'அவர் அருளைப் பெற நாம் இறவாமல் துன்புறுவோம்,' என்றதனால், இது தலைவன் இயலைப் பழித்ததாயிற்று.

**214]** இறைவி, இறையோன்றன்னை நொந்து இயற்பட மொழிதல் [சு

புணரா விரகமும், போகா இரவும், புணர்முலைமேல்
இணர்ஆர் பசப்பும், பிறவும்எல் லாம்இருள் கூர்ந்தறல்போல்
வணர்ஆர் குழல்பிறை வாள்நுத லாய்! தஞ்சை வாணன்வெற்பர்
உணரா திருப்பது வேறொன்றும் அல்ல;நம் ஊழ்வினையே.

**த - ரை :** [தலைவி, தோழி தலைவனைப் பழித்துரைத்ததற்கு வருந்தி, தலைவன் நற்குணம் உடையவன் என்பது விளங்கத் தோழிக்குக் கூறுதல்] 'வாள் நுதலாய்! வாணன் வெற்பர், விரகமும், இரவும், பசப்பும், பிறவும் எல்லாம் உணராதிருப்பது வேறு ஒன்றும் அல்ல; நம் ஊழ்வினையே,' என இயைக்க. இருள் கூர்ந்து - கறுப்பு மிகுந்து ('இரும்பிடி மேஎந்தோல் அன்னஇருள் சேர்பு' - மதுரைக். அடி, 634), அறல் - கருமணல், வணர் ஆர் - சுருள் பொருந்திய, வாள் - ஒளி, நுதலாய் - நெற்றியையுடையவளே, புணரா விரகமும் - கூடாத பிரிவால் உண்டாகும் வேதனையும், போகா - கழியாத, புணர் - நெருங்கிய, இணர் ஆர் - (பொன்னிறமுடைய) மகரந்தம் போன்ற (பிங். 2809), பசப்பும் - (பிரிவினால் உண்டாகும்) நிற வேறுபாடும், இருப்பது - இருப்பதன் காரணம், ஊழ்வினை - பழவினை.

**215]** கனவு நலிவு உரைத்தல் [எ

*சினவாகை சூடிச் செருவென்ற வாணன்தென் மாறையில்நம்
மனவாழ் வனையவர் வந்துநல் லியாமம் மணந்ததெல்லாம்
நனவாம் எனவே மகிழ்ந்தே விழித்தொன் றும் நான்கண்டிலேன்
கனவாய் முடிந்தது பின்னை;என் னே!என்ன கைதவமே!

---

* இக்கவி நம்பி அகப்பொருள் சங்கப் பதிப்பில் (பக். கOசு) இக்கிளவிக்கு உதாரணமாக அமைந்துள்ளது. இங்குப் பழைய பதிப்பில் 'இல்லா வருந்தயில்' எனத் தொடங்கும் கவி அமைந்துள்ளது.

து - ரை : [தலைவி, தலைவன் தன்னைக் கூடினாற்போலக் கண்ட கனவினால் ஏற்பட்ட துன்பத்தைத் தோழிக்குக் கூறுதல்] '(தோழீ!) மாறையில் நம் மன வாழ்வு அனையவர், நல் யாமம் வந்து மணந்தது எல்லாம் நனவு ஆம் என நான் மகிழ்ந்து விழித்து, ஒன்றும் கண்டிலேன்; பின்னைக் கனவாய் முடிந்தது; என்னே! என்ன கைதவம்!' என இயைக்க. வாகை - வெற்றிமாலை, செரு - போர், மன வாழ்வு - மனச்செல்வம் ('எத்தி வந்தார்க்கு வந்தியும் வாழ்வு' - பு. வெ. 4, 12), நல் யாமம் - நல்ல இரவில், மணந்தது எல்லாம் - (என்னைச்) கூடியது முற்றும், நனவு ஆம் - உண்மை ஆகும் ('நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்' - பதிற். 85, 12), என்னே - இஃது என்ன அதிசயம், கைதவம் - துன்பம் ('கைதவமே செய்யு மதி வின்களி' - பிரமோத். சிவரா. செய். 17), தோழி - முன்னிலை எச்சம்.

**216]** கவின் அழிவு உரைத்தல் [அ

வாளினும் நீள்விழி வாள்நுத லாய்!தஞ்சை வாணன்தெவ்வின்
நாளினும் நாளும் நலம்தொலை வேன்நகை ஆர்அயில்வேல்
வேளினும் ஏர்நல்ல வெற்பனும் நீயும்என் மேனியினும்
தோளினும் நோய்அறி யீர்;அறி யாததென் தொல்வினையே.

து - ரை : [தலைவி, விரகத்தால் தன் அழகு அழிதலைத் தோழிக்குக் கூறல்] வாளினும் - வாளைவிட, நீள் - நீண்ட, வாள் - ஒளி பொருந்திய, தெவ்வின் - பகைவரைப்போல, நாளினும் நாளும் - ஒவ்வொரு தினமும் ('நம்பன் செல்லு நாளினு நாளு நலமிக்கே' - சீவக. செய். 363), நலம் தொலைவேன் - அழகு அழிதலையுடையேன், நகை ஆர் அயில் வேல் - ஒளி பொருந்திய கூர்மையான வேலினையுடைய, வேளினும் - செவ்வேளாகிய முருகனைக்காட்டிலும், ஏர் - அழகையுடைய, மேனி - நிறம், நோய் - (உற்ற) வேட்கை நோயை, அறியாதது - (நீர்) அறியாததற்குக் காரணம், தொல் வினை - பழவினை.

**217]** தன் துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல் [கூ

வரைப்பால் மதுரத் தமிழ்தெரி வாணன்தென் மாறைவையை
நுரைப்பால் முகந்தன்ன நுண்துகி லாய்!இந்த நோய்அவர்க்கின்
றுரைப்பார் உளரேல் உயிர்எய்த லாம்நமக் கூர்திரைசூழ்
தரைப்பால் வளரும் புகழ்எய்த லாம்அவர் தங்களுக்கே.

து - ரை : 'நுண் துகிலாய்! இன்று அவர்க்கு இந்த நோய் உரைப்பார் உளரேல், நமக்கு உயிர் எய்தல் ஆம்; அவர் தங்களுக்குப் புகழ் எய்தல் ஆம்,' என இயைக்க. வரைப்பால் மதுரத் தமிழ் - (பொதிய) மலையில் பிறந்த இனிமையான தமிழை, தெரி - ஆராய்ந்த, பால் நுரை முகந்தன்ன-

பால் போலும் நுரையை முகந்துகொண்டாற்போன்ற, நுண் துகிலாய் - நுட்பமான நல்ல ஆடையை உடையவளே, அவர்க்கு - அத்தலைவருக்கு, நோய் - (யான் வருந்தும்) நோயை, உளரேல் - உளராகுல், ஆம் - கூடும், அவர் தங்களுக்கு - (உரைக்கும்) அவர்களுக்கு, ஊர் திரை சூழ் - பரவுகின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த, தரைப்பால் - உலகில்.

218] 'துன்புறல் பாங்கி! சொல்,' எனச் சொல்லல் [ய

'ஒல்லென வேஎன் உறுதுயர் தாமும் உணரும்வண்ணம்
சொல்,'என நீஇது சொல்லினென் பேறுன் துயரம்எல்லாம்
வல்லென வேகொண்ட கொங்கையர் வேள்தஞ்சை வாணன்வெற்பில்
அல்லென ஆர்குழ லாய்!அறி யார்அல்லர் அன்பருமே.

து - றை : ['யான் துன்பமடைதலைத் தலைவர்க்குச் சொல்,' என்று தலைவி கூற, தோழி தலைவிக்குக் கூறுதல்] 'குழலாய்! நீ இது சொல்லிப் பேறு என்? அன்பரும் உன் துயரம் எல்லாம் அறியார் அல்லர்,' என இயைக்க. வல் என - சொக்கட்டான் காய் என்று சொல்லும்படி, கொங்கையர் - முலைகளையுடைய பெண்டிர்க்கு, வேள் - விருப்பத்திற்குரியவனாகிய, அல் என - இருள் என்னும்படி, ஆர் குழலாய் - பொருந்திய கூந்தலை உடையவளே, ஒல்லென - விரைவாக, உறு துயர் - மிக்க துயரை, பேறு - பயன், அறியார் அல்லர் - அறிவர்.

219] அலர் பார்த்து உற்ற அச்சக் கிளவி [யக

மலரும் தொடைவஞ்சி! வஞ்சக மாதரும் மாரனும்வாய்
அலரும் தடங்கை அலரும் தொடாநிற்ப அஞ்சி,நெஞ்சம்
பலரும் புகழ்தஞ்சை வாணர் பிரானைப் பணியலர்போல்
புலரும்; பெயரும்கண் ணீர்புல ராது புலரினுமே.

து - றை : [தலைவி, பிறர் கூறும் பழி மொழியைக் கருதி, அதனால் அடைந்த அச்சத்தைக் கூறும் சொல்] 'வஞ்சி! நெஞ்சம், வஞ்சக மாதரும் மாரனும் வாய் அலரும் கை அலரும் தொடாநிற்ப அஞ்சிப் புலரும்; புலரினும், பெயரும் கண்ணீர் புலராது,' என இயைக்க. மலரும் தொடை வஞ்சி - மலரும் மாலையைச்சூடிய வஞ்சிபோன்றவளே, நெஞ்சம்- (என்) மனமானது, மாதர் - பெண்டிர், மாரன் - மன்மதன், வாய் அலர் - வாயால் தூற்றும் பழி மொழி, கை அலர் - கையால் எய்யும் மலர் அம்பு, தொடாநிற்ப - (என்மேல்) தொடுக்க, அஞ்சி - (அதனால்) பயந்து, பிரானை - தலைவனை, பணியலர் - வணங்காதவர், புலரும் - வாடும், புலரினும் - (நெஞ்சம்) வாடினாலும், பெயரும் - (கண்ணிலிருந்து) பிரிகின்ற, புலராது - குறையாது. வஞ்சி - அண்மை விளி.

220] ஆறு பார்த்து உற்ற அச்சக் கிளவி [௰உ

அரியும் கரியும் பொரும்நெறிக் கோர்துணை ஆயவர்மேல்
சொரியும் திவலை துடைக்கஎன் றோகுழை தோய்ந்துநஞ்சும்
வரியும் பயில்கண்ணி! வாணன்தென் மாறைநம் மன்னர்வந்து
பிரியும் பொழுதெல்லி வாய்வினை யேன்மனம் பின்செல்வதே!

து - ரை: [தலைவி, தலைவன் வரும் வழியின் அருமையைக் கருதி அடைந்த அச்சத்தால் கூறும் சொல்] 'கண்ணி! எல்லிவாய் நம் மன்னர் வந்து பிரியும் பொழுது வினையேன் மனம் பின் செல்வது, நெறிக்கு ஓர் துணையாய், அவர்மேல் சொரியும் திவலை துடைக்க என்றோ!' என இயைக்க. குழை தோய்ந்து - குண்டலத்தைத்தொட்டு, நஞ்சும் - விஷமும், வரியும் - செவ்வரியும், பயில் கண்ணி - பொருந்திய கண்களையுடையவளே (அண்மைவிளி), மாறை - மாறைநாட்டிலுள்ள, எல்லிவாய் - இரவுக்குறியில், வினையேன் - தீவினையுடையேனாகிய எனது, பின் செல்வது - (அவன்) பின் (பிரியாமல் தொடர்ந்து) செல்வது, அரி - சிங்கம், கரி - யானை, பொரும் நெறிக்கு - போர் செய்யும் வழிக்கு, ஓர் - ஒப்பற்ற, திவலை - (மழை) நீர்த் துளியை, துடைக்க என்றோ - துடைக்கக் கருதியோ.

221] காமம் மிக்க கழிபடர் கிளவி [௰௩

*ஓதக் கயலையுண் டண்ணாந்து விக்கி உடல்குலுக்கிப்
பாதத் துணைநிமிர்க் குங்குரு கீர்!வெண் பணிலபங்க
சாதத் திருநிதி அன்னான் குலோத்துங்கன் தஞ்சையில்என்
காதல் சிறையும் குறையும்கண் டார்இல்லைக் கல்நெஞ்சரே.

து - ரை: [வேட்கை பெருகிய மிகுந்த துன்பத்தால் தலைவி சொல்லும் சொல்] 'குருகீர்! தஞ்சையில் என் காதல் சிறையும் குறையும் கல்நெஞ்சர் கண்டார் இல்லை,' என இயைக்க. ஓதக் கயலை - கடலில் வாழும் கெண்டை மீனை, விக்கி - விக்குதலைச்செய்து, பாதத்துணை - இரு தாள்களையும், நிமிர்க்கும் - (பறக்கும்பொருட்டு) உயர்த்தும், குருகீர் - நாரைகளே (உயர்வுப் பன்மை), வெண்பணில பங்கசாதத்து இருநிதி அன்னான் - (ஈகையில்) வெண்மையான சங்க பதும நிதிகளில் உள்ள பெருஞ்செல்வம் போன்றவன், குலோத்துங்கன் - (தன்) வமிசத்திற் சிறந்தவன், காதல் சிறையும் - காதலின் பாதுகாப்பும், குறையும் - மனக்குறையும், கல்நெஞ்சர் - கடின மனமுடையவராகிய தலைவர், கண்டார் இல்லை - அறிந்தார் இல்லை.

---

* இது நம்பி அகப்பொருள் சக்கப் பதிப்பில் (பக்.கO௭) இக்கிளவிக்கு உதாரணம் காட்டப்பட்டுள்ளது. பழைய பதிப்பில் இங்கு 'மாதற்ற' எனத் தொடங்கும் செய்யுள் (திருக்கோவையார், செய். 174) அமைந்துள்ளது.

('ஆதலால், நீங்களேனும் அவருக்கு என் துன்பத்தைத் தெரிவிப்பீர்களாக,' என்றாள் என்க.)

222] தன்னுள் கையாறு எய்திடு கிளவி [யச

*தன்போல் சினத்துரும் ஏந்திய கோன்கன்னித் தாழ்துறைவாய்ப்
பொன்போல் மலர்ப்புன்னைக் கானலும் நோக்கிப் புலம்புகொண்ட
என்போல் இரவின்எல் லாந்துயி லாதுநின் றேங்குதியால்,
அன்போ டொருவற் கறிவிழந் தாயோ? அலைகடலே!

கு - ரை : [தலைவி, தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன்றன் மேல் இட்டுச்சொல்லும் சொல்] 'அலைகடலே! புலம்புகொண்ட என்போல் இரவின் எல்லாம் துயிலாது நின்று ஏங்குதியால், அன்போடு ஒருவற்கு அறிவு இழந்தாயோ?' என இயைக்க. அலை கடலே - அலை வீசுகின்ற சமுத்திரமே, தன்போல் - தன்னைப்போன்ற, சினத்து - கோபத்தையுடைய, உரும் - இடிக்கொடியை (தானியாகு பெயர்), ஏந்திய - தாங்கிய, கோன் - (நெடுமாறனாகிய) அரசனது, கன்னி - குமரிக்கடலினது, தாழ் துறைவாய் - ஆழ்ந்த நீர்த்துறையில், பொன் - (வெண்பொன்) வெள்ளி, மலர் - மலரை உடைய, புன்னைக் கானலும் நோக்கி - புன்னை மரச் சோலையையும் பார்த்து, புலம்பு கொண்ட - வருத்தம் கொண்ட, ஏங்குதியால் - வருந்துகின்றாயாத லால், அன்போடு - அன்பினால், ஒருவற்கு - ஒரு தலைவன்பொருட்டு, அறிவு இழந்தாயோ - (நீயும் உனது) அறிவை இழந்துவிட்டாயோ (சொல்வாயாக). கானலும் - உம், இழிவு சிறப்பு. இக்கவி, தற்குறிப்பேற்ற அணி.

223] நெறி விலக்குவித்தல் [யரு

ஈன்றா ளினும்எனக் கன்புடை யாய்!சென் றிரந்துகொண்டு
சான்றாண்மை அன்பர் தமக்குரை நீ;'தஞ்சை காவலனைத்
தேன்தாழ் வரைப்புகழ் சேர்த்திய வாணனைச் சேரலர்க்கும்
தோன்றா இருங்கங்குல் நீவரு மாறொழி தோன்றல்!'என்றே.

கு - ரை : [தலைவி, தோழியைத் தலைவன் வரும் வழியை விலக்கு விக்க வேண்டுதல்] 'அன்பு உடையாய்! நீ சென்று, 'தோன்றல்! இருங் கங்குல் நீ வரும் ஆறு ஒழி,' என்று இரந்துகொண்டு சான்றாண்மை அன்பர் தமக்கு உரை,' என இயைக்க. எனக்கு - என்னிடம் (வேற்றுமை மயக் கம்), ஈன்றாளினும் - பெற்ற தாய்அன்பினும் (உம் - உயர்வு சிறப்பு), அன்பு உடையாய் - (மிகுந்த) அன்பை உடையவளே, தோன்றல் - தலைவரே (அண்மை விளி), தேன் தாழ் வரை - தேன் தங்கிய மலையில், சேர்த்திய - சேரச்செய்த, சேரலர்க்கும் - சேராதவராகிய பகைவர்க்கும் (உம் - இழிவு

* இறையனார் அகப்பொருள், சூ. 30. உரை மேற்கோள்

சிறப்பு), தோன்றா - (வழி) தெரியாத, இருங்கங்குல் - பெரிய இரவில், ஆறு - வழியை, இரந்துகொண்டு - வேண்டிக்கொண்டு, சான்றாண்மை - மாட்சிமையையுடைய, அன்பர்தமக்கு - அன்பருக்கு.

224] குறி விலக்குவித்தல் [யகூ

வெற்றி அவாவிய வாணர் பிரான்தஞ்சை வெற்பகத்திப்
பெற்றிய சோலைப் பிறங்கிருள் வாரன்மின்; 'பேதைஇன்னும்
முற்றிய ஏனல் படுகிள்ளை ஒப்பும் முறைமையள்,'என்
றெற்றிய காதலி னால்இசைத் தாள்அன்னை,' என்றுரையே.

து - ரை: [தலைவி, தோழியைத் தலைவன் வரும் இரவுக்குறியை விலக்குவிக்க வேண்டுதல்] '(தோழீ!) "அன்னை, எற்றிய காதலினால், 'பேதை இன்னும் முற்றிய ஏனல் படுகிள்ளை ஒப்பும் முறைமையள்,' என்று இசைத்தாள்; (ஆதலால், தலைவீர்! நீர்) தஞ்சை வெற்பகத்து இப்பெற்றிய சோலைப் பிறங்கு இருள் வாரன்மின்," என்று உரை,' என இயைக்க. அன்னை - தாய், எற்றிய காதலினால் - இரக்கம்கொண்ட அன்பினால், பேதை - (என்) பெண், ஏனல் - தினையில், படு கிள்ளை - வீழும் கிளிகளை, ஒப்பும் - ஓட்டும், முறைமையள் - நியமம் உடையவள், இசைத்தாள் - கூறினாள், வெற்றி அவாவிய - ஜயத்தை விரும்பிய, வெற்பகத்து - மலையில், இப்பெற்றிய - (இடையீடு படுதலாகிய) இத்தன்மையை உடைய, சோலை - சோலையில், பிறங்கு இருள் - நெருங்கிய இருட்குறியிடத்தில், வாரன்மின் - வாரா தீர், உரை - (அன்பருக்குக்) கூறு. தோழி - முன்னிலை எச்சம்.

225] வெறி விலக்குவித்தல் [யஎ

மின்னா திடித்தென்ன அன்னைகொண் டாள்வெறி விந்தைமங்கை
மன்னாண்மை மன்னிய வாணன்தென் மாறை வரையில்வண்டியாழ்
என்னா அசுணம் இறைகொள்ளும் நாடர் எனக்கருளால்
முன்னாள் அருளிய நோய்தணிப் பான்இன்று மொய்குழலே!

து - ரை: [தலைவி, தன் தாய் கொண்ட வெறியாடுதலை நீக்கும்படி தோழிக்குக் கூறுதல்] 'மொய் குழலே! நாடர் அருளால் எனக்கு முன்னாள் அருளிய நோய் தணிப்பான் இன்று அன்னை மின்னாது இடித்தென்ன வெறி கொண்டாள்,' என இயைக்க. மொய் குழலே - நெருங்கிய கூந்தலை உடையவளே, விந்தை மங்கை - விசயலக்குமியால், மன் ஆண்மை - அரச வீரம், மன்னிய - பொருந்திய, வண்டு - வண்டின் இசையை (பொருளாகு பெயர்), யாழ் - யாழின் இசை (கருவியாகு பெயர்), என்னா - என்று நினைத்து, அசுணம் - அசுணப்பறவைகள், இறைகொள்ளும் - தங்கும், நாடர் - குறிஞ்சி நிலத்தலைவர் ('நாட னென்கோ ஊர னென்கோ' - புறம்.

செய். 49), தணிப்பான் - தணிக்க (பான் ஈற்று வினையெச்சம்), மின்னுது இடித்தென்ன - மின்னாமல் இடித்தது போல, வெறி - வெறியாடுதலை. இக்கவி, மயக்க அணி.

226] பிற விலக்குவித்தல் [யஅ

பொருபால் மதியினைப் போல்மருப் பியானையில் பொன்னொடின்பம்
தருபால் மொழிவஞ்சி! சாரவந் தார்தஞ்சை வாணன்வெற்பின்
ஒருபால் நொதுமலர் என்னவெந் தீஉலை உற்றசெவ்வேல்
இருபால் மருங்கினும் கொண்டெறிந் தால்ஒத்த தென்செவிக்கே.

கு - ரை: [தலைவி, பிறர் தன்னை மணக்க வருவதை விலக்கும்படி தோழிக்குக் கூறுதல்] 'இன்பம் தரு பால் மொழி வஞ்சி! தஞ்சை வாணன் வெற்பின் ஒருபால் நொதுமலர் பொரு பால் மதியினைப்போல் மருப்பு யானையில் பொன்னொடு சார வந்தார் என்ன, என் செவிக்கு இருபால் மருங்கினும் வெந்தீ உலை உற்ற செவ்வேல் கொண்டு எறிந்தால் ஒத்தது,' என இயைக்க. பால் மொழி - பால் போலும் சொல்லையுடைய, ஒரு பால் - ஓரிடத்தில், நொதுமலர் - அயலார், பொரு - (தன்னொடு) மாறுபட்ட, பால் மதி - வெள்ளிய சந்திரன், போல் - ஒத்திருக்கின்ற, மருப்பு - தந்தத்தையுடைய, யானையில் - யானையின்மேல், பொன்னொடு - திருமங்கிலியத்துடன், சார - உறவு கொள்ள, என்ன - என்று சொல்ல, என் செவிக்கு - (அச்சொல்) என் காதுகளுக்கு, இருபால் மருங்கினும் - இரு பக்கத்து இடத்திலும், உலை - (கொல்லனது) உலைக்களத்தில், செவ்வேல் கொண்டு - செவ்வேலால் (கொண்டு - மூன்றனுருபு).

227] குரவரை வரைவு எதிர்கொள்ளுவித்தல் [யகூ

தற்பழி யாமலும் சந்திர வாணன் தமிழ்த்தஞ்சைநம்
கற்பழி யாமலும் காரணம் ஆகக் கயல்விழி!நின்
சொற்பழி யார்நமர்; சொல்லுவல் லேசென்று; சொல்லலையேல்,
இற்பழி ஆம்;வழி ஆம்நம தாருயிர்க் கேதமுமே.

கு - ரை: [தலைவி, தன்னைத் தலைவன் மணத்தலைத் தன் பெற்றோர் முதலிய பெரியோர் ஏற்றுக்கொள்ளும்படி செய்யுமாறு தோழிக்குக் கூறுதல். எதிர்கொள்ளல் - ஏற்றுக்கொள்ளுதல் ('எஞ்சொல் எதிர்கொண்டு' - பு. வெ. 9, 32)] 'கயல் விழி! தன் பழியாமலும், நம் கற்பு அழியாமலும் காரணம் ஆக, வல்லே சென்று சொல்லு; நமர் நின் சொல் பழியார்; சொல்லலையேல், இல் பழி ஆம்; நமது ஆருயிர்க்கு ஏதமும் வழியாம்,' என இயைக்க. கயல் விழி - கயல் மீன் போன்ற கண்களை உடையவளே (உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), தன் பழி

யாமலும் - (நம் தலைவன்) தன்னைப் பழியாமலும், தஞ்சை - தஞ்சையில் உள்ள, காரணம் ஆக - (இவை இரண்டும்) காரணம் ஆகும்படி, வல்லே - விரைவாக, நமர் - நம்மவர், பழியார் - நிந்திக்கமாட்டார், சொல்லலையேல் - நீ சொல்லாயானால், இல் - மனைக்கு, ஏதமும் - துன்பத்திற்கும்.

க, உ, ரு, யக, யஉ, யரு, யசு, யஎ, யஅ-ஆம் கவிகள், அச்சத்திற்கு உரியவை; ௯, ய-ஆம் கவிகள், உவர்த்தற்கு உரியவை (உவர்த்தல் - வெறுத்தல்); ௩, சு, எ, அ, கூ, யரு, யச, யகூ - ஆம் கவிகள், ஆற்றமைக்கு உரியவை.

# 15. வரைவு கடாதல்

228] வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல் [க

'தளரா இளமுலை தாங்ககில் லாது தளர்இடைகண்
வளராத தென்கங்குல்? வாராய்,' எனத்தஞ்சை வாணன்வெற்பா!
விளரார் திருநுதல் அன்னைக்கொர் மாற்றம் விளம்பிஉய்ந்தேன்;
உளராம் அவர்வலை உட்பட்டு வாழ்வ துணர்ந்தருளே.

து - றை: [தோழி, தலைவியின் வேறுபாட்டுக்குக் காரணம் என்னெனத் தன்னை வினவிய செவிலித்தாய்க்குத் தான் மறைத்துக் கூறியதைத் தலைவனுக்குக் கூறுதல்] 'வெற்பா! "வாராய்; தளரா இளமுலை தாங்ககில்லாது தளர் இடை, கங்குல் கண் வளராதது என்?" என, விளர் ஆர் திருநுதல் அன்னைக்கு ஓர் மாற்றம் விளம்பி உய்ந்தேன்; உளர் ஆம் அவர் வலையுள் பட்டு வாழ்வது உணர்ந்து அருள்,' என இயைக்க. வாராய் - (தோழியே! இங்கு) வா, தாங்ககில்லாது - தாங்கமாட்டாமல், தளர் இடை - தளர்ந்த இடையை உடையவள் (வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), கங்குல் - இரவில், கண் வளராதது - உறங்காததன் காரணம், என - என்று வினவ, விளர் - வெளுப்பு, அன்னைக்கு - செவிலித்தாய்க்கு, விளம்பி - (மறைத்துச்) சொல்லி, உய்ந்தேன் - (என் உயிர்க்கு உண்டாக இருந்த துன்பத்தினின்று) தப்பினேன், உளர் ஆம் - (எமக்கு) உள்ளாராகிய, அவர் - அத்தாய்மாரின், வாழ்வது - (யாம் உயிர்) வாழ்வதை, உணர்ந்து அருள் - (நீ) அறிந்து (எமக்குக்) கிருபை செய்வாயாக. 'மகள் துயிலாமைக்குக் காரணம் என்னோயோ!' எனுந் துன்பத்தால் செவிலிக்கு நெற்றி வெளுப்படைந்தது என்க. 'ஓர் மாற்றம்' என்றது, 'தலைவி தூக்கத்தில் கனவு கண்டு எழுந்த அச்சத்தால் பின்பு உறங்காள் ஆயினள்,' என்று தோழி கூறியது. எனவே, குறிப்பால் தலைவியை விரைந்து மணந்துகொள்ளும்படி தலைவனைத் தோழி வற்புறுத்தியதாயிற்று.

229] அலர் அறிவுறுத்தல் [உ

மணிவரை மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பா!
பணிமொழி யாள்என்னும் கொள்கொம்பு மூடிப் படர்ந்தயலார்
அணிமனை தோறும் கொழுந்துவிட் டம்பல் அரும்பி, மண்மேல்
தணிவில தாகஇப் போதலர் பூத்ததுன் தண்ணளியே.

து - றை: [தோழி, பலர் கூறும் பழி மொழியைத் தலைவனுக்குத் தெரிவித்தல்] 'வெற்பா! உன் தண்ணளி, பணி மொழியாள் என்னும்

கொள் கொம்பு மூடிப் படர்ந்து, அயலார் அணி மனைதோறும் கொழுந்துவிட்டு, அம்பல் அரும்பி, மண்மேல் தணிவு இலது ஆக இப்போது அலர் பூத்தது,' என இயைக்க. மணி வரை - மாணிக்க மலையைப்போன்ற, தண்ணளி - கருணையாகிய பூங்கொடி, கொள் கொம்பு - (கொடி படரக்) கொள்ளும் கொம்பு, அணி - அழகு, அம்பல் - சிலர் அறிய நிகழும் பழிமொழியாகிய அரும்பை, இலது ஆக - இல்லாதது ஆக, அலர் - பலர் அறிய நிகழும் பழி மொழியாகிய பூவை. இக்கவி, இயைபு **உருவக அணி.**

**230]** தாய் அறிவு உணர்த்தல் [ரு

**தி**ரையின் பவளம் வடவா முகத்தெழும் தீக்கொழுந்தின்
கரையில் படரும் கடல்துறை நாட! கயல்கொடிபொன்
வரையில் திகழ்வித்த வாணன்தென் மாறை மலர்ந்தமௌவல்
விரையின் களவையெல் லாம்அறிந் தாள்அன்னை மெய்யுறவே.

**து - ரை:** [களவு ஒழுக்கத்தைத் தாய் அறிதலைத் தோழி தலைவனுக்கு அறிவித்தல்] 'நாட! அன்னை, மௌவல் விரையின் களவை எல்லாம் மெய்யுற அறிந்தாள்,' என இயைக்க. பவளம் - பவளக்கொடி, திரையின் - அலையினால் (இன் - சாரியை), வடவாமுகத்து - வடவாமுகம் என்னும் தீயில், எழும் - தோன்றுகின்ற, தீக்கொழுந்தின் - நெருப்புச் சுடர்போல (இன் - ஐந்தனுருபு ஒப்புப் பொருளில் வந்தது), நாட - நாடனே, பொன் வரையில் - மேருமலையில், திகழ்வித்த - விளங்கச் செய்த, விரையின் - வாசனையினால் (இன் - சாரியை), களவை - களவு ஒழுக்கத்தை, மெய் உற - உள்ளபடி, அன்னை - செவிலித்தாய். ('ஆதலால், நீ இனிக் களவு ஒழுக்கத்தை மேற்கொள்ளாமல் விரைந்து மணமுடித்துக்கொள்,' என்பது கருத்து).

**231]** வெறி அச்சுறுத்தல் [ச

**மை**யுற்ற நீலக்கண் மாமங்கை கோன்தஞ்சை வாணன்வெற்பில்
செய்யுற்ற வேல்அன்ப! நீதணி யாமையின் நெஞ்சினுள்ளே
ஐயுற் றயர்வுற்றெம் அன்னையும் ஆயும்என் ஆரணங்கின்
மெய்யுற்ற நோய்தணிப் பான்வெறி யாடல் விரும்பினரே.

**து - ரை:** [தோழி, செவிலித்தாயும் நற்றாயும் வெறியாட்டுவித்தலைக் கூறித் தலைவனை அச்சமடையச் செய்தல்] 'அன்ப! நீ தணியாமையின், அன்னையும் ஆயும் நெஞ்சினுள்ளே ஐயுற்று அயர்வுற்று, என் ஆரணங்கின் மெய் உற்ற நோய் தணிப்பான் வெறியாடல் விரும்பினர்,' என இயைக்க, மா மங்கை - திருமகளுக்கு, கோன் - தலைவனாகிய, செய் உற்ற - செய் பொருந்திய, தணியாமையின் - (தலைவிக்குத் தந்த காம வேட்கையாகிய நோயைத்) தணியச் செய்யாமையால், அன்னை - செவிலித்தாய், ஆய் -

நற்றாய், அயர்வுற்று - மனம் சோர்ந்து, ஆரணங்கின் - தெய்வப்பெண் போன்ற தலைவியின் (உவமையாகு பெயர்), மெய் உற்ற - உடலிற் பொருந்திய, தணிப்பான் - ஆறச்செய்ய (பான் ஈற்று வினை எச்சம்). ['ஆதலின், நீ விரைந்து தலைவியை மணந்துகொள்,' என்பது கருத்து].

232] பிறர் வரைவு உணர்த்தல் [௫

வெடிக்கின்ற இப்பியுள் நித்திலம் பைத்தலை வெம்பகுவாய்த்
துடிக்கின்ற திங்களின் தோன்றும் துறைவ!செஞ் சொல்புலவோர்
வடிக்கின்ற முத்தமிழ் வாணன்தென் மாறைஎன் மான்மருங்கை
ஒடிக்கின்ற கொங்கைகண் டால்எவ ரேநெஞ் சுகாதவரே !

து - ரை: [தோழி, தலைவியை அயலார் மணம் பேசி வந்ததைத் தலைவனுக்கு அறிவித்தல்] 'துறைவ! மாறை என் மான் மருங்கை **ஒடிக்**கின்ற கொங்கை கண்டால், நெஞ்சு உகாதவர் எவர்!' என இயைக்க. இப்பியுள் - முத்துச்சிப்பியில், நித்திலம் - முத்து, பைத்தலை - பசுமையான தலையை உடைய இராகு என்னும் பாம்பினது (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), வெம்பகுவாய் - கொடிய அகன்ற வாயில், திங்களின் - சந்திரனைப்போல (இன்-ஒப்புப்பொருளில் வந்த ஐந்தனுருபு), தோன்றும் - காணப்படுகின்ற, துறைவ - நெய்தல் நிலத் தலைவனே, வடிக்கின்ற - ஆராய்ந்து குற்றம் நீக்கிக் கொள்ளுகின்ற, முத்தமிழ் - (இயல் இசை நாடகம் என்னும்) மூன்று தமிழைக் கற்ற, மாறை - மாறை நாட்டிலுள்ள, மான் - மான்போன்ற தலைவியின் (உவமையாகுபெயர்), மருங்கை - இடுப்பை, ஒடிக்கின்ற - முறிக்கின்ற, உகாதவர் - நிலைகுலையாதவர், எவர் - யார். முன்னிரண்டடிகள், 'தலைவ, உன்னையடைய இயலாமல் வீட்டில் இருத்தப்பட்டு மனம் நடுங்கும் தலைவியை நீ மணந்து மகிழ்வியாமல் காலம் தாழ்த்துதல் அடாது,' என்னும் **இறைச்சிப்பொருளைத்** தோற்றுவித்தலை அறிக. இறைச்சிப்பொருள், பெரும்பான்மையும் தலைவனது கொடுமை கூறுமிடத்தில், கருப்பொருளே தனக்கு நிலைக்களனாக வரும். இதனை, 'இறைச்சி தானே பொருட்புறத் ததுவே' (தொல். பொ. சூ. 229) என்பதனாலறிக. மாறனலங்கார ஆசிரியர் இதனை **இறைச்சிப் பொருள் அலங்காரம்** என வழங்கினர் (மாறன். சூ. 176).

233] வரைவு எதிர்வு உணர்த்தல் [௬

குருதிகண் டால்அன்ன காந்தளம் சாரல் குறிவெறிதே
வருதிகண் டாய்தஞ்சை வாணன்வெற் பா!எங்கள் மாநகர்நீ
சுருதிகண் டாரொடும் தோன்றில்எம் கேளிர்நின் சொல்இகவார் ;
பருதிகண் டால்அல ராதொழி யாகயப் பங்கயமே.

து - ரை : [தோழி, 'நீ மணம் பேசி வரின், எம்மவர் ஏற்றுக்கொள்வர்,' எனத் தலைவனுக்குக் கூறுதல்] 'வெற்பா! சாரல் குறி வெறிதே வருதி; நீ சுருதி கண்டாரொடும் எங்கள் மாநகர் தோன்றில், எம் கேளிர் நின் சொல் இகவார்; கயப் பங்கயம், பருதி கண்டால், அலராது ஒழியா,' என இயைக்க. குருதி - இரத்தத்தை, காந்தளம் சாரல் - காந்தட்பூ அலர்ந்த மலைச்சாரலில் உள்ள (அம்-சாரியை), குறி-குறியிடத்தில், வெறிதே - வீணில்; வருதி - வருவாய், சுருதி கண்டார் - வேதத்தின் முடிவைக்கண்ட அந்தணர், தோன்றில் - (மணம் பேச) வந்தால் ('நிருதர் தோன்றியுளர் என்றால்' - கம்ப. அகத். செய். 52), கேளிர் - சுற்றத்தார், இகவார் - கடவார், கயப் பங்கயம் - குளத்துத்தாமரை, பருதி - சூரியனை, அலராது ஒழியா - அலரும். கண்டாய் - முன்னிலை அசை. 'இது வெளிப்படையால் வரைவு கடாவியது என்க. இக்கவி, வேற்றுப்பொருள் வைப்பு அணி.

234] வரையும் நாள் உணர்த்தல் [எ

**அலகம் பனகண் இவள்கொங்கை மென்சுணங் காகிவண்டு**
**பலகம் பலைசெய்யப் பூத்தன வேங்கை ; பனிவரைமேல்**
**திலகம் பதித்தெனச் சேல்வைத்த வாணன்தென் மாறைமன்னன்**
**உலகம் பயில்புகழ் பொன்சிலம் பா!மதி ஊர்கொண்டதே.**

து - ரை : [தோழி, 'மணம் செய்தற்கு உரிய நாள் இது,' எனத் தலைவனுக்கு அறிவித்தல்] 'சிலம்பா! வேங்கை பூத்தன; மதி ஊர் கொண்டது,' என இயைக்க. சிலம்பா - மலை நாட்டுத் தலைவனே, அலகு அம்பு அன - கூர்மையான அம்பைப் போன்ற, இவள் - இத்தலைவியின், கொங்கை - முலைகளின்மேல் பரவிய, மென் சுணங்கு ஆகி - மெல்லிய அழகு தேமலைப்போன்று, பல கம்பலை - பல விதமான ஆரவாரம், பனி வரை - இமய மலை, திலகம் - பொட்டு, பதித்தென - பதித்தது போல, சேல் - கயற்கொடியை (இருமடியாகு பெயர்), உலகம் பயில் - உலகைச் சூழ்ந்த, மதி - சந்திரனை, ஊர் கொண்டது - பரிவேடம் சூழ்ந்தது. பரிவேடம் - சந்திரனைச் சூழ்ந்துள்ள ஒளி வட்டம். வேங்கை பூத்தலும் சந்திரனைப் பரிவேடம் சூழ்தலும் நிகழும் காலம் மணத்திற்குரியதெனக் குறிஞ்சி நில மாந்தர் கருதினர் என்பது இதனால் விளங்கும். 'கணிவாய் மலர்ந்து...ஊர்கொண்ட தால்வெண் மதியமுமே' (திருவெங். செய். 237) எனவும், 'வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன ; நெடுவெண் திங்களும் ஊர் கொண் டன்றே' (அகம். செய். 2) எனவும் வருவன காண்க.

235] அறிவு அறிவுறுத்தல் [அ

**வனநாள் முளரி முகைவென்று, வாணன்தென் மாறைவெற்பில்**
**கனநாண் அணிந்து,பொன் கச்சற வீசிக் கதித்தெழுந்த**

தனம்நாணும் நுண்ணிடைத் தையல்நல் லாள்பழி சாற்றுவல்யான்
எனநாணி, நின்பழி தான்மறைத் தாள்அன்ப ! என்னையுமே.

து - ரை : [தோழி, தலைவியின் பேரறிவைத் தலைவனுக்குத் தெரிவித்தல்] 'அன்ப! தையல் நல்லாள், யான் பழி சாற்றுவல் என நாணி, தான் என்னையும் நின்பழி மறைத்தாள்,' என இயைக்க. அன்ப-அன்பனே, வனம் - நீரில் தோன்றிய, நாள் முளரி முகை - புதிய தாமரை அரும்பை, கனம் நாண் - பொன் சாட்டை, பொன் கச்சு - அழகிய முலைக் கச்சு, கதித்து - பருத்து, தனம் - முலைகளுக்கு (நான்கன் உருபு தொக்கது), தையல் - கட்டழகை உடைய, நல்லாள் - குணத்திற் சிறந்தவளாகிய தலைவி, பழி - (நீ பிரிந்து செய்த) குற்றத்தை, சாற்றுவல் - சொல்லுவேன். 'இத்தகைய பேரறிவு உடையவளை நீ விரைந்து மணந்துகொள்,' எனத் தோழி குறிப்பால் கூறினாள் என்க.

236] குறி பெயர்த்திடுதல் [சூ

ஊறோர் பவர்இங் குலாவவும் கூடும்வந் தொண்சிலம்பா!
வேறோர் பொதும்பரில் போய்விளை யாடுக வேல்படையால்
மாறோர் பகைவென்ற வாணன்தென் மாறைஎன் மன்னுதவப்
பேறோர் வடிவுகொண் டால்அன்ன நீயும்என் பேதையுமே.

து - ரை : [தோழி, குறியிடத்தை மாற்றிக் கூறுதல்] 'ஒண் சிலம்பா! ஊறு ஓர்பவர் இங்கு வந்து உலாவவும் கூடும்; நீயும் என் பேதையும் வேறு ஓர் பொதும்பரில் போய் விளையாடுக,' என இயைக்க. ஒண் சிலம்பா - இயற்கை அழகையுடைய குறிஞ்சி நிலத் தலைவனே, ஊறு ஓர்பவர் - இடையூற்றை ஆராய்ந்து திரிபவர், இங்கு - இக்குறியிடத்தில், வேல் படையால் - வேலாயுதத்தினால், மாறோர் - எதிரிகளின், மாறை - மாறை நாட்டில், மன்னு - நிலை பெற்ற, தவப்பேறு - தவச் செல்வம், பேதை - தலைவி, பொதும்பரில் - சோலையில். உலாவவும் - உம், ஐயப் பொருளது. இது குறிப்பால் வரைவு கடாதல்.

237] பகல் வருவானை, 'இரவு வருக,' என்றல் [ய

முத்தணி நீல மணித்தகட் டுள்எங்கும் மொய்கொளவே
வைத்தணி சேர வகுத்தது போல்தஞ்சை வாணன்வையைப்
பைத்தணி வார்திரை தோய்கருந் தாள்புன்னைப் பாசிலைவெண்
தொத்தணி பூந்துறை வா!வரு வாய்இருள் தூங்கிரவே.

து - ரை : 'பூந்துறைவா! இருள் தூங்கு இரவு வருவாய்,' என இயைக்க. முத்து அணி - முத்தின் வரிசையை, தகட்டுள் - தகட்டினுள்,

மொய் கொள - நெருங்கியிருக்கும்படி, அணி சேர - ஒழுங்கு அமைய, வகுத்ததுபோல் - செய்தாற்போல, வையை - வைகையாற்றில், பைத்து - பசுமையாகி, அணி - அழகிய, வார் திரை தோய் - நீண்ட அலையில் படிந்த, கருந்தாள் - கருமையான அடி மரத்தையுடைய, புன்னை - புன்னை மரத்தின், பாசிலை - பச்சிலையானது, வெண் தொத்து அணி - வெண்மையான பூங்கொத்தை அணிகின்ற, பூந்துறைவா - பொலிவை உடைய துறைவனே, இருள் தாங்கு இரவு - இருள் நெருங்கிய இரவில். 'முத்தும் நீலத்தகடும் வெவ்வேறிடத்தில் தோன்றியவை ஆயினும், ஒருங்கு கூடி அழகடைந்தாற் போல, புன்னை மரத்தின் பசுமையான இலைகள் நீரில் அலைகளால் ஒதுக்கப் படும் வெண்பூங்கொத்துகளை அணிந்து அழகுபெற விளங்கும் துறைவனே,' என்றமையால், 'அவற்றைப் போல நீயும் தலைவியை மணந்து சிறப்படைத லின்றி, இங்ஙனம் காலந்தாழ்த்தல் தகாது,' என்னும் கருத்தைப் புலப் படுத்தலின், இக்கவியில் இறைச்சிப் பொருள் தோன்றுதலறிக.

238] இரவு வருவானைப் 'பகல் வருக,' என்றல் [யக

இழைவிளை யாடும் இளமுலை சாயற் கிடைந்தமஞ்ஞை
கழைவிளை யாடும் கடிப்புனம் காத்தும், கலைஅகலா
துழைவிளை யாடும் உயர்சிலம் பா!இன்னும் உன்பொருட்டால்
மழைவிளை யாடும் மதில்தஞ்சை வாணன் மலயத்திலே.

து - ரை: 'சிலம்பா! மலயத்திலே இன்னும் உன் பொருட்டுக் கடிப் புனம் காத்தும்,' என இயைக்க. கலை உழை அகலாது விளையாடும் - ஆண் மான் பெண்மானைப் பிரியாமல் விளையாடுகின்ற, உயர் சிலம்பா - உயர்ந்த மலையை உடையவனே, மழை - மேகம், மலயத்தில் - பொதிய மலையில், இழை - ஆபரணம், சாயற்கு - இயலுக்கு, இடைந்த - தோல்வி அடைந்த, மஞ்ஞை - மயில், கழை - மூங்கிலின்மேல், கடிப்புனம் - சிறப்பையுடைய தினைக் கொல்லையை, காத்தும் - (பகற்பொழுதில் யாம்) காப்போம். ('ஆத லின், நீ அங்கு வருவாயாக,' என்றாள் என்க). பொருட்டால் - ஆல், அசை. 'உழை அகலாது கலை விளையாடும்' என்றதனால், 'நீயும் தலைவியைப் பிரி யாமல் விளையாடுக,' என்னும் உள்ளுறை உவமம் தோன்றுதல் காண்க.

239] பகல் வருவானைப் 'பகலினும் இரவினும் பயின்று வருக,' என்றல் [யஉ

குரவும் கணியும் விரவும்வெற் பா!வெய்ய குஞ்சரம்மேல்
வரவுந் தியதெவ்வை மாற்றிய வாணன்தென் மாறைமின்னும்
அரவும் பணியும் நடங்கிடை ஆற்றல ளால்,பகலும்
இரவும் குறிவயின் நீவரல் வேண்டும் இவள்பொருட்டே.

கு - ரை : [பயின்று - நெருங்கி] 'வெற்பா ! நடங்கு இடை ஆற்றலளால், இவள் பொருட்டு நீ பகலும் இரவும் குறிவயின் வரல் வேண்டும்,' என இயைக்க. குரவு - குரா மரம், கணி - வேங்கை மரம், விரவும் - கலந்திருக்கும், வெய்ய - கொடிய, குஞ்சரம் - யானையை, மேல் வர - தன்மேல் எதிர்த்து வரும்படி ('பரதனிப் படைகொடு...மேல்வந்தான்' - கம்ப. கிளை. செய். 27), உந்திய - செலுத்திய, தெவ்வை - பகைவரை (பண்பாகு பெயர்), மாற்றிய - ஓடச் செய்த ('வில்லோர் மாற்றி' - ஐங்குறு. செய். 267), மாறை - மாறை நாட்டில், மின்னும் - மின்னலும், அரவும் - பாம்பும், பணியும் - (இடைக்கும் அல்குலுக்கும் தோற்று) வணங்குகின்ற, நடங்கு இடை - துவளுகின்ற இடுப்பை உடையவளாகிய தலைவி (வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), ஆற்றலளால் - (உன்னைப் பிரிந்து) சகிக்கமாட்டாள் ஆதலால், குறி வயின் - குறி இடத்தில். இக் கவியில், 'ஓரறிவுயிராகிய மரங்களும் கலந்திருத்தலின், ஆறறிவுடைய நீ தலைவியைப் பிரிந்திருத்தல் தகாது,' என்னும் இறைச்சிப் பொருள் தோன்றுதலறிக.

240] 'பகலினும் இரவினும் அகல் இவண்,' என்றல் [யரு

தாவாத செல்வம் தருந்தஞ்சை வாணன் தடஞ்சிலம்பா !
நீவாரல் சாரல்; நிலவல ராம்பகல்; நீடிருள் ஆர்
மாவான் நிலவு நிலமங்கை வார்குழல் மல்லிகைபோல்
ஓவா திரவெறிக் கும்சோலை நீழலி னூடுவந்தே.

கு - ரை : [இவண் அகல் - இவ்விடத்திலிருந்து நீங்கு] 'தடஞ் சிலம்பா ! பகல், நிலவு அலராம் ; இரவு, நீடு இருள் ஆர் மா வான் நிலவு, நிலமங்கை வார் குழல் மல்லிகை போல், சோலை நீழலினூடு வந்து, ஓவாது எறிக்கும் ; சாரல் நீ வாரல்,' என இயைக்க. தாவாத - கெடாத, தரும் - (தன்னை அடைந்தவர்க்குத்) தருகின்ற, தடஞ்சிலம்பா - விசாலமான மலையை உடைய தலைவனே, பகல் - பகலில், நிலவு அலராம் - விளங்குகின்ற பழி உண்டாகும், இரவு - இரவில், நீடு இருள் ஆர் - நீண்ட இருள் பொருந்திய, மா வான் நிலவு - பெரிய ஆகாயத்திலுள்ள சந்திரன், நிலமங்கை - பூமி தேவியின், வார் குழல் - நீண்ட கூந்தலிற் சூடிய, மல்லிகை போல் - மல்லிகை மலர் போல, நீழலினூடு - நிழலினுள்ளே, ஓவாது - நீங்காமல், எறிக்கும் - ஒளி வீசும் ('காட்டுக் கெறிந்த நிலா' - தமிழ் நா. செய். 237), சாரல் - சாரலில், வாரல் - வராதே. 'பகலில் வரின், பலர் அறிந்து பழி தூற்றுவர் ; நிலவு ஒளி வீசும் இரவில் வரின், பிறர் காண நேரிடும் ; ஆதலின், நீ இருபோதும் களவொழுக்கங் கருதி வருதல் ஒழித்து, விரைந்து தலைவியை மணந்துகொள்,' என்றாள் தோழி என்க.

241] தலைமகன் நாடு முதலியன கூறல் [யச

**தலத்திற்கும் மாறைக்கும் மன்னவன் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்**
**நிலத்திற்கு மாமணி ஆகும்நின் நாட்டிற்கும் நீள்பதிக்கும்**
**குலத்திற்கும் மாசில் குடிமைக்கும் சீர்மைக்கும் கோதில்மெய்ம்மை**
**நலத்திற்கும் ஆவதன் றால்வரை யாது நடப்பதுவே.**

து - ரை: '(தலைவ!) வரையாது நடப்பது ஆவது அன்று,' என இயைக்க. வரையாது நடப்பது - மணம் புரியாமல் ஒழுகுவது, ஆவது - தகுவது, தலம் - உலகம், மாமணி ஆகும் - மாணிக்கம் போன்றதாகிய, நீள் பதிக்கும் - பெரிய ஊருக்கும், மாசு இல் - குற்றமில்லாத, குடிமை - உயர்குடிப் பிறப்பு, சீர்மை - புகழ், கோது இல் - குற்றமில்லாத, மெய்ம்மை நலம் - உண்மையோடு பொருந்திய நல்வினை, அன்றால் - ஆல், அசை. மாறை தலைமுறைக் காணி ஆதலால், 'தலத்திற்கு மன்னவன்' என்றதோடு அமையாமல், 'மாறைக்கும் மன்னவன்' என்றாள் என்க.

242] ஆறு பார்த்து உற்ற அச்சம் கூறல் [யரு

**புராந்தகர் செஞ்சடை வெண்பிறை போல்நுதல் புள்இமிழ்பூங்**
**குராம்தொடை மென்குழல் கொம்பினை வேண்டிக் கொடிமுல்லைநீள்**
**மராம்தழு வும்தஞ்சை வாணன்வெற் பா!வல்சி தேர்ந்திலஞ்சிக்**
**கராம்திரி கல்அதர் வாய்எல்லி நீவரல் கற்பலவே.**

து - ரை: [தலைவன் வரும் வழியின் துன்பத்தைக் கருதித் தலைவி அடைந்த அச்சத்தைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்] 'வெற்பா! நீ கொம்பினை வேண்டி, கராம் இலஞ்சி வல்சி தேர்ந்து திரி கல் அதர்வாய் எல்லி வரல் கற்பு அல,' என இயைக்க. நீள் மராம் - உயர்ந்த செங்கடப்ப மரத்தை, தழுவும் - அணைந்து படரும், புராந்தகர் - (புர + அந்தகர்) முப்புரங்களை அழித்தவராகிய சிவபெருமானது, செஞ்சடை - செந்நிறச் சடையில் உள்ள, நுதல் - நெற்றியையும், புள் இமிழ் - வண்டுகள் ரீங்காரம் செய்கின்ற, பூங்குராம் தொடை - அழகிய குராம்பூ மாலையை அணிந்த, மென் குழல் - மெல்லிய கூந்தலையுமுடைய, கொம்பினை - பூங்கொம்பு போன்ற தலைவியை (உவமையாகு பெயர்), வேண்டி - விரும்பி, கராம் - முதலை, இலஞ்சி - நீர் நிலையில், வல்சி தேர்ந்து - இரையைத் தேடி, திரி - திரிகின்ற, கல் அதர்வாய் - கல் அடர்ந்த வழியில், எல்லி - இரவில், கற்பு - முறைமை, அல - அல்ல (தொகுத்தல் விகாரம்). இக்கவியில், 'முல்லைக் கொடி செங்கடப்ப மரத்தைத் தழுவிப் படர்தல் போலத் தலைவியும் உன்னைப் பிரியாதிருந்து வாழும்படி நீ அவளை மணத்தல் வேண்டும்,' என **உள்ளுறை உவமம்** தோன்றுதலறிக.

243] ஆற்றுத் தன்மை ஆற்றக் கூறல் [யகூ

கலங்கும், தெளியும், கனல்எழ மூச்செறி யும்,கண்கள்நீர்
மலங்கும், பொலந்தொடி சோரமெய் சோரும், மறம்செய்கொலை
விலங்கும் படிறுசெய் யாக்குன்ற நாட ! விரைந்தளிப்பாய்
அலங்கும் கடும்பரித் தேர்வாணன் மாறை அணங்கினையே.

து - ரை: [தோழி, தலைவியின் பொறுக்க இயலாத துன்பத்தைத் தணிக்கும்படி தலைவனுக்குக் கூறுதல்] 'குன்ற நாட! மாறை அணங்கினை விரைந்து அளிப்பாய்,' என இயைக்க. மறம் செய் கொலை - பாவத்தைச் செய்யும் கொலைத் தொழிலையுடைய, விலங்கும் - மிருகமுங்கூட (உம் - இழிவு சிறப்பு), படிறு - களவு, குன்ற நாட - மலை நாட்டையுடைய தலைவனே, கலங்கும் - (எம் தலைவி) கலக்கம் அடைவாள், தெளியும் - (பின்பு ஒருவாறு) தேறுவாள், மூச்சு எறியும் - பெருமூச்சு விடுவாள், கண்கள் நீர் மலங்கும் - கண்களில் நீர் ததும்புவாள், பொலம் தொடி சோர - பொன்னால் செய்த கை வளையல் கழல, மெய் சோரும் - உடல் இளைப்பாள், (ஆதலால்) அலங்கும் - ஒளி வீசும், கடும்பரி - கடிய வேகத்தையுடைய குதிரைகளையுடைய, மாறை - மாறை நாட்டிலுள்ள, அணங்கினை - தெய்வப் பெண்போலும் தலைவியை (உவமையாகு பெயர்), அளிப்பாய் - காப்பாயாக. 'காவாவிடின் இறந்து படுவாள்,' என்பது தோன்ற இங்ஙனம் கூறியது, 'மணந்துகொள்,' எனக் குறிப்பாற் கூறியதாயிற்று. 'நீ கொடு விலங்கும் களவு செய்யாக் குன்ற நாட்டையுடையை ஆதலின், தலைவியை மணந்துகொள்ளாது களவொழுக்கத்தை மேற்கொள்ளல் உனக்குத் தகாது,' எனத் தோழி குறிப்பாற்கூறி வரைவு கடாவினுள் என்க.

244] காவல் மிகவு உரைத்தல் [யஎ

நஞ்சார் அரவம் திரிதரு கான்நடு நாள்இரவில்
அஞ்சாது செங்கை அயில்விளக் காஅணங் கின்பொருட்டால்
மஞ்சார் மதில்தஞ்சை வாணன்வெற் பா!வரல் ; வன்சொல்அன்னை
துஞ்சாள் கடுந்துடிக் கைக்நகர் காவலர் துஞ்சினுமே.

து - ரை: [தோழி, குறியிடத்தில் தலைவனும் தலைவியும் வருதற்கு இடையூறாகிய காவலின் மிகுதியைத் தலைவனுக்குக் கூறுதல்] 'வெற்பா! நகர் காவலர் துஞ்சினும், அன்னை துஞ்சாள்; அணங்கின் பொருட்டு நஞ்சு ஆர் அரவம் திரிதரு கான் நடு நாள் இரவில் செங்கை அயில் விளக்கா, அஞ்சாது வரல்,' என இயைக்க. மஞ்சு ஆர் - மேகம் பொருந்திய, கடுந் துடிக்கை - கொடுமையையுடைய காவல் பறையை அடிக்கும் கையையுடைய, துஞ்சினும் - தூங்கினும், வன்சொல் அன்னை - (தலைவி குறியிடத்தில் வருதற்குத் தடையாகிய) கடுஞ்சொல்லையுடைய தாய், நஞ்சு

ஆர் ஆரவம் - விஷம் பொருந்திய பாம்புகள், திரிதரு - திரியும் (தரு - துணை வினை விகுதி), கான் - காட்டில், நடுநாள் - இடையாமமாகிய, அயில் - வேலாயுதமே (ஏகாரம் விகாரத்தால் தொக்கது), விளக்கா - விளக்காக ('ஆக' என்பதில் வினையெச்ச விகுதியும் அஃது ஏறிய மெய்யும் தொக்கன), அஞ்சாது - பயப்படாமல், வரல் - (நீ) வாராதே. 'இங்ஙனம் வந்து துன்பமடையாமல், நீ தலைவியை மணந்துகொள்,' எனத் தோழி தலைவனை வெளிப்படையாக வரைவு கடாவினள் என்க.

245] காமம் மிகவு உரைத்தல் [யஅ

தென்னுக வண்தமிழ் வாணன்தென் மாறைச் செருந்தியுடன்
புன்னுக மும்கமழ் பூந்துறை வா!சுரர் போற்றமிர்தம்
பின்னுக முன்வந்த பேதைதன் காமப் பெருங்கடற்கு
நின்னுகம் அன்றிஉண் டோபுணை ஆவது நீந்துதற்கே?

கு - ரை: [தோழி, தலைவனுக்குத் தலைவியின் வேட்கை மிகுதியைக் கூறுதல்] 'பூந்துறைவா! பேதை தன் காமப் பெருங்கடற்கு நீந்துதற்குப் புணை ஆவது நின் ஆகம் அன்றி உண்டோ?' என இயைக்க. தென் நாகம் - பொதிய மலையில் பிறந்த, வண் தமிழ் - வளப்பம் பொருந்திய தமிழைக் கற்ற, மாறை - மாறை நாட்டில், செருந்தி - செருந்திப்பூ (பொருளாகு பெயர்), புன்னுகம் - புன்னை மலர் (பொருளாகு பெயர்), பூந்துறைவா - அழகிய நெய்தல் நிலத் தலைவனே, சுரர் போற்று - தேவர் போற்றுகின்ற, பின் ஆக - (தனக்குப்) பின் தோன்ற, வந்த - தோன்றிய, பேதைதன் - பெண்ணாகிய திருமகளின் (என்றது தலைவியை), பெருங் கடற்கு - பெருங்கடலை (வேற்றுமை மயக்கம்), நீந்துதற்கு - கடப்பதற்கு, புணை - மரக்கலம், ஆகம் - மார்பு. 'செருந்திப் பூவும் புன்னைப் பூவும் கலந்து மணக்கும் துறைவனே,' என்று கூறியதனால், 'நீயும் தலைவியும் அங்ஙனமே மணத்தொடு கூடியிருப்பீராக,' என்னும் உள்ளுறை உவமம் தோன்றியது உணர்க.

246] கனவு நலிவு உரைத்தல் [யகூ

மானுத தெவ்வென்ற வாணன்தென் மாறை வளநகர்போல்
பூணுக மெல்லியல் புல்லினை யாக,அப் பொய்யைமெய்யாப்
பேணு மகிழ்ந்து பெருந்துயில் ஏற்றவள் பின்னைநின்னைக்
காணுள் கலங்கின ளால்கலங் காமனக் காவலனே!

கு - ரை: [தோழி, தலைவியைக் கனவு வருத்துதலைத் தலைவனுக்கு உரைத்தல்] 'கலங்கா மனக் காவலனே! மெல்லியல் புல்லினையாக, அப் பொய்யை மெய்யாப் பேணு மகிழ்ந்து பெருந்துயில் ஏற்றவள், பின்னை

நின்னைக் காணுள் கலங்கினள்,' என இயைக்க. மாணுத - மாட்சிமை இல்லாத, தெவ் - பகைவரை (பண்பாகு பெயர்), நகர் போல் - நகரைப் போன்ற, பூண் ஆகம் - ஆபரணம் அணிந்த மார்பையுடைய, மெல்லியல் - மென்மைத் தன்மையுடைய தலைவியை (பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), புல்லினையாக - (கனவில் நீ ) தழுவினுயாக, மெய்யா - உண்மையாக (வினையெச்ச விகுதியும் அஃது ஏறிய மெய்யும் தொக்கன), பேணு - விரும்பி ('செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்), பின்னை - (அத்தூக்கத்திலிருந்து விழித்த) பின்பு, காணுள் - காணுதவளாய் (முற்றெச்சம்), கலங்கினளால் - ஆல், அசை. 'பெருந்துயில் ஏற்றவள்' என்றதனுல், கனவு வருவிக்கப்பட்டது.

247] கலின் அழிவு உரைத்தல் [உய

ஏர்ஏற்ற கொங்கை இளங்கொடி மாந்தளிர் ஏய்ந்தவண்ணம்
கார்ஏற்ற கங்குலில்பீர்அலர் போன்றது ; காவிஉண்கண்
வார்ஏற்ற பைங்கழல் வாணன்தென் மாறையில் வாவியின்கண்
நீர்ஏற்ற செங்கழு நீர்மலர் போன்றது நின்பொருட்டே.

து - ரை : [தோழி, தலைவியின் அழகு அழிதலைத் தலைவனுக்குக் கூறுதல்] '(தலைவனே!) நின்பொருட்டு இளங்கொடி வண்ணம், கங்குலில் பீர் அலர் போன்றது; கண், வாவியின்கண் நீர் ஏற்ற செங்கழுநீர் மலர் போன்றது,' என இயைக்க. ஏர் ஏற்ற - அழகைத் தாங்கிய, இளங்கொடி - இளங்கொடி போன்ற தலைவியின், ஏய்ந்த - ஒப்பாகிய, வண்ணம் - நிறம், கார் ஏற்ற கங்குலில் பீர் அலர் - கருமையைக் கொண்ட இரவில் பூத்த பீர்க்கம் பூ, காவி - கருங்குவளை போன்ற, உண் கண் - மையுண்ட கண், வார் ஏற்ற - கயிற்றைக் கொண்ட, பைங்கழல் - அழகிய வீர கண்டையை அணிந்த, வாவியின்கண் - குளத்திலுள்ள, நீர் ஏற்ற - (தன்னிடம்) நீரைத் தாங்கிய. கருங்குவளை போன்ற கண், அழுதழுது சிவந்து நீர் கோத்ததால், 'நீர் ஏற்ற செங்கழுநீர் மலர் போன்றது,' என்க.

க, உ; ங, ச, ௫-ஆம் கவிகள், போய்த்தற்கு உரியவை; க, ௰, ௰க, ௰உ, ௰ங-ஆம் கவிகள், மறுத்தற்கு உரியவை; ௰ச- ஆம் கவி, கழறலுக்கு உரியது; ௬, எ, அ, ௰௫, ௰௬, ௰எ, ௰அ, ௰௯, உ௰-ஆம் கவிகள், மேய்த்தற்கு உரியவை.

## 16. ஒரு வழித் தணத்தல்

248] தன் பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல் [க

திரைகே தகைமணம் கூட்டும்எம் பாடியில் சென்றுவந்தியான்
வரைகேன் ; வருந்துணை வல்லியை நீதஞ்சை வாணன்செவ்வேல்
புரைகேழ் மதர்விழிக் கோங்கரும் பேர்முலைப் பூசல்வண்டு
நிரைகேச வஞ்சி!'அஞ் சேல்!'என்று தேற்றுதல் நின்கடனே.

து - ரை : [அகற்சி - பிரிவு] 'வஞ்சி ! யான், எம் பாடியில் சென்று வந்து, வரைகேன் ; வருந்துணை நீ வல்லியை, 'அஞ்சேல் !' என்று தேற்றுதல் நின் கடன்,' என இயைக்க. புரை - ஒத்த, கேழ் - நிறத்தையுடைய, மதர் விழி - களித்த கண்கள், கோங்கு அரும்பு ஏர் - கோங்கரும்பைப் போன்ற அழகிய, பூசல் - ஆரவாரிப்பு, நிரை கேசம் - மொய்த்த கூந்தல், திரை - அலையில், கேதகை - தாழம்பூ (பொருளாகு பெயர்), மணம் கூட்டும் - (தன்) மணத்தைக் கலக்கின்ற, பாடி - ஊர், வரைகேன் - மணப்பேன், வருந்துணை - (நான்) வருமளவும், வல்லியை - பூங்கொடி போன்ற தலைவியை (உவமையாகு பெயர்), கடன் - கடமை, வந்தியான் - (வந்து+யான்) குற்றியலிகரம் அலகு பெறுதாயிற்று.

249] பாங்கி விலக்கல் [உ

பறந்தாங் கிவர்பரித் தேர்கட வேல்;உன் பதிஅடைந்தால்,
மறந்தாங் கமையவும் வல்லைஅன் பா! தஞ்சை வாணன்ஒன்னார்
நிறந்தாங் கிவர்கணை போல்உண்கண் மாமுகில் நீர்மைகொண்டு
புறந்தாழ் கருங்குழல் வெண்முத்த வாள்நகைப் பொன்னினையே.

து - ரை : [தோழி, தலைவன் செல்லுதலை விலக்குதல்] 'அன்பா ! உன் பதி அடைந்தால், பொன்னினை மறந்து, ஆங்கு அமையவும் வல்லை ! (ஆதலால்), தேர் கடவேல்,' என இயைக்க. பதி - ஊர், ஒன்னார் - பகைவரின், நிறம் - மார்பு, தாங்க - ஏற்றுக்கொள்ளும்படி (வினையெச்ச விகுதி தொக்கது), இவர் கணை - ஏறும் அம்பை, உண்கண் - மையுண்ட கண்களையும், மாமுகில் நீர்மை - கரிய மேகத்தின் தன்மையை, புறம் - முதுகில், தாழ் - தொங்குகின்ற, வாள் நகை-ஒளி பொருந்திய பற்கள், பொன்னினை-இலக்குமி போன்ற தலைவியை (உவமையாகு பெயர்), ஆங்கு - அவ்விடத்தில், அமையவும் - தங்கியிருக்கவும் ('மறந்தவண் அமையார் ஆயினும்' - அகம். செய். 37), பறந்தாங்கு - பறந்தாற்போல, இவர் பரி - செல்லுகின்ற குதிரைகளையுடைய, கடவேல் - செலுத்தாதே.

250] தலைவன், நீங்கல் வேண்டல் [௩

அறையும் பொறையும் மணந்தவெங் கானத் தணங்கைஇல்வைத்
திறையும் பிரிவதற் கெண்ணுகி லேன்;எண்ண லார்வரைமேல்
மறையும் படிவென்ற சந்திர வாணன்தென் மாறையில்வண்
டுறையும் குழலி!சென் றேவரல் வேண்டும்எம் மூரகத்தே.

து - ரை: [தலைவன், தன் ஊருக்கு நீங்குதலை விரும்பிக் கூறுதல்] 'வண்டுறையும் குழலி! அணங்கை இல் வைத்து, அறையும் பொறையும் மணந்த வெங்கானத்து இறையும் பிரிவதற்கு எண்ணுகிலேன்; எம் ஊரகத்துச் சென்றே வரல் வேண்டும்,' என இயைக்க. எண்ணலார் - பகைவர், வரைமேல் - மலையில், மாறையில் - மாறை நாட்டில் வாழும், வண்டு உறையும் - (மலரின் மணத்தால்) வண்டுகள் தங்கியிருக்கும், அணங்கை - தெய்வப் பெண்போலும் தலைவியை (உவமையாகு பெயர்), இல் வைத்து - (அவள்) வீட்டில் இருக்கச் செய்து, அறை - கற்குகை, பொறை - துறுகல், மணந்த - கூடிய, வெங்கானத்து - கொடிய காட்டில், இறையும் - கணப்பொழுதும் (அளவையாகு பெயர்), சென்றே - ஏகாரம் தேற்றப்பொருளது. 'யான் செல்லுதற்குரிய காரியம் இன்றியமையாதது,' என்பான், 'சென்றே வரல் வேண்டும்,' என்றான் என்க.

251] தலைவனைப் பாங்கி விடுத்தல் [௪

இல்லத் துறையும் இவள்பொருட் டால்நுமக் கியானும்ஒன்று
சொல்லத் தவிர்கிலன்: சூழ்கழ லீர்!சுடர் தோய்புரிசை
வல்லத் தமர்வென்ற வாணன்தென் மாறையில் வந்துவந்து
செல்லத் திருவுளம் வைத்தகல் வீர்நும் திருநகர்க்கே.

து - ரை: 'சூழ் கழலீர்! இல்லத்து உறையும் இவள் பொருட்டு நுமக்கு யானும் ஒன்று சொல்லத் தவிர்கிலன்: மாறையில் வந்து வந்து செல்லத் திருவுளம் வைத்து, நும் திருநகர்க்கு அகல்வீர்,' என இயைக்க. சூழ் கழலீர் - அணிந்த வீரகண்டையை உடையவரே, பொருட்டால் - ஆல், அசை. தவிர்கிலன் - ஒழியேன், சுடர் தோய் புரிசை - சூரியனைத் தொடும் மதிலையுடைய, வல்லத்து - வல்லம் என்னும் நகரில், அமர் - போரை, வந்து வந்து - அடிக்கடி வந்து (அடுக்கு, விரைவுப் பொருளது), திருவுளம் வைத்து - விருப்பம் கொண்டு, அகல்வீர் - செல்வீராக.

252] பாங்கி, தலைவிக்கு அவன் செலவு உணர்த்தல் [௫

நிலவேய் தரளம் நிரைத்தன்ன வாள்நகை நீலநிறக்
குலவேய் நிகர்பொன் தொடிநெடுந் தோளி! குறுகிவரச்

செலவே கருதினர் செந்தமிழ் வாணன் செழுங்கமலத்
தலவே தியன்பெறும் நாள்பெற்று வாழ்பவன் தஞ்சையிலே.

து - ரை : [செலவு - செல்லுதல்] 'நெடுங்தோளி! (தலைவர்) தஞ்சையில் குறுகி வரச் செலவே கருதினர்,' என இயைக்க. நிலவு எய் - ஒளி பொருந்திய, தாளம் - முத்துகளை, நிரைத்தன்ன - வரிசைப்படுத்தினாற் போன்ற, வாள் நகை - ஒளி பொருந்திய பற்களையும், குல வேய் - சிறந்த மூங்கிலை, நிகர் - ஒத்த, பொன் தொடி - பொன்னாற் செய்யப்பட்ட வாகுவலயம் என்னும் ஆபரணத்தை அணிந்த, நெடுங்தோளி - நீண்ட தோளையும் உடையவளே, செழுங்கமலத் தல வேதியன் - பிரமன், பெறும் நாள் - பெறும் வாழ்நாளை (சதுர்யுகம் இரண்டாயிரம் வட்டம் திரும்பினால் பிரமனுக்கு ஆயுளில் ஒரு நாளாகும் என்றும், அந்நாட் கணக்கில் அமைந்த ஒரு நூற்றாண்டு பிரமனது ஆயுட்காலம் என்றும் கூறுவர்), வாழ்பவன் - வாழ்பவனாகிய ('வாழ்பவனாகிய செந்தமிழ் வாணன்' என இயைக்க), குறுகி வர - கடுகி வர, செலவே கருதினர் - (தலைவர்) செல்லுதலையே எண்ணினர். வாணனைச் 'செழுங்கமலத் தல வேதியன் பெறும் நாள் பெற்று வாழ்பவன்' என்றது, 'என்றும் தன் புகழுடலைத் தமிழ் நாட்டில் நிலை பெறச் செய்தவன்' என்றபடி.

253] தலைவி, நெஞ்சொடு புலத்தல் [சு

குளித்தார் இளங்கொங்கை ஆவியில் ; ஆவி குளிர்ப்பநம்மை
அளித்தார் அகலத் தணைத்தகன் றார்;அன் றணங்கின்முன்னே
தெளித்தார் ; செழுந்தஞ்சை வாணன்ஒன் னாரின்நம் சிந்தைநைய
ஒளித்தார் அவர்இங்ங னே;நன்று நன்றிவ் வுலகியலே!

து - ரை : [புலத்தல் - நொந்து கூறல்] 'அவர், இளங்கொங்கை ஆவியில் குளித்தார் ; நம்மை ஆவி குளிர்ப்ப அளித்து, ஆர் அகலத்து அணைத்து அகன்றார் ; அன்று அணங்கின் முன்னே தெளித்தார் ; நம் சிந்தை செழுந்தஞ்சை வாணன் ஒன்னாரின் நைய இங்ஙனே ஒளித்தார் ; இவ்வுலகியல் நன்று நன்று !' என இயைக்க. அவர் - அத்தலைவர், கொங்கை ஆவி - முலையாகிய குளம், ஆவி குளிர்ப்ப - உயிர் குளிர்ச்சி அடைய, அளித்து - பாது காத்து, ஆர் - அழகிய (ஆ. நி.), அகலத்து - மார்பில், அன்று - (இயற்கைப் புணர்ச்சி கூடிய) அந்நாளில், அணங்கின் - தெய்வத்தின், தெளித்தார் - ('யான் உன்னைப் பிரியேன் ; பிரியின், உயிர் தரியேன்,' எனக் கூறித்) தெளியச் செய்தார், சிந்தை - மனம், ஒன்னாரின் - பகைவரைப்போல, நைய - வருந்த, இங்ஙனே - இவ்வாறு, 'நன்று நன்று' என்னும் குறிப்பு மொழி, 'மிகவும் கொடியது' என்னும் பொருள் பயந்து நின்றது. தலைவி, தலைவன் குறையை உலகின்மேல் வைத்துக் கூறினள்.

254] சென்றோன் நீடலின் காமம் மிக்க கழிபடர் கிளவி [எ

மயிலாடு தண்டலை மாறை வரோதயன் வாணனொன்னார்க்
கெயிலா கியகடல் கானலஞ் சேர்ப்பற் கிடைஇருள்யான்
துயிலா நிலைஒன்றும் சொல்லாய்; துணையுடன் சூழ்திரைத்தேன்
பயிலா மலரணை மேல்துயி லாநிற்றி பால்அன்னமே!

து - ரை: [சென்ற தலைவன் வரக் காலம் தாழ்த்தலால் தலைவிக்கு விருப்பம் மிகுந்த பெருந்துயரொடு கூடிய சொல்] 'பால் அன்னமே! சேர்ப்பற்கு யான் இடை இருள் துயிலா நிலை ஒன்றும் சொல்லாய்; சூழ் திரைத் தேன் பயில் ஆ மலர் அணைமேல் துயிலாநிற்றி!' என இயைக்க. பால் - வெண்மை நிறம் பொருந்திய ('பால்திரு நீற்றெம் பரமனை' - திருவாச. 44,6), தண்டலை - சோலை, ஒன்னார்க்கு - பகைவர்க்கு, எயில் - அரண், கானல் - கழிக்கரை, சேர்ப்பற்கு - நெய்தல் நிலத் தலைவனுக்கு, இடை இருள் - நடு யாமத்தில், துயிலா - உறங்காத, ஒன்றும் - சிறிதும், சொல்லாய் - சொல்லமாட்டாய், துணையுடன் - (உனது) துணையாகிய அன்னச் சேவலுடன், சூழ் திரை - சுற்றிலும் அலைகளையுடைய, தேன் பயில் - தேன் பொருந்திய, ஆ மலர் அணை - அந்த மலர்ப்பள்ளி (சுட்டு நீண்டது), துயிலா நிற்றி - உறங்காநின்றாய். 'அன்னம் முதலியவற்றோடு இங்ஙனம் கூறுதலாற் பெறும் பயன் என்னை?' எனின், மூடி வைத்து வேகும் கலத்தை வாய் திறக்கின் ஆவி வெளிச் செல்வதால் உள்ளே புழுக்கம் சிறிது குறைபடுதல் போலத் தலைவிக்கும் விரகக் கனலால் புழுங்கும் புழுக்கம் சிறிது தணியுமென்க. வாணனுக்குப் பகைவராயினர் அவனது நாட்டிலிருக்க இடம் பெறாது கடலேறிச் செல்வாராதலின், அவர்க்குக் கடல் அரணாயிற்று என்க.

255] தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல் [அ

ஆடுகம் வாநம் அகன்றவர் ஊர்அக லாப்புதுநீர்;
பாடுகம் வாபொன் பசலைதந் தார்திறம்; பாங்கின்எல்லாம்
தேடுகம் வாதஞ்சை வாணன்நன் னாட்டன்பர் தேர்வழி;நாம்
சூடுகம் வாகவ லாதவர் கானல் துறைமலரே.

து - ரை: [ஆற்றுவித்தல் - துன்பத்தைச் சகிக்கச் செய்தல்] '(தலைவீ!) நாம், நம் அகன்றவர் ஊர் அகலாப் புதுநீர் ஆடுகம், வா; பொன் பசலை தந்தார் திறம் பாடுகம், வா; தஞ்சை வாணன் நல் நாட்டு அன்பர் தேர் வழிப் பாங்கின் எல்லாம் தேடுகம், வா; கவலாது அவர் கானல் துறை மலர் சூடுகம், வா,' என இயைக்க. நம் - நம்மை, புதுநீர் - வெள்ளம், பொன் - அழகிய, பசலை - காம மிகுதியால் உண்டாகும் நிற வேறுபாட்டை, தந்தார் - உண்டாக்கியவரின், திறம் - வெற்றியை,

பாடுகம் - பாடுவோம் (பாடு - பகுதி, கு - சாரியை, அம் - தன்மைப் பன்மை வினை முற்று விகுதி ; 'ஆடுகம், தேடுகம், சூடுகம்' என்பவற் றிற்கும் இவ்வாறே கொள்க), அன்பர் - தலைவரின், பாங்கு - பக்கம், கவலாது - துன்பம் அடையாமல், கானல் துறை - கழிக்கரைத் துறை யில் உள்ள. தலைவி - முன்னிலை எச்சம்.

256] தலைவன் வந்தமை பாங்கி உணர்த்தல் [௬

பண்ணும் குழலும் பழித்தசொல் பாவை! பரியல்;எல்லா
மண்ணும் புகழ்தஞ்சை வாணன்ஒன் னார்என மைக்குவளைக்
கண்ணும், கனைஇருள் கங்குலும், மாரன் கணைகள்பட்ட
புண்ணும் புலரவந் தார்தம தூர்வயின் போனவரே.

து - ரை : 'பாவை! தமது ஊர்வயின் போனவர், கண்ணும், கங்குலும், புண்ணும் வாணன் ஒன்னார் எனப் புலர, வந்தார் ; (ஆதலால்) பரியல்,' என இயைக்க. பண் - பண்ணிசை, குழல் - புல்லாங்குழல் இசை, பாவை - உவமையாகு பெயர் (அண்மை விளி), ஊர் வயின் - ஊரிடத்தில், மண் - உலகு, மைக்குவளை - கருங்குவளை மலர் போன்ற, கண் - கண்களி லுள்ள நீர் (இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்ற உபசார வழக்கு), கனை இருள் - நெருங்கிய இருளையுடைய, கங்குல் - இரவு, மாரன் - மன்மதன், கணை - அம்பு, ஒன்னார் என - பகைவரைப்போல, புலர - உலர, விடிய, ஆற ('புலர' என்பதை இறுதி நிலைத் தீவகமாகக் கொள்க), பரியல் - (ஆதலால் நீ) வருந்தாதே.

257] வந்தோன் தன்னொடு நொந்து வினுதல் [ய

ஒருதலைக் கெய்திய கல்அதர்க் குச்செல்ல, ஓர்உயிர்த்தாய்
இருதலைப் புள்ளின் இயைந்தநம் கேண்மையை எண்ணிஎம்மூர்
வருதலைக் கொண்க! நினைந்திலை வாணன்தென் மாறைவண்டு
பொருதலைக் கும்குழ லாள்அழ நீகண்டு போயபின்னே.

து - ரை : [நொந்து - துன்பப்பட்டு] 'கொண்க! நீ செல்ல, குழலாள் அழ, கண்டு போய பின், ஓர் உயிர்த்தாய் இரு தலைப் புள்ளின் இயைந்த நம் கேண்மையை எண்ணி, எம் ஊர் வருதலை நினைந்திலை,' என இயைக்க. கொண்க - தலைவனே, ஒருதலைக்கு - (அலர் அடங்கும் பொருட்டு) ஓரிடத்தை (வேற்றுமை மயக்கம்), எய்திய - அடைய ('செய்யிய' என்னும் வாய்பாட்டு வினை எச்சம்), கல் அதர்க்குச் செல்ல - கல் பொருந்திய வழியில் செல்ல, (அதை உணர்ந்து எம் தலைவி அழ), கண்டு - பார்த்து, போய பின் - நீ போன பிறகு, ஓர் உயிர்த்தாய் - ஒரே உயிரை உடையதாய், இரு தலைப் புள்ளின் - இரண்டு தலைகளை

உடைய பறவையைப்போல, இயைந்த - பொருந்திய, நம் கேண்மையை - உங்களுடைய உறவை, வருதலை - (விரைந்து) வருவதை, நினைந்திலை - நீ நினைக்கவில்லை.

258] தலைவன், பாங்கியோடு நொந்து வினுதல் [யக

ஐவாய் அரவுற்ற தன்னஇன் னுஇடர் ஆற்றிஎன்போல்
எவ்வா றிருந்தனிர் எல்வளை யீர்!எதிர்ந் தாரைவென்று
மைவா ரணம்கொண்ட வாணன்தென் மாறை மருவலர்போல்
ஒவ்வா அலரையும் கேட்டிரு வீரும் ஒருதனியே.

து - ரை : 'எல் வளையீர் ! இருவீரும் மாறை மருவலர்போல் ஒவ்வா அலரையும் கேட்டு, ஒரு தனியே ஐவாய் அரவு உற்றது அன்ன இன்னு இடர் ஆற்றி என்போல் எவ்வாறு இருந்தனிர் ?' என இயைக்க. எல் வளையீர் - ஒளி பொருந்திய வளைகளையுடையீர், இருவீரும் - நீவிர் இரண்டு பேரும், மை வாரணம் - கரிய யானைகளை, கொண்ட - வாங்கி வந்த, மருவலர் - சேராதவர், ஒவ்வா - பொருந்தாத, அலரையும் - பழிச் சொல்லையும், ஒரு தனியே - தன்னந்தனியே, ஐவாய் அரவு - ஐந்தலை நாகம், உற்றது அன்ன - தீண்டியது போன்ற, இன்னு இடர் - (ஐம்புலனுல் வரும்) பொல்லாத துன்பத்தை, ஆற்றி - சகித்து, என் போல் - (அத் துன்பத்தை அனுபவித்திருந்த) என்னைப்போல.

259] தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல் [யஉ

இவளா ருயிர்புரந் தியானிருந் தேன்,செக்கர் இந்துஎன்னப்
பவளா டவியில் பயில்நித் திலம்பங்க யம்குவியத்
தவளா தவம்சொரி தண்துறை வா!'தஞ்சை வாணன்தெவ்வின்
துவளாமல் ஆற்றுவி,' என்றன்று நீசொன்ன சொல்நினைந்தே.

து - ரை : 'தண் துறைவா ! "தஞ்சை வாணன் தெவ்வின் துவளாமல் ஆற்றுவி," என்று நீ அன்று சொன்ன சொல் நினைந்து, யான் இவள் ஆருயிர் புரந்து இருந்தேன்,' என இயைக்க. செக்கர் இந்து என்ன - செவ்வானத்தில் தோன்றிய சந்திரனைப்போல, பவளாடவியில் - (பவள + அடவியில்) பவளக் காட்டில், பயில் - நெருங்கிய, நித்திலம் - முத்து, பங்கயம் - தாமரை, தவளாதவம் - (தவள + ஆதவம்) வெண்மையான கிரணத்தை, தண் துறைவா - குளிர்ச்சி பொருந்திய நெய்தல் நிலத் தலைவனே, தெவ்வின் - பகைவரைப்போல, துவளாமல் - (தலைவி) சோர்வு அடையாமல், ஆற்றுவி - (எனது பிரிவைச்) சகித்திருக்கச் செய்வாயாக, அன்று - (நீ பிரிந்த) அந்நாளில், இவள் - இத்தலைவியின், புரந்து -

பாதுகாத்து. 'புரந்தியான்' என்பதில் குற்றியலிகரம் அலகு பெறு தாயிற்று.

௧, ௫-ஆம் கவிகள், செலவு அறிவுறுத்தற்கு உரியவை; ௨-ஆம் கவி, செலவு உடன்படாமைக்கு உரியது; ௩-ஆம் கவி, செலவு உடன்படுத்தற்கு உரியது; ௪-ஆம் கவி, செலவு உடன்படுதற்கு உரியது; ௬,௭-ஆம் கவிகள், சென்றுழிக் கலங்கலுக்கு உரியவை; ௮,௯-ஆம் கவிகள், தேற்றி ஆற்றுவித்தற்கு உரியவை; ௰,௰௧,௰௨-ஆம் கவிகள், வந்துழி நோந்து உரைத்தற்கு உரியவை.

# 17. வரைவு இடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்

260] 'என் பொருள் பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு,' என்றல் [க

கழைபோல் வளர்நெல் கவின்பெற வாரி கவர்ந்துவரும்
மழைபோல் வருகுவன் வன்சுரம் போய்த்தஞ்சை வாணன்வெற்பில்
இழைபோல் இடையாள் முலைவிலைக் காவன யாவையும்கொண்
டுழைபோல் அரிநெடுங் கண்மயி லே!சென் றுணர்த்திதுவே.

து - ரை : 'மயிலே! (யான்) வன்சுரம் போய், வாணன் வெற்பில் இழைபோல் இடையாள் முலை விலைக்கு ஆவன யாவையும் கொண்டு, கழை போல் வளர்நெல் கவின் பெற வாரி கவர்ந்து வரும் மழை போல் வருகுவன்; (நீ) சென்று இது உணர்த்து,' என இயைக்க. உழை போல் - மானைப் போன்ற, அரி - செவ்வரிகளையுடைய, மயிலே - மயிலைப் போன்றவளே (உவமையாகு பெயர்), வன் சுரம் - (செல்லுதற்குச்) கடுமையான வழியில், வெற்பில் - மலையிலுள்ள, இழை - நூல், இடை - இடுப்பு, முலை விலைக்கு - பரிசத்திற்கு, ஆவன யாவையும் - ஆகவேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும், கழை - கரும்பு, கவின் - அழகு, வாரி - நீர், மழை - மேகம், வருகுவன் - வருவேன், இது - இப்பிரிவை, உணர்த்து - (தலைவிக்குத்) தெரிவி. யான், நீ - தோன்றா எழுவாய். இக்கவியில் தலைவி நெற்பயிராகவும், தலைவன் மேகமாகவும், பரிசப்பொருள் நீராகவும் உள்ளுறை உவம் கொள்ளக் கிடத்தல் காண்க.

261] பாங்கி, 'நின் பொருள் பிரிவு உரை நீ அவட்கு,' என்றல் [உ

வசையும் புகழும்நின் மேலன ஆம்தஞ்சை வாணன்வெற்பா!
மிசையும் கரும்பினில் வேம்புவைத் தால்அன்ன வேட்கை,எல்லாத்
திசையும் பரவும் திருஅனை யாள்தன் திருவுளத்துக்
கிசையும் படிவல்லை யேல்,சொல்லி நீபின் எழுந்தருளே.

து - ரை : 'வாணன் வெற்பா! வசையும் புகழும் நின் மேலன ஆம்; நீ வல்லையேல், எல்லாத் திசையும் பரவும் திரு அனையாள்தன் திருவுளத்துக்கு மிசையும் கரும்பினில் வேம்பு வைத்தால் அன்ன (நின்) வேட்கை இசையும்படி சொல்லி, பின் எழுந்தருள்,' என இயைக்க. வசை - இகழ்ச்சி, நின் மேலன ஆம்-உன்னைப் பொறுத்தவையாகும், வல்லையேல் - (நின்பிரிவை உணர்த்த) வல்லையானால், திசை - திக்கில் உள்ளவர் (இடவாகு பெயர்), பரவும் - துதிக்கும், திரு - இலக்குமி, அனையாள்தன் - ஒத்தவளுடைய

(தன் - சாரியை), திருவுளத்துக்கு - மனத்திற்கு, மிசையும் - தின்னும், வேம்பு - கசப்பை, வைத்தால் அன்ன - அமைத்தாற்போன்ற, வேட்கை - (உனது பொருள்) விருப்பத்தை, இசையும்படி - பொருந்தும்படி, எழுந் தருள் - புறப்படுவாயாக.

262] ‘நீடேன்,’ என்று அவன் நீங்கல் [௱

காலைப் பொழுது கடும்பரித் தேர்பண்ணிக் கானகம்போய்
மாலைப் பொழுது வருகுவல் யான்தஞ்சை வாணன்நன்னாட்
டாலைப் பழனம் அணிந்தஎம் ஊர்நும் அகம்குளிரச்
சோலைப் பயில்குயில் போல்மொழி யாய்!என் துணிவிதுவே.

து - ரை : [தலைவன், ‘யான் செல்லுமிடத்தில் காலந்தாழ்த்தேன்,’ என்று தோழிக்குக் கூறிப் பிரிதல்] ‘குயில் போல் மொழியாய்! யான், காலைப்பொழுது கடும்பரித் தேர் பண்ணி, வாணன் நல் நாட்டு ஆலைப் பழனம் அணிந்த எம் ஊர் கானகம் போய், மாலைப்பொழுது நும் அகம் குளிர வருகுவல் ; இது என் துணிவு,’ என இயைக்க. பண்ணி - ஆயத்தம் செய்து (‘ புனைதேர் பண்ணவும் ’ - புறம். செய். 12), நாட்டு - நாட்டில், ஆலைப் பழனம் அணிந்த - கருப்பஞ்சோலையையுடைய வயலைக் கொண்ட, ஊர் - ஊருக்கு, கானகம் போய் - காட்டு வழியிற்சென்று, வருகுவல் - வருவேன். ‘காலைப் பொழுதிற்போய் மாலைப் பொழுதில் வருவன்,’ எனத் தலைவன் கூறியது விரைவில் திரும்பி வருதலைக் குறித்ததன்றி, ஒரு நாட் பொழுதைக் குறித்தது அன்று. ஒரு நாட்பொழுதைக் குறித்தது எனக் கொள்ளின்,

‘வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவுஒரு
இருதுவின் கண்உடைத் தென்மனார் புலவர்.’

என்னும் சூத்திரத்தோடு மாறுபடும் என்க.

263] பாங்கி, தலைவிக்கு அவன் செலவு உணர்த்தல் [ச

வில்எய் குறும்பும் இறும்பும்எவ் வாயும் விராயவெவ்வாய்க்
கல்எய் கவலைக் கடம்கடந் தார்நமர், காய்ந்தெதிர்ந்தார்
செல்எய் முரசச் செருவென்ற வாணன்தென் மாறையில்நின்
மல்எய் முலைவிலை தான்தந்து நாளை மணம்பெறவே.

து - ரை : ‘(தலைவீ !) நமர், மாறையில் நின் முலை விலை தந்து நாளை மணம்பெறக் கடம் கடந்தார்,’ என இயைக்க. நமர் - நம் தலைவர், காய்ந்து - கோபித்து, செல் எய் - இடியைப்போன்ற, செரு - போர், வல் எய் - சொக்கட்டான் காயைப்போன்ற, முலை விலை - முலைக்குரிய விலையாகிய

பரிசத்தை (விலதான் - தான், அசை), வில் எய் - (வேலியாக) விற்கள் பொருந்திய, குறும்பும் - (வேடர் வாழும்) பாலை நிலத்து ஊர்களும், இறும்பும் - சிறு மலைகளும், எவ்வாயும் - எவ்விடத்திலும், விராய - கலந்த, வெவ்வாய்க் கல் எய் - சிகிமுகிக் கற்கள் பொருந்திய, கவலை - கவர் வழியையுடைய, கடம் - காட்டை. தலைவி - முன்னிலை எச்சம்.

264] பூங்குழை இரங்கல் [ரு

'இப்பே ருவகை இனிப்பிரி யேன்என் றும்,' என் முன்சொன்ன
அப்பே ருரைபழு தாம்என்ன வோஅர வம்சுமந்த
மைப்பேர் அலைகடல் வையகம் தாங்கிய வாணன்தஞ்சைச்
செப்பேர் இளங்கொங்கை மங்கை!செப் பாதன்பர் சென்றதுவே?

கு - ரை: [அழகிய குண்டலமணிந்த தலைவி வருந்துதல்] 'மங்கை! அன்பர் செப்பாது சென்றது, முன் சொன்ன; 'இப்பேருவகை இனி என்றும் பிரியேன்,' என் அப்பேருரை பழுது ஆம் என்னவோ?' என இயைக்க. அரவம் - (ஆதி சேடன் என்னும்) பாம்பு, சுமந்த - தாங்கிய, மைப்பேர் அலை கடல் - நீர் என்னும் பெயரையுடைய அலை மோதுகின்ற கடல் சூழ்ந்த (மை - நீர் [யாழ். அக.], நீர் - கடல் ['நீர்ஒலித் தன்ன'- மதுரைக். அடி, 369], பேர் - 'பெயர்' என்பதன் மரூஉ. அலை கடல் - வினைத்தொகை ['அலைக்கும் ஆழி' - கம்ப. சூர்ப்ப. செய். 75]) தஞ்சை - தஞ்சாக்கூரிலுள்ள, செப்பு ஏர் - செப்புப்போன்ற (ஏர் - உவம உருபு), மங்கை - அண்மை விளி, அன்பர் - (நம்) தலைவர், செப்பாது - (என்னுடன்) சொல்லாமல், முன் சொன்ன - (இயற்கைப் புணர்ச்சியிற்கூடிய) அந்நாளிற் சொல்லிய (முன் - காலமுன்), இப்பேருவகை - இந்தப் பெரிய மகிழ்ச்சியை, இனி என்றும் - இனி ஒரு போதும், பிரியேன் - விட்டு விலகேன், என் - என்னும், அப்பேருரை - அந்த மாட்சிமை பொருந்திய சொல், ('என் அப்பேருரை' என்பதை 'மன்றவேன் கிளவி' - [தொல். சொல். இடை. சூ. 27] என்பது போல வினைத்தொகையாகக் கொள்க), பழுது ஆம் என்னவோ - குற்றமாகும் என்று அறிவித்தற்கோ, தலைவி, இங்ஙனம் தலைவனை ஏளனம் செய்வாள்போலத் 'தலைவர் தாம் கூறிய சொல்லை மறந்தார்,' என்னும் குறிப்புத் தோன்ற வருந்திக் கூறினள் என்க.

265] பாங்கி, கொடுஞ்சொல் சொல்லல் [சா

ஆரணத் தான்அருள் பார்அளித் தான்அடங் காதவரை
வாரணத் தால்வென்ற வாணன்தென் மாறை வயங்கொளிசேர்
பூரணத் தார்மதி போல்முகத் தாய்!என் புலம்புதி?நின்
காரணத் தால்அல்ல வோபிரிந் தார்இன்று காதலரே!

து - ரை: [தோழி, தலைவியை இடித்துரைத்தல்] 'மாறை வயங்கு ஒளி சேர் பூரணத்து ஆர் மதி போல் முகத்தாய்! என் புலம்புதி? நின் காரணத்தால் அல்லவோ காதலர் இன்று பிரிந்தார்!' என இயைக்க. ஆரணத்தான் - பிரமன், அருள் - படைத்த, பார் - பூமியை, அளித்தான் - பாதுகாத்து (முற்றெச்சம்), அடங்காதவரை - பகைவரை, வாரணத்தால் - யானைப் படையினால், மாறை - மாறை நாட்டில், வயங்கு - விளங்கிய, பூரணத்து ஆர் - பூரணைத்திதியில் பொருந்திய, முகத்தாய் - முகத்தை உடையவளே, என் புலம்புதி - என் புலம்புகின்றாய், நின் காரணத்தால் - உன்னை மணக்கும் காரணத்தினால்.

266] தலைவி, கொடுஞ்சொல் சொல்லல் [எ

மண்டும் திரைவையை சூழ்தஞ்சை வாணற்கு வன்புலியும்
செண்டும் கொடுத்தகல் செம்பியர் போல்அன்பர் சென்றுழிமுள்
இண்டும் கழையும் பயிலும்வெங் கான்இயல் கேட்டும்இந்நோய்
கண்டும் கலங்கல்செல் லாதிந்த ஊர்எற் கழறல்நன்றே!

து - ரை: [தலைவி, தன்னை இடித்துக் கூறிய தோழியை மனத்தின் நொந்து கூறல்] 'அன்பர், தஞ்சை வாணற்கு வன்புலியும் செண்டும் கொடுத்து அகல் செம்பியர்போல் சென்றுழி முள் இண்டும் கழையும் பயிலும் வெங்கான் இயல் கேட்டும், இந்நோய் கண்டும், இந்த ஊர் கலங்கல் செல்லாது எற்கழறல் நன்று!' என இயைக்க. அன்பர் - தலைவர், மண்டும் - நெருங்கும், வன்புலி - கொடிய புலியின் உருவமைந்த கொடி (இருமடி ஆகுபெயர்), செண்டு - பூச்செண்டு போன்ற ஆயுதம் (உவமையாகுபெயர்), அகல் - (போர்க்களத்தினின்று) நீங்கிய, செம்பியர் - சோழர், சென்றுழி - (வருந்திச்) சென்ற இடத்தில், முள் - முள்ளையுடைய, இண்டு - புலிதொடக்கி என்னும் கொடி, கழை - மூங்கில், பயிலும் - நெருங்கியுள்ள, வெங்கான் - கொடிய காட்டின், இயல் - தன்மை, கேட்டும் - கேள்விப்பட்டும், இந்நோய் - (தலைவரைப் பிரிந்து யான் வருந்தும்) இவ்வேட்கை நோயை, கலங்கல் செல்லாது - கலக்கம் அடையாமல், ஊர் - ஊரிலுள்ளவர் (இடவாகு பெயர்), எற்கழறல் - (என் + கழறல்) என்னை இடித்துரைத்தல், நன்று - கொடிது (குறிப்பு மொழி). இது, தோழி இடித்துக் கூறியதைத் தலைவி உலகின்மேல் வைத்துக் கூறியது.

267] 'வருதவர் மீண்டு,' எனப் பாங்கி வலித்தல் [அ

தேர்த்தானை வாணன்தென் மாறைமின் னே!அஞ்சல்; செம்புருக்கி
வார்த்தால் அனைய வழிநெடும் பாலை மடப்பெடைநோய்
பார்த்தா தவம்தணி பாதவம் இன்மையின் பைஞ்சிறகால்
போர்த்தாலும் மஞ்ஞைகண் டும்போவ ரோகம் புரவலரே!

து - ரை : ['தலைவர் திரும்பி வருவர்,' எனத் தோழி வற்புறுத்திக் கூறுதல்] 'மின்னே! அஞ்சல்; நம் புரவலர், பாலை மடப்பெடை நோய் பார்த்து, ஆதவம் தணி பாதவம் இன்மையின், பைஞ்சிறகால் போர்த்து ஆலும் மஞ்ஞை கண்டும், போவரோ!' என இயைக்க. தேர்த்தானை - தேர்ச் சேனையை உடைய, மாறை - மாறை நாட்டிலிருக்கும், மின்னே - மின்னலைப் போன்றவளே (உவமையாகு பெயர்), அஞ்சல் - (நீ) பயப்படாதே, புரவலர் - தலைவர், வழி - (வெப்பத்தையுடைய) வழியையுடைய, நெடும் பாலை - பெரிய பாலை வனத்தில், மடப்பெடை - இளமையையுடைய பெட்டை மயிலின், நோய் - துன்பத்தை, ஆதவம் - (அவ்)வெயிலை, தணி - தணிக்கின்ற, பாதவம் - மரங்கள், போர்த்து - (அப்பெட்டை மயிலை) மூடி, ஆலும் - தங்கியிருக்கும் (கலித். செய். 36, அடி. 2 உரை), மஞ்ஞை - மயிலை, போவரோ - (உடனே திரும்பி நம்மிடம் வாராமல்) செல்லுவரோ. போவரோ - ஓ, எதிர்மறை.

268] பருவம் கண்டு பெருமகள் புலம்பல் [கூ

மிகவும் பரந்த கரியகண் ணீர்செங்கை வெள்வளை போல்
உகவும் துறந்தவர் உன்னல ரால்,உறை கார்பொழிய
மகவும் துணையும் கலைதழு வுந்தஞ்சை வாணன்வெற்பின்
அகவும் பெடைமயி லும்;தமி யேன்எங்ஙன் ஆற்றுவலே!

து - ரை : [தலைவன் திரும்பி வருதற்குரிய கார் காலத்தைப் பார்த்துத் தலைவி அழுது கூறுதல்] 'துறந்தவர், கண் நீர் உகவும் உன்னலர்; கார் உறை பொழிய மகவும் துணையும் கலை தழுவும் தஞ்சைவாணன் வெற்பின் பெடை மயிலும் அகவும்; தமியேன் எங்ஙன் ஆற்றுவல்!' என இயைக்க. வெள்வளை - சங்க வளையல், உகவும் - சிந்தவும், துறந்தவர் - (என்னைப்) பிரிந்த தலைவர், உன்னலர் - (என்னை) நினைத்திலர், கார் - மேகம், உறை - நீர்த்துளி, மகவு - குட்டி, துணை - மனையாகிய பெண் குரங்கும், கலை - ஆண் கருங்குரங்கை, தழுவும் - (அம்மழைத் துன்பத்தால் அஞ்சி) அணைத்துக்கொள்ளும், வெற்பின் - மலையில், பெடை மயிலும் - பெட்டை மயிலும் (உம் - இழிவு சிறப்பு), அகவும் - (தன் துணையாகிய மயிற்சேவலை) அழைக்கும், தமியேன் - தனியளாகிய யான், எங்ஙன் ஆற்றுவல் - எவ்விதம் ஆற்றியிருப்பேன்!

269] இதுவன, 'வம்பு,' என்றல் [ய

தனம்சேர்ந்த வஞ்சிநின் சாயல்கண் டஞ்சித் தனித்தனிபோய்
வனம்சேர்ந் தயர்ந்த மயில்கள்எல் லாம்தஞ்சை வாணன்வெற்பில்
கனம்சேர்ந் தலர்துளி காலும்முன் னேவம்பு காலும்என்று,
இனம்சேர்ந் தகவின நாம்தனி வாடி இருத்தல்கண்டே.

கு - ரை: [தோழி, 'இது காலமல்லாத காலத்திற் பெய்யும் மழை,' என்று தலைவிக்குக் கூறுதல்] 'வஞ்சி! நின் சாயல் கண்டு அஞ்சித் தனித் தனி போய் வனம் சேர்ந்து அயர்ந்த மயில்கள் எல்லாம், நாம் தனி வாடி யிருத்தல் கண்டு, தஞ்சை வாணன் வெற்பில் கனம் சேர்ந்து அலர் துளி காலும் முன்னே வம்பு காலும் என்னு இனம் சேர்ந்து அகவின,' என இயைக்க. தனம் சேர்ந்த - முலை பொருந்திய, வஞ்சி - வஞ்சிக்கொடி போன்றவளே (உவமையாகு பெயர்), வனம் - காட்டில், அயர்ந்த-இளைத்த, கனம் - மேகம், சேர்ந்து - திரண்டு, அலர் துளி - பருத்த மழையை, காலும் முன்னே - வெளிவிடு முன்னே, வம்புகாலும் என்னு - காலமல்லாத காலத் தில் தோன்றும் மழை பெய்யும் என்று நினைத்து, இனம் சேர்ந்து-கூட்டம் கூடி, அகவின - (மகிழ்ச்சியால்) ஒலித்தன. 'ஆதலால், இது கார் கால மழையன்று,' என்றுள் என்க.

270] இறைமகள் மறுத்தல் [யக

வாவித் தகைஅன்ன மே!தஞ்சை வாணன் வரையகத்தென்
பாவித் தனிநெஞ்சு பார்த்தஞ்சு மேகண்; பயின்றகண் ஆர்
தூவித் தழைமயில் கோபம்கொள் ளாவரத் தோன்றியைச்சேர்ந்
தாவித் தகந்தள ரும்மணி காலும் அராஎன்னவே.

கு - ரை: [தலைவி, தோழி கூறியதை மறுத்துக் கூறுதல்] 'அன்னமே! பயின்ற கண் ஆர் தூவித்தழை மயில் கோபம் கொள்ளா வர, தோன்றியைச் சேர்ந்து ஆவித்து அகம் தளரும் மணி காலும் அரா என்ன, தஞ்சை வாணன் வரையகத்து என் பாவித் தனி நெஞ்சு பார்த்துக் கண் ணஞ்சும்,' என இயைக்க. வாவி - குளத்தில் இருக்கும், தகை - அழகு பொருந்திய, அன்னமே - அன்னம் போன்றவளே (உவமையாகு பெயர்), பயின்ற கண் ஆர் - நெருங்கிய கண்கள் பொருந்திய, தூவித் தழை - இறகு களையுடைய தோகையைக் கொண்ட, மயில் - மயிலானது, கோபம்-இந்திர கோபம் என்னும் தம்பலப் பூச்சிகளை ('இந்திர கோபம் கௌவி இறகுளர் கின்ற மஞ்ஞை' - சீவக. செய். 1819), கொள்ளா வர - (தன் அலகால்) பொறுக்கிக்கொண்டே வர, (அதைக் கண்டு அஞ்சி) தோன்றியைச் சேர்ந்து- செங்காந்தளைச் சென்றடைந்து, ஆவித்து - பெருமூச்சு விட்டு, அகம் தள ரும் - மனம் சோர்கின்ற, மணி காலும் அரா என்ன - இரத்தினத்தைக் கக்கும் பாம்பைப்போல, வரையகத்து - மலையில், நெஞ்சு - மனமானது, பார்த்து - (கார்காலத்தை) அறிந்து, கண்ணஞ்சும் - பயப்படும் (கண்ணஞ் சல் - பயப்படல். 'கடாஅக் களிற்றினும் கண்ணஞ்சா எற்றை' - கலித். செய். 101; அடி, 36.) இந்திர கோபம் தோன்றலும், செங்காந்தள் மலர்த லும் கார் காலத்தில் நிகழ்வன ஆதலின், தலைவி இங்ஙனம் கூறித் தோழி கூறியதை மறுத்தாள் என்க. இக்கவி, உவமை அணி.

271] 'அவர் தூதாகி வந்து அடைந்தது இப்பொழுது,' எனல் [மஉ

இன்னே வருவர்நின் காதலர் ஏதிலர் ஏங்க;இனிக்
கொன்னே இரங்கி வருந்தல்கண் டாய்;கொற்ற நேமிவிந்தை
மன்னே எனவந்த வாணன்தென் மாறை வரவுணர்த்த
முன்னே நடந்தன காண்கடுங் கால முகில்இனமே.

து - ரை: ['இந்தக் கார் காலம் அத்தலைவரின் தூதாய் வந்து அடைந்தது,' எனத் தோழி தலைவிக்குக் கூறுதல். இங்குப் 'பொழுது' என்பது, பெரும்பொழுதுகள் ஆறனுள் ஒன்றாகிய கார் காலத்தைக் குறித்தது.] '(தலைவீ!) நின் காதலர், ஏதிலர் ஏங்க இன்னே வருகுவர்; இனிக் கொன்னே இரங்கி வருந்தல்; கடுங்கால முகில் இனம், வரவு உணர்த்த முன்னே நடந்தன,' என இயைக்க. ஏதிலர் - (பழி தூற்றும்) அயலார், ஏங்க - வருந்தும்படி, இன்னே - இப்பொழுதே, கொன்னே - வீணிலே, இரங்கி வருந்தல் - அழுது வருந்தாதே, கடுங்கால முகில் இனம் - விரைவோடு கூடிய கார் கால மேகக் கூட்டங்கள், கொற்ற நேமி - வெற்றிச் சக்கரத்தையுடைய, விந்தை - ஜயலக்குமிக்கு, மன்னே என வந்த - தலைவன் எனத்தோன்றிய, மாறை - மாறை நாட்டில், வரவு - (தலைவர்) வருகையை, நடந்தன - (தூதாய்) வந்தன. கண்டாய், காண் - முன்னிலை அசைகள். தலைவி - முன்னிலை எச்சம்.

272] தலைமகள் ஆற்றல் [மங

இன்புற்ற காலத் திருவர்க்கும் ஒன் றுயிர் என்றுசொன்னார்
அன்புற்ற காதலர்; ஆதலி னால்,அகன் றார்எனநாம்
துன்புற்ற காலத் தவரும் உறார்அல்லர்; தோழிசொல்லும்
வன்புற்ற, கார்அளிக் கும்தஞ்சை வாணன்தென் மாறையிலே.

து - ரை: (நெஞ்சமே!) அன்பு உற்ற காதலர், இன்பு உற்ற காலத்து, 'இருவர்க்கும் உயிர் ஒன்று,' என்று சொன்னார்; ஆதலினால், அகன்றார் என நாம் துன்பு உற்ற காலத்து, அவரும் உறார் அல்லர்; கார் அளிக்கும் தஞ்சை வாணன் தென் மாறையில் தோழி சொல்லும் வன்பு உற்ற,' என இயைக்க. இன்பு உற்ற - (நம்மைக் கூடி) மகிழ்ச்சி அடைந்த, இருவர்க்கும் - நம்மிருவருக்கும், அகன்றார் என - (அவர் நம்மைப் பிரிந்து) சென்றாரென, உறார் அல்லர் - (துன்பம்) அடையாதிருப்பாரல்லர், கார் அளிக்கும் - (கைம்மாறு கருதாமல்) மேகத்தைப்போலக் கொடுக்கும், தோழி - தோழியினுடைய, சொல்லும் - (ஆறுதலான) சொற்களும், வன்பு உற்ற - வலிமை அடைந்தன. நெஞ்சம் - முன்னிலை எச்சம். எனவே, தலைவர் வருவர் என்பதாயிற்று.

273] அவன், அவண் புலம்பல் [௰௪

*விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தெனை வீழ்ந்துவண்டு
கொழுதும் இருங்குழல் சோரக் கிடந்து குடங்கையின்மேல்
ஒழுகிய அஞ்சன வெள்ளத் துணங்கும் அணங்கைமுன்சென்
றெழுகெனும் நெஞ்சம்,'என் னேஅவர் ஓவி'வனில் என்சொலுமே!

து - ரை: [தலைவன், பொருள் தேடச் சென்ற அவ்விடத்தில் தலைவியை நினைத்துப் புலம்புதல்] 'எனை வீழ்ந்து, விழி குழியும்படி தேர் வழி பார்த்து, வண்டு கொழுதும் இருங்குழல் சோரக் கிடந்து, குடங் கையின்மேல் ஒழுகிய அஞ்சன வெள்ளத்து உணங்கும் அணங்கை முன் சென்று, "எழுக," எனும் நெஞ்சம், "அவர் ஓவு என்னே!" எனில், என் சொலும்!' என இயைக்க. வீழ்ந்து - பிரிந்து ('திருவீழ் மார்பின் தென்னவர் கோவே!' - சிலப். காதை, 20; அடி, 23), விழி - கண், தேர் - தேரை, வழிபார்த்து - எதிர்பார்த்து, கொழுதும் - கோதும், இருங்குழல் - கரிய கூந்தல், கிடந்து - (படுக்கையிற்) படுத்து, குடங்கையின்மேல் - உள்ளங்கையில், அஞ்சன வெள்ளத்து - மையோடு பொருந்திய கண்ணீருடன், உணங்கும் - வருந்தும், அணங்கை - தெய்வப்பெண் போலும் என் காதலியை, முன் - (யான் செல்லு) முன்பே, எழுக - எழுந்திருப்பாயாக, எனும் நெஞ்சம் - என்று கூறும் எனது மனம், அவர் ஓவு - அவர் (இன்னும் வாராது) ஒழிகை, என்னே - என்ன ஆச்சரியம் (வியப்பிடைச் சொல்), எனில் - என்று (தலைவி) வினவினால், என் சொலும் - என்ன பதில் கூறும்.

274] மீண்டு வருங்காலைப் பாகனொடு சொல்லல் [௰௫

வன்மா முடுக வலவ!திண் தேர்இனி வாணன்தஞ்சைக்
கென்மால் உறும்நெஞ்சின் முன்செல; நாகிள ஏறுபுல்லிப்
பொன்மா மணியும் பிரிந்திருந் தாரும் புலம்பமன்றில்
சென்மாலை அந்திகண் டால்தரி யாள்என் திருந்திழையே.

து - ரை: [தலைவன், தான் திரும்பி வரும்போது தேர்ப்பாகனோடு சொல்லுதல்] 'வலவ! நாகு இள ஏறு புல்லிப் பொன் மா மணியும் பிரிந் திருந்தாரும் புலம்ப மன்றில் செல் மாலை அந்தி கண்டால், என் திருந்து இழை தரியாள்; (ஆதலால்) வாணன் தஞ்சைக்கு வல் மா முடுகத் திண் தேர் இனி என் மால் உறு நெஞ்சின் முன் செல,' என இயைக்க. வலவ - தேர்ப்பாகனே (அண்மை விளி), நாகு - பசுவானது, இள ஏறு புல்லி - இளங்காளையைச் சேர்ந்து, பொன் - இரும்பால் செய்த, மா - பெரிய, மணியும் - (தன் கழுத்திற் கட்டிய) மணியும், பிரிந்திருந்தாரும் - (தம்

* அம்பிகாபதி கோவை, செய். 282.

கணவரைப்) பிரிந்த மாதரும், புலம்பல் - ஒலித்தல், வருந்தல் ('மணி நுடிக்க, மாதர் வருந்த' எனப் பொருள் கொள்க), மன்றில் - பசுத்தொழுவத்தில் ('ஆன்கணம்...மன்றுநிறை புகுதர' - குறிஞ்சிப். அடி, 218), செல் - செல்லுகின்ற, மாலை அந்தி - (அந்தி மாலை) அந்தி நேரத்தை (மாலை - சமயம். 'வஞ்சமென் றுணர்ந்த மாலைவாய்' - கம்பரா. திருவவ. செய். 51), திருந்து இழை - திருந்திய ஆபரணமணிந்த தலைவி (வினைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), வல் மா - வலிய குதிரைகள், முடுக - விரைந்து செல்ல, இனி - இன்று, மால் - மயக்கம், செல - செல்லட்டும் (வியங்கோள் வினை முற்று). 'பொன்' என்னும் உலோகப் பொதுப்பெயர் 'கரும்பொன்' என்னும் இரும்பைக் குறித்தது.

275] மேகத்தொடு சொல்லல் [யசு

வேண்டும் பொருளைத் தரும்பொருள் போய்முற்றி மீண்டஎன்தேர்
தூண்டும் பரிமுன் துனைமுகில் காள்!சென்று சொல்லும்,இந்து
தீண்டும் கொடிமதில் சூழ்தஞ்சை வாணனைச் சேரலர்போல்
ஈண்டும் பசலைமெய் போர்த்திருப் பார்தமக் கென்வரவே.

து - ரை: [தலைவன், மேகத்தோடு சொல்லுதல்] 'முகில்காள், வாணனைச் சேரலர் போல் ஈண்டும் பசலை மெய் போர்த்திருப்பார் தமக்கு என் வரவு சென்று சொல்லும்,' என இயைக்க. வேண்டும் - விரும்பும், தரும் - கொடுத்தற்குரிய, பொருள் - பொருளை, போய் - (அதன்பொருட்டுச்) சென்று, முற்றி - (தேடி) முடித்து, மீண்ட - திரும்பிய, தேர் - தேரினை, தூண்டும் - இழுத்துச் செல்லும் ('புரவி தூண்டும் மாலாழி அம்தேர்' - கம்பரா. கும்ப. செய். 316), பரிமுன் - குதிரைகளின் முன்னே, துனை - விரைந்து செல்லும், முகில்காள் - மேகங்களே, இந்து தீண்டும் - சந்திரனைத் தொடும், சேரலர் - (துன்பத்தால் தம் உடல் நிறம் வேறுபட்ட) சேராத பகைவர், ஈண்டும் - நெருங்கும், பசலை - பசலை நிறம், மெய் போர்த்து - உடலை மூடி, இருப்பார்தமக்கு - இருப்பவராகிய தலைவியர்க்கு (தம் - சாரியை), வரவு - வருகையை, சொல்லும் - தெரிவியுங்கள்.

276] பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவு அறிவுறுத்தல் [யஎ

பொருகின்ற செங்கயல் போல்விழி யாய்!பண்டு போயநின்கைக்
குருகின் றணிந்திறை கொள்வது காண்க;நம் கொண்கர்பொன்தேர்
தருகின்ற சங்கம் தருஅன்ன வாணன் தமிழ்த்தஞ்சைவாய்
வருகின்ற தென்றுமுன் னேஓகை கூறும் வலம்புரியே.

து - ரை: [தோழி, வலம்புரிச் சங்கின் ஓசையைக் கேட்டுத் தலைவன் வரவைத் தலைவிக்கு அறிவித்தல்] 'கயல் போல் விழியாய்! பண்டு போய

நின் கைக்குருகு இன்று அணிந்து இறை கொள்வது காண்க; நம் கொண்கர் பொன் தேர் தஞ்சைவாய் வருகின்றது என்று வலம்புரி முன்னே ஓகை கூறும்,' என இயைக்க. பொருகின்ற - (ஒன்றோடு ஒன்று) எதிர்க்கின்ற, செங்கயல் - செங்கயல் மீன், பண்டு போய - (உன் கையை விட்டு) முன்பு கழன்று போன, கைக்குருகு - கை வளை, இன்று - இப்பொழுது, அணிந்து - (உன் கையில்) பொருந்தி, இறை கொள்வது - தங்கியிருப்பதை, காண்க - செய்யக்கடவது) வியங்கோள் வினை முற்று), கொண்கர் - கணவரின், சங்கம் - சங்க நிதி, தரு - கற்பகத்தரு, தஞ்சைவாய் - தஞ்சையில், வலம்புரி - வலம்புரிச் சங்கம், ஓகை - மகிழ்ச்சிச் செய்தியை ('உவகை' என்பதன் மரூஉ), கூறும் - தெரிவிக்கின்றது.

**277]** வலம்புரி கிழத்தி வாழ்த்தல் [யஅ

மால்வண் டெனமன்னி வாணன்தென் மாறைமன் னன்புகழே
போல்வண் தமிழ்மன்னர் போற்ற விளங்குக, பொன்கொழிக்கும்
கால்வண்டல் வையைக் கரைமல்கு மல்லிகைக் கால்முகையின்
மேல்வண் டிருந்தது போல்கரு மாமுக வெண்சங்கமே.

து - ரை: [தலைவி, வலப்புரிச் சங்கை வாழ்த்துதல்] 'வெண்சங்கம், மால் வண்டு என மன்னி, மாறை மன்னன் புகழே போல் வண் தமிழ் மன்னர் போற்ற விளங்குக,' என இயைக்க. பொன் கொழிக்கும் - (இரு கரைகளிலும்) பொன் துகளை ஒதுக்குகின்ற, கால் - வாய்க்காலில் பொருந்திய, வண்டல் - வண்டல் மண்ணையுடைய, மல்கு - நிறைந்த, கால் முகையின்மேல் - மலரும் செவ்வியோடு கூடிய அரும்பின்மேல், போல் - போலும், கருமுகம் - கரிய முகத்தையுடைய, மா - பெரிய, வெண் சங்கம் - வெண் சங்கமானது, மால் - திருமாலின், வண்டு என - (பாஞ்சசன்னியம் என்னும்) திருச்சங்கைப்போல, மன்னி - (என்றும்) நிலைபெற்று, வண் தமிழ் மன்னர் - வளப்பம் பொருந்திய தமிழ்க்கரசாகிய புலவர், போற்ற - துதிக்கும்படி, விளங்குக - விளங்கக் கடவது. ஊது சங்கு, முகத்தில் மெழுகமைக்கப்படுவதால் கருமுகம் உடையதாயிற்றென்க. 'கருமுக மா வெண்சங்கம்' என இயைக்க.

**278]** தலைவன் வந்துழிப் பாங்கி நினைந்தமை வினதல் [யக

நினையீர் பொருட்குப் பிரிந்தயல் நாட்டுழி நின்றுழிவேள்
அனையீர்! நினைந்தும் அறிதிர்கொல் லோ,அம் சொலால்அறிவோர்
வனையி ரிதழ்க்கண்ணி வாணன்தென் மாறையை வாழ்த்தலர்போல்
நனையி ரிதழ்க்கண்வை காளவ்வ நோய்உற்ற நவ்விபையே?

து - ரை: [தலைவன் வந்த போது தோழி, 'நீர் இந்நாளளவும் தலைவியை நினைந்தது உண்டோ?' என அவனை வினதல்] 'வேள் அனையீர்!

எவ்வ நோய் உற்ற நவ்வியை நினையீர் பொருட்குப் பிரிந்து அயல் நாட்டுழி நின்றுழி நினைந்தும் அறிதிரோ?' என இயைக்க. வேள் - மன்மதன், அறிவோர் - புலவர், அம் சொலால் - அழகிய சொற்களால், வினை-புனைந்த, ஈர் - இனிமை என்னும் ('ஈர்ங்கொடி' - திருக். செய். 28), இதழ் - தோடுகளை உடைய, கண்ணி - (தமிழ்ப்பா) மாலையையணிந்த, நனை - (நீரால்) நனைந்த, ஈரிதழ் - (மேலும் கீழும் அமைந்த இரப்பைகளாகிய) இரண்டு இதழ்களையுடைய, கண் வைகா - கண்கள் உறங்காத, எவ்வ நோய் - (வேட்கையாகிய) துன்ப நோயை, நவ்வியை - பெண் மான் போன்ற தலைவியை (உவமையாகு பெயர்), நினையீர் - நினையீராய், அயல் நாட்டுழி நின்றுழி - அயல் நாட்டில் தங்கியபோது, அறிதிரோ - அறிவீரோ. தொல் - அசை, வைகுதல் - தங்குதல். கண்ணுக்குத் தங்குதலாவது, புறப்பொருள்களிற் பார்வையைச் செலுத்தாது இமை மூடி உறங்குதல் என்க.

279] தலைவன், நினைந்தமை செப்பல் [உய

கானெடுங் குன்றம் கடந்துசென் றேன்ஒரு காலும்மைதோய்
மானெடுங் கண்ணி மறந்தறி யேன்,வண்கை வாணன்தஞ்சை
நீனெடும் பெண்ணைக் குரும்பையும் சூதும் நெருங்குகொங்கைத்
தேனெடுங் கண்ணிமென் பூங்குழல் மாதர் திருமுகமே.

கு - ரை : 'மை தோய் மான் நெடுங்கண்ணி! தஞ்சை மாதர் திருமுகம் கான் நெடுங்குன்றம் கடந்து சென்றேன் ஒரு காலும் மறந்து அறியேன்,' என இயைக்க. மை தோய் - மை தோய்ந்த, மான் - மான் கண் போன்ற, வண்கை - வளப்பம் பொருந்திய கையை உடைய, தஞ்சை - தஞ்சையில், நீல் - நீல நிறத்தையுடைய ('நீலம்' என்பதன் கடைக்குறை), பெண்ணை - பனையினது, குரும்பையும் - பிஞ்சும், சூதும் - சொக்கட்டான் காயும், நெருங்கு - (அழகில் தாம் ஒவ்வாமையால்) கோபிக்கும் ('மகப் பழித்த நெருங்கலும்' - தொல். பொ. சூ 147.), தேன் நெடுங்கண்ணி - வண்டு தங்கும் நீண்ட மாலையை அணிந்த, பூங்குழல் - அழகிய கூந்தலை உடைய, மாதர் - அழகினையுடைய தலைவியரின் (பண்பாகு பெயர்), கான் நெடுங்குன்றம் - காடும் பெரிய குன்றமும், சென்றேன் - சென்றேனாகிய யான் (வினையாலணையும் பெயர்), ஒரு காலும் - சிறிது நேரமும். 'மறந்தறியேன் ஆதலின், நினைந்தறியேன்,' என்றான் என்க.

280] ஆற்றுவித்திருந்த அருமை சாற்றல் [உக

உயரா மலகத் தருங்கனி நீர்நசைக் குண்சுரம்போய்
வியராமல் இல்லின் விடுத்தகன் றனைமென் பூஞ்சிலம்பா!
அயராமல் 'அஞ்சல்'என் றாற்றுவித் தேன்,இவ் வவனிஎல்லாம்
மயராமல் வந்த பிரான்தஞ்சை வாணன்தென் மாறையிலே.

து - ரை: [தோழி, தலைவியை ஆற்றுவித்திருந்த அருமையைத் தலைவனுக்குக் கூறுதல்] 'மென்பூஞ்சிலம்பா! மாறையில், சுரம் போய் வியராமல் இல்லின் விடுத்து அகன்றாளை அயராமல் "அஞ்சல்," என்று ஆற்றுவித்தேன்,' என இயைக்க. மென்பூஞ்சிலம்பா - மெல்லிய பூ மலிந்த குறிஞ்சி நிலத் தலைவனே, இவ்வவனி - இப்பூமியிலுள்ளார், மயராமல் - மயங்காமல், வந்த - தோன்றிய, பிரான் - தலைவனாகிய, நீர் நசைக்கு - நீர் வேட்கைக்கு, உயர் ஆமலகத்து - உயர்ந்த நெல்லியின், உண் - (வழிச்செல்வோர்) உண்கின்ற, சுரம் - பாலை வனத்தில், வியராமல் - (வெப்பத்தால்) வியர்வடையாமல், இல்லின் - வீட்டில், விடுத்து அகன்றாளை - (நீ) விட்டுப் பிரிந்தவளாகிய தலைவியை (அகன்றாள் - வினையாலணையும் பெயர்), அயராமல் - (யான் தேற்றுதலில் சிறிதும்) இளையாமல், அஞ்சல் என்று - நீ பயப்படாதே என்று கூறி, ஆற்றுவித்தேன் - துன்பம் தணிந்திருக்கச் செய்தேன்.

க, ச-ஆம் கவிகள், பிரிவு அறிவுறுத்தலுக்கு உரியவை; உ-ஆம் கவி, பிரிவு உடன்படாமைக்கு உரியது; ரு-ஆம் கவி, பிரிவு உடன்படுத்தற்கு உரியது; அ-ஆம் கவி, பிரிவு உடன்படுதற்கு உரியது; கு, எ, கூ, யக, யச-ஆம் கவிகள், பிரிவுழிக்கலங்கலுக்கு உரியவை; சு, ய, யஉ-ஆம் கவிகள், வன்புறைக்கு உரியவை; கரு-ஆம் கவி, வன்பொறைக்கு உரியது; யகு, யசு-ஆம் கவிகள், வருவழிக் கலங்கலுக்கு உரியவை; யஎ, யஅ, யகூ, உய, உக-ஆம் கவிகள், வந்துழி மகிழ்ச்சிக்கு உரியவை.

## களவியல் முற்றிற்று.

# உ. வரைவியல்

## 1. வரைவு மலிவு

281] காதலன் முலை விலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உணர்த்தல் [க

தொலைவிலை யாகிய பல்பொருள் காதலர் சூதமர்நின்
முலைவிலை யாக முகந்தளித் தார்;முனை வேந்தர்தம்மைத்
தலைவிலை யாகத் திறைகொண்ட வாணன் தமிழ்த்தஞ்சைநீ
உலைவிலை யாகுக; பொன்வண்ணம் மாறுக ஒண்ணுதலே!

கு - ரை : [தலைவன் பரிசப்பொருள் அனுப்பியதைத் தோழி தலைவிக்கு உணர்த்துதல்] 'ஒண்ணுதலே! காதலர், தொலைவு இலை ஆகிய பல் பொருள் சூது அமர் நின் முலை விலை ஆக முகந்து அளித்தார்; நீ உலைவு இலை ஆகுக; பொன் வண்ணம் மாறுக,' என இயைக்க. ஒண்ணுதலே - இயற்கையழகு பொருந்திய நெற்றியை உடையவளே, தொலைவு இலை ஆகிய - குறையாத, சூது அமர் - சொக்கட்டான் காய்க்கு ஒப்பான, முலை விலை ஆக - முலை விலை என்னும் பரிசப்பொருளாக, முகந்து அளித்தார் - அள்ளிக் கொடுத்தனர், முனைவேந்தர் தம்மை - பகை வேந்தரை, தலை விலையாக - இன வரியாகும்படி, திறை கொண்ட - கப்பங்கொண்ட, தஞ்சை - தஞ்சையிலுள்ள, உலைவு இலை ஆகுக - வருத்தமில்லையாகுக, பொன் வண்ணம் - பசலை.

282] காதலி, நற்றாய் உள்ள மகிழ்ச்சி உள்ளல் [உ

கயமா மலர்எனும் கன்னியை வண்டெனும் காளைபல்புள்
இயமா மணம்புணர் ஈர்ந்துறை நாடர் எதிர்ந்தவர்மேல்
வயமா நடாத்திய வாணன்தென் மாறை வருகுவரேல்,
நயமா மணஅணி கண்டாயும் இன்புறும் நம்மினுமே.

கு - ரை : [தலைவி, தன்னைப் பெற்ற தாய் அடையும் மனமகிழ்ச்சியை நினைத்தல்] 'ஈர்ந்துறை நாடர் மாறை வருகுவரேல், ஆயும் மண அணி கண்டு நம்மினும் இன்புறும்,' என இயைக்க. கயமா மலர் எனும் கன்னியை - குளத்தில் இலக்குமி வாழும் தாமரை மலர் என்னும் பெண்ணை, காளை - ஆண் மகன் (உவமையாகு பெயர்), பல் புள் - பல வண்டுகளே, இயமா - வாத்தியமாக, மணம் புணர் - மணம் புரிகின்ற, ஈர்ந்துறை - குளிர்ந்த துறையையுடைய, நாடர் - குறிஞ்சிநிலத் தலைவர், வயமா - யானைகளை, மாறை - மாறை நாட்டில், நயமாம் - மகிழ்ச்சிக்குரியதாகும், மண

அணி கண்டு - மணக்கோலத்தைப்பார்த்து, ஆயும் - நற்றாயும் (உம் - உயர்வு சிறப்பு), நம்மினும் - நம்மைக்காட்டிலும், இன்புறும் - மகிழ்ச்சியடையவள். 'கய மா மலர் எனும் கன்னியை வண்டு எனும் காளை பல் புள் இயமா மணம் புணர் ஈர்ந்துறை' என்றது உருவக அணி. இதில் குளம் குல மாகவும், தாமரை தலைவியாகவும், வண்டு தலைவனாகவும், பல் புள் இய மாகவும் உள்ளுறை உவமம் காண்க.

283] பாங்கி, தமர் வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல் [ரு

மணிப்பா லிகைமுத்தம் வைத்தாங் கடம்பலர் வார்திரை தூய்
அணிப்பாய் துவலை அரும்பும் துறைவர்க் கணிஎதிர்ந்து,
பணிப்பா சிழைஅல்குல் வெண்ணகை யாய்!நமர் பாரநின்னோய்
தணிப்பான் முரசறைந் தார்தஞ்சை வாணன் தமிழ்நிலத்தே.

து - ரை: [தோழி, தலைவனுடைய சுற்றத்தார் மணம் பேசி வந்த போது தலைவியின் சுற்றத்தார் அவரை ஏற்றுக்கொண்டதைத் தலைவிக்கு உணர்த்துதல்] 'பாசிழைப்பணி அல்குல் வெண்ணகையாய்! நமர் நின் பார நோய் தணிப்பான் தஞ்சை வாணன் தமிழ் நிலத்துத் துறைவர்க்கு அணி எதிர்ந்து முரசு அறைந்தார்,' என இயைக்க. பாசிழை - பசுமையான மேகலாபரணத்தை அணிந்த, பணி அல்குல் - பாம்புபோலும் அல்குலையும், வெண்ணகையாய் - வெண்மையான பற்களையும் உடையவளே, நமர் - நம் சுற்றத்தார், பார நோய் - கொடுமையான வேட்கை நோயை, தணிப் பான் - தணிக்க (பானீற்று வினையெச்சம்), நிலத்து - நிலத்தில், மணிப் பாலிகை - அழகிய பாலிகையில், வைத்தாங்கு - வைத்தாற்போல, அடம்பு அலர் - அடம்ப மலரில், வார் திரை தூய் - பேரலை தூவி, அணி - நிரையாய், பாய் துவலை - பரவிய நீர்த்துளிகள் (வினைத்தொகை), அரும்பும் - தோன் றும், துறைவர்க்கு - நெய்தல் நிலத்தலைவர்க்காக, அணி எதிர்ந்து - (அவர் முலை விலையாக அனுப்பிய) ஆபரணங்களை ஏற்று, முரசு அறைந்தார் - மங்கல முரசத்தை அடித்தனர்.

284] தலைமகள், உவகை ஆற்றாது உளத்தொடு கிளத்தல் [ச

சோகா குலம்எய்தல்; காண்டும்நெஞ் சே!நம் துறைவர்எனும்
நீகா னுடன்பள்ளி நீள்வங்கம் ஏறி நிலம்புரக்கும்
மாகா விரிஅன்ன வாணன்தென் மாறைமன் னன்பகையும்
ஏகா இருள்கங்கு லாம்கடல் காலை எனும்கரையே.

து - ரை: [தலைவி, களிப்பை அடக்க இயலாமல் மனத்தொடு கூறு தல்] 'நெஞ்சே! நம் துறைவர் எனும் நீகானுடன் பள்ளி நீள் வங்கம் ஏறி, இருள் கங்குல் ஆம் கடல் காலை எனும் கரை காண்டும்; சோகாகுலம் எய்தல்,' என இயைக்க. நீகான் - மாலுமி, பள்ளி - படுக்கையாகிய,

வங்கம் - கப்பலில், புரக்கும் - காக்கும், மா காவிரி அன்ன - பெரிய காவிரி' யாற்றைப்போன்ற ('மா காவிரி அன்ன கங்குல் ஆம் கடல்' என இயைக்க), பகையும் - பகைவருங்கூட (பண்பாகு பெயர்; உம் - இழிவு சிறப்பு), ஏகா - செல்லாத, இருள் கங்குல் ஆம் - இருளையுடைய இரவாகிய, கடல் - கடலில், காலை - விடியற்காலம், கரை - கரையை, காண்டும் - கண்டறிவோம் (எதிர் காலத் தன்மைப்பன்மை வினை முற்று), சோகாகுலம் - (சோக + ஆகுலம்) மன்மதனுடைய **சோகம்** என்னும் அம்பால் வரும் துன்பத்தை, எய்தல் - அடைதலையொழி (எதிர்மறை ஏவல் ஒருமை வினை முற்று). இக்கவி, இயைபு உருவக அணி.

285] தலைவனைப் பாங்கி வாழ்த்தல் [௬

மாரியஞ் சுங்கொடை வாணன்தென் மாறையில் வாழி!வண்டார்
வேரியம் தொங்கல் விரைகமழ் மார்ப! விடாதஅம்பல்
சேரியம் பொய்கைத் துறைஅலர் வாடநும் செவ்விமணம்
தூரியம் சங்கதி ரக்காட்டும் நீஅன்று சூட்டலரே.

து - ரை: 'வண்டு ஆர் வேரி அம் தொங்கல் விரை கமழ் மார்ப! விடாத அம்பல் சேரி அம் பொய்கைத் துறை அலர் வாட, நும் செவ்வி மணம், தூரியம் சங்கு அதிர, நீ அன்று சூட்டு அலர் காட்டும்; மாறையில் வாழி,' என இயைக்க. வண்டு ஆர் - வண்டுகள் உண்ணும், வேரி - தேன் பொருந்திய, அம் - அழகிய, தொங்கல் - மலர் மாலை, விரை கமழ் - வாசனை வீசும், மார்ப - மார்பையுடையவனே (அண்மை விளி), விடாத - இடை விடாத, அம்பல் - சிலர் அறிந்து கூறும் பழிச்சொல்லையுடைய, சேரி - ஊராகிய, அம் பொய்கைத் துறை - அழகிய குளத்துறையில் தோன்றிய, அலர் - பலரறிந்து தூற்றும் பழிச்சொல், வாட - கெடும்படி, நும் செவ்வி மணம் - உமது அழகிய திருமணமானது, தூரியம் - மண முரசும், சங்கு - திருச்சங்கும், அதிர - ஒலிக்க, நீ அன்று சூட்டு அலர் - நீ களவுப் புணர்ச்சி நிகழ்த்திய அந்நாளில் தலைவிக்குச் சூட்டிய மலர் மாலையை ('அலர்' என்பது அதனலாகிய மாலைக்குக் கருவியாகு பெயர்), காட்டும் - (இன்று பலரும் அறிய) நிரூபிக்கும், மாரி - மேகம், அஞ்சும் - அஞ்சுதற்குக் காரணமான, கொடை - ஈகையை உடைய, வாழி - (நீ நெடுங்காலம் வரை) வாழ்வாயாக.

286] தலைவி மணம் பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல் [சு

உரவிப் பெருங்கலித் துன்பங்கள் போய்முதல் ஊழிஇன்பம்
வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்தென் மாறைஅன்னுள்
புரவிப் புனைநெடுந் தேர்அண்ண லே!நின் பொருட்டணங்கைப்
பரவிப் பரவிநின் றேவரம் வேண்டுதல் பார்த்தருளே.

து - ரை: [தலைவி கலியாணம் காரணமாகத் தெய்வத்தை வாழ்த்தும் நிலையைத் தோழி தலைவனுக்குக் காட்டுதல்] 'அண்ணலே! மாறை அன்னாள், நின் பொருட்டு அணங்கைப் பரவிப்பரவி நின்று வரம் வேண்டுதல் பார்த்தருள்,' என இயைக்க. புரவி - குதிரைகள் பூட்டப்பெற்ற, புனை - அலங்கரித்த, அண்ணலே - பெரியோனே (பண்பாகு பெயர்), உரவு - வலிமையை உடைய, இப்பெருங்கலி - இப்பெருங்கலி யுகத்தின், வாழ்வித்த - வாழச் செய்த, மாறை அன்னாள் - மாறை நாட்டைப் போல் வாளாகிய தலைவி, நின் பொருட்டு - உன் காரணமாக, அணங்கை - தெய்வத்தை, பரவிப்பரவி - பல முறை வாழ்த்தி.

287] பராநிலை கண்ட தலைவன் மகிழ்தல் [எ

இவ்வித் தகம்இவட் கெய்திய தெவ்வணம்? எவ்வுலகும்
வவ்வித் திகழ்புகழ் வாணன்தென் மாறை மணம்பொருட்டா
நவ்வித் தொகைஇனம் நாணும்மெல் நோக்கி நறைப்புகையாச்
செவ்வித் தகைமலர் தூய்த்தெய்வம் வாழ்த்தும் திருத்தகவே.

து - ரை: 'மெல் நோக்கி, மணம் பொருட்டா நறை புகையாச் செவ்வித் தகை மலர் தூய்த் திருத்தகத் தெய்வம் வாழ்த்தும்; இவ்வித்தகம் இவட்கு எய்தியது எவ்வணம்?' என இயைக்க. வவ்வி - கவர்ந்து, திகழ் - விளங்குகின்ற, மாறை - மாறை நாட்டில், நவ்வித் தொகை - பெண் மான்களின் தொகுதி, இனம் நாணும் - ஒப்பாதற்கு வெட்கப்படுகின்ற ('இனமெதும் இலானை' - திருவாய். 9, 3, 5), மெல் நோக்கி - அமைதியான பார்வையை உடையவள், பொருட்டா - காரணமாக, நறை - நறும்புகையை, புகையா - புகைத்து, செவ்வித் தகை மலர் தூய் - வாசனையையுடைய அழகிய மலர்களைத் தூவி (செவ்வி- வாசனை. 'நாவிய செவ்வி நாற' - கம்பரா. கார் கால. செய். 35), திருத்தக - சிறப்பாக, தெய்வம் வாழ்த்தும் - தெய்வத்தை வாழ்த்துவாள், இவ்வித்தகம் - இந்த ஞானம், எய்தியது - பொருந்தியது, எவ்வணம் - எப்படி.

க, ௬-ஆம் கவிகள், வரைவு முயல்வு உணர்த்தற்கு உரியவை; ௬-ஆம் கவி, வரைவு எதிர்வு உணர்த்தலுக்கு உரியது; உ, ௩, ௫-ஆம் கவிகள், வரைவு அறிந்து மகிழ்தலுக்கு உரியவை; எ-ஆம் கவி, பராவல் கண்டு உவத்தலுக்கு உரியது.

## 2. அறத்தொடு நிற்றல்

288] கையறு தோழி, கண்ணீர் துடைத்தல் [க

அயிரார் திரைவந்துன் வண்டலம் பாவை அழித்தனவோ?
செயிராத அன்னை செயிர்த்தன ளோ?செறி நாரைதிண்போர்
வயிரா நரலும் வயல்தஞ்சை வாணன்தென் மாறையில்என்
உயிரா கியதையல்! நீகலுழ் வான்என் உளம்குழைந்தே?

து - ரை: [தலைவியை ஆற்றிச் செயலற்ற தோழி அவள் கண்ணீரைத் துடைத்தல்] 'தையல்! நீ உளம் குழைந்து கலுழ்வான் என்? அயிர் ஆர் திரை வந்து உன் வண்டலம்பாவை அழித்தனவோ? செயிராத அன்னை செயிர்த்தனளோ?' என இயைக்க. செறி நாரை - நெருங்கிய நாரைகள், திண் போர் - வலிய போரில் ஒலிக்கும், வயிரா - ஊது கொம்பு போல, நரலும் - ஒலிக்கும், உயிர் ஆகிய - உயிர் போன்ற, தையல் - கட்டழகியே (பண்பாகு பெயர்; அண்மை விளி), உளம் குழைந்து - மனம் வருந்தி, கலுழ்வான் - அழுதல் (ஆன் ஈற்றுத் தொழிற்பெயர்), என் - யாது காரணம், அயிர் - நுண்மணல், வண்டலம்பாவை - வண்டல் மண்ணாற் செய்த பொம்மையை, செயிராத - (ஒரு போதும்) கோபியாத, செயிர்த்தனளோ - கோபித்தனளோ.

289] தலைமகள், கலுழ்தல் காரணம் கூறல் [உ

தார்அணி கொண்ட இருதோள் ஒருவர், தனித்துழிஎன்
வார்அணி கொங்கை மணந்துசென் றூர்;தஞ்சை வாணன்ஒன்னார்
தேர்அணி வென்ற செழும்புகர் வேல்விழித் தேன்இனம்சூழ்
கார்அணி மென்குழ லாய்!அது வேகலுழ் காரணமே.

து - ரை: 'வேல் விழி மென் குழலாய்! தார் அணி கொண்ட இரு தோள் ஒருவர், தனித்துழி என் வார் அணி கொங்கை மணந்து சென்றூர்; கலுழ் காரணம் அதுவே,' என இயைக்க. ஒன்னார் - பகைவரின் ('ஒன்றார்' என்பதன் மரூஉ), தேர் அணி - தேர் வரிசையை, செழும்புகர் - செழுமையான ஒளியையுடைய (புகர் - ஒளி. 'புகர்உடு மழுங்கின' - திருப்போ. சந். திருப்பள்ளி. செய். 3), தேன் இனம் சூழ் - வண்டின் கூட்டம் சூழ்ந்த, கார் அணி - மேகத்தின் அழகைக் கொண்ட, தார் அணி கொண்ட - மாலையை அழகாகக் கொண்ட, தனித்துழி - தனித்த இடத்தில், வார் - கச்சு, மணந்து - அணைத்து, கலுழ் - (யான்) அழுகின்ற. கலுழ் காரணம் - வினைத்தொகை.

290] தலைவன் தெய்வம் காட்டித் தெளிப்ப, [ரு
தெளிந்தமை எய்தக் கூறல்

'துதித்தேன்; அணங்கொடு சூளும்உற் றேன்,' என்ற சொல்லைமெய்யா
மதித்தேன் அயர்ந்து மதியிலி யேன்;தஞ்சை வாணன்வையை
நதித்தேன் இனம்புணர் மாதர்கண் போல நகைக்கும்நெய்தல்
பொதித்தேன் நுகர்ந்தக லும்கழிக் கானல் புலம்பர்வந்தே.

து - ரை : [தலைவன் தெய்வத்தைக் காட்டி ஆணை கூறித் தெளியச் செய்யத் தான் அதனை மெய்யென்று நம்பியதைத் தலைவி தோழிக்குப் பொருந்தக் கூறுதல்] '(தோழீ!) புலம்பர் வந்து, "துதித்தேன்; அணங்கொடு சூளும் உற்றேன்," என்ற சொல்லை மதியிலியேன் அயர்ந்து மெய்யா மதித்தேன்,' என இயைக்க. நதி - நதியில், தேன் இனம் - வண்டின் கூட்டமானது, புணர் மாதர் - (தம் காதலரைக்) கூடிய பெண்டிரின், நகைக்கும் - மலரும் ('நக்க கண்போல் நெய்தல்' - ஐங்குறு. செய். 151), நெய்தல் - நெய்தற்பூவில் உள்ள, பொதித்தேன் - நிறைவாகிய தேனை, நுகர்ந்து - உண்டு, அகலும் - (அப்பூவைப்) பிரிந்து போகும், கழிக்கானல் - கழிக்கரைச் சோலையையுடைய, புலம்பர் - நெய்தல் நிலத் தலைவர், துதித்தேன் - துதித்து (முற்றெச்சம்), அணங்கொடு - தெய்வத்துடன், சூளும் உற்றேன் - (உன்னை இனிப் பிரியேன் என்று) ஆணையும் கூறினேன், மதியிலியேன் - புத்தியில்லாதவளாகிய யான், அயர்ந்து - (என்னை) மறந்து, மதித்தேன் - துணிந்தேன். இக்கவியில் வண்டினம், தலைவனும்; நெய்தற்பூ, தலைவியும்; தேன், அவளிடத்து இன்பமும் எனக்கொண்டு, வண்டுகள் தேனுண்டு நீங்கினாற்போலத் தலைவன் தலைவியிடம் இன்பம் நுகர்ந்து சென்றான் என்று உள்ளுறை உவமம் கொள்ளக் கிடத்தல் காண்க.

291] இறைவி, தலைமகன் இகந்தமை இயம்பல் [சூ

வரியோல வண்டலை தண்டலை சூழ்தஞ்சை வாணன்வண்மைக்
குரியோன் உயர்வையை ஒண்துறை வாய்உர வோர்தெளித்தும்,
'கரியோர் பிறர்இல்லை,' என்றகன் றார்;இனிக் காரிகையாய்!
'பெரியோர் மொழிபிற ழார்,'என்று தேறுதல் பேதைமையே.

து - ரை : [தலைவி, தன் தலைவன் நீங்கினமை கூறல்] 'காரிகையாய்! உரவோர், உயர் வையை ஒண் துறைவாய்த் தெளித்தும், 'கரியோர் பிறர் இல்லை,' என்று அகன்றார்; (ஆதலால்), இனிப் 'பெரியோர் மொழி பிறழார்,' என்று தேறுதல் பேதைமையே,' என இயைக்க. காரிகையாய் - அழகை உடையவளே, உரவோர் - அறிவுடையரான தலைவர், வரி ஓல வண்டு அலை - இசைபோலும் சத்தத்தை எழுப்பும் வண்டுகள் அலைகின்ற; தண்டலை சூழ் - சோலை சூழ்ந்த, வண்மை - ஈகை, உயர் - உயர்ந்த, ஒண்

துறைவாய் - சிறந்த துறையில், தெளித்தும் - ('இனிப் பிரியேன்,' என்று என்னைத்) தெளியச் செய்தும், கரியோர் - (நாம் கூறியதற்குச்) சாட்சி கூறுவார், மொழி பிறழார் - (சொல்லிய) சொல் தப்பார், தேறுதல் - தெளிதல், பேதைமை - அறியாமையாகும். இக்கவி, வேற்றுப்பொருள் வைப்பு அணி.

292] பாங்கி, இயல் பழித்தல் [ரு

மழவே துறந்து மறந்தவர் போல்தஞ்சை வாணன்வென்றி
முழவேய முந்நீர் முழங்கிருங் கானல் முழுதுலகும்
தொழவே தரும்தெய்வம் நோக்கிச்'செல் லேன்'என்று சொல்லியும்நீ
அழவே துறந்தன ரால்,நல்லர் நல்லர்அவ் வாடவரே!

கு - ரை: [தோழி, தலைவன் குணத்தைப் பழித்தல்] 'அவ்வாடவர், முந்நீர் தஞ்சை வாணன் வென்றி முழவு எய முழங்கு இருங்கானல், உலகு முழுதும் தொழத் தரும் தெய்வம் நோக்கி, "செல்லேன்," என்று சொல்லியும், நீ அழ, துறந்து மழவு மறந்தவர்போல் துறந்தனரால், நல்லர் நல்லர்!' என இயைக்க. ஆடவர் - ஆண் மகனாகிய தலைவர், முந்நீர் - கடலானது, வென்றி முழவு எய - வெற்றி முரசத்தைப்போல, முழங்கு - ஒலிக்கின்ற, இருங்கானல் - பெரிய கழிக்கரைச் சோலையில், செல்லேன் - (பிரிந்து) போகேன், அழ - அழும்படி, துறந்து - துறவறத்தை மேற்கொண்டு, மழவு - இளமைப் பருவத்தை, போல் - போல, துறந்தனரால் - (உன்னைப்) பிரிந்து போயினராதலால், நல்லர் நல்லர் - மிகவும் தீயவர் (இகழ்ச்சிக் குறிப்பில் வந்த அடுக்கு). இது, வஞ்சப் புகழ்ச்சி அணி.

293] தலைமகள், இயற்பட மொழிதல் [சு

மாகப் புயல்மண்ணில் வந்தன்ன வாணன்தென் மாறைமுந்நீர்
நாகப் புகர்ச்செய்ய புள்ளிப்பைங் கால்ஞெண்டு நாகிளந்தண்
பூகக் குளிர்நிழல் பேடையொ டாடும் புலம்பர்இன்னுர்
ஆகக் கருதின்,நல் லாய்!இனி யார்இனி யார்உளரே?

கு - ரை: [தலைவி, தலைவன் நற்குணமுடையவன் என்பது தோன்றக் கூறுதல்] 'நல்லாய்! புலம்பர் இன்னுர் ஆகக் கருதின், இனியார் இனி யார் உளர்?' என இயைக்க. மாகப்புயல் - வானத்திலுள்ள மேகம், வந்தன்ன - வந்தாற்போன்ற, மாறை - மாறை நாட்டின், முந்நீர் - கடலினருகிலுள்ள, நாகம் - புன்னை மரத்தடியில் இருக்கும், புகர் - பழுப்பு நிறத்தோடு கூடிய, செய்ய புள்ளி - செந்நிறமான புள்ளியையும், பைங்கால் - பசுமையான காலையுமுடைய, ஞெண்டு - (ஆண்) நண்டானது, நாகு இளந் தண் பூகம் - மிக்க இளமையையும் குளிர்ச்சியையுமுடைய பாக்கு மரத்

தின், குளிர் நிழல் - குளிர்ந்த நிழலில்; பேடையொடு ஆடும் - பெண் நண்டுடன் கூடி விளையாடுகின்ற, புலம்பர் - நெய்தல் நிலத் தலைவரை, இன்னர் ஆக - பொல்லாதவராக, இனியார் - நல்லார், இனி யார் உளர் - (இவ்வுலகில்) பின்பு யார் இருக்கின்றனர்.

'புன்னை மர நிழலில் இருக்கும் ஆண் நண்டு பாக்கு மர நிழலில் இருக்கும் பெண் நண்டோடு கூடி விளையாடும் நெய்தல் நிலத் தலைவர்' என்றதனால், 'நெய்தல் நிலத் தலைவன் வந்து குறிஞ்சி நிலத் தலைவியைக் கூடுவன்,' என உள்ளுறை உவமம் கொள்ளக் கிடந்தது எனின், அங்ஙனம் கூட்டம் பெறுளாய்த் தலைவி பிரிந்து வருந்துதலின் உள்ளுறை உவமம் ஆகாமல், இறைச்சியிற்பிறக்கும் பொருள் ஆயிற்று எனக் கொள்க. இதனை, 'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே, திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே' (தொல். பொ. சூ. 230) என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் செய்த உரையிற் கண்டுகொள்க.

**294]** 'தெய்வம் பொறை கொளச் செல்குவம்,' என்றல் [ஏ

'மாதங்கம் நல்கும்கை வாணன்தென் மாறைவை யைத்துறைவர்
ஏதம் பயந்திலர் எங்கட்கு; நீஎம் இகந்ததனல்
கோதம் படாதி கொடுந்தெய்வ மே!' என்று கூர்பலி தூய்ப்
பாதம் பரவநல் லாய்! இரு வேமும் படர்குவமே.

து - ரை: ['சத்தியம் தவறினதால் தலைவரைத் தெய்வம் பொறுத்துக்கொள்ளும்படி அதனை வேண்ட இருவேமும் போவோம்,' என்று தலைவி தோழிக்குக் கூறுதல்] 'நல்லாய்! "கொடுந்தெய்வமே! வையைத் துறைவர், எங்கட்கு ஏதம் பயந்திலர்; எம் இகந்ததனல், நீ கோதம் படாதி," என்று கூர் பலி தூய்ப் பாதம் பரவ இருவேமும் படர்குவம்,' என இயைக்க. கொடுந்தெய்வமே - (குற்றம் செய்தாரை மன்னியாத). கொடுமை வாய்ந்த தெய்வமே, மாதங்கம் நல்கும் - (புலவர்க்குச்) சிறந்த தங்கத்தைப் பரிசிலாகக் கொடுக்கும், ஏதம் பயந்திலர் - துன்பத்தை உண்டாக்கினறில்லை, எம் - எம்மை, இகந்ததனல் - (அவர்) பிரிந்ததனலே, நீ கோதம் படாதி - நீ கோபம் கொள்ளாதே, (கோதம் - கோபம். 'கோதம்புரி மனத்தார்' - பிரமோத். 13, 12), கூர் பலி - மிகுந்த பலிகளை (உரிச்சொற்றொடர்), தூய் - தூவி, பரவ - துதிக்க, படர்குவம் - செல்வோம்.

**295]** இல்வயின் செறித்தமை செப்பல் [அ

தின்போல் உலகம் புரக்கின்ற வாணன் தமிழ்த்தஞ்சையார்
மன்போல் எவர்க்கும் வழங்கிஉண் ணுதவர் வைத்திழக்கும்
பொன்போல் இறுகப் பொதிந்துகொண் டாள்அன்னை பூவை! என்மேல்
வன்போ தியமட வார்அலர் தூற்றிய வாறுகண்டே.

கு - ரை : [தலைவி, தன்தாய் தன்னை வெளியில் செல்லாதபடி வீட்டில் அடக்கி வைத்தமையைத் தோழிக்குக் கூறுதல்] 'பூவை! அன்னை, என்மேல் வன்பு ஓதிய மடவார் அலர் தூற்றிய ஆறு கண்டு, எவர்க்கும் வழங்கி உண்ணுதவர் வைத்து இழக்கும் பொன்போல் இறுகப் பொதிந்துகொண்டாள்,' என இயைக்க. பூவை - நாகணவாய்ப் பறவை போன்றவளே (உவமையாகு பெயர்), வன்பு ஓதிய - பொல்லாங்கு கூறிய, அலர் - பழிச்சொல்லை, ஆறு - முறைமை, தன் போல் - தன் உயிரைப் போல, மன் போல் - அரசனைப்போல, இறுகப் பொதிந்துகொண்டாள் - இறுக மூடிக்கொள்வது போல வீட்டில் அடக்கி வைத்தலைச் செய்தாள். அன்னையும் தன்னை அனுபவியாமல் ஒரு போது இழப்பவளாதலின், 'உண்ணுதவர் வைத்து இழக்கும் பொன்போல் பொதிந்துகொண்டாள்,' எனத் தலைவி உவமை கூறினுளென்க.

296] செவிலி, கண இருள் அவன் வரக் கண்டமை கூறல் [சூ

வெங்கார் முகவெம் புருவமின் னே! அன்னை மேல்ஒருநாள்
எங்கா தலர்இருள் எய்தல்கண் டாள்இந்த ஏழுலகும்
மங்காமல் வந்தருள் வாணன்தென் மாறைவண் டானம்அஞ்சச்
சங்காழி கொண்டெறி யும்கண்டல் வேலிஅம் தண்துறைக்கே.

கு - ரை : [செவிலித்தாய் மிகுந்த இருட்குறியிடத்தில் தலைவன் வரப் பார்த்ததைத் தலைவி தோழிக்குக் கூறுதல்] 'மின்னே! மாறை கண்டல் வேலி அம் தண் துறைக்கு எம் காதலர் இருள் எய்தல் மேல் ஒரு நாள் அன்னை கண்டாள்,' என இயைக்க. வெங்கார்முகம் - கொடிய வில்லைப் போன்ற, வெம்புருவம் - விரும்பத்தகுந்த புருவங்களை உடைய, மின்னே - மின்னலைப் போன்றவளே, மங்காமல் - அழியாமல், வந்து அருள் - தோன்றிக் காத்த, மாறை - மாறை நாட்டில், வண்டானம் - நாரைகள், ஆழி - கடலானது, சங்கு கொண்டு எறியும் - சங்கினுல் எறியும், கண்டல் வேலி - தாழை வேலியை உடைய, அம் தண் துறைக்கு - அழகிய குளிர்ச்சியான துறையில் (வேற்றுமை மயக்கம்), இருள் - இருட்குறியில், எய்தல் - வருதலை, மேல் - முன்பு.

மேற்கவிகளுள் 'கலுழ்தல் காரணம் கூறல்' ஒழிந்த மற்றவை தலைவி அறத்தோடு நிற்றற்கு உரியவை.

297] செவிலி, தலைமகள் வேற்றுமை கண்டு பாங்கியை வினவுதல் [ம

பொன்னுற்ற கொங்கையும் முத்துற்ற கண்ணுமிப் போதுகண்டேன்
பன்னுற்ற சொல்லும்இன் பாலும்கொள் ளாள்;பதி னுலகும்
மன்னுற்ற வண்புகழ் வாணன்தென் மாறைஎன் மான்அனையாட்
கென்னுற்ற தென்றறி யேன்புனம் காவல் இருந்தபின்னே.

து - ரை: 'இப்போது பொன் உற்ற கொங்கையும் முத்து உற்ற கண்ணும் கண்டேன்; பன்னுற்ற சொல்லும் இன்பாலும் கொள்ளாள்; மாறை என் மான் அனையாட்குப் புனம் காவல் இருந்த பின் என் உற்றது என்று அறியேன்,' என இயைக்க. பொன் - (பசலை நிறமாகிய) பொன்னும், முத்து - (நீர்த்துளியாகிய) முத்தும், பன்னுற்ற - (யான்) சொல்லிய, இன் பால் - இனிய பால், கொள்ளாள் - உட்கொள்ளமாட்டாள், மன்னுற்ற - நிலைபெற்ற, மாறை - மாறை நாட்டில், என் உற்றது - யாது நேர்ந்தது. பொன், முத்து - உருவகம்.

298] பாங்கி, வெறி விலக்கல் [யக

அறியா மையின்ஒன்று கேட்கலுற் றேன்நும்மை; யாவதொன்றும்
குறியா மறிஉயிர் கொள்ளஎன் றோ,குரு திப்பலிகூர்
வெறியால் இவள்உயிர் மீட்கஎன் றோ,வென்றி வேல்வலத்தீர்!
சிறியார் மனையில்வந் தீர்தஞ்சை வாணன் சிலம்பினின்றே!

து - ரை: [தோழி, வேலன் தெய்வம் ஆடுவதை விலக்குதல்] 'வென்றி வேல் வலத்தீர்! அறியாமையின் நும்மை ஒன்று கேட்க லுற்றேன்: மறி உயிர் கொள்ள என்றோ, வெறியால் இவள் உயிர் மீட்க என்றோ, சிலம்பினின்று சிறியார் மனையில் வந்தீர்!' என இயைக்க. வென்றிவேல் - வெற்றி வேலை, வலத்தீர் - வலப்பக்கத்தில் உடைய முருகக் கடவுளே, அறியாமையின் - தெரியாமையினால், யாவது ஒன்றும் குறியா - எத்தகைய கெடுதியையும் கருதாத, மறி - ஆட்டின், குருதிப் பலி கூர் - இரத்தப்பலி மிகுந்த, வெறியால் - தெய்வமாடுதலால், உயிர் - (பிரியும் தறுவாயிலிருக்கும்) உயிரை, சிலம்பினின்று - மலையிலிருந்து, சிறியார் - அற்பர். 'நீர் தெய்வமாடுதலாற் பயனின்று. ஆதலின், உமது திருக் கோயிலுக்குச் செல்வீராக,' என்பது அவாய் நிலை. வேலன் என்பான், முருகக் கடவுளுக்குப் பலியிட்டு அக்கடவுள் ஆவேசிக்கத் தெய்வமாடிக் குறி சொல்லுபவன்.

299] வெறி விலக்கிய அதனால் செவிலி பாங்கியை வினுதல் [யஉ

மண்குன்ற வந்த கலியினை மாற்றிய வாணன்தஞ்சை
ஒண்குன்ற மங்கையர் முன்னர்மின் னே!உமை யாள்மகனைப்
பண்குன்ற வென்றசொல் வள்ளிதன் கோனைப்பைந் தார்அயிலால்
வெண்குன் றெறிந்தசெவ் வேளைஇவ் வாறென் விளம்பியதே?

து - ரை: 'மின்னே! தஞ்சை ஒண்குன்ற மங்கையர் முன்னர் உமையாள் மகனை, வள்ளிதன் கோனை, செவ்வேளை இவ்வாறு விளம்பியது என்?' என இயைக்க. மண் - உலகம், கலி - கலி யுகம், தஞ்சை - தஞ்சையிலுள்ள, ஒண்குன்ற மங்கையர் - சிறந்த மலையில் வாழும் பெண்டிர்,

உமையாள் - பார்வதி, பண்குன்ற - இசை வருந்தும்படி, வள்ளிதன் கோன்- வள்ளி நாயகியின் கணவன், பைந்தார் அயிலால் - பசுமையான மலர் மாலை சூடிய வேலினால், வெண்குன்று - கிரவுஞ்ச கிரியை, எறிந்த - பிளந்த, செவ் வேளை - முருகக் கடவுளை.

300] தோழி, பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் [யரு

'போர்உறை தீக்கணை போலும்நின் கண்கண்டு போதஅஞ்சி
நீர்உறை நீலமும் நீயும்நண் பாக'என்று நின்மகட்கோர்
தார்உறை தோளவர் தந்தனர் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
கார்உறை சோலையில் யாம்விளை யாடிய காலையிலே.

து - ரை : [தோழி, தலைவன் தலைவியைப் பூவைக் கொடுத்ததனால் புணர்ந்த களவைச் செவிலிக்கு உண்மையுறக் கூறுதல். மேல் வரும் இரு கிளவிக்கும் இங்ஙனமே இயைத்துக்கொள்க] '(அன்னாய்!) தஞ்சை சூழ் கார் உறை சோலையில் யாம் விளையாடிய காலையில், ஓர் தார் உறை தோளவர், "நின் கண் கண்டு அஞ்சி நீர் உறை நீலமும் நீயும் நண்பு ஆக," என்று நின் மகட்குத் தந்தனர்,' என இயைக்க. கார் உறை - மேகம் தங்கும், காலை யில் - காலத்தில், தார் உறை - மலர் மாலை தங்கிய, போர் உறை - போரில் மோதுகின்ற, தீக்கணை - கொடிய அம்பு, போத - மிக, நீர் உறை - நீரில் வாழ்கின்ற, நீலம் - கருங்குவளை மலர்; நண்பு ஆக - உறவாகுக, தந்தனர் - (அக்கருங்குவளை மலரைக்) கொடுத்தனர். ('அதனால், நின் மகள் அவரிடம் அன்பு கொண்டு அவரையே மணக்க எண்ணினள்,' எனத் தோழி குறிப் பாற் களவை உணர்த்தினள் என்க. மேல் வரும் இரு கிளவிகளுக்கும் இவ்வாறே கொள்க.) அன்னை - முன்னிலை எச்சம்.

301] புனல் தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் [யச

ஒழிதோற் றியசொல்லல்; உன்மகள் ஓதிக் குடைந்தகொண்டல்
பொழிதோல் திரள்உந்தி வந்தசெந் நீர்உந்திப் பொற்பினுக்கோர்
சுழிதோற் றிடும்பகை தீர்க்கின்ற போதொரு தோன்றலும்அவ்
வழிதோற்றி வந்தெடுத் தான்தஞ்சை வாணன்தென் வையையிலே.

து - ரை : [புனல் - நீர்] '(அன்னாய்!) தோற்றிய சொல்லல் ஒழி; வையையில், உன் மகள் ஓதிக்கு உடைந்த கொண்டல் பொழி தோல் திரள் உந்தி வந்த செந்நீர் உந்திப் பொற்பினுக்கு ஓர் சுழி தோற்றிடும் பகை தீர்க் கின்ற போது ஒரு தோன்றலும் அவ்வழி தோற்றி வந்து எடுத்தான்,' என இயைக்க. தோற்றிய - (உன் மனத்தில்) தோன்றிய கருத்துகளை (பல வின்பால் வினையாலணையும் பெயர்), ஒழி - விட்டுவிடு, ஓதிக்கு - கூந்த லுக்கு, உடைந்த - (நிறத்தால்) தோல்வியடைந்த, கொண்டல் - மேகம், பொழி - பெய்த, தோல் திரள் - யானைக் கூட்டத்தை, உந்தி - தள்ளிக் கொண்டு, செந்நீர் - புது வெள்ளமானது ('மூதூர்ச் செந்நீர்க் கடியின் விழ

வாட்டினாள்' - சீவக. செய். 12), உந்திப் பொற்பினுக்கு - (உன் மகளது) கொப்பூழின் அழகுக்கு, ஓர் சுழி - (தன்னிடம்) தோன்றிய ஒரு நீர்ச் சுழியானது, தோற்றிடும் பகை - தோல்வியடையும் பகையை, தீர்க்கின்ற போது - (உன் மகளை இழுத்துச் செல்வதால்) நீக்குகின்ற சமயத்தில், தோன்றலும் - தலைவனும் (உம் - இறந்தது தழீஇய எச்சம்), அவ்வழி தோற்றி - அவ்வழியில் தன்னைப் புலப்படுத்தி, எடுத்தான் - (அவளைக்) கரையேற்றினான். புது வெள்ளம் கலங்கி வருமாதலின், '**செந்நீர்**' எனப் பட்டது. அன்னை - முன்னிலை எச்சம்.

**302]** களிறு தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் [௰௫

**மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்தென் மாறைவெற்பில்**
**அண்ணலை ஆயிழை பாகன்என் றஞ்சினம் அஞ்சனம்தோய்**
**கண்ணலை நீர்இடப் பாகமும் மேல்வந்த கைக்களிற்றின்**
**புண்ணலை நீர்வலப் பாகமும் தோயப் பொருதஅன்றே.**

**து - ரை:** [களிறு - யானை] '(அன்னாய்!) மாறை வெற்பில் அஞ்சனம் தோய் கண் அலை நீர் வலப் பாகமும், மேல் வந்த கைக்களிற்றின் புண் அலை நீர் வலப்பாகமும் தோயப் பொருத அன்று அண்ணலை ஆயிழை பாகன் என்று அஞ்சினம்,' என இயைக்க. மண் - உலகத்தவரை (இடவாகு பெயர்), அலையாமல் - வருத்தாமல், அஞ்சனம் தோய் - (உன் மகளின்) மை கலந்த, கண் அலை நீர் - கண்ணிலிருந்து பெருகிய அலைபோலும் நீர், மேல் வந்த - (அவளை) எதிர்த்து வந்த, கை - துதிக்கையையுடைய, புண் அலை நீர் - புண்ணிலிருந்து பெருகிய அலைபோலும் இரத்தம், தோய - படிய, பொருத அன்று - (அவ்யானையுடன்) போரிட்ட அந்நாளில், அண்ணலை - (அந்தப்) பெரியோனை (பண்பாகு பெயர்), ஆயிழை பாகன் என்று - ஆய்ந்தெடுத்த ஆபரணங்களையுடைய பார்வதியை இடப் பாகத்திலுடைய சிவபெருமான் என்று எண்ணி, அஞ்சினம் - (தோழியர்களாகிய யாங்கள்) பயப்பட்டோம். தலைவன் யானையொடு பொருத போது தலைவிக்கு அச்சம் தோன்றாதபடி அவளைத் தன் இடப்பக்கத்தில் அணைத்து வலக்கையில் தாங்கிய வேலால் யானையைத் தாக்கினனாதலின், தோழி இங்ஙனம் கூறினள் என்க. அன்னை - முன்னிலை எச்சம். ஆயிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

**303]** தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல் [௰௬

**தண்டார் தழுவிய வேல்அண்ணல் வாணன்தென் தஞ்சைவெற்பில்**
**வண்டார் குழலிதன் வண்ணமும் கண்ணும் வடிவும்முன்னாள்**
**கண்டார் அறியும் படியன வேஅல்ல; காரணம்ஒன்**
**றுண்டால், உயிர்அனை யாய்!அயி ராமல் உரைஎனக்கே.**

து - ரை : 'உயிர் அனையாய்! தஞ்சை வெற்பில் வண்டார் குழலிதன் வண்ணமும் கண்ணும் வடிவும் முன் நாள் கண்டார் அறியும்படி யனவே அல்ல; காரணம் ஒன்று உண்டால், அயிராமல் எனக்கு உரை,' என இயைக்க. வண்ணம் - நிறம், கண்டார் - (அவளைப்) பார்த்தவர் (வினையாலணையும் பெயர்), அறியும்படியனவே - (இப்போது வேறுபட்டிருத்தலால்) அறியுந்தன்மையனவே, உண்டால் - உண்டு ஆதலால், அயிராமல் - ('சொல்லத் தகுமோ, தகாதோ!' என்று) சந்தேகியாமல்.

304] செவிலி, நற்றாய்க்கு முன்னிலை மொழியால் அறத்தொடு நிற்றல் [வள

மலைவந்த தோளனும் வாரண வாணன்தென் மாறைமதி
சிலைவந்த தோளனும் நன்னுத லாய்!ஒரு செல்வர்,'இங்கோர்
கலைவந்த தோ?'என வந்து வினவி,நம் காரிகைக்கு
முலைவந்த தோஇல்லை யோஎன்னும் நாளில் முயங்கினரே.

து - ரை : [செவிலித்தாய், நற்றாய்க்கு வெளிப்படைச் சொல்லால் களவை வெளிப்படுத்திக் கூறுதல்] 'நல் நுதலாய்! நம் காரிகைக்கு முலை வந்ததோ இல்லையோ என்னும் நாளில், ஒரு செல்வர் வந்து, "இங்கு ஓர் கலை வந்ததோ?" என வினவி, முயங்கினர்,' என இயைக்க. வந்ததோ எனும் - வந்ததோ என்று வியக்கத் தகும் (ஓ - வியப்புப் பொருளது), வாரணம் - யானையையுடைய, மாறை - மாறை நாட்டில், மதி (வந்ததோ) சிலை வந்ததோ எனும் - பிறைச் சந்திரன் வந்ததோ வில் வந்ததோ என்று ஐயுறத்தகும், நல் நுதலாய் - அழகிய நெற்றியை உடையவளே, காரிகைக்கு - அழகிக்கு (பண்பாகு பெயர்), முலை வந்ததோ இல்லையோ எனும் நாளில் - முலை அரும்பியதோ இல்லையோ என்று ஐயுறத்தகும் பெதும்பைப் பருவத்தில், கலை - கலை மான், முயங்கினர் - (அவளைத் தினைப்புனத்தில்) கூடினர்.

இக்கிளவிகளுள் 'வெறி விலக்கல்' முன்னிலைப் புறமொழிக்கும், ஏனையவை முன்னிலை மொழிக்கும் உரியவை.

## 3. உடன் போக்கு

305] பாங்கி, தலைவற்கு உடன் போக்கு உணர்த்தல் [க

மைந்நீர் நெடுங்கண் மடந்தை யுடன்தஞ்சை வாணன்வெற்பா!
செந்நீர் விழவணி நின்னகர்க் கேகொண்டு சேர்ந்தருள்;மற்
றிந்நீர்மை அல்லதோர் ஆறும்இன் றால்,இங்கெம் ஐயர்என்றால்,
முந்நீர் உலகும்கொள் ளார்விலை யாக முலையினுக்கே.

து - ரை : [தோழி, 'எம்மவர் நீ தலைவியை மணக்க உடன்படார் ஆதலின், நீ அவளை உடன் கொண்டு போ,' எனத் தலைவனுக்கு உரைத்தல்] 'வெற்பா! இங்கு எம் ஐயர் என்றால், முலையினுக்கு விலையாக முந்நீர் உலகும் கொள்ளார்; (ஆதலின்) நின் நகர்க்கு மடந்தை உடன் கொண்டு சேர்ந்தருள்; இந்நீர்மை அல்லது, மற்று ஓர் ஆறும் இன்று,' என இயைக்க. ஐயர் என்றால் - பெரியோர் கருத்தைச் சொல்ல வேண்டு மானால், முந்நீர் - கடல் சூழ்ந்த, கொள்ளார் - பெற்றுக்கொள்ள இசையார், செந்நீர் விழவு அணி - (மாந்தர்) புது வெள்ளத்தில் ஆடும் திருவிழாவின் அலங்காரத்தையுடைய ('செந்நீர்க் கடியின் விழவாட்டு' - சீவக. செய். 12), மடந்தை - தலைவியை, இந்நீர்மை - இம்முறை, மற்று ஓர் ஆறும் இன்று - (நீ அவளை மணப்பதற்கு) வேறு ஒரு வழியும் இல்லை.

306] தலைவன், உடன் போக்கு மறுத்தல் [உ

"பாரோ முலைவிலை!" என்பர்நும் கேளிர்;எம் பல்கிளைவாழ்
ஊரோ, அணியதன் றொண்டொடி யாய்!விந்தை உண்கண்களோ
தாரோ வளரும் புயன்தஞ்சை வாணன் தரியலர்போல்
யாரோ தனிநடப் பார்அருங் கானம் இவளுடனே?

து - ரை : 'ஒண் தொடியாய்! நும் கேளிர், "முலை விலை பாரோ!" என்பர்; எம் பல் கிளை வாழ் ஊரோ, அணியது அன்று; விந்தை உண் கண்களோ தாரோ வளரும் புயன் தஞ்சை வாணன் தரியலர் போல், அருங்கானம் இவளுடன் தனி நடப்பார் யார்?' என இயைக்க. ஒண் தொடியாய் - சிறந்த வளைகளை அணிந்தவளே, கேளிர் - சுற்றத்தார், முலை விலை பாரோ - (நீ எம் மடந்தைக்குத் தரும்) பரிசம் உலகமோ, கிளை - சுற்றத்தார் (பண்பாகு பெயர்), ஊரோ - ஊரோவெனில், அணியது - சமீபத்திலுள்ளது, விந்தை - ஜய லக்குமியின், உண் கண்களோ - மையுண்ட கண்களும், தாரோ - மலர் மாலையும், வளரும் - தங்கியிருக்கும், புயன் -

தோளையுடையவனுகிய, தரியலர் - பகைவர், அருங்கானம் - (செல்லுதற்கு) அருமையான காட்டில். யாரோ - ஓ, அசை. கண்களோ, தாரோ - ஓ, எண்ணுப்பொருளன (தொல். சொல். இடை. சூ. 47 உரை).

307] அவள் உடன்படுத்தல் [ரு

சுருளேய் குழலும் சுணங்கேய் முலையும் சுமந்து கற்புப்
பொருளே எனச்சுரம் போதும்அப் போதும் புகழ்வெயிலால்
மருளேய் கலிஇருள் மாற்றிய வாணன்தென் மாறையில்நின்
அருளே ஒழியஉண் டோநிழ லாவ தணங்கினுக்கே.

து - ரை: [தோழி; தலைவனைச் சம்மதிக்கச் செய்தல்] 'மாறையில் அணங்கினுக்குச் சுருள் எய் குழலும் சுணங்கு எய் முலையும் சுமந்து, 'கற்பே பொருள்,' எனச் சுரம் போதும் அப்போதும் நிழல் ஆவது, நின் அருளே ஒழிய உண்டோ?' என இயைக்க. புகழ் வெயிலால் - (தனது) புகழாகிய ஒளியால் (உருவகம்), மருள் எய் - மயக்கம் பொருந்திய, கலி இருள் - கலியாகிய இருளை (உருவகம்), மாற்றிய - அழித்த, மாறையில் - மாறை நாட்டிலுள்ள, அணங்கினுக்கு - தெய்வப்பெண் போலும் தலைவிக்கு (உவமையாகு பெயர்), சுருள் எய் - சுருள் பொருந்திய, சுணங்கு எய் - மாமைநிறம் பொருந்திய, கற்பே - ஏகாரம் தேற்றம், பொருள் என - நன்கு மதிக்கப்படுவது என்று ('பொருளே மன்ற பொருளே' - குறுந். செய். 174), சுரம் - காட்டில், போதும் - செல்லும் ('புகுதும்' என்பதன் மரூஉ), நிழல் ஆவது - நிழலாகத்தகுவது, நின் அருளே ஒழிய - உனது கருணையே அல்லாமல் (அருளே - ஏகாரம் தேற்றம்), உண்டோ - (வேறு) இருக்கிறதோ (ஓ - எதிர்மறை).

308] தலைவன், போக்கு உடன்படுதல் [ச

நஞ்சோ அழலோ எனும்சுர மோசெல்ல நாடியஎன்
நெஞ்சோ கொடியது நேரிழை யாய்!நிழல் மாமதியோ
மஞ்சோ தவழ்மதில் சூழ்தஞ்சை வாணன் வரைஇலவம்
பஞ்சோ அனிச்சங் கொலோஎனும் சீறடிப் பைங்தொடிக்கே.

து - ரை: 'நேர் இழையாய்! வாணன் வரை இலவம்பஞ்சோ, அனிச்சமோ எனும் சீறடிப்பைங்தொடிக்கு நஞ்சோ அழலோ எனும் சுரம் செல்ல நாடிய என் நெஞ்சு ஓ கொடியது!' என இயைக்க. நிழல் - ஒளியை உடைய ('நிழல்கால் நெடுங்கல்,' - சிலப். 5, 127), மா மதியோ மஞ்சோ - சிறந்த சந்திரனும் மேகமும், வரை - மலையில் உள்ள, அனிச்சம் - அனிச் சம்பூ, (பொருளாகு பெயர்), சீறடி - சிறிய பாதங்களையும், பைங்தொடிக்கு - பசுமையான வளைகளையுமுடைய தலைவிக்கு (பண்புத்தொகைப் புறத்துப்

பிறந்த அன்மொழித்தொகை), நஞ்சு - விஷம், அழல் - தீ, சுரம்- காட்டில், நாடிய - கருதிய, ஓ கொடியது - மிகக்கொடியது (ஓ - இழிவு சிறப்பு). கொல் - அசை. நஞ்சோ, அழலோ, பஞ்சோ, அனிச்சமோ - ஓ, ஐயம். சுரமோ - ஓ, அசை. மதியோ, மஞ்சோ - ஓ, எண்.

309] தலைவிக்கு உடன் போக்கு உணர்த்தல் [ரு

'பால்அன்ன பாயல் பகைஎன்னும் சீறடி, பட்டுருவும்
வேல்அன்ன கூர்ங்கல் மிதிக்குங்கொல்!' என்றனர் ; மேதினிக்கு
மால்அன்ன வாணன்தென் மாறைநன் னாட்டு வயல்உகளும்
சேல்அன்ன நீள்விழி யாய்!தெரி யாதன்பர் சிந்தனையே.

து - ரை : [தோழி, தலைவிக்குத் தலைவனுடன் போதலை உணர்த்துதல்] 'நீள் விழியாய் ! "பால் அன்ன பாயல் பகை என்னும் சீறடி, பட்டு உருவும் வேல் அன்ன கூர்ங்கல் மிதிக்குங்கொல் !" என்றனர்; அன்பர் சிந்தனை தெரியாது,' என இயைக்க. மேதினி - பூமி, மால் - திருமால், வயல் - கழனியில், உகளும் - பிறழுகின்ற, சேல் - கெண்டை மீன், பால் அன்ன - (நிறத்தினால்) பாலைப்போன்ற, பாயல் - படுக்கையை, பகை என்னும் - (தங்களுக்குப்) பகை என்று கருதும், சீறடி - சிறிய பாதங்கள், கூர்ங்கல் - கூர்மையான கற்களை, மிதிக்குங்கொல் - மிதிக்குமோ (கொல் - ஐயம்), என்றனர் - என்று கூறினர் நம் காதலர், (அதனால்) அன்பர் சிந்தனை - நம் காதலரின் கருத்து, தெரியாது - (யாதோ) தெரிந்திலது.

310] தலைவி, நாண் அழிவு இரங்கல் [சு

மறவாகை வேல்அங்கை வாணனை மாறையர் மன்னனைத்தம்
உறவாக எண்ணி உறாதவர் போல்உயிர் ஓம்பிஎன்றும்
துறவாத நாணம் துறப்பது வேண்டலின், தொல்உலகில்
பிறவா தொழிகைநன் றேஒரு காலமும் பெண்பிறப்பே.

து - ரை : [தலைவி, 'தலைவருடன் செல்லின் நமது நாண் அழியுமே!' என்று வருந்துதல்] 'உயிர் ஓம்பி என்றும் துறவாத நாணம் துறப்பது வேண்டலின், தொல் உலகில் ஒரு காலமும் பெண் பிறப்புப் பிறவாது ஒழிகை நன்று,' என இயைக்க. மற வாகை வேல் - வீரத்தால் வெற்றி கொண்ட வேலை, அம் கை - அழகிய கையிற் பிடித்த, உறாதவர்போல் - அடையாத பகைவரைப் போல, உயிர் ஓம்பி - உயிரைப் பாதுகாத்து, வேண்டலின் - விரும்புதலைக்காட்டிலும், ஒழிகை - ஒழிதல்.

311] கற்பு மேம்பாடு பூண் முலைப் பாங்கி புகறல் [எ

செங்காள் மலரில் திருஅன்ன கோலத் தெரிவையர்க்கு
மெய்ந்நாண் உயிரினும் மிக்கதென் றால்,விர வாஅரசர்

தங்நாள் முறைமை தவிர்த்தருள் வாணன் தமிழ்த்தஞ்சைநாட்
டங்நா ணமும்மட வாய்!கற்பு நோக்க அழகிதன்றே.

து - ரை: [கற்பின் சிறப்பைத் தோழி தலைவிக்குக் கூறுதல்] 'மட வாய்! தெரிவையர்க்கு மெய்ந்நாண் உயிரினும் மிக்கது என்ருல், அந் நாணமும் கற்பு நோக்க அழகிது அன்று,' என இயைக்க. மடவாய் - பேதாய், செந்நாள் மலரில் - செம்மையான அன்றலர்ந்த தாமரை மலரி லுள்ள, திரு - இலக்குமி, கோலம் - அழகையுடைய, தெரிவையர்க்கு - பெண்டிர்க்கு, மெய்ந்நாண் - உடலோடு பொருந்திய நாணம், மிக்கது என் ருல் - சிறந்தது என்று சொன்ஞல், விரவா அரசர் தம் - (தன்னுடன் உறவு) கலவாத அரசரின், நாள் முறைமை - வாழ்நாளையும் அரசியலையும், தவிர்த்து - நீக்கி, அருள் - (அப்பகையரசரால் துன்புற்றிருந்தவர்க்குக்) கிருபை செய்யும், நாட்டு - நாட்டில், அந்நாணமும் - (உயிரினும் சிறந்ததாகச் சொல்லும்) அந்த நாணமும், கற்பு நோக்க - கற்பைக் கருதும்போது, அழகிது அன்று - சிறப்புடையது அன்று.

" உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று. "

என்பதை (தொல். பொ. களவியல். சூ. 22) இங்கு ஒப்பு நோக்குக.

312] தலைவி, ஒருப்பட்டு எழுதல் [அ

பலரே சும்அந்த உரைகளும் தாயர்தம் பார்வைகளும்
சிலரே சுமந்து திரியவல் லார்;செய்ய செண்பகநாள்
மலரே சுமந்த வயல்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்,
அலரே சுமந்து சுமந்திந்த ஊர்நின் றழுங்குகவே.

து - ரை: [தலைவி, சம்மதித்துப் புறப்படுதல்] 'பலர் ஏசும் அந்த உரைகளும் தாயர்தம் பார்வைகளும் சிலரே சுமந்து திரிய வல்லார்; இந்த ஊர், வாணனை வாழ்த்தலர்போல், அலரே சுமந்து சுமந்து நின்று அழுங்குக,' என இயைக்க. ஏசும் - இகழும், உரைகளும் - (இகழ்ச்சிச்) சொற்களையும், தாயர்தம் - தாய்மாருடைய, பார்வைகளும் - (சினந்து பார்க்கின்ற) பார்வைகளையும், வல்லார் - வல்லவராவார், ('என்ஞல் முடி யாது,' என்பது அவாய் நிலை), ஊர் - ஊரிலுள்ளவர் (இடவாகு பெயர்), செண்பகம் - சண்பகம், அலரே - பழி தூற்றுதலையே, சுமந்து சுமந்து - நீடு மேற்கொண்டு, நின்று அழுங்குக - இடை விடாமல் வருந்துக.

313] பாங்கி சுரத்து இயல்பு உரைத்தழித் தலைமகள் சொல்லல் [கூ

செல்லின் கொடிய களிற்றண்ணல் வாணன்தென் மாறைமன்னன்
வில்லின் கொடிய புருவமின் னே!என் விளம்புதிநீ ?

சொல்லின் கொடியநம் அன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும்
இல்லின் கொடியகொல் லோசெல்லும் நாட்டவ் விருஞ்சுரமே?

து - ரை : 'மின்னே! நீ என் விளம்புதி! செல்லும் நாட்டு அவ் விருஞ்சுரம், சொல்லின் கொடிய நம் அன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும் இல்லின் கொடியவோ?' என இயைக்க. செல்லின் - இடியைக்காட்டிலும், வில்லின் - வில்லைக்காட்டிலும், கொடிய - வளைவினையுடைய, விளம்புதி - சொல்லுகின்றாய், இருஞ்சுரம் - அப்பெருங்காடுகள், சொல்லின் - சொல்லினால், இல்லின் - வீட்டைக்காட்டிலும், கொடியவோ - தீயனவோ. கொல் - அசை. ஓ - எதிர்மறை. செல்லின், வில்லின், இல்லின் - இன், நீங்கற்பொருளில் வந்த ஐந்தனுருபு. சொல்லின் - இன், சாரியை.

314] பாங்கி, கையடை கொடுத்தல் [ம

*வடமால் வரைநிரை சாயினும், வண்புயல் வாரிபுகும்
கடனாகியநெறி கைவிட நீங்கினும், கந்தலைக்கும்
இடமார் களிற்றைய! நின்னைஅன் னார்,'பின்னை என்னை?'என்னார்
உடனாய கேண்மை ஒழிந்தறி யார்இவ் வுலகத்திலே.

து - ரை : [தோழி, தலைவியைத் தலைவனுக்கு அடைக்கலமாகக் கொடுத்தல்] 'கந்து அலைக்கும் இடம் ஆர் களிற்று ஐய! இவ்வுலகத்தில் நின்னை அன்னார், உடன் ஆய கேண்மை ஒழிந்து அறியார், வடமால் வரை நிரை சாயினும், வண்புயல் வாரி புகும் கடனாகிய நெறி கைவிட நீங்கினும், "பின்னை என்னை?" என்னார்,' என இயைக்க. கந்து அலைக்கும் - கட்டுத்தறியை அசைக்கும், இடம் ஆர் - வலிமை பொருந்திய, களிற்று ஐய - ஆண் யானையையுடைய தலைவனே, நின்னை அன்னார் - உன்னைப்போன்றவராகிய, உடன் ஆய கேண்மை ஒழிந்து அறியார் - (தம்) தலைவியருடன் உண்டான உறவை நீங்கி அறியாதவர், வடமால் வரை - (மேரு மலை என்னும்) வடக்கிலுள்ள பெரிய மலை, நிரை சாயினும் - ஒழுங்கு அழியினும், வண்புயல் - வளப்பம்பொருந்திய மேகம், வாரி புகும் - (மழை பெய்தற் பொருட்டு நீரை முகந்து வரக்) கடலிற்செல்லும், கடனாகிய நெறி - தன் கடமையாகிய நல்லொழுக்கம், கைவிட - (தன்னை) விட்டொழிய, நீங்கினும் - (அக்கடமையிலிருந்து தான்) மாறுபடினும், பின்னை என்னை - இனி இவரால் நமக்குப் பயன் என்ன, என்னார் - என்று கருதமாட்டார். 'பூகம்பம் நேரினும், வானம் பொய்ப்பினும் நின்னையொத்தவராகிய உடனாய கேண்மை ஒழிந்து அறியாதவர், அக்கேண்மையினை இகழார். ஆதலின், எத்தகைய இடையூற்றிலும் நீ இத்தலைவியை இகழாது காத்தல் வேண்டும்,' என்றாள் தோழி என்க.

---

* அம்பிகாபதி கோவை, செய். 325.

315] பாங்கி, வைகிருள் விடுத்தல் [௰க

பொழிநான மன்றல்அம் பூங்குழல்! நீங்கள் புணர்ந்துசெல்லும்
வழிநாடி நம்பின் வருகுவல் யான்தஞ்சை வாணன்வையைச்
சுழிநாணும் உந்திநின் தொல்கிளைக் கேற்பன சொல்லிஇன்னு
மொழிநா அடங்க மொழிந்தய லாரை முகம்கவிழ்த்தே.

து - ரை: [தோழி, இடை யாமத்தில் தலைவியைத் தலைவனிடம் அனுப்புதல்] 'பொழி நானம் மன்றல் அம் பூங்குழல்! யான் தஞ்சைவாணன் வையைச் சுழிநாணும் உந்தி நின் தொல்கிளைக்கு ஏற்பன சொல்லி, அயலாரை இன்னு மொழி நா அடங்க மொழிந்து முகம் கவிழ்த்து, நீங்கள் புணர்ந்து செல்லும் வழி நாடி நம் பின் வருகுவல்,' என இயைக்க. பொழி நானம் மன்றல் அம் பூங்குழல் - நிறைந்த கஸ்தூரி மணத்தோடு கூடிய அழகிய பூவை அணிந்த குழலையுடையவளே (பூங்குழல் - அண்மை விளி), சுழி நாணும் - நீர்ச்சுழி வெட்கத்தகும், உந்தி - கொப்பூழையுடைய, கிளைக்கு - சுற்றத்தார்க்கு, ஏற்பன - தகுதியான சொற்களை, இன்னு மொழி - துன் பந்தருவனவாகிய அலரைக் கூறிய, நா - நாக்கு, முகம் கவிழ்த்து - முகம் கவிழச்செய்து, புணர்ந்து செல்லும் - கூடிச் செல்லும், வழி நாடி - வழியில் தேடி, வருகுவல் - வருவேன்.

316] தலைமகளைத் தலைமகன் சுரத்து உய்த்தல் [௰உ

தளிபோல் கொடைபயில் சந்திர வாணன் தமிழ்த்தஞ்சையான்
அளிபோல் குளிர்ந்த இளமரக் காவும் அவன்புகழின்
ஒளிபோல் விளங்கிய வெண்மணல் யாறும் உவந்துகண்டு
நளிபோ தவிழ்குழ லாய்!மெல்ல மெல்ல நடந்தருளே.

து - ரை: [தலைவன், தலைவியைக் காட்டில் மெல்லக் கொண்டு செல்லுதல்] 'நளி போது அவிழ் குழலாய்! இளமரக்காவும் வெண்மணல் யாறும் உவந்து கண்டு, மெல்ல மெல்ல நடந்தருள்,' என இயைக்க. நளி - குளிர்ச்சியையுடைய, போது-மலர், தளி - மேகம், பயில் - பழகுகின்ற, அளி - அன்பு, கா - சோலை, யாறு - கான்யாறு, உவந்து - மகிழ்ந்து, நடந்தருள் - செல்.

317] தலைமகன், தலைமகள் அசைவு அறிந்திருத்தல் [௰ங

வரமாமை வேல்படை வாணன்தென் மாறை வணங்கலர்கள்
புரமான வல்லழல் பொங்குவெங் கானில் பொருந்தியகூர்
அரமான கல்உன் அடிமலர் ஆற்றல; ஆதலின்,நாம்
சுரமாறும் எல்லைநல் லாய்!இருப் பாம்இந்தச் சோலையிலே.

து - ரை: [அசைவு - வருத்தம்; இருத்தல் - தங்குதல்] 'நல்லாய்! வல் அழல் பொங்கு வெங்கானில் பொருந்திய கூர் அரமான கல் உன் அடி

மலர் ஆற்றல; ஆதலின், நாம் சுரம் ஆறும் எல்லை இந்தச் சோலையில் இருப்பாம்,' என இயைக்க. வரம் ஆம் - மேன்மையாகிய, ஐ - அழகையுடைய; மாறை - மாறை நாட்டை, வணங்கலர்கள் - வணங்காதவர்களின், புரம் மான - நகரைப்போல, வல் அழல் - கொடிய தீ, அரம் ஆன - அரம்போன்ற, கல் - கற்களுக்கு, ஆற்றல - பொறுக்கும் தன்மைய அல்ல, சுரம் - வழி, ஆறும் எல்லை - (வெப்பம்) தணியும் அளவும், இருப்பாம் - இருப்போம்.

318] உவந்து அலர் சூட்டி உள் மகிழ்ந்து உரைத்தல் [கச

அடிமலர் போற்றவும் போற்றிஅன் பால்இவள் ஆய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவும் காட்டிய தால்கள்வர் காய்ந்தெறியும்
துடிமலர் சீர்க்கெதிர் கூகை இரட்டும் சுரத்திடைஓர்
வடிமலர் வேல்படை யான்வாணன் மாறைஎன் மாதவமே.

து - றை: [தலைவன் களித்து, தலைவிக்கு மலரைப் பறித்துச் சூட்டி, மனம் மகிழ்ந்து உரைத்தல். உவகை, அறிவோடு கூடியது; மகிழ்ச்சி, அறிவழிந்துறுவது. இவற்றை,

'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில்; காமத்திற் குண்டு.'

என்னும் குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரையாலறிக.] 'மாறை என் மாதவம், யான் சுரத்திடை இவள் அடி மலர் போற்றவும், போற்றி, அன்பால் ஆய் முடிக்குக் கடி மலர் சூட்டவும் காட்டியது,' என இயைக்க. ஓர் - ஒப்பற்ற, வடி - கூர்மையையும், மலர் - மலர் மாலையையும் உடைய (கருவியாகு பெயர்), மாறை - மாறை நாட்டில் இருக்கின்ற, மாதவம் - பெருந்தவமானது, காய்ந்து எறியும் - கோபித்து அடிக்கின்ற, துடி மலர் சீர்க்கு - பாலை நிலப்பறையிலிருந்து எழுகின்ற ஓசைக்கு, எதிர் - எதிராக, கூகை - கோட்டான், இரட்டும் - ஒலிக்கும், சுரத்திடை - காட்டில், அடி மலர் - பாதத் தாமரைகளை (உருவகம்), போற்றவும் - (வருத்தந்தீரப்) பிடிக்கவும், போற்றி - பிடித்து, ஆய் முடிக்கு - அழகையுடைய கொண்டைக்கு ('ஆய் பொறி உழுவை' - கலித். செய். 46; அடி, 4.), கடி - வாசனை, காட்டியது - செய்வித்தது ('களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி' - சிலப். காதை, 19; அடி, 17).

319] கண்டோர் அயிர்த்தல் [யரு

'சையத் திரள்புயன் சந்திர வாணன் தனிபுரக்கும்
வையத் துறைகின்ற மானிட ரோ,அன்றி வானவரோ,
நையப் படும்அழல் வெஞ்சுரத் தூடு நடந்தவர்!'என்
றையப் படுவதல் லால்,உண்மை சால அறிவரிதே.

கு - ரை : [சுரத்தில் தலைவனையும் தலைவியையும் கண்டவர்கள், 'இவர் மானிடரோ, தேவரோ!' என்று சந்தேகித்தல்] 'வெஞ்சுரத்தூடு நடந்தவர், மானிடரோ அன்றி வானவரோ என்று ஐயப்படுவது அல்லால், உண்மை அறிவு சால அரிது,' என இயைக்க. நைய - (நடப்போர்) வருந் தும்படி, படும் - (அவர்கள் பாதத்திற்) படுகின்ற, அழல் - வெப்பத்தை உடைய, வெஞ்சுரத்தூடு - கொடிய பாலையில், சையம் - மலையைப்போல, திரள் புயன் - திரண்ட தோள்களையுடையவனுகிய, தனி - ஒப்பில்லாமல், வையத்து - உலகில், அல்லால் - அல்லாமல், அறிவு - அறிதல், சால அரிது - மிகவும் அரியது.

**320]** கண்டோர், காதலின் விலக்கல் [௰௬

மாலும் திருவும் எனவரு வீர்! தஞ்சை வாணன் தெவ்வூர்
போலும் சுரம்இனிப் போகஒண் ணுது; பொருப்படைந்தான்
ஆலும் புரவி அருக்கன்; இக் கங்குல் அடல்கடமான்
பாலும் தசையும்உண் டேதங்கு வீர்எங்கள் பாடியிலே.

கு - ரை : [கண்டவர், தமது அன்பினுல் போக்கை விலக்குதல்] 'மாலும் திருவும் என வருவீர்! சுரம் இனிப் போக ஒண்ணுது ; ஆலும் புரவி அருக்கன் பொருப்பு அடைந்தான் ; இக்கங்குல் அடல் கடமான் பாலும் தசையும் உண்டு எங்கள் பாடியில் தங்குவீர்,' என இயைக்க. மால் - திருமால், திரு - இலக்குமி, வருவீர் - வருபவர்களே, தெவ் ஊர் - பகைவர் ஊர், சுரம் - பாலையில், ஒண்ணுது - தகாது ('ஒன்றுது' என் பதன் மரூஉ), ஆலும் - ஆரவாரிக்கும், புரவி - குதிரைகளையுடைய, அருக் கன் - சூரியன், பொருப்பு - (அஸ்தமனகிரி என்னும்) மலையை, இக்கங்குல் - இவ்விரவில், அடல் - வலிமையையுடைய, கடமான் - காட்டுப் பசுவின், தசை - இறைச்சி, உண்டு - உட்கொண்டு, பாடியில் - ஊரில், தங்குவீர் - தங்குங்கள். பகைவரூர், பாழாகி மக்கள் நடமாட்டமின்றி இருத்தலின், சுரத்துக்கு உவமையாயிற்று.

**321]** தன் பதி அணிமை சாற்றல் [௰௭

தொடங்கும் பிறைநுதல் தோகையும் நீயும்முன் தோன்றுகின்ற
கடங்குன் றிரண்டும் கடந்துசென் ருல்கம லத்தடமும்
கிடங்கும் புரிசையும் சூழ்ந்தெதிர் தோன்றும் கிளைத்தபைந்தார்த்
தடங்குங் குமநெடுந் தோள்வாணன் மாறையும் தஞ்சையுமே.

கு - ரை : [தலைவன் ஊர் அருகில் உள்ளமையைக் கண்டோர் கூறு தல்] '(அன்பனே!) தோகையும் நீயும் முன் தோன்றுகின்ற கடம் குன்று இரண்டும் கடந்து சென்ருல், மாறையும் தஞ்சையும், கமலத் தடமும்

கிடங்கும் புரிசையும் சூழ்ந்து எதிர் தோன்றும்,' என இயைக்க. தொடங்கும் - (வளர) ஆரம்பிக்கும், பிறை நுதல் - பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய, தோகையும் - மயில் போன்றவளும் (உவமையாகு பெயர்), கடம் - காடும், குன்று - சிறுமலையும், கிளைத்த - (மலர்கள்) நெருங்கிய, பைந்தார் - பசுமையான மாலையை அணிந்த, தடம் - அகலமான, குங்கும நெடுந்தோள் - குங்குமம் பூசிய உயர்ந்த தோள்களையுடைய, மாறையும் தஞ்சையும் - மாறை நாடும் தஞ்சாக்கூரும், தடமும் - குளமும், கிடங்கும் - அகழும், புரிசையும் - மதிலும், தோன்றும் - புலப்படும். அன்பன் - முன்னிலை எச்சம்.

322] தலைவன், தன் பதி அடைந்தமை சாற்றல் [யஅ

'சந்தனம் தோய்ந்து தயங்குமுத் தாரம் தரித்துவிம்மும்
நந்தனம் தாங்கி நடுங்கிடை போல நடந்திங்ஙனே
நொந்தனம் கால்,'என்று நோவல்பொன் னே!ஒரு நோயுமின்றி
வந்தனங் காண்;இது காண்வாணன் மாறை வளநகரே.

து - ரை : [தலைவன், தலைவிக்குத் தன் ஊரைச் சேர்ந்தமையைக் கூறுதல்] 'பொன்னே! "நடந்து இங்ஙனே கால் நொந்தனம்," என்று நோவல்; ஒரு நோயும் இன்றி வந்தனம்; வாணன் மாறை வளநகர் இது; காண்,' என இயைக்க. பொன்னே - இலக்குமி போன்றவளே (உவமையாகு பெயர்), தயங்கு - விளங்குகின்ற, நம் தனம் - நம்முடைய முலைகளை, நோவல் - வருந்தாதே, நோய் - துன்பம், வந்தனம் - வந்தோம் (காண் - முன்னிலை அசை), மாறை - மாறை நாட்டின், வளநகர் - வளப்பம் பொருந்திய நகரம், காண் - பார்ப்பாயாக.

க, ரு -ஆம் கவிகள், போக்கு அறிவுறுத்தலுக்கு உரியவை; உ, சு-ஆம் கவிகள், போக்கு உடன்படாமைக்கு உரியவை; ங, எ - ஆம் கவிகள், போக்கு உடன்படுத்தலுக்கு உரியவை; ச, அ, கூ - ஆம் கவிகள், போக்கு உடன்படுதலுக்கு உரியவை; ய, யக, யஉ - ஆம் கவிகள், போக்கலுக்கு உரியவை; யங, யச - ஆம் கவிகள், விலக்கலுக்கு உரியவை; யச, யரு - ஆம் கவிகள், புகழ்தலுக்கு உரியவை; யஎ, யஅ - ஆம் கவிகள், தேற்றலுக்கு உரியவை.

# 4. கற்பொடு புணர்ந்த கவ்வை

323] செவிலி, பாங்கியை வினுதல் [க

நலம்புனே ஆயமும் நீயும்நற் றுயொடு நானும்நன்பொன்
சிலம்புயர் சோலேயும் சிற்றிலும் பேரிலும் தெண்டிரைமேல்
வலம்புரி ஊர்வயல் சூழ்தஞ்சை வாணனே வாழ்த்தலர்போல்
புலம்புற மாதர்எங் கேமக ளே!தனிப் போயினளே?

து - ரை : 'மகளே ! ஆயமும், நீயும், நற்றுயொடு நானும், சோலேயும், சிற்றிலும், பேரிலும் வாணனே வாழ்த்தலர்போல் புலம்பு உற மாதர் எங்கே தனிப் போயினள் ?' என இயைக்க. நலம் புனே ஆயம் - (தலேவிக்கு) அழகிய அலங்காரத்தைச் செய்யும் தோழியர் கூட்டம், நற்றுயொடு - நற்றுயும் (ஒடு - எண்ணுப் பொருளது), நன்பொன் சிலம்பு - நல்ல அழகிய மலேயில், உயர் - உயர்ந்த, சிற்றில் - (அவள் விளேயாடச் செய்த) சிறு வீடு, பேரில் - (அவள் வாழ்தற்கிடமான) பெரிய வீடு, தெள் திரை - தெளிந்த அலேகள், ஊர் - ஊர்கின்ற, புலம்பு - அரற்றுதல், தனிமை ('ஆயமும் நீயும் நற்றுயும் நானும் அரற்றவும், சோலேயும் சிற்றிலும் பேரிலும் தனிமையை அடையவும்,' எனப் பொருள் கொள்க), மாதர் - அழகியாகிய பெண் (பண்பாகு பெயர் ; அர் - போலி).

324] பாங்கி, செவிலிக்கு உணர்த்தல். [உ

வெறுத்தார்; ஒறுத்துரை மேலும்நம் கேளிர் விழைதல்இன்றி
மறுத்தார் அவற்கு மணம்;அத ஞல்தஞ்சை வாணர்பிரான்
கறுத்தார் புரத்து நடந்தனள் காளேபின்; காமர்கற்பால்
பொறுத்தாள் அழல்சுரந் தன்னேஅன் னுய்!நின் பொலங்கொடியே.

து - ரை : 'அன்னுய் ! நம் கேளிர் வெறுத்தார் ; ஒறுத்துரை மேலும் விழைதல் இன்றி அவற்கு மணம் மறுத்தார் ; அதனுல், நின் பொலம் கொடி, தஞ்சைவாணர் பிரான் கறுத்தார் புரத்துக் காளேபின் நடந்தனள் ; சுரத்து அழல்தன்னேக் காமர் கற்பால் பொறுத்தாள்,' என இயைக்க. கேளிர் - சுற்றத்தார், ஒறுத்துரை - வெறுத்துப் பேசுதல், விழைதல் இன்றி - விரும்புதல் இன்றி, அவற்கு - அத்தலேவனுக்கு, மணம் - மணத்தை, பொலம் கொடி - பொற்கொடி போன்ற பெண், பிரான் - தலேவனுல், கறுத்தார் - கோபிக்கப்பட்டவராகிய பகைவரின் (செயப்பாட்டு வினேப்பொருளில் வந்த செய்வினே), புரத்து - ஊராகிய காட்டில், காளே -

பாலை நிலத் தலைவன், சுரத்து அழல்தன்னை - காட்டின் வெப்பத்தை, காமர் - அழகிய, பொறுத்தாள் - சகித்தாள்.

325] செவிலி, தேற்றுவோர்க்கு எதிர் அழிந்து மொழிதல் [ரு

மாறா வளவயல் சூழ்தஞ்சை வாணன்தென் மாறைஎன்கண்
ஆறா அருந்துயர் ஆற்றுகின் றீர்!அறி வேகொளுத்தி
ஊறா வனகடிந் தென்முலை ஊறமிர் தூட்டிஇன்சொல்
கூறா வளர்த்ததற் கோஎன்னை நீத்ததென் கோல்வளையே!

து - ரை: [செவிலி, தன்னைத் தேற்றுவோர்க்கு எதிராக வருந்திக் கூறுதல்] 'என்கண் ஆறா அருந்துயர் ஆற்றுகின்றீர்! என் கோல் வளை என்னை நீத்தது, அறிவு கொளுத்தி, ஊறு ஆவன கடிந்து, என் முலை ஊறு அமிர்து ஊட்டி, இன்சொல் கூறா வளர்த்ததற்கோ!' என இயைக்க. மாறா - (என்றும்) மாறுபடாத, மாறை - மாறை நாட்டில், என்கண் - என்னிடம், ஆற்றுகின்றீர் - ஆற்றுகின்றவர்களே, கோல் வளை - திரட்சியையுடைய வளைகளை அணிந்தவளாகிய பெண் (அன்மொழித்தொகை), நீத்தது - நீங்கியது, கொளுத்தி - கொள்ளச்செய்து, ஊறு - துன்பம், கடிந்து - விலக்கி, முலை - முலையில், ஊறு - சுரக்கும், அமிர்து - பாலை, கூறா - கூறி, வளர்த்த தற்கோ - வளர்த்ததற்காகவோ. அறிவே - ஏ, அசை.

326] செவிலி, தன் அறிவின்மைதன்னை நொந்து உரைத்தல் [சா

'வழியா வரும்பெரு நீர்த்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
கழியாத அன்புடைக் காளைபின் நாளைக் கலந்துகொண்டல்
பொழியாத வெஞ்சுரம் போகுவல் யான்,'என்று போம்குறிப்பால்
ஒழியாதென் முன்புசொன் னாள்;பேதை யேன்ஒன்றை ஓர்ந்திலனே.

து - ரை: [செவிலி, தன் அறியாமையை நொந்து கூறல்] '(மகள்), "யான் நாளைக் கழியாத அன்புடைக் காளை பின் கலந்து, வாணனை வாழ்த்தலர்போல் வெஞ்சுரம் போகுவல்," என்று, போம் குறிப்பால் ஒழியாது என் முன்பு சொன்னாள்; பேதையேன் ஒன்றை ஓர்ந்திலன்,' என இயைக்க. நாளை - நாளைய தினம், கழியாத - நீங்காத, வழியா - வழிந்து, கொண்டல் - மேகம், பொழியாத - (மழையைப்) பெய்யாத, வெஞ்சுரம் - கொடிய காட்டில், போகுவல் - போவேன், என்று - என்று நினைத்து, போம் குறிப்பால் - (தான்) போகும் குறிப்பினால், ஒழியாது - இடைவிடாமல், என் முன்பு - என் முன்னிலையில், சொன்னாள் - (சில விஷயங்களைப்) பேசினாள், பேதையேன் - அறிவிலியாகிய யான், ஒன்றை - (அவள் அங்ஙனம் பேசிய விஷயங்களில்) ஒன்றையும், ஓர்ந்திலன் - ஆராய்ந்து

அறிந்திலேன். 'ஒன்றையும்' என்பதிலுள்ள இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மகள் - தோன்றா எழுவாய்.

327] செவிலி, தெய்வம் வாழ்த்தல் [ரு

இணங்கிப் புவனத் தெவரும்இல் லாஎன் இளங்கொடியாள்
உணங்கிக் கழிதல் ஒழியஎன் பால்வர உன்னைஅன்பால்
வணங்கிப் பலமுறை வாழ்த்துகின் றேன்தஞ்சை வாணன்தெவ்வை
அணங்கித் திரள்புயத் தான்மல யாசலத் தாரணங்கே!

கு - ரை: 'தெவ்வை அணங்கித் திரள் புயத்தான் தஞ்சை வாணன் மலயாசலத்து ஆரணங்கே! இப்புவனத்து இணங்க எவரும் இல்லா என் இளங்கொடியாள் உணங்கிக் கழிதல் ஒழிய என்பால் வர உன்னை அன்பால் வணங்கிப் பல முறை வாழ்த்துகின்றேன்,' என இயைக்க. தெவ்வை - பகைவரை (பண்பாகு பெயர்), அணங்கி - வருத்தி, திரள் - (அதனால் மிகப் பூரித்துத்) திரண்ட, புயத்தான் - புயத்தையுடையவனாகிய, வாணன் - வாணனது, மலயாசலத்து - பொதிய மலையில் உள்ள, ஆரணங்கே - அரிய தெய்வமே, இணங்க - (தான்) நட்புக்கொள்ள (வினையெச்ச விகுதியாகிய அகரம் விகாரத்தால் தொக்கது), உணங்கி - வாடி, கழிதல் - (பாலை வனத்திற்) போதலை, ஒழிய - நீங்கி (செய்தென் எச்சம் செயவென் எச்சமாய்த் திரிந்தது), என்பால் வர - என்னிடம் வர, வாழ்த்துகின்றேன் - துதிக்கின்றேன். ('அவள் வரின், யான் உனக்குச் சிறப்புச் செய்வேன்,' என்பது அவாய் நிலையால் வந்தது).

328] செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல் [கூ

சகம்நல்க வந்தருள் சந்திர வாணன்தென் தஞ்சைநல்லாய்!
'முகம்நல்கி நல்க முலைகொடுத் தாரின்முத் தம்கொடுத்தார்
மிகநல்லர்,' என்பது மன்பதை தேற விடலைபின்னே
மகம்நல்கும் அந்திஅம கான்நடந் தாள்உன் மடந்தைஇன்றே.

கு - ரை: [செவிலி, நற்றாய்க்கு உடன் போக்கை வெளிப்படுத்திக் கூறுதல்] 'நல்லாய்! இன்று உன் மடந்தை, "முகம் நல்கி நல்க முலை கொடுத்தாரின் முத்தம் கொடுத்தார் மிக நல்லர்," என்பது மன்பதை தேற, மகம் நல்கும் அந்தி விடலை பின்னே அம் கான் நடந்தாள்,' என இயைக்க. சகம் - உலகத்தார் (இடவாகு பெயர்), நல்க - விரும்ப ('நறு மலர்க் கோதாய் நல்கினை கேளாய்' - மணிமே. காதை, 12; அடி, 56), வந்து அருள் - பிறந்தருளிய, தஞ்சை - தஞ்சையிலிருக்கின்ற, முகம் நல்கி - இன்முகம் காட்டி, நல்க - வளர்க்க ('நங்கைமீர் நீருமோர் பெண்பெற்று நல்கினீர்' - திருவாய். 4, 2, 9), முலை கொடுத்தாரின் - பாலூட்டியவ

ரைக்காட்டிலும், முத்தம் கொடுத்தார் - முத்தம் கொடுத்தவராகிய கணவர், மிக நல்லர் - (பெண்டிர்க்கு) மிகவும் நல்லவராவர், மன்பதை - மக்கள் கூட்டம், தேற - தெளிய, மகம் நல்கும் - (தனக்கு) இன்பத்தைத் தரும் (மகம் - இன்பம். யாழ் - அக.), அந்தி - இராப் பொழுதில், விடலை - மணவாளன், அம் கான் - அழகிய காட்டில், நடந்தாள் - சென்றாள். (தலைவிக்குக் காதலனுடன் செல்வதால் இரவு இன்பம் தருவதும் காடு அழகினை உடையதும் ஆயின என்க).

329] நற்றாய், பாங்கியொடு புலம்பல் [எ

முன்னே இதனை மொழிந்தனை யேல்நுந்தை முந்தைமணம்
பின்னேய் குழலி பெருள்அல்ல ளே!பிற ழாதெவர்க்கும்
தன்னேயம் வைத்தரு ளும்தஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பில்
பொன்னே அனையநல் லாய்!அவ மேசுரம் போக்கினையே!

து - ரை : 'நல்லாய்! முன்னே இதனை மொழிந்தனையேல், பின் எய் குழலி நுந்தை முந்தை மணம் பெருள் அல்லளே! அவமே சுரம் போக்கினையே!' என இயைக்க. பிறழாது - (நிலை விட்டுப்) பெயராமல், நேயம் வைத்து அருள் - அன்பை வைத்துக் காக்கும், தமிழ்ச் சிலம்பில் - பொதிய மலையில், பொன்னே - திருமகளே (ஏ-பிரி நிலை), பின் எய் - பின்னல் பொருந்திய, நுந்தை - உம் தந்தையின், முந்தை - முன்னிலையில் (' வந்தடி பொருந்தி முந்தை நிற்பின் ' - புறம். செய். 10; அடி, 5.), மணம் - கலியாணத்தை, பெருள் அல்லளே - பெறுவாளே, அவமே - வீணே, சுரம் - காட்டில், போக்கினையே - (மகளைப்) போகச் செய்தாயே.

330] அது கேட்ட பாங்கி அழுங்கல் கண்டு, நற்றாய் புலம்பல் [அ

இல்லும் கழங்கா டிடங்களும் நோக்கி இரங்கல்;வம்பும்
வல்லும் பொரும்கொங்கை மங்கைநல் லாய்!தஞ்சை வாணன்ஒன்னார்
புல்லும் துணைவியர் போல்,வினை யேன்பெற்ற பூவைஅன்னாள்
செல்லும் சுரத்தழல் அன்றுன்கண் ணீர்என் தெறுகின்றதே.

து - ரை : [அழுங்கல் - வருந்துதல்] 'வம்பும் வல்லும் பொரும் கொங்கை மங்கை நல்லாய்! என் தெறுகின்றது, வினையேன் பெற்ற பூவை அன்னாள் தஞ்சைவாணன் ஒன்னார் புல்லும் துணைவியர் போல் செல்லும் சுரத்து அழல் அன்று; உன் கண்ணீர்; இல்லும் கழங்கு ஆடு இடங்களும் நோக்கி இரங்கல்,' என இயைக்க. வம்பு - கச்சு, வல் - சொக்கட்டான் காய், பொரும் - (ஒன்றோடொன்று) போர் புரிதற்குக் காரணமாகும் (வல்லானது முலையொடு தன்னை ஒப்பு நோக்க வரும்போது வம்பை நோக்கி, ' நீ முலைகளை

மற்றயாதே,' என, வம்பு, 'நீ இம்முலைகளுக்கு ஒப்பாகமாட்டாய்,' என்று அதனை விலக்க, அதனால் இரண்டும் போராடின என்க), என் தெறுகின்றது - என்னை வருத்துகின்றது, வினையேன் - தீவினை செய்த யான், பூவை - நாகணவாய்ப் பறவை, ஒன்னார் - பகைவர், புல்லும் - கூடும், துணைவியர் - மனைவியர், சுரத்து அழல் - பாலைக் காட்டில் உள்ள தீ, உன் கண்ணீர் - உனது கண்ணீரேயாகும். ('கண்ணீரே' என்பதிலுள்ள தேற்றேகாரம் விகாரத்தால் தொக்கது), இல்லும் - (மகள் நடமாடிய) வீட்டையும், கழங்கு ஆடு - கழற்சிக்காய் ஆடிய, இரங்கல் - வருந்தாதே.

331] நற்றாய், பாங்கியரோடு புலம்பல் [கூ

நேயம் புணை துணை ஆகவெங் கானகம் நீந்தல்எண்ணி
ஆயம் புலம்ப அகன்றன ளேகல் அகம்குழைய
மாயம் புகல்ஒரு காளைபின் வாணன்தென் மாறைஅன்னீர்!
சேயம் புயமலர் போல்அடி நோவஎன் சில்வளையே.

து - ரை : 'வாணன் தென் மாறை அன்னீர்! என் சில் வளை, நேயம் புணை துணை ஆக வெங்கானகம் நீந்தல் எண்ணி, சேய் அம்புய மலர் போல் அடி நோவ, ஆயம் புலம்ப, கல் அகம் குழைய, மாயம் புகல் ஒரு காளை பின் அகன்றனளே!' என இயைக்க. சில் வளை - சில வளைகளையுடைய பெண் (பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), நேயம் - அன்பே, புணை துணை ஆக - தெப்பமும் துணையுமாக, வெங்கானகம் - கொடிய காடாகிய வெள்ளத்தை, நீந்தல் எண்ணி - கடத்தலைக்கருதி, சேய் - சிவப்பாகிய ('சேயுற்ற கார்நீர் வரவு'-பரிபா. செய். 11; அடி, 144), ஆயம் - தோழியர் கூட்டம், கல் அகம் குழைய - கல்லைப்போன்ற மனமும் இளகும்படி, மாயம் - பொய்யை, புகல் - சொல்லிய, காளை - உவமையாகு பெயர், அகன்றனளே - (நம்மைப்) பிரிந்து சென்றனளே (ஏ - இரக்கக் குறிப்பு). 'நீந்தல்' என்றதனால் 'வெள்ளம்' என்பது வருவித்து உரைக்கப்பட்டது. 'அகம்' என்பதில் சிறப்பும்மை தொக்கது.

332] நற்றாய், அயலார்தம்மொடு புலம்பல் [ம

மேனாள் வரங்கிடந் தென்போல் வருந்தி மிகவும்மெய்ந்நொந்
தீனா தவர்துன்பம் எய்துவ ரோ,இமை யோர்உலகம்
தானாண நீடும் மதில்தஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பில்
மானார் விழிஅனை யாள்விளை யாடிய வண்டல்கண்டே?

து - ரை : 'என் போல் மேல் நாள் வரம் கிடந்து, வருந்தி, மிகவும் மெய்ந்நொந்து ஈனாதவர், தமிழ்ச்சிலம்பில் மானார் விழி அனையாள் விளையாடிய வண்டல் கண்டு துன்பம் எய்துவரோ?' என இயைக்க.

மேல்நாள் - முன்னளில், வரம் கிடந்து - வரம் வேண்டித் தெய்வ சந்நிதானத்திற்படுத்திருந்து, மெய்ந்நொந்து - உடல்வருந்தி, ஈனுதவர் - (மகளைப்) பெருதவர், இமையோர் - தேவர், நாண-வெட்கப்படும்படி, நீடும் - உயர்ந்திருக்கும், தமிழ்ச்சிலம்பில் - பொதிய மலையில், மானர் - (தோழிப்) பெண்டிர் ('மட்டுப் படாக்கொங்கை மானர் கலவி' - தனிப்பா. கம்பர்.), விழி அனையாள் - கண்ணனையவள், வண்டல் - வண்டல் மண்ணுற்செய்த விளையாட்டுப் பாவையை (கருவியாகு பெயர்), எய்துவரோ - அடைவரோ. ('பெண்ணைப் பெற்றதால் யான் பெருந்துன்பம் எய்தினேன்,' என்றாள் என்க.)

333] நற்றாய், தலைமகள் பயில் இடந்தம்மொடு புலம்பல் [யக

செயலைத் தருவின் திருநிழ லே!பெருஞ் சிற்றில்லமே!
வயலைக் கொடிநொச்சி மண்டப மே!தஞ்சை வாணன்ஒன்னர்
இயலைத் தனித்தனி தந்தன ளேநமக் கின்றிதன்றோ
கயலைப் பொருதகண் ணாள்மேலும் வாழ்விக்கும் கட்டளையே.

து - றை : [நற்றாய், தலைவி பழகி விளையாடும் இடங்களோடு நொந்து கூறுதல்] 'செயலைத் தருவின் திரு நிழலே! பெருஞ்சிற்றில்லமே! வயலைக்கொடி நொச்சி மண்டபமே! கயலைப் பொருத கண்ணாள், நமக்கு இன்று தஞ்சை வாணன் ஒன்னர் இயலைத் தனித்தனி தந்தனளே! மேலும் வாழ்விக்கும் கட்டளை இது அன்றோ!' என இயைக்க. செயலைத் தரு - அசோகமரம், பெருஞ்சிற்றில்லம் - பெருமை பொருந்திய சிறு வீடு, வயலைக்கொடி - வயலைக்கொடி படர்ந்த, நொச்சி - மதிலையுடைய, இயலை - (துன்புறுதலாகிய) தன்மையை, மேலும் - இனியும், கட்டளை-முறைமை.

334] நிமித்தம் போற்றல் [யஉ

வடியேய் புகர்முக வாள்வல வாணன்தென் மாறையுள்யான்
அடியே தொழும்தெய்வ மாகநின் பேணி அரும்பலிஇப்
படியே தருகுவல் என்றும்;இன் னேஇப் பதிஉவகைக்
கொடியே! வரக்கரை நீ,கொடி யேன்பெற்ற கொம்பினையே.

து - றை : [நற்றாய், நற்சகுனமாகக் கரையும் காக்கையைத் துதித்தல்] 'இப்பதி உவகைக் கொடியே! நீ கொடியேன் பெற்ற கொம்பினை இன்னே வரக்கரை; யான் அடி தொழும் தெய்வமாக நின் பேணி, இப்படியே என்றும் அரும்பலி தருகுவல்,' என இயைக்க. இப்பதி - இவ்வூரில் வாழும், உவகைக் கொடியே - மகிழ்ச்சியையுடைய காகமே, கொம்பினை - பூங்கொம்பு போன்ற மகளை (உவமையாகு பெயர்), இன்னே வர - இப்பொழுதே திரும்பி வரும்படி, கரை - அழைப்பாயாக ('அஞ்சில்

ஓதியை வரக்கரைந் தீமே.' - ஐங்குறு. செய். 391), வடி எய் - கூர்மை பொருந்திய, புகர்முகம் - ஒளி வாய்ந்த முகத்தையுடைய, வாள் வல - வாட் போரில் வல்ல, மாறையுள் - மாறை நாட்டில், அடி தொழும் தெய்வமாக - வழிபடு கடவுளாக, நின் பேணி - உன்னைப் போற்றி, அரும்பலி - (சோறு முதலிய) அருமையான பலிகளை, தருகுவேன் - தருவேன். 'காகம் கரைந் தால் ஊர்க்குப்போயினர் வருவர்,' என்னும் உலகியல்பு பற்றி இங்ஙனம் கூறினள் என்க. அடியே - ஏ, அசை.

335] சுரம் தணிவித்தல் [யஙு

வெஞ்சுர நாடு வியன்சுர லோகமும் வெங்கடுங்கான்
ஐஞ்சுர தாரு வனங்களும் ஆக, அகில்புகைபோல்
மஞ்சுர வாடக மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
பஞ்சுரம் ஆகும் மொழிச்சுருள் ஓதிஎன் பைந்தொடிக்கே.

து - ரை : [நற்றாய், சுரத்தின் வெம்மை குளிர்ந்திருக்க வேண்டுதல்] 'அகில் புகை போல் மஞ்சு உறவாடு அக மா மதில் சூழ் தஞ்சை வாணன் வெற்பில் பஞ்சுரம் ஆகும் மொழிச் சுருள் ஓதி என் பைந்தொடிக்கு வெஞ் சுர நாடு வியன் சுர லோகமும், வெங்கடுங்கான் ஐஞ்சுர தாரு வனங்களும் ஆக. மஞ்சு - மேகம், உறவாடு - தவழ்கின்ற (எதுகை நோக்கி வல்லின றகரம் இடையின ரகரமாயிற்று), அகம் - இடத்தையுடைய, மாமதில் - பெரிய மதில், பஞ்சுரம் ஆகும் - **பஞ்சுரம்** என்னும் பண்ணுக்கு ஒப்பான, மொழி - சொல்லையும், சுருள் ஓதி - சுருண்ட கூந்தலையுமுடைய, பைந்தொடிக்கு - பசுமையான வளையலையணிந்த மகளுக்கு (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), வெஞ்சுர நாடு - வெப்பமான பாலை நிலம், வியன் - விசாலமான, சுர லோகமும் - தேவருலகமும், வெங்கடுங்கான் - மிகுந்த கடுமையாகிய காடு, ஐஞ்சுர தாரு - (சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்னும்) ஐந்து தெய்வ விருட்சங்களையுடைய, வனங்களும் ஆக - சோலைகளும் ஆகக் கடவன.

336] தன் மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல் [யசு

*தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத் தண் அனிச்சப்
பூமேல் மிதிக்கின் பதைத்தடி பொங்கும்நங் காய்எரியும்
தீமேல் அயில்போல் செறிபரல் கானில் சிலம்படிபாய்
ஆமே நடக்க அருவினை யேன்பெற்ற அம்மனைக்கே!

* திருக்கோவையார், செய். 228. இங்கு 'அரக்காம்பல்' (நாலடியார், செய். 396.) எனத் தொடங்கும் செய்யுள் சில பிரதிகளில் காட்டப்பட்டுள்ளது..

து - ரை : [நற்றாய், தன் மகளின் மென்மைத் தன்மைக்கு ஆற்றாது வருந்துதல்] 'நங்காய்! அருவினையேன் பெற்ற அம்மனைக்கு அடி தண் அனிச்சப்பூமேல் மிதிக்கின் பதைத்துப் பொங்கும்; எரியும் தீமேல் அயில் போல் செறி பரல் கானில் சிலம்பு அடி பாய் நடக்க ஆமே!' என இயைக்க. நங்காய் - பெண்களுட்சிறந்த தோழியே, அருவினையேன் - தீவினையை உடைய யான், அம்மனைக்கு - தாய்க்கு (மகளைத் தாய் என்றது உவப்பினால் வந்த **மரபு வழுவமைதி** என்க. நன். சூ. 379), அடி - பாதங்கள், தாமே தமக்கு ஒப்பு மற்று இல்லவர் தில்லை - தாமே தமக்கு ஒப்பாக வேறோர் ஒப்பில்லாதவரது தில்லையில் (தில்லை - சிதம்பரம்; இத்தலம் பண்டு தில்லை மரக் காடாயிருந்தமையின், இப்பெயர் பெற்றது என்பர்.), தண் - குளிர்ச்சி பொருந்திய, அனிச்சப்பூ - மிகவும் மென்மை வாய்ந்த ஒரு வகை மலர் ('மோப்பக் குழையும் **அனிச்சம்**' - குறள். செய். 90), மிதிக்கின் - மிதித்தாலும் (உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது), பதைத்துப் பொங்கும் - நடுங்கி வீங்கும், எரியும் தீமேல் அயில் போல் - எரியும் நெருப்பில் பதித்த வேலைப்போல, செறி பரல் - நெருங்கிய பருக்கைக் கற்களையுடைய, சிலம்பு அடி - சிலம்பை அணிந்த அப்பாதங்களை, பாய் - பாவி, நடக்க ஆமே - நடக்க இயலுமோ.

337] இளமைத்தன்மைக்கு உளம் மெலிந்து இரங்கல் [யரு

இரும்பாம் மனம்கொண்ட வாறென்னை நீ?'தன்னை ஏத்திஎன் றும்
வரும்பா வலர்க்கருள் வாணன்தென் மாறை வளவயலில்
கரும்பார் மொழியாய்! அழல்,'என்று கண்ணீர் துடைத்தணைத்துன்
அரும்பா முலைசெய்ய வாய்ப்பசும் பாவைக் களிக்கும்மின்னே!

து - ரை : [நற்றாய், தலைவியின் இளமைத்தன்மைக்கு மனம் சோர்ந்து வருந்துதல்] '"தன்னை எத்தி வரும் பாவலர்க்கு என்றும் அருள் வாணன் தென் மாறை வள வயலில் கரும்பு ஆர் மொழியாய்! அழல்," என்று கண்ணீர் துடைத்து அணைத்து உன் அரும்பா முலை செய்ய வாய்ப் பசும் பாவைக்கு அளிக்கும் மின்னே! நீ இரும்பு ஆம் மனம் கொண்ட ஆறு என்னை?' என இயைக்க. எத்தி - துதித்து, என்றும் - ('இது தகுந்த சமயம் அன்று' எனக் கருதாமல்) எக்காலத்திலும், அருள்-(பரிசிலை) அளிக்கின்ற, வயலில் - வயலில் வளரும், கரும்பு ஆர் மொழியாய் - கரும்பு போன்ற இனிய சொல்லை உடைய பாவையே, அழல் - (நீ) அழாதே, கண்ணீர் - (அப்பாவையினிடம் நீ பொய்யாகக் கற்பித்துக்கொண்ட) கண்ணீரை, அரும்பா - தோன்றாத, செய்ய வாய் - செப்பமான வாயை உடைய, பசும்பாவைக்கு - அழகிய பொம்மைக்கு, மின்னே - மின்னலைப்போன்ற மகளே (உவமையாகு பெயர்), இரும்பு ஆம் மனம் - (நீ என்னைப் பிரிந்து

செல்ல) இரும்பைப்போன்ற மனத்தை, கொண்ட - ஏற்படுத்திக்கொண்ட, ஆறு - முறைமை, என்னே - எப்படி.

338] அச்சத்தன்மைக்கு அச்சம் உற்று இரங்கல் [யகூ

'நாள்மா தவிமலர் நாறிருங் கூந்தல் நடந்தவழிக்
கோள்மா குமிறும் கொடுங்குரல் கேள்தொறும் கூர்ங்கணையால்
வாள்மா முனைவென்ற வாணன்தென் மாறை மணிவரைவேய்த்
தோள்மா வெருவுங்கொல் லோ!' என்றென் ஆருயிர் சோர்கின்றதே!

கு - ரை : [நற்றாய், தலைவியின் பயப்படுந்தன்மையை நினைந்து, அதற்காகத் தான் பயந்து வருந்துதல்] நாள் மாதவி மலர் - புதிய குருக்கத்தி மலர், நாறு - வாசனை வீசுகின்ற, இருங்கூந்தல் - கரிய கூந்தலை உடைய மகள் (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), நடந்த வழி - சென்ற வழியில், கோள் மா - கொலை செய்யும் மிருகங்கள், குமிறும் - கோபித்து முழங்கும், கேள்தொறும் - கேட்கும்போதெல்லாம், முனை - போர், மணி வரை - அழகிய மலையிலுண்டான, வேய்த்தோள் மா - மூங்கில் போலும் தோளையுடைய இலக்குமி போல்பவள், வெருவுமோ - பயப்படுவளோ (கொல் - அசை), என் ஆருயிர் - எனது அரிய உயிர், சோர்கின்றது - வாடுகின்றது.

339] ஆயமும் தாயும் அழுங்கக் கண்டோர், காதலின் இரங்கல் [யஎ

நொந்தும் கலுழ்ந்தும் துணைவியர் ஆற்றலர் நோக்கொடின்சொல்
தந்தும் கவையும் தணந்துசென் றாள்எனத் தாள்பணியார்
மைந்தும் கதமும் கடிந்தருள் வாணன்தென் மாறைஅன்னாள்
பந்தும் கழங்கும்எல் லாம்கண்டு வாடும் பயந்தவளே.

கு - ரை : [தோழியர் கூட்டமும் நற்றாயும் வருந்தக்கண்ட அயலார், அன்பினால் வருந்துதல்] 'துணைவியர், நோக்கொடு இன்சொல் தந்தும் கவையும் தணந்து சென்றாள் என நொந்தும் கலுழ்ந்தும் ஆற்றலர்; பயந்தவள், மாறை அன்னாள் பந்தும் கழங்கும் எல்லாம் கண்டு வாடும்,' என இயைக்க. துணைவியர் - தோழியர், நோக்கொடு இன்சொல் தந்தும் - (தம்மைப் பார்க்கும் குளிர்ந்த) பார்வையோடு இனிய சொல்லைத் தந்ததையும் ('தந்ததும்' என்பது 'தந்தும்' என விகாரப்பட்டு நின்றது. எதைப் போல எனின், 'பாலொடு தேன்கலந் தற்றே' [குறள். செய். 1121] என்பதில் 'கலந்தது' என்பது 'கலந்து' என நின்றது போல என்க), கவையும் - அலரையும், தணந்து - விட்டு நீங்கி, கலுழ்ந்தும் - அழுதும், ஆற்றலர் - ஆற்றாராயினர், பயந்தவள் - (தலைவியைப்) பெற்றவளாகிய நற்றாய், பணியார் - வணங்காதவருடைய, மைந்தும் - வலிமையையும், கதமும் - சினத்

தையும், கடிந்து - போக்கி, அருள் - (உலகத்திற்கு நன்மையைச்) செய்த, மாறை அன்னாள் - மாறை நாட்டைப் போன்றவளாகிய தலைவியின், கழங்கும் - கழற்சிக் காயையும், எல்லாம் - மற்றுமுள்ள யாவற்றையும், வாடும் - வாடுவாள்.

340] செவிலி, ஆற்றாத் தாயைத் தேற்றல் [யஅ

நன்றே இதென்று முகம்முகம் நோக்கி நகைநகையா
மன்றே அலர்சொல்லும் மாதர்முன் னேதஞ்சை வாணன்தொல்சீர்
சென்றே பரந்த திசைகள்எல் லாம்சென்று தேர்ந்தணங்கை
இன்றே தருவன்;அன் னே!வருந் தாதிங் கிருந்தருளே.

து - றை : [செவிலி, ஆற்றாத நற்றாயைத் தேறும்படி கூறுதல்] 'அன்னே ! அலர் சொல்லும் மாதர் முன்னே திசைகள் எல்லாம் சென்று தேர்ந்து, அணங்கை இன்றே தருவன் ; வருந்தாது இங்கு இருந்தருள்,' என இயைக்க. அன்னே - தாயே, இது நன்றே என்று - (இவள் ஒருவன் பின்னே சுரம் போன செயலாகிய) இது நன்றாயிருந்தது என்று கூறி, முகம் முகம் நோக்கி - ஒருவர் முகத்தை ஒருவர் முகம் பார்த்து, நகை நகையா - சிரிப்பாய்ச் சிரித்து, மன்று - வெளியில், அலர் சொல்லும் - பழி மொழியைப் பேசும், மாதர் முன்னே - பெண்டிர் முன்னிலையில், தொல்சீர் - பழங்கீர்த்தி, பரந்த - பரவிய, தேர்ந்து - தேடி, அணங்கை - தெய்வப்பெண்போல்வாளாகிய உன் மகளை (உவமையாகு பெயர்), இன்றே தருவன் - இன்றைக்கே அழைத்து வருவேன். 'இது நன்றே,' என்னும் குறிப்புப் பரிகசித்தலைக் குறித்தலின், தீதை உணர்த்தி நின்றது. நகையா - 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினை எச்சம்.

341] ஆற்றிடை முக்கோல் பகவரை வினைதல் [யகூ

ஒருவெண் குடைஇரு நீழல்முக் கோல்கொண் டொழுக்கத்தினல்
அருவெங் களரியைந் தாறுசெல் வீர்!அரு ளீர்;எழுபார்
மருவெண் திசைபுகழ் வாணன்தென் மாறைஎன் வஞ்சிஅன்னாள்,
பொருவெஞ் சுடர்இலை வேல்ஒரு காளைபின் போயினளே?

து - றை : [செவிலி, தேடிச் செல்லுகையில் வழியில் எதிர்ப்பட்ட திரிதண்ட அந்தணரை வினவுதல்] 'ஒரு வெண்குடை இரு நீழல் முக் கோல் கொண்டு ஒழுக்கத்தினல் அருவெங்களர் இயைந்து ஆறு செல்வீர் ! எழு பார் மருவு எண் திசை புகழ் வாணன் தென் மாறை என் வஞ்சி அன்னாள், பொரு வெஞ்சுடர் இலை வேல் ஒரு காளை பின் போயினளே ? அருளீர்,' என இயைக்க. குடை - குடையின், இரு நீழல் - பெரிய நிழலில், முக்கோல் - திரிதண்டத்தை, ஒழுக்கத்தினல் - ஆசாரத்தினல், அருவெங் களர் - (நடப்பதற்கு) அரிய வெப்பமான களர் நிலத்தில், இயைந்து -

பொருந்தி, ஆறு செல்வீர் - வழிச்செல்லும் அந்தணர்களே, பார் - உலகம், மருவு - பொருந்திய, எண்திசை - எட்டுத்திக்கில் உள்ளவரும் (இடவாகு பெயர்), மாறை - மாறை நாட்டிலுள்ள, வஞ்சி - வஞ்சிக்கொம்பு, பொரு- போர் செய்யும், இலைவேல் - அலகு வடிவான வேலையுடைய, போயினளே - சென்றனளோ (ஏ - வினா), அருளீர் - தயை கூர்ந்து சொல்லுவீராக. இக்கவி, **எண் அலங்காரம்** என்னும் அணி.

**342]** மிக்கோர், ஏதுக் காட்டல் [உய

'இயங்கா வனம்என் மகள்ஒரு காளைபின் ஏகினள்!'என்
றுயங்கா தொழி;அஃ துலகியல் பால்;உல வும்புயல்தோய்
வயங்கா டகமதில் சூழ்தஞ்சை வாணன் மணம்கமழ்தார்ப்
புயம்காதல் கொண்டணைந் தாள்அய னார்தந்த பூமகளே.

து - ரை: [ஒழுக்கத்தால் உயர்ந்தோராகிய முக்கோற்பகவர், 'அஃது உலக இயல்பு,' என்று காரணம் காட்டிக் கூறுதல்] '(அன்னாய்!) "என் மகள் இயங்கா வனம் ஒரு காளை பின் ஏகினள்!" என்று உயங்காது ஒழி; அஃது உலக இயல்பு; அயனார் தந்த பூமகள் தஞ்சை வாணன் மணம் கமழ் தார்ப்புயம் காதல் கொண்டு அணைந்தாள்,' என இயைக்க. இயங்கா வனம் - ஒருவரும் சஞ்சரியாத காட்டில்; காளை - உவமையாகு பெயர், உயங்காது ஒழி - வருந்தாதொழி, அஃது - அப்படிச் செல்வது, ('யாங்ஙனம்?' எனில்) அயனார் தந்த - பிரமதேவர் சிருட்டித்த, பூ மகள் - பூமி தேவி, உலவும் - (வானத்தில்) சஞ்சரிக்கும், புயல் - மேகம், தோய் - படிந்த, வயங்கு - விளங்குகின்ற, ஆடக மதில் - பொன் மயமான மதில், தார்ப்புயம் - மாலையை அணிந்த தோள்களை, காதல் கொண்டு - விரும்பி, அணைந்தாள் - புணர்ந்தனள். ஆல் - அசை. இக்கவி, **ஏதுவணி.**

**343]** செவிலி, எயிற்றியொடு புலம்பல் [உக

செருமகள் ஏயும் புயத்தய லான்பின் செலவிடுத்தென்
ஒருமக ளேஎன் றுனைஅயிர்த் தேன்;புனை ஓவியம்போல்
வருமக ளே!தஞ்சை வாணன்ஒன் னார்துன்னும் வன்சுரத்தோர்
அருமக ளே!உரை யாய்அவள் போன அதர்எனக்கே.

து - ரை: [செவிலி, பாலை நிலப் பெண்ணாகிய மறத்தியுடன் புலம்பிக் கூறுதல்] 'புனை ஓவியம்போல் வரும் மகளே! வன்சுரத்தோர் அரு மகளே! செரு மகள் ஏயும் புயத்து அயலான் பின் செல விடுத்த என் ஒரு மகளே என்று உனை அயிர்த்தேன்; எனக்கு அவள் போன அதர் உரையாய்,' என இயைக்க. புனை - அலங்கரித்த, ஓவியம் - சித்திரப்பாவை, துன்னும் - நெருங்கும், வன் சுரத்தோர் - வலிய காட்டிலுள்ளோராகிய மறவருக்கு, அருமகளே - அருமையான புதல்வியே, செரு மகள் ஏயும் -

வீர மகள் பொருந்தியிருக்கும், புயத்து - தோள்களையுடைய, விடுத்த - விட்ட (பெயரெச்ச விகுதி விகாரத்தால் தொக்கது), அயிர்த்தேன் - சந்தேகித்தேன், அதர் - வழியை.

344] செவிலி, குரவோடு புலம்பல் [உஉ

'இரவேய் குழலி!இவ் வேதிலன் பின்செல்லல்,' என்றுசொல்லாக்
குரவே! அறவும் கொடியைகண் டாய்;கொடிக் கோகனகம்
தரவே யெனவந்த சந்திர வாணன் தரியலர்போம்
சுரவேய் அழல்வழி யேதனிப் போயஎன் தோகையையே.

து - ரை: [குரவு - குரா மரம்] 'கொடிக்கோகனகம் தர எயென வந்த சந்திர வாணன் தரியலர் போம் சுர வேய் அழல் வழியே தனிப்போய என் தோகையை, "இரவு எய் குழலி! இவ்வேதிலன் பின் செல்லல்," என்று சொல்லாக் குரவே! அறவும் கொடியை!' என இயைக்க. தொடிக் கோகனகம் தர - வண்மைக்கொடியை உயர்த்திய **பதும நிதி** என்னுந் தெய்வப்பொக்கிஷம் போல யாசிப்பவர்க்கு அவர் வேண்டுவனவற்றைக் கொடுக்க, எயென - விரைவாக (விரைவுக்குறிப்பு. 'ஏயெனு மாத்திரத்து' - கம்பரா. பள்ளி. செய். 72), தரியலர் - பகைவர், சுரம் - காட்டில், வேய் அழல் - மூங்கிலிற்பிறந்த நெருப்பையுடைய, தோகையை - மயிலைப்போன்ற மகளை (உவமையாகு பெயர்), இரவு எய் - இருளைப் போன்ற, ஏதிலன் - அயலான், செல்லல் - போகாதே, அறவும் கொடியை - (நீ) மிகவும் கொடுமையை உடையை, கண்டாய் - முன்னிலையசை.

345] சுவடு கண்டு இரங்கல் [உரு

தொடுசிலைக் கானவர் ஓடிய வேற்றுச் சுவடுவையே;
அடுசிலைக் காளை அடிஅவை யே;அறிந் தோர்அறிய
இடுசிலைப் பார்புரக் கும்தஞ்சை வாணன் இசைக்குருகப்
படுசிலைப் பாவை பதம்இவை யே;வண்டு பாடுகவே.

து - ரை: [செவிலி, நிலத்திற்படிந்த தலைவன் தலைவியரின் பாதக் குறியைக் கண்டு வருந்திக் கூறுதல்] 'அறிந்தோர் அறிய இடுசிலைப் பார் புரக்கும் தஞ்சை வாணன் இசைக்கு உருகு அப்படுசிலைப் பாவை பதம் இவையே; வண்டு பாடு உகத் தொடுசிலைக் கானவர் ஓடிய வேற்றுச் சுவடு உவையே; அடுசிலைக் காளை அடி அவையே,' என இயைக்க. அறிந்தோர் அறிய - (தன் வீரத்தை) அறிவுடையோர் அறியும்படி, இடு சிலை - வெற்றியாலிட்ட ஜய ஸ்தம்பத்தையுடைய, பார் - பூமியை, தஞ்சை வாணன் - தஞ்சை வாணனது, இசைக்கு உருகு அப்படுசிலைப் பாவை - (இராவணனைப் பிணிக்க அகத்திய முனிவர் பாடிய) இராகத்துக்கு உருகிய அந்தப்

பெரிய மலையாகிய பொதிய மலையிலுள்ள பாவை போன்ற என் மகளின், பதம் - பாதக்குறிகள் (கருவியாகு பெயர்), வண்டு - அம்புகள், பாடு உக - (தங்கள்) பக்கத்தில் சிந்த, தொடுசிலைக் கானவர் - அம்பு தொடுக்கும் வில்லை உடைய வேடர், வேற்றுச் சுவடு - வேறுபட்ட பாதக்குறிகள், உவையே - சிறிது தூரத்தில் உள்ளவைகளே, அடு சிலை - (வழிபறி செய்வோராகிய வேடரை) வருத்துகின்ற வில்லையுடைய, காளை - காளை போலும் தலைவனுடைய (உவமையாகு பெயர்), அடி - பாதக்குறிகள் (கருவியாகு பெயர்).

வழிபறி வேடர் தலைவனை எதிர்த்து நிற்க இயலாது பல திசைகளிலும் ஓடினராதலின், அவர்தம் பாதக்குறிகள் வேறுபட்டுத் தோன்றின என்க. இக்கவி, பூட்டு வில் அலங்காரம் (மாறன். சூ. 175.)

**346]** செவிலி, கலந்து உடன் வருவோர்க் கண்டு கேட்டல் [உச

**யா**னகம் போத வருந்தநம் போல்வனப் பெய்திவெய்ய
கானகம் போயினர் கண்டனி ரோகற்ப காடவிசூழ்
வானகம் போர்பயில் வானவற் கீந்தருள் வாணன்தஞ்சைத்
தேனகம் போருக மாதனை யாளுமோர் செல்வனுமே?

து - றை: [செவிலி, அன்பு கலந்து வழியில் வரும் காதலர் இருவரைக் கண்டு வினவுதல்] 'தஞ்சைத் தேன் நகு அம்போருக மாது அனையாளும் ஓர் செல்வனும், நம் போல் வனப்பு எய்தி, யான் அகம் போத வருந்த வெய்ய கானகம் போயினர்; கண்டனிரோ?' என இயைக்க. கற்ப காடவி - (கற்பக + அடவி) கற்பகச் சோலை, வானகம் - தெய்வ லோகத்தை, போர் பயில் வானவற்கு - போர் செய்யும் சேரனுக்கு, தஞ்சை - தஞ்சாக்கூரில் உள்ள, தேன் நகு-தேன் கட்டவிழ்ந்த, அம்போருக மாது-தாமரையிலுள்ள இலக்குமி, வனப்பு எய்தி - அழகு பொருந்தி, அகம் - மனம், போத - மிக, கண்டனிரோ - (அவர்களை) நீவிர் கண்டீரோ.

**347]** அவர், புலம்பல் தேற்றல் [உரு

**யா**ன்கண்ட அண்ணலும், எண்ணருங் காதலின் ஏகியஎன்
மான்கண் டனகண் மயில்கண்ட மாதரும், மாதருமம்
தான்கண்ட தண்ணளிச் சந்திர வாணன் தரியலர்போம்
கான்கண்ட மெய்குளி ரப்பொய்கை சூழ்தஞ்சை காண்பர்களே.

து - றை: [அக்காதலர் இருவரும் செவிலி புலம்புதலைத் தேற்றிக் கூறுதல்] 'யான் கண்ட அண்ணலும், என் மான் கண்டன கண் மயில் கண்ட எண்ணருங்காதலின் ஏகிய மாதரும், சந்திர வாணன் தரியலர் போம் கான் கண்ட மெய் குளிரப் பொய்கை சூழ் தஞ்சை காண்பர்கள்,' என இயைக்க. அண்ணல் - தலைவன், கண்டன - கண்டாற்போலும்,

மயில் - மயிலைப்போன்ற காதலி (உவமையாகு பெயர்), காதலின் - காதலினால், ஏகிய - (தலைவன் பின்) சென்ற, மாதர் - அழகி (பண்பாகு பெயர்), மா - பெரிய, தண் அளி - குளிர்ச்சியான கிருபையையுடைய, தரியலர் - பகைவர், கான் - காட்டை, மெய் - உடல், பொய்கை - குளம், தஞ்சை - தஞ்சாக்கூரை.

தலைவி, தலைவன் காணும் தன்மையளன்றிப் பிற ஆடவர் காணும் தன்மையள் அல்லளாதலின், 'என் மயில் கண்ட மாதர்' எனக் கூறினன் என்க. இதனை,

'மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி!'

என்னும் திருக்குறளாலும் (1119) அதன் உரையாலுமுணர்க.

348] செவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தல் [உசு

நாணினும் தாரணி கற்புநன் றென்கை நயந்தமுத்தம்
பூணினும் பாரம்இ தென்னும்என் பொன்னைஇப் போதெனக்குச்
சேணினும் சார்புகழ் வாணன்தென் மாறைமன் சேரலரைக்
காணினும் காணஅந் தோ!அரி தால்இந்தக் கானிடையே.

து - ரை: [கூர்தல் - மிகுதல்] 'தாரணி, "நாணினும் கற்பு நன்று," என்கை நயந்த முத்தம் பூணினும், "பாரம் இது," என்னும் என் பொன்னை இப்போது எனக்கு இந்தக் கானிடை மாறை மன் சேரலரைக் காணினும், அந்தோ! காண அரிது,' என இயைக்க. தாரணி - பூமியிலுள்ளார் (இடவாகு பெயர்), என்கை - என்பதை, நயந்த - விரும்பிய, முத்தம் - முத்து மாலை (கருவியாகு பெயர்), பாரம் - சுமை, பொன்னை - (மெல்லிய இயல்பினையுடைய) இலக்குமி போலும் மகளை (உவமையாகு பெயர்), கானிடை - காட்டில், சேண் - சுவர்க்கம் ('சேண்மக பதிக்கு நல்கி' - கந்தபு. திருநக. செய். 105), சார் - சார்ந்த, மன் - மன்னனுடைய, சேரலரை - பகைவரை, காணினும் - பார்த்தாலும் (உம் - காணுதலின் அருமை தோன்ற நின்றது), அந்தோ - ஐயோ (இரக்கக் குறிப்பு), ஆல் - அசை.

ங, ச, ரு-ஆம் கவிகள், செவிலி புலம்பற்கு உரியவை (க, உ-ஆம் கவிகளும் அநுவாதத்தால் கொள்ளப்படும்); எ, அ, கூ, ய, யக-ஆம் கவிகள், நற்றாய் புலம்பற்கு உரியவை (சு-ஆம் கவியும் அநுவாதத்தால் கொள்ளப்படும்); யஉ, யங, யச, யரு, யசு-ஆம் கவிகள், மனை மருட்சிக்கு உரியவை (மனை மருட்சி - நற்றாய் மயக்கம். 'மனை எனினும் நற்றாய் எனினும் ஒக்கும்'-இலக். சூ. 537 உரை); யஎ-ஆம் கவி, கண்டோர் இரக்கத்திற்கு உரியது; யஅ, யகூ, உய, உக, உஉ, உங, உச, உரு, உசு-ஆம் கவிகள், செவிலி பின் தேடிச் சேறற்கு உரியவை.

# 5. மீட்சி

349] தலைவி சேண் அகன்றமை, செவிலி, தாய்க்கு உணர்த்தல் [க

*ஏடார் மலர்க்குழல் வல்லியை அன்னை! இத் தீவினையேன்
நாடா இடம்இல்லை ஞாலத் தகல்வயின்; நன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்
வாடா வளமனைக் கொண்டுசென் றான்ஒரு வள்ளல்இன்றே.

து - ரை: [தலைவி தலைவனுடன் தூரத்திலுள்ள அவன் ஊர்க்குச் சென்றதைச் செவிலி நற்றாய்க்குத் தெரிவித்தல்] 'அன்னை! இத்தீவினையேன் ஏடு ஆர் மலர்க்குழல் வல்லியை ஞாலத்து அகல்வயின் நாடா இடம் இல்லை; இன்று ஒரு வள்ளல் நன்கமலக் காடு ஆர் பழனக் கழனி நல் நாடு கடந்து, தன் வாடா வளமனைக் கொண்டு சென்றான்,' என இயைக்க. அன்னை - அண்மை விளி, இத்தீவினையேன் - இப்பாவியாகிய யான், ஏடு ஆர் - இதழ்கள் பொருந்திய, மலர்க்குழல் - மலரைச் சூடிய கூந்தலையுடைய, வல்லியை - (நின்) கொடி போலும் மகளை (உவமையாகு பெயர்), ஞாலத்து அகல்வயின் - பூமியின் விசாலமான இடத்தில், நாடா - தேடாத, வள்ளல் - ஈகைக்குணம் உடையான், கமலக்காடு - தாமரை மலர்க்காடு, பழனம் - வயல்களையுடைய, கழனி - மருத நிலமாகிய, ஊர் - ஊரிலுள்ள, வாடா வள மனை - குறையாத வளப்பத்தையுடைய வீட்டில், கொண்டு சென்றான் - அழைத்துக்கொண்டு போனான்.

350] தலைவன், தம் ஊர் சார்ந்தமை சாற்றல் [உ

நினையான் எதிர்ப்பட்ட நீடிருங் குன்றிது; நீகுடைந்த
சுனையாம் அது;மலர்ச் சோலைக ளாம்உவை; தூயவண்டல்
மனையாம் இவை;இனி வாணன்தென் மாறையை வாழ்த்தலர்போல்
இனையா தெழுந்தருள் மான்அனை யாய்!நம் எழில்நகர்க்கே.

து - ரை: 'மான் அனையாய்! இது, யான் நினை எதிர்ப்பட்ட நீடு இருங்குன்று; அது, நீ குடைந்த சுனை ஆம்; உவை, மலர்ச் சோலைகள் ஆம்; இவை, தூய வண்டல் மனை ஆம்; இனி, வாணன் தென் மாறையை வாழ்த்தலர்போல் இனையாது, நம் எழில் நகர்க்கு எழுந்தருள்,' என இயைக்க. நினை - உன்னை, எதிர்ப்பட்ட - சந்தித்த, நீடு - உயர்ந்த, இருங் குன்று - பெரிய குன்று, உவை - முன்னே காணப்படுபவை, தூய - குற்றமில்லாத, வண்டல் மனை - விளையாட்டுச் சிற்றில்லங்கள் (மனை - பால் பகா அஃறிணைப் பெயர்), இனையாது - வருந்தாமல், எழில் - அழகையுடைய.

* அம்பிகாபதி கோவை, செய். 408.

தான் அவள் என்னும் வேற்றுமை இன்மையால், தலைவன் தலைவியின் நகரை 'நம் எழில் நகர்' என்றான் என்க.

351] தலைவி, முன் செல்வோர்தம்மோடு தாம் வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தல் [௫

புனையலர் ஏதிலர் காதல்அம் தாயர் பொறுமையின்போய்
இனைதுயர் யாதொன்றும் இன்றிவெங் கான்இகந் தியானும்அம்பொன்
வினைகழ லானும் வருவதெல் லாம்சென்று வாணன்தஞ்சைத்
துனைவுடன் ஏகுகின் றீர்!சொல்லு வீர்என் துணைவியர்க்கே.

து - ரை : 'வாணன் தஞ்சைத் துனைவுடன் ஏகுகின்றீர்! சென்று; புனை அலர் ஏதிலர் காதல் அம் தாயர் பொறுமையின் போய், இனை துயர் யாதொன்றும் இன்றி வெங்கான் இகந்து, யானும் அம்பொன் வினை கழலானும் வருவது எல்லாம் என் துணைவியர்க்குச் சொல்லுவீர்,' என இயைக்க. தஞ்சை - தஞ்சைக்கு, துனைவு - விரைவு, சென்று - (நீவிர்) போய், புனை அலர் ஏதிலர் - புனைந்து கூறும் அலர் மொழிகளையுடைய அயலாரும், தாயர் - தாய்மாரும் (ஆகிய இவர்களுடைய), பொறுமையின் - பொறுமையினால், இனை துயர் - வருந்தும் துன்பம் (வினைத்தொகை), இகந்து - நீங்கி, பொன் வினை கழலானும் - பொன்னால் செய்த வீர கண்டையை அணிந்த தலைவனும், வருவது எல்லாம் - வருவதாகிய செய்தி முற்றும், துணைவியர்க்கு - தோழியர்க்கு.

352] முன் சென்றோர், பாங்கியர்க்கு உணர்த்தல் [௪

போதலர்ந் தல்லை முனியும்மெல் ஓதிப் புனையிழைதன்
காதலன் பின்வரக் கண்டனம் யாம்கண்டல் வேலிமுந்நீர்
மாதலந் தன்னிரு தோள்வைத்த வாணன்தென் மாறைவண்ணச்
சூதலந் தொல்கவிம் மித்திரள் மாமுலைத் தோகையரே!

து - ரை : 'வண்ணச் சூது அலந்து ஒல்க விம்மித் திரள் மா முலைத் தோகையரே! யாம், போது அலர்ந்து அல்லை முனியும் மெல் ஓதிப் புனை இழை, தன் காதலன் பின் வரக் கண்டனம்,' என இயைக்க. கண்டல் - தாழையை, வேலி - வேலியாக உடைய, முந்நீர் - கடல் சூழ்ந்த, மா தலம் - பெரிய உலகத்தை, மாறை - மாறை நாட்டில், வண்ணச்சூது - அழகையுடைய சொக்கட்டான் காய், அலந்து ஒல்க - துன்பமுற்றுச் சுருங்கும்படி, விம்மி - பூரித்து, மா முலை - பெரிய முலைகளையுடைய, தோகையரே - மயிலைப்போலும் தோழியரே, போது - மலர்கள், அலர்ந்து - மலர்ந்து, அல்லை - இருளை, முனியும் - கோபித்து நீக்கும், மெல் ஓதிப் புனை இழை - மெல்லிய குழலையும் அலங்கரித்த ஆபரணங்களையுமுடையாள் (பன்மொழித்தொடர்ப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை). 'மாதலம்

தன் இரு தோள் வைத்த வாணன்' என்றது, தன் தோள் வலியால் பூமியைக் காத்தவன் என்றபடி.

353] பாங்கியர் கேட்டு, நற்றாய்க்கு உணர்த்தல் [ரு

வாளேய் விழிநின் மயில்அனை யாள்தஞ்சை வாணன்வெற்பில்
வேளே அனைய விடலைபின் னேசுரம் மீண்டினிநம்
கேளேய் பதிவரும் என்னநல் லோர்சொல்லக் கேட்டனம்;இந்
நாளே அனையநன் னாள்உள வோசென்ற நாள்களிலே.

து - ரை: '(அன்னாய்!) வாள் எய் விழி நின் மயில் அனையாள், தஞ்சை வாணன் வெற்பில் வேள் அனைய விடலை பின்னே சுரம் மீண்டு இனி நம் கேள் எய் பதி வரும் என்ன நல்லோர் சொல்லக் கேட்டனம்; சென்ற நாள்களில் இந்நாள் அனைய நல் நாள் உளவோ?' என இயைக்க. வாள் எய் - வாள் போன்ற, மயில் அனையாள் - மயிலைப்போன்றவளாகிய மகள், வேள் - மன்மதன், விடலை - பாலை நிலத்தலைவன், சுரம் மீண்டு - காட்டிலிருந்து திரும்பி, இனி - இன்று, கேள் - சுற்றத்தார் (பண்பாகு பெயர்), எய் - தங்கியுள்ள, பதி வரும் - நகரில் வருவாள், உளவோ - இருக்கின்றனவோ. வேளே, நாளே, நாள்களிலே - ஏ, ஈற்றசை.

354] நற்றாய் கேட்டு, அவன் உளம் கொள வேலனை வினாதல் [சு

தென்மாறை நன்னகர் மன்னவன் வாணன் செழுந்தஞ்சைசூழ்
பொன்மா திரத்துப் புலன்உணர் வீர்!சுரம் போய்வருவோன்,
என்மானை என்மனை யில்தரு மோ,தன்னை ஈன்றநற்றாய்
தன்மா நகர்உய்க்கு மோ?சொல்லு வீர்ஒன்று தான்எனக்கே.

து - ரை: [நற்றாய், பாங்கியர் கூறியதைக் கேட்டுத் தலைவன் மனக் கருத்தை அறிந்துகொள்ள வெறியாட்டாளனைக் கேட்டல்] 'பொன் மாதிரத்துப் புலன் உணர்வீர்! சுரம் போய் வருவோன், என் மானை என் மனையில் தருமோ, தன்னை ஈன்ற நற்றாய்தன் மாநகர் உய்க்குமோ? எனக்கு ஒன்று சொல்லுவீர்,' என இயைக்க. தஞ்சை சூழ் - தஞ்சையைச் சூழ்ந்த, பொன் - அழகிய, மாதிரத்து - திக்கிலுள்ளவர்களின் (இடவாகு பெயர்), புலன் - (நினைக்கும்) அறிவை, உணர்வீர் - அறிபவரே, வருவோன் - வருபவனாகிய தலைவன், மானை - மானைப்போன்ற மகளை (உவமையாகு பெயர்), மனையில் தருமோ - வீட்டில் கொண்டு வருவனோ, உய்க்குமோ - கொண்டு போவனோ ('வேட்டுவர் உய்த்தன ரோவென' - சீவக. செய். 425), ஒன்று - (இவ்விரண்டில்) ஒன்றை.

க, உ - ஆம் கவிகள், தேளித்தற்கு உரியவை; ந, ரு - ஆம் கவிகள், மகிழ்ச்சிக்கு உரியவை; சு - ஆம் கவி, வினாதற்கு உரியது; ச - ஆம் கவி, சேப்பற்கு உரியது.

## 6. தன் மனை வரைதல்

355] நற்றாய், மணன் அயர் வேட்கையின் செவிலியை வினுதல் [க

*தாமாக மேவினும் நம்மனைக் கேவந்து தண்சிலம்பர்
மாமா தினைமணம் செய்வதற் கேமரு வார்கமலப்
பூமாது கேள்வன் புகழ்த்தஞ்சை வாணன் பொருப்பில்இனி
ஆமா றுயிர்அனை யாய்!சொல்வ மோஅவர் அன்னையர்க்கே?

து - ரை: [தலைவியின் நற்றாய், தன் மனையில் மணம் செய்யும் விருப்பினுல் செவிலியை வினவுதல்] 'உயிர் அனையாய்! தண் சிலம்பர், தாமாக மேவினும், நம் மனைக்கே வந்து மா மாதினை மணம் செய்வதற்கு இனி ஆமாறு அவர் அன்னையர்க்குச் சொல்வமோ ?' என இயைக்க. தண் சிலம்பர் - குளிர்ச்சி பொருந்திய குறிஞ்சி நிலத்தலைவர், மேவினும் - மீண்டு வரினும்; மனைக்கே - வீட்டுக்கே, மா மாதினை - (நம்) பெருமை பொருந்திய மகளை, மரு ஆர் - வாசனை பொருந்திய, கமலப்பூ மாது - இலக்குமியின், கேள்வன் - கணவனுகிய, பொருப்பில் - மலையில், இனி - இனிமேல், ஆம் ஆறு - மனம் இயையும்படி. மனைக்கே, செய்வதற்கே - ஏ, தேற்றம். தஞ்சை வாணனைக் 'கமலப் பூமாது கேள்வன்' என்று திருமாலாகக் கூறியது 'பூவை நிலை' என்னும் புறத்துறை பற்றி என்க.

356] செவிலிக்கு இதுவும், வரைந்தமை உணர்த்தல் [உ

என்னும் இயம்புவ தாய்க்கினி நாம்அன்னை! இன்றுதம்இல்
கொன்னுரும் நித்திலக் கோதைநம் மாதைக் கொடிநெடுந்தேர்க்
கன்னுடர் மண்கொண்ட வாணன்தென் மாறையில் காதலர்தாம்
நன்னுள் மணம்புணர்ந் தார்என்று தூதர் நவின்றனரே.

து - ரை: [தலைவன் தன் வீட்டில் மணம் செய்துகொண்டதைத் தோழி செவிலிக்கு அறிவித்தல்] 'அன்னை! இன்று காதலர்தாம் நம் கொன் ஆரும் நித்திலக்கோதை மாதை மாறையில் தம் இல் நல் நாள் மணம் புணர்ந்தார் என்று தூதர் நவின்றனர்; இனி நாம் ஆய்க்கு இயம்புவது என் ஆம்?' என இயைக்க. அன்னை - அண்மை விளி, கொன் ஆரும் - பெருமை பொருந்திய, நித்திலக் கோதை - முத்து மாலையைத் தரித்த, மாதை - பெண்ணை, கன்னுடர் - கன்னட நாட்டரசரின், மண் - நாட்டை, கொண்ட - (வென்று) கைக்கொண்ட, இல்-வீட்டில், நல் நாள் - நல்ல நாளில், மணம் புணர்ந்தார் - கலியாணம் செய்துகொண்டார், தூதர் - (அவரிட

---

* இது சுன்னுகம் திரு. அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் பதிப்பாகிய அகப்பொருள் விளக்கத்திற்கண்ட மேற்கோள்.

மிருந்து வந்த) தூதர்கள், நவின்றனர் - சொன்னார்கள், இனி - இனிமேல், ஆய்க்கு - நற்றாய்க்கு, என் ஆம் — என்ன பயனை உடையது ஆகும்.

357] வரைந்தமை, செவிலி, நற்றாய்க்கு உணர்த்தல் [ரு

எனைக்கே ளிரும்நின் றியற்ற,அங் கேமண இன்பம்எய்தி,
அனைக்கேண்மை நண்ணிய அண்ணல்பின் னாகநம் அன்னை இன்றிம்
மனைக்கே வரும்என வந்துசொன் னார்தஞ்சை வாணன்வெற்பில்
சுனைக்கேழ் நனைக்கழு நீர்க்குழ லாய்!சில தூதர்இன்னே.

கு - ரை : [வரைந்தமை - (தலைவன்) மணம் செய்துகொண்டதை] 'தஞ்சை வாணன் வெற்பில் சுனைக்கேழ் நனைக்கழுநீர்க் குழலாய்! இன்னே சில தூதர் வந்து, நம் அன்னை எனைக்கேளிரும் நின்று இயற்ற, அங்கே மண இன்பம் எய்தி, அனைக்கேண்மை நண்ணிய அண்ணல் பின்னாக இன்று இம் மனைக்கு வரும் எனச்சொன்னார்,' என இயைக்க. வெற்பில் - மலையிலுள்ள, சுனைக்கேழ் நனைக் கழுநீர் - சுனையில் பூத்த தேனையுடைய கருங்குவளை மலரைச் சூடிய, இன்னே - இப்போதே, எனைக்கேளிரும் - எல்லாச் சுற்றத்தாரும், நின்று - (மணப்பந்தலில் வந்து) தங்கி, இயற்ற - (மணச்சடங்கைச்) செய்ய, அங்கே - (தலைவன் ஊராகிய) அவ்விடத்தில், எய்தி - அடைந்து, அனைக்கேண்மை நண்ணிய - அத்தகைய நட்புப் பொருந்திய, அண்ணல் பின்னாக - தலைவன் பின்னே, வரும் - வருவள். மகளை 'அன்னை' என்று கூறியது காதல் பற்றி வந்த மரபு வழுவமைதி என்க. 'பின்னாக' என்பதில் 'ஆக' என்பது பிரிவில் அசைநிலை. (தொல். சொல். இடை. சூ. 32).

358] தலைவன், பாங்கிக்கு, 'யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு,' என்றல் [சு

கோபுரம் சோலை கொடிமதில் மாடம் குலாவிமையோர்
மாபுரம் போலும்தென் மாறை வரோதயன் வாணன்வெற்பில்
நீபுரந் தேதந்த மாதைஅங் கியான்வரை நீர்மை பொன்செய்
நூபுரம் சூழ்அடி யாய்!சென்று கூறு நுமர்தமக்கே.

கு - ரை : 'பொன் செய் நூபுரம் சூழ் அடியாய்! வாணன் வெற்பில் நீ புரந்து தந்த மாதை அங்கு யான் வரை நீர்மை நுமர்தமக்குச் சென்று கூறு,' என இயைக்க. நூபுரம் - சிலம்பு, கோபுரம் சோலை கொடி மதில் மாடம் குலாவு - கோபுரமும் சோலையும் கொடியும் மதிலும் உபரிகையமைந்த வீடும் விளங்குகின்ற; இமையோர் - தேவர்களின் (காரணப்பெயர்), மா புரம் - (அமராவதி என்னும்) பெருமை பொருந்திய நகரத்தை, மாறை - மாறை நாட்டில், புரந்து - பாதுகாத்து, தந்த - (எனக்குக்) கொடுத்த, அங்கு - (என் ஊராகிய) அவ்விடத்தில், வரை நீர்மை - மணந்த தன்மையை (வினைத்தொகை), நுமர்தமக்கு - உம் சுற்றத்தார்க்கு.

359] பாங்கி, தான் அது முன்னே சாற்றியது உரைத்தல் [ரு

அன்னைக் கியம்பினன் ஆண்தகை! யான்முன் அறிந்துதென்னன்
தன்னைப் பணிந்துகுற் றேவல்செய் யாது சமர்க்கெதிர்ந்த
மன்னைப் புறங்கண்ட வாணன்தென் மாறை வரையில்எங்கள்
பொன்னைப் புணர்ந்துநம் கேள்முன்னர் நீபொன் புனைந்ததுவே.

கு - ரை : 'ஆண் தகை! நீ மாறை வரையில் எங்கள் பொன்னைப் புணர்ந்து, நம் கேள் முன்னர்ப் பொன் புனைந்தது யான் முன் அறிந்து அன்னைக்கு இயம்பினன்,' என இயைக்க. ஆண் தகை - பெருமையிற்சிறந்தவனே (அண்மை விளி), தென்னன் தன்னை - பாண்டியனை, சமர்க்கு - போருக்கு, மன்னை - அரசனை, புறங்கண்ட - தோல்வியுற்று ஓடச் செய்த, பொன்னை - இலக்குமி போன்ற தலைவியை (உவமையாகு பெயர்), புணர்ந்து - கூடி, கேள் - சுற்றத்தார் (பண்பாகு பெயர்), முன்னர் - முன்னிலையில், பொன் புனைந்தது - திருமங்கலியம் பூட்டியதை.

க - ஆம் கவி, வினவுதலுக்கும்; உ, ந, ரு - ஆம் கவிகள், செப்பலுக்கும்; ச - ஆம் கவி, மேவுதலுக்கும் உரியவை.

## 7. உடன் போக்கு இடையீடு

360] நீங்தும் கிழத்தி, பாங்கியர்க்குத் தன் செலவு உணர்த்தி விடுத்தல் [க

வளவேய் மிடைந்த வழிப்படர் வீர்!செங்கை வாணன்தஞ்சைத்
தளவேய் நகைஎன் துணைவியர் பால்சென்று சாற்றுமின்,'போர்க்
களவேள் அனையஓர் காளைபின் போயினள் கான்பனிநீத்
திளவேனில் வல்லிபெற் றுங்கெவ்வம் நீத்தெழில் எய்தி,'என்றே.

கு - ரை: [தன் ஊரை விட்டு நீங்கும் தலைவி, எதிர் வருபவரொடு தலைவனுடன் செல்லும் தன் செலவைத் தோழியர்க்கு உணர்த்தி விடுத்தல்] 'வழிப்படர்வீர்! என் துணைவியர்பால் சென்று, "வல்லி, பனி நீத்து இளவேனில் பெற்றுங்கு, எவ்வம் நீத்து, எழில் எய்தி, போர்க்கள வேள் அனைய ஓர் காளை பின் கான் போயினள்," என்று சாற்றுமின்,' என இயைக்க. வள வேய் மிடைந்த - வளப்பம் பொருந்திய மூங்கில்கள் நெருங்கிய, வழி - வழியில், படர்வீர் - செல்பவர்களே, தளவு ஏய் நகை - முல்லை மலரை ஒத்த பற்களையுடைய, துணைவியர்பால் - தோழியரிடம், வல்லி - கொடியானது, பனி நீத்து - பனிக்காலத்தைக் கழித்து, இளவேனில் - இளவேனிற்காலத்தை, பெற்றுங்கு - அடைந்தாற் போல, எவ்வம் - துன்பத்தை, எழில் எய்தி - அழகை அடைந்து, போர்க்கள வேள் அனைய - யுத்த பூமியில் தோன்றிய முருகக் கடவுளை ஒத்த, கான் - காட்டில், போயினள் - (உங்கள் தலைவி) சென்றனள், சாற்றுமின் - சொல்லுங்கள். 'எவ்வம்' என்றது, தலைவிக்குச் சுற்றத்தார் செய்த துன்பத்தைக் குறிப்பாற் கூறியதென்க. தலைவனைப் 'போர்க்கள வேள் அனைய காளை' என்றது, அவன் தன் கையில் வேலைத் தாங்கிச் சென்றதால் என்க.

361] தலைமகள், தன் செலவு ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தல் [உ

வாயார நுங்களை வாழ்த்துகின் றேன்;தஞ்சை வாணன்வெற்பில்
சாயாத மாதவத் தாழ்சடை யீர்!அன்பர் தம்மொடின் றியான்
சேயாறு தேர்மிசைச் செல்வதெல் லாம்எங்கள் சேரியில்சென்
றியாயா கியகொடி யாட்கினி தாக இயம்புமினே.

கு - ரை: 'தஞ்சை வாணன் வெற்பில் சாயாத மாதவத் தாழ் சடையீர்! நுங்களை வாயார வாழ்த்துகின்றேன்; எங்கள் சேரியில் சென்று, இன்று யான் அன்பர் தம்மொடு சேய் ஆறு தேர்மிசைச் செல்வது எல்லாம் யாய் ஆகிய கொடியாட்கு இனிது ஆக இயம்புமின்,' என இயைக்க. சாயாத - அழியாத, தாழ் சடையீர் - நீண்டு தொங்கும் சடைகளையுடைய

அந்தணரே, வாய் ஆர - வாய் நிறைய, சேரி - ஊர், அன்பர்தம்மொடு - (என்) காதலருடன், சேய் ஆறு - நெடுவழி, தேர்மிசை - தேரில், யாய் ஆகிய - தாயாகிய, கொடியாட்கு - கொடியவளுக்கு, இனிது ஆக - இன்பம் உண்டாகும்படி, இயம்புமின் - சொல்லுங்கள். 'இனிது ஆக' என்றது, குறிப்பாற்கூறிய வெறுப்பு மொழி என்க.

362] நற்றாய்க்கு அந்தணர் மொழிதல் [ரு

மருள்கொண்ட சிந்தை மலைகிழ வோய்!தஞ்சை வாணன்வெற்பில்
வெருள்கொண்ட மென்பிணை வென்றகண் ணாள்வென்றி வேல்வலம்கை
அருள்கொண்ட நெஞ்சின்ஓர் அண்ணல்பின் னேஅகன் றாள்அகல்வான்
இருள்கொண்ட கொண்டல்செல் லாவரை சூழும் இருஞ்சுரத்தே.

து - ரை : 'தஞ்சை வாணன் வெற்பில் மருள் கொண்ட சிந்தை மலை கிழவோய்! வெருள் கொண்ட மென்பிணை வென்ற கண்ணாள், வென்றி வேல் வலம்கை அருள் கொண்ட நெஞ்சின் ஓர் அண்ணல் பின்னே அகல் வான் இருள் கொண்ட கொண்டல் செல்லா வரை சூழும் இருஞ் சுரத்து அகன்றாள்,' என இயைக்க. மருள் - ('மகளைக் காணவில்லையே!' என்னும்) மயக்கம், மலை கிழவோய் - மலைக்கரசியே, வெருள் - மனக்கலக்கம், மென் பிணை - மென்மைத் தன்மை வாய்ந்த பெண் மானை, வென்ற - (தன் பார்வையால்) வெற்றி கொண்ட, கண்ணாள் - கண்களையுடையவளாகிய உன் மகள், வலம் கை - வலக்கையையும், நெஞ்சின் - மனத்தையுமுடைய, அண்ணல் - தலைவன், அகல் வான் - விசாலமான ஆகாயத்தில், இருள் - கருநிறம், கொண்டல் - மேகம், செல்லா - (ஒருபோதும்) செல்லாத, வரை - மூங்கில்கள், இருஞ்சுரத்து - பெருங்காட்டில். தலைவன் தலைவியினிடம் மிகுந்த இரக்கமுடையவனைக் காணப்பட்டமையின், 'அருள் கொண்ட நெஞ்சின் அண்ணல்' என்றனரென்க.

363] தமர் பின் சேறலைத் தலைவி கண்டு, தலைவற்கு உணர்த்தல் [ச

உவலைப் பதுக்கை முரம்புசெல் லாமல் உலகமங்கை
தவலைத் தவிர்த்த தமிழ்த்தஞ்சை வாணன் தரியலர்போம்
கவலைக் கடத்துச் சிலைத்திரை கோலிக் கடும்பகழித்
துவலைப் படைக்கடல் தோன்றல்!பொன் தேர்வங்கம் சூழ்கின்றதே.

து - ரை : [நிகழ்ந்ததை அந்தணரால் அறிந்த நற்றாய், அதனைக் குறிப்பாகத் தெரிவிக்க, அறிந்த சுற்றத்தார் தன்னை மீட்டுச் செல்லப் பின் பற்றி வருதலைத் தலைவி கண்டு தலைவனுக்கு உணர்த்துதல்] 'தோன்றல்! கடும்பகழித் துவலைப் படைக்கடல், வாணன் தரியலர் போம் கவலைக் கடத்துச் சிலைத் திரை கோலி, பொன் தேர் வங்கம் சூழ்கின்றது,' என

இயைக்க. தோன்றல் - தலைவனே (அண்மை விளி), கடும்பகழித்துவலை - கடிய அம்பாகிய துவலைகளையுடைய, படைக்கடல் - (எம்மவர்) சேனையாகிய சமுத்திரம், உவலைப்பதுக்கை முரம்பு செல்லாமல் - தழைகளோடு கூடிய சிறு தூறுகள் மூடி மேடாகாமல், உலக மங்கை - நிலமாகிய பெண்ணின், தவலை - (வளம் நீங்குதலாகிய) கேட்டை, தரியலர் - பகைவர், கவலை - கவர் வழிகளையுடைய, கடத்து - காட்டில், சிலைத் திரை கோலி - வில்லாகிய அலைகளை உண்டாக்கி, பொன் தேர் வங்கம் - (உனது) அழகிய தேராகிய கப்பலை. இக்கவி, இயைபு உருவக அணி.

364] தலைமகளைத் தலைமகன் விடுத்து அகறல் [௫

ஆறலை வெஞ்சிலைக் கானவ ரேல்,என்கை அம்பொன்றினால்
நூறலை அஞ்சலென்; நுண்ணிடை யாய்!நம ரேல்,அவர்முன்
சேறலை அஞ்சுவல்; செல்லல்;பைம் பூகச் செழும்பழுக்காய்த்
தாறலை தண்டலை சூழ்தஞ்சை வாணன் தமிழ்வெற்பிலே.

து - ரை : [தலைவன்; பின் பற்றி வருபவர் தலைவியின் சுற்றத்தாராதலின், அவரொடு போர் புரிய விரும்பாமல் தலைவியை விட்டுச் செல்லுதல்] 'நுண்ணிடையாய்! தஞ்சை வாணன் தமிழ் வெற்பில் ஆறு அலை வெஞ்சிலைக் கானவரேல், என் கை அம்பு ஒன்றினால் நூறலை அஞ்சலென்; நமரேல், அவர் முன் சேறலை அஞ்சுவல்; செல்லல்,' என இயைக்க. பைம்பூகச் செழும்பழுக்காய்த் தாறு அலை - பசுமையான பாக்கு மரத்தின் செழுமையான பாக்குக்குலைகள் காற்றால் அசையும், தண்டலை சூழ் - சோலை சூழ்ந்த, தமிழ் வெற்பில் - பொதிய மலையில், ஆறு அலை - வழிபறிக்கின்ற, வெஞ்சிலைக் கானவரேல் - கொடிய வில்லையுடைய வேடரானால், நூறலை - (அவர்களை) அழித்தலை, அஞ்சலென் - அஞ்சேன், நமரேல் - நம் சுற்றத்தாரானால், சேறலை - செல்லுதலை, அஞ்சுவல் - அஞ்சுவேன், செல்லல் - (ஆதலால் நீ என்னுடன்) செல்லுதலை ஒழி (எதிர்மறை ஏவல் வினைமுற்று).

365] தமருடன் செல்பவள், அவன் புறம் நோக்கிக் கவன்று ஆற்றல் [௬

ஏமான் எனஅஞ்சும் என்காதலின்,அவ் விரவிபொன்தேர்
வாமானின் வாழ்வன வாகபன் னாள்;தஞ்சை வாணன்ஒன்னார்
போமான் அதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே.

து - ரை : [சுற்றத்தாருடன் செல்பவளாகிய தலைவி, தலைவன் புறங்காட்டிப் போதலை நோக்கி வருந்தித் தேறுதல்] 'தஞ்சை வாணன் ஒன்னார் போம் மான் அதர் இடத்து என்னையர் தோன்றப் புறங்கொடுத்த கோமான் மணி நெடுந்தேர் நுகம் பூண்ட குரகதம், ஏமான் என அஞ்சும்

என் காத்தலின், அவ்விரவி பொன் தேர் வாமானின் பல் நாள் வாழ்வன ஆக!' என இயைக்க. ஒன்னார் - பகைவர், மான் அதர் இடத்து - மான் சஞ்சரிக்கும் வழி இடத்தில், என்னையர் - என் தந்தை தமயன்மார், புறங் கொடுத்த - (அன்பால்) புறங்கொடுத்துச் சென்ற, கோமான் - தலைவனது, மணி நெடுந்தேர் - அழகிய பெரிய தேரின், நுகம் பூண்ட - நுகத்திற் பூட்டிய, குரகதம் - குதிரைகள், ஏமான் என - அம்பைக்கண்ட மான்போல, என் காத்தலின் - என்னைக் காத்தலால், அவ்விரவி - அச்சூரியனுடைய, வாமானின் - (வாவும்+மான்) தாவிச்செல்லும் குதிரைகளைப்போல, பல் நாள் - நெடுங் காலம், வாழ்வன ஆக - வாழக்கடவன.

க, உ, ஙு-ஆம் கவிகள், போக்கு அறிவுறுத்தலுக்கு உரியவை; ச-ஆம் கவி, வரவு அறிவுறுத்தலுக்கு உரியது; ரு-ஆம் கவி, நீக்கத்துக்கு உரியது; சு-ஆம் கவி, இரக்கமோடு மீட்சிக்கு உரியது.

## 8. வரைதல்

366] வரைந்தழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல் [க

சேலார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன்தென் மாறையில்நம்
வேலான் எனப்பிறர் வேட்டவர் யார்மணம்? வெண்துகிலின்
பாலார் அமளியும் பாற்கடல் ஆனது; பங்கயக்கண்
மாலா யினன்இவ னும்;திரு ஆயினள் மாதருமே.

து - ரை : [தலைவன் மணம் செய்துகொண்ட போது அதனைக் கண்டவர் மகிழ்ந்து கூறுதல்] 'சேல் ஆர் புனல் வையை சூழ் தஞ்சை வாணன் தென் மாறையில் நம் வேலான் என மணம் வேட்டவர் பிறர் யார்? வெண் துகிலின் பால் ஆர் அமளியும் பாற்கடல் ஆனது; இவனும், பங்கயக்கண் மால் ஆயினன்; மாதரும், திரு ஆயினள்,' என இயைக்க. சேல் ஆர் - கயல் மீன்கள் பொருந்திய, புனல் - நீரையுடைய, வேலான் என் - வேலைத்தாங்கிய தலைவனைப்போல, மணம் வேட்டவர் - மணத்தை விரும்பியவர், வெண் துகிலின் - (விரிப்பாகிய) வெள்ளிய வஸ்திரத்தினையுடைய, பால் ஆர் அமளியும் - வெண்ணிறம் பொருந்திய படுக்கையும், பாற்கடல் - (திருமால் பள்ளிகொண்ட) பாற்கடலை, இவனும் - இத்தலைவனும், பங்கயக் கண் மால் - செந்தாமரை மலர் போலும் திருக்கண்களையுடைய திருமால், மாதரும் - இவ்வழகியாகிய தலைவியும் (பண்பாகு பெயர்), திரு - இலக்குமி. இக்கவி, ஆர்வ மொழி அலங்காரம்.

### வரைவியல் முற்றிற்று

# ௩. கற்பியல்

## 1. இல் வாழ்க்கை

367] தலைவன், தலைவி முன் பாங்கியைப் புகழ்தல் [க

நின்மேல் அடுத்த பசலையின் காரணம் நின் துணைவி
என்மேல் அடுத்த இயல்பின் அன்றோபெற்ற தேழ்உலகும்
தன்மேல் அடுத்த புகழ்த்தஞ்சை வாணன் தமிழ்க்கிரிநண்
பொன்மேல் அடுத்தன பொன்சுணங் கீன்ற புணர்முலையே!

கு - ரை : 'ஏழ் உலகும் தன்மேல் அடுத்த புகழ்த் தஞ்சை வாணன் தமிழ்க்கிரி நண் பொன்மேல் அடுத்தன பொன் சுணங்கு ஈன்ற புணர் முலையே! பெற்றது, நின் துணைவி, நின்மேல் அடுத்த பசலையின் காரணம் என்மேல் அடுத்த இயல்பின் அன்றோ?' என இயைக்க. அடுத்த - சேர்த்த, தமிழ்க்கிரி - பொதிய மலையானது, நண் பொன் - நட்பமான பொன் துகள், மேல் அடுத்தன - (தன்)மேல் சேர்ந்தாற்போன்ற, பொன் சுணங்கு - பொன்னிறமான அழகு தேமலை, ஈன்ற - பெற்ற, புணர்முலையே - நெருங்கிய முலைகளையுடைய காதலியே (பன்மொழித் தொடர்ப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), பெற்றது - (நாம் இருவரும் இல் வாழ்க்கையை) அடைந்தது, நின் துணைவி - உன் தோழியானவள், நின்மேல் அடுத்த பசலையின் காரணம் - உன்மேல் நெருங்கிய பசலை நீங்கும் காரணமாக, என்மேல் அடுத்த - என்மேல் நெருங்கிய, இயல்பின் அன்றோ- (அன்பின்) முறைமையினால் அல்லவா. 'உன் தோழி எனக்குப் பல வகையிலும் உதவிசெய்யாதிருந்தால் நாம் இவ்வில்வாழ்க்கையைப் பெறுதல் இயலாது,' என்றான் தலைவன் என்க.

368] தலைவனைப் பாங்கி வாழ்த்தல் [உ

தெரியா டகஇதழ்ப் பூங்கொன்றை வேணியும் தேவியும்போல்
பிரியா துறையப் பெறுகுதி ரால்பிறை மானும்நெற்றிப்
புரியாழ் நிகர்மொழிப் பூவையும் நீயும் புணர்ந்தபல்கேழ்
வரியார் சிலைஅண்ண லே!தஞ்சை வாணன்தென் மாறையிலே.

கு - ரை : 'பல் கேழ் புணர்ந்த வரி ஆர் சிலை அண்ணலே! தஞ்சை வாணன் தென்மாறையில், பிறை மானும் நெற்றிப் புரி யாழ் நிகர் மொழிப்

பூவையும் நீயும், தெரி ஆடக இதழ்ப் பூங்கொன்றை வேணியும் தேவியும் போல் பிரியாது உறையப் பெறுகுதிர்,' என இயைக்க. பல் கேழ் புணர்ந்த - பல நிறங்களை உடைய, வரி ஆர் - கட்டுதல் பொருந்திய, சிலை - வில்லையுடைய, பிறை மானும் - பிறைச் சந்திரனைப் போலும், புரி யாழ் நிகர் - நரம்பு கட்டிய யாழின் இசையைப் போன்ற (யாழ் - கருவி யாகு பெயர்), பூவை - நாகணவாய்ப் பறவைபோலும் தலைவி (உவமையாகு பெயர்), தெரி ஆடக இதழ்ப் பூங்கொன்றை வேணி - தெரிந்தெடுத்த பொன் போன்ற இதழ்களையுடைய அழகிய கொன்றைப் பூவைத் தரித்த சடையையுடையவராகிய சிவபெருமான் (அன்மொழித் தொகை), தேவி - (உமையாகிய அவர்) மனைவி, பிரியாது உறையப் பெறுகுதிர் - (எந்நாளும்) பிரியாதிருக்கப் பெறுவீர். ஆல் - அசை. இக்கவி, **வாழ்த்தணி.**

369] பாங்கி, தலைவியை, 'வரையும் நாள் அளவும் வருந்தாது இருந்தமை உரையாய்,' என்றல் [ரு

**கோங்கநல் மாமுகைக் கொங்கைநல் லாய்!மணம் கூடும்எல்லை**
**யாங்கனம் ஆற்றி இருந்தனை நீ,இப மாசயிலம்**
**தாங்கனம் ஆறத் தலம்புனை வாணன் தமிழ்த்தஞ்சைவாழ்**
**பூங்கனம் ஆர்குழ லார்அலர் மாலைப் பொறைசுமந்தே ?**

து -ரை: 'நல்லாய்! நீ மணம் கூடும் எல்லை தஞ்சை வாழ் பூங் கனம் ஆர் குழலார் அலர் மாலைப் பொறை சுமந்து யாங்கனம் ஆற்றி இருந் தனை?' என இயைக்க. கோங்கம் நல் மா முகை - கோங்கின் நல்ல பெரிய அரும்பைப் போன்ற, எல்லை - அளவு, இபம் - (எட்டுத் திக்கிலுமிருந்து பூமியைத் தாங்கும்) யானைகளும், மா சயிலம் - பெரிய குலமலைகளும், தாம்- தாங்கள், கனம் ஆற - (பூமியின்) பாரம் தணியும்படி, தலம் - பூ பாரத்தை, புனை - தரித்த, வாழ் - வாழ்கின்ற, பூங்கனம் ஆர் குழலார் - அழகிய மேகம் போலும் கூந்தலையுடைய பெண்டிரின், அலர்மாலைப் பொறை - பழிச்சொல் லாகிய மயக்கந் தரும் சுமையை, ஆற்றி இருந்தனை - சகித்திருந்தாய்.

370] பெருமகள் உரைத்தல் [சு

**மைதோய்ந் தலர்ந்த மலர்த்தடம் சூழ்தஞ்சை வாணன்ஒன்னார்**
**மெய்தோய்ந்த செந்நிற வேல்விழி யாய்!துயர் வெள்ளம்வெற்பர்**
**கைதோய்ந் தளிப்ப அசோகத்த வாய்நிறம் கால்வனவாய்**
**நெய்தோய்ந் தனதழை யேபுணை யாக்கொண்டு நீந்தினனே.**

து - ரை: [தலைவி, தான் வருந்தாதிருந்ததற்குக் காரணத்தைத் தோழிக்குக் கூறுதல்] 'வேல் விழியாய்! வெற்பர் கை தோய்ந்து அளிப்ப அசோகத்த ஆய், நிறம் கால்வன ஆய், நெய் தோய்ந்தன

தழையே புணையாக் கொண்டு துயர் வெள்ளம் நீந்தினன்,' என இயைக்க. மை தோய்ந்து - கருமை நிறம் பொருந்தி, அலர்ந்த - மலர்ந்த, மலர் - கருங்குவளை மலரையுடைய, தடம் - குளம், ஒன்னார் - பகைவரின், மெய் தோய்ந்த - உடலிற் புதைந்த, செந்நிற வேல் - சிவந்த நிறத்தை உடைய வேலைப் போன்ற, கை தோய்ந்து - கை தொட்டு, அளிப்ப - கொடுக்க, அசோகத்த ஆய் - அசோகம் என்னும் பெயரினை உடையனவாய், நிறம் கால்வன ஆய் - (பசுமை) நிறத்தை வெளி விடுவனவாய், நெய் தோய்ந்தன - புழுகில் தோய்ந்தாற்போன்ற, தழையே - (சந்தனத்) தழையையே, புணையா - தெப்பமாக, துயர் வெள்ளம் - துயரமாகிய வெள்ளத்தை, நீந்தினன் - கடந்தேன்.

371] தலைவனைப் பாங்கி, வரையும் நாள் அளவும் நிலை பெற ஆற்றிய நிலைமை வினாதல் [ரு

*வரையும்இந் நாள்அள வெவ்வாறு நீர்எம் மடந்தைமுகை
புரையும்மென் கொங்கை பிரிந்திருந் தீர்,முன் பொருப்பெடுத்தே
நிரையும்இஞ் ஞாலமும் காத்தருள் தானன் பதாகையின்நீள்
திரையும் குயிலும் விடாதெழும் ஓசை செவிமடுத்தே?

து - ரை : '(தலைவீர்!) நீர், முன் பொருப்பு எடுத்து நிரையும் இஞ் ஞாலமும் காத்தருள் தானன் பதாகையின் நீள் திரையும் குயிலும் விடாது எழும் ஓசை செவி மடுத்து, வரையும் இந்நாள் அளவு எம் மடந்தை முகை புரையும் மென் கொங்கை எவ்வாறு பிரிந்து இருந்தீர்?' என இயைக்க. பொருப்பு எடுத்து - (கோவர்த்தனம் என்னும்) மலையைக் குடையாக உயர்த்திப் பிடித்து, நிரை - பசுக்கூட்டம், ஞாலம் - உலகத்திலுள்ள உயிர்கள் (இடவாகு பெயர்), **தானன்** - தானனது, பதாகையின் - கொடி போல, நீள் - நீண்ட, திரையும் - அலையையுடைய கடலிலும் (சினையாகு பெயர்), குயிலும் - குயிலினிடத்திலும், விடாது - இடைவிடாமல், எழும் - தோன்றும், ஓசை - ஒலியை, செவி மடுத்து - கேட்டு, வரையும் - மணம் புரியும், இந்நாள் அளவு - இந்நாள் வரைக்கும் (உம்மை, விகாரத்தால் தொக்கது), மடந்தை - தலைவியின், முகை புரையும் - (கோங்கின்) அரும்பை ஒக்கும். கடல் ஒலியும் குயில் ஒலியும் பிரிந்துள்ள காதலர்க்குக் காதல் நினைவை மிகுத்து அவரை வருத்துவன ஆதலின், தோழி இங்ஙனம் கூறினள் என்க. தலைவர் - முன்னிலை எச்சம். இக்கவியில் **தானன்** என்னும் பாட்டுடைத் தலைவனைக் கண்ணபிரானாகக் கூறியது, பூவைநிலை என்னும் புறத்துறை பற்றி என்க.

* இது பிற செய்யுட்கவி. இதனால், 'தானன் கோவை' என்னும் நூல் ஒன்று உண்டென்பது ஊகிக்கப்படும்.

372] மன்றல் மனை வரு செவிலிக்கு இருவர் அன்பு உறவு உணர்த்தல் [கூ

வளங்கொண்ட தஞ்சை வரோதயன் வாணன்றென் மாறைஅன்னாள்
இளங்கொங்கை கொண்டுழு தீரம்கொள் மார்பின்முத் தேற்பவித்தி
விளங்கொண் பிறைநுதல் வேர்தந்து போகம் விளைத்தன்புசேர்
உளங்கொண் டருத்துத லால், அன்னை! ஊரன் உவப்புறுமே.

து - ரை: [கலியாண வீட்டில் வந்த செவிலிக்குத் தோழி தலைவன் தலைவியருடைய அன்பையும் உறவையும் உணர்த்துதல்] 'அன்னை! மாறை அன்னாள் இளங்கொங்கை கொண்டு உழுது, ஈரம் கொள் மார்பின் முத்து ஏற்ப வித்தி, விளங்கு ஒண் பிறை நுதல் வேர் தந்து, போகம் விளைத்து, அன்பு சேர் உளம் கொண்டு அருத்துதலால், ஊரன் உவப்பு உறும்,' என இயைக்க. அன்னை - அண்மை விளி, மாறை அன்னாள் - மாறை நாட்டைப் போன்ற தலைவி, ஈரம் - அன்பு, ஏற்ப - பொருந்த, வித்தி - விதைத்து, நுதல் வேர் தந்து - நெற்றி வியர்வையாகிய நீரைப் பாய்ச்சி, போகம் - இன்பத்தை, அருத்துதலால் - அனுபவிக்கச் செய்தலால், ஊரன் - மருத நிலத் தலைவன், உவப்பு உறும் - மகிழ்ச்சி அடைவன். கொங்கை ஏராகவும், முத்து விதையாகவும், வேர்வை நீராகவும், போகம் விளைவாகவும் உருவகஞ் செய்யப்பட்டமையின், இக்கவி உருவக அணி.

373] 'வாழ்க்கை நன்று,' என்றல் [எ

சினவேய் சுளியும் களிற்றண்ணல் வாணன்றென் மாறையில்நம்
மனவேய் அகல்அல்குல் வல்லிஅன் னாள்மறை யோர்முதலாம்
சனவே தனைகெடத் தானங்கள் ஈதலின் சாலவும்நன்
றெனவே நடக்கின்ற தால்அன்னை! நாள்தொறும் இல்லறமே.

து - ரை: [தோழி, 'இல் வாழ்க்கை நன்று,' என்று செவிலிக்கு உரைத்தல்] 'அன்னை! நம் வல்லி அன்னாள் மறையோர் முதலாம் சன வேதனை கெடத் தானங்கள் ஈதலின், இல்லறம், "சாலவும் நன்று!" என நாள்தொறும் நடக்கின்றது,' என இயைக்க. சின வேய் சுளியும் - (பாகன் கையிலுள்ள குத்து கோலாகிய) கோபத்தை உடைய மூங்கிற் கோலைக் கண்டு கோபிக்கும் ('கழைகாண் டலும்சுளி யுங்களி யானை' - திருக்கோ. செய். 111), மனவு எய் - (ஒட்டியாணம் என்னும்) அரைப் பட்டிகை சூழ்ந்த, வல்லி - கொடி, மறையோர் - வேதியர், சன வேதனை கெட - மக்களின் துன்பம் நீங்கும்படி, தானங்கள் ஈதலின் - (அவர்களுக்குப் பல வகையான) தானங்களைக் கொடுத்தலால், இல்லறம் - இல் வாழ்க்கை யானது, சாலவும் நன்று என - (கண்டோர், இவ்வாழ்க்கை) மிகவும் நல்லது என்று சொல்லும்படி. 'மறையோர் முதலாம்' என்றதால், நாவலர் மிடியர்

பிணியாளரையும் கொள்க. 'தானங்கள்' என்றது, அன்னம் ஆடை நிதி முதலியவற்றை. சினம், வேய்க்கு இலக்கணை.

374] மண மனைச் சென்று வந்த செவிலி, [அ
பொற்றொடி கற்பியல் நற்றாய்க்கு உணர்த்தல்

ஒன்றோ நமக்குவந் தெய்திய நன்மை! உடன்றெதிர்ந்தார்
வன்றோல் அமர்வென்ற வாள்படை வாணன்தென் மாறையில்வாழ்
நின்றோகை கற்பின் நிலைமைஎண் ணாதெதிர் நின்றுவெங்கிட்
டன்றோ வடக்கிருந் தாள்மடப் பாவை அருந்ததியே?

த - ரை : [பொன்தொடி - பொன்னால் செய்யப்பட்ட வளையலை அணிந்த தலைவி] '(அன்னாய்!) உடன்று எதிர்ந்தார் வன் தோல் அமர் வென்ற வாள் படை வாணன் தென் மாறையில் வாழ் நின் தோகை கற்பின் நிலைமை எண்ணாது எதிர் நின்று வெங்கிட்டு ஆன்றோ மடப்பாவை அருந்ததி வடக்கிருந்தாள்? (ஆதலின்) நமக்கு வந்து எய்திய நன்மை ஒன்றோ!' என இயைக்க, உடன்று எதிர்ந்தார் - கோபித்து எதிர்ந்தவராகிய பகைவரின், வன் தோல் அமர் - வலிய யானைப் போரை, தோகை - மயிலைப் போலும் மகளின் (உவமையாகு பெயர்). வெங்கிட்டு - தோல்வி அடைந்து, மடப்பாவை அருந்ததி - அறியாமையையுடைய பாவை போன்ற அருந்ததியானவள், வடக்கிருந்தாள் - வடதிசையிலிருந்து தவம் செய்வாளாயினாள். அன்னை - முன்னிலை எச்சம். தோல்வியுற்றோர் தவஞ்செய்ய வடக்கிருத்தல் பண்டை வழக்கு. இதனை வடநூலார், 'பிராயோபவேசம்' என்பர்.

375] நன்மனை வாழ்க்கைத் தன்மை உணர்த்தல் [கூ

விண்மேல் அமரர் விரும்பம ராவதி வெள்ளமுந்நீர்
மண்மேல் அடைந்தன்ன வாழ்க்கைய தானது வாணன்தஞ்சைப்
பண்மேல் அளிமுரல் குங்குமத் தோளவர் பங்கயம்போல்
கண்மேல் அருள்பெற்று வாழ்மட மாதர் கடிமனையே.

த - ரை : [செவிலி, நற்றாய்க்குத் தலைவியின் அழகிய இல்லறத் தன்மையை உணர்த்தல்] 'மடமாதர் கடி மனை, அமராவதி மண்மேல் அடைந்தன்ன வாழ்க்கையது ஆனது,' என இயைக்க. தஞ்சை - தஞ்சையில், பண் மேல் - இசைக்கு மேலாக, அளி முரல் - வண்டுகள் ஒலிக்கின்ற, குங்குமத் தோளவர் - குங்குமச் செவ்வந்தி மலர் மாலையை அணிந்த தோள்களையுடையவராகிய தலைவரின், பங்கயம் போல் - தாமரை மலர் போன்ற, கண்மேல் - கண்ணில் அமைந்த, மடமாதர் - இளம்பெண்ணாகிய தலைவியின், கடி மனை - மண வீடானது, விண்மேல் அமரர் - தெய்வ லோகத்திலுள்ள

தேவர், அமராவதி - அமராவதி என்னும் இந்திர நகரமானது, வெள்ள முந்நீர் - அலைகளையுடைய கடல் சூழ்ந்த, மண்மேல் - மண்ணுலகில், வாழ்க்கையது - செல்வத்தையுடையது (பிங். 1768).

376] செவிலி, நற்றாய்க்கு இருவர் காதலையும் அறிவித்தல் [ய

நனையகத் தல்கிய நாள்மலர் ஓதி நயந்துறையும்
மனையகத் தல்லிடை வைகுத லால்,தஞ்சை வாணன்ஒன்னார்
வினையகத் தல்குதல் செல்லுவ ரேனும்,அவ் வேந்தர்பொன்தேர்
முனையகத் தல்கல்செல் லாதொரு நாளும் முகிழ்நகையே!

து - ரை: [இருவர் - தலைவன் தலைவியர்] 'முகிழ் நகையே! நனை அகத்து அல்கிய நாள் மலர் ஓதி நயந்து உறையும் மனையகத்து அல்லிடை வைகுதலால், தஞ்சை வாணன் ஒன்னார் வினையகத்து அல்குதல் செல்லுவ ரேனும், அவ்வேந்தர் பொன் தேர் ஒரு நாளும் முனையகத்து அல்கல் செல்லாது;' என இயைக்க. முகிழ் நகையே - புன்சிரிப்புடையவளே (வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), நனை அகத்து அல்கிய - தேனனது உள்ளே தங்கிய, நாள் மலர் - புது மலரை அணிந்த, ஓதி - கூந்தலையுடைய தலைவி (சினையாகு பெயர்), நயந்து உறையும் - விரும்பிவாழும், மனையகத்து - வீட்டில், அல்லிடை - இரவில், வைகுதலால் - தங்குதலால், ஒன்னார் - பகைவர், வினையகத்து - போரில், அல்குதல் செல்லுவரேனும் - தங்குதல் பொருந்துவர் எனினும் (உம்மை, 'செல்லார்' என்பது தோன்ற நின்றது), பொன் தேர் - அழகிய தேரானது, முனையகத்து - போர்க்களத்தில், அல்கல் - இரவில் ('அல்கற் கனவுகொல்' - கலித். செய். 90), 'முகிழ் நகையே' என விளித்தமையின், மலர் நகை பெண்டிர்க்கு இயல்பன்று என்பது பெறப்படும். 'தலைவன் அரச காரியம் மேற்கொண்டு போர்க்களம் செல்வதாயினும் இரவில் தலைவியைத் தனித்திருக்க விட்டுச் செல்லான்,' என்னும் கருத்தமைய இங்ஙனம் கூறியது, தலைவன் தலைவியரின் சிறந்த காதலைக் கூறியதாயிற்று.

க-ஆம் கவி, கிழவோன் மகிழ்ச்சிக்கு உரியது; உ, ஙு, டு, சு, எ-ஆம் கவிகள், பாங்கி மகிழ்ச்சிக்கு உரியவை; ச-ஆம் கவி, கிழத்தி மகிழ்ச்சிக்கு உரியது; அ, கூ, ய-ஆம் கவிகள், செவிலி மகிழ்ச்சிக்கு உரியவை.

## 2. பரத்தையிற்பிரிவு

377] காதலன் பிரிவுழிக் கண்டோர், [க
'புலவிக்கு ஏது இது ஆம் அவ்விறைவிக்கு,' என்றல்

மாறையர் காவலன் வாணன்தென் தஞ்சையில் வாள்நுதற்கிவ்
வாறயர் காரணம் ஆகும்அன் றேகொங்கை யானையுடன்
சாறயர் வீதி அரிப்பறை ஆர்ப்பத் தயங்குகுழல்
சூறையர் சூறைகொள் வான்வயல் ஊரனைச் சூழ்ந்தனரே.

து - ரை: [தலைவன் பிரிந்த போது கண்டவர்கள், 'இவன் இப்படிப் பிரிந்தது அத்தலைவியின் ஊடலுக்குக் காரணமாகும்,' என்று கூறுதல்] 'தயங்கு குழல் சூறையர், சூறை கொள்வான், கொங்கை யானையுடன் அரிப்பறை ஆர்ப்பச் சாறு அயர் வீதி வயல் ஊரனைச் சூழ்ந்தனர்; இவ்வாறு, வாள் நுதற்கு அயர் காரணம் ஆகும்,' என இயைக்க. தயங்கு - விளங்குகின்ற, குழல் - கூந்தலையுடைய, சூறையர் - (பரத்தையராகிய) கொள்ளைக்காரர், சூறை கொள்வான் - (அறிவைக்) கொள்ளை கொள்ள, கொங்கை யானையுடன் - முலைகளாகிய யானைகளுடன், அரிப்பறை ஆர்ப்ப - வண்டுகளாகிய பறைகள் ஆரவாரிக்க, சாறு அயர் வீதி - திருவிழாச் செய்யும் தெருவில், வயல் ஊரனை - வயல்களையுடைய மருத நிலத் தலைவனை, வாள் நுதற்கு - ஒளி பொருந்திய நெற்றியை உடைய தலைவிக்கு, இவ்வாறு - இம்முறைமையானது, அயர் காரணம் ஆகும் - (ஊடல்) செய்தற்குக் காரணம் ஆகும். அன்று, ஏ - அசைகள். பரத்தையர், அறிவு, ஊடல் என்பன அவாய் நிலையாற்கொள்ளப்பட்டன.

378] தனித்துழி இறைவி தனித்து அழுத இரங்கல் [உ

வன்போ தணிதொங்கல் வாணன்தென் மாறை மகிழ்நர்நம்மேல்
அன்போடு நன்னெஞ் சறிவறை போக அழலுள்வெந்த
பொன்போல் நிறம்கொண் டிரவும்கண் ணீரும் புலர்வதுபார்த்
தென்போல் எவர்இங்ங னேஇமை யாமல் இருப்பவரே?

து - ரை: [தலைவி, தனித்திருக்கும்போது தன்புற்று அழுது வருந்துதல்] 'வன்பு ஓது அணி தொங்கல் வாணன் தென் மாறை மகிழ்நர் நம்மேல் அன்போடு நல் நெஞ்சு அறிவு அறை போக அழலுள் வெந்த பொன் போல் நிறம் கொண்டு இரவும் கண்ணீரும் புலர்வது பார்த்து இங்ஙன் என் போல் இமையாமல் இருப்பவர் எவர்?' என இயைக்க. வன்பு ஓது - (தன்) வலிமையைத் தெரிவிக்கின்ற, அணி தொங்கல் - அழகிய (வெற்றி) மாலையைத்

தரித்த, மாறை - மாறை நாட்டில், மகிழ்நர் - கணவர், நம்மேல் - நம்மிடம் வைத்த, நல் நெஞ்சு அறிவு - அழகிய மன அறிவு, அறைபோக-அற்றுப்போக, பொன்போல் - பொன்னைப்போன்ற, நிறம் - பசலை நிறத்தை, புலர்வது - விடிவது, உலர்வது ('இரவு விடிவது, கண்ணீர் உலர்வது' என்க), இங்ஙன்- இவ்வாறு, இமையாமல் - உறங்காமல்.

379] 'ஈங்கு இது என்?' எனப் பாங்கி வினுதல் [௩

எம்மா திரமும் புரவலர்த் தேடி இரந்துழல்வோர்
தம்மா துயரம் தணித்தருள் வாணன் தமிழ்த்தஞ்சைவாழ்
நம்மாவி அன்னவர் நாள்தொறும் நாள்தொறும் நல்கவும்நீ
விம்மா வருந்துவ தென்பிரிந் தாரின்? விளங்கிழையே!

து - றை : [தோழி, 'நீ இப்படித் துன்புறக் காரணம் என்ன?' என்று தலைவியை வினவுதல்] 'விளங்கு இழையே! நம் ஆவி அன்னவர் நாள் தொறும் நாள்தொறும் நல்கவும் நீ பிரிந்தாரின் விம்மா, வருந்துவது என்?' என இயைக்க. விளங்கு இழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, எம்மாதிரமும் - எத்திக்கிலும், புரவலர் - வள்ளல்களை, இரந்து உழல்வோர்தம் - யாசித்து வருந்துபவருடைய, மா - பெரிய, வாழ் - வாழ்கின்ற, ஆவி - உயிர், நல்கவும் - (இன்பம்) அளிக்கவும், பிரிந் தாரின் - பிரிந்தாரைப்போல, விம்மா - விம்மி.

380] இறைமகன் புறத்து ஒழுக்கு இறைமகள் உணர்த்தல் [௪

தாராகம் நல்கினர், காரிகை யாய்! தஞ்சை வாணன் தன்னைச்
சேரா தவர்என்னத் தீவினை யேன்னையச் செங்கண்வன்கண்
காரா கழனிக் கரும்பினம் சாயக் கதழ்ந்துசெந்நெல்
ஆரா தயலில்பஞ் சாய்ஆரும் ஊரர் அயலவர்க்கே.

து - றை : [புறத்து ஒழுக்கு - பரத்தையரிடத்தில் ஒழுகும் ஒழுக்கம்] 'காரிகையாய்! தஞ்சை வாணன் தன்னைச் சேராதவர் என்னத் தீவினையேன் நைய, செங்கண் வன்கண் காரா கழனிக்கரும்பு இனம் சாயக் கதழ்ந்து செந்நெல் ஆராது அயலில் பஞ்சாய் ஆரும் ஊரர், அயலவர்க்குத் தார் ஆகம் நல்கினர்,' என இயைக்க. காரிகையாய் - அழகையுடையவளே, நைய - வருந்த, செங்கண் - சிவந்த கண்ணையும், வன்கண் - அஞ்சாமையையும் உடைய, காரா - எருமை, கழனி - கழனியில், இனம் - கூட்டம், சாய - (காலால் மிதிபட்டு) அழிய, கதழ்ந்து - விரைந்து போய், செந்நெல் - செந்நெல்லையும் (உம்மை, விகாரத்தால் தொக்கது), ஆராது - உட்கொள்ளாமல், அயலில் - (அதன்) பக்கத்தில் உள்ள, பஞ்சாய் - கோரையை, ஆரும் - உட்கொள்ளும், ஊரர் - மருத நிலத் தலைவர், அயலவர்க்கு - அய

லாராகிய பரத்தையருக்கு, தார் ஆகம் - மாலை பொருந்திய மார்பை, நல்கினர் - கொடுத்தனர். தலைவன், கரும்பு போன்ற குலப்பரத்தை மகளாகிய காமக்கிழத்தியும் செந்நெல் போன்ற தலைவியும் வருந்துவர் எனக் கருதாமல், வரம்பு கடந்து அயலில் உள்ள கோரை போன்ற பரத்தையரைக் கூடினன் என உள்ளுறை உவமம் காண்க.

381] தலைவியைப் பாங்கி கழறல் [ரு

புனையலங் காரநம் கற்பியல் போற்றியும், போற்றருஞ்சீர்
மனையறம் பாலித்தும் வாழ்வதல் லால், தஞ்சை வாணன்நன்னா
டனையவண் டார்குழல் ஆரணங் கே! நமக் கன்பர்இந்நாள்
இனையர்என் றார்வம்இல் லாஉரை யாடல் இயல்பல்லவே.

து - ரை : [கழறல் - இடித்துக் கூறல்] 'தஞ்சை வாணன் நல் நாடு அனைய வண்டு ஆர் குழல் ஆரணங்கே! நம் புனை அலங்காரக் கற்பு இயல் போற்றியும், போற்றருஞ்சீர் மனை அறம் பாலித்தும் வாழ்வது அல்லால், நமக்கு அன்பர் இந்நாள் இனையர் என்று ஆர்வம் இல்லா உரையாடல் இயல்பு அல்ல,' என இயைக்க. நம் - நம்மை, புனை அலங்காரம் - அலங்கரிக்கும் அலங்காரமாகிய, கற்பு இயல் - கற்பிலக்கணத்தை, போற்றியும் - (தவறாமல்) காத்தும், போற்றருஞ்சீர் - துதித்தற்கு அரிய சிறப்பை உடைய, மனை அறம் - இல்லறத்தை, பாலித்தும் - பாதுகாத்தும், வாழ்வது அல்லால் - வாழ்வதல்லாமல், அன்பர் - தலைவர், இந்நாள் - இப்போது, இனையர் - இப்படிப்பட்டவராய் இருக்கிறார், ஆர்வம் - விருப்பம், உரையாடல் - சொல்லைச் சொல்லுதல், இயல்பு - முறைமை.

382] தலைவி செவ்வணி அணிந்த சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல் [சு

வேளாண் மரபு விளக்கிய வாணன்மின் னார்கழல்சூழ்
தாளாண் வளம்கெழு தஞ்சைஅன் னீர்! சங்கம் தந்தநன்னீர்த்
தோளா மணிஅன்ன தொல்குல ஓடையில் தோன்றியபூ
வாளா அலர்தொடுப் பார்க்கெங்ங னேவந்து வாய்த்ததுவே?

து - ரை : [தலைவி, தான் பூப்பு அடைந்ததை அறிவிக்கத் தோழியைச் செங்கிற மலர் முதலியவற்றால் அலங்கரித்துப் பரத்தை வீட்டிலுள்ள தலைவனிடம் அனுப்பிய போது, அயல் வீட்டுப்பெண்டிர் அவ்வலங்காரத்தைக் கண்டு வருந்திக் கூறுதல்] 'வளம் கெழு தஞ்சை அன்னீர்! வாளா அலர் தொடுப்பார்க்குச் சங்கம் தந்த நல் நீர்த் தோளா மணி அன்ன தொல் குல ஓடையில் தோன்றிய பூ, எங்ஙன் வந்து வாய்த்தது?' என இயைக்க. வேளாண் மரபு விளக்கிய வாணன் - வேளாளர் குலத்தை விளக்கச் செய்த

வாணனுகிய, மின் ஆர் - ஒளி பொருந்திய, செழு - பொருந்திய, சங்கம் தந்த - சங்கு ஈன்ற, நல் நீர் - நல்ல தன்மையையுடைய, தோளா மணி - துளையிடாத இரத்தினம், தொல் - பழமையான, குல ஓடையில் - குலமாகிய நீரோடையில், தோன்றிய - மலர்ந்த, பூ - பூவானது, வாளா - வீணிலே, அலர் தொடுப்பார்க்கு - மலர் கட்டுவார்க்கு, வாய்த்தது - கிட்டியது. 'பூவில்லாமலே அலர் தொடுப்பார்க்குப் பூ வந்து வாய்த்தால் எவ்வாறு அவர் அலர் தொடாமல் இருப்பர்?' என்றவாறு என்க. பூ - மாதந்தோறும் நிகழும் மாதர் சூதகம்.

383] பரத்தையர் கண்டு பழித்தல் [எ

படிஒன்று சாலி அனையவர் சேரிப் படர்பவளக்
கொடிஒன்று நீலம் மலர்ந்தது காட்டக் கொடியவெம்போர்
வடிஒன்று கூர்இலை வேல்வல்ல வாணன்தென் மாறையில்பொன்
தொடிஒன்று தோள்மட வார்சேரி வாய்வந்து தோன்றியதே.

கு - ரை : [சென்ற தோழியைப் பரத்தையர் பார்த்துப் பழித்துப் பேசுதல்] 'கொடி, தோன்றியது,' என இயைக்க. படி ஒன்று - பூமியில் பொருந்திய, சாலி அனையவர் - அருந்ததியைப் போன்றவருடைய (என்றது கற்பிற்சிறந்த குல மகளிரை), சேரி - சேரியில், படர் - படர்ந்த ('பவளக்கொடி' என்றது தோழியை), நீலம் - கருங்குவளை (என்றது தலைவியை), மலர்ந்தது - பூத்ததை, காட்ட - தெரிவிக்க, வடி ஒன்று - வடித்தல் தொழில் பொருந்திய, வேல் வல்ல - வேற்போரில் வல்ல, பொன் தொடி ஒன்று - பொன்னாற்செய்யப்பட்ட தோள் வளை பொருந்திய, தோள் - தோள்களையுடைய, ('மடவார்' என்றது பரத்தையரை), சேரி வாய் - சேரியில். இது, தலைவி பொய்யடையாளம் செய்து அனுப்பினுள் எனப் பழித்துக் கூறியவாறு. 'படி ஒன்று சாலி' என்றது இல்பொருள் உவமை. இக்கவி, ஒட்டணி.

384] பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தலின் தலைவன் வரவு கண்டு வாயில்கள் மொழிதல் [அ

வாருந்து பச்சிள நீர்முலை யார்மதன் வாணன்தஞ்சை
யாரும் தொழத்தகும் எம்பெரு மாட்டிதன் ஏவலினல்,
சேரும் பரத்தையர் சேரியி லேசென்ற சேடியைக்கண்
டூரும் திரைப்புனல் ஊரன்வந் தான்இன் றுலகியற்கே.

கு - ரை : [வாயில்கள்-தோழியர் முதலியவர்கள்] 'ஊரும் திரைப்புனல் ஊரன், எம் பெருமாட்டிதன் ஏவலினல், சேரும் பரத்தையர் சேரியிலே சென்ற சேடியைக் கண்டு இன்று உலகியற்கு வந்தான்,' என இயைக்க.

வார் உந்து - (பூரித்து எழும்புதலால்) கச்சைத் தள்ளுகின்ற, பச்சிளநீர் முலையார் - பசுமையான இளநீர்க்காயைப் போன்ற முலையினையுடையவராகிய பெண்டிர்க்கு, மதன் - மன்மதனை ஒத்தவனாகிய, தஞ்சை - தஞ்சாக்கூரில், தொழத்தகும் - (கற்பினால்) வணங்கத்தகும், பெருமாட்டிதன் - தலைவியின், சேரும் - (தான்) போய் அடையும், சேடியை - தோழியை; உலகியற்கு - உலக ஒழுக்கத்தைக் காத்தற்பொருட்டு. தலைவி பூப்புற்று நீராடிய நாளில் தலைவன் பரத்தையிற்பிரியாமை உலகியல் என்க.

385] தலைமகன் வரவு பாங்கி அரிவைக்கு உணர்த்தல் [க

தள்ளா வளவயல் சூழ்தஞ்சை வாணன் தரியலர்போல்
உள்ளா துணைப்பண் டகன்றனர் ஆயினும், உள்ளிஇப்போ
தெள்ளாது வந்துன் கடையில்நின் றூர்;நம் இறைவர்குற்றம்
கொள்ளா தெதிர்கொள்வ தேகுணம் ஆவது கோமளமே!

கு - ரை: [அரிவை - தலைவி] 'கோமளமே! நம் இறைவர், உனை உள்ளாது பண்டு அகன்றனர் ஆயினும், இப்போது உள்ளி, எள்ளாது வந்து உன் கடையில் நின்றூர்; (ஆதலின்) குற்றம் கொள்ளாது எதிர் கொள்வதே குணம் ஆவது,' என இயைக்க. கோமளமே - இளவழகியே (பண்பாகு பெயர்), தள்ளா வளம் - நீங்காத வளத்தையுடைய, தரியலர் போல் - பகைவரைப்போல, உள்ளாது - நினையாமல், பண்டு - முன்னம், உள்ளி - நினைத்து, எள்ளாது - இகழாமல், கடையில் - வாயிலில், குற்றம் - (அவர் செய்த) குற்றத்தை, கொள்ளாது - (மனத்திற்) கொள்ளாமல், எதிர் கொள்வதே - வரவேற்பதே, குணம் - மேன்மை.

386] தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல் [ய

மருவின் பெருநலம் மன்னுவ தாம்;தஞ்சை வாணன்வெற்பர்
ஒருவின் பசலை உருக்குவ தாம்;நமக் கூடல்எவ்வா
றிருவில் புருவ இளங்கொடி யே!எய்தும் எய்தல்இல்லாத்
திருவின் புனைநறுந் தார்வரை மார்பர் திருமுன்இன்றே.

கு - ரை: 'இரு வில் புருவ இளங்கொடியே! தஞ்சை வாணன் வெற்பர் மருவின், பெருநலம் மன்னுவது ஆம்; ஒருவின், பசலை உருக்குவது ஆம்; நமக்கு ஊடல் எவ்வாறு? எய்தல் இல்லாத் திருவின் புனை நறுந்தார் வரை மார்பர் திருமுன் இன்று எய்தும்,' என இயைக்க. வில் புருவம் - விற்களைப்போன்ற புருவத்தை உடைய, மருவின் - (நம்மைச்) சேர்வாரானால், பெருநலம் - பேரழகு, மன்னுவது ஆம் - (நம்மிடம்) நிலை பெறுவது ஆகும், ஒருவின் - (நம்மை) நீங்குவாரானால், பசலை - பசலை நிறமானது, உருக்குவது ஆம் - (நம்மை) மெலியச் செய்வது ஆகும், ஊடல்-பிணங்குதல், எவ்வாறு -

எப்படி, எய்தல் - நீங்குதல், திருவின் - இலக்குமியைப்போல, புனை - அலங்கரிக்கும், வரை - மலையைப் போன்ற, திருமுன் - சன்னதியில், இன்று - இப்பொழுது, எய்தும் - (நாம்) வணங்குவோம்.

387] புணர்ச்சியின் மகிழ்தல் [யக

மன்னவர் காம நெடுங்கடல் வாணன்தென் மாறைஅன்னாள்
தொன்னல வார்முலை மத்தம் தழீஇத்தடந் தோள்இணையாம்
பன்னக நாணின் கடைந்திதழ் வார்திரைப் பட்டநன்னீர்
இன்னமிழ் தார்ந்திமை யோர்அமை யாஇன்பம் எய்தினரே.

கு - ரை: [தலைவனும் தலைவியும் புணர்ச்சியினால் மகிழ்வடைதல்] 'மன்னவர், காம நெடுங்கடல் மாறை அன்னாள் தொல் நல வார் முலை மத்தம் தழீஇ, தடந்தோள் இணை ஆம் பன்னக நாணின் கடைந்து, இதழ் வார் திரைப்பட்ட நல் நீர் இன் அமிழ்து ஆர்ந்து, இமையோர் அமையா இன்பம் எய்தினர்,' என இயைக்க. மன்னவர் - தலைவர், காம நெடுங்கடல் - காமமாகிய பெருங்கடலில், தொல் நலம் - பழமையான அழகையுடைய, வார் முலை - கச்சுப் பொருந்திய முலையாகிய, மத்தம் தழீஇ - மத்தைத் தழுவி, தோள் இணை ஆம் - இரு தோள்களாகிய, பன்னக நாணின் - பாம்பாகிய கயிற்றினால், இதழ் - உதடுகளாகிய, வார்திரைப்பட்ட - பேரலையிற் பொருந்திய, நல் நீர் - நல்ல நீராகிய, இன் அமிழ்து - இனிய அமுதத்தை, ஆர்ந்து - பருகி, இமையோர் - தேவரின், அமையா - தெவிட்டாத. இது கவி கூற்று. இக்கவி, உருவக அணி.

388] வெள்ளணி அணிந்து விடுத்தழித் தலைமகன் வாயில் வேண்டல் [யஉ

என்பால் குறையை நினைந்து மருதெதிர் கொள்ளவல்லே
தன்பால் புலவி தணிசென்று நீ; தஞ்சை வாணன்வையம்
அன்பால் பரவும் புகழுடை யான்அரு ளேஅனையாய்!
உன்பால் புலவி உறுள்வண்ண வார்குழல் ஒண்ணுதலே.

கு - ரை: [தலைவி, தான் புதல்வனைப் பெற்றதைத் தலைவனுக்குத் தெரிவிக்கத் தன் தோழியை வெள்ளாடை முதலியன அணிந்து அனுப்பிய போது அவளைக் கண்ட தலைவன் வந்து நின்று, தன்பொருட்டுத் தலைவியினிடம் தூதாக வேண்டுமென்று தோழியை வேண்டுதல்] 'வையம் அன்பால் பரவும் புகழ் உடையான் தஞ்சை வாணன் அருளே அனையாய்! வண்ண வார் குழல் ஒள் நுதல், உன்பால் புலவி உறுள்; (ஆதலால்) என்பால் குறையை நினைந்து மருது எதிர்கொள்ள நீ வல்லே சென்று தன்பால் புலவி தணி,' என இயைக்க. பரவும் - துதிக்கும், வண்ணம் - அழகு பொருந்திய, வார் குழல் - நீண்ட குழலையும், ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியையும்

உடைய தலைவி (அன்மொழித்தொகை), உன்பால் - உன்னிடம், புலவி உறாள் - வெறுப்படைய மாட்டாள், என்பால் - என்னிடமுள்ள, மறாது - தடை செய்யாமல், எதிர்கொள்ள - (என்னை) ஏற்றுக்கொள்ள, வல்லே - விரைவாக, தன்பால் - அவளிடத்தில் உண்டான, புலவி - ஊடலை, தணி - ஆறச் செய்.

389] தலைவி நெய் ஆடியது இகுளை சாற்றல் [௰௩

மலர்புரை ஏர்கொண்ட வாள்கண் எம் கோமங்கை, வாணன்தஞ்சைப்
பலர்புகழ் பாலன் பயந்துநெய் ஆடினள்; பாங்கெவர்க்கும்
அலர்புரை நீடொளி ஆடியுள் பாவைஅன் னாட்குளநீர்
புலர்புனல் ஊர!என் னோதிரு வுள்ளம்இப் போதுனக்கே!

து - ரை: [தலைவி புதல்வனைப் பெற்று நெய்யாடியதைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்] ‘பாங்கு எவர்க்கும் அலர் புரை நீடு ஒளி ஆடியுள் பாவை அன்னாட்கு உளம் நீர் புலர் புனல் ஊர! மலர் புரை ஏர் கொண்ட வாள் கண் எம் கோமங்கை, வாணன் தஞ்சைப் பலர் புகழ் பாலன் பயந்து நெய்யாடினள்; இப்போது உனக்குத் திருவுள்ளம் என்னோ!’ என இயைக்க. பாங்கு - பக்கத்தில் உள்ளவர் (இடவாகு பெயர்), அலர் புரை - மலரைப்போன்ற, நீடு ஒளி ஆடியுள் - மிகுந்த ஒளியையுடைய கண்ணாடியுள் அமைக்கப்பட்ட, பாவை அன்னாட்கு - பொம்மையையொத்தவளிடத்தில் (அன்னாட்கு - வேற்றுமை மயக்கம்), உளம் நீர் புலர் - உள்ளன்பு குறைந்த, புனல் ஊர - நீரையுடைய மருத நிலத் தலைவனே, மலர் புரை - மலரை ஒத்த, ஏர் - அழகு, வாள் - ஒளி பொருந்திய, கோமங்கை - தலைவி யானவள், தஞ்சை - தஞ்சையில், பலர் - பலரும் (சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது), பாலன் - புதல்வனை, பயந்து - பெற்று, நெய் ஆடினள் - எண்ணெய் முழுக்காடினள், திருவுள்ளம் - மனக்கருத்து (இருமடியாகு பெயர்), என்னோ - என்னவோ (ஓகாரம், ஐயம்). ‘பரத்தையர் சேரிக்குச் செல்வதோ, இங்குத் தங்குவதோ! உன் கருத்து யாது?’ என்றாள் என்க.

390] தலைவன், தன் மனத்து உவகை கூறல் [௰௪

மையணி வேல்விழி வாள்நுதல்! கூர்ந்தது, வாணன்தஞ்சைக்
கொய்யணி நாள்மலர்க் கொம்பர்அன் னாள்குழ விப்பயந்து
நெய்யணி மேனியில் ஐயவி பூண்ட நிலைஅறிந்தே
கையணி வால்வளை யைக்கண்ட நாளினும் காதன்மையே.

து - ரை: ‘மை அணி வேல் விழி வாள் நுதல்! வாணன் தஞ்சைக் கொய் அணி நாள் மலர்க் கொம்பர் அன்னாள் குழவிப் பயந்து நெய் அணி மேனியில் ஐயவி பூண்ட நிலை அறிந்து, கை அணி வால் வளையைக் கண்ட நாளினும் காதன்மை கூர்ந்தது,’ என இயைக்க.

மை அணி வேல் விழி வாள் நுதல் - அன்மொழித்தொகை (அண்மை விளி), தஞ்சை - தஞ்சையில், கொய் - தெரிந்தெடுக்கும், அணி - அழகு பொருந்திய, நாள் மலர் - புது மலரையுடைய, கொம்பர் - பூங்கொம்பு, குழவிப் பயந்து - பிள்ளையைப் பெற்று, நெய் அணி மேனியில் - எண்ணெய் பூசிய உடலில், ஐயவி பூண்ட - வெண் சிறு கடுகை அப்பிய, வால் வளையை - வெண்மையாகிய வளையலை அணிந்த தலைவியை (அன்மொழித் தொகை), கண்ட நாளினும் - (முதலிற்) கண்ட நாளைக்காட்டிலும், காதன்மை - (எனது) அன்பு, கூர்ந்தது - மிகுந்தது.

391] தலைவிக்கு அவன் வரல் பாங்கி சாற்றல் [யரு

'ஏரார் புதல்வன் பிறந்தனன்; வாழிய!' என்னுமுன்னே,
வாரார், வளமனை வந்துநின் றூர்கங்குல்; வாணன்தஞ்சை
நீராவி நீல நெடுங்கண்மின் னே! நின்னை நீப்பதல்லால்
தேரா தொழிகுவ ரோபெரி யோர்தம் சிறுவனையே!

து - ரை: 'வாணன் தஞ்சை நீர் ஆவி நீல நெடுங்கண் மின்னே! "ஏர் ஆர் புதல்வன் பிறந்தனன்; வாழிய!" என்னும் முன்னே, வாரார், கங்குல் வளமனை வந்து நின்றூர்; பெரியோர் நின்னை நீப்பது அல்லால், தம் சிறுவனைத் தேராது ஒழிகுவரோ!' என இயைக்க. ஆவி - குளத்தில் பூத்த, நீலம் - கருங்குவளை மலர் போலும், மின்னே - மின்னலைப் போன்ற வளே (உவமையாகு பெயர்), ஏர் ஆர் - அழகு நிறைந்த, வாழிய - நெடுங் காலம் வாழ்க, என்னும் முன்னே - என்று சொல்வதற்கு முன்னே, வாரார் - (முன்னம் உன்னை விரும்பி) வாராத தலைவர், கங்குல் - இரவில், நீப்பது - பிரிவது, சிறுவனை - மகனை ('உலகாளும் சிறுவர்ப் பயந்து' - சீவக. செய். 2606), தேராது - தேர்ந்து அறியாமல், ஒழிகுவரோ - விடுவரோ. தேர்தல், பிறந்த காலத்தின் நாளும் கோளும் ஆராய்ந்து அறிதல்.

392] தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல் [ய...

வியங்கேழ் உலகும் புரக்கின்ற வாணன்தென் மாறைஅன்ன
நயங்கேழ் பெருவளம் நல்கும்நல் ஊர! நயந்துநண்ணி
முயங்கேல் சிறுவன் பயந்தஎன் மேனி;இன் முத்துவடம்
தயங்கேர் அகம்முழு தும்பழு தாம்அது தான்நினக்கே.

து - ரை: [புலத்தல் - மனம் வேறுபடுதல்] 'ஊர! நயந்து நண்ணி, சிறுவன் பயந்த என் மேனி முயங்கேல்; அது, நினக்கு இன் முத்து வடம் தயங்கு ஏர் அகம் முழுதும் பழுது ஆம்,' என இயைக்க. வயங்கு - விளங்குகின்ற, நயம் - இன்பமும், கேழ் - ஒளியும், பெருவளம் - பெரிய வளமும், நல்கும் - கொடுக்கும், நல் ஊர - அழகிய மருத நிலத் தலைவனே, நயந்து

நண்ணி - விரும்பியடைந்து, சிறுவன் பயந்த - மகனைப் பெற்ற, மேனி - உடலை, முயங்கேல் - தழுவாதே, அது - அங்ஙனம் தழுவுவது, நினக்கு - (பரத்தையரைத் தழுவிய) உனக்கு, இன் முத்து வடம் தயங்கு - இனிய முத்து மாலையானது விளங்குகின்ற, ஏர் - அழகு பொருந்திய, அகம் - மார்பு (இருமடியாகு பெயர் ; 'புல்லகம் அகன்றது' - சிலப். காதை, 30 ; அடி, 16), பழுது ஆம் - குற்றமாகும். அதுதான் - தான், அசை.

393] தலைவி பாணனை மறுத்தல் [௰௭

தலையா கியதன்மை ஊரற்கு வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
மலையா கியமதில் வையைநன் னாட்டெங்கை மான்படுக்கும்
கலையாகும் நின்இசைக் கண்ணிகொண் டேதிரி கன்றுதின்னிப்
புலையா! கடக்கஎம் இல்,போக போக புறங்கடையே.

து - ரை : [தலைவி, தலைவன் விடுத்த தூதாகி வந்த பாணனை இகழ்ந்து கூறுதல்] 'கன்று தின்னிப் புலையா ! எம் இல் கடக்க, புறங்கடைப் போக போக,' என இயைக்க. தலை - முதன்மை, ஊரற்கு - மருத நிலத் தலைவனுக்காக, மலை ஆகிய - மலை போன்ற, வையை நல் நாட்டு - வைகை நதி பாயும் நல்ல நாடாகிய பாண்டி நாட்டில், எங்கை மான் - என் தங்கை யாகிய மானை (என்றது தலைவியை), படுக்கும் - சிக்கச் செய்யும், கலை ஆகும்-கலை மானைப் போன்ற, இசைக்கண்ணி-இசைப்பாட்டாகிய வலையை, திரி - திரியும், கன்று தின்னி - கன்றைத் தின்பவன் என்னும் பெயரை உடைய, புலையா - பாணனே, எம் இல் கடக்க - எம் வீட்டை நீங்கி, (கடக்க - முற்றெச்சம்), புறங்கடை - வெளியில். 'போக போக' என்பது வெறுப்பில் வந்த அடுக்குத் தொடர். தலைவி இங்ஙனம் கூறிக் கல்லெறிந் தாள் என்க. 'இதனை எதனால் அறியலாம் ?' எனின், அடுத்த கவியில் பாணன் தலைவி கல்லெறிந்தாள் எனக் கூறுவதால் அறியலாம்.

394] வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல் [௰௮

நினக்கே தகும்நின் நெடும்புனல் ஊரனும்; நீயும்அவன்
தனக்கே தகுவை; தமிழ்த்தஞ்சை வாணன் தடங்கிரிசூழ்
புனக்கே கயம்அன்ன நின்அடி போற்றிப் புகன்றகன்றும்
எனக்கே தகும்மிகை யால்எம் பிராட்டி! எறிந்தகல்லே.

து - ரை : 'எம் பிராட்டி ! நின் நெடும்புனல் ஊரனும் நினக்கே தகும்; நீயும் அவன் தனக்கே தகுவை; மிகையால் எறிந்த கல்,தமிழ்த் தஞ்சை வாணன் தடங்கிரி சூழ் புனக் கேகயம் அன்ன நின் அடி போற்றிப் புகன்ற கன்றும் எனக்கே தகும்,' என இயைக்க. எம் பிராட்டி - எம் தலைவியே

(அண்மை விளி), தகும் - தகுவன், தகுவை - தகுதியுடையவளாவாய், மிகையால் - (யான் செய்த) குற்றத்தால், புனக் கேகயம் - கொல்லையில் வாழும் மயில், போற்றி - துதித்து, புகன்ற - (தலைவன் வரவைக்) கூறிய, கன்றும் - (மனம்) வருந்தும், 'புகன்ற எனக்கே' எனவும், 'கன்றும் எனக்கே' எனவும் இயைத்துப் பொருள் கொள்க. ஏகாரம் மூன்றும் பிரிநிலை.

395] விறலியை வாயில் மறுத்தல் [யகூ

வண்புனல் ஊர்வையை சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
கண்புனல் ஊரும்என் காதல்கண் டே,'நின் கடைத்தலைக்கே
தண்புனல் ஊரன்வந் தான்,'என்று சாற்றினை; தானம்உறப்
பண்புனல் ஊர்கள்எல் லாம்பாடி ஏற்றுண்ணும் பாண்மகளே!

து - ரை : [தலைவி, தலைவன் விடுத்த தூதாகி வந்த பாணிச்சியை இகழ்ந்து கூறுதல்] 'புனல் ஊர்கள் எல்லாம் பண் பாடி ஏற்று உண்ணும் பாண் மகளே! கண் புனல் ஊரும் என் காதல் கண்டு, "நின் கடைத் தலைக்குத் தண்புனல் ஊரன் வந்தான்," என்று தானம் உறச் சாற்றினை,' என இயைக்க. புனல் ஊர்கள் எல்லாம் - நீர் வளமுள்ள ஊர்களிலெல்லாம், பண் - இசை, ஏற்று - பிச்சையெடுத்து, பாண் மகளே - பாணிச்சியே, வண் புனல் ஊர் - வளப்பமான நீர் பரவும், கண் - கண்ணில், புனல் ஊரும் - நீர் பெருகும், காதல் - அன்பை, கண்டு - அறிந்து, கடைத்தலைக்கு- வீட்டு வாயிலில் (வேற்றுமை மயக்கம்), ஊரன் - மருத நிலத் தலைவன், தானம் உற - (என்னிடமிருந்து) தானங்களைப் பெற, சாற்றினை - சொன்னாய். 'உன் அறியாமைக்கு யான் மனம் பொறுத்தேன்; போ,' என்றாள் என்க.

396] விருந்தொடு வந்துழிப் பொறுத்தல் கண்டு இறையோன் மகிழ்தல் [உய

புரவே எதிர்ந்த நமக்கு விருந்தின்று போலஎன்றும்
வரவே புணர்ந்தநம் மாதவம் வாழிய! வாணன்தஞ்சைக்
குரவேய் கருமுகில் கொந்தள பாரக் குரும்பைக்கொங்கை
அரவேய் நுடங்கிடை யாள்விழி ஊர்சிவப் பாற்றுதற்கே.

து - ரை : [வந்துழி - வந்த சமயத்தில்] 'புரவு எதிர்ந்த நமக்கு, நுடங்கு இடையாள் விழி ஊர் சிவப்பு ஆற்றுதற்கு, இன்று போல என்றும் விருந்து வரப் புணர்ந்த நம் மாதவம் வாழிய!' என இயைக்க. தஞ்சை- தஞ்சையிலுள்ள, குரவு ஏய் - குரவமலர் மாலை பொருந்திய, கருமுகில் - கரியமேகம் போன்ற, கொந்தள பாரம் - கூந்தற்சுமையையும், குரும்பைக் கொங்கை - தென்னம்பிஞ்சு போன்ற முலைகளையும், அரவு ஏய் நுடங்கு இடையாள் - பாம்பைப் போன்ற (நெளிந்து) துவளுகின்ற இடையையும்

உடையவளாகிய தலைவியின், விழி ஊர் - கண்ணில் பரவுகின்ற, சிவப்பு - (கோபத்தினால் எற்பட்ட) செந்நிறத்தை, புரவு எதிர்ந்த - கொடைத் தொழிலிற் பொருந்திய ('இடுக திறையே புரவெதிர்ந் தோற்கென' - பதிற். செய். 80; அடி, 10), புணர்ந்த - பொருந்திய, மாதவம் - பெரிய தவமானது, வாழிய - வாழக் கடவது. புரவே, வரவே - ஏ, அசை.

397] விருந்து கண்டு ஒளித்த ஊடல் வெளிப்பட நோக்கிச் 'சீறேல்!' என்று அவள் சீறடி தொழுதல் [௨க

தெரியோர் பொருட்டன்று தேர்வின்றி ஊடல்; செயிர்த்தவர்க்குக்
கரியோர் தெளித்தென்னை காரணம் காட்டுவர்? கான்உண்டுதேன்
வரியோர் தொடைப்புயன் வாணன்தென் மாறை மலர்த்திருவே!
பெரியோர் பொறுப்பர்அன் றேசிறி யோர்கள் பிழைத்தனவே?

து - ரை : [சீறடி - சிறிய பாதம்] 'மாறை மலர்த்திருவே! தேர்வு இன்றி ஊடல் ஓர் பொருட்டு அன்று; தெரி; கரியோர், செயிர்த்தவர்க்குத் தெளித்து என்னை காரணம் காட்டுவர்? பெரியோர், சிறியோர்கள் பிழைத்தன பொறுப்பர் அன்றே?' என இயைக்க. தேன் - வண்டுகள், கான் உண்டு - வாசனையை உட்கொண்டு, வரி ஓர் - இசைப்பாட்டை ஆராய்கின்ற, தொடைப்புயன் - மலர் மாலையை அணிந்த தோள்களை உடையவனாகிய, திருவே - இலக்குமியைப்போன்றவளே (உவமையாகுபெயர்), தேர்வு இன்றி ஊடல் - ஆராய்ச்சி இல்லாமல் ஊடுதல், ஓர் பொருட்டு அன்று - ஒரு பயனை உடையது அன்று, தெரி-(நீ இதனைத்) தெரிவாயாக, கரியோர்-மத்தியஸ்தர், செயிர்த்தவர்க்கு-கோபித்தவர்க்கு, தெளித்து-சத்தியம் செய்து ('தீதிலேம் என்று தேளிப்பவும்' - கலித். செய். 81; அடி, 32), பிழைத்தன - தவறிச் செய்த குற்றங்களை, அன்றே - அல்லவா. ('ஆதலால், யான் நின்னை வணங்குகிறேன்; என் பிழை பொறுத்தருள்க,' என்றான் என்க.) இக்கவி, வேற்றுப்பொருள் வைப்பு அணி.

398] 'இஃது எங்கையர் காணின் நன்று அன்று,' என்றல் [௨௨

எண்போன நெஞ்சமும் நீரும்என் பாதம் இறைஞ்சுதல்நும்
கண்போலும் எங்கையர் காணின்நன் றோ?கயல் மாதிரத்துத்
திண்போ தகந்தொறும் தீட்டிய வாணன் செழுந்தஞ்சைசூழ்
வண்போ தளவிய நீர்வையை நாட்டுறை மன்னவரே!

து - ரை : [தலைவி, 'நீர் என்னை வணங்கும் இச்செயலை என் தங்கையராகிய பரத்தையர் காணின் குற்றமாய் முடியும்,' என்றல்] 'மன்னவரே! நும் கண் போலும் எங்கையர், எண் போன நெஞ்சமும் நீரும் என் பாதம் இறைஞ்சுதல் காணின், நன்றோ?' என இயைக்க. மாதிரத்து -

(எட்டுத்) திசைகளிலுமுள்ள, திண் போதகந்தோறும் - வலிய யானைதோறும், கயல்- கயற்கொடியை (இருமடியாகு பெயர்), தீட்டிய - எழுதிய, வண் போது அளவிய - வளப்பமான தாமரை மலர்கள் கலந்த, நீர் - நீரையுடைய, எண் போன - ஆலோசனை நீங்கிய, நெஞ்சமும் - (உமது) மனமும், இறைஞ்சுதல் - வணங்குதலை, எங்கையர் - என் தங்கைமாராகிய பரத்தையர் (பரத்தையரைத் தலைவி இங்ஙனம் முறை பாராட்டுதல் மரபு), நன்றே - நன்மையாகுமோ (ஏ - எதிர்மறை).

399] 'அங்கு அவர் யாரையும் அறியேன்,' என்றல் [உரு

*மன்னும் புலவியை மாற்றியும் தேற்றியும் வல்லவண்ணம்
இன்னும் தெளிந்திலை; என்னேஎன் னே!என்செய் கேன்இதற்கு!
முன்னம் படிந்து முழுகும்நன் னீர்க்கங்கை முன்உறையும்
அன்னம் படியுங்கொல் லோஉவர் ஆழியில்? ஆரணங்கே!

கு - ரை: [தலைவன், 'அவ்விடத்தில் நீ குறிக்கும் பரத்தையர் எவரையும் யான் அறியேன்,' என்று கூறல்] 'ஆரணங்கே! மன்னும் புலவியை வல்ல வண்ணம் மாற்றியும் தேற்றியும், இன்னும் தெளிந்திலை; என்னே என்னே! இதற்கு என் செய்கேன்! முன்னம் படிந்து முழுகும் நல் நீர்க்கங்கை முன் உறையும் அன்னம், உவர் ஆழியில் படியுங்கொல்லோ?' என இயைக்க. மன்னும் - (உன் மனத்தில்) நிலை பெறும், புலவியை - ஊடலை, வல்ல வண்ணம் - (என்னால்) இயன்ற வகையில், மாற்றியும் - (உன்னை வணங்கி) மாறச் செய்தும், தேற்றியும் - (உன்னைத்) தெளியச் செய்தும், தெளிந்திலை - (நீ) தெளியவில்லை, என்னே என்னே - இது பேரதிசயமாம் (அதிசய இரக்கக் குறிப்பு), இதற்கு - (உன்னைத் தெளியச் செய்யும்) இக்காரியத்திற்கு, என் செய்கேன் - (இனி) என்ன உபாயத்தைச் செய்வேன், முன்னம் படிந்து - முதலிற்குளித்து, கங்கை முன் - கங்கையாற்றில், உவர் ஆழியில் - உப்பு நீரையுடைய கடலில், படியுங்கொல்லோ - குளிக்குமோ (கொல் - அசை). 'கங்கையைப்போலும் உன்னிடம் இன்பமனுபவித்த யான் உப்புநீர்க் கடலை ஒத்த பரத்தையரைக் கூடுவனோ?' என்றான் என்க. இக்கவி, ஓட்டணி.

400] காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல் [உச

போயே தெருவில் தனிவிளை யாடும் புதல்வன்புல்ல,
'நீயே திலைஅல்லை; நின்மக னேஇவன்; நீயும்இவன்
தாயே; வருக'எனச் சேய்அன்ன வாணன் தமிழ்த்தஞ்சைமான்,
'ஏயே!' எனநிற்ற லான்அறிந் தேன்தன்னை எங்கைஎன்றே.

கு - ரை: [காமக் கிழத்தி - உரிமைப் பரத்தையின் மகளாய்க் காமம் காரணமாகத் தலைவனால் மணக்கப்பட்டவள்] '(தலைவரே!) தமிழ்த் தஞ்சை

* இது பிற செய்யுட்கவி.

மான், தெருவில் போய்த் தனி விளையாடும் புதல்வன் புல்ல, "நீ ஏதிலை அல்லை; இவன் நின் மகனே; நீயும் அவன் தாயே; வருக," என, "ஏயே!" என நிற்றலான், தன்னை எங்கை என்று அறிந்தேன்,' என இயைக்க. சேய் - முருகக் கடவுள், மான் - மானைப் போன்ற பரத்தையானவள் (உவமையாகு பெயர்), தனி - தனியே, புதல்வன் - மைந்தனை, புல்ல - (தன் கரங்களால் அன்போடு) தழுவ, (அதைக் கண்ட யான்) ஏதிலை அல்லை - அயலாய் அல்லை, என-என்று கூறி அழைக்க, ஏயே என - (நாணத்தால்) ஏயே என்று (என - செய்தெனெச்சத் திரிபு), தன்னை - அவளை, எங்கை - என் தங்கை. தலைவர் - முன்னிலை எச்சம்.

401] தலைவியைப் பாங்கி தணித்தல் [உ௫

மாவா ரணம்அன்ன வாணன்தென் மாறைநம் மன்னர்நின்னைப்
பாவாய்! பணியவும் பார்க்கிலை நீ;இடப் பாகமங்கை
தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை தழீஇ,இதழிப்
பூவார் சடைமுடி மேல்வைத்த போதும் பொறுத்தனளே.

கு - ரை: 'பாவாய்! நம் மன்னர் நின்னைப் பணியவும், நீ பார்க்கிலை; இடப்பாக மங்கை, தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை தழீஇ இதழிப் பூ ஆர் சடை முடிமேல் வைத்த போதும் பொறுத்தனள்,' என இயைக்க. பாவாய் - பாவை போன்றவளே (உவமையாகு பெயர்), இடப்பாக மங்கை - (சிவபெருமானுடைய) இடப் பாகத்தில் உள்ள பார்வதி, தாவாத - (தன்னை என்றும் விட்டு) நீங்காத, சங்கரன் - சிவ பெருமான், தழீஇ - தழுவி, இதழிப்பூ - கொன்றை மலர். ('நீ இக்கதையினைக் கேட்டிலையோ?' என்றுள் என்க). பணியவும் - உம், சிறப்பு.

402] தலைமகள் புலவி தணியாள் ஆகத் தலைமகன் ஊடல் [உ௬

தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் தனதருள்போல்
பழங்காதல் எண்ணலஎன் பைதல்நெஞ் சே!இவள் பண்டுபைம்பொன்
கழங்கா டிடமும் கடிமலர்க் காவும் கடந்துபுள்ளும்
வழங்கா வழிநமக் கோர்துணை யாய்வந்த மான்அல்லளே.

கு - ரை: 'என் பைதல் நெஞ்சே! இவள், பண்டு பைம்பொன் கழங்கு ஆடு இடமும் கடி மலர்க்காவும் கடந்து புள்ளும் வழங்கா வழி நமக்கு ஓர் துணையாய் வந்த மான் அல்லள்; (ஆதலால்) தழங்கு ஆர் புனல் வையை சூழ் தஞ்சை வாணன் தனது அருள்போல் பழங்காதல் எண்ணல்,' என இயைக்க. பைதல் நெஞ்சே - துன்பமடைந்த மனமே, பண்டு - முன்பு, பைம்பொன் கழங்கு - பசுமையான பொன்னால் செய்யப்பட்ட கழற்சிக்காயை, கடி - வாசனை, கடந்து - விட்டு நீங்கி, புள்ளும் - பறவை

களும் (உம், சிறப்பு), வழங்கா - சஞ்சரியாத, வழி - (பாலை) வழியில், ஓர் - ஒப்பற்ற, மான் - மான் போன்ற தலைவி (உவமையாகு பெயர்), தழங்கு - ஒலிக்கின்ற, ஆர் - நிறைந்த, போல் - போன்ற, பழங்காதல் - பழைய அன்பை, எண்ணல் - (நீ) எண்ண வேண்டா.

403] பாங்கி, 'அன்பிலை; கொடியை,' என்று இணர்த்தார் மார்பனை இகழ்தல் [உஎ

மைந்நாள் மலர்த்தொடை வாணன்தென் மாறைஎம் மன்னர்!உவந்
தந்நாள் முயங்கி அமிழ்தென ஆர்ந்தனிர் ஆர்வம்உற்று
முந்நாள் மதிவட்ட மென்முலை மாதை; முனிந்துநஞ்சென்
றிந்நாள் மிகஉவர்த் தீர்,புல வாகிற்றிர் எங்களையே.

து - ரை : [இணர்த்தார் - கொத்துப் பொருந்திய மலர் மாலை] 'எம் மன்னர்! அந்நாள் முந்நாள் மதி வட்ட மென்முலை மாதை ஆர்வம் உற்று முயங்கி உவந்து அமிழ்து என ஆர்ந்தனிர் ; இந்நாள் நஞ்சு என்று முனிந்து மிக உவர்த்தீர்; எங்களைப் புலவாகிற்றிர்,' என இயைக்க. மைந் நாள் மலர் - கருங்குவளைப் புது மலர், மன்னர் - தலைவரே (அண்மை விளி), முந்நாள் மதி வட்டம் - மூன்றும் பூரணை நாள் சந்திரனது வட்டம்போன்ற வடிவினையுடைய, மாதை - அழகியை (பண்பாகு பெயர்), ஆர்வம் - விருப் பம், முயங்கி - புணர்ந்து, உவந்து - மகிழ்ந்து, ஆர்ந்தனிர் - (இன்பத்தை) அனுபவித்தீர், நஞ்சு - விஷம், முனிந்து - கோபித்து, உவர்த்தீர் - அரு வருத்து (முற்றெச்சம்), புலவாகிற்றிர் - வெறுக்கின்றீர். 'முந்நாள் மதி வட்டம்' என்றது, ஏகாதசி தொடங்கிப் பௌர்ணமி வரையிலுள்ள சந்திரனை.

404] ஆயிழை மைந்தனும் ஆற்றாமையும் வாயிலாக, வரவு எதிர் கோடல் [உஅ

வெள்ளம் பரந்தன்ன வேட்கைசென் றாலும் மிகப்பெரியோர்
உள்ளம் சிறியவர் மேல்செல்வ ரோ?ஒளிர் கோமளம்செய்
வள்ளங் கமல மலர்த்தஞ்சை வாணன்தென் மாறைஅன்னப்
புள்ளம் புனல்வயல் ஊர!புன் காமம் புகல்வதன்றே.

து - ரை : [தன் மகனும் தன் ஆற்றாமையும் வழியாகக் கொண்டு தலைவன் வருதலைத் தலைவி ஏற்றுக்கொள்ளுதல்] 'ஊர! மிகப்பெரியோர், வெள்ளம் பரந்தன்ன வேட்கை சென்றாலும், உள்ளம் சிறியவர்மேல் செல் வரோ? புன் காமம் புகல்வது அன்று,' என இயைக்க. ஒளிர் - விளங்கு கின்ற, கோமளம் செய் - அழகாகச் செய்த, வள்ளம் - கிண்ணத்தைப் போன்ற, கமல மலர் - தாமரை மலர்களையுடைய, மாறை - மாறை நாட்

டில், அன்னப்புள் - அன்னப்பறவைகள் வாழும், அம் - அழகிய, புனல்- நீரையுடைய, வயல் - வயல்கள் சூழ்ந்த, ஊர - மருத நிலத் தலைவனே, வெள்ளம் - கடல், பரந்தன்ன - பரவினாற்போன்ற, வேட்கை - விருப்பமானது, உள்ளம் சிறியவர்மேல் - மனத்தால் சிறியவராகிய பரத்தையரிடம், செல்வரோ - செல்லார் (ஓ - எதிர் மறை), புன் காமம் - அற்பக் காமமானது, புகல்வது அன்று - (ஒரு பொருளாகச்) சொல்லத் தகுவது அன்று. 'வள்ளக் கமலம்' எனற்பாலது, எதுகை நோக்கி 'வள்ளங் கமலம்' என மெலித்தல் விகாரம் பெற்றது.

405] மணந்து அவன் போய பின் வந்த பாங்கியோடு இணங்கிய மைந்தனை இனிதின் புகழ்தல் [உகூ

இருமையில் எயும் பயன்கள்எல் லாம்தன்னை ஈன்றநமக்
கொருமையி லேவந் துறத்தகைந் தான்மைந்தன் ஒண்சுடர்போல்
வருமயி லேகொண்டு மாதடிந் தான்அன்ன வாணன்தஞ்சைத்
திருமயி லேஅனை யாய்!புனல் ஊரனைத் தேருடனே.

து - றை: [அவன் - தலைவன்] 'தஞ்சைத் திரு மயிலே அனையாய்! மைந்தன், புனல் ஊரனைத் தேருடன் தகைந்தான்,' என இயைக்க. ஒண் சுடர் போல் - பிரகாசம் பொருந்திய சூரியனைப் போல, வரும் - தோன்றும் அயில் கொண்டு - வேலினால், மா - மா மரமான சூர பதுமனை, தடிந்தான் - வெட்டியவனாகிய முருகக் கடவுள், தஞ்சை - தஞ்சாக்கூரில் உள்ள, திரு மயில் அனையாய் - அழகிய மயிலைப் போன்ற தோழியே, மைந்தன் - (நம்) புதல்வன், தன்னை ஈன்ற நமக்கு - தன்னைப் பெற்ற நமக்கு, இருமையில் - இம்மை மறுமைகளில், எயும் - (நம்மை) அடையும், ஒருமையில் - ஒருமையாகிய இப்பிறப்பில், வந்து உற - வந்து அடைய, ஊரனை - (பரத்தையர் சேரிக்குச் செல்லும்) மருத நிலத் தலைவனை, தேருடன் தகைந்தான் - தேரோடு தடுத்தான். ஒருமையிலே, மயிலே, திரு மயிலே - ஏ, அசை.

406] தலைவி, தலைவனைப் புகழ்தல் [௩ய

'கொண்டானின் துன்னிய கேளிர்மற் றில்லைக் குறிப்பின்,'என்று
தண்டா தவர்சொன்ன சால்புகண் டேன்;தலம் ஏழ்புரக்கும்
வண்டார் மலர்ப்புயன் வாணன்தென் மாறை மகிழ்நர்முன்னாள்
உண்டா கியபழங் கேண்மைஇந் நாளும் ஒழிந்திலரே.

து - றை: '(தோழியே!) மகிழ்நர், முன்னாள் உண்டாகிய பழங் கேண்மை இந்நாளும் ஒழிந்திலர்; (ஆதலான்) "குறிப்பின், கொண்டானின் துன்னிய கேளிர் மற்று இல்லை," என்று தண்டாதவர் சொன்ன சால்பு கண்டேன்,' என இயைக்க. தலம் ஏழ் - ஏழுலகையும், மலர் - மலர் மாலை,

(கருவியாகு பெயர்), மகிழ்நர் - கணவர், கேண்மை - நட்பை, ஒழிந்திலர் - விட்டிலர், குறிப்பின் - கருதுவோமானல், கொண்டானின் - (பெண்டிர்க்குக்) கணவனைக்காட்டிலும், துன்னிய - நெருங்கிய, கேளிர் - சுற்றத்தார், மற்று இல்லை - வேறு இல்லை, தண்டாதவர் - (அறிவிலிருந்து) நீங்காதவராகிய பெரியோர், சால்பு - மாட்சிமையை, கண்டேன் - (யான் இன்று) அறிந்தேன். தோழி - முன்னிலை எச்சம்.

407] பாங்கி, மனைவியைப் புகழ்தல் [கக

சிறந்தார் புகழ்தரும் தீம்புனல் ஊரன்செய் தீமைஎல்லாம்
மறந்தார்வம் எய்தி வணங்குத லால்இவள் வாணன்தஞ்சை
நிறந்தா ரகைஅன்ன நித்திலம் போலும் நெடுங்குலத்தில்
பிறந்தார் நிறைந்தகற் போர்வடி வேபெற்ற பெற்றியளே.

து - ரை: [மனைவி - தலைவி] 'இவள், ஊரன் செய் தீமை எல்லாம் மறந்து ஆர்வம் எய்தி வணங்குதலால், நெடுங்குலத்தில் பிறந்தார் நிறைந்த கற்பு ஓர் வடிவு பெற்ற பெற்றியள்,' என இயைக்க. இவள் - இத்தலைவி, சிறந்தார் - (கல்வி அறிவு ஒழுக்கங்களிற்) சிறந்தவராகிய பெரியோர், புகழ் தரும் - புகழும் (தரு - துணை வினை விகுதி), செய் தீமை - வினைத்தொகை, ஆர்வம் எய்தி - விருப்பமுற்று, வணங்குதலால் - (அவனைத்) தொழுதலால், தஞ்சை - தஞ்சாக்கூரில், நிறம் - ஒளியில், தாரகை - நட்சத்திரம், நித்திலம் போலும் - முத்தையொக்கும், நெடுங்குலத்தில் - உயர்வாகிய குலத்தில், பிறந்தார் - பிறந்தவராகிய பெண்டிரின், கற்பு - கற்பானது, பெற்றியள் - பெருமையுடையவள்.

இக்கிளவிகள் யாவும் வாயில் வேண்டல், வாயில் மறுத்தல், வாயில் நேர்வித்தல், வாயில் நேர்தல் என்னும் நான்கு வகைக்கும் ஒக்குமாறு அறிந்துகொள்க.

## 3. ஓதற்பிரிவு

408] கல்விக்குப் பிரிவு தலைமகனுன் உணர்ந்த தோழி, தலைமகட்கு உணர்த்தல் [க

மல்வித் தகம்கொண்ட தோள்உடை யான்தஞ்சை வாணன்தொல்சீர்
நல்வித் தகன்புவி நாவில்வைத் தோன்வையை நாடனையாய்!
கல்வித் தடங்கடல் நீந்திய காதலர் கற்றவர்முன்
சொல்வித்த என்றழல் ஆர்சுரம் போகத் துணிந்தனரே.

கு - ரை : 'மல் வித்தகம் கொண்ட தோள் உடையான் தஞ்சை வாணன் தொல் சீர் நல் வித்து அகன் புவி நாவில் வைத்தோன் வையை நாடு அனையாய்! கல்வித் தடங்கடல் நீந்திய காதலர், கற்றவர் முன் சொல் வித்த, என்று அழல் ஆர் சுரம் போகத் துணிந்தனர்,' என இயைக்க. மல் வித்தகம் - மற்றொழிலில் சாமர்த்தியம், தொல் சீர் நல் வித்து - பழம் புகழாகிய நல்ல விதையை, அகன் - விசாலமான, புவி - பூமியிலுள்ளவர்களின் (இடவாகு பெயர்), நாவில் வைத்தோன் - நாவில் பயிராக வைத்தவனது (என்றது, 'எல்லோரும் தன்னைப் புகழத் தகுந்த செயல்களைச் செய்தவன்' என்றபடி), கல்வித் தடங்கடல் - கல்வியாகிய பெருங்கடலை, காதலர் - தலைவர், சொல் - (தாம் கற்ற கல்வியால் உண்டான) கீர்த்தியாகிய விதையை, வித்த - விதைக்க, என்று - சூரியனுடைய ('என்றைத்தொட விண்ணில் எழுந்துறலால்' - கந்தபு. விந்த கிரி. செய். 4), அழல் ஆர் - வெப்பம் நிறைந்த, சுரம் - வழியில்.

409] தலைமகள், கார்ப்பருவம் கண்டு புலம்பல் [உ

யாணர்க் குழல்மொழி! என்செய்கு வேன்!கல்வி எல்லைஎல்லாம்
காணப் பிரிந்தவர் காண்கில ரால்,கடல் மேய்ந்துதஞ்சை
வாணற் கெதிர்ந்தவர் மங்கையர் போலும்என் வல்உயிரின்
ஊணற்பம் என்னஎண் ணுவரும் மேகம் உருமுடனே.

கு - ரை : [கார்ப்பருவம் - மழை காலமாகிய ஆவணி புரட்டாசி மாதங்கள்] 'யாணர்க் குழல் மொழி! மேகம், கடல் மேய்ந்து, தஞ்சை வாணற்கு எதிர்ந்தவர் மங்கையர் போலும் என் வல் உயிர் இன் ஊண் அற்பம் என்ன எண்ணு, உருமுடனே வரும்; கல்வி எல்லை எல்லாம் காணப் பிரிந்தவர் காண்கிலரால், என் செய்குவேன்!' என இயைக்க. யாணர் - அழகையுடைய, குழல் மொழி - குழலிசைபோன்ற மொழியை உடையவளே (உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), கடல்

மேய்ந்து - கடல் நீரை உட்கொண்டு, வாணற்கு - வாணனை (வேற்றுமை மயக்கம்), எதிர்ந்தவர் - எதிர்ந்தவருடைய, மங்கையர் போலும் - (வருந்தும்) மனைவியரைப் போலும், வல் உயிர் - வலிய உயிராகிய, இன் ஊண் - இனிய உணவானது, அற்பம் என்ன எண்ணு - (உட்கொள்ளுதற்கு) எளியது என்ன நினைத்து (எண்ணு - 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினை எச்சம்), உரும் - இடி, பிரிந்தவர் - பிரிந்தவராகிய தலைவர், காண்கிலரால் - (இதை) அறிந்திலர் ஆதலால். செய்துவேன் - து, சாரியை.

410]                தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்                [rh

காதல் கயம்படிந் துன்னொடு காமக் கனிநுகரா
தோதற் ககன்ற உணர்வுடை யோர்,உடை நீர்உலக
மாதர்க் கமைந்தருள் வாணன்தென் மாறை வரக்கடவார்
ஆதற் கணங்கனை யாய்!புயல் ஏது அறிந்தருளே.

து - ரை: 'அணங்கு அனையாய்! காதல் கயம் படிந்து உன்னொடு காமக் கனி நுகராது ஓதற்கு அகன்ற உணர்வு உடையோர், உடை நீர் உலக மாதர்க்கு அமைந்தருள் வாணன் தென்மாறை வரக்கடவார் ஆதற்குப் புயல் ஏது; அறிந்தருள்,' என இயைக்க. காதல் கயம் - காதலாகிய குளத்தில், படிந்து - மூழ்கி, காமக்கனி - இன்பமாகிய கனியை, நுகராது - அனுபவியாமல், ஓதற்கு - கல்வி பயிலுதற்கு, அகன்ற - பிரிந்து சென்ற, உணர்வு உடையோர் - அறிவையுடையவராகிய தலைவர், உடைநீர் உலக மாதர்க்கு - ஆடையாகிய கடலையுடைய பூமி தேவிக்கு, அமைந்தருள் - (கணவனுய்ப்) பொருந்தியருளிய, மாறை - மாறையில், வரக் கடவார் ஆதற்கு - வரக் கடமைப்பட்டவர் ஆவதற்கு, புயல் - (இப்பொழுது வந்த) மேகம், ஏது - நிமித்தம்.

# 4. காவற்பிரிவு

411] தோழி, தலைவன் காவற்பிரிவு உணர்த்தல் [க

விண்காவல் கொண்ட திலோத்தமை தான்முதல் மெல்லியலார்
கண்காவல் கொண்டருள் காரிகைக் காவலர் கார்க்கடல்சூழ்
மண்காவல் கொண்ட மனத்தினர் ஆயினர்; வாணன் தஞ்சைப்
பண்காவல் கொண்ட மொழிச்செய்ய வாய்இதழ்ப் பைங்கிளியே!

து - ரை: 'வாணன் தஞ்சைப் பண் காவல் கொண்ட மொழிச் செய்ய வாய் இதழ்ப் பைங்கிளியே! விண் காவல் கொண்ட திலோத்தமை முதல் மெல் இயலார் கண் காவல் கொண்டருள் காரிகைக் காவலர், கார்க் கடல் சூழ் மண் காவல் கொண்ட மனத்தினர் ஆயினர்,' என இயைக்க. தஞ்சை - தஞ்சாக்கூரில், பண் - இசையை, காவல் கொண்ட - பாதுகாத்தலைச் செய்த, மொழி - சொல்லையும், இதழ் - உதடுகளையும் உடைய, பைங்கிளியே - பைங்கிளி போன்றவளே, விண் காவல் கொண்ட - தேவலோகத்தைக் காத்தலை மேற்கொண்ட, திலோத்தமை முதல் மெல் இயலார் - திலோத்தமை முதலிய பெண்டிருடைய, கண் - கண்கள், காவல் கொண்டருள் - காத்தலைச் செய்தருளும், காரிகை - அழகையுடைய, காவலர் - தலைவர், கார்க்கடல் சூழ் - கரிய கடல் சூழ்ந்த, மண் - பூமியை, காவல் கொண்ட - காத்தலைக் கருதிய, மனத்தினர் - மனத்தையுடையவர். உலகினர் எவரும் தவம் செய்து இந்திர பதவிக்கு வாராதபடி திலோத்தமை முதலிய தேவ மாதர் இடையூறு செய்து வருவர் என்பது புராண வழக்கு. திலோத்தமைதான் - தான், அசை.

412] தலைமகள், கூதிர்ப்பருவம் கண்டு வருந்தல் [உ

மன்உயிர் காவலன் வாணன்தென் மாறையில் வந்தளியார்
என்உயிர் காவலர் ஏந்திழை யாய்!இத யம்புலர்த்திக்
கொன்உயிர் வாடை கொடும்பனி நீரில் குளிர்குழைத்துப்
பின்உயி ராமல்என் மேல்பூசும் நாளும்என் பேசுவதே?

து - ரை: [கூதிர்ப் பருவம் - குளிர் காலமாகிய ஐப்பசி கார்த்திகை மாதங்கள்] 'ஏந்து இழையாய்! இதயம் புலர்த்திக் கொன் உயிர் வாடை, கொடும்பனி நீரில் குளிர் குழைத்துப் பின் உயிராமல் என்மேல் பூசும் நாளினும், காவலர், மன் உயிர் காவலன் வாணன் தென்மாறையில் வந்து என் உயிர் அளியார்; பேசுவது என்?' என இயைக்க. ஏந்து இழையாய் - அழகிய ஆபரணமணிந்தவளே, இதயம் புலர்த்தி - மனத்தை உலர்த்தி,

கொன் உயிர் – அச்சத்தை வீசும், வாடை - வாடைக்காற்று, பனி நீரில் - பனியாகிய நீரில், குளிர் - குளிரை, பின் - பின்பு, உயிராமல் - (யான்) மூச்சு விடாமல், நாளும் - நாளிலும், காவலர் - தலைவர், மன் உயிர் காவலன்- (உலகில்) நிலைபெற்ற உயிர்களைக் காத்தலில் வல்லவனாகிய, அளியார் - காக்க மாட்டார், பேசுவது - (யான்) சொல்லத்தகுவது.

413] தோழி, ஆற்றுவித்தல் [௺

'வரற்காலம் என்றென் றெனப்பல கூடல் வளைத்துதிரம்
விரற்கால இன்று மெலியல்மின் னே!சென்று மேதினிகாத்
துரற்கால குஞ்சரம் அஞ்சமஞ் சூர்ந்துறை வீசுகின்ற
சரற்காலம் வந்தடைந் தார்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே.

து - ரை : 'மின்னே! தஞ்சை வாணன் தமிழ் வெற்பர், சென்று மேதினிகாத்து, உரல் கால குஞ்சரம் அஞ்ச மஞ்சு ஊர்ந்து உறை வீசுகின்ற சரற்காலம் வந்து அடைந்தார்; (ஆதலால்) "வரல் காலம் என்று என்று," எனப் பல கூடல் வளைத்து, விரல் உதிரம் கால இன்று மெலியல்,' என இயைக்க. மின்னே - மின்னலைப் போன்றவளே (உவமையாகு பெயர்), மேதினி - நாட்டை, உரல் கால - உரல் போன்ற கால்களை உடையனவாகிய, குஞ்சரம் - யானைகள், மஞ்சு - மேகம், ஊர்ந்து - (இடித்துப்) பரவி, உறை - மழைத்துளிகளை, சரற்காலம் - கூதிர்ப்பருவத்தில், வந்து - (திரும்பி) வந்து, வரல் காலம் - (தலைவர்) வருதலைச் செய்யும் காலம், என்று என்று என - எப்போது எப்போது என (அடுக்கு, விரைவு பற்றியது), பல கூடல் வளைத்து - (தரையில்) பல சுழிக்குறிகளைச் சுழித்து, கால - ஒழுக, மெலியல் - வருந்தாதே.

கூடல் வளைத்தலாவது, தலைவனைப் பிரிந்த தலைவி, அவன் வருதலைக் குறி பார்த்தறியக் கண்களை மூடிக்கொண்டு தரையில் விரலால் சுழிக்குறி சுழித்தல். இது 'கூடல் இழைத்தல்' எனவும் வழங்கப்படும். அச்சுழிக் குறியின் முதலும் முடிவும் தம்மிற் கூடுமாயின் தலைவன் விரைவில் வருவன் எனவும், கூடாவாயின் வாரான் எனவும் தலைவி துணிவள் என்பர். ('வசுதேவர்தம் கோம கன்வரின் கூடிடு கூடலே' - திவ். நாய்ச். செய். 3.)

## 5. தூதிற்பிரிவு

414] தோழி, தலைவன் தூதிற்பிரிவு உணர்த்தல் [க

**தூ**தாக அன்பர் செலத்துணிந் தார்என் றும் சொல்புலவோர்
மாதாக வன்பசி தீர்த்தருள் வாணன்தென் மாறைஇந்து
மீதாக அம்பு கிடந்தன போல்உண்கண் மெல்லியல்!இப்
போதாக வம்புகல் வோர்இக லார்தம் புரம்புகவே.

து - ரை: 'மெல்லியல்! அன்பர், இப்போது ஆகவம் புகல்வோர், இகலார், தம் புரம் புகத் தூதாகச் செலத் துணிந்தார்,' என இயைக்க. என்றும் - எந்நாளும், சொல் புலவோர் - சொல்லில் வல்ல அறிஞரின், மா தாக வன்பசி - பெரிய நீர் வேட்கையையும் கொடிய பசியையும், தீர்த்தருள் - நீக்கியருளும், மாறை - மாறை நாட்டில், இந்துமீதாக - சந்திரன் மேல், போல் - போன்ற, உண்கண் - மையுண்ட கண்களையுடைய, மெல்லியல் - மென்மைத்தன்மை வாய்ந்தவளே (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; அண்மை விளி), ஆகவம் - போரை; புகல்வோர் - விரும்புபவராகிய இரு பெரு வேந்தர், இகலார் - (தம்முள்) மாறுபடாதவராய், தம் புரம் புக - (பாசறையை நீங்கித்) தம் நகரங்களை அடையும்படி.

415] தலைவி, முன் பனி கண்டு வருந்தல் [உ

**ம**லிகின்ற வண்புகழ் வாணன்தென் மாறையை வாழ்த்தலர்போல்
மெலிகின்ற சிந்தையும் மேனியும் கொண்டு விளர்ப்பெனும்பேர்
பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந் தேனைப் புரந்தருளார்
நலிகின்ற முன்பனி நாளும்நண் ணார்முனை நண்ணினரே.

து - ரை: [முன் பனி - முன் பனிப் பருவமாகிய மார்கழி தை மாதங்கள்] 'நண்ணார் முனை நண்ணினர், மெலிகின்ற சிந்தையும் மேனியும் கொண்டு விளர்ப்பு எனும் பேர் பொலிகின்ற கஞ்சுகம் போர்த்து இருந்தேனை நலிகின்ற முன் பனி நாளும் புரந்தருளார்,' என இயைக்க. நண்ணார் முனை நண்ணினர் - பகைவருடைய போர்க்களத்தை அடைந்தவராகிய தலைவர், விளர்ப்பு - வெளுப்பு, பொலிகின்ற - விளங்குகின்ற, கஞ்சுகம் - சட்டையை, நாளும் - நாளிலும், புரந்தருளார் - காத்தருளார். முன்பனிக் குளிர்க்குச் சட்டை போட வேண்டுதலால், தலைவியானவள் 'வேட்கை நோயாலேற்பட்ட விளர்ப்பென்னும் கஞ்சுகம் போர்த்திருந்தேனை,' என்றாளென்க.

416] தோழி, ஆற்றுவித்தல் [ரு

சுற்றும் குழல்!நின் பிணிவிடுப் பான்வந்து தோன்றினர்;பார்
முற்றும் பொழிகின்ற முன்பனி நாள்முகி லும்கட லும்
வற்றும் பருவத்தும் மண்புரப் பான்தஞ்சை வாணன்ஒன்னார்ச்
செற்றும் படையின்வெம் போர்தணிப் பான்அன்று சென்றவரே.

கு - ரை: 'சுற்றும் குழல்! முகிலும் கடலும் வற்றும் பருவத்தும் மண் புரப்பான் தஞ்சை வாணன் ஒன்னார்ச் செற்றும் படையின் வெம்போர் தணிப்பான் அன்று சென்றவர், பார் முற்றும் பொழிகின்ற முன் பனி நாள் நின் பிணி விடுப்பான் வந்து தோன்றினர்,' என இயைக்க. சுற்றும் குழல் - செருகும் குழலையுடையவளே (சினையாகுபெயர்; அண்மை விளி), முகிலும் - மேகமும், பருவத்தும் - காலத்திலும், மண் - உலகத்தை, புரப்பான்- காப்பவனாகிய, ஒன்னார் - பகைவரை, செற்றும் - அழிக்கும், படையின் - சேனையைப் போல, வெம்போர் - (இரு பெரு வேந்தர் செய்யும்) கொடிய போரை, தணிப்பான் - தணிக்க (பானீற்று வினையெச்சம்), அன்று - முந்நாளில், சென்றவர் - தூதாகிப் போனவர், பார் - பூமி, நாள் - காலத்தில், பிணி - வேட்கை நோயை, விடுப்பான் - தீர்க்க (பானீற்று வினையெச்சம்).

# 6. துணைவயின் பிரிவு

417] துணைவயின் பிரிந்தமை தோழி தலைமகட்கு உரைத்தல் [க

நண்பான மன்னர்க் கிடர்தணிப் பான்எண்ணி நல்உதவிப்
பண்பால்நம் மன்னர் படர்தலுற் றார்பனி நீர்பொழியும்
தண்பானல் அம்தொடை அம்புய வாணன் தமிழ்த்தஞ்சைவாழ்
வெண்பால் நலம்கொள்செவ் வாய்அன்ன மேஅன்ன மென்னடையே!

து - ரை : 'மெல் நடையே! நம் மன்னர், நல் உதவிப் பண்பால், நண்பான மன்னர்க்கு இடர் தணிப்பான் எண்ணிப் படர்தல் உற்றார்,' என இயைக்க. பனி நீர் பொழியும் - பனியால் தன்னிடத்துத் தேங்கிய நீரைப் பொழிகின்ற, தண் பானல் அம் தொடை - குளிர்ச்சியான கருங்குவளை மலர் மாலையைத் தரித்த (அம் - சாரியை), அம் - அழகிய, புயம் - தோள் களையுடைய, பால் - பாவின், நலம் - இனிமையை (பண்பாகு பெயர்), மெல் நடையே - மென்மையான நடையை உடையவளே (பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), நல் உதவிப் பண்பால் - நல்லுதவிக் குணத்தினால், படர்தல் - செல்லுதல். பின் பனிக் காலமாதலால், 'பனி நீர் பொழியும் தண்பானல்' எனக் கூறினாளென்க.

418] தலைமகள், பின் பனிப் பருவம் கண்டு புலம்பல் [உ

இன்னல் படுகின்ற என்னைஎண் ணார்தமக் கின்துணையாம்
மன்னர்க் குதவி பிரிந்தநம் காதலர் வாணன்தஞ்சைக்
கன்னல் கடிகை அறிவதல் லால்பகல் காண்பரிதாம்
பின்னல் கனையிருள் கூர்துன்பம் மேவிய பின்பனியே.

து - ரை : [பின் பனிப் பருவம் - மாசி பங்குனி மாதங்கள்] 'தமக்கு இன் துணை ஆம் மன்னர்க்கு உதவி பிரிந்த நம் காதலர், வாணன் தஞ்சைக் கன்னல் கடிகை அறிவது அல்லால் பகல் காண்பு அரிது ஆம் பின்னல் கனை இருள் கூர் துன்பம் மேவிய பின் பனி இன்னல் படுகின்ற என்னை எண் ணார்,' என இயைக்க. தஞ்சை - தஞ்சாக்கூரில், கன்னல் - நாழிகை அறி விக்கும் வட்டிலால், கடிகை - நாழிகையை, அறிவது அல்லால் - அறிந்து கொள்வது அல்லாமல், பகல் - சூரியனை, காண்பு - காணுதல், அரிது ஆம் - கஷ்டமாகிய, பின்னல் - தொடர்ச்சியாகிய, கனை இருள் கூர் - செறிந்த இருள் மிகுந்த, மேவிய - பொருந்திய, பின் பனி - பின் பனிக் காலத்தில், இன்னல்படுகின்ற - துன்பப்படுகின்ற, எண்ணார் - நினையார். 'யான் இதற்கு என் செய்வேன்!' என்றாள் என்க.

419] தோழி, ஆற்றுவித்தல் [ஈ

வடுக்கண் டனையகண் மங்கைநல் லாய்!தஞ்சை வாணன்வெற்பின்
அடுக்கம் குளிர அசைகின்ற வாடை அகன்றவர்க்கு
நடுக்கம்செய் பின்பனி நாளின்வந் தார்அமர் நண்பன்உற்ற
இடுக்கண் களையவென் றேஅகன் கானம் இகந்தவரே.

து - ரை : 'வடுக் கண்டனைய கண் மங்கை நல்லாய்! அமர் நண்பன் உற்ற இடுக்கண் களைய என்று அகன் கானம் இகந்தவர், தஞ்சை வாணன் வெற்பின் அடுக்கம் குளிர அசைகின்ற வாடை அகன்றவர்க்கு நடுக்கம் செய் பின் பனி நாளின் வந்தார்,' என இயைக்க. வடு - மாம்பிஞ்சை, கண்டனைய - கண்டாற்போன்ற, கண் - கண்களையுடைய, மங்கை நல்லாய் - மங்கைப்பருவமுடைய குணத்திற் சிறந்த தலைவியே, அமர் - போரில், நண்பன் உற்ற - (தம்) சினேகிதனாகிய அரசன் அடைந்த, இடுக்கண் - துன்பத்தை, களைய என்று - நீக்கக் கருதி, அகன் - விசாலமான, கானம் - காட்டை, இகந்தவர் - கடந்தவராகிய தலைவர், அடுக்கம் - மலைச்சாரல், குளிர - குளிர்ச்சியடையும்படி, அசைகின்ற - வீசுகின்ற, வாடை - வாடைக் காற்று, அகன்றவர்க்கு - (காதலரைப்) பிரிந்தவர்க்கு, நடுக்கம் - நடுக்கத்தை, நாளின் - காலத்தில், என்றே - ஏ, அசை.

# 7. பொருள்வயின் பிரிவு

420] பொருள்வயின் பிரிவு தோழி தலைமகட்கு உணர்த்தல் [க

மஞ்சைப் புனைமதில் மாறை வரோதயன் வாணர்பிரான்
தஞ்சைப் பதிஅண்ணல் எண்ணலர் போல்தனி நாம்இருக்க
நெஞ்சைப் பொருள்வயின் வைத்துநம் கேள்வர்நன் னீள்மதியின்
பிஞ்சைப் புரைநுத லாய்!பிரி வான்இன்று பேசினரே.

கு - ரை : 'நல் நீள் மதியின் பிஞ்சைப் புரை நுதலாய்! நாம் தஞ்சைப்பதி அண்ணல் எண்ணலர்போல் தனி இருக்க, நம் கேள்வர், நெஞ்சைப் பொருள்வயின் வைத்து, இன்று பிரிவான் பேசினர்,' என இயைக்க. மதியின் பிஞ்சைப் புரை - பிறைச்சந்திரனையொத்த, நுதலாய் - நெற்றியை உடையவளே, மஞ்சை - மேகத்தை, புனை - அணிந்த, வரோதயன் - (குடிகள் செய்த) வரத்தினால் தோன்றியவனும், வாணர் பிரான் - வாணர் குலத்துக்குத் தலைவனுமாகிய, தஞ்சைப்பதி அண்ணல் - தஞ்சாக் கூரின் வேந்தனை, எண்ணலர் போல் - நினையாதவராகிய பகைவரைப் போல, கேள்வர் - கணவர், பொருள்வயின் - பொருளின்மீது, பிரிவான் - (நம்மைப்) பிரியக்கருதி (வானீற்று வினையெச்சம்), பேசினர் - அதை என்னிடம்) கூறினர்.

421] தலைவி, இளவேனில் பருவம் கண்டு புலம்பல் [உ

நங்கண் இரங்க அரும்பொருள் தேட நடந்தஅன்பர்,
செங்கண் இருங்குயில் ஆர்ப்பது கேட்கிலர், செந்தமிழோர்
தங்கண் இடும்பை தவிர்த்தருள் வாணன்தென் தஞ்சைவஞ்சி
திங்கள் நிவந்தது போல்கவின் ஆர்முகத் தேமொழியே!

கு - ரை : [இளவேனில் பருவம் - சித்திரை வைகாசி மாதங்கள்] 'தஞ்சை வஞ்சி திங்கள் நிவந்ததுபோல் கவின் ஆர் முகத் தேம் மொழியே! நம் கண் இரங்க அரும்பொருள் தேட நடந்த அன்பர், செங்கண் இருங் குயில் ஆர்ப்பது கேட்கிலர்,' என இயைக்க. செந்தமிழோர்தம்கண் - செந்தமிழ்ப் புலவரிடத்துண்டான, இடும்பை - தரித்திரத்தை, தஞ்சை - தஞ்சையிலுள்ள, வஞ்சி - வஞ்சிக் கொம்பானது, திங்கள் - பூரணச்சந்திரனை, நிவந்ததுபோல் -ஏந்தியது போன்ற, கவின் ஆர் - அழகு பொருந்திய, தேம் மொழியே - இனிமையான சொல்லையுடையவளே (பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை), கண் இரங்க - கண்கள் வருந் தும்படி, நடந்த - சென்ற, இருங்குயில் - கருங்குயில், ஆர்ப்பது - (இள

வேனிற்காலம் வந்ததால்) கூவுவதை. 'கேட்டிருந்தால் உடனே வந் திருப்பர்' என்பாள், 'கேட்கிலர்' என்றாள்.

422] தலைவியைத் தோழி ஆற்றுவித்தல் [ரு

வார்த்தன பார மடமயி லே!குயில், 'மாருதமாம்
தேர்த்தனி வீரன் திருநாளும் வந்தது சேர்மின்சென்றீர்!
தார்த்தட மேரு எனும்புய வாணன்தஞ் சாபுரி,'என்
றார்த்தது கேட்டுவந் தார்பொருள் தேட அகன்றவரே.

து - றை : 'வார்த்தன பார மட மயிலே! குயில், "மாருதம் ஆம் தேர்த்தனி வீரன் திருநாளும் வந்தது; சென்றீர்! தார்த்தடமேரு எனும் புயவாணன் தஞ்சாபுரி சேர்மின்," என்று ஆர்த்தது கேட்டு, பொருள் தேட அகன்றவர் வந்தார்,' என இயைக்க. வார் - கச்சைத் தரித்த, தன பாரம் - முலைச்சுமையை உடைய, மடமயிலே - இளமயில் போன்றவளே, குயில் - குயிலானது, மாருதம் ஆம் - தென்றலாகிய, தேர் - தேரையுடைய, தனி வீரன் - ஒப்பற்ற வீரனாகிய மன்மதனுக்குரிய, திருநாளும் - (வசந்த விழா என்னும்) திருவிழாவும், சென்றீர் - (தலைவியரைப் பிரிந்து) சென்ற வர்களே, தார் - மலர் மாலை தரித்த, தடமேரு எனும் - பெரிய மேரு மலையைப் போலும், தஞ்சாபுரி - தஞ்சாக்கூரில், சேர்மின் (நீங்கள் உங் கள் தலைவியரிடம் சென்று) சேருங்கள்.

423] தலைமகன், தலைமகளது உருவு வெளிப்பாடு கண்டு சொல்லல் [ச

மைக்குஞ் சரநிரை யால்தஞ்சை வாணன் மருவலரைக்
கைக்கும் களம்கெழு பாசறை யூடு கயலும்வில்லும்
மொய்க்கும் சுடர்இள அம்புலி தானும் முயங்கி,எல்லாத்
திக்கும் தொழவரு மேசுருள் ஓலைத் திருமுகமே.

து - றை : [பாசறையில் தலைவன், தலைவியைப்பற்றிய நினைப்பின் மிகுதியால் அவள் உருவம் வெளிப்படுதலைக் கண்டு கூறுதல்;- உருவு வெளிப்பாடு - உரு வெளித்தோற்றம்] 'பாசறையூடு சுருள் ஓலைத் திரு முகம், கயலும் வில்லும் மொய்க்கும் சுடர் இள அம்புலிதானும் முயங்கி, எல்லாத் திக்கும் தொழ வரும்,' என இயைக்க. மைக்குஞ்சர நிரையால் - கரிய யானைக்கூட்டத்தினால், மருவலரை - பகைவரை, கைக்கும் - வருத்து கின்ற, களம் கெழு - போர்களத்தைப்போன்ற (கெழு - உவம உருபு), பாசறையூடு - பாடி வீட்டில், சுருள் ஓலை - சுருள் எனவும் ஓலை எனவும் வழங்கும் காதணிகளை அணிந்த, திருமுகம் - (தலைவியின்) அழகிய முக மானது, கயலும் - கயல் மீன் போன்ற கண்களும், வில்லும் - வில்லைப் போன்ற புருவமும், மொய்க்கும் சுடர் - பரவும் ஒளியையுடைய, இள

அம்புலிதானும் - இளம்பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியையும் (தான் - அசை), முயங்கி - பொருந்தி, திக்கும் - திசைகளிலும், தொழு - (உடன்) வணங்க. கயலும் வில்லும் புலியும், பாண்டியர் சேரர் சோழர் ஆகிய மூவேந்தரின் முத்திரை ஆதலால், அம்மூவரும் முத்திரை இட்டு வர விடுத்த சுருளோலையாகிய நிருபம் ஒன்று எட்டுத்திக்கிலுள்ள வரும் தொழும்படி தன்னைத் தேடி வரும் என்னும் சிலேடைப் பொருள் தோன்றுதலறிக.

424] பாசறை முற்றி மீண்டு ஊர்வயின் வந்த தலைவன், பாகற்குச் சொல்லல் [ரு

மால்கொண்ட வாரண வாணன்தென் மாறை வலவ! நண்ணார்
கால்கொண்ட வாள்அமர் கையகல் பாசறைக் கைவயின்முள்
கோல்கொண்ட வாறும்,நின் ஏவல்கொண் டியானிக் கொடிநெடுந்தேர்
மேல்கொண்ட வாறும்,நம் ஊர்வந்த வாறும் வியப்பெனக்கே.

து - ரை: 'வலவ! நண்ணார் கால் கொண்ட வாள் அமர் கையகல் பாசறைக் கைவயின் முள் கோல் கொண்ட ஆறும், யான் நின் ஏவல் கொண்டு இக்கொடி நெடுந்தேர் மேல் கொண்ட ஆறும், நம் ஊர் வந்த ஆறும் எனக்கு வியப்பு,' என இயைக்க. மால் கொண்ட - மயக்கம் கொண்ட, வாரணம் - யானைகளையுடைய, மாறை - மாறை நாட்டி லிருக்கும், வலவ - தேர்ப்பாகனே, நண்ணார் - பகைவர், கால் கொண்ட - தொடங்கிய, வாள் அமர் - கொடிய போரை, கையகல் - நீங்கிய, பாசறை - பாடி வீட்டில், கைவயின் - (நீ உனது) கையில், கோல் - (குதிரை செலுத்துங் கருவியாகிய) தாற்றுக்கோலை, ஆறும் - விதமும், ஏவல் - தூண்டுதலை, தேர்மேல் கொண்ட ஆறும் - தேரின்மேல் ஏறிய விதமும், வியப்பு - ஆச்சரியம்.

425] தலைமகளோடு இருந்த தலைமகன், கார்ப்பருவம் கண்டு சொல்லல் [சு

கொத்தலர் ஓதிஅம் கொம்பர்அன் னாள்பொங்கு கொங்கைவிம்ம
முத்தலர் ஆகம் முயங்கினம் யாம்;முழு நீர்விழிபோல்
மைத்தலர் நீல மலர்வயல் சூழ்தஞ்சை வாணன்வண்மைக்
கைத்தலம் மான இனிப்பொழி; வாழிய! கார்முகிலே!

து - ரை: 'கார் முகிலே! யாம், கொத்து அலர் ஓதி அம் கொம்பர் அன்னாள் பொங்கு கொங்கை விம்ம முத்து அலர் ஆகம் முயங்கினம்; இனி முழு நீர் விழி போல் மைத்து அலர் நீல மலர் வயல் சூழ் தஞ்சை வாணன் வண்மைக் கைத்தலம் மானப் பொழி; வாழிய!' என இயைக்க. கார்

முகிலே - கார்கால மேகமே, கொத்து அலர் ஓதி - கொத்தாயிருக்கும் மலரைச் சூடிய கூந்தலையுடைய, அம் - அழகிய, கொம்பர் அன்னாள் - பூங்கொம்பையொத்தவளது, பொங்கு கொங்கை - பருத்த முலைகள், விம்ம - பூரிக்க, முத்து - முத்து மாலை (கருவியாகு பெயர்), அலர் - விளங்குகின்ற, ஆகம் - மார்பை, முயங்கினம் - தழுவினேம், முழு நீர் - நிறைந்த நீரில், விழிபோல் - கண்ணைப் போல, மைத்து - கருமையுடையதாய், அலர் - மலர்ந்த, நீல மலர் - கருங்குவளை மலர் பொருந்திய, வண்மை - கொடைத் தன்மையுடைய, கைத்தலம் மான - கைத்தலத்துக்கு ஒப்பாக, பொழி - (மழையைப்) பெய்வாயாக, வாழிய - (உன்னால் உலகம்) வாழக் கடவதாக.

இந்நூலின் முதற்கவியைப் 'புயலே' எனத் தொடங்கிய புலவர் பெருமான், ஈற்றுக் கவியை 'முகிலே' என அதன் பரியாயப் பெயரால் மண்டலித்து முடித்தனர் என்க.

## கற்பியல் முற்றிற்று.

களவியல், 280; வரைவியல், 86; கற்பியல், 59;

ஆக இயல் மூன்றுக்குச் செய்யுள், 425.

# அகப்பொருட்செய்தி

## நாள் வரையறை*

| பாட்டு முதல் | பாட்டு வரை | செய்தி நாள் |
|---|---|---|
| 1 | 33 | 1-ஆம் நாள் |
| 34 | 38 | 2-ஆம் நாள் |
| 39 | 68 | 3-ஆம் நாள் |
| 69 | 100 | 4-ஆம் நாள் |
| 101 | 143 | 5-ஆம் நாள் |
| 144 | 159 | 6-ஆம் நாள். |
| 160 | 189 | 7-ஆம் நாள் |
| 190 | 193 | 8-ஆம் நாள் |
| 194 | 208 | 9-ஆம் நாள் |
| 209 | 214 | 10-ஆம் நாள் |
| 215 | 227 | 11-ஆம் நாள் |
| 228 | 236 | 12-ஆம் நாள் |
| 237 | 238 | 13-ஆம் நாள் |
| 239 | 253 | 14-ஆம் நாள் |
| 254 | 255 | 15-ஆம் நாள் |
| 256 | 273 | 16-ஆம் நாள் |

16-ஆம் நாள் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிந்த தலைமகன் 51-ஆம் நாள் மீண்டு வந்தமையால், 34 நாள் இடைப்பட்டன என உணர்க.

| | | |
|---|---|---|
| 274 | 287 | 51-ஆம் நாள் |
| 288 | 304 | 52-ஆம் நாள் |
| 305 | 348 | 53-ஆம் நாள் |
| 349 | 354 | 54-ஆம் நாள் |
| 355 | 365 | 55-ஆம் நாள் |
| 366 | 425 | 56-ஆம் நாள் |

*அகப்பொருட்செய்தி நிகழ்ந்தமைக்கு இங்ஙனம் நாள் வரையறை செய்து காட்டியவர், இந்நூலின் பழைய உரையாசிரியராகிய குன்றத்தூர் அட்டாவதானி சோக்கப்ப நாவலர்.

# பாட பேதங்கள்

[எண்—பாட்டெண்]

3. அழைப்பவர்போல்

7. இயம்புமினே

14. கடற்கெதிர்ந்த

,, வரம்பினி னிற்பதன்

34. சுறவக்குழையைச்

38. வரையினுடன்

39. மற்றிங்கனீ

43. மாதங்க வாணன்

,, யார்இந்த வீரங்களே

45. சிலம்பினின்றென்

47. தன்மேல் விளாவ

,, தன்மேல் வளாவ

57. நண்பகல்

,, நிழலைச் சுழித்து

60. தண்ணளியால்

65. சுனை நயப்பு உரைத்தல்

66. சுனைவியந்து உரைத்தல்

67. காட்டலுமாம்

70. தனிப்போந்தனன்

71. கரைத்தாரு வுந்திய வையை நன் னுடன் கவிஞர்க் கெல்லாம்

75. வினவிப்பின்

93. ஆகங்கூட்டாவிடில்

96. பொல்லா திருண்டது

105. தீருங்குறையில்லையே

117. வெற்பின்

118. கால்கொண்டுமா

122. அல்லவெல்லாம்படி

,, அல்லதெல்லாப்படி

131. தளிர்ச்செவ்வனம்

,, தளிர் செவ்வனம்

,, விளையாடுகம்

133. தளரவுமிங்

,, தளர்வுறுமிங்

135. நல்லமுதும்

138. எய்துகமே

149. முன் ஞன்முகத்தோன்

153. கூனலஞ்சாய்

159. நல்லவரே

162. அரிதாம்

165. நாகந்தவர் மல்கு

,, நாகக்குழாமல்கு

169. பால்வர

177. கியைவதன்

182. ஆவிமூழ் கத்தனியே

192. தொழில்புரிந்தக்

202. முடிந்தன

208. பொன்பொதி

223. வரைத்தமிழ்

224. வெற்பகத்தில்

225. மாறையில் வஞ்சிவண்டியாழ்

228. தாங்குகில்லாது

232. எம் மான்மருங்கை

237. தகட்டுடெங்கும்

,, தகடுடெங்கும்

,, தூங்கிடையே

243. கண்ணினீர்

253. அளித்தார் அளித்தக லத்த ணைத் தாரன்றணங்கின் முன்னே

264. என்னவே அரவம்

270. தளைமயில்

,, ஆவித்த காந்த ளருமணி

273. கொழுதி மிருங்குழல்

,, கொடுங்கையின்மேல்

282. கண்டியாயும்

287. மணப்பொருட்டால்

296. எங்கா தலர்குறி

298. அறியாமை யாளென்று

314. என்னையன்னுர்
323. தனிபோயினளே
331. அகன்றனளோ
351. காதலர் தாயர்
352. சூதலர்ந் தொல்க
358. நீர்மை சொன்ன
,, கியாம்வரை
359. சமர்க்கெழுந்த
361. இயம்புமின்னே
366. மாதுமின்றே
373. சுழியும்
386. வய்தும்
387. தொன்னலம்
410. உடையோனுலக
411. காரிகை காவலர்
412. மன்னுயிர்க் காவலன்
416. வாணனென்னுர்
422. சேர்மின் சென்ருர்
,, தஞ்சாபுரிநின்
423. நிரையான்றஞ்சை

# செய்யுள் முதற்குறிப்பு

## அகராதி

[எண்-பக்க எண்]


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகில்வந்து | ௧௪ | இன்னே | ௧௫௮ | ஓங்கண்ணல் | ௧0௧ |
| அடிமலர் | ௧௯௫ | ஈன்று | ௧௧0 | ஓதக் | ௧0௯ |
| அணிமா | ௬௪ | உயரா | ௧௪௨ | ஓவவில் | ௧0௩ |
| அணியும் | ௧௬ | உரவிப் | ௧௪௬ | கண்சாயல் | ௬௪ |
| அயிரார் | ௧௪௮ | உரைத்தென் | ௪௮ | கந்தாரம் | ௮௩ |
| அரியும் | ௧0௯ | உவலைப் | ௧௭௮ | கயமா | ௧௪௪ |
| அரும்பாம் | ௩௯ | உழையும் | ௪௯ | கயல்வென்ற | ௯௪ |
| அருவீத் | ௭௮ | உன்னை'அ | ௭௮ | கருவிருந் | ௮௧ |
| அலகம் | ௧௧௭ | ஊரோர் | ௧௧௮ | கரைத்தாவி | ௫௭ |
| அறியா | ௧௩௫ | எண்போன | ௨0௮ | கலங்கும் | ௧௨௨ |
| அறையும் | ௧௨௬ | எத்தும் | ௧௫ | கலைதொடக் | ௩௮ |
| அன்னைக் | ௧௮௩ | எந்நாட் | ௮௫ | கழைபோல் | ௧௫௨ |
| ஆடுகம் | ௧௨௮ | எம்மா | ௧௯௮ | களவரும் | ௩௪ |
| ஆரணத் | ௧௫௪ | எறிதேன் | ௭ | கறையார் | ௭ |
| ஆராத | ௭௧ | என்கா தலி | ௫௧ | கனம்சாய | ௭௩ |
| ஆழ்ந்தார் | ௭௰ | என்பால் | ௨0௨ | கனமே | ௨௩ |
| ஆழி | ௧00 | என்மேல் | ௨௪ | காதல் | ௨௧௪ |
| ஆற்றும் | ௬௫ | என்னும் | ௧௮௫ | காலைப் | ௧௫௫ |
| ஆறலை | ௧௮௮ | என்னோடு | ௫௧ | காலையம் | ௭௰ |
| இணங்கிப் | ௧௬௮ | எனைக்கே | ௧௮௪ | கானல்அம் | ௭௩ |
| இப்பே | ௧௫௪ | ஏடார் அலங்கல் | ௩௩ | கானெடுங் | ௧௪௨ |
| இயங்கா | ௧௭௬ | ஏடார் மலர்க்குழல் | ௧௮௰ | கானேய் | ௨௭ |
| இரவேய் | ௧௭௭ | ஏமான் | ௧௮௮ | கூரவும் | ௧௧௯ |
| இருங்குன் | ௯௨ | ஏர் ஏற்ற | ௧௨௪ | குருதிகண் | ௧௧௬ |
| இரும்பாம் | ௧௭௫ | ஏரார் | ௨0௪ | குவளை | ௫௩ |
| இருமையி | ௨௧௧ | ஏவலர் | ௭௬ | குளித்தார் | ௧௨௭ |
| இருவர்கண் | ௩௮ | ஐவாய் | ௧௫0 | குன்று | ௭௫ |
| இல்லத் | ௧௨௬ | ஒருதலைக் | ௧௨௯ | குனிநாள் | ௬௭ |
| இல்லும் | ௧௬௯ | ஒருவெண் | ௧௭௩ | கையும் | ௬௧ |
| இவ்வீத் | ௧௪௭ | ஒல்கா | ௯0 | கோண்டானின் | ௨௧௧ |
| இவளா | ௧௫0 | ஒவ்வென | ௧0௮ | கொத்தலர் | ௨௨௫ |
| இழைவிளை | ௧௧௯ | ஒலிதெண் | ௩௭ | கொலைகால் | ௨௭ |
| இன்புற்ற | ௧௫௮ | ஒழிதோற் | ௧௩௪ | கோங்கநல் | ௧௯௨ |
| இன்னல் | ௨௧௯ | ஒன்றே | ௧௯௩ | கோபுரம் | ௧௮௪ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சகம்நல்க | ௧௬௮ | தழங்கார் | ௨௦௬ | தொடைக்கணி | ௭௪ |
| சந்தனம் | ௧௯௫ | தழல்கண்ட | ௩௧ | தொடையேய் | ௫௨ |
| சிதையா | ௯ | தள்ளா | ௨௦௧ | தொலைவிலை | ௧௪௪ |
| சிமையார் | ௪௬ | தளரா | ௧௧௪ | நங்கண் | ௨௨௧ |
| சிலைபயில் | ௫௪ | தளிபோல் | ௧௯௨ | நஞ்சார் | ௧௨௨ |
| சிறந்தார் தெரிந்த | ௭௧ | தற்பழி | ௧௧௨ | நஞ்சோ | ௧௫௮ |
| சிறந்தார் புகழ் | ௨௧௨ | தன்கண் | ௫௭ | நண்பான | ௨௧௧ |
| சின்னாள் | ௯௮ | தன்போல் உலகம் | ௧௫௧ | நந்துசுற் | ௭௭ |
| சினவாகை | ௧௦௯ | தன்போல் சினத் | ௧௧௦ | நம்பால் | ௧௦௫ |
| சினவேய் | ௧௬௪ | தனம்சேர்ந்த | ௧௩௯ | நம்பே | ௧௦௨ |
| சீதள | ௨௪ | தனையா | ௬௮ | நல்லார் | ௪ |
| சீயம்கோலோ | ௧௫ | தாதகை | ௬௯ | நலம்புனை | ௧௯௯ |
| சுருளேய் | ௧௫௮ | தாமாக | ௧௮௩ | நறைஅல | ௫௨ |
| சுழிநீர் | ௮௮ | தாமே | ௧௭௨ | நன்றே | ௧௭௫ |
| சுற்றும் | ௨௧௮ | தார்அணி | ௧௪௮ | நனையகத் | ௧௬௯ |
| சூடத் | ௯௦ | தாராகம் | ௧௬௮ | நாணினும் | ௧௭௬ |
| சூரார் | ௨௩ | தாவாத | ௧௨௰ | நாள்மா | ௧௭௪ |
| செங்கேழ் | ௭௬ | தாளிணை | ௪௪ | நாமாவி | ௯௪ |
| செந்நாள் | ௧௫௬ | திரண்மா | ௬ | நாவியும் | ௧௦ |
| செயலார் | ௫௩ | திருந்தார் | ௫௦ | நீலவேய் | ௧௨௯ |
| செயலைத் | ௧௭௧ | திரைகே | ௧௨௫ | நின்மேல் | ௧௬௧ |
| செருமகள் | ௧௭௯ | திரையின் | ௧௧௫ | நினக்கே | ௨௦௫ |
| செவ்வண்ண | ௫௬ | திவாகர | ௫௬ | நினையான் | ௧௮௰ |
| செழியன் | ௮௭ | திளைக்கும் | ௩௩ | நினையீர் | ௧௪௧ |
| செல்வின் | ௧௯௰ | துதித்தேன் | ௧௪௬ | நீவேறு | ௪௨ |
| செறிவளர் | ௪௯ | துறந்தனள் | ௬௮ | நெஞ்சுவ | ௭௩ |
| செறிவேழ | ௩ | தூதாக | ௨௧௭ | நேயம் புகலிடம் | ௯௬ |
| சென்றே | ௧௧ | தூற்று | ௯௨ | நேயம் புனைதுணை | ௧௭௦ |
| சேலார் | ௧௬௰ | தேண்பால் | ௧௦௨ | நோந்தும் | ௧௭௪ |
| சையத் | ௧௯௩ | தெரியா | ௧௬௧ | படம்பட்ட | ௫ |
| சோகா | ௧௪௫ | தெரியோர் | ௨௦௭ | படிஒன்று | ௨௦௦ |
| சோலையில் | ௫௦ | தென்பால் | ௧௪ | பண்ணும் | ௧௨௬ |
| தண்டாமரை | ௩௬ | தென்மாறை | ௧௮௨ | பயில்காள | ௭௪ |
| தண்டார் | ௧௫௫ | தென்னுக | ௧௨௩ | பாக்கின்ற | ௬௦ |
| தண்ணென் | ௧௦௦ | தேங்கிய | ௨ | பரவாத | ௮௫ |
| தண்பட்டம் | ௩௭ | தேர்த்தானை | ௧௩௫ | பருந்தொன்று | ௪ |
| தமிழ்தங் | ௯ | தேருத | ௫ | பல்லியம் | ௬௬ |
| தருகற் | ௨௨ | தேன்உற்ற | ௧௫ | பலரே | ௧௯௰ |
| தருந்தாரு | ௯௫ | தேன்வந்த | ௫௫ | பறந்தாங் | ௧௨௫ |
| தரையார | ௩௮ | தேனும் | ௪௯ | பாகையும் | ௩௦ |
| தலங்கா | ௨௮ | தேனேர் | ௬௯ | பாரணங் கோ | ௧ |
| தலத்திற்கும் | ௧௨௧ | தோடங்கும் | ௧௯௪ | பாரித்த | ௨௬ |
| தலையா | ௨௦௫ | தொடுசிலைக் | ௧௭௭ | பாரோ | ௧௩௭ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பால்அன்ன | ௧௫௧ | மண்ணும் | ௫௬ | மாலாய் | ௨௨ |
| பால்போல் | ௩௫ | மணி பொன் | ௧௨ | மாலும் | ௧௬௪ |
| புகழார் | ௪௪ | மணிப்பா | ௧௪௫ | மாவா | ௨௦௧ |
| புணரா | ௧௦௬ | மணிவரை | ௧௧௪ | மாறு | ௧௬௭ |
| புதியேன் | ௩௬ | மந்தாரம் | ௮௬ | மாறையர் | ௧௧௭ |
| புயல்வ | ௮௩ | மயலார் | ௧௩ | மான்காள் ! | ௭௧ |
| புயலே | ௧ | மயனுர் | ௬௬ | மானுகரன் | ௧௧ |
| புயற்கண் | ௧௦௧ | மயிலாடு | ௧௨௮ | மிக்கார் | ௪௩ |
| புரவே | ௨௦௬ | மருப்பா | ௪௫ | மிகவும் | ௧௩௬ |
| புராந்தகர் | ௧௨௧ | மருவாயம் | ௧௮ | மின்னு | ௧௧௧ |
| புறங்கூர் | ௨௧ | மருவின் | ௨௦௧ | மின்னேய் | ௮௬ |
| புனங்காவல் | ௪௧ | மருள்கொண்ட | ௧௮௭ | மூகத்தில் | ௨௫ |
| புனமும் | ௭௭ | மல்குற்ற | ௪௬ | முகையாய் | ௬௦ |
| புனையலங் | ௧௧௧ | மல்லார் | ௪௮ | முத்தணி | ௧௧௮ |
| புனையலர் | ௧௮௧ | மல்லைஅம் | ௮௬ | முதிரா | ௮௭ |
| புனையாழி | ௨௧ | மல்வித் | ௨௧௩ | முயங்கிய | ௬௫ |
| பூட்டிய | ௩௪ | மலரும் | ௧௦௮ | முலையார் | ௭௨ |
| பூந்தழை | ௮௨ | மலர்புரை | ௨௦௩ | முன்ஊர் | ௬௨ |
| பூவலர் | ௭௧ | மலிகின்ற | ௨௧௭ | முன்னே | ௧௬௧ |
| பெருமால் | ௧௫ | மலைநாடு | ௮ | மூரல் | ௮௧ |
| பெறஅரி | ௭௧ | மலைமாது | ௮௧ | மேவிக்கலை | ௧௧ |
| பேசத் | ௬௪ | மலைமுழு | ௨௨ | மேனுள் | ௧௭௦ |
| பேணற் | ௭௨ | மலைவந்த | ௧௫௬ | மைக்குஞ்சர | ௨௨௨ |
| போய்போல் | ௬௭ | மழவே | ௧௫௯ | மைதோய்ந் | ௧௧௨ |
| பொய்யா | ௬௭ | மழைவளர் | ௨௬ | மைந்நாள் | ௨௧௦ |
| பொருகின்ற | ௧௪௯ | மற்றேற | ௬௨ | மைந்நீர் | ௧௫௭ |
| பொருபால் | ௧௧௨ | மறலாய் | ௩௪ | மைப்போ | ௫௭ |
| பொருமணி | ௩௬ | மறவாகை | ௧௫௧ | மையணி | ௨௦௩ |
| பொழிநான | ௧௬௨ | மன்உயிர் | ௨௧௫ | மையார் | ௨ |
| பொறைகொண்ட | ௨௩ | மன்பதை | ௧௦௩ | மையுற்ற | ௧௧௫ |
| பொன்னியல் | ௪௩ | மன்றும் | ௧௮ | மைவாள் | ௪௦ |
| பொன்னுற்ற | ௧௫௨ | மன்னவர் | ௨௦௨ | யாணர்க் | ௨௧௩ |
| போதலர்ந் | ௧௮௧ | மன்ன | ௧௦ | யாரும்பர் | ௩௦ |
| போயான் | ௬௩ | மன்னிய | ௧௦ | யாரேயிவர் | ௩௧ |
| போயே | ௨௦௮ | மன்னும் | ௨௦௮ | யான்கண்ட | ௧௭௮ |
| போர்உறை | ௧௫௪ | மாகப் | ௧௫௯ | யானகம் | ௧௭௮ |
| மஞ்சூட்டி | ௬௮ | மாகம் | ௮௫ | வகைகொண்ட | ௮௩ |
| மஞ்சைப் | ௨௨௧ | மாணுத | ௧௨௩ | வசையும் | ௧௩௨ |
| மண்குன்ற | ௧௫௩ | மாணிக்க | ௧௦௪ | வஞ்சம் | ௧௧ |
| மண்டும் | ௧௩௫ | மா தங்கம் | ௧௫௧ | வடமால் | ௧௬௧ |
| மண்ணலை | ௧௫௫ | மாரியஞ் | ௧௪௬ | வடியேய் | ௧௭௧ |
| மண்ணர் | ௮௧ | மால்கொண்ட | ௨௨௩ | வடியோ | ௬௫ |
| மண்ணில் | ௨ | மால்வண் | ௧௪௧ | வடுக்கண் | ௨௨௦ |

| | |
|---|---|
| வடுவரி | ௮௨ |
| வண்கொடி | ௧௧ |
| வண்டலை | ௫௫ |
| வண்புனல் | ௨௦௬ |
| வயங்கேழ் | ௨௦௪ |
| வரமாமை | ௧௬௨ |
| வரற்காலம் | ௨௧௯ |
| வரியோலை | ௧௪௯ |
| வருநீர் | ௪௬ |
| வரைப்பால் | ௧௦௭ |
| வரையும்இந் | ௧௯௫ |
| வல்லார்இளங் | ௪௦ |
| வலம்புரி | ௨௧ |
| வலைப்பெய்த | ௬௮ |
| வழியா | ௧௬௭ |
| வழுதியர் | ௪ |
| வளங்கனி | ௨௧ |
| வளங்கொண்ட | ௧௯௪ |
| வளவேய் | ௧௮௬ |
| வறியார் | ௧௦௫ |
| வன்பணி | ௫௧ |
| வன்போ | ௧௯௭ |
| வன்மா | ௧௫௯ |
| வனநாள் | ௧௧௭ |
| வனமார் | ௨௮ |
| வனைந்தால் | ௪௪ |
| வனையும் | ௯௦ |
| வாக்கும் | ௪௦ |
| வாமக்கலை | ௧௭ |
| வாயார | ௧௮௯ |
| வாருந்து | ௨௦௦ |
| வார்த்தன | ௨௨௨ |
| வாவித் | ௧௩௭ |
| வாவுங்கலை | ௪௨ |
| வாளினும் | ௧௦௭ |
| வாளேய் | ௧௮௨ |
| வானக் | ௮ |
| விடவார் | ௮௪ |
| விடையான் | ௬௧ |
| விண்காவல் | ௨௧௫ |
| விண்டார் | ௧௦௪ |
| விண்மேல் | ௧௯௫ |
| விம்மூர் | ௯௭ |
| வியல்ஊர் | ௯௧ |
| விரையக | ௪௭ |
| விரையூர் | ௫௧ |
| விழிகுழி | ௧௫௯ |
| வில்எய் | ௧௫௫ |
| வில்லார் | ௪௫ |
| வின்மலை | ௭ |
| வேங்கார் | ௧௫௨ |
| வெங்குல | ௮௪ |
| வெங்கோல் | ௨௮ |
| வெஞ்சுர | ௧௭௨ |
| வெடிக்கின்ற | ௧௧௬ |
| வெண்டா | ௪௮ |
| வெண்டோ | ௫௫ |
| வெம்போர் | ௯௧ |
| வெயிலுந் | ௮௮ |
| வெவ்வேல் | ௫௯ |
| வெள்ளம் | ௨௧௦ |
| வெறுத்தார் | ௧௯௬ |
| வெற்றி | ௧௧௧ |
| வேண்டும் | ௧௪௯ |
| வேளாண் | ௧௧௧ |

# அரும்பதம் முதலியவற்றின் அகராதி

[எண்-செய்யுள் எண்]


அகத்திய முனிவர், 345.
அகம் - மனம், 53, 346 ; உள்ளிடம், 57 ; இடம், 335 ; மார்பு, 392.
அகலம் - மார்பு, 253.
அகவுதல் - அழைத்தல், 268 ; ஒலித்தல், 269.
அகழ்தல் - தோண்டுதல், 86.
அகற்சி - பிரிவு, 248.
அகறல் - நீங்குதல், 159, 364.
அகன் - விசாலம், 202.
அகில், 20, 27, 181.
அகைதல் - செறிதல், 194.
அங்குரித்தல் - முளைத்தல், 112.
அச்சுறுத்தல் - பயமுறுத்தல், 96.
அசணம், 225.
அசைவு - வருத்தம், 317.
அசோகம் - அசோக மரம் 11 ; துன்பமில்லாமை, 11.
அஞ்சனம் - மை, 273.
அடம்பு, 283.
அடர்தல் - பகை கொள்ளல், 47.
அடல் - போர், 190 ; வலிமை, 320
அடி தொழும் தெய்வம், 334.
அடுக்கம் - மலைப் பக்கம், 165.
அடுக்குத் தொடர், 23, 30, 251, 292, 393, 413.
அடுதல் - கொல்லுதல், 165 ; வருத்துதல், 345.
அடையலர் - பகைவர், 192.
அடையார் - பகைவர், 48.
அண்ணல் - பெருமை, 204 ; பெரியோன், 31, 50, 106, 286.
அண்ணிய - கிட்டிய, 205.
அண்மை - சமீபம், 27.
அண்மை விளி, 27, 30, 37, 60.
அணங்கு - தெய்வப் பெண், 2 ; தெய்வம், 253.
அணங்குதல் - வருத்துதல், 109.
அணங்குறுத்தல், 67.
அணங்கைப் பராவல், 286.
அணி - அலங்காரம், 20 ; ஒழுங்கு, 237 ; அழகு, 25 ; வரிசை 237 ; ஆபரணம், 283.
அணித்து - அருகில் உள்ளது, 25.
அணிதல் - அழகு செய்தல், 32.
அதர் - வழி, 242, 257, 343, 365.
அதர பானம் - தலைவியின் உதட்டைச் சுவைத்தல், 13, 65.
அந்தகாரம் - இருள், 177.
அந்தி - இராப்பொழுது, 328.
அந்தோ, 348.
அம் - அழகு, 39 ; நீர், 105 ; அசை, 183 ; சாரியை, 137.
அம்பல் - சிலர் அறிய நிகழும் பழிமொழி, 229, 285.
அம்பு - நீர், 143.
அம்புயம் - தாமரை, 331.
அம்புலி - பிறைச் சந்திரன், 423.
அம்போருகம், 143, 183, 186, 198.
அம்போருகை - திருமகள், 200.
அம்மனை - தாய், 336.
அமர் - போர், 113 ; ஒப்பு, 281.
அமரர் - தேவர், 375.
அமரார் - பகைவர், 8.
அமராவதி, 358, 375.
அமளி - படுக்கை, 366.
அமிர்து - பால், 325.
அமிழ்து, 59.
அமுது, 101.
அமை - மூங்கில், 97.
அமைதல் - தங்கியிருத்தல், 249.
அமையா - தெவிட்டாத, 387.
அயர்த்தல் - மறத்தல், 152, 159.
அயர்தல் - செய்தல், 63 ; தளர்தல், 159 ; இளைத்தல், 269 ; மறத்தல், 290.

அயல் - பக்கம், 1, 77, 87, 190.
அயனார், 135, 342.
அயிர் - நுண்மணல், 288.
அயிர்த்தல் - சந்தேகித்தல், 98.
அயில் - கூர்மை, 38; வேல், 53.
அயிலுதல் - அனுபவித்தல், 152.
அரண் - காவல், 19.
அரவம் - பாம்பு, 244.
அரவிந்தம் - தாமரை, 48, 179.
அரவு - பாம்பு, 10, 188, 396.
அரன் - சிவபிரான், 135.
அரா - பாம்பு, 270.
அரி - செவ்வரி, 45; வண்டு, 162, 377; சிங்கம், 162, 165, 220.
அரிவை - பெண், 29, 167, 385.
அருக்கன் - சூரியன், 320.
அருந்ததி, 374.
அருமறை, 210.
அருவி - மலையாறு, 11; நீர், 158.
அருவி ஊறாத காலம் - வேனிற் காலம், 11.
அருள் - கிருபை, 39.
அல் - இருள், 8, 218; இரவு, 376.
அல்கல் - இரவு, 376.
அல்குதல் - தங்குதல், 376.
அல்குல் - பெண் குறி, 10, 85, 98.
அல்லி - அக இதழ், 36; தாமரை மலர், 37.
அலகு - கூர்மை, 234. [243.
அலங்கல் - மாலை, 6; ஒளி வீசுதல்,
அலத்தல் - துன்புறல், 352.
அலம்பல் - ஒலித்தல், 15.
அலர் - மலர், 25; பழிச்சொல், 126.
அலர்தல் - விளங்குதல், 105, 425.
அலர் துளி - பருத்த மழை, 269.
அலர் மாளிகை ஆரணங்கு - இலக்குமி, 6.
அலை - கடல், 109.
அலை கடல், 222.
அலையாமல் - வருத்தாமல், 302.
அவண் - அவ்விடம், 273.
அவம் - வீண், 201, 329.
அவலம் - துன்பம், 196.
அவனி - பூமி, 280.
அவா - ஆசை, 111. [327, 377,
அவாய் நிலை, 46, 87, 298, 312,
அழல் - தீ, 308; வெப்பம், 319; அழாதே, 337.
அழிதல் - வருந்தல், 325.
அழுங்கல் - வருந்தல், 46; வருந்தாதே, 196.
அளகம் - கூந்தல், 31, 52.
அளவுதல் - கலத்தல், 398.
அளாவ - கலக்க, 47.
அளி - கிருபை, 8, 11; வண்டு, 11; அன்பு, 316.
அளித்தல் - காத்தல், 243.
அளை - வளை, 165. [304, 328.
அறத்தொடு நிற்றல், 300, 301, 302,
அறம் - தரும குணம், 57.
அறல் - கருமணல், 6, 60, 66, 214.
அறி துயில் - யோக நித்திரை, 39.
அறிவோர் - புலவர், 278.
அறை - கற்குகை, 250.
அறைதல் - சொல்லுதல், 47. [378.
அறை போதல் - அற்றுப் போதல்,
அன்மைச் சொல் இன்மைப் பொருளுணர்த்தல், 83.
அன்மொழித் தொகை, 5, 15, 53, 80, 82, 93, 96, 129, 207, 227, 228, 232, 239, 246, 274, 325, 338, 367, 368, 376, 379, 388, 390, 409, 414, 417.
அன்றில் - கிரவுஞ்சப் பறவை, 106.
அன்னை - செவிலித்தாய், 185, 228.
அனங்கானலம் - காமக்கனல், 39.
அனிச்சம், 308, 336.
ஆ - வியப்பிடைச்சொல், 36.
ஆக - அசை, 193.
ஆகம் - உடல், 93; மார்பு, 130.
ஆகவம் - போர், 414.
ஆகு பெயர், 4, 6, 9, 15, 20, 30, 33, 34, 37, 41, 50, 51, 54, 58, 59, 60, 65, 67, 68, 69, 73, 75, 89, 91, 92, 100, 109, 196.

ஆங்கு - அவ்விடம், 249 ; உவம உருபு, 249.
ஆசு இடையிட்ட எதுகை, 167.
ஆடகம் - செம்பொன், 32.
ஆடக மதில், 342.
ஆடக மேரு, 180.
ஆடவர், 292.
ஆடி - கண்ணாடி, 389.
ஆடியுள் பாவை, 389.
ஆண் தகை, 80.
ஆண்மை - வீரம், 225.
ஆணி இடல் - எழுத்தாணியால் எழுதல், 104.
ஆணை - ஏவல், 159.
ஆதரம் - காதல், 5, 144.
ஆதரவு - காதல், 76.
ஆதவம் - வெயில், 267.
ஆதவன் - சூரியன், 143.
ஆபரணன், 86.
ஆமலகம் - நெல்லி, 280.
ஆய் - நற்றாய், 231; அழகு, 318.
ஆயத் தொகுதி - தோழியர் கூட்டம், 7. [கூட்டம், 29.
ஆயம் - கூட்டம், 29 ; தோழியர்
ஆய வெள்ளம் - தோழியர் கூட்டம், 29.
ஆயிரம் கதிர் - சூரியன், 177.
ஆயிழை பாகன், 302.
ஆர் - உவம உருபு, 8; அழகு, 174.
ஆர்கலி - கடல், 86, 142.
ஆர்த்தல் - ஒலித்தல், 27.
ஆர்தல் - பொருந்துதல், 7 ; நிறைதல், 14 ; அனுபவித்தல், 59; தின்னல், 77 ; பருகல், 387.
ஆர்வம் - விருப்பம், 381, 403.
ஆர்வ மொழி அலங்காரம், 366.
ஆரணத்தான் - பிரமன், 265.
ஆரத்தழை - சந்தனத் தழை, 63.
ஆர நறுந்தழை, 122.
ஆரம் - முத்து மாலை, 10 ; முத்து, 151 ; சந்தனம், 46, 54, 181.
ஆல் - 'ஆதலால்' எனக் காரணப் பொருள் படும் ஓர் இடைச்சொல், 18, 74, 79, 80, 91, 97, 98, 116, 182, 222, 292, 303; அசை, 1, 14, 27, 35; விஷம், 109.
ஆலயம் - அரண்மனை, 143.
ஆலுதல் - தங்கியிருத்தல், 267; ஆரவாரித்தல், 320.
ஆலை - கரும்பு, 262.
ஆலைப்பழனம், 262. [குளம், 36.
ஆவி - புகை, 20 ; உயிர், 20 ;
ஆவித்தல் - பெருமூச்சு விடுதல், 270.
ஆழி - சக்கரம், 39, 80; கடல், 44.
ஆளி - சிங்கம், 79.
ஆறலைத்தல் - வழி பறித்தல், 364.
ஆறு - விதம், 58 ; வழி, 164.
ஆனாது - நீங்காமல், 36.
ஆனீற்றுத்தொழிற்பெயர், 288.
இகத்தல் - கடத்தல், 233; நீங்குதல், 291, 351; பிரிதல், 294.
இகல் - போர், 80; பகை, 114.
இகலார் - மாறுபடாதவர், 414.
இகுளை - தோழி, 190, 269, 356.
இங்ஙன் - இவ்விடம், 39.
இடம் - வலிமை, 314.
இடுக்கண் - துன்பம், 419.
இடு சிலை, 345. [திரம், 421.
இடும்பை - துன்பம், 421; தரித்
இடை - இடுப்பு, 8, 21, 23, 49.
இடைதல் - தோல்வியடைதல், 238.
இடைநிலைத் தீவகம், 164.
இடையூறு - துன்பம், 12. [266.
இண்டு - புலி தொடக்கிக்கொடி,
இணர் - மகரந்தம், 214; கொத்து, 403.
இணை - இரண்டு, 21, 54, 85, 136.
இதண் - பரண், 159.
இதயம் - மனம், 412.
இதயாரவிந்தம் - மனத்தாமரை, 12.
இதழ் - உதடு, 65, 85, 111, 135.
இதழி - கொன்றை, 401.
இந்திர கோபம், 9.
இந்து - சந்திரன், 259, 275, 414.
இந்து காந்தம், 116.
இப்பி - முத்துச்சிப்பி, 232.

இபம் – யானை, 369.
இம்பர் - இவ்வுலகம், 59.
இமிர்தல் - ஒலித்தல், 23, 63.
இமிழ்தல் - ரீங்காரம் செய்தல், 242.
இமைத்தல் - உறங்கல், 378.
இமையாசலம், 97.
இமையோர் - தேவர், 332, 387.
இமையோர் மாபுரம், 358.
இயங்கல் - சஞ்சரித்தல், 133, 342.
இயம்புதல் - சொல்லுதல், 31, 85; தெரிவித்தல், 195.
இயல் - இலக்கணம், 7; சாயல், 52, 175, 207; தன்மை, 84; முறைமை, 94, 106; குணம், 292.
இயல்பு - முறைமை, 381.
இயலுதல் - சஞ்சரித்தல், 7.
இயற்பட மொழிதல், 214.
இயற்று - இயலையுடையது, 48.
இயைபு உருவக அணி, 229, 284, 363.
இரங்கல் - ஒலித்தல், 26; வருந்துதல், 53; அழுதல், 271.
இரட்டுதல் - ஒலித்தல், 318.
இரண்டன் தொகையில்மிகுதல், 76.
இரத்தல் - வேண்டுதல், 15, 89.
இரலை - கலைமான், 78.
இரவி - சூரியன், 365.
இரவு - இருள், 344.
இராகு, 232.
இருங்குயில் - கருங்குயில், 421.
இருட்குறி - இரவுக்குறி, 163.
இருதலைப் புள்ளின் இயைந்த கேண்மை, 257.
இருந்துயர் - பெருந்துயர், 4.
இருநீர் - கடல், 91.
இரும்பொழில் - பெருஞ்சோலை, 22.
இருமை - இம்மை மறுமை, 405.
இருவி - தினைத்தாள், 158.
இருள் - துன்பம், 133; இரவு, 163; கறுப்பு, 214; இருட்குறி, 224.
இல் பொருள் உவமை, 383.
இலக்கணை, 373.
இலங்குதல் - விளங்குதல், 14, 54.
இலஞ்சி - நீர் நிலை, 242.
இலை வேல், 341.
இவண் - இவ்விடம், 240.
இவர்தல் - எதிர்ப்படர்தல், 132; ஏறுதல், 249; செல்லுதல், 249.
இழுது - வெண்ணெய், 141.
இழை - ஆபரணம், 50; நூல், 260.
இளமரக்கா - இளமரச் சோலை, 84
இளையார் - தோழியர், 138.
இறந்தது தழீஇய எச்ச உம்மை, 150, 301.
இறுதி நிலைத் தீவகம், 256.
இறும்பு - சிறு மலை, 263.
இறை - தலைவன், 141; முன் கை, 156; கணப்பொழுது, 250.
இறை கொள்ளுதல் - தங்குதல், 156, 225. [239.
இறைச்சிப் பொருள், 232, 237, இறைச்சியில் பிறக்கும் பொருள், 293.
இறைஞ்சுதல் - வணங்குதல், 398.
இறையோன், 85, 133.
இறைவன் - தலைவன், 50, 79.
இறைவி - தலைவி, 52, 85.
இன்னல் - துன்பம், 418.
இன்னா - துன்பம், 315.
இன்னா இடர், 258.
இன்னார் - பொல்லாதவர், 293.
இன்னியம் - மத்தளம், 22.
இன்னே - இப்பொழுதே, 7, 271.
இனம் - கூட்டம், 189; ஒப்பு, 287.
இனி - இன்று, 18; பின்பு, 22.
இனியார் - நல்லார், 293.
இனைதல் - வருந்துதல், 350.
இனை துயர், 351.
இனையாது - வருந்தாமல், 39.
இனையாநிற்பர் - வருந்துவர், 123.
ஈகை - கொடை, 58.
ஈண்டல் - நெருங்கல், 275.
ஈர் - இனிமை, 278.
ஈர்ந்துறை, 282.

ஈரம் - அன்பு, 372.
ஈனுதவர் - பெருதவர், 332.
ஈனுதல் - அரும்புதல், 21.
உகளுதல் - புரளுதல், 38, 309.
உகுதல் - உதிர்தல், 136; சிதறுதல், 150; சிந்தல், 268; நிலைகுலைதல், 232.
உசாவுதல் - வினவுதல், 159.
உட்கோள் - மனக்கருத்து, 81.
உடலுதல் - கோபித்தல், 204, 374.
உடன் போக்கு, 309.
உடை - ஆடை, 410.
உடைதல் - தோற்றோடுதல், 77, 301.
உடைமை - செல்வம், 207.
உண் கண் - மையுண்ட கண், 3.
உணங்கல் - வாடல், 89, 327; வருந்தல், 273.
உணர்தல் - தூக்கத்திலிருந்துவிழித்தல், 185.
உணர்வு - அறிவு, 410.
உந்தல் - தள்ளுதல், 34; மோதுதல், 71; நடத்துதல், 204.
உந்தி - வீசி, 25; கொப்பூழ், 70.
உம்பர் - தேவர், 59, 97.
உம்பர் அமுது, 180.
உமையாள் - பார்வதி, 97, 299.
உமையாள் இறைவன், 97.
உய்த்தல் - செலுத்தல், 38, 132; கொண்டுபோதல், 354.
உய்தல் - பிழைத்தல், 30; துன்பத்தினின்று நீங்கல், 188; தப்புதல், 228.
உய்யானம் - சோலை, 196.
உயங்கல் - வருந்தல், 342.
உயர் ஆமலகத்து அருங்கனி நீர் நசைக்கு உண் சுரம், 280.
உயிர்த்தல் - மூச்சுவிடல், 15, 213; வீசுதல், 412.
உரவு - வலிமை, 286.
உரவோர் - அறிவுடையவர், 291.
உருபு மயக்கம், 6, 22.
உரும் - இடி, 164; இடிக்கொடி, 222.
உரும் ஏறு - பேரிடி, 200.
உருவக அணி, 282, 372, 387.
உருவகம், 14, 23, 38, 39, 53, 66, 116, 130, 194, 196, 297, 307, 318.
உருவு வெளிப்பாடு, 423.
உலம் - திரண்ட கல், 40.
உலவா - குறையாத, 171.
உலாவரல் - உலவுதல், 30.
உலை - உலைக்களம், 226.
உலைவு - வருத்தம், 281.
உவகை - மகிழ்ச்சி, 264.
உவமையணி, 270.
உவர் - உப்பு, 399.
உவர்த்தல் - அருவருத்தல், 403.
உவலை - தழை, 363.
உவாமதி - பூரணச்சந்திரன், 119.
உவை, 345, 350.
உழத்தல் - அனுபவித்தல், 53.
உழத்தி - வருத்தி, 195.
உழலுதல் - வருந்துதல், 139.
உழி - இடம், 266, 289.
உழை - மான், 199; பெண் மான், 238; பக்கம், 117; இடம், 119.
உழையர், 382.
உள் - மனம், 51, 112.
உள்ளம் - எண்ணம், 15.
உள்ளல் - நினைத்தல், 282, 385.
உள்ளுறை உவமம், 25, 238, 242, 245, 260, 282, 290, 380.
உளை - பிடரி மயிர், 169.
உறழ்ச்சி - மிகுந்தும் மிகாமலும் வரும் விகற்பம், 71.
உறு துயிர், 218.
உறை - நீர்த்துளி, 268.
உறைத்தல் - மோதுதல், 300.
உன்னலர் - நினைத்திலர், 268.
ஊங்கு - உவ்விடம், 24.
ஊடல் - பிணங்கல், 62.
ஊசல் - ஊஞ்சல், 84.
ஊண் - உணவு, 409.
ஊர் - பரிவேடம், 234.
ஊர்தல் - பரவுதல், 102, 188; நகர்தல், 104; தவழ்தல், 201; எதிர்ச் செலுத்துதல், 102.

ஊழ் மலர் - பழைய பூ, 201.
ஊழ் வினை, 214.
ஊழி - யுகம், 202.
ஊறு - துன்பம், 325.
ஊறு ஓர்பவர், 236.
ஊறுதல் - பெருகுதல், 11.
ஊன் - மாமிசம், 90, 141.
எங்கை - என் தங்கை, 393, 400.
எடுத்துக் காட்டு உவமையணி, 112.
எண் - எண்ணம், 23; ஆலோசனை, 398.
எண்ணலங்காரம், 341.
எண்ணலர் - பகைவர், 420.
எண்ணும்மை, 43.
எண்ணெண்கலை - 64 கலைகள், 18.
எத்தும் - எத்திறத்தும், 26.
எதிர் கொள்ளல் - ஏற்றுக்கொள்ளல், 227; வரவேற்றல், 385.
எதிர் கோடல் - ஏற்றுக்கொள்ளுதல், 14.
எதிர் நிரல் நிறை, 161.
எதிர் மொழி, 78.
எதிரது தழீஇய எச்ச உம்மை, 162.
எமர் - எம் சுற்றத்தார், 96.
எய்தல் - அடைதல், 23; அம்பால் அடித்தல், 80; நீங்குதல், 386.
எய்தும் - நேரிடும், 145; வணங்குவோம், 386.
எயில் - மதில், 201; அரண், 254.
எயிற்றி - மறத்தி, 343.
எயிறு - பல், 194.
எருக்கு, 103, 104.
எல் - ஒளி, 258. [220.
எல்லி - இரவு, 168; இரவுக்குறி,
எல்லியம்போது - இரவு, 200.
எல்லை - அளவு, 317, 369.
எல் வளை, 258.
எவ்வம் - துன்பம், 278, 360.
எழில் - அழகு, 118, 350, 360.
எழிலி - மேகம், 58.
எழுதல் - தோன்றுதல், 22; புறப்படுதல், 34, 39.
எழுதிய பாவை - சித்திரம், 7.
எழுந்தருளல் - புறப்படல், 67, 96; வருதல், 160.
எழு பார் - எழுலகு, 121.
எள்ளாது - இகழாமல், 385.
எற்று - எப்படிப்பட்டது, 127.
எற்றுதல் - இரக்கம் கொள்ளுதல், 224.
எறித்தல் - ஒளி வீசுதல், 240.
எறிதல் - வீசுதல், 15; வெட்டி வீழ்த்துதல், 66; பிளத்தல், 299.
என்பு - எலும்பு, 93, 103, 104.
என்று - சூரியன், 408.
என்னே, 201, 215, 273.
என்னையர் - பெற்றோர், 159; தந்தை தமயன்மார், 365.
ஏ - ஈற்றசை, 1; வினா, 6; பிரிநிலை, 202; தேற்றம், 10; அம்பு, 155.
ஏடு - இதழ், 349; மலர், 110.
ஏதம் - குற்றம், 28; துன்பம், 227.
ஏதிலர் - அயலார், 123, 271.
ஏதிலன், 344.
ஏதிலை - அயலாய், 400. [410.
ஏது - காரணம், 107; நிமித்தம்,
ஏது அணி, 342.
ஏதும் - சிறிதும், 82.
ஏந்து இழை, 260.
ஏந்துதல் - தாங்குதல், 27; அணிதல், 27.
ஏமான், 365. [தல், 247.
ஏய்தல் - பொருந்தல், 6; ஒப்பா
ஏயென - விரைவாக, 344.
ஏயே - நாணக்குறிப்பு, 400.
ஏர் - அழகு, 23, 43, 50, 195; உவம உருபு, 264.
ஏவல் - கட்டளையிடுதல், 81; தூண்டுதல், 424.
ஏற்றல் - ஏற்றுக்கொள்ளுதல், 128.
ஏற்றவர் - யாசித்தவர், 126. [274.
ஏறு - ஆண் சிங்கம், 169; காளை,
ஏனல் - தினை, 153; தினைக்கதிர், 73; தினைப்புனம், 155, 161.

ஐ - அழகு, 107 ; சாரியை, 183.
ஐஞ்சுர தாரு, 335.
ஐய - அழகிய, 145.
ஐயர் - பெரியோர், 305.
ஐயவி - சிறு கடுகு, 390.
ஐவாய் அரவு, 258.
ஒசித்தல் - அசைத்தல், 132.
ஒட்டணி, 176, 383, 399.
ஒரு - ஒப்பற்ற, 30.
ஒரு தலை, 257.
ஒரு தனி - தன்னந்தனி, 35.
ஒருப்படுதல் - துணிதல், 212; சம் மதித்தல், 312.
ஒரு போது - சிறிது நேரம், 190.
ஒருமை - இப்பிறப்பு, 405.
ஒருமை பன்மை மயக்கம், 89. [73.
ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி,
ஒருவுதல் - நீங்குதல், 386.
ஒல்குதல் - துவளுதல், 125; சுருங் குதல், 185, 352.
ஒல்லாது - பொருந்தாது, 89.
ஒல்லார் - பகைவர், 77.
ஒல்லெனல் - விரைவுக்குறிப்பு, 218.
ஒவ்வா - பொருந்தாத, 258.
ஒளி - புகழ், 119.
ஒளிர்தல் - விளங்குதல், 46.
ஒறுத்துரை - வெறுத்துப் பேசு தல், 324.
ஒன்றுதல் - பொருந்துதல், 9, 383.
ஒன்னார் - பகைவர், 16, 23, 39.
ஓ - அசை, 8 ; எதிர்மறை, 17 ; ஐயம், 29; வியப்புக் குறிப்பு, 192; கழிவிரக்கக் குறிப்பு, 204; எண், 306; இழிவு சிறப்பு, 308.
ஓகை - மகிழ்ச்சி, 276.
ஓடை - நீரோடை, 30, 202.
ஓதம் - கடல், 221.
ஓதல் - கல்வி பயிலல், 410.
ஓதி - கூந்தல், 162, 301, 335.
ஓப்புதல் - ஓட்டுதல், 224.
ஓம்படை - பாதுகாப்பு, 139, 154.
ஓம்புதல் - பாதுகாத்தல், 310.
ஓர் - ஒப்பற்ற, 35, 44, 81.
ஓர்தல் - ஆராய்தல், 186; ஆராய்ந் தறிதல், 126.
ஓலம் - சத்தம், 291.
ஓலிடுதல் - ஆரவாரித்தல், 107.
ஓலை - காதணி, 423.
ஓவல் - ஒழிதல், 211.
ஓவாது - நீங்காமல், 240.
ஓவியம், 343.
ஓவு - ஒழிகை, 273.
கங்குல் - இரவு, 33, 57, 163, 164.
கஞ்சுகம் - சட்டை, 415.
கட்டளை - முறைமை, 333.
கட்டுரை - உறுதிச் சொல், 153.
கடத்தல் - வெல்லுதல், 186.
கடம் - மதம், 146 ; காடு, 263.
கடமான் - காட்டுப்பசு, 320.
கடல் வெதும்பின் அளாவ நீரில்லை என்பது, 47.
கட வாரணம் - மத யானை, 170.
கடவுதல் - செலுத்துதல், 249.
கடன் - கடமை, 248.
கடி - மிகுதி, 17 ; வாசனை, 318 ; கலியாணம், 375 ; காவல், 174 ; சிறப்பு, 238.
கடிகை- நாழிகை, 418.
கடிதல் - விலக்குதல், 325.
கடி மனை - மண வீடு, 375.
கடிப்பு - பறையடிக்கும் குறுங் கோல், 205.
கடு - நஞ்சு, 46, 165.
கடுகுதல் - விரைதல், 205.
கடும்பரி, 243.
கடை - வாயில், 385.
கடைக்கண் - கிருபை, 81.
கடைக்குறை விகாரம், 58, 109, 111, 207, 279.
கண் - இடம், 181.
கண்டல் - தாழை, 296, 352.
கண்ணஞ்சல் - பயப்படல், 270.
கண்படை - உறக்கம், 33.
கண்ணி - மாலை, 204 ; வலை, 393.
கண்ணிற்சிறந்த உறுப்பில்லை, 4.
கண்ணின் - கருதுமிடத்து, 112.

கணம் - விநாடி, 50; கூட்டம், 203.
கணி - வேங்கை மரம், 25, 239.
கணிக்காரிகை-குறிசொல்பவள்,153.
கணியார் - வேங்கையார், 151.
கணை - அம்பு, 72, 77, 90.
கதம் - சினம், 339.
கதலி - வாழை, 115.
கதழ்ந்து - விரைந்து, 380.
கதித்தல் - பருத்தல், 235.
கதிர் - ஒளி, 60, 152.
கதிரவன் - சூரியன், 17.
கந்தாரம், 174.
கந்து - கட்டுத்தறி, 314.
கம்பலை - ஆரவாரம், 234.
கமலம் - தாமரை மலர், 1, 20.
கமழ்தல் - வீசுதல், 30.
கமுகு - பாக்கு, 115.
கயம் - நீர் நிலை, 38; குளம், 233.
கயல் - கெண்டை மீன் 1, 30, 38; மீனக்கொடி, 178.
கயல் ஏறு, 169.
கயல் மாதிரத்துத் திண் போதகந் தொறும் தீட்டிய வாணன், 398.
கரத்தல் - மறைதல், 142.
கராம் - முதலை, 178, 242.
கரி - யானை, 164, 220.
கரியோர் - சாட்சி கூறுவார், 291; மத்தியஸ்தர், 397.
கரு - சூல், 163.
கருகல் - கருமையடைதல், 56.
கருங்கண் - பெரிய கண், 43.
கருங்கணி - பெரிய வேங்கை மரம், 153; கரிய கணிக்காரிகை, 153.
கருத்து - மனம், 112.
கருமாமுக வெண்சங்கம், 277.
கருவி - தொகுதி, 118.
கரைதல் - அழைத்தல், 354.
கல் -மலை, 96, 122.
கலம் - ஆபரணம், 69.
கலவி - புணர்ச்சி, 33, 59.
கலி - துன்பம், 14; கலி யுகம், 60.
கலித்தல் - தழைத்தல், 115.
கலுழ்தல் - அழுதல், 289, 339.
கலுழ்வான் - அழுதல், 288.
கலை - மேகலாபரணம், 33, 164; ஆண் மான், 41, 77, 80; ஆண் கருங்குரங்கு, 118, 268.
கவலல் - துன்பமடைதல், 255.
கவலை - கவர் வழி, 182, 263, 363.
கவான் - மலைப்பக்கம், 119.
கவி கூற்று, 15, 205, 387.
கவின் - அழகு, 99, 137, 216.
கவை (கவ்வை)- அலர், 339.
கழங்கு - கழற்சிக்காய், 330, 339.
கழல் - கழற்காய், 60; வீர கண்டை, 75; பாதம், 101.
கழற்றெதிர்மறை - கண்டித்துக்கூறியதை மறுத்துக் கூறுதல், 43.
கழறல் - கண்டித்துக் கூறுதல், 42.
கழனி - மருத நிலம், 349.
கழி - மிகுதி, 148, 178.
கழி படர் - மிகுந்த துன்பம், 221.
கழுநீர் - குவளை,184, 196, 357.
கழை - மூங்கில், 50; கரும்பு, 260.
கள் - தேன், 153.
களங்கனி, 56.
களம் - போர்க்களம், 77.
களி - செருக்கு, 37; களிப்பு, 171.
களிறு - ஆண்யானை, 17, 31, 44, 72; ஒரு நோய், 56.
களிறுண்ட விளங்கனி, 56.
களிறு தரு புணர்ச்சி, 302.
கற்பகம் - கற்பக விருட்சம், 1, 42.
கற்பகாடவி, 346.
கற்பு - முறைமை, 242.
கற்பு நாணினும் சிறந்தது, 311.
கறி - மிளகுக்கொடி, 92.
கறுத்தார், 324.
கறை - இரத்தம், 14. [தல், 394.
கன்றல் - கோபித்தல், 154; வருந்து
கன்று தின்னிப் புலியன், 393.
கன்னல் - நாழிகை வட்டில், 418.
கன்னடர் மண் கொண்ட வாணன், 356. [222.
கன்னி - குமரி, 18; குமரிக்கடல்,
கனம் - மேகம், 49; பொன், 235.

கனிதல் - முதிர்தல், 56; இனித்தல், 174.
கனை இருள், 193, 195, 256.
கா - சோலை, 17, 81, 92.
காட்டியது - செய்வித்தது, 318.
காண்டல் - காணுதல், 35, 52.
காண்பு - காணுதல், 418.
காணிய - காண, 160.
காணுதல் - அறிதல், 406.
காதரவு - அச்சம், 5.
காதல் - ஆசை, 61; அன்பு, 224.
காதலன் - கணவன், 61, 95.
காதலி - உயிர்ப்பாங்கி, 61; தலைவி, 281.
காதன்மை - அன்பு, 390.
காமக்கடவுள் - மன்மதன், 108.
காமக்கனல் - வேட்கைத்தீ, 33.
காமக்கிழத்தி, 400.
காமம் - ஆசை, 146.
காமம் மிக்க கழிபடர் கிளவி, 221.
காமர் - அழகு, 324.
காம வல்லி, 54.
காய்தல் - கோபித்தல், 211.
காயா மலர், 129.
கார் - மேகம், 64, 268.
கார்ப்பருவம், 409.
கார்முகம் - வில், 296.
காரணம் - கதை, 83.
காரா - எருமை, 380.
காரிகை - அழகு, 411; அழகி, 3, 60,; பெண், 84.
கால் - வழி, 118.
கால் கண்களாதல், 178.
கால்கொளல் - இடம் கொள்ளல், 53; தொடங்கல், 424.
கால வழுவமைதி, 87.
காலுதல் - வெளிவிடுதல்; 53, 211; பெய்தல், 163; ஒழுகுதல், 413.
காலை - காலம், 300.
காவலர் - தலைவர், 146; காவலாளர், 205, காப்பாரல்லர், 155.
காவலன் - அரசன், 12.
காவி - நீலோற்பலம், 20, 46.
காவிரி, 71, 284.
காளம் - விஷம், 99; கருமை, 152; ஊது கொம்பு, 152.
காளை - பாலை நிலத்தலைவன், 324.
கான் - வாசனை, 52, 153, 397; சோலை, 195; காடு, 190.
கானம் - காடு, 17, 165.
கானல் - சோலை, 153; கழிக்கரை, 254; கழிக்கரைச் சோலை, 292.
கானவர் - வேடர், 345, 364.
கிஞ்சுகம் - முருக்கம்பூ, 150.
கிடங்கு - அகழ், 321.
கிழத்தி - தலைவி, 27.
கிழவோன் - தலைவன், 43.
கிழி, 102.
கிள்ளை - கிளி, 73, 152, 156.
கிளத்தல் - சொல்லுதல், 12.
கிளர்தல் - விளங்குதல், 42.
கிளவி - சொல், 219, 220, 221.
கிளை - சுற்றம், 315.
கிளைத்தமிழ், 150.
கிளைத்தல் - நெருங்கல், 321.
கீண்ட - கிழிந்த, 118. [375.
குங்குமம் - குங்குமச் செவ்வந்தி மலர்,
குஞ்சரம் - யானை, 165, 189.
குடங்கை - உள்ளங்கை, 273.
குடம்பை - கூடு, 106, 173.
குடிஞை - கோட்டான், 73, 211.
குடிஞைப்பகை - காக்கை, 78.
குடிமை - உயர் குடிப் பிறப்பு, 241.
குடுமி - சிகரம், 78.
குடைதல் - குளித்தல், 7, 35, 38.
குணம் - மேன்மை, 385.
குமிழ் - குமிழம்பூ, 13.
குமிறுதல் - முழங்குதல், 338.
குமுதம் - செவ்வல்லிப்பூ, 67.
குரகதம் - குதிரை, 365.
குரம்பை - குடிசை, 140. [153.
குரல் - ஓசை, 150; தினைக்கதிர்,
குரவர் - பெரியோர், 227; பெற்றோர், 227.
குரவு - குராமரம், 239.
குருகு-நாரை, 106; கைவளை, 276.

குருதி - இரத்தம், 78, 233.
குருதிப்பலி, 298.
குரும்பை - தென்னம்பிஞ்சு, 85.
குருவிந்தம் - குன்றி மணி, 82.
குருளை - குட்டி, 109.
குலம் - கூட்டம், 171.
குலாவுதல் - விளங்குதல், 358.
குலோத்துங்கன், 221. [256.
குழல் - கூந்தல், 8 ; புல்லாங்குழல்,
குழலி - கூந்தலையுடையவள், 17.
குழவி - பிள்ளை, 390.
குழறல் - ஒலித்தல், 207.
குழாம் - கூட்டம், 62.
குழி - மடு, 178.
குழீஇ - திரண்டு, 156 ; கூடி, 178.
குழை - குண்டலம், 101, 135.
குழைதல் - இளகுதல், 63, 99 ; வருந்துதல், 288.
குளித்தல் - மூழ்குதல், 60.
குளிப்ப - மூழ்க, 41.
குளிரி - கிளி கடியும் கருவி, 73.
குற்றியலிகரம் அலகு பெறுமை, 191, 248, 259, 361, 424.
குற்றுதல் - கொய்தல், 84, 131 ; உரலிலிட்டு இடித்தல், 84.
குற்றேவல் - சிறு தொழில், 7.
குறித்தல் - கருதுதல், 298.
குறிப்பு மொழி, 89, 112, 207, 253, 266, 340, 361.
குறியோன் - அகஸ்தியன், 109.
குறுகல் - கூடுதல், 38.
குறுகி வரல் - கடுகி வரல், 252.
குறும்பு - பாலை நிலத்து ஊர், 263.
குறை - குற்றம், 89 ; வேண்டு கோள், 107.
குனி நாள் மதி, 138.
கூகை - கோட்டான், 207, 318.
கூகை குழறல், 207.
கூடல் வளைத்தல், 413.
கூதிர்ப் பருவம், 412.
கூய் - கூவி, 35, 131.
கூர்தல் - மிகுதல், 33, 57.
கூற்று - சொல், 100, 107.
கூனல் - வளைவு, 153.
கெழு - உவம உருபு, 423.
கெழுவுதல் - பொருந்துதல், 382.
கேகயம் - மயில், 394.
கேசம் - கூந்தல், 248. [357.
கேண்மை - உறவு, 314 ; நட்பு,
கேதகை - தாழை, 194 ; தாழம்பூ, 248.
கேழ் - நிறம், 13, 118 ; ஒளி, 392.
கேழல் - பன்றி, 165.
கேள் - உறவு, 151 ; நட்பு, 200.
கேள்வர் - கணவர், 200.
கேளிர், 233.
கை - துதிக்கை, 12.
கைத்தல் - வருத்துதல், 423.
கைதவம் - துன்பம், 215.
கைதை - தாழை, 190.
கையகலல் - பிரிதல், 33, 143.
கையடை - அடைக்கலம், 314.
கையறல் - செயலறல், 288.
கையாறு - துன்பம், 222.
கையுறை - தழை, 76, 97.
கோங்கு - தேன், 107, 171.
கொடி - காக்கை, 334.
கொடிச்சியர் - குறத்தியர், 78.
கொடுவரி - புலி, 165.
கொடுமை - வளைவு, 313.
கொடை - தருமம், 40, 134.
கொண்கர் - தலைவர், 194, 276.
கொண்டல் - மேகம், 301, 326.
கொண்டான் - கணவன், 406.
கொண்டானின் துன்னிய கேளிர் மற்று இல்லை, 406.
கொண்டு நிலை, 107.
கொந்தள பாரம், 396.
கொந்து - கொத்து, 157, 174.
கொம்பர் - பூங்கொம்பு, 13, 210.
கொம்பு - கிளை, 207.
கொய்தல் - தெரிந்தெடுத்தல், 390.
கொல் - ஐயம், 29; அசை, 29.
கொழுதுதல் - கோதுதல், 7, 273.
கொள் கொம்பு, 229. [325.
கொளுத்தல் - கொள்ளச் செய்தல்,

கொளுந்தல் - பற்றல், 143.
கொற்ற நேமி விந்தை, 271.
கொற்றம் - வெற்றி, 42.
கொன் - அச்சம், 208; பெருமை, 356.
கொன்றை வேணி - சிவன், 368.
கோ - அரசன், 82.
கோகனகம் - பதும நிதி, 344.
கோகிலம், 138.
கோடல் - மாறுபடல், 53; கொள்ளுதல், 202.
கோடு - தந்தம், 12, 56, 68, 72.
கோடுதல் - தவறுதல், 68.
கோடை - வெயில், 99.
கோதம் - கோபம், 294.
கோது - குற்றம், 241.
கோபம் - இந்திரகோபம், 9, 270.
கோ மங்கை - தலைவி, 389.
கோமளம் - அழகு, 404; அழகி, 212.
கோயில் - மாளிகை, 143.
கோல் - அம்பு, 55; திரட்சி, 55.
கோல் வளை, 55.
கோலம் - அழகு, 85, 311.
கோள் - கொத்து, 85; கொலை, 338.
கோன் - அரசன், 53; தலைவன், 55.
சகம், 328.
சங்கம் - சங்கு, 62; சங்க நிதி, 276.
சங்கரன், 401.
சங்கு - சங்க நிதி, 32.
சங்கை - சந்தேகம், 85.
சஞ்சரீகம் - வண்டு, 157.
சந்தம் - சந்தன மரம், 25.
சந்திர வாணன், 42, 60.
சந்து - சந்தனம், 93, 157.
சமர் - போர், 359.
சய மங்கை, 190.
சயிலம் - மலை, 140, 369.
சரண் - அடைக்கலம், 19.
சரம் - அம்பு, 78.
சரற்காலம் - கூதிர்ப்பருவம், 413.
சலஞ்சலம், 62.
சாதகப்பறவை, 58.
சாந்தம் - சந்தனம், 166.
சாந்து - விழுது, 168.
சாபம் - வில், 5.
சாய் - கோரைப்புல், 132.
சாய்தல் - தோல்வியடைதல், 154; சோர்வடைதல், 154; அழிதல், 314, 361.
சாயை - நிழல், 132.
சார்தல் - அணுகுதல், 39; உறவு கொள்ளுதல், 226.
சாரல் - மலைப்பக்கம், 11, 25, 50.
சால்பு - மாட்சிமை, 406.
சால - மிக, 8.
சாலி - அருந்ததி, 383.
சாலும் - மிகும், 154.
சாறு - திருவிழா, 377.
சான்றாண்மை - மாட்சிமை, 223.
சிதையா - கெடாத, 12.
சிந்தாகுலம் - மனத்துயர், 102.
சிமை - சிகரம், 97.
சில் வளை, 331.
சிலம்பன், 234, 236.
சிலம்பி - சிலந்திப் பூச்சி, 44.
சிலம்பு - மலை, 13; காலணி, 27.
சிலம்பெதிர் கூவுதல், 35, 131.
சிலேடை - பல பொருள் பயப்பது, 11, 12, 105, 107, 164, 423.
சிலை - வில், 41, 53, 109, 164.
சிறப்பும்மை, 11, 19, 33, 43, 45, 79, 82, 222, 223, 268, 326, 401, 402.
சிறு நகை - புன்னகை, 16.
சிறு மலை - மதுரைஜில்லாவில் உள்ள ஒரு மலை, 78, 92, 97.
சிறுவன் - மகன், 391, 392.
சிறை - வேலி, 151; சிறகு, 160; பாதுகாப்பு, 221.
சிறைப்புறம் - வேலிப்புறம், 151.
சினை - முட்டை, 106.
சீதளம் - குளிர்ச்சி, 46.
சீதை இலங்கையில் பிறந்தாள் என்பது, 161.
சீதை கொண்கன், 79.
சீயம் - சிங்கம், 29.
சீர் - புகழ், 21, 65; ஓசை, 318.

சீர்மை - புகழ், 241.
சீலம் - ஒழுக்கம், 113.
சீறடி - சிறிய பாதம், 308, 397.
சுடர் - ஒளி, 32; சூரியன், 251.
சுடரவன் - சூரியன், 130.
சுணங்கு - அழகு தேமல், 234; மாமை நிறம், 307.
சுதை - சுண்ணம், 70, 141.
சுரத்தோர் - வேடர், 343.
சுர நாடு - பாலை நிலம், 335.
சுரம் - வழி, 260; பாலை வனம், 280; காடு, 307.
சுரர் - தேவர், 245.
சுரலோகம் - தேவருலகம், 335.
சுருதி - வேதம், 233.
சுருதி கண்டார், 233.
சுரும்பு - ஆண் வண்டு, 90.
சுருள் - காதணி, 423.
சுவடு - பாதக்குறி, 345.
சுளித்தல் - கோபித்தல், 57.
சுற்றல் - செருகுதல், 416.
சுறவுக்குழை, 34.
சூட்டு - உச்சிக்கொண்டை, 208.
சூது - சொச்கட்டான் காய், 46.
சூர் - தெய்வப்பெண், 40, 44.
சூர மகள், 2.
சூல் வளை, 104.
சூழ்தல் - பொருந்துதல், 142.
சூள் - ஆணை, 290.
சூறை - கொள்ளை, 377.
சூறையர் - கொள்ளைக்காரர், 377.
சேக்கர் - செவ்வானம், 64, 259.
செங்கனி - கொவ்வைப்பழம், 43.
செங்குமுதம் - செவ்வல்லி, 108.
செங்கோல் - நீதி, 55.
செண்பகம், 312.
செந்தலை அன்றில், 106.
செந்நீர் - புது வெள்ளம், 301, 305.
செந்நீர் விழவு, 305
செப்பு - கலசம், 5, 116.
செம்பியர் - சோழர், 266.
செம்பியர் வாணற்குச் செண்டும் புலியும் கொடுத்து அகன்றது, 266.
செம்புருக்கி வார்த்தால் அனைய வழி நெடும்பாலை, 267.
செம்பொன் வெற்பு - மேருமலை, 64.
செய்குழல் - அலங்கரித்த கூந்தல், 7.
செய் குன்று, 19.
'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம், 86, 105, 246, 340, 409.
'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம், 257.
செயலை - அசோகு, 333.
செயிர்த்தல் - கோபித்தல், 288.
செரு - போர், 204.
செருகல் - ஒன்றையொன்று தழுவுதல், 42.
செருந்தி - செருந்திப்பூ, 245; [134.
செருந்து - செருந்தி மரம், 9,
செரு மகள், 343.
செல் - இடி, 263, 313.
செல்லல் - துன்பம், 209. [தல், 252.
செலவு - போக்கு, 27; செல்லு
செவ்வண்ணம் - செவ்வை, 131.
செவ்வணி, 382.
செவ்வனம் - செம்மையான காடு, 19; செம்மை, 19.
செவ்வி - காலம், 109, 110; அழகு, 111, 154, 285; வாசனை, 287.
செவ்வேள், 83, 132.
செவிலி, 210, 228, 297.
செழியன் - பாண்டியன், 178.
செழுந்திங்கள் - பூரணச்சந்திரன், 9.
செற்றல் - அழித்தல், 416.
செறித்தல் - காவலில் இடுதல், 295.
செறிதல் - நெருங்குதல், 90, 288.
சேடி - தோழி, 382, 384. [348.
சேண் - தூரம், 79; சுவர்க்கம்,
சேதாம்பல் - செவ்வல்லி மலர், 176.
சேய் - முருகக்கடவுள், 16, 52, 101, 400; சிவப்பு, 331.
சேயரி - செவ்வரி, 30.
சேர்ப்பன், 254.
சேரலர் - பகைவர், 193, 223, 275.
சேரி - ஊர், 285.

சேல் - கெண்டை மீன், 20, 34; கயற்கொடி, 234.
சேறல் - செல்லுதல், 57, 131, 175.
சையம் - மலை, 319.
சொக்கப்ப நாவலர், 205.
சொரிதல் - வழங்குதல், 25.
சொல் - புகழ், 134, 408.
சொல் பொருள் படைத்து வாழ்ந் தார் - புலவர், 142.
சொல்லெச்சம், 99.
சோகம் - துன்பம், 11, 173.
சோகாகுலம், 284.
சோமன் - சந்திரன், 177.
சோர்தல் - மயங்குதல், 77; தளர் தல், 78; ஒழுகுதல், 78.
ஞாலம் - உலகம், 207.
ஞாளி - நாய், 203, 211.
ஞெண்டு - நண்டு, 293.
தக்கார், 83.
தகவின்மை - வருத்தம், 50.
தகை - அழகு, 67, 168.
தகைதல் - தடுத்தல், 405.
தசை, 140, 320. [கோடு, 156.
தஞ்சம் - ஆதரவு, 91; பற்றுக்
தஞ்சாபுரி, 422. [மரூஉ, 1.
தஞ்சை - தஞ்சாக்கூர் என்பதன்
தட - பெருமை, 422.
தடஞ்சிலம்பு - பெரிய மலை, 42.
தடம் - குளம், 35; அகலம், 321.
தடமலர் - அகன்ற பூ, 36.
தடிதல் - வெட்டுதல், 405.
தண்டலை - சோலை, 63, 194, 254.
தண்டாதவர், 406.
தணத்தல் - பிரிதல், 174, 339.
தணித்தல் - தீர்த்தல், 417. [32.
தணிதல் - நிறைதல், 25; தாழ்தல்,
தத்துதல் - தாவுதல், 26.
தம் - சாரியை, 48, 120.
தமர் - சுற்றத்தார், 283, 363.
தமனியம் - பொன், 82.
தமிழ் - இனிமை, 71.
தமிழ்க்கிரி - பொதிய மலை, 10.
தமிழ்ச் சிலம்பு, 72, 171, 329.
தமிழ்த் தஞ்சை, 71.
தமிழ் நாடு - பாண்டி நாடு, 83.
தமிழ்ப் பைந்தொடை, 58.
தமிழ் வாணன், 145.
தமிழ் வெற்பு - பொதிய மலை, 26.
தயங்கல் - தள்ளாடல், 133; விளங் கல், 322, 377.
தரங்கம் - அலை, 26.
தரணி - உலகம், 18.
தரளம் - முத்து, 13, 252.
தரியலர் - பகைவர், 161, 173, 190.
தரியார் - பகைவர், 37.
தரு - மரம் 35; கற்பகத்தரு, 276; துணை வினை விகுதி, 407.
தருதல் - கொண்டு வருதல், 137.
தரும் தாரு, 134.
தரை - உலகம், 94, 102.
தலம் - உலகம், 54, 82, 241.
தலை - உச்சி, 205; முதன்மை, 393.
தலைப்பெய்தல் - கூடுதல், 140.
தலைவியைத் திருமகள் எனல், 6, 12, 64, 177, 245.
தலைவி பிறை தொழாமை, 34.
தலை விலை - இன வரி, 281.
தவல் - கேடு, 363.
தவளாதவம், 259.
தவா - கெடாமல், 165.
தழங்குதல் - ஒலித்தல், 402.
தழல் - நெருப்பு, 60.
தழாஅல் - தழுவுதல், 10, 121.
தழீஇ - அணைத்து, 174, 401.
தழை - மாந்தழைகளால் அமைந்த உடை, 97; மயில் தோகை, 270.
தளவு - முல்லை, 108, 360.
தளி - மேகம், 316.
தளிர் - கொழுந்து, 22, 79, 85.
தளைத்தல் - தடுத்தல், 64.
தளைபடல் - கட்டுப்படல், 10.
தற்குறிப்பேற்ற அணி, 181, 222.
தன் - சாரியை, 101.
தன்னையர் - தமையன்மார், 90.
தனம் - செல்வம், 12; முலை, 12.

தனி - துணையின்மை, 19 ; ஒப்பின்மை, 138, 319.
தா - குற்றம், 82.
தாது - மகரந்தம், 76, 194.
தாம் - சாரியை, 84.
தார் - மலர் மாலை, 69, 193, 299.
தாரகை - நட்சத்திரம், 407.
தாரு - கற்பக விருட்சம், 71.
தாரை - கண் மணி, 101 ; நாக்கு, 134. [401.
தாவாத - கெடாத, 240 ; நீங்காத,
தாழ்தல் - தொங்குதல், 145 ; தங்குதல், 223 ; பொருந்துதல், 162 ; ஆழ்தல், 222.
தாழி - சால், 202.
தாழியில் போது அலர்தல், 202.
தாள் - தண்டு, 21 ; பாதம், 23.
தாறு - குலை, 364.
தான் - சாரியை, 36.
தானம் - மதம், 17.
தானன் - ஓர் உபகாரி, 371.
தானை - சேனை, 267.
திகழ்தல் - விளங்குதல், 86, 287.
திகிரிக்கிரி, 206.
திங்கள் - சந்திரன், 85, 232.
திண்மை - வீரம், 51.
திரிகோட்டு இரலை, 78. [185.
திரு - செல்வம், 158 ; இலக்குமி,
திருத்தகவு - சிறப்பு, 287.
திருந்தலர் - பகைவர், 6.
திருந்தார் - பகைவர், 101.
திருப்பாவை - இலக்குமி, 88.
திரை - அலை, 64.
தில்லை - சிதம்பரம், 336.
திலகம் - பொட்டு, 28, 234.
திவலை - நீர்த்துளி, 220.
திலோத்தமை, 411.
திவாகரன் - சூரியன், 119.
திளைத்தல் - நெருங்குதல், 64.
திறம் - வெற்றி, 255.
திறல் - வெற்றி, 66, 78.
திறை - கப்பம், 16 ; வெற்றி, 45.
தினை மூரல், 140.
தீங்கு - குற்றம், 126; பொல்லாங்கு,
துகிர் - பவளம், 26, 100. [192.
துகில் - புடைவை, 27; ஆடை, 217.
துஞ்சாமை - உறங்காமை, 202.
துடி - காவல் பறை, 244 ; பாலைநிலப் பறை, 318. [203.
துண்ணெனல் - அச்சக் குறிப்பு,
துணி - துண்டம், 130, 195.
துணை - இரண்டு, 27; தோழி, 136.
துணைவி - மனைவி, 330 ; தோழி, 339, 367.
துணை வினை விகுதி, 407.
தும்பைத்தேம் கண்ணி, 204.
துயில் - உறக்கம், 173.
துவலை, 283, 363.
துளி - மழைத்துளி, 74.
துறை, 205.
துறைவன், 232, 237.
துன்றுதல் - தவழுதல், 34.
துன்னுதல் - நெருங்குதல், 343.
துனித்தல் - துன்புறல், 378.
துனை - விரைவு, 275.
துனைவு - விரைவு, 351.
தூங்கருவி, 147. [கல், 237.
தூங்கல் - ஒலித்தல், 147; நெருங்
தூண்டல் - இழுத்துச் செல்லல், 275.
தூணம் - தூண், 130.
தூரியம் - மண முரசு, 285.
தூவி - இறகு, 270.
தேங்கு - தென்னை, 115.
தெய்வதம் - தெய்வம், 35.
தெய்வம் - ஊழ், 22.
தெரிதல் - ஆராய்தல், 145, 217.
தெரியல் - மாலை, 176.
தெரிவையர் - பெண்டிர், 311.
தெருமரல் - மனச்சுழற்சி, 160.
தெவ் - பகை, 89; பகைவர், 11.
தெவ்வர் - பகைவர், 143, 168.
தெளித்தல் - தெளியச் செய்தல், 291; சத்தியஞ்செய்தல், 397.
தெளிதல் - அறிதல், 75.
தெறுதல் - வருத்துதல், 330.

தென் - அழகு, 7.
தென் மலை - பொதிய மலை, 16.
தென் வரை - பொதிய மலை, 134.
தென்னன் - பாண்டியன், 359.
தேக்குதல் - நிறைதல், 78; நிறைத் தல், 74.
தேம் - இனிமை, 72; தேன், 166.
தேம்பல் - மழுங்கல், 40.
தேமா - தேமா மரம், 131.
தேர்தல் - ஆராய்தல், 59, 74, 147; தேடுதல், 164, 165, 169.
தேர்வு - ஆராய்ச்சி, 397. [59.
தேறுந்தொறும் இனிதாம் தமிழ்,
தேவி - மனைவி, 368.
தேற - தெளியும்படி, 15.
தேறாத - தெளிவில்லாத, 11.
தேறுதல் - தெளிதல், 26.
தேன் - வண்டு, 15; பெண் வண்டு, 90.
தையல் - கட்டழகு, 189; கட்டழகி, 132, 187, 288.
தொகுத்தல் விகாரம், 40, 94, 118, 242, 244, 327, 330.
தொங்கல் - மாலை, 88, 90, 116.
தொடி - வளையல், 183; வாகு வல யம், 252.
தொடை - மாலை, 104.
தொடையல் - மலர் மாலை, 52.
தொண்டை - கொவ்வைக் கனி, 85.
தொத்து - பூங்கொத்து, 237.
தொல்லை - பழைமை, 183.
தோகை - மயில், 58, 100, 151.
தோடு - குருத்து, 107; மடல், 194; குழை, 107.
தோய்தல் - அளாவுதல், 10; தொடு தல், 135; குளித்தல், 10, 12.
தோயம் - நீர், 29.
தோல் - யானை, 301, 374.
தோளா மணி, 382.
தோற்றம் - அழகு, 63.
தோன்றல் - தலைவன், 223, 301.
தோன்றி - செங்காந்தள், 270.
நகில் - முலை, 27.
நகுதல் - பரிகசித்தல், 79; சிரித் தல், 112.
நகை - ஒளி, 30; சிரிப்பு, 113; மகிழ்ச்சி, 116; பல், 167.
நகைத்தல் - மலர்தல், 290.
நகை நகைத்தல், 340.
நசை - வேட்கை, 280.
நடுக்க நாட்டம், 68.
நடு நாள் - பாதி இரவு, 213, 244.
நடு நாள் இரவு - பாதி இரவு, 173.
நண்பு - உறவு, 300.
நண்ணல் - பொருந்தல், 87, 112.
நந்தாவனம் - பூந்தோட்டம், 131.
நந்து - சங்கு, 157.
நமர் - நம்மவர், 227.
நயத்தல் - விரும்பல், 348. [66.
நயப்பு - காதல், 21; விரும்புதல்,
நயம் - இனிமை, 26; மகிழ்ச்சி, 282.
நயனம் - கண், 104.
நயனாரவிந்தம், 135.
நராலுதல் - ஒலித்தல், 288.
நல்கல் - கொடுத்தல், 144; விரும் பல், 328; வளர்த்தல், 328.
நல்கா இயல்பு அன்னை - செவிலித் தாய், 185.
நல்லார் - பெண்டிர், 8.
நல்வினை - புண்ணியம், 112.
நலம் - இன்பம், 33; அழகு, 144; நல்வினை, 241.
நலன் - இன்பம், 212.
நலிதல் - வருத்துதல், 55.
நலிவு - துன்பம், 215.
நவ்வி - பெண் மான், 278, 287.
நவ்வி மான் - பெண் மான், 111.
நவை - குற்றம், 91.
நள்ளென்னுமோசை, 202.
நளி - குளிர்ச்சி, 316.
நளினம் - தாமரை, 21.
நற்றாய் - ஈன்ற தாய், 303.
நறவு - தேன், 162. [157.
நறை - குற்றம், 105; வாசனை,
நன்கலம் - நல்லணி, 69.
நன்பகல், 57.

நன்றி - நல்வினை, 149.
நனவு - உண்மை, 215.
நனை - அரும்பு, 187; தேன், 376.
நாகக்குருளை - பாம்புக்குட்டி, 109.
நாகம் - புன்னை மரம், 118; பாம்பு, 165; மலை, 245.
நாகு - பசு, 274; இளமை, 293.
நாட்டம் - ஆராய்தல், 67, 68; கண், 167.
நாடல் - தேடல், 9, 185, 315; விரும்புதல், 18; கருதுதல், 122; ஆராய்தல், 94.
நாடன், 225.
நாண் - நாணம், 128; சரடு, 235; கயிறு, 387.
நாண் உயிரினும் சிறந்தது, 311.
நாண நாட்டம், 67.
நாணினும் கற்புச் சிறந்தது, 311.
நாப்பண் - நடு, 35.
நாமம் - பெயர், 8; புகழ், 7.
நாவலர் - புலவர், 17, 155.
நாவி - கஸ்தூரி, 20.
நாள் - புதுமை, 167, 338.
நாள் அரும்பு - புதிய மொட்டு, 21.
நாள் மலர் - அன்று அலர்ந்த மலர், 17, 184, 37௦.
நாளினும் நாளும் - ஒவ்வொரு நாளும், 216.
நான்முகத்தோன், 149.
நான்முகனுக்கும் தலைவனுக்கும் சிலேடை, 105.
நானம் - கஸ்தூரி, 17, 315.
நித்திலக் கோதை, 356.
நித்திலம் - முத்து, 84, 282, 407.
நிமித்தம் - நற்சகுனம், 334.
நிரல் நிறை, 16, 132, 184.
நிரை - ஒழுங்கு, 102, 160, 314; பசுக்கூட்டம், 371.
நிலவு - ஒளி, 252; சந்திரன், 240.
நிலவுதல் - விளங்குதல், 240.
நிழல் - ஒளி, 60, 308. [57.
நிழலைச் சுளித்து மறங்கூர் களிறு,
நிறம் - மார்பு, 41, 249; ஒளி, 57.
நிறீஇ - நிறுத்தி, 173.
நிறை - மறை பிறர் அறியாது காக்கும் குணம், 14, 56; ஆண்மைக் குணம், 45.
நிறை நீர் - கடல், 14.
நீகான் - மாலுமி, 284.
நீடல் - தாமதித்தல், 144. [160.
நீடு - நீட்டித்தல், 13; நெடுநேரம்,
நீந்தல் - துன்புறல், 213; கடத்தல், 245.
நீர் - தன்மை, 84, 91, 382; கடல், 264, 410; அன்பு, 389.
நீரணங்கு - நீர மகள், 2.
நீலம் - கருங்குவளை மலர், 54, 84.
நுகத்திற் பகல், 48.
நுகம் - நுகத்தடி, 48, 365.
நுகர்தல் - உண்ணல், 290.
நுடங்கல் - துவளல், 76, 396.
நுதல் - நெற்றி, 16, 66, 88, 138.
நுந்தை, 329.
நுமர், 358.
நூபுரம் - பாதச்சிலம்பு, 23, 133.
நூறல் - அழித்தல், 364.
நெடுங்குலம், 407.
நெடுந்தகை, 160, 172, 188.
நெடுமாறன், 222.
நெய் - புழுகு, 3, 370.
நெய்தல், 290.
நெய்யாடுதல், 389.
நெருங்குதல் - கோபித்தல், 279.
நெறி - நீதி, 68; ஒழுங்கு, 92, 125; வழி, 164, 220.
நெறிவு - குழற்சி, 6.
நென்னல் - நேற்று, 35, 144.
நேமி - சக்கரம், 271.
நேயம் - அன்பு, 29, 136.
நேர் - செவ்வை, 75.
நேர்தல் - உடன்படுதல், 170.
நேரியர் - சோழர், 53.
நேரிழை, 171.
நைதல் - வருந்துதல், 3. [333.
நொச்சி - நொச்சி மரம், 201; மதில்,
நொதுமலர் - அயலார், 226.

நோக்கு - பார்வை, 339.
நோதல் - வருந்தல், 33.
நோய் - துன்பம், 191.
பகடு - ஆண் யானை, 204.
பகல் - நடு, 48; சூரியன், 125.
பகழி - அம்பு, 48, 363.
பகு வாய், 232.
பங்க சாதம் - குவளை மலர், 195.
பங்கயம், 133.
பங்கேருகம் - தாமரை மலர், 2; பதும நிதி, 32.
பசப்பு, 214.
பசலை, 255, 275.
பசுமை - அழகு, 337.
பஞ்சாய் - கோரை, 380.
பஞ்சு - செம்பஞ்சுக்குழம்பு, 141.
பஞ்சரம், 335.
பட்டது - அழிந்தது, 41.
பட்டம் - நீர் ஓடை, 72.
படர்தல் - செல்லுதல், 294, 417.
படி - பூமி, 70; விதம், 70; உருவத்தையொத்த பிரதி, 104.
படிறு - களவு, 243.
படு சிலை - பெரிய மலை, 345.
படுத்தல் - சிக்கச் செய்தல், 393.
படுதல் - போலுதல், 10; அனுபவித்தல், 193; பொருந்துதல், 10; வீழ்தல், 224; அழிதல், 10.
படை - ஆயுதம், 9; வேல், 57; சேனை, 82.
பண் - இசை, 72, 256, 299, 375.
பண்டறி சுட்டு - முன்னமே அறிந்ததைக் குறிக்கும் சுட்டு, 79.
பண்டு - முன்பு, 402.
பண்பு - குணம், 417; செயல், 206.
பணி - தொழில், 32; பாம்பு, 213.
பணிதல் - பரவுதல், 103.
பணி மொழி, 139.
பணியலர் - வணங்காதவர், 219.
பணில பங்கசாதத்து இருநிதி, 221.
பணை - மூங்கில், 192.
பதம் - பாதம், 32.
பதாகை - கொடி, 371.
பதி - ஊர், 70.
பதுக்கை - சிறு தூறு, 363.
பந்தி - ஒழுங்கு, 152.
பயந்தவர் - பெற்றவர், 32.
பயந்தவள் - பெற்றவள், 339.
பயந்தாள் - கொடுத்தவள், 32.
பயந்தோர் - பெற்றோர், 32.
பயன், 135.
பயிலல் - வாழ்தல், 97; பழகுதல், 109.
பயிறல் - நெருங்குதல், 8.
பயோதரம் - முலை, 135.
பரக்கின்ற - பரவுகின்ற, 121.
பரத்தையர், 383.
பரல் - பருக்கைக் கல், 336.
பரவுதல் - புகழ்தல், 172; துதித்தல், 261; வாழ்த்துதல், 286.
பராகிலை, 286, 287.
பரி - குதிரை, 143, 177, 206.
பரித்தல் - நடப்பித்தல், 206.
பரிமளம் - வாசனை, 9.
பரியல் - வருந்தாதே, 256.
பருதி - சூரியன், 233.
பருவரல் - துன்பம், 209.
பல்லியம் - வாத்தியம், 200.
பழனம் - வயல், 262, 349.
பழி - குற்றம், 70.
பழிச்சல் - வாழ்த்துதல், 32.
பழுக்காய் - பாக்கு, 364.
பழுது - குற்றம், 392.
பள்ளி - படுக்கை, 284.
பன்னகம் - பாம்பு, 387.
பன்னுதல் - சொல்லுதல், 297.
பாகன் - தேர்ப்பாகன், 28.
பாகு - சர்க்கரைப்பாகு, 58.
பாங்கன் - நண்பன், 39.
பாங்கி - தோழி, 61, 80.
பாங்கு - பக்கம், 255; பாங்கியர் கூட்டம், 138.
பாசறை - பசுமையான இலையடர்ந்த பந்தர், 130.
பாசிலை, 237.
பாடி - ஊர், 141, 248, 320.
பாடு - பக்கம், 345.

பாணன், 393, 394.
பாணிச்சி, 395.
பாணித்தல் - காலம் தாழ்த்துதல், 210.
பாதவம் - மரம், 267.
பாய்தல் - பரவுதல், 283.
பாயல் - படுக்கை, 309.
பார் - உலகம், 22, 30, 306.
பார்ப்பு - குஞ்சு, 106.
பாரணங்கு - சூரர மகள், 2.
பாரி - ஒரு வள்ளல், 37.
பாரித்தல் - பிறப்பித்தல், 51.
பால் - வெண்மை, 226, 254.
பாலித்தல் - பாதுகாத்தல், 381.
பாலை - பாலை வனம், 267.
பாவலர் - புலவர், 2.
பாவுதல் - பொருந்துதல், 88.
பாவை, 72.
பான்மை - தன்மை, 36.
பானல் - கருங்குவளை, 417.
பானிற்று வினையெச்சம், 225, 231, 283, 416.
பிடவு, 170.
பிடி - பெண் யானை, 123, 156.
பிணை - பெண் மான், 362.
பிரமன் பெறும் நாள், 252.
பிரமாஸ்திரம், 104.
பிராட்டி - தலைவி, 394.
பிராயோபவேசம், 374
பிரான் - தலைவன், 54, 219.
பிரிவில் அசை நிலை, 357.
பிழைத்தல் - தவறுதல், 197, 198.
பிழைப்பு - தவறு, 201.
பிறங்குதல் - நெருங்குதல், 224.
பிறழ்தல் - தப்புதல், 291.
பிறிதின் நவிற்சி அணி, 173.
பிறை - பிறைச் சந்திரன், 1, 42.
'பிறை தொழுக,' என்றல், 64.
பின் பனிப் பருவம், 418.
பின்னல் - பிணித்தல், 22; தொடர்ச்சி, 418.
பின்னிற்றல் - வழிபடல், 5.
பீர் - பீர்க்கு, 247.
புகர் - ஒளி, 289, 334; பழுப்பு நிறம், 136, 293.
புகல்வோர் - விரும்புபவர், 414.
புகலல் - சொல்லுதல், 14; மகிழ்தல், 136; விரும்புதல், 156.
புகலிடம் - போக்கிடம், 136.
புகழ் மணி - மாணிக்கம், 62.
புகறல் - கூறல், 311.
புடை - பக்கம், 62.
புடை பெயர்தல் - அசைதல், 54.
புணை - மரக்கலம், 245; தெப்பம், 331, 370.
புதைத்தல் - மறைத்தல், 12, 213.
புது நீர் - வெள்ளம், 255.
புயல் - மேகம், 1, 17, 31, 34.
புயல் ஏறு - இடி, 169.
புரம் - நகர், 317.
புரவலர் - வள்ளல்கள், 379.
புரவலன் - காப்பதில் வல்லவன், 40; அரசன், 86; தலைவன், 179.
புரவி - குதிரை, 286, 320.
புரவு - கொடைத்தொழில், 396.
புராந்தகர், 242.
புரி - நரம்பு, 368.
புரிசை - மதில், 251, 321.
புரை - ஒத்த, 248.
புல்லல் - கூடல், 330.
புலத்தல் - துன்புறுதல், 99; மனம் வேறுபடுதல், 392.
புலம்பல் - ஒலித்தல், 274; வருந்துதல், 274.
புலம்பர் - நெய்தல் நிலத் தலைவர், 290, 293.
புலம்பு - வருத்தம், 222; தனிமை, 323.
புலர்தல் - விடிதல், 194; ஆறுதல், 256; வாடுதல், 219; குறைதல், 219; உலர்தல், 378.
புலவி - ஊடல், 377.
புலவோர் - அறிஞர், 414.
புலன் - அறிவு, 38, 354.
புலனாகாமை - தெரியாதிருத்தல், 24.
புள் - பறவை, 58; வண்டு, 242.
புள்ளும் வழங்கா வழி - பாலை வழி, 402.
புறக்கடை - வெளி, 393.
புறம் - வெளி, 57; முதுகு, 145.

புன்கண் - துன்பம், 114.
புன்மை - இழிவு, 146.
புன்னாகம் - புன்னை மலர், 245.
புனம் - தினைக் கொல்லை, 35.
புனல் - நீர், 39.
புனல் தரு புணர்ச்சி, 301.
புனை - அழகு, 40.
புனைதல் - அலங்கரித்தல், 31; தாங்குதல், 39; தரித்தல், 75. [382.
பூ - அழகு, 40; மாதர் சூதகம்,
பூகம் - பாக்கு மரம், 118, 205, 293.
பூங்கொடி, 27, 51.
பூசல் - ஆரவாரிப்பு, 248.
பூஞ்சிலம்பு - அழகிய மலை, 40.
பூட்டு வில் அலங்காரம், 345.
பூண் - ஆபரணம், 103, 246.
பூத்தரு புணர்ச்சி, 300.
பூந்தழை, 115, 137, 166.
பூந்திருமான் - இலக்குமி, 30.
பூரணம் - பூரணத்திதி, 265.
பூரித்தல் - விம்முதல், 51.
பூவை - நாகணவாய்ப்பறவை, 44.
பூவை நிலை, 130, 355, 371.
பூளை - பூளைப்பூ, 103.
பேட்ட - விரும்பிய, 69.
பெடை - பெண் நண்டு, 293.
பெண்ணை - பனை, 279.
பெண்ணென் பிறவி பேருடைத்தன்று, 203. [நன்று, 310.
பெண் பிறப்புப் பிறவாது ஒழிகை
பெண்மை, 148.
பெருந்தகை, 15.
பெருமகள் - தலைவி, 268.
பெருமகன் - தலைவன், 187.
பெருமாட்டி - தலைவி, 114.
பெற்றி - தன்மை, 224. [407.
பெற்றியள் - பெருமையுடையவள்,
பேணலர், 142, 162. [334.
பேணி - விரும்பி, 210; போற்றி,
பேது - மயக்கம், 30.
பேதுறல் - மயங்காதே, 30.
பேதை - பெண், 4, 42, 224.
பேதைமை - அறியாமை, 90.
பேர் - கீர்த்தி, 203.
பேறு - பயன், 37; புண்ணியம், 207; செல்வம், 236.
பைங்கடல் - கருங்கடல், 69.
பைதல் - துன்பம், 402.
பொங்கர் - சோலை, 57, 76.
பொங்குதல் - மிகுதல், 45; வீங்குதல், 336; பருத்தல், 425.
பொதி - நிறைவு, 290.
பொதிய மலை அகஸ்தியர் பாடிய இசைக்கு உருகியது, 345.
பொதியில் - பொதிய மலை, 115.
பொது, 34.
பொதும்பர் - சோலை, 236.
பொய்கை - குளம், 1, 21, 67, 285.
பொய்த்தல் - வஞ்சித்தல், 196.
பொய்தல் - விளையாட்டு, 84.
பொருட்டு - காரணம், 287; பயனை உடையது, 397.
பொருதல் - போர் புரிதல், 165.
பொருந்தம் - தாமிரபர்ணி நதி, 54.
பொருப்பன் - குறிஞ்சி நிலத் தலைவன், 88.
பொருப்பு - மலை, 65, 320, 355.
பொருவில் - போர் புரியும் வில், 1.
பொருள் - நன்கு மதிக்கப்படுவது, 307.
பொலம் - பொன், 54; அழகு, 63.
பொலிதல் - விளங்குதல், 60.
பொழில் - சோலை, 10, 27, 51.
பொற்பு - அழகு, 148, 301.
பொறை - பொறுத்தல், 14; சுமை, 45; துறுகல், 250.
பொறை கொளல், 294.
பொன் - பசலை நிறம், 25, வெள்ளி, 222; இரும்பு, 274; இலக்குமி, 61; அழகு, 85; திருமங்கிலியம், 226.
பொன் நாண் - தங்கச் சரடு, 18.
பொன் புனைதல் - திருமங்கிலியம் பூட்டுதல், 359.
பொன் வண்ணம் - பசலை, 281.
போகம் - இன்பம், 372.

போத - மிக, 300, 346.
போதகம் - யானை, 169, 200, 398.
போது - பேரரும்பு, 45; மலர், 31; பொழுது, 96. [தல், 275.
போர்த்தல் - படர்தல், 124; மூடு
போர் புரிவோர் தும்பை மாலை சூடுதல், 204.
போறல் - ஒத்திருத்தல், 19.
மகத்திற்சனி சந்திர வாணனுக்கு உவமை, 48.
மகம் - இன்பம், 328.
மகவு - குட்டி, 268.
மகிழ்நர் - கணவர், 378.
மங்காமல் - அழியாமல், 296.
மஞ்சு - மேகம், 16.
மஞ்ஞை - மயில், 29, 238, 267.
மடல் - தான் காதலித்த தலைவியைப் பெறுத போது எறும் பொருட்டுத் தலைவன் பனங்கருக்கால் குதிரை போலச் செய்து கொள்ளும் ஊர்தி, 101, 103.
மடலூர்தல், 102.
மடவார் - பெண்டிர், 76.
மடை - நீர் ஓடை, 104, 151.
மண் - பூமி, 99; உலகு, 64.
மண்டுதல் - நெருங்குதல், 266.
மணத்தல் - சேர்தல், 76, 215
மணம் - வாசனை, 30; திருமணம், 285, 329.
மண அணி - மணக்கோலம், 282.
மணி - இரத்தினம், 18; முத்து, 49; அழகு, 55.
மணி வண்டு - கருவண்டு, 69.
மணி வரை, 229.
மணி விளக்கு, 133.
மத்தம் - மத்து, 387.
மதர்த்தல் - களித்தல், 12.
மதர் விழி, 248.
மதன் - மன்மதன், 78, 384.
மதி - முன்னிலை அசை, 3, 39; பிறைச்சந்திரன், 13; அறிவு, 80.
மதித்தல் - துணிதல், 290.
மதியின் பிஞ்சு - பிறை, 420.
மதுகரம் - வண்டு, 8.
மதுகை - வலிமை, 146.
மதுரத்தமிழ், 217.
மந்தாரம் - மப்பு, 99; மந்தார விருட்சம், 176.
மயக்க அணி, 169, 225.
மயராமல் - மயங்காமல், 280.
மயல் - மயக்கம், 31; ஆசை, 201.
மயனுர், 135.
மரகதம், 19.
மரபு - முறை, 21.
மரபு வழுவமைதி, 336, 357.
மரா - ஆச்சா மரம், 132.
மராம் - ஆச்சா மரம், 207; செங்கடப்ப மரம், 242.
மரு - வாசனை, 69, 88, 355..
மருங்கு - இடை, 43; பக்கம், 78.
மருங்குல் - இடை, 212.
மருப்பு - யானைத் தந்தம், 168.
மருமான் - வழித்தோன்றல், 30.
மருவலர் - சேராதவர், 258.
மருவார் - பகைவர், 113.
மருவினர் - வாழ்பவர், 25.
மருள் - மயக்கம், 307.
மரூஉ, 1, 39, 71, 96, 163, 264, 276, 289, 307, 320.
மரை - மான், 140.
மல் - மல்தொழில், 96, 408.
மல்குதல் - நிறைதல், 150.
மல்குறல் - நிறைதல், 98.
மல்லை - ஓர் ஊர், 183.
மல்லைப் போர், 183.
மலங்கல் - தடும்பல், 243.
மலயத்தமிழ், 97.
மலயம் - பொதிய மலை, 1, 132.
மலய வெற்பு - பொதிய மலை, 4.
மலயாசலம், 147.
மலர்தல் - திறத்தல், 35.
மலரோன் - பிரமன், 104. [415.
மலிதல் - மிகுதல், 91; நிறைதல், மலை கிழவோய், 362.
மலைதல் - போர் புரிதல், 16; மயங்குதல், 16; சூடுதல், 166.

மலை நாடு - சேரநாடு, 18.
மலை மாது, 164.
மழவு - இளமைப் பருவம், 292.
மழை - மேகம், 40, 50, 238, 260.
மற்று - அசை, 39; வேறு, 406.
மறம் - வீரம், 57; பாவம், 243.
மறல் - மயக்கம், 66.
மற அரி - வீரச்சிங்கம், 162.
மறி - ஆடு, 298.
மறு - களங்கம், 9.
மறுகல் - வருந்துதல், 161.
மறை - வேதம், 105; களவு, 105.
மன் - தலைவன், 271; அரசன், 295.
மன்பதை - மக்கட்பரப்பு, 208.
மன்றம் - வெளியிடம், 207.
மன்றல் - மணம், 315, 372.
மன்று - பொதுவிடமாகிய மரத்து அடி, 34; வெளி, 340; பசுத் தொழுவம், 274.
மன்னுதல் - நிலை பெறுதல், 16; பொருந்துதல், 225.
மனவு - ஒட்டியாணம், 373.
மனை - வீடு, 354.
மனையறம் - இல்லறம், 381.
மனைவி - தலைவி, 407.
மா - பெருமை, 19; யானை, 146; கருமை, 73; மாமரம், 115; இலக்குமி, 282; குதிரை, 274. [293.
மாகம் - வானுலகம், 173; வானம்,
மாசு - குற்றம், 241.
மாட்டல் - பொருத்துதல், 124.
மாணாத - மாட்சிமைஇல்லாத, 246.
மாதங்கம் - சிறந்த தங்கம், 294.
மாதவி - குருக்கத்திக் கொடி, 11; குருக்கத்தி மலர், 338.
மாதவிக் கொடிக்கும் பெண்ணுக்கும் சிலேடை, 11.
மாதிரம் - திக்கு, 354, 379, 398.
மாந்தர் - மக்கள், 166.
மா மங்கை - திருமகள், 231.
மாமணி - மாணிக்கம், 213, 241.
மாமதி - பூரணச் சந்திரன், 52.
மாமை - அழகு, 22. [331.
மாயம் - ஆச்சரியம், 29; பொய்,
மாறன், 219.
மாரி - மேகம், 285.
மாரீசன், 79.
மாருதம் - தென்றல், 422.
மால் - திருமால், 5; காதல், 108; பெருமை, 18; மேகம், 163; மயக்கம், 30; ஆசை நோய், 53.
மால் மகன் - பிரமன், 105; ஆசைப் புருஷன், 105. [277.
மால் வண்டு - பாஞ்சசன்னியம்,
மாளிகை - மாலை, 60.
மாலை - சமயம், 274.
மாற்றுதல் - ஓடச் செய்தல், 239; அழித்தல், 307.
மாறேர் - எதிரிகள், 236.
மான - ஒப்ப, 142.
மானகரன், 36.
மானர் - பெண்டிர், 332.
மிகை - குற்றம், 168, 394.
மிசைதல் - தின்னல், 261.
மிடைதல் - நெருங்குதல், 360.
மிளிர்தல் - ஒளி வீசுதல், 137.
மின் - ஒளி, 103; மின்னல், 175.
மீனவர் - பாண்டியர், 55.
முக்கோல் - திரிதண்டம், 341.
முக்கோல் பகவர், 341. [328.
முகம் நல்கல் - இன்முகம் காட்டல்,
முகில் - மேகம், 27, 42.
முகிலும் கடலும் வற்றும் பருவத்தும் மண் புரப்பான், 416.
முகிழ் - அரும்பு, 103, 183.
முகிழ் நகை - புன்சிரிப்பு, 376.
முகை - அரும்பு, 49, 183, 184.
முடி - தலை, 41; கொண்டை, 318.
முடிக்கண்ணி - தலை மாலை, 41; முடியையுடைய வலை, 41.
முத்தம் கொடுத்தார்-கணவர், 328.
முத்தமிழ், 232.
முதல் ஊழி - கிருத யுகம், 286.
முந்துற - முன்போல, 35.
முந்தை - முன்னிலை, 329.

முந்நாள் - மூன்று நாள், 127.
முந்நாள் மதி வட்டம், 403.
முந்நீர் - கடல், 27, 28, 48, 54.
முப்புரம், 197.
முயக்கு - புணர்ச்சி, 147.
முயங்குதல் - சேர்தல், 17; பொருந்துதல், 133; புணர்தல், 36.
முயல் - சந்திரனிடத்துள்ள களங்கம், 9.
முயன்றால் ஐந்தலை நாக மணியும் பெறலாம், 18.
முயன்று - வருந்தி, 19.
முரண் - மாறுபாடு, 19.
முரம்பு - மேடு, 363.
முரலுதல் - ஒலித்தல், 375.
முருகு - முருகக்கடவுள், 186.
முருந்து - மயில் இறகின் அடிக் குருத்து, 9.
முருந்து பல்லுக்கு உவமை, 9.
முல்லை அம் சூட்டு, 110.
முலை விலை - பரிசம், 260, 263.
முழவு - முரசம், 292.
முள் கோல் - தாற்றுக்கோல், 424.
முளரி - தாமரை, 12, 184, 235.
முளரி மங்கை - திருமகள், 19.
முற்றெச்சம், 103, 111, 246, 265, 290, 393, 403.
முறுவல் - சிரிப்பு, 15, 16.
முறை - ஆட்சி, 68.
முறைமை - அரசியல், 311.
முன்னாள் - நேற்று, 34.
முன்னி - நினைத்து, 188.
முன்னிலை அசை, 3, 34, 39, 191, 233, 271, 322, 344.
முன்னிலை எச்சம், 5.
முன்னிலைப் புறமொழி, 146, 152.
முன்னிலை மொழி, 304.
முனிவு - கோபம், 209.
முனை - பகை, 281; போர், 338; போர்க்களம், 376.
மூதறிவு - பேரறிவு, 91.
மூரல் - சோறு, 140; நகைத்தல், [182.
மூரி - பருமை, 48.
மெய் - உடல், 77, 93.
மெலிவு - வருத்தம், 89.
மேதினி - பூமி, 83; நாடு, 413.
மேய்தல் - உட்கொள்ளல், 409.
மேரு, 9.
மேரு வில்லான் - சிவன், 125.
மேல் - முன்பு, 296.
மேவலர் - பகைவர், 146, 211.
மேவுதல் - பொருந்துதல், 5; தங்குதல், 36.
மேழி - கலப்பை, 125.
மேழி வென்றிப் படையான் - பலராமன், 125.
மேனி - உடல், 63; நிறம், 129.
மை - மேகம், 137; கருமை, 3, 116; நீர், 264.
மைத்து - கறுத்து, 425.
மை தோய்ந்து அலர்ந்த மலர், 370.
மைந்து - வலிமை, 339.
மைந்நாள் மலர், 403.
மைப்போது, 116.
மையார் குவளை, 3.
மொய்த்தல் - நெருங்குதல், 167; பரவுதல், 423.
மொய்ம்பு - வலிமை, 79.
மௌவல் - காட்டு மல்லிகை, 184.
யாணர் - புதுமை, 148; அழகு, 409.
யாமம் - இரவு, 33, 202, 215.
யாய் - தாய், 361.
யாழ், 225, 368.
யாறு - நதி, 158; கான்யாறு, 316.
யுகம் - இரண்டு, 141.
வகுத்தல் - செய்தல், 237.
வகுத்துரைத்தல், 159.
வகை - இனம், 168.
வகையார் தொடை, 184.
வங்கம் - கப்பல், 69.
வசந்த விழா, 422.
வசை - இகழ்ச்சி, 261.
வஞ்சம் கலந்த கவி, 187.
வஞ்சப்புகழ்ச்சி அணி, 292.
வஞ்சி - பூங்கொம்பு, 68.

வடக்கிருத்தல், 374.
வடமால் வரை, 314.
வடமேரு, 9.
வடவாமுகம், 230. [பிளவு, 192.
வடி - கூர்மை, 72; மாம்பிஞ்சின்
வடு - மாம்பிஞ்சு, 165.
வண்டல் - தோழியர் கூட்டம், 28; விளையாட்டு, 119; விளையாட்டுப் பொம்மை, 63; வண்டல் மண், 277.
வண்டலம் பாவை, 63, 288.
வண்டானம் - நாரை, 296.
வண்டு - சங்கு, 277; அம்பு, 345.
வண்டு முன்னிலையாகப் பாடும் செய்யுள், 8, 21.
வண்ணம் - அழகு, 120; விதம், 120; வகை, 399; நிறம், 247.
வண் தமிழ் மன்னர் - புலவர், 277.
வண்மை - கொடைக்குணம், 86; தருமம், 95; ஈகை, 291.
வணக்குதல் - வளைத்தல், 136.
வணர் - சுருள், 214.
வதனம் - முகம், 37.
வந்து - அசை நிலை, 192.
வம்பு - கச்சு, 117; புதுமை, 186; காலமல்லாக் காலத்திற் பெய்யும் மழை, 269.
வயக்கியது - விளக்கியது, 115.
வயங்குதல் - விளங்குதல், 133.
வயமா - வலிய மிருகங்கள், 182; யானை, 282.
வயலைக்கொடி, 333.
வயிர் - ஊது கொம்பு, 288.
வரம் - மேன்மை, 317.
வரம்பு - அணை, 14.
வரி - இசை, 291; கட்டு, 368.
வருகு - வருவேன், 24.
வருதல் - தோன்றுதல், 12.
வருவல் - வருவேன், 24.
வரை - மூங்கில், 49; மலை, 5. [93.
வரைத்து - எல்லையை உடையது,
வரைதல் - மணத்தல், 94.
வரையூர்தல், 102.
வரைவு - மணத்தல், 227. [வன், 8.
வரோதயன் - வரத்தினால் பிறந்த
வல் - சொக்கட்டான் காய், 47; விரைவு; 227.
வல்சி - இரை, 242. [251.
வல்லத்து அமர் வென்ற வாணன்,
வல்லம் - ஓர் ஊர், 251.
வல்லவன் - கணவன், 164.
வல்லவை - மனைவி, 83.
வல்லி - பூங்கொடி, 110.
வல்லியம் - புலி, 200.
வலம்புரி - வலம்புரிச் சங்கு, 276; சங்க நிதி, 40; நந்தியாவர்த்தம், 195.
வலவன் - தேர்ப்பாகன், 28.
வலன் - வலப்பக்கம், 186.
வலித்தல் - வற்புறுத்தல், 267.
வவ்வுதல் - கவர்தல், 73.
வழங்கல் - கொடுத்தல், 295; சஞ்சரித்தல், 165.
வழங்கி உண்ணாதவர் வைத்து இழக்கும் பொன், 295.
வழிபடல் - உபசரித்தல், 29.
வழுதி - பாண்டியன், 18.
வழுதியர் - பாண்டியர், 7.
வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன், 7.
வள்ளம் - கிண்ணம், 13, 404.
வள்ளல், 349.
வள்ளி, 83.
வள்ளிதன் கோன் - முருகன், 299.
வள்ளை, 185.
வளர்தல் - உறங்குதல், 39, 40.
வறிது - சிறிது, 15; வெறுவிது, 56.
வறிது நகை - புன்னகை, 15.
வறியோர் - ஏழைகள், 26, 82.
வறுங்களம் - வெற்றிடம், 161.
வன்கண் - கொடுமை, 114; அஞ்சாமை, 380.
வன்கண்ணர் - கொடியவர், 158.
வன்பணி - வலிய பாம்பு, 103.
வன்பு - வலிமை, 272; பொல்லாங்கு, 295.

வனச மலர் - தாமரை மலர், 88.
வனப்பு - அழகு, 346.
வனம் - காடு, 49; சோலை, 335; அழகு, 91; நீர், 177.
வனைதல் - செய்தல், 87; அலங்கரித்தல், 123.
வாக்கு - திருந்திய வடிவம், 78.
வாகை - வெற்றி, 193; வெற்றி மாலை, 58.
வாங்குதல் - வளைத்தல், 5.
வாசத்தமிழ், 191.
வாசுகி, 134.
வாடை, 419.
வாணர் பிரான், 83.
வாணன் குல மலைகளில் கீர்த்தியைத் தீட்டியது, 65. [116.
வாணன் குவளை மலர் மாலையன்,
வாணன் சந்திரனுக்கு மகன் என்பது, 41. [266.
வாணன் சோழனை வென்றது, 53,
வாணன் நிலத்தை வளமுறச் செய்தது, 363.
வாணன் பாண்டியனுக்கு மந்திரி என்பது, 7.
வாமம் - அழகு, 33.
வாமான் - தாவிச்செல்லுமான், 131; குதிரை, 365.
வாய்மை - உண்மை, 170.
வாயில் - தூது, 30, 69, 388, 395.
வாயில்கள், 384.
வார் - முலைக்கச்சு, 44; நாண், 65; நீட்சி, 74.
வார் தமிழ், 109.
வார்தல் - ஒழுக்குதல், 59.
வாரணம் - யானை, 2; கோழிச் சேவல், 211.
வாரி - கடல், 51, 314; நீர், 260.
வால் - வெண்மை, 390.
வாவி - குளம், 10.
வாவுதல் - தாவுதல், 81.
வாழ்க்கை - செல்வம், 375.
வாழ்த்தணி, 32, 368.
வாழ்த்தலர் - பகைவர், 3.
வாழ்வு - செல்வம், 215. [285.
வாழி - அசை, 100; வாழ்வாயாக, வாழிய, 391.
வாள் - ஒளி, 10; கொடுமை, 424.
வாளா - வீணில், 382.
வாளி - அம்பு, 41, 79.
வானவர் - சேரர், 55.
வானவன் - சேரன், 346.
வானீற்று வினையெச்சம், 420.
விசயக்கொடி - வெற்றிக்கொடி, 5.
விடலை - மணவாளன், 328; பாலைநிலத் தலைவன், 353.
விடை ஆன் - எருது, 125.
விண் - ஆகாயம், 10.
விண்டார் - பகைவர், 209.
வித்தகம் - ஞானம், 287; சாமர்த்தியம், 408.
வித்து - விதை, 112, 408.
வித்துதல் - பரப்புதல், 158.
விதி - ஊழ், 22.
விந்தை, 80, 81, 179, 225.
விபரீத உவமை, 38, 137, 179.
விம்முதல் - பூரித்தல், 352, 425.
வியப்பு - அதிசயம், 424.
வியல் - அகலம், 201.
வியன் - விசாலம், 96.
விரகம் - வேதனை, 214.
விரவுதல் - கலத்தல், 184.
விராய - கலந்த, 263.
விருந்தினர் - புதியவர், 120.
விரை - வாசனை, 17, 94, 102.
வில் - ஒளி, 89.
விழி - கண், 52.
விழுப்புண், 113.
விழைதல் - விரும்புதல், 324.
விளர் - வெளுப்பு, 228.
விளர்த்தல் - வெளுத்தல், 22.
விளர்ப்பு - வெளுப்பு, 415.
விளித்தல் - கூப்பிடல், 73.
விறலி - பாணிச்சி, 395.
வினை - போர், 376.
விழ்தல் - பிரிதல், 273.
வெண்கடல், 134.

வெண்குன்று - கிரவுஞ்சகிரி, 299.
வெண்டாமரை மங்கை - சரசுவதி, 95. [113.
வெதுப்பல் - அழலிற் காய்ச்சுதல்,
வெதும்பல் - வெப்பமுறல், 47.
வெந்கிடல் - தோல்வி அடைதல், 374. [புருவம், 296.
வெம்புருவம் - விரும்பத் தகுந்த
வெய்துயிர்த்தல் - பெருமூச்செறிதல், 77, 143.
வெய்ய - கொடிய, 89; விரும்பத் தகுந்த, 107.
வெய்ய கோல் - கொடுங்கோல், 68.
வெய்யோன் - சூரியன், 100,
வெயில் - ஒளி, 307; கிரணம், 100; சூரியன், 179.
வெயிலவன் - சூரியன், 182.
வெரு - அச்சம், 163.
வெருள் - மன்க்கலக்கம், 362.
வெவ்வாய்க்கல் - சிகிமுகிக்கல், 263.
வெவ்வேல் எறிந்த விழுப்புண்ணில் வெதுப்பிய செவ்வேல் நுழைத்தல், 113.
வெள்வளை, 268.
வெள்ளணி, 388.
வெள்ளம் - கூட்டம், 29; பெருக்கம், 102; அலை, 375; கடல், 404. [42, 92.
வெற்பன் - குறிஞ்சி நிலத் தலைவன்,
வெற்பு - மலை, 21. [2.
வெற்புறையணங்கு - வரையரமகள்,
வெறி, 226, 298, 299.
வெறிதே - பயனின்றி, 15, 120.
வென் - முதுகு, 168.
வென்றி - வெற்றி, 68, 118, 292.
வேங்கை பூத்தால் வேடர் தினை கொய்தல், 153.
வேட்கை - விருப்பம், 13.
வேட்டல் - மணத்தல், 141.
வேண்டல் - விரும்பல், 275.
வேதியன் - பிரமன், 95.
வேம்பு - கசப்பு, 261.
வேய் - மூங்கில், 16, 85, 252.
வேய் அழல், 344.
வேய்தல் - பொருந்துதல், 173.
வேர் - வியர்வை, 372.
வேர்வு - வியர்வை, 66.
வேரல் - மூங்கில், 182.
வேரி - மணம், 51; தேன், 285.
வேலன், 298, 354.
வேலை - கடல், 100.
வேழம் - கரும்பு, 6; யானை, 16.
வேழ வெஞ்சிலை - கரும்பு வில், 6.
வேள் - மன்மதன், 6; முருகக் கடவுள், 216; விருப்பத்திற்கு உரியவன், 218. [382.
வேளாண் மரபு விளக்கிய வாணன்,
வேற்றுப் பொருள் வைப்பு அணி, 158, 170, 233, 291, 397.
வேற்றுமை மயக்கம், 78, 107, 157, 195, 223, 245, 257, 296, 389, 395.
வை - கூர்மை, 113.
வைகிருள் - இடை யாமம், 315.
வைகுதல் - பொருந்தியிருத்தல், 64; தங்குதல், 201; வற்றுதல், 71.
வையம் - உலகம், 196, 206.
வையை - வைகை நதி, 2.


—:*:—

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| தஎ | 3 | மணயும் | மணியும் |
| உடு | 4 | அடர்கின்ற | அடர் |
| உகூ | 25 | நண்பகல் | நன்பகல் |
| ௫க | 5 | கரைர்யூ | கரையூர் |
| சுகூ | 10 | 'கூடற்கும்' என்பதன் பின் 'ஆயம் கூட்டற்கும்' என்பதைச் சேர்க்க. | |
| எஉ | 22 | மூரி - கடல் | மூரி - பெருமை |
| கஎஉ | 17 | ஆக. | ஆக,' என இயைக்க. |